03 ...ன்மோகினி 20வது ஆண...

...ரசுரம ...0 ...கோ.

வைர விழா நாவல் க்ருபாம...

...PPLEMENT TO JAGANMOHINI O...

கிராமத்தில் காரியாலயம்

னையில் சகல சௌகரியங்களுடன் இருந்தபோது **விசேஷ மலர்** வெள
ம், இப்போது கிராமத்தில் இம் மலரை வெற்றிகரமாக வெளியிடவேண்
எம்பெருமானின் திருவுள்ளம். கீழே காணும் முதல் படத்தில் ஈச்வ
யில் ஒரு மரத்தை இன்னொரு மரம் தழுவி வளர்ந்துள்ளதுபோல், 20-வ
மலரும் வைரவிழா நாவலும் ஒன்றையொன்று தழுவி வரவேண்டுமென்று
லுல் நிறுவப்பட்டு, உங்களுக்கு அளிக்கப்படுகிறது.

ஒன்றையொன்று தழுவி நிற்றல்

வெங்கடாபுரம் அக்ரஹாரம்

மலையிலிருந்து ஓர் தோற்றம்



மோகினி தங்கும் மாளிகை

ின் பாரத்தைத் தாங்கும் மாடுகளை மிராசுதார் உங்களுக்கு காட்டுகிறார்.

ஜகன்மோகினி

விசேஷ அனுபந்தம்

403
1-43

20-வது ஆண்டு மலரும்,
வைரவிழா நாவலும்

வாழ்த்து

சீர்பூத்த சித்ரபானு தனுர்மாதம்
சிறந்திடும் சித்ராநட்சத்திர சுக்ரவாரம் ஜ
தார்பூத்த தசமியாம் தனுசுலக்னம்
தமிழ்வளர்ச் செல்வி "ஜகன்மோஹினி"யின்
சர்பத்தாம் ஆண்டதனில் ஆறுபத்தாம் நாவல்
சந்தனளே வாசகர்கள் வைரவிழாக் கொண்டாட
பார்பூத்த பார்த்தசாரதியின் பிரியபத்னி
பண்டிதை கோதைநாயகியெனும் பாக்யசாலி.

—ஜெகதாபி ரகுபதி ரங்கராஜு

OFFICE OF THE REGISTRAR
20 FEB 1943
MADRAS

SUPPLEMENT TO "JAGANMOHINI" OF 1—1—43

219494

அகமலர்ச்சி

ஆண்டவனின் அருள் உதயம்

ஸ்ரீபதியான ஸ்ரீமந்நாராயணனின் லீலாவினோதங்களை உற்று நோக்குங்கால் எத்தனை அத்புதங்கள், எத்தனைவிதமான உணர்ச்சிகள், எவ்வளவு ஆனந்தம்! அடாடா! நினைத்தால் நிலையிடங் கொள்ளக்கூடியதா அவனது விசித்திரம்! அடுத்து முயன்றலும்... வேளை வரவில்லை... என்கிற முதுமொழிகள் எல்லாம் அவனது லீலைகளின் எதிரொலியல்லவா! தாராளமான இடம், நிறைய ஆட்கள், மின்ஸாரம், டெலிபோன் முதலிய இன்னும் பற்பல வசதிகளும் இருந்தபோது இந்த ஆண்டு மலர் எத்தனையோ அம்சங்களில் சிரமமின்றி வெளிவந்திருக்கலாம்; ஆனல் இந்த சிறிய கிராமத்தில் சகலவித அசௌகரியங்களுக்கிடையே—எந்த ஒரு சாமான் வேண்டுமாயினும் 32 மைலிலுள்ள சென்னைக்குச் சென்று அலையவேண்டிய காலத்தில்தான்—மலர் வெளிவரவேண்டுமென்று ஆண்டவனின் அருள் உதயமாகியது.

அன்பர்களின் உத்ஸாகமே காரணம்

“இந்த பேப்பர் பஞ்சகாலத்தில் மலர் வெளியிடலாமா! வேண்டாமா!” என்கிற ப்ரச்னையே போராடியது. பல அன்பர்களுடைய ஊக்கமான கடிதங்களும், உத்ஸாக மொழிகளும் மலரை நடத்தலாம் என்கிற தீர்மானத்தை அக்டோபர் மாதம் 10தேதிக்குத்தான் உண்டாக்கின. உடனே பிரபல எழுத்தாளர் சிலருக்குக் கடிதம் எழுதினேன்.

சுப சகுனம்

மலர் எம்பெருமானின் கிருபையினல் வெற்றிகரமாக முடியுமானல் குறித்த ஒரு சிலரிடமிருந்து உடனே அனுகூலமான பதில்வரும் என்று நான் ஒரு சகுனத்தை நினைத்திருந்தேன். என்னப்பன் ஸ்ரீ பார்த்தஸாரதியின் கிருபை பரிபூர்ணமாக மோகினியின்பால் இருப்பதை எமக்குக் காட்டுவதே போல் கடிதம்எழுதியவுடனே ப்ரஸித்திபெற்ற ‘ரிடையர்டு’ நீதிபதிகள் இருவ ...ிருந்து ஆசியுடன்கூடியபதிலும் ஒருவரிடமிருந்து கட்டுரையேகிடைக் ...ற்று மட்டிலா மகிழ்ச்சியடைந்து, இதுவே ஒரு சுபசகுனமாகக் ...னேன். மோகினியின்பால் அன்புகொண்டு அனேகபிரமுகர்கள் தாமத ...றி ஆர்வத்துடன் கட்டுரைகள் தந்துதவி எம்மை மேலும் உத்ஸாகப் ...்தியதால் துணிந்து மலருக்கான வேலையை ஆரம்பித்தோம்.

பஞ்சகாலத்திலும் சலுகை

“முதல் முதல் ஆரம்பிக்கும் மலரை இப்பஞ்சகாலத்தில் ஆரம்பித்து ...றைந்த விலையையும் வைத்துவிட்டாயே! உனக்கு கட்டுப்படியாகுமா!” ...ன்று என்து ஆப்த சினேகிதர்கள் என்னைக் கேட்கும்போது சிறிது ...மாகவே இருந்ததெனினும் “மலர் மலரவேண்டிய காலத்தை பகவான் ...ுத்து, அறுபதாவது நாவலும் இருபதாவது ஆண்டும் ஒன்று சேரக் ...டிய சந்தர்ப்பத்தை இந்த பஞ்சகாலத்தில் காட்டியுள்ள பரந்தாமன் ...தற்கான உதவிபுரியாமலா இருப்பர்! அவனன்றி ஓர் அணுவாவது ...சையுமா! இந்த தைரியத்தைக் கொண்டுதான் ஆரம்பித்துவிட்டேன். மோகினியின் அன்பர்களுக்கு சலுகை காட்டவேண்டுமென்கிற ஆவல் எனக்கு முக்யமாக இருக்கிறதேயன்றி, வியாபாரமுறையில் நான் கவனிக்க வில்லை” என்று பதில் சொன்னேன்.

ஆறுதல்

கட்டுரைகள் ஏராளமாகச் சேரச்சேர அத்தனையும் பிரசுரித்து நேயர்களை மகிழ்விக்க ஆவல் துடித்தது. ஆனால் காகிதப் பஞ்சத்தின் விளைவு, போதிய அளவு பேப்பர் கிடைக்காததால் எல்லாவற்றையும் பிரசுரிக்கமுடியாது போயிற்றே என்கிற வருத்தமே உண்டாகியது. பகவான் இந்த அளவுக்காவது பேப்பர் கொடுத்து உதவிய கருணையை எண்ணி ஆறுதலடைந்தேன். தம் கட்டுரை பிரசுரிக்கப்படவில்லையே யென்று அன்பர்கள் கோபிக்காது எம்மை மன்னிக்கும்படிக் கோருகிறேன். அவர்கள் குறையை மோகினியின்மூலமாகத் தீர்த்துவிடுகிறேன்.

அன்பின் அர்ப்பணம்

கடவுளின் கருணையும், எனது ஆப்தர்களின் உள்ளன்புடன் கூடிய ஆசியும், மோகினியின் நேயர்களின் பேராதரவும், அபிமானமும் ஒன்றுகூடி புஷ்பிக்கச் செய்த இம்மலரை, முதலில் பகவானின் திருவடித் தாமரைகளில் சமர்ப்பித்துப் பின் மோகினியின் வாசகர்களுக்கும், அவர்களுக்கு மிகப் பிரியமான இலக்கியப் பேராசிரியரும், இம்மலர் விஷயமாக மிக்க ஊக்கத்துடனும் உத்ஸாகத்துடனும் உதவியவருமான ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆசார்யா அவர்களுக்கும் இம்மலரை மனப்பூர்வமாக அர்ப்பணம் செய்கிறேன்.

எனது வந்தனம்

இம் மலரை மணங்கமழச் செய்யும் கட்டுரைகள் ஒவ்வொன்றும், மிகவும் பொருக்குமணிகளாய் சிறந்த முறையில் அமைந்துள்ள அபூர்வ அழகை, கவர்ச்சியைப் பற்றித் தனித் தனியே புகழ்வதென்றால் இந்த சிறிய தாளில் இடம் போதாது என்பது திண்ணம். ஒவ்வொன்றும் வெகு உபயோகமானதும், அற்புதமானதுமான விஷயங்களை அமைத்து, அழகு வெள்ளம் பொங்கும் நடையில் ஜீவகளை ததும்ப, படிப்போரிதயத்தில் பசுமரத்தாணிபோல் பதியச் செய்துபுதிய இன்பத்தைக்கொடுக்கும் வகையில் விருந்தளிக்கின்றது. இத்தகைய அருமையான விஷயதானத்தை அன்புடன் செய்துதவிய அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றியறிதலையும் வந்தனத்தையும் வணக்கத்துடன் செலுத்துகிறேன்.

இம் மலருக்கான அபூர்வ சித்திரங்களை இராப் பகலாக எழுதிய ஸ்ரீமான் எம். ஸாமுவேல் அவர்களுக்கும், சித்திரங்களை சொன்ன கெடுவு தவறாது அருமையாக ப்ளாக்கு செய்து கொடுத்த எம். ஸி. அப்பாசாமி செட்டி கம்பெனியாருக்கும், எனது மனப்பூர்வமான நன்றி விசுவாசத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மலர் விஷயமாக நம் மோகினி ஏஜண்டுகள் வெகு உத்ஸாகமும் ஊக்கமும் காட்டி ச்ரத்தையுடன் ஒத்துழைத்து ஏராளமான ஆர்டர்கள் அனுப்பியதற்காக அவர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த வந்தன
தைச் செலுத்துகிறேன். அவர்கள் கேட்டபடி கணக்காக மலர் கொ

இயலாது காகிதப் பஞ்சத்தின் கோலம் சிலருக்குக் கட்டுப்படுத்திக் குறைத்தே கொடுக்க நேர்ந்தது. அடுத்த ஆண்டிலாவது இம்மாதிரி காகிதப் பஞ்சமின்றி தாராளமாகக் கொடுத்து அவர்களையும் த்ருப்தி செய்யும் நல்லகாலம் பிறக்கவேண்டுகிறேன்.

முக்கியமாக, வெகு குறுகிய காலத்தில் ஆரம்பித்த இம்மலரை வெற்றிகரமாகக் குறித்த தேதியில் வெளியிடுவதற்கான உத்ஸாகமும் ஊக்கமும் விடாமுயற்சியும் அன்பும் கொண்டு இரவு பகலாகக் கஷ்டப்பட்டு சலிக்காமல் உழைத்து மலரைப் பிரகாசிக்கச் செய்த நம் மோகினி காரியாலயத்துத் தொழிலாளர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி விசுவாசத்தையும் ஆசியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நேயர்கள் கவனிக்கவேண்டிய விஷயம்

ஒன்றிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஆரம்பத்தில் தனி நாவல் சுமார் ரூ. 1/- விலையில் வெளியிடுகிறோமல்லவா? (ஆத்மசக்தி, 1940 ரூ. 1/4; கருணாலயம், 1941 ரூ. 1/-; கலாநிலயம், 1942 ரூ. 1/4) அதேமாதிரி வைரவிழா நாவல் "க்ருபாமந்திர்" 1943 ரூ. 1/- என்று வெளியிடப்பட்டிருக்கிறது.

சென்ற நவம்பரில் ரூ. 1/- அனுப்பிய அன்பர்களுக்கு நமது மலர் பகுதி முற்றிலும் இனாமாகவல்லவா கிடைத்துள்ளது! இவ்வாறு புது வருடப் பரிசு அளித்தது பற்றி மோகினிக்கு எவ்வளவு எல்லையற்ற ஆனந்தம்! டிஸம்பரில் ரூ. 1/4 அனுப்பியவர்களுக்கு நமது மலர் பகுதி நான்கு அணாவுக்கே கிடைத்துள்ளது. இதுவும் ஒரு பெரிய சலுகையல்லவா?

மலர் முற்றிலும் அச்சாவதற்கு முந்தியே 'ரிஸர்வ்' செய்து விட்டதைப் பற்றி நமக்கு சந்தோஷமேற்படினும், தாமதித்த பல அன்பர்களுக்கு மலர் பிரதி இல்லையே யென்பதுபற்றி வருத்தமும், அவர்களிடம் அனுதாபமும் ஏற்படுகிறது.

க்ஷமிக்கவேண்டும்

மலர் வெகு அவசரத்தில் அச்சாகியதால் கட்டுரை எழுதியவர்களுக்கு 'ப்ரூப்' அனுப்பக்கூடிய அவகாசமில்லாது போனதால் பல பிழைகள் ஏற்பட்டிருக்கலாம். குற்றம்குறைகளை மன்னித்து, மலரிலுள்ள குணத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு அடுத்த வருஷம் இன்னும் பல அம்சங்களிலும் சிறப்பான மலரை வெளியிடும்படியான ஊக்கத்தையும், உத்ஸாகத்தையும் கொடுத்து ஆதரிக்கும்படி அன்பர்களை வேண்டுகிறேன். அதற்கு எம்பெருமானின் க்ருபாகடாக்ஷத்தைக் கோரி அவனடி தொழுது பிரார்த்திக்கிறேன்.

வை. மு. கோதைநாயகி.

ஸ்ரீராமஜயம்.

ஜகன்மோகினி
20வது ஆண்டுமலர்

மலர் 20. இதழ் 1. விசேஷ அனுபந்தம்

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

Supplement to Vol. 20. No. 1

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்.

பொருளடக்கம்

பக்கம்.

அகமலர்ச்சி ... 2
வை. மு. கோ.
பொருள் அடக்கம் ...
வியாசர் அல்லது கதை சொல்லும் கலை ... 7
தலைப்புப் பட வர்ணனை—பி. ஸ்ரீ.
ஊட்டவா? உண்ணவா? ... 8
முகப்புப் பட வர்ணனை—பி. ஸ்ரீ.
ஸ்ரீ ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் ... 9
ஸ்ரீ. உ. வே. நடாதூர் ஸ்வாமி.
"புதிர்"—இனியன் ... 13
நூல்கள்—பழையனவும், புதியனவும் ... 14
சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார்.
ஹரிகதையின் மேன்மை ... 15
ஸி. ஸரஸ்வதிபாய்.
ஜகன்மோகினி வாழ்க (கவிதை) ... 21
நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை.
ருக்மிணி கல்யாணம்—சித்திரம் ... 22
சித்திர வர்ணனை—பி. ஸ்ரீ.
போருண்டியம்மா, இந்த சுகம்! ... 24
"பழைய கை" பி. ஏ., பி. எல்.
மொழி பெயர்த்தல் அவசியமா? ... 29
எஸ். அம்புஜம்மாள்.
கிராம வாழ்வு ... 34
டாக்டர் தி, செ. சௌ. ராஜன்.
கண்ணனை அழைப்போம் (கவிதையுடன்) ... 38
ஸ்வாமி சுத்தானந்த பாரதியார்.
கள்ளத்தனத்தைக் காணுங்கள் (படத்துடன்) ...
சித்திர விளக்கம்—பி. ஸ்ரீ.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS

எனது காஷ்மீர் யாத்திரை (படங்களுடன்) ... 41
ஸ்ரீ. ஜானம்மாள்.
ஓர் இரவு (சிறு கதை) ... 47
எஸ். வையாபுரிப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.
மோகினித்தாயே! மோகனத்தாயே! ... 50
கவிதை—"இனியன்"
நமது கடமை ... 51
சகோதரி ஆர். எஸ். சுபலக்ஷ்மி அம்மாள், பி.ஏ., எல்.டி.
வாழ்த்து—நேரிசை ஆசிரியப்பா ... 55
வரகவி-திரு-அ. சுப்ரமண்ய பாரதி.
குருபக்தி—(படத்துடன்) ... 56
சித்திர விளக்கம்—பி. ஸ்ரீ.
பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா! ... 57*
சித்திர வர்ணனை—பி. ஸ்ரீ.
திருவிளையாடல் கும்மி ... 57
டாக்டர் வி. சூ. நடராஜன் எல்.எம்,பி, எல்,பி.எச்.
கண்ணுடி மூர்த்தி ... 59
வி. ஆர், எம். செட்டியார், பி. ஏ,
ஸ்ரீ. எஸ். ஜி. ராமானுஜலு நாயுடு ... 61
ஜெ. ர, ரங்கராஜுகாரு.
ஷெல்டரும், குப்பிப்பாட்டியும் ... 65
ஸாவித்திரி ராஜன், பி. ஏ.
ஸம்ஸ்க்ருதம் கஷ்டமா இல்லையா? ... 67
ராவ்பகதூர் "கொனஷ்டை" பி. ஏ., பி. எல்.
நீடூழி வாழ்க ... 73
எம். கே. தியாகராஜ பாகவதர்,
கையிலங்கு நெல்லிக்கனி ... 75
பி. வி. திருவேங்கடஸ்வாமி,
ஸ்டேஷன்களின் ஸ்லேட்டை தமாஷ் ... 79
"விருச்சிகம்"
சைவ வைஷ்ணவ நட்பு (படத்துடன்) ... 80
சித்திர விளக்கம்—பி. ஸ்ரீ.
அன்னையும், பிதாவும் (படத்துடன்) ... 81
சித்திர விளக்கம்—பி. ஸ்ரீ.
ஒரு கல்யாணம் (21 கடிதங்கள்) ... 82
"குமுதினி"
நண்பனே பகைவனு? ... 86
வி. வி. ராமானுஜம், பி. எஸ்ஸி.
புதுச்சேரி ... 90
ஏ. கே. செட்டியார்.
நடுத் தெருவில் ... 93
எல். நாராயணராவ், காமெடியன்.

ஸ்ரீவத்ஸன் எடுத்த 5 படங்கள் (சித்திரக் குறிப்புடன்) 96

பூமாலையும், பாமாலையும் ... 97
பண்டிதை கிருஷ்ணவேணி அம்மாள்.

வைரங்களின் விசித்திரமும் சரித்திரமும் ... 102
ஜி. ரங்கஸ்வாமி அய்யங்கார், எம். ஏ., எம். எல்.
திருமுக்கூடல் (படங்களுடன்) ... 105
வெ. க. சௌரிராஜன்; எம். ஏ. எல். டி.
அருளோ! அறமோ! ... 109
ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.
திருக்குறளின் மேன்மை ... 113
வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியார்,
ஏன் இந்தப் பராமுகம்? (படத்துடன்) ... 115
சித்திர விளக்கம்—பி. ஸ்ரீ.
எங்கள் க்ளப் ... 117
கே. சாவித்ரி அம்மாள்.
திராவிட சாஸ்திரி ... 121
பி. ஸ்ரீ. ஆசார்யா.
இந்திய விரிவு—சமயக்கொள்கைகள் ... 125
கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், எம். ஏ.
எழுதுகோலின் முனை ... 129
ராவ்பகதூர் ப, சம்பந்த முதலியார். பி.ஏ., பி.எல்.
சித்திரக் கதை ... 133
வை. மு. கோ.
வித்யுல்லதா (சரித்திரக் கதை) ... 134
குகப்ரியை
அன்னையின் அன்பு ... 142
வெங்கடாபுரம், ரங்கநாயகி அம்மாள்.
'கனவென்ன கனவே!' பாரதியார் பாடல் ... 146
ப்ரமித்துவிட்டோம் 148
வை. மு. ஸ்ரீநிவாஸன், எம்.ஏ., பி.எல்.

<u>மேலட்டை படம்</u>

வியாசர் அல்லது கதை சொல்லும் கலை

இமயமலைச் சாரலில் அந்த முனிவரையும் சிஷ்யர்களையும், அந்த ஆச்ரமத்தையும் வனத்தையும் பார்த்ததும், அது ஒரு புண்ணிய தபோ வனம் என்பது பளிச்சென்று விளங்கிவிடுகிறதல்லவா?

ஆம்; அது வியாச மகரிஷியின் தபோவனம், ஞான காம்பீர்யம் நிறைந்த அந்த முகமண்டலமே அவரை **முனிராஜா** என்று அறிவிக்கிறது.

வியாசரும் சிஷ்யர்களும் இருக்கும் அந்த நிலையைக் கவனியுங்கள். அவர் **பேசும்** கலையிலும், அவர்கள் **கேட்கும்** கலையிலும் தேர்ச்சி பெற்ற வர்களென்று தோன்றுகிறதல்லவா?

உண்மையில், கதை சொல்லும் கலை வியாசரின் தனிப்பெருங் கலை யென்றே சொல்லவேண்டும், "அவர் ரஸமாகக் கதை சொல்வதில் தேர்ச்சி பெற்றவர்" என்றால் போதாது. அவர் கதாபாத்திரங்களைக் கண் முன்னே கண்டு காட்டுகிறார். கேட்கிறவர்களும் கண்டு களிக்கிறார்கள். "இன்னும் கேட்கவேணும்; கேட்கவேணும்" என்ற ஆசை அதிகப்படுகிறது.

வியாசருடைய உபதேசங்கள் உபதேசங்களாகத் தோன்றுவதில்லை கதைகளாக வெளிப்படுவதால். வீரம், சிங்காரம், பயம், ஹாஸ்ய

வினோதம், சோகம் முதலிய ரஸங்களெல்லாம் வேண்டிய அளவிற்குச் சேர்ந்து பண்டித பாமர ரஞ்சகமாகச் செய்துவிடுகின்றன, வியாஸர் கதைகளையும் உபதேசங்களையும்.

கதை சொல்லுகிறவர்களுக்கெல்லாம் குருவும் வழிகாட்டியும் வியாச மகரிஷிதான். அவர் ஒரு ஞானமலை; கதைக் கடல். வியாசர் வாழ்க: கதை சொல்லும் கலை வாழ்க.

* * *

தமிழ் எழுத்துலகத்தில் "மோகினி" பத்தொன்பது வருடங்களுக்கு முன் ஷை கதை சொல்லும் கலையில் ஈடுபட்டு, வாசகர்களுக்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்யவேண்டுமென்ற கருத்துடனேதான் உதித்தாள். எம்பெருமான் க்ருபையால் அக்கலையில் வெற்றிகரமாக உழைத்து வருகிறாள். இம்மலரில் வெளியாகியுள்ள **"க்ருபாமந்திர்"** மோகினியின் அறுபதாவது வெளியீடு. நம் "மோகினி'

"பற்பல புதுப்புது காட்சிகளை
படந்தரும் எழுத்தின் ஆட்சியினால்
கற்பனை உலகையும் காட்டுகிறாள்
கல்வியைக் கதையென ஊட்டுகிறாள்."

<u>முகப்புப் படம்</u>

ஊட்டவா? உண்ணவா?

"வேண்டிய கொணர்ந்து நல்க
விருந்துசெய் திருந்த வேலை"

—(கம்ப ராமாயணம்)

அதிதி ராமன்தான் என்று தெரிந்துகொண்டதும், இத்தகைய விருந்து செய்கிறவள் சபரிதான் என்பதும் எளிதில் தெரிந்துவிடுகிறது.

முனிவர்களின் விருந்தாளியாகிய ராமன் 'தாழ்குல'த்திலே தோன்றிய சபரியின் விருந்தாளியாகவும் இருக்கிறான். அழகு நிறைந்த சொர்க்க சமானமாயிருக்கும் அந்தச் சோலையிலே சபரி, தானும் தனிமையும் தவமுமாக வசித்துவந்த குடிசைக் கருகே, பழவர்க்கங்களைக் கொண்டு அப்படியே ராமனுக்கு ஊட்டப் போகிறவளைப்போல் மனம் உருகி நின்று விருந்து செய்விக்கும் இந்த வைபவத்தை என்னென்பது?

தவமும் அன்பும் ஒருங்கே சுமந்து முதிர்ந்த இக்கிழவி, ராமன் வருகையை நெடுங்காலமாக நினைத்து நினைத்து வழி பார்த்திருந்தாள் என்பது இப்போது அவள் ராமனைப் பார்க்கும் அந்தப் பார்வையிலேயே காணக் கிடக்கிறது. அந்தப் பழவர்க்கங்களில் "ராமன் உண்ணத்தக்கவை எவை?" என்று கண்டுபிடிக்க அவள் அவற்றை ருசிபார்த்தே கொண்டு வந்திருக்கிறாளாம்.

இந்த ராம தரிசனம் அவளுக்குக் கிடைத்த எதிர் விருந்து. அவள் ராமனுக்கு ஊட்டத்தான் போகிறாளா? அல்லது தானே உண்ணப் பார்க்கிறாளா ராமன் என்ற ஞானாமிர்தத்தை?

* * *

சபரியைப்பற்றிய முழு வரலாற்றையும் **'கையிலங்கு நெல்லிக்கனி'** என்னும் கட்டுரையில் (பக்கம். 75—78) படித்து மகிழவும்.

ஜகன்மோகினி

அனுபந்தம்

ஸ்ரீ உபயவேதாந்த பாஷ்ய ஆசார்ய
ஸிம்ஹாஸநாதிபதி வித்வான்
அபிநவஸரஸ்வதீ வாங்முக
ரத்நகோச: வித்வச்சிரோமணி:
பண்டிதராஜ: குருவர்ய:
நடாதூர் ஸ்வாமீ
கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமிகளவர்கள்

ஜகன்மோகினி அனுபந்தம்

ஸ்ரீ. உ. வே. நடாதூர் ஸ்வாமி.

ஸ்ரீ ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம்

ஸ்ரீ

ஜகந்மோஹிநி ! தேகீர்த்தி: ஜகந்நாதப்ரஸாதத:
ஜகத்ஸு ஜயதாம் நித்யம் ஜகதாநந்தவர்த்திநீ''

ஸ்ரீ ஸர்வலோக சரண்யனை ஸ்ரீமந் நாராயணனின் திருவருட் கடாக்ஷ விசேஷத்தினால் **'ஜகன்மோஹினி'** குழந்தைப்பருவம் முதலியவற்றைக் கடந்து அரிவைப் பருவத்தை யடைந்து திகழ்ந்து விளங்குகின்றாள் என்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியுறுகின்றோம். சென்ற இருபது வருஷகாலமாக நம் ஜகன்மோஹினி தமிழ்த்தாய்க்கு இன்பகரமான பற்பல ஆபரணங்களை யணிவித்துப் பெரிதும் போற்றியிருக்கின்றாள் என்பதை ஈண்டு கூறுவது மிகையாகாது. ஒவ்வொரு வருஷமும் புத்தப் புதிய கற்பனைகளோடு மிளிரும் சிறந்த கதைகளை யுலகிற்கு ஈந்து தற்சமயம் பெரும் புகழோடு விளங்குவதற்குக் காரணம் கற்றறிந்த பெரியோர்களால் 'ஜகன்மோஹினி' என்று நாமமகுடம் சூட்டப்பெற்றதேயாகும். **ஸ்ரீமத் யாமுநமுநி**யென்றும், **ஆளவந்தார்** என்றும் ரூபான புரஸ்ஸரம் போற்றப்படுகின்ற மஹாநுபாவனது முகாரவிந்தத்திலிருந்து வெளிவந்த பெயரன்றோ அது ! அம்மஹான் **''சதுச்லோகீ''** என்ற ஸ்தோத்திரத்தில் **காந்தஸ்தே புருஷோத்தம:**-என்றாரம்பித்து **''யவநிகா மாயா ஜகன்மோஹினீ'** என்றருளிச் செய்துள்ளார் என்பதை அனைவரும் அறிவார்கள். அம்மஹான் திருவாய்மலர்ந்தருளிய பெயரே நமது பத்திரிகைக்கும் சாற்றப்பெற்றிருத்தலின், மேலும் ஸாக்ஷாத் பகவானே அமுதமளிக்க ஜகன்மோஹினீ ரூபியானதற்கிணங்கவும், உலகத்தையே தனது சிறந்த கதைகளால் மயங்கச் செய்துவருகிறது என்று கூறுவதே பொருந்தும். ஸ்ரீ மகாகவி **காளிதாசன்** 'திநே திநேஸா பரிவர்த்தமாநா லப்தோதயா சாந்த்ர மஸீவலேகா' என்று தேவியை வர்ணித்ததுபோல், மேன்மேலும் வளர்ந்து பெருமகிழ்ச்சியைத் தமிழ் மக்களுக்கு அளித்துவர வேண்டுமென்று ஸ்ரீ எம்பெருமானை வேண்டுகிறோம்.

கற்பனைக் கதை புனைவதில் மேனாட்டினரையும் விஞ்சக் கூடிய முறையில் 'வைதேஹீ' என்று மிகவும் பொருத்தமான நாமகரணத்துடன் ஆரம்பித்து ராதாமணி, பத்மசுந்தரன், நவநீத க்ருஷ்ணன், ருக்மிணீ காந்தன், ச்யாமளநாதன், கௌரீமுகுந்தன், பரிமள கேசவன், கஸ்தூரீ திலகம், கோபாலரத்னம் முதலிய அருமையான பகவத் ஸம்மந்தம் பெற்ற நற்பெயர்களையே தாங்கிவரும் அறுபது கற்பனை நவீனங்களை மிகப் பொறுமையுடன், இடையிடையே தோன்றி மறைந்த எத்தனையோ இன்னல்களையும் விலக்கிக்கொண்டு ஸ்ரீபார்த்தசாரதி திருவடித்தாமரை நிழலில் உதித்த ஸ்தானத்தில் அதிதீர குணம்வாய்ந்த முயற்சியுடன் விளங்கி நந்தமிழணங்கு மகிழ்ந்து விளையாடற்குச் சிறந்த களமாமிப் பாரத பூமியில்

பிரகாசிக்கச்செய்துவரும் ஜகன்மோஹினி ஆசிரியையின் இன்றியமையா கீர்த்தி பாராட்டத்தகுந்ததே.

இப்படிச் சிறந்தோங்கிவரும் ஜகன்மோஹினி இருபத்து ஐந்தாவது ஆண்டில் வெள்ளி விழாவையும், பிறகு மேன்மேலும் வளர்ந்து பொன் விழா, வைரவிழா முதலிய பல விழாக்களையும் கொண்டாடப்பெற்று நீண்டகாலம் தமிழ்நாட்டிற்குத் தொண்டாற்றி வரவேண்டுமென்றும் ஸ்ரீ பகவத்ஸந்நிதியில் பிரார்த்திக்கின்றோம்.

ஜகன்மோஹினி இருபதாவது ஆண்டுவிழாவில் அறுபதாவது நவீனத்தை வெளியிடுவதிலிருந்தே அறுபதாவது ஆண்டுவிழாவில்பல நூற்றுக் கணக்கான நவீனங்களை வெளியுலாவச் செய்வதற் கறிகுறிபோலும்.

ஆனதுபற்றியே இருபதாவது ஆண்டு விழாவிற்கென்றே சிறப்பான முறையில் முதன்முதலாக வெளியிடப்படுகின்ற இன்றியமையாத இம் மலரின்கண் **"ஷஷ்டியப்த பூர்த்தி"** என்னும் விஷயமாக ஒரு வியாஸம் அருளவேண்டுமென்று ஆவலுடன் வேண்டியதற்கிணங்க சுருக்கமாக ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் பற்றி இங்கு எழுதப்படுகின்றது.

ஸ்ரீ ஸர்வேச்வரனது அருங்கருணையால் இவ்வுலகில் ஜனநமெடுத்த மக்கள் அனைவரும் இன்பத்தையே விரும்பி அதற்கான பற்பல வழிகளையும் அனுஷ்டிக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

அப்படிச் சுகமாக இக் குவலயத்தில் வாழ்க்கை நடத்துவதற்குப் பல்வேறு உபாயங்களிருப்பினும் சிறப்பாக, பகவானை வந்தனை வழிபாடுகளால் வணங்கி அவனருள் பெறுவதற்குச் சாதனமானதும், நீண்ட ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும் பெறுவதற்கு வழிகாட்டியாக விருப்பதும் நம் முன்னோர்களான பெரியோர்கள் அனுஷ்டித்துக்காட்டிய ஸதாசாரமேயாகும், அச் சதாசாரங்களில் அப்தபூர்த்தி (ஆண்டு நிறைவு) விழா, ஷஷ்டி அப்தபூர்த்தி (அறுபதாண்டு நிறைவு)விழா முதலியனவும் ஆகும். அப்தபூர்த்தி என்கிற ஓராண்டு விழாவை ஒரு குழந்தைக்குச் செய்கின்றோமே அன்று அவரவர் சக்திக்குத் தக்கவாறு வைதிக சிரோமணிகளைக்கொண்டு வேத மந்திரங்களை உச்சரித்து ஆயுஷ்ய ஹோமம் முதலியன செய்கிறோம். அவ்வாறு செய்யவேண்டுவது அவச்யந்தானா? அதனால் யாது பயனென்று வினவினால், பொதுவாக அனைவரும் அதனைச் செய்வதால் நலம் என்றே கூறுவார்கள்.

பிறந்து ஒருவருஷம் ஆனதும் ஒரு குழந்தைக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்யமும் ஏற்படுவதற்காகவே பெரியோர்களும் அதனைத் தொன்று தொட்டு அனுஷ்டானத்தில் கொண்டுவந்திருக்கிறார்களாதலின் செய்ததனால் நன்மையே யன்றித் தீமையில்லையன்றோ? வேதங்கள், ஸ்ம்ருதிகள், (தர்ம சாஸ்திரங்கள்) போன்று பெரியோர்கள் அனுஷ்டித்துவந்த ஆசாரங்களும் நமக்குப் பிரமாணம்தானாதலாலும் நமது புராதனமான மதமானது அநேகமாகப் பெரியோர்கள் சென்ற வழியிலேயே சென்று வருதலாலும் பிரபல அரிஷ்டங்களும், அபமிருத்யுதோஷம் முதலியன நீங்குவதற்குக் காரணமாக அப்தபூர்த்திசாந்தி, ஷஷ்டியப்தபூர்த்தி சாந்தி முதலியன மஹர்ஷிகளாலும் கூறப்பட்டிருப்பதனாலும் அதனை நாமும் பின்பற்ற வேண்டியதேயாகும். ஒரு சிலர் ஸ்ரீ பகவானிடத்தில் மிகவும் பக்தியுடையவர்களாக இருந்து தனக்கென்று ஒன்றும் விரிவாக எவ்வித வைதிக காரியத்தையும் நடத்திக்கொள்ள விரும்பாமல் ஸ்ரீ பகவானுக்குக் குறிப்பிட்ட தினத்தில் விசேஷமாக பூஜாதிகளைச் செய்கின்றார்கள்; செய்விக்கின்றார்கள். மற்றும் சிலர் அதிக ஆடம்பரமின்றிச் செய்வதுமுண்டு.

இவை அவரவர்களுடைய சக்தி மனே அபிப்பிராயம் இவைகளைப் பற்றியது. நிற்க,—அறுபதாவது ஆண்டுவிழா என்பது எக்கருத்திலமைந் துளது? அதனை எவ்வாறு அனுஷ்டிக்கவேண்டும் என்பதைச் சிறிது விசாரிப்போம்.

நமது பாரதபூமியில் கால பரிமாணத்தை முறைப்படுத்தி வகுத்த மஹான்கள் அறுபது என்ற எண்ணிற்கு மிகவும் கௌரவம் கொடுத் துளார்கள் என்று தெரிகிறது. 60 நிமேஷம், ஒருவிநாடி, 60 விநாடி 1-மணி 60 நாழிகை 1 நாள், 60 நாள் ஒரு ருது, ஆறு ருது, 1 வருஷம், அப்படி அறுபது வருஷம் ஆயின் அதற்கு 'ஷஷ்டியப்த பூர்த்தி, எனப் பெயர் கொடுத்துளார்கள். ஜோதிஷ சாஸ்திரங்களில் இந்த 60 என்ற எண் ணுக்கே மிகவும் கௌரவமிருக்கிறது.

ஒருவன் பிறந்தது பிரபவ வருஷம் என்று கொள்வோம். அவன் சௌக்யமாக வாழ்ந்துவந்து 60 வருஷகாலம் ஜீவித்திருந்தால் திரும்பவும் அவன் ஜனித்த வருஷமான பிரபவ வருஷம் சுழன்று வரும்போது அந்த வருஷத்தில் அவன் பிறந்தமாதம் நக்ஷத்ரத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவைச் செய்வதனல் அவனுக்கும் அவனைச் சேர்ந்த புத்ரமித்ரகளத்ர பந்துவர்க்கங்களுக்கும் ஒரு சந்தோஷம் உண்டாவதும் அவனை தர்சிப்ப தாலேற்படும் மஹா புண்யமும் முதல் லாபமாகும். பிறகு வைதீக முறைப் படி சாஸ்திரத்தில் கூறப்பட்ட விதமாகச் செய்யப்படின் தீர்க்காயுஷ் யமும், ஸர்வாரிஷ்ட சாந்தியும் ஏற்படுகிறது என்பது அடுத்த லாபம். குறிப் பிட்ட அன்றைய தினத்தில் பிராமணர்களுக்கும் ஏனைய ஏழை எளியவர்க் கும் பற்பல தானங்கள் போஜனம் முதலியன வழங்குவதால் யாவரும் சந்தோஷமடைகிறார்கள். அதனல் ஏற்படும் மகிழ்ச்சி முதலியனவும் லாப மாகும். ஆகவே,—ஷஷ்டியப்த பூர்த்தி விழா என்பது பிறந்தநாள் கொண் டாட்டம் என்பதில் சந்தேஹமில்லை. அவ்விழா பழமையான தமிழர் நாக ரீகத்திலுமிருந்திருக்கிறது என்று தெரிகிறது.

அரசரது நாட்களைச் சிறந்த முறையில் கொண்டாடுவதைப்பற்றி உரைக்குமிடத்தில் **தோல்காப்பியம்** பொருளதிகாரம்-புறத்திணையியலில்- சூத்திரம் 91-**தாவினல்லிசைகருதிய...** என்றாரம்பித்து,

> **"சிறந்த நாளணி செற்ற நீக்கிப்**
> **பிறந்தநாள் வயிற் பெருமங்கலமும்."**

என்று கூறுவதை நச்சினார்க்கினியருரையில்-"நாடொறுந்தான் மேற் கொள்ளுகின்ற செற்றங்களைக் கைவிட்டுச் சிறந்த தொழில்கள் பிறத்தற்கு காரணமான நாளிடத்து வெள்ளணியும்"...என்று கூறுகிறார். மேலும் 'பெருமங்கலம்' என்றதனானே பக்கநாளுந் திங்கள்தோறும் வரும் பிறந்த நாளும் பாடலுட் பயிலாமையுணர்க" என்றும் விவரிக்கின்றார். புறப் பொருள் வெண்பாமாலையிலும் 'நாண்மங்கலம்' (212) என்ற தலைப்பின் கீழ் "அறந்தரு செங்கோலருண் வெய்யோன் பிறந்தநாட் சிறப்புரைத் தன்று"(தருமத்தினையுண்டாக்கும் செங்கோலினையும் அருளினையும் விரும்பி யோன் பிறந்தநாளின் நன்மையைச் சொல்லியது)என்று கூறப்படுகிறது. "இலக்கண விளக்கம்" புறத்திணையியலிலும்-சூத்திரம் 617ல் "வாட்படைத் தானை மன்னவன் பிறந்த நாட்சிறப்புரைத்த நாண்மங்கலமும்"—என்றும் கூறப்படுகிறது. ஆகவே பிறந்தநாளைக் கொண்டாடுவதை 'நாண்மங்கலம்' என்று கூறுவதாலும் அரசருக்குக் கூறியிருப்பினும் ஏனையோர்க்கும் அந் "நாண்மங்கலம்" பொருந்துமாதலின் தமிழர் நாகரீகத்திலும் 'நாள்

மங்கலம்' என்று பிறந்தநாளைப் பெருமையாகக் கொண்டாடுவது உண்டு என்று பெறப்படுகிறது. அறுபதாவது ஆண்டிற் செய்யப்படுகின்ற நாண்மங்கலத்திற்கு ஷஷ்டியப்த பூர்த்திவிழா என்று பெயரிட்டு அழைப்பதும் பழயகாலத்திலிருந்தே விளங்குகிறது எனத் தெரிகிறது. இனி,-தற்காலத்தில் ஷஷ்டியப்த பூர்த்திவிழாவைக்கொண்டாடுவது எப்படி என்பதை **"சாந்தி ரத்னுகரம்"** என்ற நூலிற்கண்டபடிச் சிறிது எழுதுவோம்—**சதுர்வர்க்க சிந்தாமணி** என்ற நூலிலிருந்து சௌனகோக்தமாக இச்சாந்தி கூறப்பட்டிருக்கிறது. அங்கு-ரிஷி கூறுவதாவது, "ஷஷ்டியப்த பூர்த்தி காலத்தில் திதி வாரம் முதலியன மிகவும் தோஷமளிப்பவையாதலின் அந்த தோஷங்களின் பரிகாரத்திற்காக 'சாந்தியைச் செய்யவேண்டும். அதன் முறைகளைத் தெரிவிக்கிறேன் முனிவர்களே! கேளுங்கள் என்றாரம்பிக்கிறுர்—

ஷஷ்டியப்த பூர்த்தி தினத்திற்கு முதல் நாள் பல பிராமணர்களுடன் பெரியதொரு நதிக்குச் சென்று ஸ்நாநம் செய்து போஜநாதிகள் செய்விக்க வேண்டும். மறுநாள் ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டுச் சுத்தனுய் 60 பிராமணர்களை (நன்கு அத்யயனம் செய்தவர்களை) வரித்து ஆசார்யனை முன்னிட்டு ம்ருத்யுஞ்சயன் முதலிய ஸகல தேவர்களைப் பூஜிக்கச் சொல்லி பெரியதொரு பந்தலிற் சாந்திகர்மாக்களை யாரம்பிக்க வேண்டுமென்று விரிவாகக் கூறுகிறுர். அப்பொழுது ஸங்கல்பம் செய்துகொள்ளும்போது ஸமஸ்தவிதமான தோஷங்களையும் கூறி அதன் பரிஹாரத்திற்காக "எனது இந்த ஷஷ்டியப்த பூர்த்தி தினத்தில் ஷஷ்டியப்த தேவீ அருள்வாயிலாக ஆயுள் அபிவிருத்தி யடைவதற்காகவும், அம்ருத மிருத்யுஞ்சயர், இந்த்ராதி எட்டு திக்பாலகள் அருளினுலும், அச்வத்தாமா முதலிய ஏழு சிரஞ்சீவிகளின் அருளினுலும், மார்க்கண்டேயரருளினுலும்,சூரியன் முதலிய நவக்ரஹங்களினருளாலும், அச்வினீ முதலிய 27 நக்ஷத்ர தேவதைகளினருளாலும், தீர்க்காயுளை அடைவதின் பொருட்டு ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி ஜபஹோமாதி கர்மாக்களை செய்வதற்கு யோக்யதையை நானடைய அருள் புரியவேண்டும் எனப் பிரார்த்தனையுடன் தொடங்குவதால் மேலே சொன்ன தேவதைகளை ஆவாஹனம் செய்து பூஜாதிகள் நடத்துவது விளங்கும். மிகவும் அழகாகவும் விரிவாகவும் அவ்விடம் கூறப்படுவதாலும் பிரியமுள்ளவர்கள் பார்த்துக் கொள்ளலாம் என விரிவஞ்சி நிறுத்துகிறேம். அவிடம் பலவேத மந்த்ரங்கள் கூறப்படவேண்டும்." என்று கூறுவதுடன் பற்பல தானங்களும் கூறப்பட்டுள்ளன. முடிவாக—

"ஏவம்க்ருதே சிரம் ஜீவேத் புத்ர பௌத்ராதி ஸம்யுத:
ஸர்வாரிஷ்ட நிவ்ருத்திச்ச ஜாயதே பாக்யவான் பவேத்."

என்று கூறி சௌனகர் முடிக்கிறுர்—

ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி விஷயமாய் யதோசிதம் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. போதாயந ஸூத்ரத்திலும் கூறப்பட்டுளது. அநேகமாக போதாயநர் என்ற மஹரிஷி கூறியபடியே எங்கும் ஷை சாந்தி அநுஷ்டிக்கப்படுகிறதாகத் தெரிகிறது. பெரியோர் பலர் இந்த கர்மாவை 4, 5 தினங்கட்கு முன்பே ஆரம்பித்து கலச ஸ்நாபன பூஜாதிகளைச் செய்து காவேரி கங்காதி தீர்த்தங்களைக் கலசத்தில் சேர்த்து தக்கார்களைக் கொண்டு வேத பாராயணுதிகளையும் ஸ்ரீமத் ராமாயணம், கீதை முதலிய பாராயணுதிகளையும் செய்வித்து ஷஷ்டியப்த பூர்த்தி தினத்தில் மஹாபிஷேகம் செய்விக்கின்றுர்கள் என்பது மறிந்ததே.

இவ்வித ஆண்டு நிறைவுவிழா மேல் நாடுகளிலும் உண்டு என்று தெரிகிறது. பல நூற்றுக்கணக்கான வருஷங்கட்கு முன்பே 'ஜூபிலி' Jubilee என்று பெயரிட்டுக் கொண்டாடி வந்திருக்கின்றனர். இவ்வித ஆண்டுவிழாக்கள் மனிதர்களுக்கு மட்டுமின்றி பல பத்திரிகைகளுக்கும், பற்பல - சபைகளுக்கும் நடைபெறுவதுமுண்டு என்பதை அனைவரு மறிவார்கள். இருபத்தைந்தாம் ஆண்டு விழாவை 'வெள்ளி விழா' என்றும், ஐம்பதாம் ஆண்டுவிழாவை 'பொன் விழா' என்றும் அறுபதாம் ஆண்டுவிழாவை 'வைரவிழா' என்றும் கூறுகின்றனர். ஆகவே அறுபதாமாண்டு நிறைவு விழாவை (Diamond Jubilee) **வைர விழா** என்று மேல்தேசத்தினரும் கூறிவருவதுடன் அனுஷ்டானத்திலும் கைக்கொண்டிருத்தலின் இது நமது நாட்டிற்கு மட்டும்தான் என்று கொள்ளவேண்டியதில்லை. இதேவிதமான விழாக்களை மிகச் சிறப்புடன் நமது ஆசார்யர்களுக்கும், மடாதிபதிகளுக்கும்கூட செய்விப்பதை நாம் கேட்டுவருகிறோம். இவ்விதமாக-சிறப்பாகக் கர்மாக்களையும் விழாக்களையும் செய்வதாலும், செய்விப்பதாலும் பயன் யாது-எனில்-சுருக்கமாக இவ்வாறு கூறுவதே பொருந்தும். ஸ்ரீ பகவத்கீதையில் ஸ்ரீ பார்த்தசாரதியான ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறியபடி, கர்மாவாகவும், கர்ம பலனாகவும் மற்றும் பலவாகவுமிருந்து, யாவற்றையும் நடத்துபவனும், அனுபவிப்பவனும் அவனேயாதலின், அந்த பகவானது ஸமாராதனமே பரம ப்ரயோஜனமாகும். பகவத்ஆராதனம் நிகழுமிடத்தில் பாகவதாராதனமும் நிச்சயம் ஏற்படுவதினாலும், பாகவதாராதனத்தினால்தான் ஸ்ரீ பகவானும் பரம ஸந்தோஷமடைவதாகக் கூறுவதாலும் இவைகளே **நித்யஸ்ரீ: நித்ய மங்களம்** என்றபடி மிருந்த ச்ரேயஸ்ஸை மக்கள் அடைவதற்குக் காரணமுமாகும் என்றுதான் கூறவேண்டும். "சுபமஸ்து"

"புதிர்"

இனியன்

1. மூன்றோர் எழுத்துக்கள் கொண்டதோர் சொல்லாம்
 முற்பாதி போய்விட்டால் மூன்றேயாகும்;
மான்மழுவார் எரித்ததோர் புரியேயாகும்
 முன் னெழுத்துக் கடையோடு சேர்ந்திடுங்கால்;
கான்முனையாம் முற் பாதி நரகமாகும்
 கடையெழுத்து முதலோடு கலந்த தாகில்
வான்தனிலே வசிக்கும் நம் பகைவன்தானும்
 புகலுவீர் இப்புதிர்கண்டு நம் புத்திரிமாரே!

2, புவியினைச் சூழ்ந்திருக்கும் காற்றுமல்ல;
 புனித மாயாக்கு விக்கும் நீறுமல்ல;
நவிலுவர் சான்றோர் வந்தால், ஆசியல்ல,
 அடங்கிடு மண்டமுழுதும், அரனுமல்ல,
பவியமாய் வேட்கை தீர்க்கும், அணங்குமல்ல,
 முகத்தினில் முத்தாய்த் தோன்றும், மணியுமல்ல,
அவியுமாம் இவ்வுலக முழுதும், இஃதில்லையாகில்
 அறிவீர் இக்கதையின் பயனீர் விளம்புவீரே!



பழைய நூல்கள் பழைய கோயில்கள் மாதிரி சுண்ணாம்பு நன்றாக இறுகி கடைப்பாரைக்கு இடங்கொடாத கட்டடங்கள், பூஜைக்குத்தகுந்ததேவாலயங்கள்.

இந்நாட்களில் எழுதி ஈரம் உலருமுன் நாம் அனுபவிக்கும் தமிழ் நூல்கள் அவ்வாறில்லை. ஆயினும் நாம் மெழுகிக் கோலமிட்டு குடியிருந்து வாழ்வதற்குத் தகுந்த விடுகளைப் போன்றவை. அந்நூல்களையும் மதித்து அனுபவித்துப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

-சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

ஜகன்மோகினி

அனுபந்தம்

காயனபடு, கீர்த்தனபடு, அபிநவ
சரஸ்வதி, காலக்ஷேப திலகம்
ஸ்ரீமதி. ஸி. ஸரஸ்வதிபாய்.

ஹரிகதையின் மேன்மை

ஹரிகதையென்பது ஓர் உயர்ந்த கலை. இதையே காலக்ஷேபம் என்றும், ஹரிகீர்த்தனம் என்றும், ஹரிகதா காலக்ஷேபம் என்றும், கீர்த்தனம் என்று மாத்திரம்கூட வ்யவஹரிப்பார்கள். ஆனால் "கீர்த்தனம்" என்று நம் தேசத்தார் விசேஷமாய் சொல்லுவதில்லை. வடதேசத்தில் "கீர்த்தனம்" என்றே ஹரிகதைக்குப் பெயர். மற்ற பெயர்களைச் சொன்னால் கூட பலர்களுக்குத் தெரியாது. அத்தேசத்திலுள்ள பாகவதர்களுக்கு யோக்யதானுஸாரம் கீர்த்தனாசார்ய, கீர்த்தன கேஸரி, கீர்த்தனாலங்கார, கீர்த்தனபூஷண முதலிய பிருதைகளை அளிப்பார்கள். அதே முறையில் தான் நானும் 1920-ல் பூனாவில் ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகர் அவர்களால் "கீர்த்தனபடு" என்னும் பிருதால் அநுக்ரஹிக்கப்பட்டேன்.

ஹரிகதையின் ஸ்வரூபமாவது, வேதவிஹிதங்களும், ஸ்மிருதிகளில் நிர்ணயிக்கப்பட்டதுமான ஸத் கர்மங்களில், மனிதர்களை உத்ஸாஹத்தோடு ப்ரவர்த்திக்கச் செய்வதும், மேலும் ஞானம், பக்தி, வைராக்யம் முதலிய மோக்ஷஸாதனங்களைத் தரக்கூடியதுமான, "ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீபாகவதம், மஹாபாரதம்" முதலிய இதிஹாஸ புராணாந்தர்க்கதங்களான கதா பாகங்களில், ஏதாவது ஒரு கதையை எடுத்துக்கொண்டு, அதைப் பல பாஷைகளிலுள்ள ஸங்கீத ஸாஹித்யங்களால் நவரஸமும் அந்தந்த இடத்திற்குத் தக்கபடி நிறைந்துள்ளதாய் நிருபணம் செய்து, கேட்கிறவர்களை தன்மயமாக்குவதற்கே "ஹரிகதை" யென்று பெயர்.

மேலும் மூலக்ரந்தத்தை உள்ளது உள்ளபடி வாசித்தாலோ, புராண ப்ரவசனத்தால் ச்ரவணம் செய்தாலோ, மாதக்கணக்கோ, நாள் கணக்காவது ஆகக்கூடிய ஒரு கதாபாகத்தை ஒரு ஸமர்த்தரான பாகவதர், தனக்கேற்பட்ட அவகாசமாகிய சில மணிகளுக்குள்ளாகவே கதையின் ஒரு அம்சத்தையும் விடாமலும், இன்னும் பல விசேஷாம்சங்களோடும் கூட நிரூபித்துவிடுவார். தவிரவும், பாகவதோத்தமர், அந்தந்த கதாஸந்தர்ப்பங்களில் அவரவர்களைப்போல் பாவத்தோடு (அபிநயத்தோடு) நடித்துக் காட்டி ஸபையோரை தன்மயமாக்குவதால், ஏதோ புராணச்ரவணம் போலில்லாமல்

"சிர நிர்வ்ருத்தமப்யேதத் ப்ரத்யக்ஷமிவ தர்சிதம்"

என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் வர்ணித்தபடி, அந்த கதாபாகம் என்றோ நடந்திருந்தாலும் அன்றே நம் கண்முன் நடப்பதாய் நிரூபிப்பார்.

இத்தன்மை, வெறும் ஸங்கீதத்தினாலாவது ஸாஹித்யோபன்யாஸத்தினாலாவது ஏற்படமாட்டாது. ஆனால் அப்படி ஸர்வலக்ஷணத்தோடும் ஹரிகதை செய்வது மிகவும் சிரமஸாத்யம் என்பதை மாத்திரம் நிச்சயமாய் சொல்லலாம்.

பலர் ஹரிகதைக்கு ஸங்கீதம்தான் முக்யம், வார்த்தைகளுக்கென்ன பிரமாதம்? நாம் பேசாத வார்த்தையா என்று தன் ஸங்கீத உதவியையே நம்பி, இந்த கதாவிருத்தியில் இறங்கி, பிறகு அதை ஸரிவர ஸாதிக்கமுடியாமல் இருந்ததையும் பார்த்திருக்கிறோம்; வேறு சிலர், கதையென்றாலே, இதிஹாஸபுராணாதி ஆதாரங்களோடு உபன்யஸிப்பதுதானே ப்ரதானம், ஸங்கீதத்திற்கென்ன, அங்கங்கு பெயருக்காக ஸுலபமான ஏதாவது உருப்படியைப் பாடினாலும் தீர்ந்தது, அல்லது தக்க பிற்பாடகரை ஏற்படுத்திக் கொண்டாலும் போச்சுது என்னும் தீர்மானத்தோடு ஹரிகதை செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். அவர்கள் பாடு இன்னும் மோசம். ஆனால், இந்த விஷயம் நடுத்தர யோக்யதை உள்ளவர்களுக்கே.

இதற்கு திருஷ்டாந்தமாய் பாலக்காடு ஸ்ரீ அனந்தராம பாகவதர் அவர்களையோ, கீதாசார்யராகிய, திருவாதி. பண்டித,லக்ஷ்மணாச்சாரியார் அவர்களையோ எடுத்துக்கொள்ளக்கூடாது. அவ்விருவரும் தம் துறையில் எல்லையில்லாத பாண்டித்யம் உள்ளவர்கள். அவர்கள் ஹரிகதை செய்து எப்படியோ ஸமாளித்தார்கள் என்றுமாத்திரம்கூட அல்லாமல் தங்கள் ஜீவமானம் பூராவும் பாகவதோத்தமர்களாகவே ப்ரகாசித்தார்கள். ஆனால் அவர்கள் கதாநிரூபணம் செய்தார்கள் என்று சொல்லமுடியாது. ஜனங்கள் ஸ்ரீ அனந்தராம பாகவதருடைய ஸங்கீதத்திற்கே ஈடுபட்டுவந்தார்கள். ஸ்ரீ கீதாசார்யருடைய கங்கா ப்ரவாஹம்போலொத்த ப்ரவசனத்திலேயே ஈடுபட்டு அச்சமயம் ஸங்கீதம் என்பது ஒன்று உண்டு என்பதையும் மறந்து, ஆஸக்தியோடு சிரவணம்செய்தார்கள். அவர்கள் வாஸ்தவத்தில் ஸங்கீத கச்சேரியையும் உபன்யாஸத்தையுமே செய்துகொண்டிருக்கலாம். பாகவதர்களுடைய அதிர்ஷ்டம் பாகவதர்களின் ஜாபிதாவில் அவர்கள் சேர்ந்தது. அப்பேர்ப்பட்டவர்களை எப்படி திருஷ்டாந்தமாய் கொள்ளலாம்?

முக்யமாய், ஒரு பாகவதர் என்பவருக்கு, உத்தர-தக்ஷிண தேச ஸங்கீத ஞானம், அவைகளை அந்தந்த ரூபத்தோடு பாடும் திறமை, கம்பீரமான சாரீரம், ப்ரவசனசக்தி, ரஸாநுகுணமான அபிநயம், ஸபைக்கு யோக்யமான ஆகாரம், கூடுதலோ, குறைச்சலோ யில்லாமல் கதாபாகங்களை ஸமமாய் கொண்டுபோதல், ஸப்யர்களை ரஸபரவசர்களாய் செய்து காலம் போனதே தெரியாமல், பாகவதர் கதையை நிறுத்தியதும், இன்னும், கொஞ்சநேரம் செய்திருக்கக்கூடாதாயென்றே ஜனங்களுக்குத் தோணுதல், இவ்வித உத்தமகுணங்கள் இருத்தல் மிகவும் அவசியம்.

இந்தக் கடைசி லக்ஷணம்,பாகவதருக்கு அவசியமென்று எழுதும்போது ஒரு ஸங்கதி நினைவுக்கு வருகிறது. ஒரு பாகவதர் கதை செய்தார். பலர் வந்திருந்தார்கள். மத்தியில் சிலர் எழுந்துபோனார்கள். வேறு சிலர் பக்கத்தில் உள்ளவர்களோடு ஊர்வம்பு பேசிக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர், இனி எங்கேயாவது ரஸமான பாகம் வராதா யென்பதை எதிர்பார்த்து இருந்தார்கள். அது ஒருஸபை. "அடே! டிக்கட்டு வாங்கினோம் பணம் கொடுத்து, கதை எப்படியாவது இருக்கட்டும்: நம் பணம் வீணாகக்கூடாதல்லவா? அதற்காக பூரா கேட்டுவிட்டே போகிறது" என்று கடைசி வரையில் இருந்தார்கள் மற்றும்சிலர், ஸாராஸார விவேகமில்லாத வேறு சிலர் அந்தக்கதையையே ஸந்தோஷமாகவும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பாகவதர், இவைகளை ஒன்றையுமே கவனிக்கவில்லை. தான் எடுத்துக்கொண்ட கதையை எப்படியோ ஸமாளிப்பதிலேயே திருஷ்டியோடு கதையை முடித்தார். ஸன்மானம் பெற்று வீடு வந்தார்.ஆனால், அவர் வரையில் தாத்பரியம், தான் நன்றாய் கதை செய்திருப்பதாகவே. அதோடு

"வந்தவர்கள் ஸந்தோஷத்தைக்கேட்டு, வராதவர்கள் இப்படி மோசம் போனோமே! யென்று துக்கிப்பார்கள். ஊர்பூரா இந்தப் பேச்சாகவேயிருக்கும்" என்றுகூட எண்ணம். ஸந்தோஷத்தை அறிவிக்க பலர் வருவார்கள் என்று மறுநாள் காலைக்கடனை சீக்கிரத்திலேயே முடித்து வருபவர்களை எதிர்பார்ப்பதோடில்லாமல், அவர்களுடைய உபசார வார்த்தைகளுக்கு இப்படி, இப்படி, சமத்காரமாய் பதில்சொல்லவேணும் என்றுகூட வார்த்தைகளோடு தயாராய் இருந்தார். ஆனால் ஒருவராவது வரவேயில்லை. பிறகு, இவரே ஏதோ காரியமாய் போவதுபோல் வெளிக்கிளம்பினார். வழியில்கண்ட யாரும், இவரை புரஸ்கரிக்கவும் இல்லை. சில சரியான வயதிலுள்ளவர்கள் இவரைப்பார்த்ததும் நேற்று இருந்த கதையின் விமர்சையை நினைத்து, அடங்காத சிரிப்புவந்து அதைத்துணியால் அடக்கிக் கொண்டும் போனார்கள். அப்போ அவருக்கு ஒரு சங்கதி ஞாபகத்திற்கு வந்தது. தன்னெதிரில் ஒரு வயோதிகர், கதை ஆரம்பம் முதல் கடைசி வரையில் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்தார். அவர் வீட்டை தேடிப்போனார். "ஸ்வாமீ! நமஸ்காரம்" என்றார்.

"ஓஹோ! அப்படியா வாரும். என்ன வந்த விசேஷமோ?" என்றார் கிழவர். அவருக்கு அவர் கதை செய்த ஸங்கதியே ஞாபகமில்லை.

"ஒன்றுமில்லை. சும்மாதான் வந்தேன்."

சரி. "சாவகாசமாய் பார்ப்போமா? கொஞ்சம் ஜோலி இருக்கிறது."

"இல்லை, நேற்று கதை நடந்ததே."...

"ஆம், நீர்தானே, கதை செய்தீர்?"

"ஆம்; ஆம் அதற்கென்ன?"

"அதற்கொன்றுமில்லை."

"அதுதங்களுக்கு எப்படியிருந்தது?"

"ஏன், நன்றாய்த்தான் இருந்தது."

"நன்றாய் என்றால், எனக்கு கொஞ்சம் தெளிவாய் தெரிவிக்க வேணும். எந்தபாகம் நன்றாய் இருந்தது?"

"அதுவா! கடைசிபாகம் நன்றாய் இருந்தது."

அன்று நடந்தது "ஸுபத்ரா கல்யாண" கதை. பாகவதர் கேட்கிறார். "ஓஹோ! கடைசிபாகம் என்றால் ஸுபத்திரையை, அர்ச்சுனன் ரதத்தில் உட்கார வைத்துக்கொண்டு புறப்பட்டானே, அதுதானே? அந்த கட்டம், இன்னும் அழகாய் செய்வேன்; ஸபாக்காரர்கள் அவஸரப்படுத்தினார்கள். அதினால் கொஞ்சம் வேகமாய் கொண்டுபோய்விட்டேன்."

"ஓய்! பாகவதரே! கடைசி பாகமென்றால், அதெல்லாம் அல்லெங் காணும். நான் ஓரிடம்வந்தால் மத்தியில் எழுந்திருப்பதில்லை. நீர் செய்த கதை எனக்குப் பிடிக்காவிட்டாலும் நீர் எப்பொழுது கதையை முடிப்பீர், எழுந்து போகலாம் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். நீர் கதையை முடித்ததும், "தீர்ந்ததுடா, அப்பா!" என்று சந்தோஷத்தோடு எழுந்து வந்து விட்டேன்" என்றார். இதைக் கேட்டதும், பாகவதருக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்? அப்படி யில்லாமல், ஜனங்களுக்கு, காலம்போனதே தெரியாமல் கதையை சமாளிக்க வேணும். இவ்வளவு யோக்யதையும், ஒரு பாகவதருக்கு இருந்தால்தான் கதையும் சோபிக்கும்.

ஆனால் ஹரிகதையென்னும் கலை, இன்று, நேற்று ஆரம்பமானதல்ல. வெகு புராதனமானது. கதை செய்யும் ரீதி வேணுமானால் அடிக்கடி காலானுகுணமாய் மாறிக்கொண்டிருக்கும். பகவத்கீதையில் 'ஸததம் கீர்த்தயந்தோமாம்' என்று இருக்கிறது. ஸததம்=எப்பொழுதும், மாம்=என்னைக்

குறித்து, கீர்த்தயந்த:=கதை செய்கிறவர்களும் என்று அதற்கு அர்த்தம். மேலும், ஸததம் என்றால் "ததம் வீணாதிகம் வாத்யம்" என்னும் கோசப்படி வீணை முதலிய வாத்யங்கள் என்று அர்த்தம். வீணை ம்ருதங்கம் முதலிய வாத்யங்களோடு கதை செய்கிறவர்கள், என்றுகூட அர்த்தம் செய்வதுண்டு. ஆகையால், கிருதாகாலத்திலேயே "ஹரிகதை" இருந்திருக்கிறது. மேலும் ஸ்ரீமத் பாகவத மஹாத்ம்யத்தில் ஒருச்லோகம், தத்காலம் பாகவதர்கள் கதைசெய்யும் ரீதியிலேயே வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

"ப்ரஹ்லாதஸ் தாளதாரீ தாள கதிதயா சோத்தவ: காம்ஸ்யதாரீ!
வீணாதாரீ ஸுரர்ஷி: ஸ்வரதசலதயா ராக கர்த்தார்ஜுனோபூத்!
இந்த்ரோ வாதீன் மிருதங்கம் ஜயஜய ஸுகரா: கீர்த்தநே தேதுமாரா:
யத்ராக்ரே பாவவக்தா ஸரஸரஸனயா வ்யாஸ புத்ரோ பபூவ!

ஒரு ஸத்ரயாகத்தில் மஹாஸபையின் மத்தியில் ஸாக்ஷாத் சுகாசாரியர் ஹரிகதை செய்தார். அதற்கு பக்கபலமாய் ஸகல பாகவதோத்தமர்களும் ப்ரஸன்னமாகி உதவினார்கள். அதாவது, ப்ரஹ்லாதஸ்வாமி தாளம் போட்டார். பல ஜதிகளோடு உத்தவஸ்வாமி ஜாலர்போட்டார். நாரதர் வீணை வாசித்தார். ராகம் பாடுவதில் பரம ஸமர்த்தரான அர்ஜுனர் பக்கப்பாட்டு பாடினார். தேவேந்திரன் மிருதங்கம் வாசித்தார். அடிக்கடி ஜே ஜே காரங்களை கதை மத்தியில் ஸனகாதியோகிகள் செய்தார்கள். இவ்வளவு சகாயத்தோடு ஸ்ரீ சுகாசாரியாள் கதாப்ரவசனம் செய்தார். அந்த ஸமயம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ப்ரசன்னராயிருந்தார்—என்று இருக்கிறது.

ஹரிகதை ஜனங்களுடையமனதை ஆகர்ஷிப்பதுபோல் வேறுஎதுவுமே செய்யாது. இது கேவலம் தர்ம-மோக்ஷ-பரமாகவே இருக்கவேணும் என்பதில்லாமல் அர்த்த-பரமாய்க்கூட உபயோகித்தால் உபயோகமுண்டு. அதாவது ராஜாங்க வ்யவஹாரத்துக்குக்கூட இதை உபயோகிக்கலாம். ஒரு ஸமயம் மகம்மதியர்கள் படையெடுத்து புனாவை நோக்கி வரும்பொழுது, ஆதி சிவாஜி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, ஸ்ரீ துகாராம் ஸாது அங்கங்கு ஜனங்களுக்கு தேச பக்தியையும், ராஜ பக்தியையும் குறித்து பல கதைகள் செய்தது அதினால் தேசத்திய ஸகல ஸ்திரீகளும் புருஷர்களுமே யுத்தத்திற்குக் கிளம்பி மகம்மதிய ஸேனையை முறியடித்தார்கள் என்று கதையிருக்கிறது. ஆகையால் மனிதர்களை தன் தன் வர்ணாச்ரம தர்மங்களில் ப்ரவர்த்திக்கச் செய்யவும், மோக்ஷ சாதனமான ஞானத்தை ஸம்பாதிக்கவும், ஹரிகதையைப்போல் ஸுலப ஸாதனம் வேறு கிடையாது. பாகவதரும் அவ்வளவு உத்தம விஷயங்களை நிரூபிக்க வேணும். ஜனங்களும் அவ்வளவு சிரத்தையோடு கேட்கவேண்டும்.

ஒரு ராஜாவுக்குத் தான் புசித்தது ஜீர்ணிக்காமல் அஜீர்ணோபாதி. அதற்காக எவ்வளவோ மருந்துகளை சாப்பிட்டார். குணமில்லை. வர வர உடம்பு க்ஷீணித்தது. ஜாடராக்கினியும் மந்தப்பட்டது. ராத்திரி தூக்கம் கிடையாது. ஒரு பெரிய ராஜவைத்யர் தெரிவித்தார்.

"மஹாராஜா! வீணாய்மருந்து சாப்பிடுவதில் ப்ரயோஜனமில்லை. ராத்திரி மெய்மறந்து தூங்கினால்தான் இந்த மருந்து பலிக்கும். அப்படி தூங்கிவிட்டால் இந்த மருந்துகூடத் தேவையிராது" என்றார். அப்போ "ஸ்லீபிங் டோஸ்" (தூங்க மருந்து) கிடையாது. அப்படியிருந்தாலும் அது அஜீர்ணத்திற்கு உபயோகப்படாது. ராஜாவும் தன் ஜீவிதத்தில் நிராசராய்விட்டார். மனதும் வைராக்யத்தை அடைந்திருக்கிறது. அந்த ஸமயம் ஒரு பாகவதோத்தமர் அந்த ஊருக்கு வந்து கதை செய்துகொண்டிருந்தார்.

இதைக் கேள்வியுற்ற ராஜா, அன்று ராத்திரி "என் எதிரில் கதை நடக்கட்டும். தூக்கம்தான் இல்லை. நல்லவிஷயமாவது கேட்போம்." என்று அவரை வரவழைத்து கதை செய்யச்சொன்னார். ராஜாங்கத்தில் கதையென்றாலே அது ஒரு தினுஸாயிருக்கும். ராஜா ஒருவர்தான் கேட்கலாம். இரண்டொரு முக்ய அதிகாரிகள், இரண்டொரு ஸேவகர்கள். இதுதான் ஸதஸ்ஸு. இதில்தான் பாகவதர் கதை செய்யவேணும். இப்படி இந்த பாகவதரும் கதையை ஆரம்பித்தார். ஆரம்பித்த அரைமணி அவகாசத்திற்குள் வருஷக் கணக்காய் தூங்காத ராஜாவுக்கு நன்றாய் தூக்கம் பிடித்து விட்டது. வெகு காலம் தூக்கமில்லாமல் களைப்போடு தூங்குவதால் அதற்குத்தகுந்த கொறட்டையும் பயங்கரமாய் ஆரம்பித்துவிட்டது. உடனே பாகவதர் கதையை நிறுத்த யத்தனித்தார். பக்கத்திலிருந்த முக்கிய அதிகாரி 'நிறுத்தவேண்டாம்; செய்துகொண்டேயிருங்கள்' என்று ஜாடை செய்தார். இப்படி ராத்திரி பூராவும் கதை செய்து காலையில் பூபாளம் பாடி கதையை முடித்தார். கதை முடிந்ததும் ராஜாவும் எழுந்திருந்துவிட்டார். சரீரமும் முன்போல் கனக்காமல், கலகலத்து லேசாய் இருந்தது. "பாகவதர்வாள்! பேஷ்! நன்றாய் கதை செய்தீர்கள். எனக்கு ஆனந்தமாய் இருந்தது. இனி நீங்கள் தினம் இப்படி கதை செய்துவாருங்கள். அதற்காக ராஜாங்கத்தில் உங்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்களெல்லாம் செய்து கொடுப்பார்கள்" என்று சொல்லி, மாதச் சம்பளமும் ஏற்படுத்தி, வீடு முதலிய ஸௌகர்யங்களையும் செய்து கொடுத்தார். பாகவதரும் தான் அன்றாடம் ஸம்பாதிக்க வேண்டிய தொல்லை தீர்ந்ததால் ஒரு வகையில் திருப்தி அடைந்தாலும் இப்படித் தூங்குகிற ஒரு ச்ரோதா எதிரில் கதை செய்வதில் கொஞ்சம் வருத்தப்பட்டார். இப்படி சிலநாள் கதை நடந்ததும் ராஜாவுக்கும் நன்றாய் தூக்கம் வந்து ஜீர்ணம் ஆக ஏற்பட்டது. மருந்தும் பிடித்தது. ரோகம் ஸ்வஸ்தப்பட்டு, வைத்யர்கள், சரீர போஷணத்திற்காக தக்க லேகியம், ஸிந்தூரங்களையும் கொடுத்து, ராஜா முன்போல் திடமாங்கராகிவிட்டார். பாகவதர் முன்போல் கதைசெய்ய ஸந்தர்ப்பம் இல்லாவிட்டாலும், ராஜா கையிருப்புக்கு பாகவதரை ஸமஸ்தானத்திலேயே வித்வானாய் நியமித்துக் கொண்டிருந்தார்.

இது இப்படியிருக்க, இந்த ராஜாவைப்போலவே இவர் ஸ்நேகிதர் மற்றொரு ராஜாவுக்கு இதேமாதிரி "அஜீர்ண" உபாதி ஏற்பட்டது. ராஜாக்களுக்கு ஆஹாராதிகளுக்குக் குறைவு இல்லாததால் அஜீர்ணம் ஏற்படுவது ஸகஜமே. அதிலும் கொஞ்சநாள் தொந்திரவு கொடுக்கவும், இந்த ராஜாவுக்கு ஸ்வஸ்தமான ரீதியை பராபரையாய் கேள்விப்பட்டு இந்த ராஜாவுக்கு விஷயத்தைக் கண்டு எழுதி, பாகவதர் அவர்களை வரவழைத்து கதைக்கு ஏற்பாடு செய்தார். ஸம்ப்ரதாயமாய் தூக்கம் பிடித்தது ரோகமும் ஸ்வஸ்தமாச்சுது. இதர ராஜாங்கத்திலிருந்து பாகவதரை வரவழைத்ததால், அந்த ராஜாவை உத்தேசித்தும் ஏராளமாய் ஸன்மானம் செய்தார். பாகவதருக்கு இப்படியே அடிக்கடி ராஜாங்கங்களிலும் பெரிய மனிதர் கிருகங்களிலும், தூக்கத்திற்காகவென்றே கதைகள் நடக்கவும், பாகவதருக்கும் திரவ்ய விஷயத்தில் ஸௌகர்யம் ஏற்பட்டது. பிறகு பாகவதர் ஒரு ஸமயம், தக்க ச்ரோதாக்களின் மத்தியில் தான் கதை செய்யாமல் இப்படி தூங்குமூஞ்சிகளுக்கு எதிரிலேயே தான் கதைசெய்வதில் வெறுப்பை அடைந்தவராய் தானே கஷ்டப்படுகிறார்.

"ஆ கௌமாராத் குருசரண சுச்ரூஷயா ப்ரம்ஹ வித்யா, ஸ்வாஸ்தா யாஸ்தா மஹ: மஹதீமார்ஜிதம் கௌசலம் யத்! நித்ரா ஹேதோர் நிசி நிசி

கதா: ச்ருண்வதாம் பார்த்தி வானும் காலக்ஷேபௌபயிக மிதமப்யா: கதம் பர்யணம் ஸீத்."

"என்னுடைய பால்யம் முதல் பல வித்வான்களை அடைந்து அவர்களுக்கு பல ஸேவைகள் செய்து கஷ்டப்பட்டு இவ்வளவு உத்தமமான ப்ரம்ஹ வித்தையையும் ஸம்பாதித்து, அதை ஆத்மார்த்தகமாகவோ, பல சிஷ்யர்களுக்கோ, ச்ரோதாக்களுக்கோ உபயோகிக்காமல், இப்படி அஜீர்ணரோகம் தீர ராஜாக்களுக்குத் தூக்கம் பிடிப்பதற்காக ஒவ்வொரு ராத்திரியும் கதை செய்து உதரபூர்த்தி செய்யும்படி நேரிட்டதே இது என்ன என் கதி?" என்று நொந்துகொண்டார். அப்படி பாகவதர்களுக்குத் தக்க சபைகள் அமைவதும் ஒரு அதிர்ஷ்டமே.

இப்படி உத்தமமான கதாபத்ததி இப் புண்ய பூமியில் அநாதியாய் உள்ளது. என்றாலும் தத்காலம் பாகவதர்கள் கதை செய்துவரும் வழி ஏற்கெனவே நம் தக்ஷிண தேசத்திலுள்ளதல்ல. இந்த மார்க்கம் மஹாராஷ்ட்ர தேசத்திலிருந்து வந்தது. தஞ்சாவூர் ஸமஸ்தானத்தை மஹாராஷ்ட்ரர் ஆண்டு வரும்பொழுது,ஸ்ரீ சரபோஜி மஹாராஜா அவர்கள் காலத்தில் ஸ்ரீ மேருஸ்வாமிகள் என்னும் ஒரு பாகவதோத்தமர் தஞ்சாவூரில் தங்கினர். அடிக்கடி "சாதுர்மாஸ்யம்" முதலிய ஸமயங்களில் கதை ஏராளமாய் செய்தார். அவருக்கு பல சிஷ்யர்களும் ஏற்பட்டார்கள் மஹாராஷ்ட்ர ப்ராம்மணர்கள்.

பிறகு திருவாங்கூர் ஸமஸ்தானத்தை ஆண்டுவந்த ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் மஹாராஜாவுக்கு குருவாய் அங்கு வசித்தார். அதன் பிறகு காமாக்ஷி பாய் ஸாஹீப் காலத்தில் **மோர்க்கூர் ராமசந்திர பாவா** என்பவர் வந்து தஞ்சையில் தங்கினர். அப்படியே கதைகளை செய்தும் பல சிஷ்யர்களையும் ஏற்படுத்தினர். அவரிடம்தான் **தஞ்சாவூர் ஸ்ரீ கிருஷ்ணபாகவதர்** அவர்கள் உபதேசம் பெற்று சில வருஷங்கள் அவர் கதைகளுக்கு பிடில் வாத்தியத்தை பக்க ஸஹாயமாய் வாசித்து விஷயங்களை நன்ருய் கற்றுக்கொண்டு, அதைத் தமிழில் கதைசெய்ய எம்மாதிரி நிருபணம் தயாரிக்க வேணுமோ அதை தன் புத்தி சாதுர்யத்தால் தயாரித்து கதைகளைச் செய்து தமிழ் தேசத்திலும் கதைக்கும் பாகவதருக்கும்கௌரவத்தை ஏற்படுத்தினர். அந்த மார்க்கத்தில்தான் தத்காலம் கதை நடந்து வருகிறது. காலானுஸாரம் கதாவிருத்திக்கு கொஞ்சம் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டாலும் அது லோக ஸகஜமென்று நினைத்து, அதற்காக கதாவிருத்தியை வருங்காலத்தில் நாமாவசேஷிதமாய் செய்துவிடாமல், ஸங்கீத ஸாஹித்ய நிபுணர்களான வித்யார்த்திகள் கதாஸம்ப்ரதாயங்களை குருமுகமாய் கற்று, கதாவிருத்தியை முன்னுக்குக் கொண்டுவர நான் சர்வேச்வரனை பிரார்த்திக்கின்றேன்.

"காலோஹ்யம் நிரவதிர் விபுலாச ப்ருத்வீ." ஸர்வம் சுபம்.

உபாத்தியாயர்:—வண்டா ரங்கு! நீ குண்டுக்கு பயப்படுவாயாடா!

ரங்கு:—எனக்கென்ன பயம் சார்! எங்கப்பா நெய்க்கடை வைத்திருக்கிருர். எங்க வீட்டில் ஒரு வீசை குண்டு, அரை வீசை குண்டு, மணங்கு குண்டுமுதல் இருக்கு ஸார்!

ஜகன்மோகினி வாழ்க

1. ஜகன்மோகினியாள் வருகின்றாள்
    செந்தமிழ் இன்பம் தருகின்றாள்
அகன்மாக் கதைகளைச் சொல்லுகிறாள்
    அன்பால் எவரையும் வெல்லுகிறாள். (ஜகன்)

2. இருபது வயசின் இளமையுடன்
    இசைதரும் எல்லா வளமையுடன்
அறுபது கதைகளை அறிவுடனே
    ஆக்கிய அனுபவ நிறைவுடனே. (ஜகன்)

3 பார்த்தவர் விரும்பிடும் உடையுடையாள்
    பழகுதற் கெளிதெனும் நடையுடையாள்
வார்த்தைகள் தெரிந்துரை பேசுகிறாள்
    வசைதரும் யாவையும் கூசுகிறாள். (ஜகன்)

4. பற்பல புதுப்புது காட்சிகளை
    படந்தரும் எழுத்தின் ஆட்சியினால்
கற்பனை உலகையும் காட்டுகிறாள்
    கல்வியைக் கதையென ஊட்டுகிறாள். (ஜகன்)

5. அண்டிய எதையும் அனுசரித்து
    அன்னையின் பரிவுடன் உபசரித்து
பண்டைய அறிவையும் புதுவழியில்
    பகர்வாள் தமிழெனும் மதுமொழியில். (ஜகன்)

6. பொங்கலும் பூசையும் சிறந்திடவும்
    புதுநவ தானியம் நிறைந்திடவும்
மங்கலத் தோடுமுன் வருகின்றாள்
    மகிழ்வுடன் வரவுரை தருகின்றோம். (ஜகன்)

7. குளிர்ந்திடும் புதுமலர் புனைவாளை
    கோதை ஜகன்மோகினியாளை
வளர்ந்தவள் நெடுநாள் வாழ்ந்திடவே
    வாழ்த்துடன் திருவருள் சூழ்ந்திடுவோம். (ஜகன்)

—நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை

ஜகன்மோகினி
அனுபந்தம்

ருக்மிணி கல்யாணம்

"உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக்கொண்டு
விருப்புற்(று) அங்(கு) ஏக"
" ... ... உருப்பிணியை
வலியப் பிடித்துக்கொண்டு தேரேற்றி"
-பெரியாழ்வார்.

[உருப்பிணி - ருக்மிணி.]

கண்ணன், காதலியான ருக்மிணியை வலியக் கவர்ந்து தேரேற்றிக் கொண்டுபோகும் காட்சி இது-என்று சொல்லவும் வேண்டுமா?

கோவிலுக்குப் போய் வருகிறாள் ருக்மிணிதேவி. தோழி தட்டில் கொண்டுவருவது பிரசாதம்தான். அகில லோக அன்னையாகிய தேவியின் வரப்பிரசாதம் கிடைத்துவிட்டதென்பதற்கு அறிகுறியான பிரசாதம். காதலனாகிய கண்ணனை அடைய வேணுமென்பதுதான் இவள் வேண்டிக்கொண்ட வரம்: வேறு பிரார்த்தனை ஒன்றும் செய்துகொள்ளவில்லை; செய்துகொள்ளத் தேவையுமில்லையே!

ஆயுதபாணியான சேவகன் காவலாக இவளுடன் வந்துகொண்டுதானிருந்தான். அப்படி என்ன அபாயம் வந்துவிடப்போகிறது? இவளுடைய அபீஷ்டமே, இவளைச் சேர்ந்தவர்களுக்கு அபாயமாகத் தோன்றியது. இவள் காதலனையே அவர்கள் தங்களுக்கு எதிரியாகக் கருதினார்கள்.

அந்த அபாயமே கண்ணன்-வடிவில் இவளுக்கு உபாயமாக வந்து உதவுகிறது. இதுதான் இந்தச் சித்திரக் காட்சி. இனி அவர்கள் தொடர்ந்து போரிடப்போகிறார்கள். கண்ணனும் ருக்மிணியும் இருக்குமிடம்தானே வெற்றி.

மங்களமாக ருக்மிணி கல்யாணம் நடக்கப்போவதை நாம் மனக்கண்ணாலும் பார்த்து ஆனந்தப் பரவசமடைவோம்; பாக்கியசாலிகளாவோம்: ஆனால் அந்தத் தோழியின் ஆனந்தத்திற்கு எதுதான் ஈடாகப்போகிறது?


M. SAMUEL

''பழைய கை'' பி. ஏ., பி. எல்.

போருண்டியம்மா, இந்த சுகம்!

I

பிரியமுள்ள மாலதிக்கு ராஜம் எழுதினது :

உன்கிட்டேருந்து கடுதாசிவந்து நாளாச்சு. உனக்கு உடம்பு கிடம்பு சரியா இல்லையா? இல்லை, அப்ப சொன்னயே, அந்தக்காரணமா? நானும் உனக்கு எழுதமுடியலை. மனசும் சரியா இல்லை. இருந்தாலும் என் மனசை விட்டு உனக்கு எழுதி ஆத்திக்கொள்ளுவம்னுதான் எழுதறேன். வர வர இங்கே வீட்டுலே சம்சாரம் பண்றதே கஷ்டமாயிருக்கு. இவர் திடீரென்று என்னமோ இப்ப எல்லாம் ஒரு தினுசா இருக்கார். எதுக்கெடுத்தாலும் துஸ்ஸுக்குனு கோவம் வந்துடறது. என்னைக்கண்டாலே எள்ளும் கொள்ளுமா வெடிச்சு கொட்டறார். திடீர்னு ஏன் இப்படி ஆயிட்டார்னு தெரியலை. முன்னெல்லாம் எப்படி தாராளமா இருப்பர்! இப்ப வரவர ஆனாலும் கருமித்தனம் சகிக்கலை, இதைக்கேளடி மாலதி, ஊரிலே விலை ஜாஸ்தியாயிடுத்துன்னு அதுக்கு நான ஆப்புட்டேன்! பாலைக் குறை, தயிரைக்குறை, சாப்பாட்டைக்குறைன்னு, போதுவிடிஞ்சா இதான்பாடம், நான் இதுக்காக காலமே ரெண்டுவேளை காபிசாப்டறத்தை நிறுத்திட்டேன், ஒருவேளைதான் காலமே காப்பி—மத்தியானம் காப்பி இல்லாமே நம்மாலே முடியுமா? பாழாப்போன தலைவலி வந்துடறதே... அதுக்காக தீராத எழுவேன்னு சாப்பிடத்தான் வேண்டிருக்கு, அவருக்கென்ன! அவர் ஆபீஸுலே டிபன் சாப்பிட்டுடறார். கேட்டயா இதை, நான் சாமானை வாரி இறைக்கிறேனாம்! அன்னிக்கிக்கூட வெறும்மே சொன்னார். எனக்கும் ரோஷம் தாங்கலை அம்மா—நீங்க வாரி இறைக்காதவளா பாத்து கலியாணம் பண்ணிக்கொங்களேன்னு சொல்லிட்டேன். சொன்னவுட்டுத்தான் அப்பறம் நினைச்சுண்டேன் நிஜமாவே இந்த பைத்தியம் எங்கயாவது இளையா கலியாணம் பண்ணிண்டுடப்போறதேன்னு. அன்னியேபுடிச்சு என்னோடே ஒரு வாரம் பேசலை. நான் வீட்டைவிட்டு வெளியேபோய் ஒருமாசமாறது. அம்மா! ஒரு சினிமாவா, ஒரு பாட்டுக்கச்சேரியா? ஊம் ஊஹூம்... முன்னெல்லாம் வாரத்துலே ஒருநாளாவது வரமாட்டேன்னக்கூட வலுக்கட்டாயமா அழைச்சுண்டு போவர்—நானும் கேக்கப்படாதுன்னு பொறுத்துப் பொறுத்து பாத்தேன்-மனுஷன் அசையற வழியா இல்லை. வெக்கத்தை விட்டு கேட்டேன்–சினிமாவுக்கும் கச்சேரிக்கும் கையிலே காசு ஏதுண்ணு கேக்கறார். என்னைக் கேட்டா, நானா சம்பாதிக்கறேன். முன்னெல்லாம் என்னைக்கேட்டா காசைக் காசுன்னு பாக்காமே வாரி இறைச்சார்?–ஹூம் இந்தவிசை தீபாவளிக்குக்கூட ஒரு பட்டுப்புடவைகூட இல்லை–வெறுமைக்கானும் கடனிழவேன்னு ஒரு கதர்ப் புடவையை சாக்குமாதிரி வாங்கிக் கொடுத்து உடுத்திக்கோன்னார். எனக்கா அழுகையா வந்தது. காலம் கிடக்கற கிடையிலே பட்டுப் புடவை வாங்கிக்கட்டுமா அப்டீன்னுட்டார். எனக்கு பிறந்நாத்துலே வாங்கிப்போட்ட நகை தவிர வேறே ஒரு செல்லாக் காசுக்குக்கூட இவர் நகை வாங்கிப் போடவில்லை அம்மா! என் கைவளை தேஞ்சு சரகா போயிடுத்து, கழுந்து கடிபாரச் சங்கிலி அறுந்து ஒருமாசமாறது. இரண்டு பவுன் கூட வாங்கிப்போட்டு ரெண்டையும் அழிச்சுப் பண்ணிக்கலாம்னா, உனக்கு பைத்தியம் பிடிச்சிருக்கா பவுன் விலை தெரியுமா எங்கறார். இன்னம் இப்படித்தான் ஒவ்வொண்ணுலேயும்–எதுக்

கெடுந்நாளும் சிக்கனம் சிக்கனம்னு ஜபம் பண்ணிண்டே இருக்கார். என் கையிலே கால்காசு செலவுக்குக் கொடுக்கறதில்லை அம்மா! முன்னேல்லாம் பத்து இருவதுன்னு கொடுப்பார். இப்போ காசைக் கண்ணாலே கண்டுநானறியேன்-பாவி என்னதான் பண்ணுரோ சம்பளத்தை! கிளப்புக்குப்போய் சீட்டாடி தோற்கிருரோ—இல்லை...வேறே ஏதாவது செலவு பண்ணுரோ தெரியலே. இந்த வயத்தெரிச்சலெல்லாம் நான் உன் கிட்டே சொன்னுத்தான், நீ படிச்சவளாச்சே, உங்க ஆத்துக்காரரை கட்டி மேய்க்கறையே, நமக்கும் ஏதாவது வழி சொல்வாயோன்னு எழுதினேன். அம்மாவுக்குக்கூட இதெல்லாம் நான் எழுதறதில்லை.

மத்தப்படி, உன் குழந்தைகள் சௌக்யத்துக்கும், உன் சௌக்யத்துக்கும், உடனே பதில் போடு. உன்கிட்டேருந்து விவரமா பதிலை பாத்துண்டே இருப்பேன்.

இப்படிக்கு
ராஜம்

II

அன்புள்ள ராஜத்துக்கு மாலதி எழுதியது:

உன் கடிதத்தைக் கண்டு எனக்கு ஒருவிதத்தில் சந்தோஷம்—இத்தனை நாள் கழித்தாவது எழுதினையே என்று; மற்ருெரு வகையில், அதில் கண்டுள்ள விவரங்களைக் கேட்டு வருத்தமாயிருந்தது. உன் கடிதத்தைப் படித்துப் பார்த்ததும் எனக்கு உன்னைப்பற்றி ஒன்றுதான் தோன்றுகிறது. நீ பெரிய பயித்தியக்காரி யென்றுதான் தோன்றுகிறது. நீ கெட்டிக்காரியாக இருந்தால், இப்படி ஒன்றுமில்லாததைப் பிரமாதப் படுத்திக்கொண்டு மனதைச் சஞ்சலப்படுத்திக்கொள்ளமாட்டாய். இதற்கு யோசனை என்னைக் கேட்கிருய். இதற்கு நிவாரணம் உன் கையிலேயேதானிருக்கிறது; அதாவது உன் மனதிலேயே இருக்கிறது.

அடி அசடே! வீட்டுக்கு வீடு வாசற்படி என்று உனக்குத் தெரியாதா? இந்தக் காலத்தில் குடித்தனம் செய்கிறது எல்லோருக்கும் கஷ்டமாகத் தானிருக்கிறது. செலவு ஜாஸ்திதாணுகிறது. பண்டங்கள் விலை ஒன்றுக்கு இரண்டாகத்தானிருக்கிறது. அதற்குப் புருஷர்களைப் பழிசொல்லி என்ன பிரயோஜனம்? நாம்தானே குடித்தனத்தை நடத்துகிறவர்கள்? நாம் கட்டும் மட்டுமாகத்தான் இந்தக் காலத்தில் இருக்கவேண்டும். புருஷர்களுக்கு ஒத்தாசையாக இருக்கவேண்டும். அவர்கள் சிரமப்படும்போது நாம் அந்த சிரமத்தை நம்மாலானவரையில் குறைக்கவேண்டாமா? ஒருவர்க்கொருவர் மனமறிந்து ஒற்றுமையாக நடந்துகொண்டால்தானே சம்சாரம் நடக்கும்? இதெல்லாம் நான் உனக்குப் புதிதாகச் சொல்லவேண்டுமா! இப்பொழுது போய் நகை செய்துகொள்ள யாராவது பவுன் வாங்குவார்களா? பவுன் விலை உனக்குத் தெரியாதா? இப்படியே ஒவ்வொன்றிலும் நீ சரியாக யோசனைசெய்து நடந்துகொண்டால் உனக்கும் மனத்தாங்கல் இராது, குடும்பத்திலும் மனக் கசப்பு ஏற்படாது. ஆனால் இதில் நான் புருஷர்கள் மீதும் தப்பில்லை என்று சொல்லவரவில்லை. இப்பொழுதுபாரு, உன் புருஷர் உன்னிடம் வீட்டுச் செலவுக்கு இவ்வளவு என்று திட்டமாக எடுத்துக் கொடுத்துவிட்டால் உனக்கும், ஒரு பொறுப்பு இருக்கும். நீயே செலவழிக்கும்போது, கஷ்ட நஷ்டங்கள் உனக்குத் தெரியும். ஊர் இருக்கும் இருப்பும், விலைவாசிகளும் தெரியும். உனக்கே ஒரு நிதானம் அளவு எல்லாம் தெரிந்து நடந்துகொள்ள வந்து விடும். எங்கள் வீட்டில்

அப்படித்தான், நான் இவரைப் பழித்துக்கொண்டும் தொந்தரவு செய்து கொண்டும் இருந்தேன். இப்போது ஒரு வருஷமாக வரும்படியை அப்படியே என்னிடம் கொடுத்துவிட்டு, தனக்குத் தேவையான செலவுகளுக்கு கணக்காக வாங்கிக் கொள்கிறார். நானும் வீட்டுச் செலவுகளுக்கு தம்பிடி விடாமல் எழுதிவைத்துக்கொள்கிறேன். ஒருவர்க்கொருவர் சந்தேகமில்லாமல் சந்தோஷமாக இருக்கிறோம். எனக்கு அவரிடம் மாதக்கடைசியில் கணக்கு ஒப்பிக்க வேண்டுமென்று இருக்கிறது. செலவுகளை வெகு ஜாக்கிரதையாகச் செய்கிறேன். அவர் அளவுக்கு மிஞ்சி செலவழிக்க இடமில்லை. இதன் பலன் ஏதோ கொஞ்சம் கொஞ்சம் மிச்சம் பிடித்து பாங்கியில் பொதுக்கணக்கில் போட்டுவைத்திருக்கிறோம். நீ வேண்டுமானால் பார். உன் புருஷரிடம் இந்த ஏற்பாட்டை நைச்சியமாகச் சொல்லி நடத்திப் பார். பிறகு எனக்கு எழுது. இதற்காக, வீணுக்கெல்லாம் மனதைப் புண் படுத்திக்கொள்ளாதே.

மற்றபடி இங்கு இந்து, ரகு எல்லோரும் சௌக்கியம். (ரகுவுக்கு ஒரு தம்பி கிடைக்கப்போகிறான்; அவர் என்னமோ தங்கை என்கிறார்.) உனக்குத்தான் இன்னும் இந்தக் குழந்தை குட்டி விசாரம் கிடையாதே, அதுவரை அதிர்ஷ்டசாலிதான் நீ. அடிக்கடி கடிதம் போடு.

இப்படிக்கு
உன் பிரிய மாலதி

III

பிரிய நண்பன் ராமுவுக்கு:

உன்னிடமிருந்து ஒரு தகவலும் காணோம். நீ, மாலதி, குழந்தைகள் சௌக்யமென்று நம்புகிறேன். உன்னுடைய கம்பெனியில் உனக்குப் பெரிய பதவி கிடைத்திருப்பதாக கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம்.

நான் ஏதோ இங்கே எப்படியோ காலட்சேபம் நடத்தி வருகிறேன். ஒன்றும் சுவாரஸ்யமில்லை. எனக்கு வரும் சம்பளத்துக்கும் வீட்டுச் செலவுக்கும் கட்டவே இல்லை. இதில் இவள் இருக்கிறாளே ராஜம், இவளுக்கு ஒன்றுமே உலகம் தெரிவதில்லை. பழைய மோஸ்தரிலேயே குடித்தனம் நடத்தணும் என்று பார்க்கிறாள். பொறுப்பு என்பது கிடையாது. பாவம்; என்னிடம் அவளுக்குத் தீராக்குறைதான். நான் என்ன செய்யட்டும்! முன்மாதிரி எல்லாம் என்னால் தாராளமாகச் செலவழிக்க முடியவில்லை. இந்தநாளில் வீட்டுச்செலவே ஒன்றுக்கு இரண்டாகிவிட்டிருக்கிறது. சம்பளம் அப்படி உயருகிறதா? இதோ நேற்று ஸேப்டிரேஸர் பிளேட் வாங்கப்போனால், பாக்கெட் ஒருரூபா விற்றது இன்று நாலரை ரூபாயாக இருக்கிறது. அரிசி பருப்பு மட்டும் என்ன வாழுகிறது! அதற்காக சாப்பாட்டை நிறுத்தமுடிகிறதா? இந்த லக்ஷணத்தில் நான் வாரம் ஒருமுறை அவளை சினிமாவுக்கு அழைத்துப் போகவில்லை என்று அவளுக்கு என்மேல் குறை. இந்தக் காலத்தில் நகை நாணயம் புதிதாக வாங்க முடிகிறதா? எனக்கும் முடியாத தோஷம் அவள் இஷ்டம் போல் தாராளமாக இருக்கமுடியவில்லை. இதனால் அடிக்கடி இப்போது வீட்டில் மனஸ்தாபம், வருத்தம். இதற்கு என்னசெய்வது? நீ தான் சொல்லு-நீ கெட்டிக்காரனாயிற்றே? நீதான் எனக்கு யுக்தி சொல்லவேண்டும். இல்லாவிட்டால் பேசாமல் அவளை பிறந்தகத்துக்கு அனுப்பிவிட்டு இந்த யுத்தகாலம் வரையில் தனியாக இருந்து பார்க்கலாமா என்றுகூட

யோசிக்கிறேன். எதற்கும், உன் சமயோசித புத்தியில் எனக்கு நம்பிக்கை இருப்பதால் இதெல்லாம் ஒளிக்காமல் எழுதினேன். உனக்குத் தோன்றும் யோசனையை எழுதுவாயென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

உன் குழந்தைகள் மாலதி எல்லோரும் சௌக்யமா ?

இப்படிக்கு

உன் நண்பன் சாமா

IV

அன்புள்ள சாமாவுக்கு:

உன் கடிதம் கிடைத்தது. எனக்கு அதைப் படிக்க ஆச்சர்யமாக இருந்தது, நீகூட இப்படி எழுத ஆரம்பித்துவிட்டாயாவென்று. உனக்கு என்னவந்தது? ஏதோ மனைவியின் உபத்திரவத்தால் பன்றுடுபவன்போல் எழுதுகிறாயே? என்னை வேறு யோசனை கேட்கிறாயே! இந்தக் காலத்தில் எல்லோருக்கும் தான் சிரமமாக இருக்கிறது. ஏதோ அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி செலவுகளைக் கட்டுப்படுத்திக் குறைக்கவேண்டியதுதான். ஆனால், நான் இந்த உபத்திரவமெல்லாம் வைத்துக்கொள்வதில்லை. அப்படியே சம்பாத்தியத்தை மாலதியிடம் கொடுத்துவிடுகிறேன். வீட்டுச் செலவு குடும்ப நிர்வாகம் பூராவும் அவள்தான் பார்க்கிறாள். என் செலவுக்கு வேண்டியதை நான் வாங்கிக்கொள்கிறேன். கணக்கு அவளிடம் கொடுத்து விடுகிறேன். நிம்மதியாக இருக்கிறேன். பணம் நம் கையில் இருந்தால் தானே வம்பு. இதற்கெல்லாம் நாம் தலையிட்டோமானால் தலை வெடித்துத் தான் போகும்.

இங்கே நாங்கள் எல்லாரும் சௌக்யம். அடிக்கடி கடிதம் போடு.

இப்படிக்கு

ராமு

V

பிரியமுள்ள மாலதிக்கு ராஜம் எழுதியது:

போருண்டீ அம்மா போரும்! உன் யோசனையைக் கேட்டுட்டு நான் போய் இந்த வீட்டு விசாரத்தை தலையிலே போட்டுண்டதும் போரும், நான் அவஸ்தை படறதும் போரும். நீ சொன்னையேன்னுட்டு, நான் அவரண்டெ ஒருநாள் "இப்படி ஏன் காசை நீங்களே வச்சுண்டு கஷ்டப் படணும் என்கிட்ட கொடுத்துப் பாருங்கோ-செலவெல்லாம் நான் பண்ணிக் கறேன்." அப்படின்னு நான் சொன்னதுதான் தாமசம்... பிராமணன் இதான் சாக்குன்னு வரசம்பளத்தை ரெண்டு மாசமா என்கிட்டே அப்படியே பைசா தம்படி விடாமே கொண்டுவந்து கொடுத்துடறார்.

இதை பத்திரமா வெச்சு காப்பாத்தி காப்பாத்தி, பால்காரனுக்கும், தயிர்க்காரிக்கும் கடைக்காரனுக்கும், காய்கறிகளுக்கும் கொடுக்கறத்துக் குள்ளே, தாவு தீந்துபோறது. வீட்டுவேலை போறுதுன்னு, இதொரு துன்பமா! இதுக்கு நடுவுலே அவர் வேறே தினம் இதுக்கு சில்லறை, இதுக்கு பணம்னு பிச்சி எடுத்துடறார். போறுக்குறைக்கு, நான் இந்த செலவுக்கெல்லாம் வேறே கணக்கு எழுதி வச்சுக்கணுமாம். நான் என்ன பாங்குலே குமாஸ்தா வேலை பார்த்திருக்கேனா, இல்லை காஷியர் வேலை பார்த்திருக்கேனா. செலவு பண்ணதுதான் பண்றோம், சனியன் புடிச்ச

கணக்கு யார்போடறது? சில்லறையை யாரு என்றது? ஒரு நாளானும் என் கணக்குப் புஸ்தகத்துப்படி கையிலே இருக்கற பணம் சரியா இருக்கறதுல்லே, ஒருநாள் ஒரு அஞ்சுரூபா நோட்டு மாயமாக மறைஞ்சுடறது. இன்னொருநாள் ஏழுஅணா நாலுதம்பிடி எங்கயோ முளைச்சுவந்து அதிகமா நிக்கறது. இதெல்லாம் போருதுக்கு இந்த வயத்தெறிச்சலைக் கேளு, அவர்பாட்டுக்கு சம்பளத்தெல்லாம் கொடுத்துட்டு, "வீட்டுச் செலவு போக, நீ உன் சொந்தச் செலவா, நகையோ நாணயமோ எதுக்கு வாணும் எடுத்துக்கோன்னு" ரொம்ப தாராளமாய் சொல்லிபிட்டார். இதுவரைக்கும் என் செலவுக்குன்னு ஒரு தம்பிடி எடுக்க முடியல்லே அம்மா! வீட்டுச் செலவுலே ஏதாவது நிறுத்தி வச்சுண்டு வேணுங்கறத்தை எடுத்துக்கலாம்னு மனசு வரதா நமக்கு? அவரே எல்லாம் செலவழிச்சிண்டிருந்த போதாவது, அங்கலாய்ப்புப்பட்டு எப்பவாவது ஒன்று ரெண்டுன்னு கொடுத்துண்டிருந்தார்; அழுதோ ஆகாத்தியம் பண்ணியோ அஞ்சு பத்துன்னு வாங்கிட முடிஞ்சுது. இப்ப யாருகிட்ட அழறது? போருண்டீ அம்மா இந்தத் தொல்லை! நமக்கு வேண்டாம். அடுத்த மாசத்துலேருந்து பழயபடி அவரையே பணத்தை வச்சு செலவுபண்ணச் சொல்லப்போறேன் எந்த தொந்தரவும் நமக்கு வேண்டாம் அம்மா! நீ எப்படித்தான் குழந்தைகள் குடித்தனம், வரவு செலவு எல்லாத்தையும் கழுத்துலே கட்டிண்டு சமாளிக்கறையோ தெரியலே. கொஞ்சநாள் உங்கிட்டேயே வந்திருந்து பார்க்கலாம்னு இருக்கிறேன். என்ன சொல்றே?

இப்படிக்கு
ராஜம்

VI

அன்புள்ள ராமுவுக்கு:

ராமு! நான் என்றைக்கும் உன்னை கெட்டிக்காரன் என்று மதித்ததுண்டு. நீசொன்ன யோசனையின் பலன் என் மதிப்பை அதிகப்படுத்திவிட்டது. அப்பாடா! இப்பொழுதுதான் நிம்மதியாக இருக்கிறேன். மடியில் கனம் இருந்தால்தானே வழியில்பயம். வீட்டு வரவு செலவு நிர்வாகம் எல்லாம் இப்போது அவள் பார்த்துக் கொள்கிறாள். நான் கவலையில்லாமல் ஹாய்யாக இருக்கிறேன். ஆபீஸுக்கு போகவேண்டியது; முதல் தேதியாலல் சம்பளத்தை வாங்கிக்கொண்டு வரவேண்டியது. அவளிடம் எண்ணிக் கொடுத்துவிடவேண்டியது. அவ்வளவுதான். அப்புறம் விசர்ரம் விட்டது எனக்கு. அடாடா! இந்த யுக்தி முன்னாலேயே தெரியாமல் போய் விட்டதே என்றுதான் எனக்கு வருத்தம். நீ சொல்லிக் கொடுத்த யோசனைக்கு ரொம்ப தாங்க்ஸ் கூடிய சீக்கிரம். இப்பவும் உன்னை வந்து காணலாம் என்று இருக்கிறேன். லீவு எடுத்துக்கொண்டு கொஞ்சநாள் உன்னோடு கழிக்கவேண்டும். என்ன?

இப்படிக்கு
சாமா

13-ம் பக்கத்திற் கண்ட புதிரின் விடைகள் அந்தந்த பாட்டின் கடைசி அடியிலேயே காணப்படும். வினு உத்தரம் அடங்கிய ஒரு வகைச் சித்திர கவி பாற்சேரும்.

விடை — 1. புத்திரி — 2. நீர்.

—"இனியன்"

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்

மொழி பெயர்த்தல் அவசியமா?

ஆங்கிலப் புஸ்தக உலகத்திலேயே சஞ்சரித்துக்கொண்டிருந்த என்னைப் போன்றவர்களுக்கு மகாத்மா காந்தியின் தேசீய இயக்கம் ஒரு புதிய விழிப்பை உண்டாக்கியது. அந்த விழிப்பே தாய் மொழியில் ஒரு புதிய அபிமானம், தாய்மொழியை நன்கு கற்க வேணுமென்ற ஓர் ஆர்வம், தாய்மொழியின் சிறப்பைப் பலருக்கும் உணர்த்தவேணுமென்ற ஓர் அவா இவைகளைத் தூண்டிற்று.

அந்த இயக்கத்தின் ஆரம்பதசையிலே நண்பர்களைப் பார்க்கும் போதெல்லாம் 'ஹௌ டு யூ டு?' (How do you do) 'குட் ஈவினிங்!' (good evening) என்பதற்குப் பதில் 'நமஸ்காரம்' 'க்ஷேமமா?' என்று குசலப் பிரச்னை செய்வது சகஜமாகிவிட்டது. 'மை டார்லிங்', 'மை லவிங்' (my darling, my loving) என்று, தொடங்கி எழுதுவதெல்லாம் போய், 'அன்பார்ந்த' 'பிரியமுள்ள' என்றெல்லாம்—என்ன ஆச்சரியம்!—தமிழிலேயே, சொந்தத் தாய் மொழியிலேயே, கடிதம் எழுதவும் பேசவும் தெரிந்துவிட்டது.

அதுமட்டுமா? பார்க்கும் சினேகிதர்களிடமெல்லாம், "என்ன? படிப்பது ஆங்கிலப் புஸ்தகமா? தமிழ்ப் புஸ்தகங்களைப் படிக்கலாகாதோ?" என்று கேட்கவும் தைரியம் உண்டாயிற்று. "உங்கள் பெண்களுக்கு ஆங்கிலம் செம்மையாக வரவேணுமென்று 'கான்வெண்டு' ஸ்கூலுக்கு அனுப்புகிறீர்களே! தாய்மொழியை நன்கு கற்கவேண்டாமா? சே! இது என்ன ஆங்கிலமோகம்? சொந்த மொழியைப் புறக்கணித்து பிறமொழியை ஆதரிப்பது நமக்குப் பெரிய மானக்கேடல்லவா?" என்று அவர்களுடன் வாதாடவும் தோன்றிவிட்டது. ஆனால் அந்த வாக்குவாதங்களில் பெரும்பாலும் தோல்வியே அன்றி ஜயம் ஏற்பட்டது மிகச் சொற்பமே.

"தமிழில் படிப்பதற்கு ராமாயணம், மகாபாரதம் தவிர வேறு என்ன புஸ்தகம் கிடைக்கிறது? கம்பனையும் குறளையும் படித்து ரஸிக்கவேண்டிய கல்வித்திறம் எல்லோருக்கும் உண்டா? எளிதாக நல்ல நடையில் எழுதப்பட்ட நவீனங்களுண்டா? வை. மு. கோதை நாயகி அவர்கள்போன்ற ஒன்றிரண்டு ஆசிரியர்கள் ஏதோ சில நவீனங்களை எழுதத் துவக்கியிருக்கின்றார்கள். ஆனால் அறிவு விருத்திக்கான விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிகள் அடங்கிய நூல்கள் மருந்துக்கும் கிடைக்கவில்லையே? தமிழில் படிப்பதற்கு நம் இளைஞர்களுக்குப் பக்திநூல் தவிர வேறுவித நூல் ஒன்றும் கிடைக்க மாட்டேன் என்கிறது. இந்த அழகில் நீ என்னைத் தமிழ்ப் புஸ்த

கங்களை என் படிக்கவில்லையென்று சண்டைக்கு இழுக்க வந்து விட்டாய்!" என்று சண்டப் பிரசண்டமாகப் பேசிவிட்டால் பதில் சொல்லத் திணறிப் போகவேண்டியதுதானே?

உண்மையே. அறிவு விருத்திக்கானதோ, மதசம்பந்தமானதோ, சாஸ்திர ஆராய்ச்சிக்கானதோ, கலா சம்பந்தமானதோ, பொழுது போக்குக்கான நவீனம் சிறுகதை முதலியவைகளோ, அன்றாடம் ஆங்கிலத்தில் வெளிவரும் பல்லாயிரக் கணக்கான புத்தப் புதிய நூல்களைப்போலத் தமிழ் பாஷையில் ஏது? ஆனால் இது பாஷையின் குற்றமா?

ஆடை யென்பது அணிவோர் சிறப்பே;
பாஷை யென்பது பயில்வோர் சிறப்பே

என்று மனோன்மணீயத்தில் காண்பதுபோல், தமிழ்ப் பாஷைக்குப் போதுமான இலக்கியச்செல்வம் இல்லாதகுறை அந்தப் பாஷையைச் சாராது. தமிழர்களின் அபிமானக் குறைவும், அசிரத்தையும், முயற்சிக் குறைவுமே காரணம்.

சமீபகாலத்திலே, அக்குறையை ஒருவாறு பூர்த்தி செய்யச் சில தமிழ் அபிமானிகள் முற்பட்டிருக்கிறார்கள். சிற்சில நவீன எழுத்தாளர்கள், ஆங்கில பாஷையில் கிடைப்பதுபோன்ற சிறந்த நவீனங்களையும் சிறுகதைகளையும் எழுதத் தொடங்கியிருக்கின்றனர். தமிழ்ப்புஸ்தக உலகில், இத்துறையிலே மொழி பெயர்த்தலும் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகித்து வருவதை நாம் இப்பொழுது காண்கிறோம். விசேஷமாக ஹிந்தி, பங்காளி பாஷைகள் இந்த 'மொழி பெயர்த்த' லுக்குப் பேருதவி செய்து வருகின்றன.

ஆனால் இத்தகைய மொழி பெயர்ப்பைச் சிலர் அனாவசியம் என்று கருதுவதாகவும் தெரிகிறது. "என்ன மொழி பெயர்த்தல் வேண்டி யிருக்கிறது? ஒரு கதையைப் பத்துப் பேர் பத்துப் புனைப் பெயருடன் மொழி பெயர்த்து பத்துப் பத்திரிகைகளுக்கு, அனுப்பிக் குப்பைக் கீரையாக அடித்துவிடுகிறார்கள். 'ப்ளாட்டு' ஒன்றே; கதா பாத்திரங்கள் ஒரேதினுசு; பாஷையும் அப்படியே: நடைதான் வேறு. சுயமாகக் கற்பித்து ஏதேனும் எழுதக்கூடாதா? பாரதமா? ஹோமரா? ஒரு சாதாரணக் கதைக்கு இத்தனைமொழி பெயர்ப்பா?" என்ற சலிப்பு எனக்கும் சிற்சில சமயம் தோன்றுவதுண்டு. ஆனால் தமிழ் இலக்கியச் செல்வத்தைச் சீக்கிரம் விருத்திக்குக் கொண்டுவர 'மொழி பெயர்த்த'லும் ஓர் இன்றியமையாத சாதனமாக இருப்பதால், அதை மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தான்' வேண்டும்....ஆனால் மேற்கூறியபடிமட்டும் இராமல் பார்த்துக் கொள்வது நலம்.

சில தீவிரத் தமிழ் அபிமானிகள் வேறு எந்தப் பாஷையும் பயிலாமல் தாய்மொழி ஒன்றையே பயின்றுவந்தால் போதுமென்று எண்ணுவதாகவும் தெரிகிறது. இது சரியன்று. ஆங்கிலேயர் சிறந்த தேசாபிமானிகள்; அவ்வளவுக் கவ்வளவு சிறந்த பாஷாபிமானிகளும்கூட. ஆயினும் அவர்களில் பெரும்பாலோர் தாய்மொழியுடன்

கிரீக்கு, லத்தீன் போன்ற ஏதாவதொரு புராதன பாஷையுடன், ஐரோப்பா தேசத்தின் பேசும் பாஷைகளாகிற பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளிலும் ஒன்றையேனும் பயிலத் தவறுவதில்லை.

(He who knows one knows none) 'ஒன்றே அறிபவன் ஒன்றும் அறியாதவன்' என்பது அவர்களுடைய கொள்கை.

இதே கொள்கையைத் திருமூல நாயனாரும் வெகு காலத்திற்கு முன்னமே வெளியிட்டிருக்கிறார்.

> ''பண்டிதர் என்பார் பதினெட்டுப் பாஷையும்
> கண்டவர்; கூறும் கருத்(து) அறிவார் என்க''

ஒரு பாஷையை மட்டும் கற்றவர் கற்றவராகார்; பண்டிதராகவே மாட்டார். அந்தக் காலத்தில் முக்கியமான பாஷைகள் பதினெட்டு. இக்காலத்தில் திருமூலர் இருந்தால் பதினெட்டுப் பாஷைகளுக்கு மேலாகவே கற்கவேண்டுமென்று கட்டளையிடுவார். திருமூலர் கொள்கை எவ்வளவு உண்மையானது என்பதை மேல்நாட்டுப் பேரறிஞர்களின் கல்விப் பரப்பை அறிபவர் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். காலஞ்சென்ற பிரபல பாஷாதத்துவ சாஸ்திரியும் பல ஆண்டுகளாக உழைத்து ரிக்வேதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பேராசிரியருமான 'மாக்ஸ் முல்லர்' சுமார் இருபது பாஷைகளில் வல்லவர் என்பது உலகம் அறிந்ததே.

திருமூலர், மாக்ஸ் முல்லர் முதலான மேதாவிகளைப்போல் பல பாஷைகளில்பயிற்சி பெறுவதுஎல்லோருக்கும் சாத்தியமல்ல. ஆனால் பிற பாஷைகளில் ஒன்றிரண்டையாவது பயில்வது அவசியம். பிற பாஷைகளிலுள்ள அருமையான நூல்களின் சிறந்த விஷயங்களை மொழிபெயர்ப்பின் மூலமாயாவது தெரிந்துகொள்வது நன்று. அறிவு விருத்திக்கான விஷயங்கள் பல, அன்னியர் நூல்களில் மலிந்து கிடக்கின்றன. அவைகளைத் தெரிந்துகொள்ளாமலிருப்பது அறிவீனம். கிணற்றுத் தவளைக்கும் கடல் தவளைக்கும் வித்யாசமில்லையா? உலகம் பாராமலும், தேச சஞ்சாரம் செய்யாமலும் இருப்பவர் எவ்விதம் விரிந்த அனுபவத்தைப் பெறுவதற்கு இயலாதோ, அதுபோலவே பல நாட்டு நூல்கள் அடங்கிய புஸ்தக உலகிலே சஞ்சரிக்காத ஒருவர் சிறந்த அறிவாளியாக முடியாது. அறிவு யாவருக்கும் பொது. அரும் பெறும் உலக நூல்களைப் பொது உடைமை பென்றே சொல்லவேண்டும். அவைகள் அனைத்தையும் அந்த, அந்த மொழிகளிலே கற்றுணர்வதென்பது சிரம சாத்தியம்; ஆகையால் உலக நூல்களை உணர்வதற்கு இன்றியமையாத கருவி மொழிபெயர்ப்பேயாகும்.

இந்த உண்மையை ஆங்கிலேயர் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் கிரீக், லதீன், சமஸ்கிருதம் போன்ற பழமையான பாஷைகளிலுள்ள பல அரிய நூல்களைத் தம் மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். மேலும் அப்போது அப்போது தற்கால

பாஷைகளில் வெளிவரும் அருமையான பிற நூல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் தவறுவதில்லை.

பாஷைக்கு நூல்கள்தான் செல்வம். வளர் மொழியாகிய நம் மொழி மேன்மேலும் வளர்ந்து விருத்தியடைந்து பெரு வாழ்வு பெறவேண்டுமானால், சொந்த சிருஷ்டியைமட்டும் நம்பி யிருத்தல் போதாது. பிரமாண்டமான வரி ஒன்று பூர்ணமாக நிரம்பி என்றும் வற்றாத நீருடையதாக இருப்பதற்கு ஊற்று நீருடன், மழை நீர், ஆற்று நீர்களாகிய பல வேற்று நீர்களும் வந்து சேரவேண்டும். பிறநாட்டு நல்லறிஞர்களுடைய சாஸ்திர நூல்களின் மொழி பெயர்ப்புகளினால் நமது புதிய சிருஷ்டிக்கு உரம் வைத்தது போலாகும். உலக மேதாவிகளின் அனுபவங்களைத் தெரிந்து கொள்ளுவதினால் நம்முடைய திருஷ்டி புதியதோர் ஒளி பெறுகிறது. குறுகிய மனப்பான்மை நீங்கி விசால புத்தி உண்டாகிறது. தாரதரங்கள் தெளிவுபடுகின்றன. பொய் மதிப்புகள் ஒழிந்து, உண்மையான கருத்துக்களுக்கு இடம் ஏற்படுகிறது. சுருங்கச் சொன்னால், கிணற்றுத் தவளை-வாழ்க்கை போய் வாழ்வின் கடல் போன்ற விரிந்த பரப்பு புலனாகிறது.

பாஷை எதுவானாலென்ன? நூலின் சிறப்பு-விஷய கௌரவம் யாவரும் கொண்டாடக் கூடியதுதானே? ஒரு பிரஞ்சு தேச மகான் நம்முடைய ஆதி காவியமான வால்மீகி ராமாயணத்தை அதன் ஆங்கில மொழிபெயர்ப்பில் படித்துவிட்டு, "ஓ பாற்கடலே! உன்னுள்ளே நான் சதா முழுகிக் கிடப்பேனாக!" என்று குதூகலமாகக் கூறியுள்ளார்.

இதிலிருந்து ஆங்கிலேயர் மொழிபெயர்த்தலை ஒரு சிறந்த கலையாகவே செய்துவிட்டார் என்று தெரிகிறதல்லவா? ஆனால் நம் நாட்டு நிலைமையென்ன? வடமொழியிலுள்ள பல பழமையான, அருமையான நூல்கள்கூட இன்னும் தமிழில் மொழிபெயர்க்கப் படவில்லையே? "நம் தேசத்துச் சட்டங்களை, மனு, யாக்ஞவல்கியர், முதலிய பெரியோர் செய்த நீதி நூல்களைப் பிற மொழியில்தானே படித்துத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது! 'மெயின்ஸ் இந்து லா' வுக்கு (Mayne's Hindu Law) ஒரு தமிழ் மொழிபெயர்ப்பு இருந்தால் பொதுமக்களுக்கு எவ்வளவு உபயோகமாக இருக்கும்? ஸ்திரீ சொத்துரிமைக்கான பாகத்தை மட்டுமாவது யாராவது மொழிபெயர்க்கக்கூடாதா" என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. தமிழில் மகாபாரத மொழிபெயர்ப்பு வருமுன்னமே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. ஹோமரும் வால்மீகி ராமாயணமும் மஹா பாரதமும் பிறபாஷைகளில் மொழி பெயர்க்கப்படாவிட்டால் புஸ்தக உலகத்திற்கே அது ஒரு பெருங் குறை யென்பதில் சந்தேகமுண்டோ?

"மொழி பெயர்த்தலா? மூலத்திற்கு அது ஈடாகுமா?" என்று கேட்கலாம். மூல நூலுக்கு ஈடாவது மட்டுமா? சிற்சில மொழி பெயர்ப்புகள் மூலத்தையும் வென்று அந்த நூலுக்கு ஒரு சிறப்

யையும் பெருமையையும் அளிப்பதாகின்றன. பாரசீக கவி ஓமர் காயத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு-'பிட்ஸ்கெரால்ட்' என்பவரால் செய்யப்பட்டது-மொழிபெயர்ப்பாளரின் வல்லமையினால் மூலத்தையும் வென்றுவிட்டது என்னலாம்.

காளிதாசரின் ரகுவமிசத்தின் ஆரம்ப அடிகளின் கீழ்வரும் ஆங்கில மொழிபெயர்ப்பு எவ்வளவு அழகாக அமைந்துள்ளது.

How great is the Ragu's Solar Line !
How feeble are the powers of mine !
As if upon an ocean swell !
I launch a puny cock and shell !

உலகப் பெரு நூல்களை மொழிபெயர்ப்பின் மூலமாவது யாவரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் மகாத்மா காந்திக்கு அதிகமாக உண்டு.

தமிழர்கள் துளஸீ ராமாயணத்தையும், வடநாட்டார் நம்முடைய கம்பனையும், திருக்குறளையும் மொழிபெயர்ப்பின் மூலமாவது கட்டாயம் படித்துத் தெரிந்துகொள்ளவேணுமென்பது மகாத்மா காந்தியின் அபிப்பிராயம். பிற பாஷைகளிலுள்ள சிறந்த நூல்களையும் நாம் படிக்கவேண்டுமென்ற ஆசையைப் பூர்த்தி செய்வதற்கு மொழிபெயர்ப்பே சுலபமான கருவியாகையால், அதன் அவசியத்தைப்பற்றி அதிகம் சொல்வானேன் ?

தாயார்:—சமையலுள்ளே வந்து தொலையாதேடா.
பிள்ளை:—தொலையாமே பத்ரமாயிருக்கத்தான் இங்கேயே யிருக்கேம்மா.



ஸ்ரீமான். டாக்டர் தி. செ. சௌ. ராஜன்

கிராம வாழ்வு

"என்ன டாக்டர் ஸார்! நீங்கள் ஒரு வருஷத்திற்கு மேலாக கிராமத்திலேயே இருக்கிறீர்களே, அங்கு என்னமாக உங்களுக்கு பொழுதுபோகிறது?" என்றார் எனது கிளப் நண்பர் ஒருவர் மிக வியப்புடன்.

"மனமிருந்தால் உலகத்தில் எங்குதான் பொழுது போகாது" என்றேன்.

"நான் கேட்பது வேறு. இவ்வளவுகாலம் நல்ல பெரிய டவுன்களில் வாழ்ந்துவிட்டு திடீரென ஒரு கிராமத்திற்குப் போய் அங்கிருப்பதென்றால் எப்படியிருக்குமென தெரிந்துகொள்ளத்தான். போய்ச் சேருவதற்கு நல்ல ரோட் உண்டா ஸார்!"

"ஒருமாதிரியான ரோட் சில நாட்களுக்குமுன்பு உண்டு. ஜில்லா போர்டு நிர்வாகம். இரண்டாம் தரம் ரோட். ஆனால் இந்த சண்டை இந்தியாவிற்கு வந்தாலும் வந்தது, எங்கள் ரோட்டிற்குத்தான் அதிர்ஷ்டம் பிடித்தது. சேலம் வழியாக பங்களூர் போவதற்கு, பெரிய ஆறுகள் தொல்லையில்லாமல் விரட்டிக்கொண்டு போவதற்கு, எங்கள் ரோட் நல்ல வசதியுள்ளது. தென்னிந்திய பட்டாளங்களுக்கு முக்கிய தளம் பங்களூர்.

அங்கிருந்து திருச்சி, தஞ்சாவூர், மதுரை, தனுஷ்கோடி, திருநெல்வேலி முதலிய இடங்களுக்கு ரயிலைக் காட்டிலும் சீக்கிரமாக யுத்த தளவாடங்கள், இரும்பு சாமான்கள், உதிரிசிப்பாய்கள், ஆபீஸர்கள், மற்று விடுபிடி சாமான்கள் போவதற்கு பரதேசியாக யிருந்த எங்கள் ரோடு ஒன்றுதானுண்டு. பங்களூரிலிருந்து எங்கள் ஊர் வழியாகப்போகும் மோட்டார் லாரிகள் அமெரிக்காவில் அந்த தேசத்தின் ரஸ்தாக்களில் ஓடுவதற்காகத்தான் செய்திருக்க வேண்டும். திருவாரூர் தேருக்கு ரப்பர் டையர் போட்டுவிட்டால் எப்படியிருக்குமோ அதுபோலத்தானிருக்கிறது.

எங்கள் ஊர் சாலையின் இருபுறங்களிலும் அடர்ந்த மரங்கள் ஏராளமாக வளர்ந்திருக்கின்றன. ஆலமரம், புளியமரம் இரண்டும் அதிகம். அதில் ஆலமரம் பரம்பரையாய் வளர்ந்து விழுது இறங்கி அடர்ந்து நிழல் கொடுத்துவருகிறது. காவேரிக்கரை ஓரமாக சாலை போவதால் மரங்களின் செழிப்பிற்கு கேட்கவேண்டியதில்லை. சில மரங்கள் பட்டாளத்து ரதங்கள் செல்வதற்குஇடஞ்சலாகயிருந்தன. இந்த மரங்கள் ஜில்லாபோர்டு கண்காணிப்பில் உள்ளவை. ஒரு மரம் வெட்டவேண்டுமென உத்திரவு கேட்டால் ஒரு தலைமுறைக்குள்ளாக உத்திரவு வருவது அருமை. யுத்த தளவாடங்கள் போவதற்கு இவ்வளவு சாவகாசமான நடவடிக்கைகள் உபயோகமில்லாததால் இம்மரங்களை ரெவின்யூ அதிகாரிகளின் மேற்பார்வைக்கு இப்

பொழுது மாற்றிருக்கிறார்களாம். முடிவில், யுத்த ரதங்கள் போவதற்குத் தடையாக யிருந்த மரங்கள் யாவும் வெட்டப்பட்டிருக்கின்றன. இதுமட்டுமல்ல.

ஜில்லாபோர்டு சாலைகள் பன்னிரண்டடி அகலத்திற்குமேல் போடுவதில்லை. ஜாதி அடி பன்னிரண்டு, கண்டிராக்டர்களிடமிருந்து மீண்டு வரும்பொழுது காலடி பன்னிரண்டாக அநேக இடங்களில் மாறிவிடும். எதிரில் ஒரு வண்டிவந்தால்-அதுவும் சாமான் வண்டிகளாயிருந்துவிட்டால்-ஒதுங்கவேமாட்டாது. யுத்த லாரிகள் சற்று ஒதுங்கி தாண்டிப்போனால் ஒருமுழம் களிமண்ணில் இறங்கிவிடும். இந்தவிபத்து ஏற்பட்டதின் காரணமாக சாலை பூராவும் கப்பிரோட்டாக வெகு வேகமாக மாறிவருகிறது. யுத்த காலத்தின் சுகமெல்லாம் எங்கள் ஊர்ரோட்டிற்குத்தான் உண்டாகியிருக்கிறது. முதல்தரம் சாலையாக மாறிவிட்டது. யுத்த லாரிகளுக்கு இடம் கொடாமல்போனால் உயிர்பிழைப்பதரிது. இருந்தபோதிலும் எங்கள் ரோட் மிக நாகரீகமுள்ளதாகிவிட்டது. அதைப்பற்றி கவலையேகிடையாது. சாலை கண்காணிப்பு, ரிபேர் இவைகள் வெகு தீவிரமாக நடக்கின்றன." என்று பதில் கூறினேன்.

"உங்கள் ஊரில் ஆறு, கால்வாய், குளங்கள் உண்டா! வந்தால் நேராக காரில் வந்திறங்கமுடியுமா, இங்கிருந்து எவ்வளவு தூரமிருக்கும்."

"திருச்சியிலிருந்து சுமார் இருபத்தெட்டு மைல்; அகண்ட காவேரியின் வடகரையில், சாலையிலிருந்து அரை மைல் தூரம் இரண்டு வாய்க்கால் தாண்டவேண்டும்'' என்றேன்.

"இந்த உபத்திரவந்தான் கரைவழி கிராமங்களில் தொடை மட்டும் தண்ணீரில் தவித்து பிறகு ஊர் சேரவேண்டும். ஒரு வாய்க்கால் போதாதென்று, ஒட்டக்கூத்தன் பாட்டுப்போல இரட்டை வாய்க்காலா? வண்டிகள், கார் முதலியவை எப்படிபோகும்?''

"கட்டை வண்டிகள் சுலபமாகப் போகும். மாடுகள் தண்ணீருக்கு பயப்படாது. இறங்கினவுடனே நுகத்தடியுடன் சாய்ந்து, வயிறு நிறைய தண்ணீர் குடித்துவிட்டுத்தான் பிறகு நடக்கும். மோட்டார் காரும் இப்பொழுது வருவதற்கு இரண்டு பாலங்கள் கட்டியிருக்கிறோம். ஆகையால் பூட்ஸ் நனையாமல் தங்களைப்போன்றவர்கள் தாராளமாக வரலாம்.''

"நல்லவேளை இந்த ஒரு நன்மையாவது நீங்கள் போனதற்கு ஏற்பட்டதுபோலிருக்கிறது.

"ஆம். நீங்கள் சொல்வது உண்மைதான். அந்த ஊர் வாசிகள் ஒருவராகிலும் வாய்க்கால்களுக்கு பாலம் வேண்டுமென அவசியத்தை இதுகாறும் உணர்ந்தவர்களில்லை. பாலம் கட்டியபிறகும் அதிக உற்சாகமிருப்பதாகவும் தெரியவில்லை. எங்கள் ஊர் போக்குவரத்து அதிகப்படவுமில்லை. பூட்ஸ் போட்ட அதிகாரிகள் ஒருவர்

இருவர் தவிர, என்னையும் என் மோட்டார்க்காரரையும் தவிர இந்த சுகத்தை அறியக்கூடியவர்களே எங்கள் ஊரில் கிடையாது."

"ஊரில் கிளப், வாசகசாலை ஏதாகிலும் உண்டோ?"

இரண்டும் கிடையாது. "காப்பி கிளப்" கூட கிடையாது. சாப்பாடு ஓட்டல் கிடையாது. இருப்பது சிவன்கோவில்தான். அங்கும் பிரசாதம் வில்வதளந்தான். வாசகசாலை என் வீட்டுத் திண்ணைதான். ஆங்கிலம் ஒருவருக்கும் பழக்கமில்லை. எனக்கு வரும் தமிழ் தினசரி பத்திரிகைதான் வாசகசாலை. படிக்க வருகிறவர்கள் நால்வர்; சாயங்காலம் ஒருமணி நேரம் வந்து சத்தமில்லாமல் படித்துப்போவார்கள்.

"சிறு பள்ளிக்கூடங்கள் ஏதாகிலும் உண்டோ"

"ஒன்றுமே கிடையாது"

"போஸ்டாபீஸ்" ...."இல்லை"

"கள்ளுக்கடை" ..."இல்லை"

"என்ன சுத்த அனுமதேயமான இடம்போலிருக்கிறதே"

"அதுதான் இல்லை. அகண்ட காவேரிக்கரை; பாடல் பெற்ற க்ஷேத்ரம். மலை சுமார் 400 அடி உயரமிருக்கும். இருநூற்றுத் தொண்ணூறு ஏக்கர் விஸ்தீரணம்: கிராம ஆயக்கட்டு விஸ்தீரணமும் அவ்வளவுதான். ரிவின்யூ இலாகாவில் இது அயன் கிராமமல்ல. குக்கிராமம் என்று வகுத்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் கையிலையங்கிரியினின்று பரமசிவனால் தெற்கே துரத்தப்பட்ட அகத்தியர், இம்மலைக்குவந்து, மலைமேலே காட்சிகொடுக்கும் மரகதாசலேசுவரரைதரிசிக்கச் சென்றார். உச்சிக்காலமாகிவிட்டபடியால் குருக்கள் கோவிலை பூட்டிக்கொண்டு கிராமத்திற்குவந்துவிட்டார். கடலை ஒரு உள்ளங்கையிலேந்திக் குடித்த அகத்தியருக்கு கதவை திறக்கமுடியவில்லை. சுவாமியை பிரார்த்திக்க 'மலை அடிவாரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் அருவியில் ஸ்நானம் செய்தால் நீ உருமாறி ஈயாகி பிறகு கதவு துவாரத்தின் வழியாக வந்து என்னை தரிசிப்பா'யென சுவாமி உத்திரவு கொடுத்தார். அவ்விதம் அகத்தியர் அந்த அருவியில் ஸ்நானம் செய்து ஈயாக மாறினார். பிறகு ஈயாக சுவாமியைதரிசித்து திரும்பவும் வந்து அருவியில் முழுக, அகத்தியராக மாறினார் என்பது ஸ்தலபுராணம். அன்று முதல் அந்த அருவிக்கு கோண்ட உருமாறி (கொண்டான்வாரி) எனப்பெயர். புராதனமாக மரகதமலையென பெயர் பெற்ற மலை" திருஈங்கோய்மலை" என அகத்தியர் தரிசனத்திற்குப் பிறகு மாறியது. அப்படியே மரகதாசலேசுவரர் என்ற சுவாமி "திருஈங்கோய் நாதர்" எனப் பெயர் பூண்டார்.

"உங்கள் ஊரில் பேச்சுத்துணைக்கு விஷயம் தெரிந்தவர்கள் படித்தவர்கள் யாராகிலுமிருக்கிறார்களா? டவுனிலிருந்து பழக்கப்பட்டவர்கள் அங்கு எவ்விதம் காலத்தைப் போக்குவது."

"கிராமத்தில் பொழுதுபோக்கு, அதற்காக வாய்ப்பேச்சு பேசுவது, என்பது முடியாத வேலை அதுவும் டவுனில் பேசி பழகினவர்கள் கிராமத்தில் குடியேறினால் "மௌன சாதகம்" செய்து கொண்டுதான் வரவேண்டும். யாருடன் பேசுவது, எதற்காக

பேசுவது, எப்படிப் பேசுவது என்பது முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். பெரும்பான்மையோருக்கு எழுதப்படிக்கத்தெரியாது. நூற்றிற்கு தொண்ணூற்றைந்து பெயர் அன்றாடம் உழைத்து உணவு சம்பாதிக்க வேண்டியவர்கள். பாக்கியிருக்கும் ஐவரும் சொற்ப ஜீவனத்திற்குரியவர்கள்தான். எங்கள் ஊர் காவேரியாற்றிற்கு வடகரையிலுள்ளது. நேர் எதிர்த்த தென் கரையில் ரெயில்வண்டி குளித்தலை மார்க்கமாக ஈரோடிற்குப் போகிறது. ஆறு தாண்டினால் ரயிலில் ஏறலாம். எனினும் ரயில் ஏறாத நபர்கள் சுமார் நூற்றுக்கு ஐம்பது பெயர்களிருப்பார்கள். ஊருக்கு மூன்றுமைல் சுற்றளவு தாண்டாதவர்கள் குறைந்தது நூற்றுக்கு இருபது பெயர்களிருக்கலாம். உலக நடவடிக்கை தெரிந்தவர்களும் மிகக் குறைவு. எனது பண்ணையில் வேலை செய்பவன் ஒருவன் சற்று எழுதப் படிக்கத் தெரிந்தவன். அவனை "அமாவாசை யென்றால் தெரியுமா" என்று கேட்டேன். "அதென்ன அப்படி கேக்கிறீங்க. அம்மாசிதெரியாதா. எங்கவூட்லே விரதமிருப்பாங்க" என்றான். அதற்குமேல் விஷயம் தெரியாது. தவறுதலாக ஆண் பெண் எவர்களையாவது வயது மட்டும் கேட்டுவிடக்கூடாது. கேட்டுவிட்டால் உடனே பதில் கிடைத்துவிடும். "வயசை யார் கண்டார்கள்" என்பார்கள். அப்படி நீங்களாக உத்தேசமாக, இவ்வளவு வயதிருக்குமா வென்றால் "என்னமோ" என்பார்கள். அவர்கள் வேண்டுமென சொல்லாமலிருப்பதில்லை. தெரிந்ததே அவ்வளவுதான். அவர்கள் வாழ்க்கையில் சென்ற வருஷங்கள் இவ்வளவென கணக்குப்பார்க்க தேவையில்லை. சற்று பேச்சுக்காரனாக யிருந்தால் "காவேரியில் உடைப்பு எடுத்தது பாருங்கோ அப்பொழுது நான் சிறுவனாக யிருந்தேன்" என்பான். அதன் பிறகு கணக்கு நம்மால் முடிந்தால் பார்த்துக்கொள்ளவேண்டியதுதான். இப்படிப்பட்ட மக்கள் நடுவில் யாருடன் பேசி பொழுதுபோக்கமுடியும்?

"ஸார்! போதும் உங்கள் கிராம வாழ்க்கை. உயிருடன் ஸமாதி நிலை அடையக் கூடுமானால் எம்போன்றவர்கள் அங்கு போகக் கூடும்" என எனது கிளப் நண்பர் முடிவு செய்துவிட்டார். பாவம்! ஒரு சோடாகூடக் கிடைக்காத ஊரில் எனது நண்பர் எப்படி உயிர்வாழ முடியுமென எனக்குத் தோன்றியது.

அயோக்யன், என்று தெரிந்தும் சில சமயம் அவர்களை நம்பும் படியான நெருக்கடி உண்டாகிவிடுகிறது. பரம யோக்யனாகயிருப்பவனையும் சில சமயம் சந்தேகிக்கும்படி இடம் உண்டாகிவிடுகிறது. இது தான் காலத்தின்கோலம்.

சில ப்ரகுருதிகளை பகவான் ஏன் படைத்தானென்றுகூட சில சமயம் தோன்றுகிறது. தன் மதிப்பைத்தான் காப்பாற்றிக்கொள்ளவும் தெரியாது; பிறர் மதிப்பை யறிந்து நடக்கவும் தெரியாது. இதென்ன ஜட சுபாவம்!

ஜகன்மோகினி பொங்கல் மலருக்கு

அன்பளிப்பு

கண்ணனை அழைப்போம்

உலகமெங்கும் போர் மேகம் மூண்டு, இரத்த மழை கொட்டுகிறது; நமது சா ந நாட்டிற்கும் அசுர பயம் நெருங்கிவிட்டது. எங்கும் பஞ்சம், கொள்ளை, பட்டினி-எமதூதர் ஆனந்தக் கூத்தாடுகின்றனர்; துன்பக் கண்ணீரில் வாழ்வு படகு தத்தளிக்கிறது; எத்தனையோ டார்பிடோக்கள் அதை மோத நிற்கின்றன. இச் சமயம் நாமும் பொங்கல் கொண்டாடுகிறோம்-பசுக்கள் பகாசுரர் வயிற்றில் புதைகின்றன; பால் அரிது, வெல்லம் இல்லை. அரிசி, மூட்டையில் வாங்கியது மடியில் வாங்குகிறோம்; நல்லவேளையாகப் பொங்கல் பகலில் வருகிறது-எண்ணெய்க் கவலையில்லை; எண்ணெய்க் கட்டுப்பாடானாலும் இரவிக்குக் கட்டுப்பாடில்லை. இந்த நிலையில், நமக்கு ஒரே ஆறுதல்-அன்று அபயமளித்த கண்ணனே; அவனைப் பாடுவதே பாட்டு; அவனைப் பொங்கலுண்ண அழைத்து நமது கவலையைச் சொல்லிச் சரண்புகுவோம்.

ஸ்வாமி சுத்தானந்த பாரதியார்.

ஜகன்மோகினி

அனுபந்தம்

கண்ணா வா!

பைரவி இராகம் திஸ்ர தாளம்.

பொங்கல் உண்ண வா, வா - கண்ணா
பூங்கை நீட்டி வா, வா - உன்
செங்கமலக் கண்ணால் - எங்கள்
தேசம் வாழப் பாராய். (பொ)

அன்பு சொல்லி அழைத்தோம் - கண்ணா
அழகு சொட்டும் அமுதா! - உன்னை
நம்பி வாழுகின்றோம் - இந்த
நாட்டு மக்களெல்லாம். (பொ)

பொன் முகத்தைக் காட்டி - கண்ணா
புன்னகையை நாட்டி
மின்னல் போலே வெட்டாய் - எங்கள்
விசனமேக மெல்லாம்! (பொ)

கன்றுகளை யன்று - கண்ணா
கட்டவிழ்த்துக் காத்தாய்
இன்றெங் கட்டவிழ்த்தே - கண்ணா
இன்புறுத்த வாராய்! (பொ)

ஜீவ கோபி மாரை - கண்ணா
செங்கை கோத்தணைத்தே
பூவெலாமுன் ராசக் - கிரீடை
புரிய மீண்டும் வா, வா! (பொ)

மோதி விம்மும் கடல்போல் - உன்மேல்
மோகங் கொண்டு விட்டோம்
காதலான மதியே - ஒரு
கட்டிமுத்தந் தாராய்! (பொ)

-ஸ்வாமி சுத்தானந்த பாரதியார்.

கள்ளத்தனத்தைக் காணுங்கள்

மரத்தடியிலே அப்படி மறைந்து கிளைகளுக்கும் இலைகளுக்கும் செடிகளுக்கும் இடையே நிற்பவன் யார்! அவளைப் பார்க்கும் பார்வையிலேயே அந்தக் கள்ளத்தனம் வெளிப்படுகிறது. குடத்தை யெடுத்துக்கொண்டு புறப்படும்போது ராஜகளை சொட்டும் அந்த முகத்தைப் பார்க்கிறாளே, அந்தப் பார்வையைத் தான் பாருங்கள்!

அவள் உள்ளம் திருடிய அந்தக் கள்வன் சந்திரகுல திலகமாகிய துஷ்யந்த மகாராஜா. எனவே, மங்கையர் திலகமாகிய சகுந்தலை அவள்தான் என்று சொல்லவாவேண்டும்!

காட்டிலே வேட்டைக்கு வந்தவன் தவராஜராகிய கண்ணுவரின் ஆச்ரமத்திற்கு அதிதியாக வந்து சேர்ந்தான், அந்த மகரிஷி இல்லாத சமயத்திலே, முனிவரது அபிமான புத்திரியின் அருமைத் திருமுகமே, மன்னனுக்கு அருமந்த விருந்தாயிற்று. தண்ணீர் எடுக்க வந்தவள் வந்த வியாஜத்தையும் மறந்து அவனுடைய வார்த்தைகளை அமிர்தமாகவே பருகிக்கொண்டிருந்தாள்.

ஆனால், இப்படிப்பட்ட பசிதாகங்களை எப்படி அறிந்து கொள்ளமுடியும், புதல்வியைத் தேடிவந்த ரிஷி பத்தினியால்?



ஜகன்மோகினி அனுபந்தம்

ஜகன்மோகினி
அனுபந்தம்







ஸ்ரீ. ஜானம்மாள்

எனது காஷ்மீர் யாத்திரை

எனது சிநேகிதர்கள், தாங்கள் சென்று வந்த ஐரோப்பிய நாடுகளைப் பற்றி சதா புகழ்ந்து பெருமையடித்துக் கொள்ளும்போது எனக்குத் தாங்க முடியாத துக்கமும் கோபமும் எழும். அங்குள்ள சிறந்த காட்சிகளையும் வெனீஸ் மாநகரத்தில் உள்ள ஜல வீதிகளையும் படகு விடுதிகளையும் பற்றி அதிசயமாகக் கூறி பெருமை கொள்ளுவர். அதுவும் தவிர சுவர்லாந்தில் இருக்கும் பனி சிகரங்களைப் பாராத கண்கள் கண்களா என்று அவர்கள் என்னிடம் கூறும்பொழுதுதான் எனது உடம்பில் உஷ்ணம் தாங்காமல் தகிப்பதற்கு ஆரம்பிக்கும். அப்பொழுது என்னையும் அறியாமல் எனது பூஜ்ஜிய தாய் தந்தையர்களை நிந்திக்கவும் செய்துவிடும். அதாவது எனக்கும் காலேஜ் படிப்பை அளித்து இருந்தால் ஐரோப்பாவில் இருக்கும் காட்சிகளைக் காணும் பாக்கியம் கிடைத்திருக்கும் அல்லவா? 'என்ன பிரமாதம் நீங்கள் "களி யாத்திரை "(Pleasure Trip) ஒன்று போய் வந்திருக்கலாமே!' என்று கேட்பது சுலபம். ஆனால் எனது இயற்கையின் போக்கு அதை தடுத்துவிட்டது.

ஐந்தும் பழுது இல்லாமல் ஒழுங்காய் இருக்கவேண்டும். எனக்கு விடியற்காலை நான்கு மணிக்கெல்லாம் பிரகாசமான வெள்ளி டம்ளர், சுடச்சுட காப்பியை வைத்துக்கொண்டு என் வரவை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கும். இட்டிலி, தோசை, சாம்பார், மிளகாய்ப்பொடி முதலியவைகள் பிளேட்டுகளில் ஒழுங்காய் உட்கார்ந்துகொண்டு எனது தரிசனத்தை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்குங்கள். இவ்வளவு அன்புடன் என்னைப் போஷித்து ஆதரிக்கும் அச் சுற்றத்தார் எல்லோரையும் விட்டுப் பிரிந்து ஒரு பீங்கான் கப் தண்ணீரை தேடிக்கொண்டு காதவழி ஓட வேண்டும் என்றால் ஐரோப்பா சுற்றுப் பயணத்தை எவர் விரும்புவர்? நமக்கு சுயராஜ்ஜியம் வரட்டும். பிறகு அன்னிய நாடுகளில் நமக்குத் தேவையுள்ள எல்லா சௌகரியங்களும் ஏற்படும். முதலில் நமது பாத கண்டத்தில் இருக்கும் சௌந்தரிய திரிசியங்களைக் கண்டு களிப்போம் என்று எனது மனதை தேறுதல் செய்து ஆற்றிக்கொண்டேன்.

1938-ம் வருஷம் பிறந்தது. யாத்திரை லக்ஷ்மியானவள் எனது உள்ளங்காலைத் தூண்டிய வண்ணம் இருந்தாள். "நான்தான் கன்னியாக் குமரியிலிருந்து டில்லி பிருந்தாவனம் வரையில் போய் வந்தாய் விட்டதே, இன்னும் நம்மை இவள் எவ்வளவு தூரம் அழைத்துக்கொண்டு போகப்போகிறாளோ என்பதுதான் எனக்கு விளங்காமலிருந்தது.

அந்த சமயத்தில் எனது ஆப்த சிநேகிதியான பத்மினி அவர்கள் தனது தாய்தந்தையரின் அதிதியாக காஷ்மீர் நாட்டிற்குத் திலகமாய் விளங்கும் ஸ்ரீநகருக்கு வரும்படி என்னை அழைத்தார். "கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா" ஆனால் மற்றைய சிநேகிதர்கள் என்னை தனிமையில்

போகவிடமாட்டார்களே என்று தெரிவித்தேன். பத்மினியோ எல்லா கேள்விகளுக்கும் சளைக்காமல் பதில் அளிப்பதில் தேர்ச்சி அடைந்தவள். "யாத்திரையில் கூட்டமாகப் போனால்தான் தமாஷாகப் பொழுதைப் போக்கலாம். எல்லோரையும் கூட்டிக்கொண்டு வாருங்கள்" என்றாள்.

ஒருநாள் எனது சினேகிதியான மஞ்சுபாஷிணியவர்களுடன் பத்மினியின் அகத்திற்குச் சென்றேன். "ஸ்ரீநகருக்கு வரவேண்டுமென்று மிகவும் ஆவலாயிருக்கிறோம். ஆனால் ஒரு நிபந்தனையின்பேரில்தான் வருவதற்கு உத்தேசம்" என்று தெரிவித்துக்கொண்டேன். அவளும் அதைக் கேட்டு புன்னகையுடன் "சினேகபலம் பெரியதா, நிபந்தனைபலம் பெரியதா என்பதையும் பார்த்துவிடலாம். உங்கள் நிபந்தனைகளைச் சொல்லுங்கள்" என்றாள்.

"நாங்கள் ஐந்து, ஆறு நபர்கள் அம்புஜம்மாள், கோதைநாயகி அம்மாள் உள்பட வரப்போகிறோம். எங்கள் விருப்பத்தின்படி அங்கு வசிப்பதற்கு நீ சம்மதிக்கவேண்டும். அவ்வளவே" என்றேன். "ரொம்ப சரி. முதலில் நீங்களல்லவோ அங்குவந்து சேரவேண்டும். உங்களின் விருப்பத்தை பிறகல்லவோ நான் கவனிக்க முடியும்?" என்று பளிச்சென்று பதிலளித்தாள்.

பத்மினி அவர்கள் தம் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு மார்ச்சு மாதமே அவரது தந்தையார் திவான் பகதூர் என். கோபாலசாமி ஐயங்கார் வசித்துவந்த காஷ்மீரின் தலைநகருக்குப் போய்விட்டாள்.

ஏப்ரல் மாதம் மூன்றாவது வாரத்தில் மஞ்சுபாஷிணி அவர்களும் நானும் மாத்திரம்தான் புருஷர் துணையின்றி கிராண்ட்-டிரங்கு எக்ஸ்பிரஸில் காஷ்மீர் யாத்திரையை ஆரம்பித்தோம்.

* * * *

காலை இருள்புரிவதற்குள்ளாகவே எங்கள் ரயில் ஜம்மு ஸ்டேஷனை அடைந்துவிட்டது. ஒரு ரெயில்வே உத்தியோகஸ்தன் எங்களுடைய கம்பார்ட்மெண்ட் அருகில் வந்து "பஹீன் ஆப்லோக் மத்ராஸ்ஸே ஆரஹீஹை" என்று வினவ 'ஜீஹா' என்று நானும் ஹிந்துஸ்தானியில் விடையளித்தேன். அதற்கு அவன் "எங்களுக்கு பிரைம்-மினிஸ்டரிடமிருந்து தந்தி ஒன்று வந்திருக்கிறது. உங்களை ஸ்ரீநகருக்கு ஜாக்ரதையாக அனுப்பும்படி. இவ்விடத்தில் 'சா' கிடைக்கும். கார் புறப்படுவதற்குச் சற்று நேரம் ஆகும்" என்று கூறிவிட்டு இரண்டு போர்டர்களை எங்களது சாமான்களை நிறைபோட்டு காரில் ஏற்றி வைத்துவிடும்படிக் கட்டளையிட்டுச் சென்றான்.

அந்த ஜம்மு ஸ்டேஷனில் கிடைத்த 'சா'வை நாங்கள் ஹிமவானின் பிரசாதம் என்று குடித்துவிட்டுக் காரில் ஏறிக்கொண்டோம். ஆனால் $7\frac{1}{2}$ மணியாகியும் எங்களது வாகனம் கிளம்பவில்லை. விசாரித்ததில் இன்னும் இரண்டு பிரயாணிகளை ஏற்றிக்கொள்வதற்காக நிற்கிறது என்பதை உணர்ந்தோம். நல்ல வேளையோ அல்லது பொல்லாத வேளைதானோ உடனே ஒரு தடித்த பார்ஸிக்காரி எங்களது காரை நோக்கி வருவதைப் பார்த்ததும் இனி நமது கார் கிளம்பிவிடும் என்று, அற்ப சந்தோஷத்தை அடைந்தோம். ஆனால் அந்த தேவியோ எங்களது காரையும் போகவிடவில்லை. ரெயில்காரன் கேட்ட கட்டணப்பணத்தைத் தரவும் சம்மதிக்கவில்லை. கடைசியில் கேட்ட பணத்தைக் கட்டிவிட்டு எங்கள் காரில் ஏறி உட்காருவதற்குள் $8\frac{1}{2}$ மணி ஆய்விட்டது. அந்தோ! அம்மட்டுமல்லாமல் மேலும் சில இடைஞ்சல்களை அந்த இஸ்டீரியா மாது செய்ததால் நாங்கள் புறப்படுவதற்கு 9 மணிக்குமேலாயிற்று. ஜம்முவிலிருந்து ஸ்ரீநகர் 206 மைல்.

காஷ்மீர ராஜாங்கத்தினர் வழியில் 10, 15 மைலுக்கு, தங்குவதற்கு ஒரு விடுதியையும் போஸ்டு தந்தி ஆபீஸ்களையும் யாத்ரீகர்களின் சௌகரியத்திற்

காக ஏற்படுத்தியுள்ளனர். அங்கு பிஸ்கட்டு, சா, வெண்ணெய் முதலியவை கிடைக்கும். இரவு தங்குவதாயிருந்தால் உதம்பூர். பட்டோட். பனியால் ஆகிய மூன்று இடங்களில் தூங்குவதற்கு பெரிய அறைகள் நமக்குக் கிடைக்கும். ஸ்ரீநகர் போய் சேருவதற்குள் 8 டாக் பங்களாக்களும் 10 போஸ்டாபீஸ்களும் இடையில் இருக்கின்றன. நடுவில் கார்களுக்கு பெட்ரோல் சப்ளைகளும் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

ஜம்மு பட்டணத்தில் நவாப் காலத்தில் உண்டான குறுகிய சந்துகள் எல்லாம் இன்னும் மாறுதல் அடையாமலே இருப்பது ஒரு விசேஷமல்லவா? ஹிமவானின் அடிவாரத்தை அடைந்தவுடன் எங்களது கார் தனது இயற்கையின் வேகத்தை ஒடுக்கிக்கொண்டு அவரின் அடியை வணங்கி மண்டியிட்டுக்கொண்டு பயபக்தியுடன் போவதைப்போல் காணப்பட்டது. சத்புருஷர்கள் தங்களின் தற்புகழ்ச்சியையும் வெளியில் காட்டிக்கொள்ள விரும்பமாட்டார்கள். அதைப்போலவே ஹிமவானின் 27-வது மைலில் 2459 அடி உயரத்தில் இருக்கும் தீக்கிரி என்னும் கிராமம் வரையில் தனது வளமையையும், கம்பீரத்தையும் வெளிக்காட்டாமல் வைத்துக்கொண்டு, தன்னை இப்பவோ அப்பவோ சாவுவந்து புகுரப்போகும் தலை நரைத்த பழுத்த கிழவனைப்போல் தோற்றமளித்து நடித்தனர். அவர் சரீரத்திற்கு நரம்பு எலும்புகளாக இருக்கும் பாறை, கல், புல், புதர், மரம் முதலியவைகள் ஒன்றும் இல்லாமல் பொல பொல என்று உதிரும் மண்கூடான சரீரம் மட்டுந்தான் குட்டிச்சுவரைப்போல நின்றது. கடவுளைத் தவிர இதர தேவர்கள் எல்லோருமே அஸ்திரம்தான் என்பதை நமக்குப் புகல்வதைப் போல் தென்பட்டது. அதுவும் தவிர கண்ணுக்கு குளிர்ச்சியையும் மனதுக்கு இன்பத்தையும் தரும் காட்சிகளைத் தராமல் பார்த்தவிடமெல்லாம் திருடனைப்போல கட்டையும் குட்டையுமாக கரிமுண்டங்களாக நிற்கும் தோற்றத்தை அவ்விடத்தில் காட்டினர். அந்த முண்டங்களில் சிலதுகள் நம்மைப் பார்த்து நகைப்பதைப்போல் காணப்பட்டன. ஒருகால் ஹிமவான் வரும் யாத்ரீகர்களை இப்படி இந்த பொட்ட காட்டில் சபித்து கரிகட்டைகளாக நிறுத்தி வைத்துவிட்டாரோ என்னமோ என்று என் உள்ளத்தில் அச்சம் குடிகொண்டது. உடனே எனது தலை சுழன்று கனக்க ஆரம்பித்துவிட்டது. "தருமபுத்திரருக்கு, போகும் வழியில் நரகத்தைப் பார்த்த பின்பு தானே சொர்க்கம் கிடைத்தது. அதைப்போலவே நமக்கும் கிடைக்கப் போகிறது போலும்' என்று நினைத்து மனதை தேற்றிக்கொண்டேன். பனி உறைந்து பச்சை மரங்கள் எல்லாம் பட்டுப்போய் இப்படி நிற்கிறது என்பதை தெரிந்துகொண்டபிறகுதான் என் தலை கிறுகிறுப்பு நீங்கியது.

திகிரியைவிட்டு மேலே போகப்போக ஹிமவான் யௌவனத்தை யடைந்து அதி சௌந்தரியத்துடன் விளங்குவதைக் கண்ட நான் தலையை நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டேன். மேலும் வாயுபகவான் சீனுப் என்னும் நதியின் திவலைகளை எங்கள் முகத்தில் மெல்லியதாக வீசிக்கொண்டு வரவே வெப்பத்தினுல் அடைந்த சோர்வு மறைந்து நல்ல தெளிவையடைந்தோம். 66 மைலில் 5700 அடி உயரத்தில் இருக்கும் கூத் என்ற ஸ்டேஷனில் இருக்கும் டாக் பங்களாவை யடைந்தோம்.

அங்கு 'சா'வைக் குடித்துவிட்டு சற்று சிரமப் பரிகாரம் செய்து கொண்டு 110 மைலில் இருக்கும் பனியால் என்ற கிராமத்தில் உள்ள சங்கச் சாவடிக்குப் போகும்போது மாலை 3 மணியாகிவிட்டது. அங்கிருந்து 7224 அடி உயரத்தில் இருக்கும் அப்பர்முண்டா என்ற பிரதேசத்தைக் கடக்கும்போதுதான் ஹிமவானுடைய கீர்த்தியை பார்த்தவிடங்களில் எல்

லாம் நேரில் காணும் பாக்கியம் கிடைத்தது. அந்த பனியிலும் இரண்டு மூன்று குகைகளைக் கடந்து 5225 அடி உயரத்திலிருக்கும் அவந்திபுரத்திற்கு இரவு சுமார் 7 மணிக்கு வந்தடைந்தோம். இனி அபாயம் நேரிட்டாலும், கிடு கிடுவென்று இருக்கும் பயங்கர பள்ளத்தாக்கிலோ அல்லது மலைச் சரிவுகளிலோ மோதி விழுந்து உயிரைத்துறப்போமோ என்ற பயம் மனதைவிட்டு அகன்றது. இனி ஸ்ரீநகரைப் பார்த்துவிடுவோம் என்ற தைரியமும் பிறந்தது. 4, 5 மைல் நீளமுள்ள சினூர் அவின்யூ அதாவது சினூர் மரத்துச் சாலையின் பாதையில் எங்களது கார் மானுப் பறந்து ஸ்ரீநகருக்கு இரவு $7\frac{1}{2}$, 8 மணிக்குள்ளாகவே சேர்ந்துவிட்டது. எங்களை பிரைம்-மினிஸ்டர் பங்களாவில் ஒப்படைத்துவிட்டு அந்த பார்லிக்காரி இறங்கும் விடுதியைத் தேடிக்கொண்டு, நாங்கள் வந்த கார் சென்றது.

இன்னும் வரக்காணோமே என்று கவலையுடன் எங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பத்மினி எங்களைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் உதிர்த்து எங்களை அப்படியே ஆலிங்கனம் செய்துகொண்டாள். அன்றிரவு நாங்கள் புசித்ததும் வந்த களைப்பினால் 10 மணிக்குள்ளாகவே நித்திரை வசமானோம்.

"வெனீஸ், சுஸர்லாந்து பிரதேசங்களைக் காட்டிலும் ஸ்ரீநகர்தான் இயற்கையின் அழகில் முதல் ஸ்தானத்தையுடையது" என்று அங்குவந்திருந்த எல்லா ஐரோப்பியரும் கூறினர். அந்நகர்தான் சொர்க்கலோகமாக இருக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். பல உணர்ச்சியுள்ள மனிதர்களுக்கும் பலனை அளிப்பதில் கற்பக விருக்ஷமாக விளங்குகிறது. ஜீலம் என்ற நதியானது ஸ்ரீதேவியான அவளை அபிஷேகம் செய்துகொண்டு பல கிளைகளாகப் பிரிந்து பல வீதிகளாகவும் ஓடிக்கொண்டு இருக்கின்றாள்.

பெற்ற தாயைப்போல தன் மடியிலும் தனது முதுகாயிருக்கும் கரை மீதிலும் ஜனங்கள் தங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு இடமளித்து ஆதரவளித்து வருகிறாள். கண் கொள்ளாத காட்சிகளையும் விலையில்லாப் பண்டங்களையும் தன் வசத்தில் நிரப்பிக்கொண்டு, வரும் விருந்தினர்களை திகைக்கும்படிச் செய்வதில் ஹிமவான் வெகு நிபுணர்.

லக்ஷ்மியின் பூர்ண சௌந்தர்யத்தையும் சோபையையும் பார்க்க வேண்டுமானால் அவற்றை ஸ்ரீநகரில்தான் காணமுடியும். செடி, கொடிகள் தங்களிடத்தில் மலர்ந்த புஷ்பக் குவியல்களினால் தேவியின் அடி பணிந்து அர்ச்சித்துவரும் கைங்கரியத்தையும், விருக்ஷங்கள் தங்களிடத்தில் உண்டான பலன்களை நைவேத்தியம் அளிக்கும் பக்தியையும் பார்க்கலாம். போட்டு வீடுகளிலும், கரைமீதில் உள்ள பங்களாக்களிலும் பிரகாசிக்கும் மின்சார விளக்குகளைப் பார்த்தால் ஸ்ரீதேவிக்கு தீபாராதனை கொடுக்கும் பொருட்டு நக்ஷத்திர மண்டலம்தான் இறங்கிவந்துவிட்டதோ என்ற சம்சயத்தை உண்டாக்கும். நகரைச் சுற்றி கோட்டை மதில் சுவரைப்போல் நிற்கிறதும் மலைச் சிகரங்களில் பனிமயமாக உறைந்திருக்கும் அவ்வெண்மை நிறத்தைக் காணும்போது பாற்கடல் மத்தியில் ஸ்ரீமகாலக்ஷ்மி வசிக்கும் வாசஸ்தலம் இதுவாகத்தான் இருக்கவேண்டுமென்று நிச்சயித்துவிடும்.

ஷாஜஹானுக்கு நூர்ஜஹான்மீது இருந்த பிரேமைக்கு இணை உலகில் தேடி எடுத்தாலும் அதற்கு ஈடான பொருள் எங்கும் கிடைக்காது என்பது ஆக்ராவில் இருக்கும் தாஜ்மகாலையும், ஸ்ரீநகரில் இருக்கும் ஷாலிமர், நிஷத் என்ற இரண்டு உத்தியானவனங்களையும் பார்த்தவருக்குத்தான் அதன் உண்மை தெரியவரும். அவ்விரண்டு தோட்டங்களில் ஓடும் ஜலக்கால்களும் விதவிதமாகச் சுழன்று சொறியும் Fountainகளும் அமைத்திருக்கும் திறமையைப்போல இப்பொழுது நவீன முறையில் தேர்ச்சியடைந்திருக்கும்

இன்ஜீனியர் ஒருவராலும் அமைப்பதற்கு இயலாது. அந் நந்தவனம் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் உல்லாசமாகப் பொழுதைப் போக்கவரும் குடும்பத்தினர்களுக்கும் புதிய தம்பதிகளுக்கும் செரி கனிகளையும், சீமை பாதங்கொட்டையையும் அளிக்கும். மேலும், கண்களுக்கு இனிமையான அங்குள்ள ரோஜா, சாமந்தி முதலான நானுவித புஷ்ப வகைகள், சப்தித்துக் கொண்டிருக்கும் அருவிகளையும் ஜலக்கால்களையும் மிருதங்கமாக வைத்துக் கொண்டு வாயு பகவானை நட்டுவனாக ஏற்படுத்திக்கொண்டு நர்த்தனமாடி பார்ப்பவர்களின் மனதை அபகரித்துவிடும்.

காஷ்மீர் தேசத்தில் அநேகமாய் ஜாதிகள் இரண்டுதானும். அதாவது பண்டிட், முஸல்மான் என்று. பண்டிட் என்றால் பிராமணர்கள். அவர்கள் தான் தோல் பைகளில் தண்ணீரைச் சுமந்துகொண்டுவந்து வீதிகளில் தெளிப்பது வழக்கம். அங்கு வசிக்கும் மனிதர்கள் தேக புஷ்டியுடனும், கண், மூக்கு இரண்டும் விசாலமாகவும் கூர்மையாகவும் செந்தாமரை வர்ணத்துடன் உயரமாக வளர்ந்து வினயத்தையும் தைரியத்தையும் பூஷணமாகப் பூண்டிருக்கின்றனர். பொழுதுபோக்குவதற்கு ஹோடல்ஸ், சினிமா, கிளப், கால்ப், போட்டிங், ஸ்விம்மிங் முதலியவைகள் இருக்கின்றன. கையில் நூற்றுக்கணக்காய் பணத்தை வைத்துக்கொண்டால் திருப்தியாய் ஷாப்பிங்க் போய்வரலாம். வால்நட் மரத்தில் சித்திரவேலையுடைய மேஜை, நாற்காலி, வெள்ளிப் பாத்திரங்களில் துலங்கும் நகாஸ்வேலை, துணிகளில் சித்திரிக்கும் எம்ராய்டர் வேலை முதலியவைகளைப் பார்த்தால் அவர்களின் கை வேலையின் திறமை நன்கு வெளிப்படும். பேப்பர் மெஷ் களில் பலவிதமான கலர்களை ஏற்றி விளக்கு ஷேட், ஸ்டாண்ட் முதலிய அநேக சாமான்களைத் தயாரித்து பணமாக்கிக்கொள்ளுகின்றனர். மண் கலசங்களில்கூட கலைத்தெய்வம் ஒளிந்திருப்பாள்.

சர்க்கார் சித்திரக் கலாசாலையில் டிராயிங், பெயின்டிங், ரத்தினக்கம்பளம் நெய்தல், தச்சுவேலை முதலிய கைத்தொழில்களை இலவசமாகப் போதிக்கின்றனர். பட்டுகள், கம்பளங்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன.

பால், வெண்ணெய், கிரீம், தேன் முதலியவை எதேஷ்டமாகக் கிடைக்கும். மெரூன் கலருடன் துலங்கும் குங்குமப்பூவின் நறுமணம் நாசியைத் துளைக்கும். அந்தந்தப் பருவத்திலுண்டாகும் பழங்கள்தான் அகப்படும்.

ஹிமவான் ஹரிஹர அம்சத்தை அடைந்து சிருஷ்டிக்கும் வேலை, அழிக்கும் வேலை அவ்விரண்டையும் தானாகவே நடத்திக்கொண்டிருக்கிறார். 8 மாதங்கள் வரையில் நீர்வளத்துடன் கணக்கில்லாப் பலன்களை அள்ளிக் கொடுக்கும் அப்பொன்னாட்டை, சுட்டு சாம்பலாக்கி புல்பூண்டு முளைப்பதற்குக் கூட இடம் தராமலும், ஏரி ஓடைகளில் போகும் தண்ணீரையும் உறைத்து ஜன சூன்யப் பிரதேசமாக பனிக்கட்டி மயமாகவே மூன்று மாதங்கள் வரையில் அங்கு தோற்றமளிப்பர்.

ஸ்ரீநகரைச் சுற்றிப் பார்க்கவேண்டுமானால் மோட்டார் அல்லது டோங்கா வண்டிகளில் தரைமார்க்கமாகப் போகலாம். இன்னொன்று சிகாராவில் ஏறிக்கொண்டு ஜல மார்க்கமாகவும் போய்ப் பார்க்கலாம். சிகாரா என்பது வாடகைக்குக் கிடைக்கும் போட்டு. அது சித்திர வேலைப்பாடு அமைந்த துணியினால் அலங்கரிக்கப்பட்ட ஒரு பல்லக்குபோல் இருக்கும். இந்தப் படத்தைப் பார்த்தால் நன்றாக விளங்கும்.

பத்மினி திருவேங்கடாச்சாரி அவர்களுடைய தாய்தந்தையரின் விருந்தினராக ராஜபோகமாக வேளைக்குத் தவறாமல் தேங்காய் சட்னி,

சாம்பார், தயிர்வடை, நாட்டுக் கறி வகையரா, சீமைக்கறி வகையராவுடன் விருந்துண்டு களித்த என்னை "என்ன சாமான் அங்கு கிடைக்காது?" என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள். அவர்களின் திருமாளிகையில் "இல்லை" என்ற சொல் சங்குவதற்கு இடமே கிடையாது. மேலும் 'அது எது? இது எது?' என்று அப்பெரியோரை கேட்பதும் உசிதமில்லை அல்லவா?

பத்மினியின் தாய்தந்தையர்களைத் தவிர அவரின் மற்ற குடும்பத்தினர் எல்லோரும் நாங்கள் சென்ற குல்மார்க், கிலன்மார்க், பல்ஹான், சந்தன்வாடி, குலாய், கிளேஸியர் முதலிய முக்கியமான பனிச் சிகரங்களுக்கெல்லாம் வந்தனர். சில இடங்களில் பாதையே இராது. எங்களைச் சுமந்துகொண்டு போகும் அறிவுள்ள குதிரைகள் அடுக்கடுக்காக அடுக்கி வானத்தை ஓங்கி வளர்ந்துகொண்டு போகும் பாறைகளின் மீதில் அதன் கால்களால் தடவிப் பார்த்துக்கொண்டே அதிசாக்ரதையுடன் ஏறிச் செல்லும். அநேக சிற்றாறுகளையும் சில இடங்களில் கடந்து செல்வதற்கு நேரிடும். உயரம் இருக்கும் பனிச் சிகரங்களை அடையும்பொழுது காற்றுக் குறைவினால் மூச்சு இழுப்பதற்கும், விடுவதற்கும் முடியாமல் திணறும்.

நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தினராக பேதமின்றி இருந்தபடியால்தான் இவ்வளவையும் பார்த்து ஆனந்திப்பதற்குச் சாதகமாக இருந்தது. பத்மினியின் தகப்பனார் அனாவசியமாக வார்த்தைகளைச் செலவிடமாட்டார். ஒரே சொல்லில் பல பேர்களுக்கும் பதிலையளிக்கும் ஆற்றலை உடையவர். எங்களைப் பார்த்து "நீங்கள் தனிமையாக ஏன் போகவேண்டும்? என் வீட்டிலேயே சமைத்து எனக்கும் போடுங்கள், நானும் உங்களது ருசிகரமான சமையலை சாப்பிட்டு அனுபவிக்கிறேன்" என்று மிருதுவாக மொழிந்தார். கடைசியில் சிநேக பலத்தின்முன் நிபந்தனை பலம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தது. ஆனால் அவர்களின் வீட்டின் அருகில் இருக்கும் ஜீலம் நதிக்கரையில் Silver Bell என்ற போட் விடுதியை அமர்த்தி அதனில் நாங்கள் வசித்து ஆனந்திப்பதற்கு மட்டும் அனுமதித்தார். அதனில் ஒரு டிராயிங் ரூம், 3 பெட்ரூம்கள், 2 பாத்ரூம்கள், அடங்கியது. நாங்கள் இரவில் துயில்வது போட் விடுதியில்; பகலில் போதை ஒழிப்பதும் புசிப்பதும் பிரைம்-மினிஸ்டர் மாளிகையில். அதை எங்களுடையதாகக் கருதினோம்.

ஸ்ரீமதி கோபாலஸாமி அய்யங்கார் அவர்கள் எங்களை சொந்த சகோதரிகள்போலவும் தங்களின் சொந்த குடும்பத்தினர்கள் போலவும் பாவித்து நடத்தினார்கள். அந்த நாளை நினைத்துக்கொண்டால் இப்பவும் ஆனந்தம் பொங்குகிறது. Happy Family என்று எங்களைத் தான் கூறவேண்டும். அந்நாளை மறுபடியும் எப்பொழுது காண்போம் என்று எனது மனது அலைகிறது. அடர்ந்த காடுகளிலும் கடூரமான உறைபனிகளிலும் திரிந்து உருண்டு சுகமாக வந்து சேர்ந்ததற்கு ஹிமவானின் ஆசியும் எங்களின் ஐக்கியமுமேதான் காரணம். ஹிமவானை தரிசித்தால் தைரியமும் மனச் சாந்தியும் உண்டாகும் என்பது திண்ணம்.

மனித சமூகம் ஒரு ஆத்மாவை விலக்கலாம்; இம்சிக்கலாம். அலக்ஷியம் செய்யலாம். ஏசிப்பேசித் தூற்றலாம். ஆனால் பகவானின் திருநோக்கிற்கு அவ்வாத்மா சரியாகத் தென்படும் அதிசயத்தை மேற்குறித்தவர்களே வியக்கும்படி அந்த ஆத்மா அவனடியில் சேர்ந்துவிடுகிறது. 'கிருபை என்பது எப்படி இருக்கிறது பார்த்தாயா!' என்று மேல் தூற்றியவர்களே சேத்தவன்கண் செந்தாமரை என்பதுபோல் வியக்கநேரிடுகின்றது.

ஸ்ரீமான் எஸ். வையாபுரிப்பிள்ளை பி. ஏ., பி. எல்.

ஓர் இரவு

சம்பளம் குறையக் குறைய வேலை அதிகமென்பது உலகப் பிரசித்தம். இது அநியாயமென்று யாராவது சொன்னால், 'அதிகச் சம்பளம் வாங்குகிறவர்கள் மூளையினால் வேலை செய்கிறார்கள்; குறைந்த சம்பளம் வாங்குகிறவர்கள் ஒன்று சரீரப்பிரயாசையால் மட்டும் உழைப்பவர்கள்; அல்லது குறிப்பிட்ட தினசரி ஒழுங்கு வேலையை மட்டும் செய்கிறவர்கள்' என்று பதில் சொல்லுவார்கள். குறைந்த சம்பளமும் கொடுத்து முட்டாள் பட்டமும் சுமத்துகிறார்கள். நான் வேலை பார்க்கும் கம்பெனியில் இப்படித்தான் நடக்கிறது. மற்ற இடங்களில் எப்படி என்று தெரிந்துகொள்ள எனக்கு நேரமில்லை,

இந்த யுத்த காலத்தில் வியாபாரமெல்லாம் மிகவும் மந்தம். என் கம்பெனியில் வேலை இல்லை. இருந்தாலும், எங்கள் மானேஜர் வீட்டுக்குப் போகும் வரையில் கம்பெனியில்தான் நாங்கள் இருக்கவேண்டியிருக்கும், அவரும் வேலைபார்த்துக் கொண்டிருந்தால் 'போக்கழிந்து போகிறது; இருந்து தொலைப்போம்' என்று காத்திருக்கலாம். அவருக்கு வேலையில்லை; அவருடைய சிநேகிதர் நாலைந்துபேர்கள் சாயங்காலம் கூடிவிடுவார்கள்; சளசளவென்று பேசிக்கொண்டே யிருப்பார்கள்; சிரிப்பும் குசுகுசுப்பும் வேடிக்கையும் ஆர்ப்பாட்டமுந்தான். எங்களுக்கு யமவேதனை. என்னோடு வேலைபார்க்கும் குமாஸ்தாக்களெல்லாரும் வீட்டுக்குப்போக துடிதுடித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் கலியாணமாயிருக்கிறது. எனக்கும் சீக்கிரம் போகவேண்டுமென்று எண்ணந்தான். என் தாயார் நான் திரும்பும்வரையில் உண்ணாமல் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாள்.

எனது தகப்பனார் இளமைக்காலத்திலேயே சிவலோகப் ப்ராப்தியாய் விட்டார். என் அருமைத்தாய்தான் என் படிப்பு விஷயத்தைக் கவனித்துக் கொண்டாள். நானும் தட்டித் தடுமாறி பீ. ஏ. பரீக்ஷையில் தேர்ந்துவிட்டேன், இதில் என் தாயாருக்குப் பரமதிருப்தி, எனக்கு கஷ்ட காலம் சமீபித்து விட்டதென்ற வருத்தந்தான். வேலைக்காக எங்கெல்லாமோ போய்த் திண்டாடினேன். எப்படியும் பிழைக்கலாம் என்று சென்னபட்டணத்திற்குத் தாயாருடன் வந்து சேர்ந்தேன். முதலில் அரசாங்க உத்தியோகத்திற்கென்று அலைந்தேன். பின்னால் அரசாங்கத்தைப்போல ஸ்திரமான ஆபீசுகளில் வேலைக்குத் திரிந்தேன், அதுவும் கிடைக்காததால் கம்பெனிகளில் வேலைக்கு முயற்சி செய்தேன். கடைசியாக ஒரு கம்பெனியில் 3 மாசம் சம்பளமில்லாமல் வலண்டியராக ஒரு வேலை கிடைத்தது. என் பாக்யம்தான்.

சம்பளம் வாங்குகிறவர்களைக் காட்டிலும் வாலண்டியருக்குத்தான் அதிகவேலை. எல்லாருடைய வேலையையும் அவன்தான் பார்க்கவேண்டும். என் கையெழுத்து நன்றாயிருக்கவேண்டும் என்று கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டேன். என் கூடவுள்ள குமாஸ்தாக்களெல்லாரும் நான் நன்றாய் எழுதுகிறேன் என்று புகழ்ந்து புகழ்ந்து என்னிடம் வேலை வாங்கத் தொடங்கிவிட்டார்கள். பொறுமைக்குப் பேர்போன மிருகங்கூட என்னிடமிருந்துதான் கற்றுக்கொள்ளவேண்டும். அந்தனை பொறுமையுடன் வேலைபார்த்தேன். என் தாயார் 'சோமு' இப்படி சதா வேலைபார்த்தால்

உடம்பு கெட்டுப்போய்விடுமே என்றுஅடிக்கடிகவலேப்பட்டாள்.நான் அதைப் பொருட்படுத்துவதில்லே. வாலண்டியர்வேலேயும் போய்விடப்படாதே.

இன்று எழுதியெழுதி என் கை சலித்துவிட்டது. மணியும் 7½ ஆகிவிட்டது. விளக்கு வெளிச்சம் வெளியே தெரியக்கூடாதென்று குறைந்த 'பவர்' உள்ள விளக்குதான் போட்டிருந்தது. மங்கின வெளிச்சத்தில் வேலே மிகுதியால் சோர்வடைந்து கொஞ்சம் கண்ணயர்ந்துவிட்டேன்.

என் பக்கத்தில் அழுகைச்சத்தம் கேட்டதும் விழித்தேன். இரண்டு பழய குமாஸ்தாக்கள் வீட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள். மற்றக் குமாஸ்தாக்கள் மானேஜரும் அவருடைய சகாக்களும் வெளியில் இறங்கியவுடன் போய்விட்டார்கள்.

எங்கள் முன்னுலே நின்று அழுதது ஒரு பெண். இரண்டு குமாஸ்தாக்களும் அவளேக் கேள்விக்குமேல் கேள்வியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இந்தப் பெண்ணும் அவள் சிநேகிதிகளும் கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் புறப்பட்டுத் திரும்பும் சமயத்தில் அங்கே மூன்று காவாலிகள் அவர்களேத் தொடரத் தொடங்கினுர்கள். இருட்டான ஒரு சந்தில் வந்தவுடன் ஒருவன் 'நில்லு' என்று அதட்டிப் பக்கத்தில் வந்துவிட்டான். அந்தப் பெண்கள் மூலேக்கு மூலே ஓடத் தொடங்கினுர்கள். இவள் ஓடியே வந்து திறந்திருந்த எங்கள் ஆபீஸில் புகுந்துவிட்டாள். இவளேத் துரத்திக்கொண்டு வந்தவன், இவள் ஆபீஸில் புகுவதைக் கண்டதும் எங்கேயோ மறைந்துவிட்டான். இவள் தகப்பனுர் தாமோதர முதலியார்; வீடு ராயப்பேட்டையில். இந்த விபரத்தைக் கேட்டதும், அந்த இரண்டு வயசான குமாஸ்தாக்களும் என்ன செய்வதென்று ஆலோசிக்கத்தொடங்கினுர்கள். முடிவில் என்னேப் பார்த்து 'சோமு' உங்களவாள்போலத் தோற்றுகிறது. எங்களுக்கு ராயப்பேட்டைக்குப்போய் அப்புறம் எங்கள் வீட்டுக்குப் போவது கஷ்டம். நீ கூடப்போய் இந்தக் குழந்தையை அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு உன் வீட்டுக்குப் போய்விடலாம். உன் வீடு லக்ஷ்மீபுரத்தில்தானே' என்றுர்கள்.

இதுவரையில் சித்தப்பிரமை பிடித்தவன்போலிருந்த நான் இப்பொழுதுதான் விவரத்தைத் தெரிந்து நன்ருக விழித்துப் பார்த்தேன். இந்தப் பெண்ணின் கண்ணில் தோன்றிய இரக்கம் என்னே உடனே ஒப்புக்கொள்ளும்படிச் செய்துவிட்டது. என் மனத்தில் அச்சத்திற்குக் குறைவில்லே. இவளேத் துரத்திக் கொண்டுவந்த தடியர்கள் எங்கேயாவது ஒளித்துக்கொண்டிருந்து, போகும் வழியில் மடக்கிக்கொண்டால் என்ன செய்வது என்று நினைத்தேன். ஏ. ஆர். பி சட்டத்தை நொந்துகொண்டேன். கையில் ஒரு சிறு தடியை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். பெண் முன்னுகவும் நான் பின்னுகவும் நடக்கத் . தொடங்கினேம். சிறிதுதூரம் சென்றவுடன் 'நீங்கள் இருட்டும்வரையில் கடற்கரையில் இருந்திருக்கக்கூடாது. ஆபத்தல்லவா?' என்றேன், 'வீட்டிலிருந்து வண்டி வரும்வரை காத்துக்கொண்டிருந்தோம், என்ன காரணத்தாலோ இன்று வண்டிவந்து சேரவில்லே; என் சிநேகிதிகள் என்ன ஆனுர்களோ? தெரியவில்லேயே' என்றுள். கொஞ்சநேரத்தில் டிராம்வண்டிப் பாதையில்வந்து சேர்ந்தோம். அங்கே இவள் சிநேகிதிகளேக் கண்டபின் இவள் முகத்தில் கலவரம் தீர்ந்தது. என்னேப்பார்த்து 'நீங்கள் வேணுமென்ருல் போகலாம், நான் இவர்களோடு வீடுபோய்ச் சேர்ந்துவிடுவேன்' என்றுள். 'நான் ராயப்பேட்டை வழியாகத்தான் போகவேண்டும். லக்ஷ்மீபுரத்திலிருக்கிறேன்.

எனக்குச் சிரமமேயில்லை; 'வீட்டில் கொண்டுபோய்ச் சேர்க்காவிட்டால் எனக்கு நிம்மதி ஏற்படாது' என்று சொல்லிவிட்டேன்.

டிராம்வண்டி வந்துசேர்ந்தது. வண்டியில் எல்லோரும் ஏறினோம். இப்பொழுதுதான் இவளை நான் கூர்ந்து கவனிக்க நேர்ந்தது. இவள் முகச்சாயல் எனக்குப் பழக்கமுள்ளதுபோல் தோன்றியது. மற்றப் பெண்கள் இவளை அழைப்பதிலிருந்து இவள் பெயர் 'பங்கஜம்' என்று தெரிந்தேன். இவளை எங்கே பார்த்திருக்கிறேமென்று குமாஸ்தாவேலை பண்ணிக் குட்டிச்சுவராய்ப்போன என் மூளையைப் பறண்டிக்கொண்டிருந்தேன். பயனில்லை.

ராயப்பேட்டை வந்ததும் நாங்கள் எல்லாரும் கீழே இறங்கினோம். பங்கஜத்தை நான் பின்தொடர்ந்து நடந்தேன். மற்றப் பெண்கள் பக்கத்திலிருந்த அவரவர்கள் வீட்டுக்குச் சென்றார்கள்.

ஒரு பெரிய பங்களா. ஏ. ஆர். பி. உத்தியோகஸ்தர்களையும் பொருட்படுத்தாமல் விளக்கு மதமதவென்று எரிந்துகொண்டிருந்தது. மிகுந்த கலவரத்துடன் ஒருவர் உலாவிக்கொண்டிருந்தார். தமது பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு அம்மணியைப் பார்த்துக் கொஞ்சம் கோபக் குரலில், 'வண்டியை நேரத்தோடே அனுப்பக் கூடாதா?' வென்று கடிந்துகொண்டிருந்தார். அந்த வேளையில் நாங்கள் போய்ச் சேர்ந்தோம்.

வீட்டுக்குச் சென்றதும் பங்கஜம் ஓடி அங்கே நின்றுகொண்டிருந்த அம்மணியைக் கட்டித் தழுவிக்கொண்டு அழத் தொடங்கிவிட்டாள். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. என்னைநோக்கியவுடன் நான் விவரங்களைச் சொல்லி முடித்தேன், மாடியிலிருந்து ஒருவன் ஓடிவந்து என்னைப் பார்த்ததும் சட்டென்று நின்றுவிட்டான். 'நீ சோமு முதலிதானே? இங்கே எப்போது வந்தாய்? எங்கே இருக்கிறாய்? என்னவேலை பார்க்கிறாய்?' என்று விசாரித்தான். என்கூடத் திருச்சியில் வாசித்துக்கொண்டிருந்த அருணகிரியின் வீடென்று அப்போது தெரிந்துகொண்டேன். அவன் தகப்பனார்தான் அங்கே கடிந்து பேசிக்கொண்டிருந்த தாமோதர முதலியாரென்று ஊகித்தேன்.

பங்கஜம் அப்போதுதான் என்னை நன்றாகப் பார்த்தாள். இவரில்லாமற்போனால் நான் என்ன ஆயிருப்பேனென்று சொல்லித் தன் தாயை உள்ளே அழைத்துச் சென்றாள், தாமோதர முதலியார் எனக்கு நன்றி சொல்லி உட்காரச்சொன்னார். அருணகிரி என் அருகில்வந்து உபசாரப் படுத்தினான். சாப்பிட்டுவிட்டுப் போகலாமென்று வற்புறுத்தினான். நான் இன்னொருநாள் சௌகரியமாக வருகிறேனென்று சொல்லிக்கொண்டு விடைபெற்றேன். அப்போது பங்கஜம் வெளியேவந்து 'நீங்கள் எனக்குத் துணைவந்தது பெரிய உபகாரம்' என்று சொன்னாள். அருணகிரி என் விலாசத்தைக் குறித்துக்கொண்டான்.

என் மனமானது தத்தளித்துக்கொண்டிருந்தது. வீடுவந்து சேர்ந்தேன். என் தாய் கவலையோடு காத்துக்கொண்டிருந்தாள். 'ஏன் இவ்வளவு நேரம்'? என்று கேட்க, நான் எல்லாவிவரங்களையும் சொன்னேன். அவள் 'தாமோதரமுதலியார்' என்ற பெயரைக்கேட்டதும் திடுக்கிட்டாள். 'எத்தனை பேரோ? யார் கண்டார்கள்? எனக்குத் தெரிந்திருப்பதற்கு நியாயமில்லை' என்று முணங்கிக்கொண்டாள். நான் திரும்பத் திரும்பக் கேட்டதின்பேரில் தனக்குப் பந்துவான ஒரு தாமோதரமுதலியார் உண்டென்றும் அவர் வெகு காலத்திற்கு முன்னே வடக்கே எங்கேயோ போய்விட்டாரென்றும் சொன்னாள்.

நான் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டேன். ஆனால் உறக்கம் மட்டும் வரவில்லை. கம்பெனியில் பங்கஜம் அச்சத்துடன் நடு நடுங்கிக்கொண்டிருந்ததும், நான் துணை வரவேண்டுமென்று குறிப்பிட்ட பார்வையும் என் கண்முன்னே நின்றுகொண்டிருந்தன. அருணகிரி என்னை இன்னாரென்று சொல்லியபோது அவள் என்னை உற்றுநோக்கியது என் நெஞ்சைவிட்டு அகலவில்லை. எனக்கு நன்றிகூறியபோது தோன்றிய பாதி முகம் என் இதயத்தை அதிரச்செய்து அங்கே குடிபுகுந்துகொண்டது. வெகு நேரமாகப் புரண்டுகொண்டிருந்தேன். கடைசியில் லேசாகஉறக்கம் வந்தது. பங்கஜமும் அவள் அண்ணா அருணகிரியும் என்னை வேடிக்கை பண்ணிக்கொண்டிருந்தார்கள் என்று கனவு கண்டேன். ஏன் விடிந்தது என்று வெறுத்துக்கொண்டேன். காலையில் அருணகிரி என்னை அழைத்துப் போக வந்துவிட்டான்.

எனக்கு வாலண்டியர் உத்தியோகம் போய்விட்டது. ஆனால் என் கம்பனியை எப்பொழுதும் வாழ்த்திக்கொண்டிருக்கிறேன். கூட வாழ்த்துவதற்குப் பங்கஜமும் என்னருகில் இருக்கிறாள்.

வாழ்த்து

மோகினித்தாயே! மோகனத்தாயே!
பாகினிதேபோல் பற்பல காதைப்
பாரினில் பலபேர் போற்றிடும் நன்று
சீரியமோகினிப் புத்தக மன்றே?
வாழ்க்கைச் சித்திரம் வரைவதி லிணையே
வாழ்ந்திடு பத்திரம் வேறென்றி லையாம்!
எங்ஙனம் இருந்திடும் இயம்பு வீர்சற்று?
திங்கள் வந்திடும் தெய்வப் புத்தகம்
பொங்கின ஞானம்! பேசாக்கலையாம்!
செங்கோல்வியந்திடும் சீரியநீதியாம்!
அரியதோர் புத்தகம் அறிவீர் நீவிர்?
பெரியோரெல்லாம் போற்றிடுமஃதாம்
சிறியோராயின் செம்மைநீதிப்
பயிலுவர் பாலகராயினென்? நல்
புத்தி வந்திடும் பல்வகைநீதிச்
சுத்தமாய்ப் பதித்திடுஞ் சீரியபுத்தகம்
உண்டே உலகில்? உயரிய தமிழாம்
தொண்டே செய்வாள்தொல் புகழ்த்தெய்வம்
தண்டமிழ்ப் பாவையே மோகினிச்செல்வம்!
உன்னதக் கருத்தாயமைந்திடும் நீதி!
பன்னெடுகாலம் வாழ்ந்திடு மாறு
இன்னருள் வண்ணனை ஏத்துகின்றேமே!

—"இனியன்"

சகோதரி ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள், பி. ஏ., எல். டி.

நமது கடமை

விழிமின்	எழுமின்	உழைமின்	தொழுமின்
ஜாக்ரத	உத்திஷ்ட	கார்யம் கர்ம	மன்மனுபவ
ஞானயோகம்	ராஜயோகம்	கர்மயோகம்	பக்தியோகம்

விழிமின்: ஊனக் கண்ணையே இன்னும் சரியாகத் துடைத்து விழித்துக்கொண்டு இயற்கை சிருஷ்டியிலுள்ள கடவுளின் அற்புதமான விஷயங்களை யெல்லாம் பார்த்து ஆனந்தித்து அனுபவித்து அறிந்து கொள்ளும் திறமை அநேகருக்கில்லை. உண்பதும் உறங்குவதுமாய் கேவலம் இந்த ஸ்தூல சரீரத்தை மாத்திரம் கவனித்து வளர்த்துக்கொண்டு, நமது எண்ணங்களையும், அறிவையும், ஞானத்தையும் மேன்மேலும் அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறோம். இந்த அக்ஞானம் அல்லது அவிவேகம் என்னும் தூக்கத்திலிருந்து விழிக்க வேண்டும்.

6 அறிவுள்ள மனிதர்களாகிய நமக்குள் ஆச்சர்யமான ஒரு தெய்வ சக்தி யிருக்கிறது. இறந்து அழிந்துபோகக்கூடிய இந்த சரீரமா நாம்? இல்லவே யில்லை. பஞ்சபூதத்தினால் கட்டப்பட்ட,காமக்குரோதாதிகளுக்கு இருப்பிட மான இந்த ஸ்தூல சரீரத்தை வளர்த்து அதை அலங்கரித்து மகிழ்வதற்கா நாம் இந்த அருமையான மனித ஜன்மத்தை எடுத்திருக்கிறோம்? அவ்வளவே தானா நம்முடைய வாழ்க்கையின் லக்ஷியம்? இல்லையில்லை. நமக்குள் உத்தம மான ஆத்ம சக்தி அல்லது தெய்வசக்தி யிருக்கிறது. அதுதான் நாம் என்பது. அதை அபிவிருத்தி செய்து, அந்த உண்மையான நீடித்த ஆத்ம சக்தியாகவே நாம் ஆகிவிடுவதுதான் வாழ்க்கையின் லக்ஷியம் அல்லது மோக்கம் என்பதை உணர்ந்துவிட்டோமேயானால் நமக்கு ஒரு உத்ஸாகமும் ஜீவசக்தியும் புத்துயிரும் உண்டாகிவிடும். இதுதான் விழிமின் என்பதன் கருத்து. நம்முள்ளிருக்கும் இந்த ஈச்வர சக்தியானது மூலாதாரம் (சக்திக்கு மூலமாகிய இருப்பிடம்) என்னும் சக்ரம் அல்லது ஆதாரத்தில் குண்டலினி என்னும் பெயருடன் சுகமாகத் தூங்கிக்கொண்டிருக்கிறது. இந்த சக்தியை எழுப்பிவிடவேண்டும். பிறகு அதை மேன்மேலும் அபிவிருத்திசெய்து கிரம மாக ஸ்வாதிஷ்டானம், மணிபூரம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞா என்னும் சக்ரங்களைத் தாண்டி,உயர்ந்த ஞானத்துக்கு இடமாகிய சிரஸில் ஸஹஸ்ரார சக்ரத்தில் கொண்டுவந்து நிலைநிறுத்தவேண்டும். நன்மை தீமை, பாபம் புண்ணியம், ஸத் அஸத், சரீரம் ஆத்மா, ஜீவாத்மா பரமாத்மா இத்தியாதி விஷயங்களைப்பற்றிய, உண்மையான, கலக்கமில்லாத, தெளிவான, சந்தேக விபரீதமற்ற உத்தம அறிவுதான் ஞானம் என்பது. இவ்வித ஞானத்தை யடைவதற்கு எத்தனையோ இடையூறுகள், முட்டுக்கட்டைகள் உள்ளன. யோக சாஸ்திரத்தில் இவற்றை ப்ரம்ம க்ரந்தி, விஷ்ணு க்ரந்தி, ருத்ரக்ரந்தி என்பர். தெளிந்த பகுத்தறிவுடன் கூடிய ஞானத்தையடையும் மார்க்கத்தில் எத்தனையோ சந்தேகங்கள், விபரீத எண்ணங்கள் ஸ்திரமற்ற சஞ்சலபுத்தி, ஸ்திர புத்தியுடன் திடமாக விஷயங்களை அறியும் திறமையில்லாமல் பல

பேர் சொல்லும் பல்வேறு விஷயங்களையும் எடுப்பார் கைக்குழந்தைபோல் நம்பிக்கொண்டிருப்பதெல்லாம் நம்மை மேல் போகவிடாமல் தடுக்கும் இடையூறுகளான முட்டுக்கட்டைகள். ஆகவே கீதையில் சொல்லியிருப்பது போல ஸ்திதப்ரக்ஞை அதாவது தீர்மானமான, ஸ்திரமான, உறுதியான ஞானத்தையடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும். ஞானத்தையடையும் விஷயத்தில் விழிப்பு ஏற்படவேண்டும். இதுவே ஞானயோகம்.

எழுமின், உத்திஷ்ட, ராஜயோகம். கீதையின் ஸாராம்சத்தில் இது ஒரு முக்கியமான உபதேசம். (Keynote) ஆங்காங்கு கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனை விளித்து, 'ஜாக்ரத'' "உத்திஷ்ட''-விழித்துக்கொள், எழுந்திரு'' என்று கட்டளையிட்டு உத்ஸாஹப்படுத்துகிறார். ஞானத்தையடைந்து விழித்துக்கொண்டுமாத்திரமிருந்தால் போதாது ஞானத்துடன் கூடினவன் விழித்திருந்தும் சோம்பேறியாய் உட்கார்ந்திருப்பது தகாது, அடாது. எழுந்திருந்து சுறுசுறுப்புடன் தன் சக்தியை உணரவேண்டும். தன் சரீர பலம் மனோதிடம், வாக்கு வலிமை, அறிவுத்திறம், ஞானசக்தி இவற்றை சரிவர அளவிட்டு உணர்ந்து இவற்றைத் தன்னுடைய பரிபக்குவத்தக்கும் பிறருடைய நன்மைக்குமாகப் பயன்படுத்தவேண்டும். "உத்தரேத் ஆத்மனாத்மானம்''—அதாவது தன் ஆத்மசக்தியினால் தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும். தன் ஆத்ம சக்தியினால் பிற ஆத்மாக்களையும் உயர்த்தவேண்டும். ஞானக்கண் உண்டாகி விழித்தாலும் அதைச் சரியான விதத்தில் உபயோகிக்காவிட்டால் அது குன்றிப்போகும். இறைக்க இறைக்க மேன்மேலும் ஊறும் கிணறுபோலவும், தேய்க்கத் தேய்க்க மணங்கமழும் சந்தனக்கட்டை போலவும், உபயோகப்படுத்திக்கொண்டேயிருக்கும் பாத்திரம் பளபளப்பாயிருப்பதுபோலவும் பிறருக்கும் தனக்கும் பயன்படும்படி செய்யும் ஞானம் மேலும் மேலும் விருத்தியாகும். ஆகவே எழுமின் என்பதன் கருத்து விழிப்படைந்த ஞானத்தை உபயோகித்தல் வேண்டும் என்பதே. இதற்குப் பலவித ஆராய்ச்சி வேண்டும். மனோதத்துவம் (Psychology), ஞானத்தின் பல துறைகளின் ஆராய்ச்சி, எண்ணங்கள் உண்டாகும்விதம். அவற்றின் பகுத்தறிவு இத்யாதி. இதையே பெரும்போக்காக ராஜயோகம் என்று சொல்லலாம்.

உழைமின், கர்மயோகம். ஞானக்கண் விழித்து எழுந்து தன்னுள்ளிருக்கும் பலவித சக்திகளையும் தனக்கும் பிறருக்கும் பயன்படுமாறு மாத்திரம் செய்தால் போதாது. நாம் செய்யும் ஒவ்வொரு கர்மத்தையும் பலனை விரும்பாமல் ஈச்வர அர்ப்பணமாகச் செய்யப் பழகவேண்டும். இதைப்பற்றிய விவரம் கீதை, 2 3 அத்தியாயங்களில் விரிவாகப் பார்க்கலாம். முதலாவது கர்மம் செய்தல், "பிறர் விஷயங்களில் தலையிடுவானேன், நம் வேலையைப் பார்த்துக்கொண்டுபோனால் போதாதா' என்னும் எண்ணம் கூடாது. புத்தர் காலத்துக்குப் பிறகு வந்த பௌத்த மதத்தினர், உலகத்தை வெறுத்து துறவறத்தை மேற்கொண்டு காஷாயம் தரித்து பிக்ஷுணிகளாக இருப்பதுதான் முக்திக்கு சாதனம் என்னும் கோட்பாட்டைக் கைப்பிடித்து, புத்த பகவானது உயர்ந்த நோக்கமாகிய "பிறர் நன்மைக்காக கர்மம் செய்யவேண்டியது அவசியம்'' என்பதை அறவே மறந்துவிட்டனர். அநேகம் ஹிந்துக்களும் "இல்லறத்தைவிட துறவறமே மேல்'' என்பதில் துறவு என்பது மனத்துறவு அல்லது அகத்துறவு, அது புறத்துறவு அல்ல என்பதை மறந்துவிட்டமையால் ஜனங்களுக்குள் ஒருவித தூக்கமும் சோம்பலும் பரவிவிட்டது. நம் அருமையான பாரதநாடு பிறர் வசமான

தற்குக் காரணம் இதுவே. "அவ்ரவர் கர்மத்தை அவரவரே அனுபவிக்க வேண்டும். இந்தியாவின் தலைவிதி, பிறர்வசமிருக்கவேண்டுமானால் அதற்கு நாம் என்ன செய்யலாம்" என்று கண்மூடித்தனமாய் குருட்டு வேதாந்தம் பேசும் சோம்பேறிகள் இந்தியாவில் மிகப் பலர். இவ்வித வாய்ப்பேச்சு மாத்திரமேயன்றி உழைப்பது என்பது இல்லாத போலி வேதாந்திகளுக்கே ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் கீதோபதேசம் எனலாம்.

கிர்மம், அகர்மம், விகர்மம் என மூன்று. கர்மம் என்பது தொழில் செய்தல்; அகர்மம் என்பது தொழில் செய்யாமலிருப்பது, 'நான் துறவி எனக்குக் கர்மம் எதுவும் செய்யவேண்டியதில்லை' என்று போலி சந்நியாவிகள் சொல்வார்கள். விகர்மம் என்றால் செய்யத் தகாததைச் செய்தல். ஓடம் கவிழ்த்த பிரம்மசாரி மாதிரி பிறருக்குக் கஷ்டமும் துன்பமும் உண்டாகும்படியானதும் தனக்கும் சுகமில்லாததுமான கர்மம் அல்லது தொழிலைச்செய்யவே கூடாது.

கர்மமே செய்யாமலிருப்பதும் நம்மால் முடியாது "சரீர யாத்ராபி ச தே ந ப்ரஸித்யேத் அகர்மண:" அதாவது "நான் கர்மம் செய்வதில்லை" என்று சொல்பவன்கூட அவன் சரீரத்தை வளர்ப்பதற்குவேண்டிய தொழிலைச்செய்துதான் ஆகவேண்டும். "என் சரீர போஷணையைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை. பிறர் பிரீதியுடன் கொடுப்பதை இந்தக் கட்டைக்குக் கொடுத்தால் போதாதா" என்பவர்கள்கூட பிறர் கொடுக்கும் உணவைக் கையினால் வாங்கி அதை வாயில் போட்டு மென்று சாப்பிடுவது ஒரு தொழில்தானே? காலையில் எழுந்து காலைக் கடமைகளைச் செய்வதும், உடம்பின் அசுத்தம் நீங்க ஸ்நானம் செய்து உடை தரித்துக் கொள்வதும் தொழில்கள் அல்லவா? மனதினால் பலவித எண்ணங்களை எண்ணுவதுங் கூட தொழில்தானே? ஆகவே கர்மமே செய்யாமலிருப்பது என்பது முற்றிலும் கூடாத காரியம். ஆகவே கர்மம் செய்யத்தான் வேண்டும். என்ன கர்மம்? கீதையின் மற்றொரு சாராம்சம் (Keynote) இதுவே. பணி, வினை, கர்மம், நிஷ்காம கர்மம் (பலனை விரும்பாத கர்மம்) ததர்த்த கர்மம் (ஈச்வரன் பொருட்டு கர்மம்) மதர்த்தகர்மம், மத்கர்மம் (என் பொருட்டு-கிருஷ்ண பரமாத்மாவின் பொருட்டு-கருமம்) கர்மயோகம் (கடவுளை யடைவதற்கு அன்புப் பணியாகிய வழி) ஸமத்வ யோகம் (எல்லாரையும் சமமாகக்கருதி கர்மம் செய்தல்)இவையெல்லாம் அருட்பணி அல்லது அன்புப்பணி எனப்படும்.

"கர்மணை வஹி ஸம் ஸித்திம் ஆஸ்திதா ஜனகாதய:
லோக ஸங்க்ரஹ மேவாபி ஸம் பச்யந் கர்த்தும் அர்ஹஸி".

ஜனகன் முதலிய உத்தமமான உண்மையான ஸந்நியாவிகள் பற்றில்லாதவர்கள், தங்களுக்கு எதுவும் வேண்டும் என்னும் விருப்பமில்லாதவர்கள், உண்மைத் துறவிகள். ஆனால் அவர்கள் லோக ஸங்க்ரஹத்தின் பொருட்டு, ஜனங்களின் க்ஷேமத்தின்பொருட்டு, பிறருடைய நன்மையின் பொருட்டு கர்மம் செய்தார்கள். இவர்களுடைய கர்மத்துக்குத்தான் "யஜ்ஞ கர்மம்" என்று பெயர்.

யஜ்ஞார்த்தாத் கர்மணோ அந்யத்ர லோகோ அயம கர்ம ப்ராதன: இவ்வுலகில் யஜ்ஞ கர்மமன்றி மற்ற எந்தக் கர்மமும் மனிதனை பந்தப்படுத்துகிறது. கர்ம பலனை யனுபவிப்பதற்கு பல ஜன்மங்கள் எடுக்க

வேண்டும். அந்த பிறப்பிறப்பாகிய பந்தம் கர்ம பலனை விரும்பி கர்மம் செய்பவனுக்குத்தான் ஏற்படுகிறது. ஆனால் யஜ்ஞ கர்மம் இவ்விதம் பந்தப்படுத்தாது. யஜ்ஞகர்மம் என்றால் என்ன? 'யஜ்' என்னும் வேரில் பிறந்த யஜ்ஞம் அல்லது வழிபாடு. தன்னை ஆண்டவனுக்கே உரிமையாக்கி அருட்பணி புரிதலே. தியாகத் தீயில் ஆசை, அகந்தை, அறியாமை இவற்றை ஆகுதி செய்தலே வேள்வி, யாகம், யஜ்ஞம் என்பன. ஆகவே பிறருடைய க்ஷேமத்தை நாடி, தேச சேவையைக் கருதி, ஆசை கோபம் இவற்றை அகற்றி வீரப்பணியாகிய அன்புப் பணியைச் செய்வதே நமது வாழ்க்கையின் லக்ஷியமாகும்.

உனக்குப் பணித்த பணியைப் பற்றற்று ஆற்றுக. உனக்கு ஏற்பட்ட தர்மம், உன் கர்மத்துக்கும் (பூர்வ ஜன்மங்களின்) ஸ்வபாவத்துக்கும், நிலைமைக்கும் ஏற்றபடி அமைந்த இயற்கைத்தொழில் எதுவோ, உன் ஸ்வதர்மம் யாதோ அது எப்படிப்பட்டதா யிருந்தாலும், அதைப் பற்றுதல் இல்லாமல், திறமையுடன், நன்றாகச் சீராக ஒழுங்காக சுத்தமாகச் செய்து முடித்தல் வேண்டும். இதுவே கர்மயோகம், இதுவே தர்மயோகம்.

தோழமின், பக்தியோகம் வியாஸபகவான் பாரதம் முதலான அநேகம் ஞான நூல்களை வெளியிட்ட பிறகும் மனதுக்குச் சாந்தி ஏற்படாமல் சஞ்சலத்துடன் தன் மனோநிலைமையை நாரதரிடம் தெரிவித்தபோது அவர் வெற்று ஞானம் மாத்திரம் போதாது. அதுடன் பக்தியும் வேண்டும் என்று உபதேசித்த பிறகு, வியாஸர் பக்தி செய்து முக்தி பெற்றார் என்பது வரலாறு. ஆகவே ஆஸ்திக புத்தியும் ஈச்வர பக்தியும் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டும். ரத்தபாசத்தினால் பிணைக்கப்பட்ட பந்துக்களிடம் உண்டாகும் வாத்ஸல்யம் அன்பு எனப்படும். ரத்த பாசமில்லாத மற்றவர்களிடம் ஏற்படும் காருண்யம் அருள் எனப்படும்-அன்பின் குழந்தை அருள், முதலில் தனக்கு வேண்டிய பெற்றோர் மனைவி மக்களிடம் உள்ள அன்பானது விரிந்து உலக மக்கள் யாவரும் ஒரு கடவுளுடைய மக்களே என்னும் ஞானத்துடன் அருளாகப் பரவவேண்டும். இதன் பிறகு உலகுக்கெல்லாம் அம்மையப்பனாகிய கடவுள்-ஞானம் உண்டாகி அவர்மீது பக்தியுண்டாக வேண்டும். அன்பு அருள் பக்தி இவை முக்திக்கு வழிகாட்டும் ஒரு ஸோபானம்.

முடிவாக, கர்மயோகம் ஞானயோகம் பக்தியோகம் மூன்றும் மோக்ஷத்துக்குத் தனித்தனியாக வழிகளல்ல. இம்மூன்றும் சேர்ந்ததே சரியான வழியாகும். ஆகவே கீதையின் ஸாராம்சம் என்னவென்றால் ப்ரபஞ்சம் ஜீவர்த்மா பரமாத்மா இவற்றைப்பற்றிய சிறந்த உண்மையான சந்தேக விபரீதமில்லாத ஞானத்துடன் அவரவருக்கு ஏற்பட்ட கடமைகளை பற்றின்றி செய்துகொண்டு அவற்றின் பலனில் அபேக்ஷையில்லாமல், கர்மயோகியாயிருந்து நமக்குள்ளிருக்கும் ஆத்ம சக்தியை உணர்ந்து கடவுள் பக்தியுடன் ஜனகாதியர்களைப் போலிருப்பவர்களே ஜீவன் முக்தர்கள்,

ஆகவே, மிருகங்களைப்போல் உண்பதும் உறங்குவதுமா யில்லாமல் நாம் ஒவ்வொருவரும் ஜீவன் முக்தராயிருப்பதற்கு முயற்சி செய்யவேண்டிய சக்தியை நமக்கு கடவுள் தந்தருள்வாராக.

சிலர் தாம் வெகு ஹாஸ்யமாகப் பேசுவதாக எண்ணிக்கொண்டு ஏதோ ஒன்றைச் சொல்லிவிட்டு அந்த நகைச் சுவையை அனுபவித்துத் தாமே நகைத்துவிடுகிறார்கள். இதற்கு நகைச் சுவை என்பதா! அசட்டுச் சுவை என்பதா!

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

வரகவி-திரு-அ. சுப்ரமண்ய பாரதி பாடியது.

நேரிசை ஆசிரியப்பா

உலகில் மக்களாய் உதித்தல் அரிததில்
கலைநலம்கண்டு நிலைகொளல் அரிததில்
கற்றவர் அவையிற் கனம்பெறல் அரிததில்
சொற்றிறன் என்னும் துணையுறல் அரிததில்
அற்றமில் கவிபுகல் அறிவுறல் அரிததில்
உற்றவர் உணர்வுற ஓதுவ தரிததில்
மக்களின் வாழ்க்கையை மருவிய போக்கினில்
தக்கநன் னீதியைத் தழுவிய முறையினில்
நவரச இன்பந் தவழ்தரும் தமிழில்
நவநவ மாக நவையில் காதைகள்
வித்தக மலிந்த புத்தகம் இதுவென
நத்தியிங் கெவரும் நாடுந் திறனில்
எழுதி மாதந்தொறும் இதமுறை வெளியிடும்
பழுதிலாத் தொண்டினைப் பாலித்து யரிய
பேரும் பெருமையும் சீரும் சிறப்பும்
பெறலரி தாமிதைப் பேருலகத்தினில்
“எழுத்தைக் கொடுத்தையோ கழுத்தைக் கொடுத்தையோ”
எனப்பகர் பழமொழிதனைக் கொண்டுணர்க
அம்ம !—
இந்நற் றொண்டினை இருபதாண் டாக
சிந்தை தளராத் திடனுடன் தூய
ஜகன்மோகினி யெனும் தாவினற் பெயரில்
நடத்தும் **கோதைநாயகி** அம்மை
திடத்தவ உடல்நலம் தீதுறு திலக
ஆயுணீடித்த ஆட்சியில் விளங்க
தூயநற் றெண்டாய்த் துலங்குவ தாம்ஜக
மோகினி அமிர்தசஞ் சீவினியாக
என்றும் குன்று திருந்துலகுக்கு
நன்றெனும் திருவருள் நல்குமெய் அன்பும்
தீதில் ஒழுக்கமும் சீலமும் கல்வியும்
மேதகு முறையில் விளக்கும் தகையுறத்
திருமான் மருகன் முருகன் செந்திற்
பெருமான் திருவருள் பெருகுமா றவன்றன்
துணையடி மலர்முடி சூடுவன்
குணநல மெல்லாம் குளிர நினைந்தே

சுபம்.

குரு பக்தி

''அருமறைகள் தமிழ்செய்தான் தாளேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே''

-ஸ்ரீ. வேதாந்த தேசிகர்.

''ஞானதேசிகன் சரணதாமரைகள்என்
நயனம்விட்(டு) அகலாவே''

-ஒரு பழம் பாட்டு.

ஞானதேசிகராகிய நம்மாழ்வாரை மதுரகவிகள் சந்தித் ததும் ஸ்ரீவைஷ்ணவப் பிரசாரத்திற்கு விதை விழுந்துவிடுகிறது. நல்ல தருணத்திலே—நல்ல பூமியிலே விழுந்த விதை, முளைத்துத் தளிரோடி, இலை வீசிப் பூவும் கனியுமாய்ப் பலந்தரும் காலத்தை எதிர்நோக்குகிறது.

வேதம் தமிழ்செய்த நம்மாழ்வாரைப் போன்ற ஞானகுரு வும், குருபக்தியிலே நிகரற்ற மதுரகவியைப் போன்ற சிஷ்யரும் இருக்கையில் பாகவத தர்மம் வளர்ந்தோங்கியதில் ஆச்சரிய மென்ன ?

நம்மாழ்வார் காட்டிய வழியேபோய்த் தன் துன்பத்தைப் போக்கிக்கொண்ட மதுரகவியாழ்வார், பிறர் துன்பம் துடைப்ப தற்கும் அதுவே நல்வழியென்று கண்டார். ''இது இவர்கள் புதிதாகக் கண்டுபிடித்த வழியுமன்று; வேதகாலம் தொட்டுவரும் தொல்வழியும்கூட'' என்பது ஸ்ரீவேதாந்த தேசிகர் திருவுள்ளம்.

ஓதாதுணர்ந்த உயர்ஞானியும் யோகியுமான இளைஞர்முன் அந்தக் கிழவரான பிராமணோத்தமர் மந்திரத்தால் கட்டுண்டவர் போல் வசீகரிக்கப்பெற்று நிற்கும் நிலையைத்தான் பாருங்கள், அந்த ஞானத்தையும், அருளையும், ஆற்றலையும் உலகம் உய்ய அப்படியே பெற்றுக்கொள்ளுகிறாரென்று தோன்றுகிறதல்லவா?



ஜகன்மோகினி

அனுபந்தம்

பித்தா பிறைசூடி பெருமானே! அருளாளா!

தன்னலம் சிறிதும் இல்லாதவரைப் பித்தனென்று உலகம் கருதுவது இயல்பு. தனக்கு வெள்ளிமலையும் பொன்மலையும் உடைமையாகயிருக்க விஷப் பாம்பை ஆபரணமாகப் பூண்டதும், வானத்தைக் கிழித்துக்கொண்டு குதித்த கங்காப் பிரவாகத்திற்கு அஞ்சாது தலைகொடுத்ததும், உலக க்ஷேமத்தையே சதா சர்வ காலமும் சிந்தித்தவண்ணம் போகத்திலே ஆழ்ந்திருப்பதும் இவரைப் பித்தராகக் காட்டுகின்றன. இந்தப் பித்தர் சூடிய பிறையும், ஜடா மகுடமும் இவரை யோக மூர்த்தியாகிய சித்தராகவும் காட்டுகின்றன. இவர் சர்வ வல்லமையுள்ள சித்தரென்பதற்குக் குடத்திலே தண்ணீர் அடங்கி நிற்பதுபோல் அந்த ஜடாமகுடத்திலே தேங்கி நிற்கும் கங்கையே ஒரு சாட்சி. இந்த போகமூர்த்தி அருளாளராகிய தியாகமூர்த்தியாகவும் விளங்குகிறார் என்பதற்கு விஷ பக்ஷணம் செய்து உலகத்தை ரக்ஷித்த அந்த நீல கண்டமே சாக்ஷி.

ஸ்ரீ டாக்டர் வி. சூ. நடராஜன், எல். எம். பி., எல். பி. எச்.,

திருவிளையாடல் கும்மி

காப்பு

சீர்வளர்ந் தோங்கிடும் தென்மது ரைச்சொக்கர்
திருவிளை யாடல்கள் கும்மிசொல்ல
பார்புக ழும்தொந்திக் கணப தியேதுணை
பாரதி யும்நாவில் வந்தருள்வாள்.

இந்திர னின்பழி தீர்த்தது வும்வெள்ளை
யானைசா பந்தன்னைத் தீர்த்ததுவும்
சந்திர சேகரன் தண்ணரு ளால்திரு
நகரத்தைக் கண்டதும் சொல்லப்போமோ? (1)

தேவிமீ னாட்சியே தென்னவன் பெண்ணாகத்
திருவவ தாரஞ்செய் தருளியதும்
மேவிமா தேவனைத் திருமணம் செய்ததும்
வெள்ளியம் பலக்கூத் தாடியதும் (2)

குண்டோத ரனுக்கே அன்னமிட் டுஅன்னக்
குழி, வைகை தம்மை யழைத்ததுவும்
கண்டோ ரதிசயிக் கக்கடல் ஏழையும்
கணமதில் பொய்கையில் அழைத்ததுவும் (3)

உம்பரு லகுள்ள மலையத்து வஜனை
உடனழைத் தவர்தம் தேவியொடு
தம்பதியா யேழுகடற்பொய்கை மூழ்கியே
நற்கதி யேபெறச் செய்ததுவும் (4)

உக்கிர பாண்டிய னாகவே வேலவன்
உலகில் அவதாரம் செய்ததுவும்
மிக்க திருமணம் செய்வித் தவருக்கே
வேல்வளை செண்டுகொ டுத்ததுவும் (5)

வாரிசு வறிட வேலையே விட்டதும்
வளை யெறிந்து இந்திரன் முடிமேல்
மேருவைச் செண்டா லடித்ததுவும் ஆதி
வேதத்திற் குப்பொருள் அருளியதும் (6)

மாணிக்கம் விற்றதும் வருணனவி டுத்திட்ட
வாரியை வற்றிடச் செய்தேயவன்
நாணிட வேசப்த மேகந்தடுத்திட
நான்மாடக் கூடலே ஆனதுவும் (7)

எல்லாம்வல் லசித்த ரானது வும்கருங்
கல்லானைக் குக்கரும் பருத்தியதும்
வெல்லவந் தயானை கொல்லஅம் பெய்ததும்
விருத்தகு மாரபா லரானதும் (8)

பாண்டியன் வேண்டக்கால் மாறியா டியதும்
பார்ப்பனத் திபழி யஞ்சியதும்
வேண்டிமா பாதகம் தீர்த்ததுவும் அங்கம்
வெட்டியதும் யாரே சொல்லக் கூடும்? (9)

பாண்டியன் மாண்டிட வந்தநா கமெய்து
மாயப்ப சுவைவ தைத்ததுவும்
ஆண்டவ னேவந்து மெய்காட்டி யறிவித்து
அரும்உல வாக்கிழி அருளியதும் (10)

இடுவளை யல்விற்று அட்டமா சித்திகள்
இயக்கப் பெண்களுக் குபதேசித்து
இடபக்கு றியிட்டு தண்ணீர்ப்பந் தல்வைத்து
இரசவாதஞ் செய்ததும் எண்ணப் போமோ? (11)

மடுவினில் சோழனை வீழ்த்திய தும்உல
வாக்கோட்டை யருளிமா மனுப்ச்சபை
நடுவினி லேவழக் குரைத்து வரகுண
வழுதிக்குச் சிவலோகங் காட்டியதும் (12)

விறகுவிற் றுப்பாண பத்திர னுக்காக
வேண்டுந் திருமுகம் தந்துபாடும்
திறமைக் கேபலகையை இட்டு அவன்மனை
விறலியை இசைவாதில் வென்றதுவும் (13

பன்றிக்குட் டிகட்குப் பால்கொடுத் துப்பின்னே
மந்திரி மார்களாய் ஆக்கியதும்
நன்றுக ரிக்குரு விக்குப தேசிந்து
நாரைக்கு முக்திகொ டுத்ததுவும் (14)

துங்கந கர்திரு ஆலவாய் ஆனதும்
சுந்தரப் பேரம்பு எய்ததுவும்
சங்கப்ப லகைபு லவர்க்குத் தந்ததும்
தருமிக்குப் பொற்கிழி யருளியதும் (15)

நக்கீர னைக்கரை யேற்றியி லக்கணம்
நன்கவ னுக்குப தேசித்ததும்
மிக்கசங் கத்தாரின் கலகமும் இடைக்காடன்
பிணக்கினையும் தீர்த்து அருளியதும் (16)

வலைவீசியே உமையை யடைந்ததும்
வாதவூ ரர்க்குப தேசித்ததும்
குலைநரி யைப்பரி யாக்கியதும் மீண்டும்
கோதில் பரிநரி யர்க்கியதும் (17)

பிட்டுக்கு மண்ணைச் சுமந்ததும் பாண்டியன்
பெரிய சுரம்தன்னைத் தீர்த்ததுவும்
கெட்டிச் சமணரைக் கழுவேற்றி வன்னி
கிணறுலிங் கத்தைய ழைத்ததுமாய் (18)

அறுபத்து நான்கு திருவிளை யாடல்கள்
ஆகிய கும்மியைப் பாடுவோர்க்கே
மறுபிறப் பேஇல்லை மாநில மீதிலே
மங்காப் புகழ்பெற்றி லங்குவரே (19)

எல்லாம் என்றும்செய்ய வல்லான்திருவருள்
எல்லையில் லாஇன்பம் நல்லாயுளும்
செல்வமும் நல்கிடும் தில்லையா டிதமிழ்ச்
சொல்லைப்பா டத்தினம் கேட்பவர்க்கே. (20)

ஸ்ரீமான் வி. ஆர். எம். செட்டியார். பி. ஏ.

கண்ணாடி மூர்த்தி

எனது நண்பர்—கண்ணாடி மூர்த்தி—கண்ணாடி உலகத்திற்கே ஒரு விளம்பர மேதையாகப் பிறந்திருக்கிறார். சிங்கப்பூரில் அவர் வாங்கிய அபூர்வமான லென்ஸ், இந்த மூக்குக் கண்ணாடிக்குத் தனி கவுரவத்தை அளித்திருக்கிறது. இதைப் போட்டுக்கொண்டவுடன், எனது நண்பர் ஒரு பயங்கரமான மூர்த்தி வடிவமே எடுத்துவிடுவார். சின்னஞ் சிறு குழந்தைகள், இவரைக் கண்டால், நடுங்கிக் கதற ஆரம்பித்துவிடும்.

இவர் ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, மலாய் பாஷைகளைக் கற்றறிந்தவர். எதையும் தாய்மொழியின் அழகுடனும் வேகத்துடனும் இயற்கையுடனும் உச்சரிப்பின் நுட்பத்துடனுமே அனுபவித்துப் பேசுவார். நேரே ஆங்கிலேயர் ஆங்கிலம் பேசுவதைக் கேட்டுக் கேட்டு, ஆங்கிலபாஷையை நுட்பமாக வெள்ளைக்காரனும் அதிசயிக்கும்படி உச்சரிப்பார்; தமிழை இலக்கிய ரஸனையுடன் அனுபவித்தே படிப்பார். சங்கீதமென்றால், இசைக்கடலிலே நீந்திக் கரையேற முயலுவார். இசையின் உச்சியில் மௌனம் சாதிப்பார்; இசையின் சிலிர்ப்புக் குறைந்தால், கண்ணாடியைக் கழற்றி மேஜைமேல் வைத்துவிட்டு, யார் பாடினாலும் சரி, அவர் குறைகளைக் கண்டித்துத் திட்டுவார். சில சமயங்களில், ரேடியோவின்முன், கண்ணாடி மூர்த்தி உட்கார்ந்துகொண்டு இராக தாள ஆலாபனைகளை மிக நுட்பமாக கவனிக்கும்போது, திடீரென்று, பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு, ரேடியோப் பெட்டியையே தனது இடது காலால் நொருக்கி விடலாமா என்று கடுமையாகச் சிந்தித்து, எண்ணத்தையே செயலில் முடிக்க முயலும்போது, நான் உடனே இதைத் தடுத்துவிடுவேன். 'பாடுகின்ற வித்வானைக் கண்டிப்பதற்குப் பதிலாக, ரேடியோ பெட்டியை உடைப்பது சரியல்ல' வென்று உறுதியாகத் தடுத்தபின், மறுபடியும் இந்த வில்லங்கமான மனநிலையைத் தாங்கமுடியாமல், மௌனத்தில் ஆழ்ந்துவிடுவார், எனது நண்பர்: இப்படி மனம் நொந்துபோனால், ஆடாமல், அசையாமல், உணர்ச்சியற்ற விக்ரகமாகவே மாறிவிடுவார்.

இவர் ஒரு கலைப் பித்தர். எதைக் கண்டாலும் அனுபவிக்க ஆசை. ஆறு, கடல், ஆகாசம், மேக லீலைகள், இடி மின்னலின் களியாட்டம், உருளைக்கிழங்கின் கோணல்கள், வெண்டைக்காயின் வளைவுகள், கிழிந்த மிதியடியின் விநோத அமைப்புக்கள், துவாரமுள்ள கத்தரிக்காய் பஜ்ஜி, பட்சிகளின் கான வெள்ளம், உடைந்த மூக்கு, குருட்டுக் கண்களின் அற்புதங்கள்—தயிர், மோர், பாலின் கலப்பு வடிவங்கள்,—இவை யெல்லாவற்றிலும், எந்தப் பகுதியையும்,

எந்த இடத்திலும், முன்பின் தொடர்ச்சியின்றி, ஆனந்தமாய் அனுபவிக்கும் ஆற்றலுடையவர், எனது அருமைக்கண்ணாடி மூர்த்தி!

அவர் பற்களை தந்த வரிசைகள்போல் எப்போதும் சுத்தமாகவே வைத்திருப்பார். வெற்றிலை பாக்குச் சுண்ணாம்பினால், இரத்தவர்ணம் தீட்டிக் காட்டமாட்டார். அமெரிக்கப் பல் டாக்டர்களிடம் ரூ. 5.க்குக் குறையாமல் கொடுத்து, பல்லை அடிக்கடி சுத்தம் செய்துகொள்வது வழக்கம். வெற்றிலை போடுகிறவர்களைக் கண்டால், அவர் சொல்லுவார்; "இவர்களுடைய பற்கள் புலிப் பற்கள்; இரணப் பற்கள், கோரவடிவங்கள்; மனித சிருஷ்டியையே பழிக்கும் பாபிகள்" நான் இதைக் கேட்கும்போது, நினைத்து நினைத்துச் சிரிப்பதுண்டு.

எனது நண்பர் மனம் சதா அலைந்துகொண்டே இருக்கும். கடிகாரத்தை மீறியே எதையும் செய்வார். ரயிலையும் காரையும் தப்ப விட்டு, அதன்பின் மிகமிக வருந்துவார். ஓயாமல் பேசிக்கொண்டு, தன் பொறுமையையும் எதிரியின் மன நிலையையும் உலவீனப்படுத்தி விடுவார். கண்ணாடி மூர்த்தியை, "சஞ்சல மூர்த்தி" என்று அழைப்பது சாலப்பொருந்தும்.

புத்தகங்கள் ஏராளமாக விலைக்கும் வாங்குவார். இரவலும் வாங்குவார். பிறர் எடுத்துக்கொண்டு போய்விடாவண்ணம் ஒளித்து வைப்பார். எந்தப்புஸ்தகத்திலும், ஏதாவது ஒரு பக்கத்தில் இலக்கிய ரஸம்கொந்தளித்தால், உடனே அதைப்பருகிப் பருகிக்கூத்தாடுவார். இது ஒரு கலைத்தாண்டவமோ, என்று நாம் ஐயுற நேரிடும். உடனே கதவைத் திறந்துகொண்டு, வெளியே வர்சற்படியில் நின்றுகொண்டு, எந்த நண்பன் காதிலாவது இந்த இலக்கியத் தேனைக் கொட்டிவிடவேண்டுமென்று காத்துக்கொண்டிருப்பார். சிறு குழந்தைகள், இந்த மூர்த்தியை, ஒருநாள் "கிராக்" (CRACK) என்று அழைக்கவும் துணிந்துவிட்டன. கோபம் தாங்க முடியாமல், மூர்த்தி கண்ணாடியைக் கழற்றி ஆவேசமாய் எறிந்தார்; 'லென்ஸ்' கல்லில் மோதி சுக்குத்தூளாகப் பறந்துவிட்டது.

இந்த நிமிஷம், கண்ணாடி மூர்த்தி தனது சௌந்தரியத்தையும் திறமையையும் இழந்து, சாம்பிப்போய் நிற்பதைப் பாருங்கள்!

கண்ணாடி டம்ளர் வாங்குவதென்றால் எனக்கு அபாரமான ஆசை. வாங்குவதும் குறைவில்லை. என் வீட்டில் உடைப்பதும் குறைவில்லை. உடையும்போது பார்க்கையில் மனதும் உடையும். இனி இந்தச் சனியனை வாங்குவதில்லை என்கிற பலமான எண்ணமும் எழும். ஆனால் கண்ணாடிக் கடையருகில் போகும்போதோ, ஆசைதான் ஜெயிக்கும். இதையாவது உடைக்காமல் வைத்துக்கொள்ளலாம் என்ற சமாதானத்துடன் மறுபடியும் வாங்குவேன். வைராக்யத்தின் நிலைமையே விரைவில் அழிந்துபோவது தான் போலும்.

ஸ்ரீமான் ஜெ. ர. ரங்கராஜுலுகாரு

ஸ்ரீ. எஸ். ஜீ. ராமானுஜலு நாயுடு

இவர் பரம்பரை தனவந்தரான ஸ்ரீ சங்கு கோவிந்தசாமி நாயுடுவுக்கும் சங்கு கோவிந்தம்மாளுக்கும் 1885-ம்வருஷ எப்ரல்மீ திரிச்சிராப்பள்ளியில் ஜேஷ்ட புத்திரராகப் பிறந்தார். இவரது தாயாருக்கு தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் ஆகிய மூன்று பாஷைகளிலும் பாண்டித்யமுண்டு. இவர் தனவந்தர் புத்திரராதலாலும் ஏக புத்திரராதலாலும் மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டார். அவருக்கு சிறு வயதிலேயே காது சரிவரக் கேட்காததாலும், உபாத்தியாயர் சொல்வதைக் கேட்க சக்தியில்லாததாலும் 5-ம் வகுப்புடன் அவரது பள்ளிக்கூடப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாயிற்று. ஆயினும் அவரது தாயாரது ஊக்கத்தாலும், விடா முயற்சியாலும் நாளுக்கு நாள் அவரது கல்வி அபிவிருத்தியடைந்து வந்தது.

செல்வம் ஓரிடத்தில் தங்காமல் "செல்வோம்" என சென்றுவிடுவது இயற்கை விதியாதலால் அவரது தகப்பனார் வியாபாரத்தில் அதிக கஷ்டம் ஏற்பட்டு அவர் ஏழையானார். தனவந்தர் திடீரென ஏழையானால் அவர்களது நிலைமை எவ்வளவு பரிதாபகரமாயிருக்கும்? ஆகவே செல்வமாய் வளர்த்த புத்திரன் கஷ்டப்படுவதைச் சகிக்காது அப்போது நல்ல ஸ்திதியிலிருந்த அவர் மாமனார் வீட்டிற்கு அவரை அனுப்பினார்கள். அருமை பெருமையெல்லாம் நல்ல நிலைமையிலிருக்கும்போதுதானே! நொந்துபோய் பந்துக்கள் வீட்டில் போயிருக்கும் துர்அதிர்ஷ்டம் அவரையும் விடவில்லை. விருதாச் சாப்பாடு சாப்பிடப்பட்டவன் வேலைசெய்தாலென்னவென்று அவர்கள் சோடா ஷாப்பில் வேலைசெய்யச் சொன்னார்கள். அவர் சந்தோஷமாகவே வேலை செய்துகொண்டுதான் வந்தார். ஆனால் நாளுக்கு நாள் அவரை அதி கேவலமாக நடத்த ஆரம்பிக்கவே, அவர்கள் வேலைக்கும், அவர்களுக்கும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு வீடுவந்து சேர்ந்தார்.

இயற்கையாகவே அவருக்கு தமிழிலிருந்த அபிமானத்தை அபிவிருத்தி செய்ய எண்ணி சரபம் ஸ்ரீ முத்துசாமிக் கவிராயரை யடுத்து அவரிடம் சிலகாலம் தமிழ் பயின்று வந்தார். சும்மாயிருப்பது சரியல்லவென நினைத்து அக்காலத்தில் ஏக தமிழ் பத்திரிகையாயிருந்த சுதேசமித்திரன் பத்திரிகைக்கு திரிச்சி ஏஜெண்டாகி அதிக கஷ்டத்துடன் அவ்வேலையைப் பார்த்து வந்தார்.

தானாகப் பத்திரிகை நடத்தவேண்டுமென்ற அவாவும், அதற்கு வேண்டிய சக்தியும் தன்னிடமிருப்பதாக நம்பிக்கை ஏற்பட்டவுடனே சிலருடைய உதவிபெற்று 1908-ம்வருஷ 'பிரஜானுகூலன்' என்ற பெயருடன் ஒரு மாதாந்திரப் பத்திரிகை ஆரம்பித்து, அதில் சில பக்கங்களில் நாட்டு நடப்புகளும், குறிப்புகளும் எழுதி மீதி பெரும்பான்மையான பாகத்தை தொடர்கதைகளுக்கே உபயோகித்து வந்தார். அத்துடன் பாலபாஸ்கரன் என்னும் புனைப்பெயருடன் அக்காலத்தில் பேரும் சிறப்பும் பெற்று நடந்து வந்த ஏக ஹாஸ்யப் பத்திரிகையாகிய மஹாவிகடதூதனில் முதலில் பல கட்டுரைகள் எழுதிவந்து பின் அதன் உதவி ஆசிரியருமானார்.

அவரது தாயாருக்கும், அவருக்கும் ஏற்பட்ட அபார அரங்கபக்தியினால் திருச்சியைவிட்டு 'ஸ்ரீரங்கம்' போய் சேர்ந்தார். ஸ்ரீரங்கநாதரது கிருபா கடாட்சத்தினால் உயர்ந்த குணங்களும், அபார கல்வியறிவும், வியாஸங்கள் எழுதும் இயற்கைச் சக்தியுமுடைய கமலவல்லி யென்ற மங்கையை மணம்

புரிந்தார். அதன்பின் இருவருமாகச் சேர்ந்தே வியாஸங்கள் எழுதி பிரஜானுகூலனை நடத்திவந்தனர். அவரது ஆசிரிய சக்தியை மெச்சிய ஜான் பால் என்பவர் சேலத்திலிருந்து வந்து, அவரை ஆசிரியராக இருக்கும்படி வேண்டிக்கொண்டதற் கிணங்க அவர் சேலம் சென்று 'திராவிடாபிமானி' என்ற பெயருடன் ஒரு வாராந்திரப் பத்திரிகை ஆரம்பித்து, நடத்தி சேலத்தில் அதை பிரபல்ய பத்திரிகையாக்கினார். சில காலத்திற்குப் பின் ஜான்பாலென்பவர் இறந்துபோனதும் அவரது மனைவியார் இவருக்கு என் வீணாகச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் தானே ஆசிரியையாயிருந்து நடத்தலாமென்ற எண்ணத்துடனும் இவரை அனுப்பிவிட்டார். அதன் முடிவு சில வாரங்களில் திராவிடாபிமானியே மறைந்துவிடும்படி நேர்ந்தது.

தன்னால் ஆரம்பிக்கப்பட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்த சேலம் திராவிடாபிமானி மறைந்துவிட்ட விசனம் தீருமுன் 1916-௵ அவருக்கு எல்லாவிதங்களிலும் உண்மைத் துணைவியாயிருந்த அவரது ஆருயிர்க்காதலி கமலவல்லி பரமபதம் சேர்ந்தார். அத்துடன் அவர் இல்வாழ்க்கையே இருண்டுபோய் விட்டது. அப்பால் இரண்டு வருஷங்களுக்குப் பின் அவரது தாயாரின் வேண்டுகோளுக் கிணங்கி இரண்டாவது விவாகம் செய்துகொண்டார். ஆனால் இரண்டாவதாக வந்த மனைவி அவரது குணங்களுக்கும், காரியாதிகளுக்கும் முற்றிலும் மாறுபாடானவராதலால், அவருக்கு "வீட்டடிக்கு வேம்படிமேல்" என்று தோன்றும்படி செய்ததோடு, தன் மனைவியின் செயல்களே அவருக்கு உண்மையில் உலக அனுபவங்களைச் சித்திரித்து உலகத்திற்கு எடுத்துக் காட்டக் கூடிய அபார சக்தியைக் கொடுத்தது.

சில வருஷங்களுக்குப்பின் சென்னை ஸ்ரீ இராஜகோபால் முதலியாரவர்கள் ஸ்ரீ நாயுடுகாரை, தான் ஒரு பத்திரிகை நடத்த விரும்புவதாகவும் அதற்கு ஆசிரியராயிருந்து நடத்தும்படியும் அதற்காக வரும்படியும் கேட்டுக் கொண்டார். அவ்வாறே வந்து பேசி முடிவுசெய்துகொண்டு "ஆனந்தகுண போதினி" என்னும் பத்திரிகை நடத்திவந்தார். அதுவரை நான் எழுதியஇராஜாம்பாள்,சந்திரகாந்தா, மோஹனசுந்தரம் ஆகிய நாவல்களையும் வாசித்துப் பார்த்த அவர் அப்போதுதான் என்னைப் பார்க்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சென்னை மௌண்ட் ரோட்டிலுள்ள எனது வியாபார ஸ்தலத்திற்கு வந்தார். சாதாரணமாய் வியாபார ஸ்தலங்களில் சொந்தக்காரர் தனிப்பட்ட உள் இடத்தில் இருப்பது வழக்கமாதலாலும், அவ்வழக்கத்திற்கு விரோதமாக தென் பக்கத்திலிருந்தும் கீழ்டக்கத்திலிருந்தும் உள்ளே பிரவேசிக்கும் 2 வாசல்களுக்கு மத்தியில் நான்கு பக்கங்களிலும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்தில் நான் ஒரு ஜிப்பாப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்ததாலும், எனது குமாஸ்தாக்கள் பட்டு கோட்டு, சரிகை தலைகுட்டையுடன், உள்ளே உட்கார்ந்திருந்ததாலும், ஸ்ரீநாயுடுகாரு நேராக தலைமை குமாஸ்தாவிடம் சென்று எனக்கு எழுதிக்கொண்டு வந்திருந்த காகிதத்தைக் கொடுத்தார்கள். அவர் என்னைக் காட்டவும் அதிக ஆச்சர்யத்துடனும், நான் எனத் தெரிந்து கொள்ளாது என்னைக் கடந்து சென்று ஏமாற்றமடைந்ததற்காக வருத்தத்தையும் காட்டும் முகத்துடனும், என்னிடம் வந்து காகிதத்தை நீட்டினார்கள். அவர்களைக் கண்டது முதலே அவர் உண்மையாளரென்றும் மனதில் தோன்றுவதை மறைக்க முடியாத சுபாவமுடையவரென்றும் என் மனதில் பட்டதால் அவர்களை என் சமீபத்தில் உள்ள நாற்காலியில் அமரும்படிசெய்த பின்னரே கடிதத்தை கையில் வாங்கி வாசித்தேன். நான் பிரஜானுகூலன் பத்திரிகையை பலமுறை வாசித்திருந்ததால் அவ்வளவு

உலக அனுபவங்களை உருட்டி உலகிற்குக் கொடுக்கும் சக்தி இவ்வளவு குறைந்த வயதில் இவர் எப்படி அடைந்தார் என்று ஆச்சர்யமடைந்ததோடு அவரைக் கேட்கவும் செய்தேன். வீணில் வளர்ப்பானேன்? அந்த முதல் சந்திப்பிலேயே இருவர் மனமும் ஒன்றுபட்டதென்றே சொல்லவேண்டும். என் வண்டியில் அவரை அழைத்துச்சென்று ஸ்ரீ இராஜகோபால் முதலியாரது வீட்டிலிருந்த அவரது பெட்டி படுக்கை முதலியவற்றை எடுத்துக் கொண்டு என் இருப்பிடத்திற்கு அழைத்து வந்தேன். அதுமுதல் அவர் இறக்கும் வரையில் சென்னைக்கு வரும்போதெல்லாம் நேராக அவர்கள் சொந்த வீட்டிற்கு வருவதுபோல் வருவார்களேயல்லாது வேறெங்கும் சென்றதில்லை. எனக்கு அறிமுகமானவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்களிருந்தாலும், கைவிரல்களில் எண்ணிவிடக்கூடிய எனது சில நண்பர்களில் அவர் ஒருவர் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒருநாள் அவரது 2-வது தார ஸ்திரி மாமியாரிடம் சண்டைபோட்டு விட்டு மாமியார் இனி அங்கிருப்பதாகில் தான் அங்கிருக்க முடியாதென முறண்டவே ஸ்ரீநாயுடு தன் தாயாரை அனுப்ப முடியாதென்று முடிவாகச் சொல்லிவிடவே தான் தன் தாயார் வீட்டிற்குச் சென்றுவிட்டாள். சில மாதங்கள் பிடிவாதமாய் அங்கேயே இருந்ததால் ஸ்ரீநாயுடுகாரின் பந்துக்களில் ஒருவர் அவரை நீலகிரிக்கு அழைத்துப்போய் அவருக்கு மூன்றாவது விவாகம் செய்வதாக நிச்சயித்து முகூர்த்தநாள் குறிப்பிட்டு, முகூர்த்தப் பத்திரிகையும் எழுதிவிட்டு இவ்விஷயத்தை எனக்கு எழுதினார்கள். அதற்கு பதிலாக "முதல் விவாகம் 'தாரம்', 2-வது 'பாரம்', 3-வது 'வாரம்'" என்பது உலக அனுபவம்; இதை சிந்தித்துப் பார்த்து தங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். எனக்கு சம்மதமில்லை" என்று எழுதிவிட்டேன். (இதை வாசிக்கும் 3, 4, 5-வது தாரங்கள் விவாகம் செய்துகொண்ட கணவன்கள் என்மேல் கோபித்துக்கொள்ள வேண்டாம். அது நான் என் உண்மை நண்பருக்கு எழுதியதேயன்றி உங்களுக்குச் சொல்ல வரவில்லை.) அவர் என் காகிதத்தை குரு வாக்காகக்கொண்டு எப்படித் தப்பித்து வந்தாரோ தெரியாது. ஆனால் அவ் விவாகம் நின்றுவிட்டது.

அவர் ஆசிரியரா யிருந்து நடத்திய ஆனந்தகுணபோதினி பத்திராதிபருக்கும், ஆனந்தபோதினி பத்திராதிபருக்கும், ஏற்பட்ட பேரைப்பற்றிய தகராறுகள் பல கோர்ட்டுகள் சென்று ஆனந்தகுணபோதினியின் அதிபருக்கு பிரதிகூலமாய் முடியவே அவருக்குச் செலவான அபார கோர்ட் செலவுடன் எதிரியின் எல்லா கோர்ட் செலவுகளும் கொடுக்கும்படி தீர்ப்பானதோடு பேரும் மாற்றும்படி தீர்ப்பானதில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விடவே, இராஜகோபால் முதலியார் மேற்படி பத்திரிகையை மதுரை ஸ்ரீ. ஈ. மா. கோபால கிருஷ்ணக் கோனாரவர்களுக்கு விற்றுவிடவே அத்துடன் ஸ்ரீநாயுடுவின் ஆசிரியர் வேலையும் பாதிக்கப்பட்டு சில ஆண்டுகளுக்குப் பின் வேலையைவிட்டு விலகும்படியும் நேரிட்டுவிட்டது. பிறகு பத்திரிகையும் க்ஷீணமடைந்து நின்றுவிட்டது. இந்த அதிர்ச்சியின் வியாகூலமே அவரை மரணக் குழியின் சமீபம் இழுத்துச் சென்றதெனலாம். அப்பால் "விநோதன்" பத்திரிகையில் கதைகள் எழுதலானார். சுதேச மித்திரன் வாரப் பதிப்பில் "அனுபவ விநோதங்கள்" எழுதலானார்.

அவர் எவ்வளவு நோய்வாய்ப்பட்டாலும், எவ்வளவு கஷ்டங்கள், மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் அவர் முதலில் ஆரம்பித்த பிரஜானுகூலன் பத்திரிகையை மட்டும் விடாது தொடர்ச்சியாய் நடத்திவந்ததால் அத

னுடைய 25-ம் ஆண்டில் பிரஜானுகூலன் "வெள்ளி விழா", சைதாப்பேட்டை ஜெகன்னாதபாக் தோட்டத்தில் 1932-ம்ஞு வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் வெள்ளி விழாவுக்குப் பின் ஒரே ஒரு பிரதிதான் வெளிவந்து, பின் அவர் கடும் நோய்வாய்ப்பட்டதால் நின்றுவிட்டது. அதற்குமுன் மூன்று தடவைகளில் நோய்வாய்ப்பட்டபோதெல்லாம் இதர மருந்துகளால் குணமாகாது, என்னிடம் வந்து குணமடைந்து. சென்ற மருந்துகள், பலமுறை கொடுத்தும் குணமாகாததாலும் 3-வது முறையே மீண்டும் அவ் வியாதி வரின் ஆபத்தாய்தான் முடியுமென்று நான் முன் சொன்னதை நினைத்தும் மற்றவர்களிடம் வைத்தியம் செய்துகொள்ள மறுத்தும் சென்னை வந்தது அதுவே கடைசிமுறை யெனச் சொல்லி ஸ்ரீரங்கநாதர் சன்னிதியிலேயே உயிர் நீக்கவேண்டுமென்று சொல்லிச் சென்றார். சென்ற சில தினங்களில் தனக்கு அந்தியகாலம் வந்துவிட்டதெனத் தந்தி கொடுத்தார். உடனே நான் ஸ்ரீரங்கம் சென்றேன். தனது பிள்ளைகளைக் காப்பாற்றும் பொறுப்பு என்னுடையதே எனச் சொல்லி தனது காரியாதிகளை என்னிடம் ஒப்புவித்தார்.

அச் சமயத்தில் ஒரு நாட்டுக் கோட்டைச் செட்டியார் ஒரு பத்திரிகை நடத்தவேண்டுமென்றும் அதற்கு அவர்களை ஆசிரியரா யிருக்கும்படிப் பேசி முடிவுசெய்ய வந்ததாகவும் தெரிவித்தார். அதுவரை மூர்ச்சையுற்றிருந்த அவர் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் சட்டென எழுந்து உட்கார்ந்து "தமிழன்பன்" என பேர் கொடுத்து நடத்துவோம் என்றதும் மீண்டும் மூர்ச்சையாய்விட்டார். என்னே, அவரது பத்திரிகாபிமானம்! மறுநாள் மாலை 4 மணிக்கு அதாவது 1935-ம்ஞு ஆவணிமீ தனது வயதுசென்ற தாயாரையும், பத்தினியையும், மூன்று குமாரர்களையும், இரண்டு புத்திரிகளையும், மற்றும் பல நண்பர்களையும் விட்டு ஸ்ரீரங்கர் பதம் சேர்ந்தார். அவர் ஆத்மா சாந்தியடையுமாக.

அவரது அரிய குணங்கள்

தெய்வபக்தியிற் சிறந்தவர் சத்தியமே பத்தியமாகக் கொண்டவர். தன்னம்பிக்கையுடையவர், நண்பர்களிடம் விசுவாசமுள்ளவர், புத்தகங்களை இரவல் கேட்பதை வெறுப்பவர். தனக்கு காது கேட்காமலிருந்தது ஒரு வரப் பிரசாதமென்றும் அதனால்தான் பக்கத்தில் பேசுவது கேட்காமல் தன் வேலைகளை இடைஞ்சலின்றி நடத்த சாத்யமாயிற்றென்றும் அடிக்கடி சொல்வார். அவரது நண்பர்களில் என்னையும், ஸ்ரீ. வை. மு. கோதைநாயகி அம்மையாரையும் அவரது குடும்பத்தாரையும், பண்டித இராஜமையரையும், கூத்தாநெல்லூர் ஆதம் முகம்மது இப்ராஹீம் சாயபு அவர்களையும் முக்கியஸ்தரெனலாம். அவர் பூத உடல் மறைந்ததேயன்றி அவரது புகழுடம்பு என்றும் நிற்குமென்றே நம்புகிறேன்.

நாயுடுகாரு சிரித்த முகத்துடன் சுதந்திர பாவத்துடன் எமது குடிசைக்கு வருவார். உப்பில்லாக் கூழையும் தேவாம்ருதமாகப் பருகி இன்புற்று அனுபவக் களஞ்சியமான விஷயங்களில் எங்களையும் எங்கள் சிநேகிதர்களையும் குதூகலிக்கச் செய்வார். பிரிந்து போகும்போது ஒரு சொட்டுக் கண்ணீருடன் பிரிவார். என்னே அன்பு! என்னே உயர்ந்த உத்தம குணம்! அந்தோ! நினைப்பதற்குள் அவரது வாழ்க்கை விளக்கணைந்துவிட்டது, பத்திரிகை யுலகின் துர்ப்பாக்யமல்லவா? வை. மு. கோ.

திரிசிரபுரம் ஸ்ரீ. எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு

ஸ்ரீமதி ஸாவித்திரி ராஜன், பி. ஏ.

ஷெல்டரும் குப்பிப்பாட்டியும்

குப்புப்பாட்டி, கோவிலிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தாள். சங்கு ஊதிவிட்டது. "அடே! ஜகதீசா! என் அப்பனே! நான் வீடுபோய் சேர்ந்துடரேண்டாப்பா, சித்த இருடா;" என்று புலம்பிக்கொண்டு விரு விரு என்று நடந்தாள் பாட்டி. அதற்குள்ளே ஸைகிளில் ஒரு ஏ. ஆர். பீ. வார்டன் வந்து "நில்லு. பாட்டிம்மா! உள்ளேபோ!" என்று பிடித்து பாட்டியை அந்த தெருவில் உள்ள ஷெல்டரிலே தள்ளிவிட்டான்.

"அடேயப்பா!...நான் ஆத்துக்கு இதோ போயிடரேண்டாப்பா. என் பிள்ளை இருக்கான். கடைசீ காலத்திலே அவன் காலண்டேபோய் பிராணனைவிடத் தடுக்காதேடாப்பா! உனக்கு புண்ணியமா போறது!" என்று கெஞ்சினாள் பாட்டி. ஆனால் அதற்குள் பாட்டிக்கு பின்னால் ஒரு புல்லுக் கட்டுடன்கூடிய புல்லுக்காரியையும், அவள்பின் ஒரு நாவிதனையும், இதே ஷெல்டருக்குள் புரட்டித் தள்ளிவிட்டு, விஸில் அடித்துக்கொண்டு மேலே சென்றான் வார்டன். தடதடவென்று பின்னும் சிலர் ஷெல்டரில் புகுந்தார்கள்.

"சிவ சிவா!" என்றாள் குப்புப்பாட்டி.

"ஏம்பாட்டிம்மா! ஊட்டுக்குப்போய் முளிகிடு!" என்று சொல்லிக் கொண்டே பாட்டியருகில் வந்தாள் புல்லுக்காரி. அதற்குள் நாவிதன் "பாட்டிம்மா! ஆபத்து காலத்திலே இதெல்லாம் பாத்தா ஆகுமா? 'சாதி சாதி'ன்னு ஒதுங்கினத்தினாலே அல்லா இவ்வளவு வந்துடிச்சு!" என்று ஏசியவாறு உட்கார்ந்தான்.

அந்த ஷெல்டரில் அடைபட்டிருந்தவர்களை சற்று கண்ணைக்கூர்ந்து பார்க்கலானாள் குப்புப்பாட்டி. மிட்டாய் தட்டுடன் ஒரு லாலா; குடுமியை உதறிவிட்டுக்கொண்டு மேலே அங்கவஸ்திரமும் அரையில் பஞ்ச கச்சமும் தரித்த ஒரு வயதான பிராம்மணன்; இரண்டு மூன்று பள்ளிக்கூடப் பிள்ளைகள்; வெற்றிலை கூடையுடன் ஒரு சாயபு; பால் ஜோடுதவலையுடன் ஒரு பால்காரன்; ஒரு வாத்தியார்; ஒரு மேளக்காரன்; இவ்வளவு பெயர்களும் அந்த ஷெல்டரில் பதுங்கியவர்கள்.

லாலா பீடியைப்பிடித்துக்கொண்டு "தூ," "தூ," வென்று காரித் துப்பினான். பாட்டி நாவிதனைப் பார்த்து "ராம ராம" என்று தலையில் போட்டுக்கொண்டாள். அதற்குள் புல்லுக்காரி தன் பையை அவிழ்த்து புகையிலையை போடத்துவக்கினாள். "உட்காரு பாட்டிம்மா! ஏன் சும்மா நின்னுகிட்டு கிடக்கரே? இன்னமே வீடு எங்கே வீடு?" என்றாள். "அடி பாவி! அப்படி சொல்லாதேடீ! என் பிள்ளை இருக்காண்டி. அந்த அடுமாண்டுபோற ஜப்பான்காரன் ஏண்டீ என் வயத்தெரிச்சலை கொட்டணும்! என் பிள்ளைக்கு ஒரு கால்கட்டு கட்டி வைச்சுட்டா அப்பறம்

எந்த குண்டு விழுந்தாலும் தேவலை என் தலைலே! ஈசனே! ஆபத்பாந்தவா அனாதரக்ஷகா!" என்று அழ ஆரம்பித்தாள் பாட்டி.

சற்றுநேரம் கழிந்தது. "நீங்க வடமாளோ!" என்று அந்த குடுமி பிராம்மணரைக் கேட்டாள் பாட்டி. அவர் லாலாவின் பீடி புகையைச் சகிக்கமாட்டாமல் முகத்தை ஒரு மூலையில் திருப்பிக்கொண்டிருந்தார்.

"ஓய்! உங்களைத்தான் கேட்டேன். வடமாதானேன்னு" என்றாள் பாட்டி மறுபடியும்.

"உம்" என்று உறுமினார் பிராமணன்,

"ஏன்? அஞ்சுபொண்ணு வாக்கப்பட நிக்கறாபலே இருக்கு மூஞ்சி?" என்று விடாமுண்டனாக கேட்டாள் குப்புப்பாட்டி. வெடுக்கென முகத்தைத் திருப்பினார் பிராமணர். "உனக்கு எப்படி பாட்டி தெரிஞ்சுது?" என்றாரே பார்க்கலாம்...

"எழுபது வயஸா ஆகி இதுகூடத் தெரியாட்டா..." என்று இழுத்தார்ப்போல் பாட்டி "என் பிள்ளையாண்டானுக்கு கெவர்மெண்டிலே தான் வேலை. 40 ரூ. சம்பளம்" என்றாள்.

"பாட்டி! நீங்க எங்கே இருக்கிறது?" என்றார் பிராமணன்.

"பாட்டிம்மா கன்னேடி சந்துலே அல்ல இருக்கிறது. நம்பிக்கு தெரியும். அடுத்த வீட்டுக்கு நம்பிதான் வெத்திலை போடறது. முகூர்த்தம் எப்போ பாட்டிம்மா? நம்மகிட்ட சொல்லு நேர்த்தியான வெத்லெக்கி" என்றான் இவ்வளவு நேரம் சும்மா இருந்த சாயபு.

"அட! உன் வாயைபாரு வாயை! உன் வாக்கு பலிக்கட்டுமே—நீயே வரே வெத்திலைக்கி...என்றாள் பாட்டி.

"என் ஐயரே சும்மா நிக்கரே? சட்புட்னு முடிச்சுடு. வலுவிலே வந்திருக்கு பாட்டிம்மா... நான் வரேன் பிள்ளைக்கு மங்களம் செய்ய"... என்று எழுந்துவிட்டான் நாவிதன்.

பாட்டியம்மா! சங்கு ஊதினாலும் ஊதினான். ஒம் பிள்ளைக்கு கண்ணாளம் நிச்சயமாயிடுத்து, எங்க ஊட்டுக்காரு கண்ணால பந்தல்போடுவாரு. வாயமரம் கட்டுவாரு. மண்டே வளக்குகூட சப்ளை பண்ணுவாறு. ஒரு பேச்சு சொல்விடு. போதும்,அவரெ அனுப்பட்டுமா...என்றாள் புல்லுக்காரி. மூலையில் முடங்கிக்கிடந்த ஒரு கிழவன், "ஏதோ கல்யாணப்பேச்சு பேசுராப்பலே இருக்கு...எனக்கு புரோகிதத்தில் நல்ல கைராசி என்று பெயர். நான் இப்போதே முகூர்த்தம் பாத்துடரேனே என்று தட்டுத்தடமாறிய வாறு பாட்டியருகில் வந்தார்.

"எம் பாட்டியம்மா! கன்னேடி சந்துலே 60-வதாம் நம்பர் வீட்டிலே சரஸ்வதிக்கு நான் பாட்டு சொல்லித்தரேனே! உங்களுக்குத் தெரியாதா! மேளத்திற்கு என்னெ மறக்காதே...பாட்டியம்மாள் யாருக்குப் பதில் சொல்வதென்றே தெரியவில்லை.

"என் பெண் நன்னா வீட்டுவேலை செய்வள்"

"பின்னே என்ன குறைச்சல்!"

சங்கு ஊதியது. இந்த தடவை அபாயம் நீங்கிய அறிவிப்பு. எல்லோரும் வெளியே ஒவ்வொருவராக வந்தார்கள். "அடேயப்பா! குண்டு எங்கேடா விழுந்துது? என்றாள் குப்புப் பாட்டி.

ஏ. ஆர். பி. வார்டன் சிரித்தான். "இல்லை. என் பிள்ளையாண்டானுக்கு கலியாணம் பேசிக்கொண்டு இருந்தேன். காது கேட்கவில்லை. அதுதான் கேட்டேன்," என்று சொல்லி பிராமணருடன் கன்னேடி சந்துக்குள் நடந்தாள் குப்புப்பாட்டி.

ஸ்ரீமான்: ராவ்பகதூர் "கோனஷ்டை" பி. ஏ., பி. எல்.

ஸம்ஸ்க்ருதம் கஷ்டமா, இல்லையா?



ஸம்ஸ்க்ருதத்தை படிப்பதென்றால், ஜலத்தை மேட்டில் ஏறவைக்கிற மாதிரியே எனக்கு. ஆகையால்தான், எனக்குத் துணையாக சிலர் இருக்க மாட்டார்களா என்கிற வாஞ்சையின்மேல் அந்தக் கேள்வி. இருந்தாலும் சில சுலோகங்களைப் படிக்கும்பொழுது:—

ஒருவன் தன்னுடைய காதலிக்கு எழுதுகிறான்: "இனிமேல், நீங்கள் என்னைக் குறித்து எண்ணவேண்டுமே யொழிய, நான் உங்களைக் குறித்து நினைக்கப் போவதில்லை. நினைப்பது மனதினுடைய கார்யமல்லவா? நீங்கள்தான் என் மனதைப் பிடித்துக்கொண்டு விட்டீர்களே? நான் என்ன செய்வேன்?"

ஸ்மர்தவ்யோஹம் த்வயா காந்தே
 ந ஸ்மரிஷ்யாம்யஹம் தவ||
ஸ்மரணம் சேதஸோ தர்மஃ
 தச்சேதோ பவதா ஹ்ருதம்||

அவளிடத்தில் தன்னுடைய மனதை முற்றிலும் இழந்ததைத் தெரிவித்து, அவளுடைய காதலை இதைக் காட்டிலும் அழகாய்க் கோரவு முடியுமா?

மற்றொருவன் சமத்காரமாய்ப் புலம்புகிறான்: "மனது என்பது ஆண்பாலல்ல, உயர்திணையல்ல, அஃறிணை ஒன்றன்பால் தானே என்ற நம்பிக்கையின்மேல், என்னுடைய மனதை 'அவளிடம் அனுப்பினேன். ஆனால் அது அவளை விட்டுப் பிரியமாட்டேனென்கிறது. என்னிடம் திரும்பி வரமாட்டேனென்கிறது. அடாடா! இலக்கணக்காரரை நம்பி யல்லவா மோசம் போனேன்!"

நபும்ஸகம் இதி ஞாத்வா தாம் ப்ரதி ப்ரஹிதம் மநஃ||
தத்து தத்ரைவ ரமதே ஹதாஃ பாணிநா வயம்||

அவனுடைய சாதுர்யத்தை ரசித்தாவது, அவனுடைய மனதிற்குப் பதிலாகத் தன்னுடைய மனதை 'அவள்' பரிவர்த்தனையாகக் கொடுத்தாள் என்று நாம் நம்புவோம்.

ஒரு குழந்தைக்கு நடக்கத் தெரிந்தவுடன், அடுத்தபடியாக, துள்ளிக் குதிக்க ஆசை தானாகவே தோன்றுகிறது. இதே மாதிரி ஆசை கவனம் செய்யத் தெரிந்தவர்களுக்கு உண்டானவுடன், ஒரு சிநேகிதரை அழைத்து, "நீர் எதையாவது சொல்லும். வாயில் வருகிறதைச் சொல்லும். அதை அப்படியே உபயோகித்து நாங்கள் பாடுகிறோம்" என்று வீரியம் பேசுவார் கள்போலிருக்கிறது. குறும்புக்காரச் சிநேகிதர், இவர்களுடைய கொட்டத்தை அடக்குவதற்காக, அர்த்தமில்லாத எழுத்துக்களாகப் பொறுக்கிக் கொடுப்பார். உதாரணம், டட ட்ட ட்ட், டடட்டட்ட் என்றாவது, குளுகுக் குளு, குக்குளு என்றாவது சொல்லுவார். சிநேகிதர் ஒரு குறும்புக்காரர் என்று நாம் எண்ணுவது ஒருவேளை தப்பாயிருக்கலாம். அவர் வெறும் தத்து வாயனா யிருக்கலாம்; அல்லது, மலை ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு, பாவம் வாய் உதறிக்கொண்டிருக்கலாம்; அல்லது அவர் மிருதங்க வித்வானா யிருக்கலாம். அது எப்படியோ, அவருடைய வாயிலிருந்து மேற்சொன்ன அக்ஷரங்

கள் கிளம்பியது போதும், நம்முடைய கவநப் பித்தர்களுக்கு. உடனே தங்கள் தங்கள் மனோபாவத்தின் பிரகாரம், சுலோகத்தைப் பூர்த்திசெய்து விடுவார்கள்.

ஒருவர் செல்லுகிறார்: "ராஜாவினுடைய அபிஷேகத்திற்காக, (வேலைக்காரிகள்) தங்கக் குடங்களில் தண்ணீர் கொண்டு வருகையில், ஒரு மதம்பிடித்த சிறுக்கி தன்னுடைய குடத்தை நழுவவிடவே, அது டடட்ட ட்ட், டடட்டட்ட் என்ற ஓசையுடன் படிகளின்மேல் உருண்டு ஓடுகிறது".

ராஜாபிஷேகே மத விஹ்வலாயா:
ஹஸ்தாத் ச்யுதோ ஹேமகடஸ்தருண்யா: ||
ஸோபாந மார்கேஷு கரோதி சப்தம்
டடட்டடட்ட், டடட்டட்ட் ||

இவர் ஒரு நகரவாசி போலும். கிராமவாசி ஒருவர் சொல்லுகிறார். "நதியின் ஓரத்தில் உள்ள நாவல் மரங்களின்மேல் குரங்குகள் ஏறிக் கிளைகளைக் குலுக்கவே, முதிர்ந்த பழங்களில் சில, குளுகுக்குளுகுக்குளு என்கிற சப்தத்துடன் ஜலத்தில் விழுகின்றன"

ஜம்பூ பலாநி பக்வாநி பதந்தி விமலே ஜலே ||
கபிகம்பித சாகாப்ய: குளுகுக்குளு குக்குளு ||

இதன்மேல் மற்றொரு சிநேகிதருக்கு ஆத்திரம் வந்துவிடும். அவருக்குத் தத்துவாயில்லை, மலை ஜுரமில்லை; மிருதங்கத்வேஷி. அசல் குறும்புக்காரர். அவர், தம்பட்டம் அடிக்கிற சப்தங்கள் மாதிரி இல்லாமல், அர்த்தம் உள்ள வார்த்தைகளையே, அர்த்தத்தைக் கொள்ளாதபடி கோத்துக் காண்பிப்பார். உதாரணம், "தயிர் இந்திரனுக்கு துர்லபம்". இப்படியே இந்த வார்த்தைகளை உபயோகித்து ஒரு பாட்டைப் பாடுங்கள், என்பார். எல்லா போகங்களையும் அனுபவிப்பதாக ஜகப் பிரசித்தியான தேவேந்திரனுக்குத் தயிர் கிடைக்காது என்று எப்படிச் சொல்லுகிறது? இருந்தாலும், இந்த நிபந்தனைப் பிரகாரமே செய்யப்பட்ட சுலோகங்கள் ஐந்தாறு இருக்கின்றன. ஒரு உதாரணம் மாத்திரம் கொடுக்கிறேன்: "ஆகாரத்திற்குப் பின் அருந்த வேண்டியது என்ன? ஜயந்தன் யாருக்குப் பிள்ளையாகப் பிறந்தான்? விஷ்ணுவின் பாதம் எவ்விதமென்று சொல்லப்படுகிறது? தயிர்; இந்திரனுக்கு; துர்லபம்."

போஜநாந்தே ச கிம்பேயம்
ஜயந்த: கஸ்ய வை ஸுத: ||
கதம் விஷ்ணு பதம் ப்ரோக்தம்
தக்ரம் பக்ரஸ்ய துர்லபம் ||

ஆக முதல் மூன்று வரிகளில் மூன்று வினாக்கள். நாலாவது வரியில், வரிசைக் கிரமமாக, மூன்று விடைகள்.

துள்ளிக் குதிக்கும் குழந்தைக்கு, தேகமும் மனோசக்தியும் வளர வளர, அழகான நாட்டியம் செய்யும் திறமை ஏற்படுகிறது. அதேமாதிரி, கவநம் செய்வோர்க்கும், அவருடைய கல்வி மலர மலர, எந்த விஷயத்தையும் மனதைக் கவரும் வண்ணம், வெளிப்படுத்துவதில் ஆசையும் சக்தியும் உண்டாகின்றன.

ஒரு நாயகன், பிறந்தகத்திற்குப் போயிருக்கும் தன்னுடைய பார்யைக்கு எழுத உட்காருகிறான். அவனுடைய விஷயமெல்லாம், "ஊரில் மழை பெய்யத் துடங்கிவிட்டது. உன்னை விட்டுப் பிரிந்து நான் கஷ்டப்

படுகிறேன். சீக்கிரம் வந்துவிடு" என்பதுதான். இதே விஷயத்தை, உலகம் பிறந்தநாள் முதல் எத்தனையோ லக்ஷம் புருஷர்கள் எழுதியிருப்பார்கள். நம்முடைய நாயகன் அதைத் தெரிவிக்கும் விதம் இது :

"உன்னுடைய கண்ணுக்குச் சமானமான காந்தியைப் பெற்ற நீலோத் பலங்கள், தடாகத்தில் (ஜலம் ஏறியதால்) அமிழ்ந்துவிட்டன. ஹே, ப்ரியே! உன்னுடைய முகம் மாதிரி தானும் தோன்றவேண்டும் என்று ஆசைப்படும் சந்திரன், மேகத்தினால் மறைபட்டுவிட்டான். உன் மாதிரியே நடக்கும் ராஜஹம்ஸங்கள் (மழை காலத்தில் அவைகளுடைய வழக்கப்படி, சுய ஸ்தானமாகிய மானஸ தடாகத்தைத் தேடி) பறந்துபோய்விட்டன. தெய் வத்தின் கொடூரத்தைப் பார். (உன்னை நான் நேரில் காணமுடியாத சமயத்தில்) உன் மாதிரி இருக்கக்கூடிய மற்ற எதையாவது நான் கண்டு களிப்பதைக்கூட அது சகிக்கவில்லையே!"

> யத் த்வந்நேத்ர ஸமாந காந்தி ஸலிலே மக்நம் ததிந்தீவரம்
> மேகை ரந்தரிதஃ ப்ரியே தவமுகச்சாயாநு காரீ சசீ ||
> யேபித்வத் கமநாநுகாரி கதயஸ் தே ராஜ ஹம்ஸா கதாஃ
> த்வத் ஸாத்ருச்ய விநோத மாத்ரமபிமே தைவேந நக்ஷம்யதே ||

இதற்கு அவள் என்ன பதில் எழுதினாள் ? இம்மாதிரி எல்லாம் எளிய நடையில் சுவை ச்லோகங்களில் பதினாயிரத்திற்கு அதிகம் அடங்கிய 'ஸுபாஷித ரத்ந பாண்டாகாரம்' என்கிற களஞ்சியத்தில்கூட அவள் எழுதிய பதிலைக் காணோம். 'ஸ்த்ரீணாம் த்விகுண ஆஹாரோ' என்று துடங்கும் நீதிப்படி, இவனைப்போல் அவளுக்கு நாலுபங்கு யுக்தி இருந் திருக்கவேண்டுமே? ஏற்ற பதில் அளிக்காமல் இருந்திருக்கமாட்டாள். ஒருவேளை அவள் ப்ராக்ருதத்தில் எழுதியிருந்தாலும், நம்முடைய பேரில் கருணைபுரிந்து, எவராவது ஸம்ஸ்க்ருதத்தில் மொழி பெயர்த்திருக்க லாகாதாவென்று தோன்றுகிறது.

இவ்விதம் கவந சக்தி வாய்ந்தவர்களின் வாயில் புதிர்களும் விடுகதை களும் சர்வ சாதாரணம். அவற்றில் சில, 'காயும் கோணற்காய், கொள் ளடா மைத்துனா, கதையும் விடுவித்தேன், சொல்லடா மைத்துனா' மாதிரி யில் அமைக்கப்பட்டவை. வேறு சில, கவிகள்தான் உண்டாக்கக் கூடியவை.

மல்லிநாதர் எழுதுகிறார் : ஓர் இளம்பெண், ஒரு பெட்டியில் ஏதோ வஸ்துவை வைத்து வேலைக்காரியிடம் கொடுத்து, தன்னுடைய காதல னுடைய வீட்டிற்கு அனுப்புகிறாள். அப்பொழுது, அவ்வஸ்துவிற்குக் கெடுதி நேர்ந்துவிட்டாலோ என்கிற பயத்தினால், அதைத் தடுக்கவெண்ணி, பெட்டியின்மேல் சில சித்திரங்களை எழுதுகிறாள். ஒரு பாம்பு, கௌரீ நாதன்; ஹநுமான், சம்பகப்பூ, இதுகளை எழுதுகிறாள். இதனுடைய தாத்பர்யம் என்னவாயிருக்கலாம் என்று, பெரியோர்களாகிய உங்களை, நான்தான், கவி, மல்லிநாதன் கேட்கிறேன்"

> காசித் பாலாரமண வஸதிம் ப்ரேஷயந்தீ கரண்டம்
> தாஸீ ஹஸ்தே ஸபயம் அலிகத் வ்யாளம் அஸ்யோபரிஷ்டாத் ||
> கௌரீ நாதம் பவநதநயம் சம்பகஞ்ச அத்ரபாவம்
> ப்ருச்சதி ஆர்யாந் ப்ரதி கதம் இதம் மல்லி நாதஃ கவீந்த்ரஃ ||

பெட்டியில் பிரியத்துடன் அவள் அனுப்பியது தன்னுடைய நந்த வனத்தில் அப்பொழுது மலர்ந்த சில புஷ்பங்கள். அவை காற்றால் வாடக் கூடும். ஆனால் காற்றை சாப்பிடுகிற பாம்பைக் கண்டால், காற்று அணுகாது

மன்மதன், அவைகளை தன்னுடைய பாணங்களாக உபயோகிக்க எடுத்துக் கொள்ளுவான். அவனை வெருட்டுவதற்காகப் பரமசிவன். சூர்யன் பூக்களை வதங்கச் செய்வான். ஆனால், ஹநுமான் தான் பிறந்த தினமே, சூர்யனை விழுங்க எத்தனித்ததால், ஹநுமானுடைய உருவத்தின் சமீபத்திலேயே, சூர்யன் வரத் துணியமாட்டான். எல்லா புஷ்பங்களிடத்திலும் தேனுக்காக மொய்க்கும் வண்டுகள், சம்பகப்பூவினிடம் அணுகாவென்பது பிரசித்தம். ஆகையினால் இந்த நான்கு சித்திரங்களும் வரையப்பட்டன. இந்த ச்லோகத்தில் பதங்கள் அமைந்திருக்கும் அழகை ஒரு மொழிபெயர்ப்பிலிருந்து ஊகிக்க முடியாது.

எழுதும் விதத்தில் உள்ள லாவண்யமும் கவுரவமும் ஒரு புறம் நிற்க, அர்த்தத்தின் உண்மையை மாத்திரம் கவனித்தால்,விவரிக்கப்படும் விஷயம், ராஜ நீதியோ, மனோ சாஸ்திரமோ, ப்ரக்ருதீ வர்ணனையோ, பக்தியோ, உலகநீதியோ, அது எதுவாயிருக்கட்டும், அதில், ஐந்து கண்டங்களிலுள்ளோர் யாவருக்கும், நாளது தேதிவரையில் கிடைத்திருக்கும் அநுபவத்தைப் பயன்படுத்தி, இந்த க்ஷணத்தில்தான் எழுதி வெளிவந்தவைபோல் காணப்படும் புராதன ச்லோகங்கள், வருஷக்கணக்காய்ப் படிப்பதற்குப் போதுமானவை இருக்கின்றன. இதற்குக் காரணம், உலகத்தில், நாளாவர்த்தியில், விஞ்ஞானம் விருத்தியடைந்திருக்கிறதே யொழிய, மனிதர்களும் அவர்களுடைய மனதும், ப்ரக்ருதியும் மாறவில்லையாகையால், அன்றுள்ள உண்மைதான் இன்றும் உண்மை.

இந்தப் பாட்டுகளை உண்டாக்கியவர்கள், கண்ணில் மையை இட்டுக் கொண்டு, உலகம் முழுவதும் ரோஜா வர்ணமாய்த்தானிருக்கிறது என்று சொல்லுபவர்களல்ல. உலகத்தின் கஷ்ட நிஷ்டூரங்களை நன்கு அறிந்தவர்கள்.

"தெய்வத்திற்குப் பலிவேண்டுமானால், ஒரு குதிரையைப் பலிகொடு என்று சொல்லுகிறதா? இல்லை. யானையைக் கேட்கிறதா? இல்லை. எப்பொழுதாவது ஒரு புலியைக் கேட்கிறதா? ஒருக்காலும் இல்லை. ஒரு ஆட்டுக்குட்டியைத்தான் பொறுக்குகிறது. தெய்வம்கூட இளைத்தவனைத்தான் கொல்லுகிறேன்" என்கிறது.

அச்வம் நைவ கஜம் நைவ வ்யாக்ரம் நைவச நைவச||
அஜாபுத்ரம் பலிம் தத்யாத் தேவோ துர்பல காதகः||

ஆனால் உலகம் இவ்வளவு கொடூரமாயிருக்கிறதே என்று, அதனால் அவர்கள் ஏங்கிப்போகவில்லை; மனோதைரியத்தை இழக்கவில்லை. எல்லாமே கெட்டது என்று சாதிக்கவில்லை. அழகையும் நன்மையையும் கண்டால், அவைகளை ரஸித்துப் பாடல். கஷ்டம் ஏற்பட்டாலோ, வருத்தத்தை மனதிற்குள்ளடக்கிக்கொண்டு, வாயில், அந்தக் கஷ்டத்தைக் குறித்தும் ஹாஸ்யமான ஒரு ச்லோகம். இதற்குமேலான மனிதத்தன்மை என்ன இருக்கிறது?

பெரிய உலகத்திற்குள் ஒரு சிறிய உலகமாகிய எழுத்தாளர் உலகத்தைக் குறித்து உள்ள இரண்டொரு ச்லோகங்களை மாத்திரம் இனி பார்ப்போம்.

அந்த நாட்களில், கவி எவ்வளவு நேர்த்தியாய் எழுதினால் என்ன? எழுதியதைக் கொண்டுபோய் ஒரு தனிகனிடத்தில் படித்துக் காண்பித்து, கையில் ஒரு நிஷ்கமோ, தினாரமோ கிடைத்தால்தானே மறுபடியும் எழுதுவதற்கு வேண்டிய உணவும் உற்சாகமும் கிடைக்கும். ஆனால் அத்தனிகனுக்குத் தன்னுடைய நாணயத்தை விட்டுப் பிரிய இஷ்டமில்லாத

போனால் என்ன செய்கிறது? ச்லோகத்தையோ கேட்டாய்விட்டது; கையைக் குழித்துக்கொண்டு நிற்கும் கவிக்கு என்ன சொல்லுகிறது?

"கொடுப்பதற்கு இஷ்டமில்லாதபோனால் என்ன பதில் சொல்ல வேண்டும்? சாயங்காலம் வா என்று சொல்லுகிறது. சாயங்காலம் வந்தவுடன், நாளைக்குக் காலையில் வா. பிறகு, சாயங்காலம் வா. பிறகு, காலையில் வா. இவ்விதம் மாற்றி மாற்றிச் சொல்லவேண்டியதுதானே!"

யஸ்ய கிஞ்சித் ந தாதவ்யம்
தஸ்ய தேயம் கிம் உத்தரம்||
அத்ய ஸாயம் புந: ப்ராத:
ஸாயம் ப்ராத: புந: புந: ||

இப்படிச் சுயானுபவத்தை எழுதிய கவி, நம்முடைய கண்ணிற்குமுன், கந்தல் வேஷ்டியும் அசட்டுச் சிரிப்புமாக, நிற்கிற மாதிரியே தோன்றுகிறதல்லவா?

இவர் போகட்டும். இவரைக் காட்டிலும் பரிதாபமான கவிகளும் உண்டு. ஏனென்றால் தேடிச்சென்ற தனவான் அடியோடு சுவையற்றவனாயிருந்தால் என்னசெய்கிறது? இதற்குமேல், தெய்வம்தான் கதி. ஒரு கவி பாடுகிறார்:

"ஓ பிரம்மனே! நான் செய்திருக்கும் பாவங்களுக்குத் தகுந்தபடி, வேறு எந்த தண்டனையானாலும், எது உசிதம் என்று உனக்குத் தோன்றுகிறதோ, அதை என் தலையில் எழுதிவிடு, நான் அதை அநுபவிக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் சுவை அறியாத ஒருவனிடம்போய் கவநத்தின் ரஸத்தை எடுத்துரைக்கும்படி மாத்திரம், என் தலையில் எழுதாதே! எழுதாதே! எழுதாதே!"

இதர பாப பலாநி யதேச்சயா
விலிகிதாநி ஸஹே சதுராநந||
அரஸி கேஷு கவித்வ நிவேதநம்
சிரஸி மா லிக மா லிக மா லிக.||

இந்த இரண்டிற்குள் முந்தின ச்லோகத்தை வேறொரு தனிகன் தன்னிடம் நடந்துகொண்டதைப் பரிகசித்துப்பாடினதாகச் சொல்லி, மற்றொரு தனிகனிடம் படித்துக் காண்பித்து, அதற்கு ஏதோ வெகுமதியும் கவி வாங்கியிருக்கலாம். ஆனால் இரண்டாவது ச்லோகத்தை எவனிடத்தில் படித்தாலும்; உடனே அவன் தன்னைக் குறித்து எழுதினதாகவே எண்ணி, பலத்த கோபம் கொள்ளுவான். ஆகையால், இதனுடைய கவி, ஏழாந்தடவை வெறும் கையுடன் வீட்டிற்குத் திரும்பிவந்தவுடன், தன்னுடைய துக்க சாந்திக்காகவே எழுதி, தன்னுடைய பார்யையிடம் மாத்திரம் படித்துக் காண்பித்திருக்கவேண்டும். அல்லது பிற்காலங்களில் வரப்போகிற நம்மை உத்தேசித்து நம்முடைய விநோதத்திற்காக எழுதியிருக்கவேண்டும்.

எப்படியாயிருந்தாலும் சரி. தனிகனும் தீமானும் அவரவர் 'வழியே போய்' நூற்றாண்டுகள் ஆய்விட்டன. இப்பொழுது எவரிடத்தில் நமக்கு நன்றியறிவு என்று கேட்டால், முக்கியமாய் தனிகனிடத்தில் என்று நான்

சொல்லுவேன். ஏனென்றால் அம்மாதிரி மனிதன் இல்லாதபோனால், இம்மாதிரி ச்லோகம் எழுதப்பட்டு நமக்குக் கிடைத்திருக்குமா?

பார்க்கப்போனால், தலையில் காணப்படும் கேள்வி, இரண்டு அர்த்தங்களுக்கு இடம் கொடுக்கிறது. ஸம்ஸ்ருதம் கஷ்டமாயில்லையா என்றால் அது படிப்பதற்குக் கடினமல்லவா என்றும் சொல்லலாம், இவைபோன்ற ச்லோகங்களை படிக்காமல் விட்டுவிடுவது பெரும் கஷ்டமல்லவா என்றும் எண்ணலாம்.



தாதா:—ஏண்டா! பயலே! அழுது அமக்களம் செய்து காலணா வாயிண்டு போனயே, என்னடா வாங்கித்தின்னே...

பேரன்:—இதோ பாரு தாதா ஒன் தொப்பைக்கு சரியா பெலூன் வாங்கிட்டேன்.

ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர்



"தீர்க்காயுஷ்மான்பவ! சிரஞ்சீவியாயிரு... சர்வமங்களம் உண்டாகட்டும்... தீர்க்கஸுமங்கலீபவ... மகராஜனாயிரு" என்றெல்லாம் மனிதர்களுக்கு வாழ்த்துக்களைக் கூறி ஆசீர்வதிக்கின்றதுபோல் தொழில்களுக்கும் ஏன் **"நீடூழிவாழ்க; சாசுவத புகழை அடைக"** என்று வாழ்த்துக்களைக் கூறக்கூடாது? என்ற ஒரு விசித்திரமான எண்ணம் அனேக சமயம் என் மனத்தில் உதயமாவதுண்டு. என் ஆப்த நண்பர்களிடம் அதைப்பற்றி நான் பேசுவதும் உண்டு. உலகத்தில் மனிதவர்க்கம் சர்வமங்களத்தையும் கோரி சுகமாக இருக்கவேண்டுமாயின் அவர்களுக்கு மிகவும் முக்யமான தொழில்களும் சிறந்து ஓங்கி தழைத்தால்தானே மனிதன் சந்தோஷத்தையும் லாபத்தையும் கீர்த்தியையும் அடையமுடியும்? மனிதனின் வாழ்க்கைச் சக்கரத்தைச் சந்தோஷகரமான பாதையில் செலுத்திக்கொண்டு போவதற்கு அனேக சாதனங்களிருக்கின்றன. அவைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு தொழில்களின் மீதே நிற்கின்றன. அத்தகைய பலவிதமான தொழிலிற் தற்காலம் மிகவும் உன்னத ஸ்தானத்திற்கு வந்து கொண்டிருக்கும் **சினிமாப் படத்தொழிலும்** முக்யமானதல்லவா!

அந்த அருமையான கலை நிறைந்த தொழில் செழித்தால் அதில் சம்மந்தப்பட்ட மனிதர்களின் சந்தோஷமும் செழிக்கின்றது. கீர்த்தியும் வளர்ந்து பலனும் அதிகரிக்கின்றது. இத்தகைய கலைத் தொழிலுக்கு **நீடூழிவாழ்க** என்று ஆசி கூறுவது மிகவும் பொருத்தமானதல்லவா!... ஆம்... மிகவும் பொருத்தமானது. இந்தப் படக்கலைமூலமாக சமூகத்திற்கும் தேசத்திற்கும், பல அரிய சேவைகளைச் செய்யலாம் என்பது உலகம் ஒப்புக்கொள்ளும் விஷயமாகும். சரியான ருசியும் உணர்ச்சியும் நீதியும் நிறைந்த கதையும் "நான் நடிகனல்ல... எனக்குக் கொடுத்துள்ள பாத்திரம்தான்"... என்கிற ஐக்ய மனோபாவம் பொருந்திய நடிகர்களும், 'நாம் வியாபாரமாகப் படம் பிடிக்கவில்லை. ஒரு உயர்ந்த லக்ஷியத்துடன் கூடிய சேவையைச் செய்கிறோம்' என்கிற மனோபாவத்துடன் கூடிய முதலாளிகளும், இதர சம்மந்தப்பட்ட ஏனைய தொழிலாளிகளும் கலைக்கும் கடமைக்கும் பாடுபடுவதையே முக்யமாக கங்கணங் கட்டிக்கொண்டு மேற்படித் தொழிலைச் செய்தால் கட்டாயம் சிறந்த சேவை செய்ததாக ஆவதில் சந்தேகம் உண்டா?

கலைகள் பலவற்றுள் சிற்பம், சித்திரம், நடனம், சங்கீதம் முதலிய நுட்பமான கலைகளை அரியகலைகள் என வகுத்துள்ளார் பெரியோர். ஆனால் இவ்வரிய கலைகள் அனைத்தும் ஒருங்கு சேர்ந்து அமைந்த அருங் கலையே சினிமா என்னும் இந்த விசித்திரக் கலையாகும். தற்காலம் இக்

கலைக்கு ஏற்பட்டிருக்கும் பெருத்ததோர் ஆதரவே இதற்கு போதிய அத்தாக்ஷியாகும்.

ஒரு காலத்தில் நடிகர் கோஷ்டியையே ஜனசமூகம் கேவலமாய் கருதியதுண்டு. ஆனால் தற்காலத்திலோ அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெருமையும் ஆதரவும் மற்ற எந்த வகுப்பினர்க்கும் இல்லை. பொருள் ஆதார நெருக்கடியான இக்காலத்திலும் இக்கலைக்கு ஆதரவு குறையவில்லை என்றால் ஜனசமூகத்திற்கு இக்கலையிலுள்ள ஆர்வத்தை சொல்ல வேண்டுமா?

ஆகையால், இக்கலை இன்னும் உயரிய நிலைமையை அடைய வேண்டின் முதலாளிகள், டைரக்டர்கள், நடிகர்கள் முதலிய இதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் இக்கலையின் அபிவிருத்தியையே முக்கிய நோக்கமாகக் கொண்டு ஒத்துழைத்தால் இவ்வரியகலை என்றென்றைக்கும் அழியாது சிரஞ்சீவியாய் வாழ்ந்து இதனால் ஜனசமூகத்திற்கு ஒரு பெரும் ஆதரவைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

முதலாளிகளே! டைரக்டர்களே! நடிகர்களே! உங்கள் கூட்டுறவும் ஒத்துழைப்புமே இக்கலா கட்டிடத்திற்கு அஸ்திவாரம் ஆகும். அஸ்திவாரம் பலமானால்தானே கட்டடம் அசையாது நிற்கும்? ஆகவே சினிமாக்கலை சிரஞ்சீவியாய் வாழ உங்கள் ஒத்துழைப்பு அவச்யம் வேண்டும் என்பதை நான் அடிக்கடி வற்புறுத்துகிறேன். அடியேன் கோரிக்கையை அங்கிகரிப்பீர்களாக.

குறிப்பு:—ஸ்ரீமான் பாகவதர் குறிப்பிட்டுள்ள ஒத்துழைப்பு அம்சத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். அனேக படங்கள் பிறந்த உடனே இறக்கும் குழந்தைகளைப்போலும்...அசட்டுப்பிள்ளைகள் உலாவுவதைப் போலும், குட்டிச்சுவராகச் சிதறிப்போய் 'அப்ப...தமிழ்ப் படமா' என்று தமிழர்களே வெறுக்கும்படியாக சின்னா பின்னமாய்விட்டது-விடுவது பாகவதர் சொல்லியதுபோன்ற உயர்ந்த ஒத்துழைப்பும், கலையில் அபிமான பிரதானமும் இல்லாததால் உண்டாகிய சாபமேயாகும். ஒரு படம் சாகா வரம் பெற்றதாக உயர்ந்த அம்சங்களுடன் உலாவவேண்டுமாயின் அது பலருடைய ஒத்துழைப்பும் கலாபிமானமும் சிறந்து விளங்கினால்தான் முடியும். உயர்ந்த கதைகளைக்கூடக் கொலைசெய்து மனம்போன போக்கில் சிலர் படமெடுத்துத் தாமும் நஷ்டத்தையடைந்ததற்குக் காரணம் ஆசிரியருடைய ஒத்துழைப்பு இல்லாததேயாகும். ஆகையால் படத்தொழிலில் சம்மந்தப்பட்ட சகலரும் ஒருமனப்பட்டு ஒத்துழைத்தால் நமது நாட்டுப் படங்கள்கூட வெகு விரைவில் ஹாலிவுட் படங்களைப்போல் மேன்மையாகிவிடும் அல்லவா?

—வை. மு. ஸ்ரீநிவாஸன், எம். ஏ. பி. எல்.

ஸ்ரீமான் பி. வி. திருவேங்கடஸ்வாமி.



கையிலங்கு நெல்லிக்கனி

"உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது"; "கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையா," என்றெல்லாம் நாம் சில சமயம் சொல்கிறோமல்லவா? அச்சமயம் நாம் சொல்லும் விஷயம் சந்தேகமறத் தெரிந்த உண்மை, என்றதால்தான் இவ்வளவு தீர்மானத்துடன், திடமாகச் சொல்லுகிறோம்.

ஒரு சமயத்தில் நமது ஆசாரியன் பரம காருணிகரான ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச்செய்திருக்கிறார்:

"உய்யநினை வுண்டாகி லுங்குருக்கள் தம்பதத்தே
வையு மன்பு தன்னை யிந்த மாநிலத்தீர்--மெய்யுரைக்கேன்
பையரவில் மாயன் பரமபத முங்களுக்காம்
கையிலங்கு நெல்லிக்கனி"

இவ்வுலகத்தில் உஜ்ஜீவிக்கவேணும் என்ற அவா இருக்கும் பக்ஷத்தில் சிறந்த ஆசாரியனை அடைந்து அவருக்கு மிகப்ரீதியுடன் பணிவிடைகளைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்வோமாகில் பரமபதமானது கொஞ்சமும் சந்தேகமில்லாமல் அதி சுலபமாகக் கிடைக்கும். "ஆசாரியன்" என்று இங்கு யாரைக் குறிக்கிறார்? தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என நான்கு வகைப்பட்ட புருஷார்த்தங்களில் மிகச் சிறந்ததான மோக்ஷத்தை அடைவதற்கு முக்கிய சாதனமாகிய ஞானத்தைப் புகட்டுபவரே ஆசாரியன். ஸப்த காதை என்னும் க்ரந்தத்தில் இதைக் குறித்து

"அம்பொனரங்கர்க்கு மாவிக்கு மந்தரங்க
சம்பந்தங்காட்டித் தடைகாட்டி--உம்பர்
திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டு
மவனன்றோ வாசாரியன்"

என்று ஸ்ரீ விளாஞ்சோலைப்பிள்ளை அருளிச்செய்திருக்கிறார். ஸ்ரீயஃபதியான சர்வேச்வரனுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தை உள்ளபடியே எடுத்துக் காட்டுபவர்தான் நம் ஆசாரியன்.

மேலும் ஸ்ரீ மணவாள மாமுனிகள் தெரிவிக்கிறார்:

"ஞானமனுட்டான மிவை நன்றாகவே யுடைய
னான குருவையடைந்தக்கால்--மாநிலத்தீர்
தேனார் கமலத்திருமாமகள் கொழுநன்
றானே வைகுந்தம் தரும்"

ஸகல சாஸ்திரங்களில் பரிச்சயமும், சர்வேச்வரனுக்குத் தான் தாசன்; என்னாளும் அவனுக்கே கைங்கர்யம் செய்யக்கடவோம் என்னும் ஞானமும், அறிந்த அர்த்தங்களின்படி வாழ்க்கையை

நடத்திக்காட்டுபவனான ஆசாரியனை அடைந்தோமாகில், ஸ்ரீயப்பதியான சர்வேச்வரன் மோக்ஷத்தையளிக்க ஸித்தமாயிருக்கிறான். ஆசாரியனிடத்தில் பய பக்தியுடன் பணிவிடை செய்பவனுக்கு தன்னிடத்தில் பக்தியை எதிர்பாராமல் பரமபதத்தை பகவான் அருளுகிறார். ஆசாரியனிடத்தில் பக்தியில்லாமல் தன்னிடத்திலேயே சிறந்த பக்தியைச் செய்தாலும் பகவானுக்கு ப்ரீதி ஏற்படுகிறதில்லை என்றும் தன்னைக் காட்டிலும் தன் பக்தர்களிடம் பக்தி செய்பவனிடமே பகவான் தன் கிருபையைச் செலுத்துகிறார் என்றும்,

> "தன் குருவின் றாளிணைகள் தன்னிலன் பொன்றில்லாதார்
> அன்பு தன்பால் செய்தாலு மம்புயைகோன்-இன்பமிகு
> விண்ணாடு தானளிக்க வேண்டியிரானாதலால்
> நண்ணாரவர்கள் திருநாடு"

ஸ்ரீ மணவாள மாமுனிகள் தெளிவாக உரைத்திருக்கிறார். ஆகையால் நம் ஆசாரியனிடம் அந்தரங்க பக்தியைச் செய்தால்தான் சர்வேச்வரனுடைய கிருபாகடாக்ஷம் நமக்கு ஏற்படும். ஆசாரியாபிமானத்தால் மோக்ஷத்தை சுலபமாகப் பெறலாம்: ஆசாரிய கிருபை கைகண்ட பலத்தை அளிக்கவல்லது என்ற உண்மை ஸ்ரீ சபரியின் வாழ்க்கையின் மூலம் தெளிவாக விளங்குகிறது.

* * * *

சபரி என்று சொல்லுங்கால் "ஸ்ரீ ராகவனுக்கு கனிகளைக் கொடுத்த வேடுவ ஸ்த்ரீதானே" என்று சிறுவர்முதல் உடனே கேட்டுவிடுவார்கள். சபரியினுடைய ஆசாரியாபிமானத்தைப் பற்றிய விவரம் எல்லாரும் அறியவேண்டியதே. ஏனெனில் அவள் பகவானிடம் மாத்திரம் நேரில் அன்பு வைக்காமல் தன் ஆசாரியரான மதங்க முனிவரிடமும் சிறந்த பக்தியுடன் பணி செய்து வந்தாள். அதனாலேயே அவளுக்கு ஆசார்யகிருபையும் அதன் மூலம் எம்பெருமானின் கிருபாகடாக்ஷமும் ஏற்பட்டது.

* * * *

சபரியின் வாழ்க்கையில் இந்த அம்சத்தை சற்று விவரமாக கவனிப்போம். தனக்கு ஒரு ஆசாரியன் வேண்டுமென்று பல இடங்களில் அலைந்து திரிந்தாள். வெகு நாட்கள் வரையில் ஒருவரும் கிடைக்கவில்லை. அவள் வேடுவ குலத்தில் பிறந்ததனாலேயே, அவளுக்கு இந்த கஷ்டம் ஏற்பட்டது. கடைசியாக பம்பாஸரஸ் தீரத்தில் மதங்க முனிவருடைய ஆச்ரமத்தை அடைந்து அதனருகில் வாசம் செய்யத் தொடங்கினாள். முனிவருக்குத் தெரியாமலே ஆச்ரம வாசலை சுத்தம் செய்வதும் அவர் தடாகத்துக்குச் செல்லும் பாதையை சுத்தம் செய்வதும், இவ்வாறாகக் கொஞ்சநாட்கள் பணிவிடைசெய்துவந்தாள். அந்த வனத்தில் தனக்குத் தெரியாமல் சிச்ருஷை செய்வது யாராயிருக்கும் என்று முனிவர் யோசிக்காமலில்லை. ஒரு வேடுவஸ்த்ரீ இவ்வளவு பக்தியுடன் தனக்குப் பணிவிடை செய்துவருகிறாள் என்பதை அறிந்ததும் மிகப்ரீதியுடன்

அவளை சிஷ்யையாக ஏற்றுக்கொண்டார். அவருக்கு வேண்டிய கைங்கரியத்தை சபரி வெகு ஆர்வத்துடன் செய்துவந்தாள்.

சிலகாலம் இவ்வாறு கடந்தபின்னர், ஒருநாள் ஸ்ரீ மதங்க முனிவர் திவ்ய விமானத்தின் மீதேறி வானுலகம் செல்லும் சமயம், சபரி அவரை தன் கதி என்ன வென்று வினவ, முனிவர் ஸ்ரீ ராகவன் அதே ஆச்ரமத்திற்கு எழுந்தருளப் போவதாகவும், அவருக்குத் தக்க பூஜையைச் செய்து பரமபதத்தை அடைவாள் என்றும் சொல்லிச் சென்றார். எம்பெருமானை எப்பொழுது ஸேவிப்போம் என்ற ஆவலுடன் அன்றுமுதல் சதா த்யானம் செய்துகொண்டிருந்தாள் பக்தி நிறைந்த சபரி.

* * * * *

இதே சமயம் ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் கபந்தனை சம்ஹாரம் செய்து அவனுக்குமேல் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து முடித்தனர். எம்பெருமான் கையினால் கோர வாழ்வைத் துறந்த கபந்தன் திவ்ய சரீரத்தை அடைந்து வானுலகம் செல்லும்போது "தேவரீர் இங்கிருந்து மேற்குப் பக்கமாக எழுந்தருளி ரிஷ்யமூக பர்வதத்தில் வானர வேந்தனான சுக்ரீவன், ஹனுமான் முதலானோருடைய சினேகத்தைப் பெற்றால் சீதையை சுலபமாகக் கண்டு பிடிக்கலாம். மேலும் போகும்பொழுது பம்பாஸரஸ் தீரத்தில் மதங்க முனிவருடைய ஆச்ரமத்தில் தேவரீர் தரிசனத்திற்கென்றே ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ சபரியை அனுக்ரஹிக்க வேணும்" என்று பிரார்த்தித்தான்.

* * * * *

ஸர்வேச்வரனுக்கே சகலத்தையும் அர்ப்பணம் செய்யவேண்டும் என்ற ஞானம் ஏற்படுவது ரொம்பவும் அபூர்வம். சபரிக்கு இந்த ஞானம் பூர்ணமாக உதித்ததால் நல்ல ஜாதி பழங்களை ஸ்ரீ ராகவனுக்கே சமர்பிக்க வேணுமென்று வெகு ப்ரீதியுடன் சேகரித்துவந்தாள். பகவானுக்கே கைங்கர்யத்தைச் செய்யக் கடவோம் என்ற அடிப்படையான ஞானத்தை அடைந்த சபரிக்கு அவன் கிருபை ஸுலபமாக ஏற்பட்டது விந்தையா?

* * * *

மதங்க முனிவருடைய ஆச்ரமத்தை அடைந்த ராமலக்ஷ்மணர்களை மிகவும் ப்ரீதியுடனும், பணிவுடனும் சபரி உபசரித்தாள். அர்க்யம், பாத்யம், ஆசமனீயம் முதலிய பூஜைகளை விதிப்படி பக்தி நிறைந்த, பூரித்த உள்ளத்துடன் செய்தனள். ஸ்ரீ ராகவன் அவளுடைய யோக க்ஷேமங்களை விசாரித்து அவள் ஆசார்யர்க்குச் செய்த பணிவிடைகள் பயன் பெற்றனவா என்று வினவினார். அதற்கு சபரி, ஸ்ரீ ராகவனைப் பூஜித்த அன்றே தன் தவம் சித்தித்தது என்றும் அன்றுதான் அவளுடைய ஆசார்யர்கள் பூஜிக்கப்பட்டார்கள் என்றும், அன்றே அவள் பிறப்பு நற்பயன் பெற்றது என்றும் பக்திப் பெருக்குடன் கூறினாள்.

தான் ஆவலுடன் சேகரித்து வைத்திருந்த பழவகைகளை அன்புடன் சமர்ப்பித்தாள். சக்ரவர்த்தித் திருமகன் அந்த அன்பு அளிப்பை அங்கீகரித்து பழங்களை அமுதுசெய்தார்.

ஸ்ரீ ராகவனுடைய அனுமதியின் பேரில் அக்னிப்ரவேசம் செய்தனள் சபரி. அதிலிருந்து அவளுடைய தேஜஸ்ஸான பிம்பம் வெளிப்பட்டு ஸ்ரீ ராகவனை நமஸ்கரித்து என்றும் அழிவில்லாத தான மோக்ஷத்தை அடைந்தது.

"பையரவில் மாயன் பரமபதம் உங்களுக்காம்: மெய்யுரைக் கேன், கையிலங்கு நெல்லிக்கனி" என்று ஸ்ரீ மணவாளமாமுனிகள் குறிப்பிட்ட பரமபதம் ஸ்ரீ சபரிக்கு ஆசாரியாபிமானத்தினால்தான் கிடைத்தன்றோ ?

ஆசாரியன் திருவடிகளே சரணம்.



அம்மாள்—ஏண்டாப்பா ! இன்னும் கொஞ்சம் வேகமாகப் போக முடியாதா ?

வண்டிக்காரன்—கீழே இறங்கீட்டா ரொம்ப வேகமாப் போக லாம்மா.

ஸ்டேஷன்களின் ச்லேடை தமாஷ்

1. பாலூரு...பாலூரு...
அப்பா! டிகாக்ஷன் ஆறிப்போறது. ஆழாக்கு பால் குடுத்தா போதும்பா...

---

2. பல்லாவரம்...பல்லாவரம்...
ஐயா! ஐயா! எனக்கு தயிருக்கு ரெண்டுபல்லா...சோத்துக்கு ரெண்டுபல்லா...பால் பல்லா ஒண்ணு குடுத்தாபோரும்.

---

3. தாம்பரம்...தாம்பரம்...
இங்கு வாப்பா...எங்கிட்டெ இருக்கிற பித்தளையே மாத்திக்கிண்டு தாம்பரம் குடுப்பா...

---

4. கிண்டி...கிண்டி....
சாமி! கொழந்தை அழுது அழுது வயிறு உப்புதுங்க... லோட்டாவிலே கஞ்சி குடிக்கமாட்டேனுதுங்க ..கிண்டிரவெ குடுத்தா கஞ்சி குடிக்கவச்சுட்டு திருப்பித் தறேன்.

---

5. சாத்தூரு...சாத்தூரு...
அப்படியா...எங்கிட்ட கொழும்பு, ரசம் இருக்குது. சாதம் கொடுத்தா ரொம்ப புண்ணியமுண்டு.

---

6. நெல்லூரு...நெல்லூரு...
நெல்லு வாண்டாம்பா... அரிசியாயில்லையா...

---

7. எம்பா...வடக்கே போனா...குண்டுக்கல்லு...தெற்கே போனா திண்டுக்கல்லு இருக்கே...கிழக்கே...மேற்கே என்ன கல்லுப்பா இருக்கும்?...

---

8. பெண்ணாடம்...பெண்ணாடம்...
பெண்ணாடவேண்டாம்...எனக்கு முதல்லே எண்ணைதான் ஆடணும்...

---

9. நான் அம்மாபேட்டைக்காரன்...நீ ஐயன்பேட்டைக்காரி. ரெண்டுபேரும் சேர்ந்து பிள்ளைப்பாக்கத்துக்குப்போய் சம்மந்தபுரத்துக்கு வரலாம்...

---

10. மணியாச்சி...மணியாச்சி...
எம்பா! எத்தனெ மணியாச்சுப்பா! கடியாரத்தையே காணலே...

—"விரிச்சிகம்"

சைவ வைஷ்ணவ நட்பு

தம் காலத்தில் ஸ்ரீவைஷ்ணவத் தலைமை பூண்டிருந்த திருமங்கை மன்னரும், சிவநேசர்களின் தலைவராகிய திருஞான சம்பந்தமூர்த்தியும் சீகாழியில் சந்தித்தது நமது சைவ வைஷ்ணவ சரித்திரங்களிலேயே ஓர் அபூர்வ அதிசயம் வாய்ந்த காக்ஷி. ஆழ்வாரும் நாயனரும் சந்தித்ததும் சிஷ்யர்கள் ஒரு பெரிய வாதப் போரைத்தான் எதிர் பார்த்திருப்பார்கள். ஆனல் அதற்கு மாருகத் திருமங்கையாழ்வாரும் திருஞான சம்பந்த ஸ்வாமியும் சிநேக பாவத்துடனும் ஹாஸ்ய உணர்ச்சியுடனும் ஒருவரையொருவர் புகழ்ந்து பாடிக்கொண்டார்களாம்.

திருஞான சம்மந்தர், ஆழ்வாரை

''படிஉண்ட பெருமானைப் பறித்துப் பாடி
பதம்பெற்ற பெருமானே!''

என்று அருமையாக அழைத்தாராம்.

ஆழ்வாரும், நாயனர் எலும்பைப் பெண்ணாக்கிய அத்புதத்தைக் குறிப்பிட்டு

''அருள்குலவு மயிலைதனில் அனலால்வெந்த
அங்கத்தைப் பூம்பாவை ஆக்கினேம் என்(று)
இருக்கும் அதுதகவன்று : நிலவால் வெந்த
இவளையும்ஓர் பெண்ஆக்கல் இயல்புதானே''

என்று தமக்கு நாயனர் மீதுள்ள நட்புக் காதலைக் காதல்—துறையிலே மறைத்துக் காட்டினர்.

இந்த ஆழ்வார்—நாயனர் சந்திப்பும் சிநேகமும் ஸ்ரீ வைஷ்ணர்களின் திவ்யசூரி சரித்திரத்திலே வற்புறுத்தப்படுகின்றன. இவர்களுடைய நட்புக் காதல் தமிழறிஞர்களின் மனோபாவத்தில் ஒரு ரஸமான கதையாக வளர்ந்துவிட்டது.

இருவரும் நாட்டிலுள்ள நாஸ்திக வாதங்களைக் கண்டித்து வேதோபநிஷதங்களை மூல பொக்கிஷமாகக் கொண்ட ஆஸ்திக சமயத்தையும் அன்புக் கொள்கையையும் நிலைநிறுத்தப் பாடுபட்டார்கள். இவர்களுடைய பக்திக் கொள்கைகளில் நாம் ஒற்றுமை காண்பதுபோல், பாடல்களின் அமைப்பு முறைகளிலும், வர்ணனையிலும்கூட ஒற்றுமை காணலாம். உதாரணமாக,

''கொல்லை முல்லை மெல்லரும்(பு) ஈனும் குறுங்குடியே''

என்ற ஸ்ரீ. திருமங்கையாழ்வாரின் திருக்குறுங்குடி வர்ணனையும்

''கொல்லை முல்லை மெல்லரும்(பு) ஈனும் குற்றாலம்''

என்ற ஸ்ரீ. சம்பந்தரின் குற்றால வர்ணனையும் எவ்வளவுதூரம் ஒற்றுப் போய்விட்டன பாருங்கள்.

இவ்வளவு ஒற்றுமையோடு அடுத்த ஊர்களில் வாழ்ந்து தேசப் பிரசித்திபெற்ற இவர்களின் ஹிருதய ஒற்றமை சைவ வைஷ்ணவ சமரஸத்தை நாடும் அறிஞர் உள்ளங்களைக் குளிரச் செய்கிறது.


VASANT



அன்னையும், பிதாவும்.

ஞானத் தந்தையை அருள் வடிவமாகிய அன்னை பாத பூஜை செய்வதை எதிர்ப் பக்கத்தில் காணலாம். உமாதேவி தாமரைப்பூவை அந்தப் பாத தாமரைகளில் சமர்ப்பிப்பது உபாஸகர் இதய மலரையே ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுமென்பதற்கு ஓர் அழகான அறிகுறி. அந்திவண்ணனாகிய சிவ பெருமானைப் பிரதோஷ புண்ணிய காலமாகிய அந்திவேளையில் வழிபடுவதாக அமைந்திருக்கும் காட்சி பெரிதும் பொருத்தமுடையது.

சிவன், சிவ பூஜை இரண்டு சித்திரங்களையும் நமக்கு அளித்த 'வஸந்த்' இளமையிலேயே திறமையை வெளியிட்டுள்ளார். இவர் சமீப எதிர் காலத்திலே இக் கலையில் விசேஷ வெற்றி பெறுவார் என்பது நமது நம்பிக்கை.

ஸ்ரீமதி "குமுதினி"

ஒரு கல்யாணம்

1

பம்பாய், 1—1—42

பிரியமுள்ள கக்குவிற்கு,

நீ உன்னுடைய பெண்ணிற்கு வரன் தேடுகிறாயென்று கேள்விப் பட்டேன். உன்னுடைய பெண்ணிற்கு பதினைந்து வயதுகூட ஆக வில்லையே, அதற்குள் கலியாணத்திற்கு என்ன அவசரம்? இத்துடன் ஒரு ஜாதகம் அனுப்பியிருக்கிறேன். பொருத்தமிருக்கிறதா என்று பார். பிள்ளை பார்வைக்கு சுமாராக இருப்பான். பிள்ளையின் தகப்பனாருக்கு ஏதோ சர்க்கார் வேலை. இந்த ஊருக்குப் புதிதாக மாற்றி வந்திருக்கிறார். சொத்து ஐம்பதினாயிரத்திற்கு இருக்கும் என்று கேள்வி. பிள்ளைக்கு ஏதோ கம் பெனியில் வேலை, எழுபத்தைந்து ரூபாய் சம்பளம். உனக்கு வேண்டு மென்றால் இன்னும் மற்ற விவரங்களைக் கேட்டு எழுதுகிறேன். —பட்டு.

2

சென்னை, 8—1—42

பிரியமுள்ள மீனுவிற்கு,

என் பெண்ணிற்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்கிறது. என்னுடைய நாத்தனாரின் பிள்ளைக்கே கொடுப்பதாக ஏற்பாடு. ஆகையால் என் பெண் ணிற்கென்று வந்த மற்றொரு ஜாதகத்தை உனக்கு அனுப்பியிருக்கிறேன், பிள்ளையின் தகப்பனாருக்கு ஏதோ பெரிய சர்க்கார் வேலையாம்; சொத்து ஒரு லக்ஷத்திற்கு இருக்குமாம். பிள்ளைக்கும் வேலையாம். எழுபத்தைந்தோ நூறோ சம்பளமாம். எல்லாம் பம்பாயிலிருந்து பட்டு எனக்கு எழுதினாள். உன் அக்கா பெண்ணிற்கு நல்லவரனாக வேண்டுமென்று சொன்னாயே. இது தேவலை யென்றால் இன்னும் மற்ற விவரங்களை விசாரித்து எழுது கிறேன். —கக்கு.

3

மதுரை, 10—1—42

பிரியமுள்ள அக்காவிற்கு,

இத்துடன் ஒரு ஜாதகம் அனுப்பியிருக்கிறேன். நம்ம ஸரஸாவிற்கு பொருத்தமாக இருக்குமா என்று பார். பிள்ளைக்கு பம்பாயில் வேலையாம். நூறோ, நூற்றைம்பதோ சம்பளமாம். தாயார் தகப்பனார் ரொம்ப நல்லவர் களாம். என் சினேகிதி கக்குவிற்கு அவர்களை நன்றாகத் தெரியுமாம். உன் அபிப்பிராயத்தை எழுது. —மீனு.

4

பங்களூர், 14—1—42

பிரியமுள்ள மீனுவிற்கு,

என் அகத்துக்காரரின் சினேகிதர் பஞ்சு அய்யர் என்ற ஒருவர் இருக் கிறார். அவருடைய பிள்ளைக்குத்தான் ஸரஸாவைக் கொடுக்கவேணு மென்று ஒரே பிடிவாதமாக இருக்கிறார். பஞ்சு அய்யருக்கு ஐம்பதினாயிரம்

தான் சொத்து. நீ அனுப்பின ஜாதகம் நன்ருயிருக்கு. இந்தப் பிள்ளையின் தகப்பனருக்கு என்ன சொத்து இருக்குமென்று விசாரித்து எழுது.

—உன் அக்கா.

5

மதுரை, 20—1—42

பிரியமுள்ள கக்குவிற்கு,

நீ எழுதின பிள்ளையின் தகப்பனருக்கு என்ன சொத்து இருக்கும்?

—மீனு.

6

சென்னை, 22—1—42

பிரியமுள்ள பட்டுவிற்கு,

முன்பு நீ எழுதின பிள்ளையின் ஜாதகம் நன்ருயிருக்கிறதென்று ஒரு அம்மாள் தன்னுடைய பெண்ணிற்குப் பார்க்கிருர். பிள்ளையின் தகப்பனருக்கு என்ன சொத்து இருக்கும்?

—கக்கு.

7

பம்பாய், 30—1—42

பிரியமுள்ள கக்குவிற்கு,

அந்தப் பிள்ளையின் தகப்பனர் தமது சினேகிதர் ஒருத்தரின் பெண்ணைத்தான் பண்ணவேண்டுமென்று பிடிவாதம் செய்கிருராம். அந்த அம்மாளுக்கு அது இஷ்டமேயில்லை, பெண் கருப்பு, சீர் ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று குறைப்படுகிருள். இவர்களுக்குச் சொத்து ஐம்பது ஆயிரத்திற்குக் குறையாது. நீ சொல்லுகிற பெண் எப்படி இருக்கும்? என்ன சீர் செய்வார்கள்?

—பட்டு.

8

சென்னை, 8—2—42

பிரியமுள்ள மீனுவிற்கு

அவாளுக்கு சொத்து நிறைய இருக்குமாம். சுமார் ஒரு லக்ஷம் என்று கேள்வி. உன் அக்காவிற்கு என்ன சீர் செய்ய உத்தேசம்?

—கக்கு.

9

மதுரை, 12—2—42

பிரியமுள்ள அக்காவிற்கு,

அவர்களுக்கு சொத்து சுமார் ஒண்ணரை லக்ஷம் இருக்குமாம். நீ என்ன சீர் செய்ய உத்தேசம்? அதை எனக்கு அந்தரங்கமாய் எழுது.

—மீனு.

10

பங்களூர், 16—2—42

பிரியமுள்ள மீனுவிற்கு,

சொத்தும் ஒண்ணரை லக்ஷத்திற்கு இருந்து, பிள்ளையும் நூற்றைம்பது இருநூறு என்று சம்பாதித்தால் நாம் நிறைய செய்யவேண்டும்.

முதலில் நான் ஆயிர ரூபாய்க்கு செய்தால் போதும் என்று நினைத்தேன். ஆனால் பெரிய இடத்தில் பெண்ணைக் கொடுப்பதால் கூட ஒரு ஐந்நூறுக் குச் சேர்த்துச் செய்கிறேன். —அக்கா.

11

மதுரை, 20—2—42

பிரியமுள்ள கக்குவிற்கு,

சுமார் இரண்டாயிரத்துக்கு செய்வதாக உத்தேசம். —மீனு.

12

சென்னை, 22—2—42

பிரியமுள்ள பட்டுவிற்கு,

பெண் வீட்டுக்காரர்கள் சுமார் இரண்டாயிரத்தைந்நூறு அல்லது மூவாயிரத்திற்குச் செய்வார்களாம். —கக்கு.

13

பம்பாய், 1—3—42

பிரிய கக்குவிற்கு,

நீ எழுதியிருப்பதை அந்த அம்மாளிடம் சொன்னேன். அவருடைய அகத்துக்காரர் பாத்திருக்கும் பெண்ணிற்கு ஆயிரம் ரூபாய்க்குத்தான் சீர் செய்வேன் என்றூர்களாம். ஆகையால் மூவாயிரத்துடன் வரும் இதுவே தேவலை என்கிறூர். பெண்ணின் தாய் தகப்பனூர்கள் எந்த ஊரிலிருக் கிறூர்கள்? அவர்களுடைய பெயரென்ன? —பட்டு

பெண்ணின் வர்ணமென்ன? எப்படி இருந்தாலும் பாதகமில்லை. அந்த கர்வக்கார பங்களூர் பெண்ணைவிட இதுவே தேவலை என்று அந்த அம்மாள் சொல்கிறூர். —பட்டு.

14

சென்னை, 10—3—42

பிரிய மீனுவிற்கு,

உன் அக்கா பெண்ணின் வர்ணம் என்ன? —கக்கு.

15

மதுரை, 14—3—42

பிரிய கக்குவிற்கு,

என் அக்கா பெண் சுமாரான வர்ணம், கருப்பு இல்லை. என் அத்திம் பேர் தமது சினேகிதரின் பிள்ளைக்கே கொடுக்கவேணு மென்கிறூர். அந்தப் பிள்ளைக்கு ஐம்பது ரூபாய்தான் சம்பளமாம். அதுவும் அங்கேயோ குஜராத்திலாம். ஆகையால் எப்படியாவது நீ எழுதியிருக்கும் பம்பாய் பிள்ளைக்கே நிச்சயம் செய்துவிடு. பிள்ளையின் தகப்பனூரின் பெயரையும், வேலையையும் எழுது. —மீனு.

16

சென்னை, 18—3—42

பிரிய பட்டுவிற்கு,

பெண் சுமாரான சிவப்பு. கருப்பு. இல்லை. நீ எழுதியிருக்கும் பிள்ளை எந்த ஊரில் வேலையிலிருக்கிறுன்? —கக்கு.
எப்படி இருந்தாலும் சரி, கல்யாணத்தை நிச்சயம்செய்துவிடு. —கக்கு.

17

பம்பாய், 26—3—42

பிரிய கக்குவிற்கு,

பெண் சிவப்பு என்று கேட்க ரொம்பவும் சந்தோஷம். அந்த அம்மாள் கல்யாணத்திற்கு சம்மதித்துவிட்டார். பெங்களூர் பெண் வேண்டாம் என்கிறார். பிள்ளைக்கு குஜராத்தில் வேலை. தகப்பனாரின் பெயர் பஞ்சு அய்யர்.

—பட்டு.

பெண்ணின் பெற்றோர் எந்த ஊர்?

—பட்டு.

18

சென்னை, 4—4—42

பிரிய மீனுவிற்கு,

கல்யாணம் நிச்சயம் செய்தாகிவிட்டது. பிள்ளைக்கு குஜராத்தில் வேலை. தகப்பனாரின் பெயர் பஞ்சு அய்யர். உன்பேரிலுள்ள சிநேகத்தினால்தான் நான் இதில் பிரவேசித்தேன். அந்த ஐம்பது ரூபாய் சம்பளப் பிள்ளைக்கு கொடுக்கச் சொல்லாதே.

—கக்கு.

19

சென்னை, 4—4—42

பிரிய பட்டுவிற்கு,

கல்யாணம் நிச்சயம் செய்தாகிவிட்டது. பெண்ணின் பெற்றோர் பெங்களூர். தகப்பனாரின் பெயர் சுப்பய்யர். உன் பேரிலுள்ள சிநேகத்தினால்தான் நான் இதில் பிரவேசித்தேன். அந்த கருப்பு பெண்ணிற்கு கொடுக்கச் சொல்லாதே.

—கக்கு.

20

பங்களூர், 8—4—42

பிரிய சிநேகிதன் பஞ்சுவிற்கு,

என் பெண்ணை உன்னுடைய பிள்ளைக்குக் கொடுக்கவேண்டுமென்று நான் சொன்னேன், என் மனைவி கேட்கவில்லை. இப்பொழுது அவளாகவே உன் பிள்ளைக்கு நிச்சயம் செய்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியே இருக்கட்டும். ரொம்ப சந்தோஷம், கல்யாணத்தை சீக்கிரம் வைத்துக் கொள்ளலாமா?

—சுப்பய்யா.

21

பம்பாய், 8—4—42

பிரிய சிநேகிதன் சுப்பய்யாவிற்கு,

என் பிள்ளைக்கு உன்னுடைய பெண்ணை பண்ணவேண்டுமென்று நான் முன்பே சொன்னேன். அவள் கேட்கவில்லை. இப்பொழுது அவளாகவே நிச்சயம் செய்திருக்கிறாள். எப்படியானால் என்ன? ரொம்ப சந்தோஷம். கல்யாணத்தை சீக்கிரம் வைத்துக்கொள்கிறாயா?

—பஞ்சு.

முற்றிற்று.

ஸ்ரீமான் வி. வி. ராமானுஜம், *பி. எஸ்ஸி.*

நம் வாழ்க்கையில் மிக நெருங்கிய நண்பர்களே தீராப் பகைவர்களாக மாறக்கூடும். ஆனால் இம்மாறுதலுக்கு ஒரு காரணம் இருந்தே தீரும். நட்பைச் சேதிக்கும் சம்பவம் ஒன்று நடத்தல் வேண்டும். மனித வர்க்கத்தில் நெருங்கிய நண்பனான ஒருவன் அதேசமயத்தில் தீராப் பகைவனாக இருப்பது அரிது. அசேதன உலகில் இது மிகச் சாதாரணமாக உள்ளது. பஞ்சபூதங்கள் நம் உயிர் வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதவை. இவைகளே நமக்குப் பகைவர்களாகவும் உள்ளன. நாம் உட்கொள்ளும் வாயுவை எடுத்துக்கொள்வோம். இது வாழ்விற்கு எவ்வளவு முக்கியமானது? இதுவே பெரும் பகைவனாக மாறுதல் கூடும். ஆயினும் ஒரு விஷயம்; தோழமை தானாக ஏற்பட்ட குணம்; பகைமையோ, நாம் வளர்த்தகுணம். நம் உணவைச் சமைக்க உதவும் நெருப்பால் நம்மையே எரித்துக்கொள்ளலாமல்லவா? நிற்க, வாயு தோழமையில் ஆற்றும் தொண்டையும் பகைமையில் விளைவிக்கும் நாசத்தையும் கவனிக்கலாம்.

வாயுவில் உயிரியம் (பிராணவாயு-Oxygen), வெடியம் (வெடியுப்பு வாயு-Nitrogen) என்று இரண்டு வாயுக்கள் உள்ளன. பெயருக்கேற்ப உயிரியமே நமக்கு முக்கியமானது. உயிரியம் இல்லையெனில் உயிர்வாழ இயலாது. வாயுவில் பொருள்கள் எரிவதும் உயிரியம் இல்லாமல் நடக்காது. வெடியமும் அவச்யமானதே. எப்படி என்று பின்பு சொல்லலாம். இப்போது உயிரியத்துக்கும் எரிதலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி பேசலாம்.

ஒரு பொருளை-உதாரணமாக ஒரு கரித்துண்டை-இரண்டாக வெட்டி, இரண்டை நாலாக வெட்டி, அதை எட்டாக வெட்டி-இம்மாதிரி வெட்டிக்கொண்டே போனால், எங்கு முடிவடையும்? பின்னப்படுத்த முடியாத ஒரு சிறு பாகம் இருக்கத்தான் வேண்டுமென்பது தெளிவாகவில்லையா? நுட்பமான இப்பொருளே அணு. அணு கண்ணுக்குப் புலப்படாது. உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் அணுக்களின் சேர்க்கையாலானவைகளே. ஒரு ஊசி முனை பல லக்ஷம் அணுக்களாலானது என்றால், அணு எவ்வளவு சிறியது என்பதை ஊகிக்கலாம். வெவ்வேறு பொருள்களின் அணு வெவ்வேறு குணங்களுடையது. தங்கத்தினுடைய அணுவுக்கும் மண்ணின் அணுவுக்கும் பல வேற்றுமைகள் இருப்பது இயல்பே.

அணுக்களுக்குத் தானாக ஏற்பட்ட சக்தி உண்டு. இதன் பயனாய் அவை சலனப்பட்டுக்கொண்டே உள்ளன. ஊசி முனையிலுள்ள லக்ஷக்கணக்கான அணுக்கள் அவ்வளவு சிறிய இடத்தில் எப்படி சலனப்படக்கூடும் என்பது கற்பனா சக்திக்கே புலப்படும். இவ்வணுக் கண்ணால் காண முடியாது. இரண்டோ அதற்கு மேல்பட்டோ அணுக்கள் இணைந்தால்

ஒரு கூட்டணு உண்டாகலாம். இது உண்டாகும்போது, அனேகமாக, சக்தி வெளிப்படும். இவ்விதச் சக்தி சூடாகவோ, ஒளியாகவோ, ஒலியாகவோ பரிணமிக்கலாம். மிகவும் சுறுசுறுப்பான உயிரிய அணுக்கள் மற்ற பொருள்களின் அணுக்களுடன் இணையும்போது சூடு உண்டாகிறது. இதுவே எரிதலின் தத்துவம்.

உயிரியம் எப்போதும் பொருள்களுடன் இணைந்துகொண்டேதானிருக்கிறது. ஆனால், சாதாரண உஷ்ணநிலையில் இணைவின் வேகம் மிகக் குறைவு. ஆகையால் வெளிப்படும் சூடும் குறைவு. இந்தச் சூடு எளிதில் பரவி விடுவதால் உறைப்பதில்லை. உதாரணமாக, கரி உயிரியத்துடன் கலத்தலால் சூடு உண்டாகும். ஆனால், கரி தீப்பிடிப்பதில்லை. கரியின் உஷ்ண நிலை அதிகமாக இருந்தால்தான் கரி தீப்பிடித்து எரிகிறது. சாதாரண உஷ்ணநிலையில் கரி உயிரியத்துடன் கலக்கும் வேகம் குறைவு. ஆகையால் அது எரிந்து மறைவதில்லை. உஷ்ணம் அதிகரித்தால் இணையும் வேகமும் அதிகரிக்க, வெளிப்படும் சூடும் அதிகரிக்கிறது. கரியும் கனிந்து சுடர்விட்டு எரிய ஆரம்பிக்கிறது. இந்த நிலையை தீப்பிடி நிலை எனலாம். எரியும் குச்சி பட்டாலே தீப்பற்றும் மண்ணெண்ணெயின் தீப்பிடி நிலையும் சிறிது நேரம் எரியும் பண்டத்தில் இட்ட பின்னரே தீப்பற்றும் கரியின் தீப்பிடி நிலையும் வேறு என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இரும்பு துருப்பிடிப்பதும் உயிரியத்துடன் கலத்தலே. இதுவும் எரிதல் தான். ஒளிவிடாமல் நடைபெறும் இம்மாதிரி எரிதலே நம் உடலிலும் முறை பெறுகிறது. இதனால் வெளியேறும் உஷ்ணமே நம் உடல் ஆரோக்யமான உஷ்ணநிலையில் இருக்க உதவுகிறது. நம் ஸ்வாஸப் பையில் புகும் உயிரியம் ரத்தத்தின் மூலம் உடலின் பலபாகங்களுக்கும் சென்று, ரத்தத்தில் கலந்து உணவுப் பொருள்களை எரிப்பதால் சூடு ஏற்படும். எரிதலினால் ஏற்படும் கரியமிலவாயுவும் ஜலமும் ரத்தத்தின் மூலமாகவே ஸ்வாஸப் பைக்கு வந்து காற்றில் கலந்து வெளியேறுகின்றன. ஆகவே, தேகாரோக்கியத்துக்கு உணவுபோல உயிரியமும் இன்றியமையாததாகிறது. உணவை விலைக்கு வாங்குகிறோம். இந்த சண்டைக் காலத்தில் ஒன்றுக்கு மூன்று பங்கு விலை கொடுத்தும் வாங்குகிறோம். உயிரியத்தையோ, இறைவன் வேண்டிய அளவு கொடுத்திருக்கிறான். இதனாலேயே இந்த வாயுவுக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்வதில்லை. இதை நமக்கு அளவில்லாமல் கொடுத்துள்ள பரமனின் கருணைதான் என்னே!

வாயுவில் உயிரியம் ஐந்தில் ஒரு பாகமே. வாயு அவ்வளவும் உயிரியமாகவே இருந்தால் உலகம் எளிதில் எரிந்துவிடும். அதிர்ஷ்ட வசமாக வாயுவில் ஒருபங்கு உயிரியமும், நான்கு பங்குகள் வெடியமுமாக உள்ளது. வெடியம் ஒரு ஜடப்பொருள் என்றே சொல்லிவிடலாம். இது சாதாரணமாக ஒரு பொருளுடனும் கூடுவதில்லை. இந்த வாயுவில் எந்தப்பொருளும் எரியாது. எரிவதுகூட அவிந்துவிடும். இதைக்கொண்டு உயிரியத்தின் வலிவைக் குறைப்பது பொருத்தமே.

ஜடப்பொருள் என்பதால் இது வீணில் இருக்கிறது என்று எண்ண வேண்டாம். உயிரியத்தைப்போல் இதுவும் வாழ்விற்கு முக்கியமானதே. அனேக மிருகப் பொருள்களிலும் தாவரப் பொருளிலும் வெடியம் ஒரு அவச்யமான மூலமாயுள்ளது. வாயுவில் மிகுதியாகவுள்ள இவ்வெடியத்தை சில செடிகளைத் தவிர்த்து, மற்ற செடிகளாலோ, பிராணிகளாலோ, உண்டு ஜீர்ணிக்க இயலவில்லை. கூட்டுப் பொருளாகவே இந்த வாயுவைத் தாவரங்களுக்கு ஊட்டினால் இவை நமக்கு வேண்டிய வாயு பதார்த்தங்களைத்

தருகின்றன. ஆகவே, இச்செடிகளுக்கு வெடிய சம்பந்தமான எருவை இடவேண்டியுள்ளது. இவை பூமியில் இயற்கையாக அகப்பட்டபோதிலும், இந்த உற்பத்தி வழியையே நம்பியிருந்தால் விரைவில் இவை பயன்படுத்தப் பட்டு, பஞ்சம் ஏற்படலாம். ஆகையால் வாயுவிலுள்ள வெடியத்தைப் பயன் படுத்துவதே நலம். இந்த வெடியத்தைப் பல முறைகளால் கூட்டுப்பொருள் களாக மாற்றி நிலத்துக்கு இடலாம்.

வாயுவில் வெடிய அணுக்களும் உயிரிய அணுக்களும் இணைந்தில்லை. தனித்தனியாகவே உலவுகின்றன. உயிரியம் மற்றைச் சில பொருள்களோடு இணையும்போது போல் இத்துடன் இணையும்போது சக்தி வெளிப்படாது உரியப்படும். இவ்வகையில் உரியப்படும் சக்தியை சூட்டின்மூலம் நாம் ஊட்டவேண்டும். சூடு மட்டில் வெளிப்படுமானல்?-இவ்வுலகமே கணத் தில் எரிந்துவிடும். வாயுமண்டலம் அத்தனையும் வெடிய உயிரியங்கள்தானே! இந்த இணைவுக்கு நம் தேகத்தின் உஷ்ணம்போல் சுமார் 50 மடங்கு (5000°F) உஷ்ணம் வேண்டும். இது மிகவும் வலிமை வாய்ந்த மின்சார இயந்திரங்களால் உண்டாக்கப்படும். இந்த உஷ்ணநிலையில், வாயுவிலுள்ள வெடியத்தில் சிறு பாகமே உயிரியத்துடன் கூடும்.

இந்தக் கூட்டுப் பொருளைக் கொண்டு நாம் அக்கினித் திராவகம் எனும் (Nitric acid) வெடியகாமிலத்தைச் செய்யலாம். இந்த அமிலமே வெடி மருந்துக்களைச் செய்ய அதிகமாகப் பயன்படுகிறது. அதிகமாகப் பயன்படும் வெடி மருந்துக்கள் நமக்கு மிகவும் உபயோகமாயிருக்கும் பொருள்களைக் கொண்டே செய்யப்படுகின்றன. பருத்தி, ஸெல்லுலோஸ் (Cellulose) என்னும் பொருளாலானது. வெடியகாமிலத்தையும் கந்த காமிலத்தையும் கலந்து, அதில் சுத்தப்படுத்திய பருத்தியை ஊறவைத்தால் பீரங்கிப் பஞ்சு எனும் பொருள் கிடைக்கும். இது அதிர்ச்சியால் வெடிக்கும். இது வெடிக்கும் நேரத்துக்கு ஒப்பிட்டால் கண்ணிமைப் பொழுதும் யுகப் பொழுதாம். இது ஒரு ஸெகண்டில் 50000-ல் ஒரு 'ங்கு நேரத்தில் எரிந்து விடும். இதைத் தவிர வெடி மருந்துகளில் அதிகமாகப் பயன்படுவது எல்லா தாவர எண்ணெய்களிலும் உள்ள க்ளிஸரின் என்னும் ஒரு ஸத்து மருந்துக்கு அதிகமாக உபயோகப்படும் இப்பொருளை யாவரும் அறிவர். இது வெடிய காமிலத்துடன் கலந்து நைட்ரோ க்ளிஸரின் ஆகிறது. நைட்ரோக்ளிஸரின், பீரங்கிப்பஞ்சு இவை இரண்டையும் கலந்தே கார்டைட் என்னும் வெடி மருந்து செய்யப்படுகிறது. இந்த இரண்டு வெடி மருந்துகளை பதன்படுத்தும் முறையால் இவைகளின் வெடிக்கும் வேகத்தைக் குறைக்க முடிகிறது. வெடிமருந்து வெடிக்கும்போது, மருந்தைப்போல் 2000 மடங்கு வாயுக்கள் வெளியாகின்றன. எவ்வளவு சக்தி இதில் அடைபட்டிருக்கிறது! ஜாடியில் அடைபட்ட அசுரன் வெளிப்படுவதுபோல்தான் இது வெடிக்கும்போது! இதனல் செய்யக்கூடிய வேலை மிக அதிகம்.

வெடிமருந்துக்கள் பாறைகளை உடைக்கவும் கெட்டியான பூமியைப் பெயர்க்கவும் பயன்படுகின்றன. பாறையில் துளைசெய்து மருந்தைக் கெட்டி யாக அடைத்து ஒரு திரியின்மூலம் தீயிடுவதால் அது வெடிக்கும். இந்த வேகத்தில் பெரிய பாறைகளெல்லாம் துண்டுதுண்டாக வெடித்து அவைக ளாகவே தொலைவில்போய் விழும். மலைகளைக் குடைந்து பாதை போடும் போதும், இரண்டு சமுத்திரங்களை இணைக்கும் ஸூயஸ், பனமா முதலிய கால்வாய்கள் கட்டப்பட்ட போதும், இவை எவ்வளவு பயன்பட்டிருக்கும்? 3500 ஆட்கள் ஒரு வருஷத்தில் செய்யக்கூடிய வேலையை, வெடிமருந்து

களின் உதவியால் 10 ஆட்கள் ஒரு மாதத்தில் எளிதில் முடிக்கலாம் என்றால், வெடிமருந்தில் மறைந்திருக்கும் சக்தியை ஒருவாறு ஊகிக்கலாம்.

வாயுவும், வாயுப்பொருள்களும் எப்படி தொண்டாற்றுகின்றன என்று பார்த்தோம். ஆனால் இந்த வெடிமருந்துகளைக் கொண்டே மனிதன் தன் இனத்தாரைக் கொலை செய்கிறான். எளிதில் உடையக் கூடிய வெண்கலம் முதலிய உலோகப் பொருள்களில் இவைகளை அடைத்து 'பாம்' எனும் வெடிகுண்டுகள் செய்யப்படுகின்றன. இப்படியே பீரங்கிக் குண்டுகளும் செய்யப்படுகின்றன. இவைகள் அதிர்ச்சியினாலேயே வெடித்து நாசத்தை விளைவிக்கின்றன. இவைகளால் ஏற்படும் உயிர்ச்சேதமும் பொருள் நாசமும் கணக்கிட்டு முடியுமோ? எத்தனை தாய்மார்களும் காதலிகளும் இந்த அரக்கனுக்குப் பலியான வீரர்களைக் குறித்து கண்ணீர் உகுத்திருப்பர்? 'பகுத்தறிவில் மேலானவன்' என்று மார் தட்டும் மனிதன் மிருகங்களிலும் கடையோனாய் நடந்துகொள்வதே தற்கால சண்டை எனலாம். மஹாத்மாவின் உபதேசத்தைக் கடைபிடித்தால் இவ்விதஉயிர் நஷ்டமும், பொருள் நாசமும், அதனாலேற்பட்ட மனத்தாங்கலும், உண்டாக ஏதுவே இல்லை. இதில் வீணாகும் முயற்சியும் பணமும் எவ்வளவு நல்ல வழிகளில் பயன்படாது?

இவ்வளவு கொடுமை விளைவிக்கக்கூடிய இப்பொருள்கள் நம் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களிலிருந்தே செய்யப்படுகின்றன. இவை வாழ்க்கையில் இன்றியமையாத தோழர்கள். இவைகளில் மறைந்துள்ள சக்தியால் நம்மால் எளிதில் இயற்ற இயலாத எவ்வளவு காரியங்கள் ஆகின்றன! நண்பனையே பகைவனாக்கிக்கொள்வது நமது தனி இயல்பு போலும்!



என்ன அம்மாமி அடையாளமே தெரியலே!

அவர் போனத்துக்கப்புறம் சாதத்தை கண்ணாலே காணலேடியம்மா, அதான் தரும்பாப் போயிட்டேன்

ஸ்ரீமான் ஏ. கே. செட்டியார்.

புதுச்சேரி

சொந்த நாட்டில் சுதந்தரத்தை இழந்த பிரெஞ்சுக்காரர்கள், உலகத்தில் பல நாடுகளை **இன்னும்** அடக்கி யாள்கிறார்கள். இத்தகைய நாடுகளில் பிரெஞ்ச் இந்தியாவும் ஒன்று. இந்த பிரெஞ்ச் இந்தியாவின் தலைநகரம் **புதுச்சேரி.**

சென்னையிலிருந்து புதுச்சேரி சுமார் 120 மைல். விழுப்புரம் வழியாக ரயிலில் செல்லவேண்டும். இவ்வூரை **புதுவை** என்றும் **பாண்டிச்சேரி** என்றும் **பாண்டி** என்றும் பலவிதமான பெயர்களால் அழைப்பார்கள். புதுச்சேரியின் ஜனத்தொகை சுமார் 60 ஆயிரம். பெட்ரோல் கட்டுப்பாடு வருவதற்குமுன் இங்கு அறுநூறு மோட்டார்களுக்கு மேலிருந்தனவாம். ஆனால் இப்பொழுது வீதியில் ஓடும் மோட்டார்களின் தொகையை விரல்விட்டு எண்ணி விடலாம்.

புஷ்புஷ்' என்பது ஒருவிதமான வண்டி. இவைகளில் சில டேக்காட்டுகள் மாதிரியும், சில பெட்டிவண்டிகள் மாதிரியும் இருக்கும். மூன்று அல்லது நான்கு சக்கரமுள்ள இவ்வண்டிகளை மிருகங்கள் இழுப்பதில்லை. மனிதர்கள்தான் பின்னாலிருந்து தள்ளுவார்கள்.

இந்த வண்டிகளுக்குத் தக்கபடி இரண்டுபேர் முதல் நான்குபேர் வரை இதில் பிரயாணம் செய்யலாம். வண்டியில் உட்கார்ந்திருப்பவர்களில் ஒருவர்தான் ஸ்டியரிங்கைப் பிடிக்கவேண்டும், இந்த ஸ்டியரிங் என்பது ஒரு நீளமான இரும்புக்கம்பி, எந்தப் பக்கம் போகவேண்டுமோ, அந்தப் பக்கமாக இந்தச் சுக்கானைத் திருப்பவேண்டும்.

வண்டியின் பின்னாலிருந்து வண்டியைத் தள்ளுகிற மனிதனுக்கு, வீதியில் வருபவர்களைத் தெரியாது. வண்டியில் உட்கார்ந்திருப்பவர்தான் மணியடித்தோ அல்லது சப்தம் போட்டோ வீதியில்போகிற ஜனங்களை விலக்கவேண்டும். இந்த வண்டிகளுக்கு பிரேக் என்பதே கிடையாது. வண்டியை நிறுத்தவேண்டுமானால், வண்டியைத் தள்ளுகிற மனிதனிடம் தான் கூறவேண்டும். பல சமயங்களில் வண்டியிலிருப்பவர்கள் சொல்வது, வண்டியைத் தள்ளுகிறவர்களுக்குக் கேட்காமல் போய்விடும். வண்டியிலிருப்பவர் நிறுத்தும்படி கூறினால், வண்டியைத் தள்ளுகிறவன் விஷயம் தெரியாமல் வண்டியை வெகு வேகமாகத் தள்ளுவான். இதனால் பல விபத்துக்கள் ஏற்படுவதுண்டு. பொதுவாக வண்டியைத் தள்ளுகிறவனை விட, வண்டியில் உட்கார்ந்து சுக்கானைப் பிடிப்பவருக்குத்தான் கஷ்டம் அதிகம். நல்ல காலமாக, இந்த புஷ் புஷ் வண்டிகள், பிரெஞ்ச் ஏகாதிபத்தியத்தைப் போல மறைந்துகொண்டே வருகின்றன.

புதுச்சேரியில் நூற்றுக்கணக்கான ரிக்ஷாக்கள் இருக்கின்றன. சென்னை ரிக்ஷாக்களைவிட இவைகள் மிகவும் சௌகரியமானவை, இரண்டுபேர் தாராளமாக உட்காரலாம், சில சமயங்களில் அரையணவுக்கு ரிக்ஷா சவாரி செய்யலாம்.

பிரிட்டிஷ் இந்தியாவின் நாணயம் புதுச்சேரியில் செலாவணியாகும். ஆனால் புதுச்சேரியில் வழங்கப்படும் பிரெஞ்ச் இந்திய நோட்டுகளுக்கு பிரிட்டிஷ் இந்தியாவில் மதிப்பில்லை. பிரெஞ்ச் இந்தியாவுக்காக, சைகோனிலுள்ள இந்தோ-சீன பாங்க், நோட்டுக்கள் வெளியிட்டிருக்கின்றது.

தற்பொழுது பிரெஞ்ச் இந்தியாவுக்கும் இந்தோ-சீனவுக்கும் எவ்விதத் தொடர்பும் போக்குவரத்தும் கிடையாது என்றாலும் இந்தோ-சீன பாங்க் வெளியிட்ட நோட்டுக்கள், பிரெஞ்ச் இந்தியாவில் **இன்னும்** செலாவணியாகிக்கொண்டிருக்கின்றன.

புதுச்சேரி நகரத்தை இரண்டாகப் பிரிக்கலாம், முதலாவது சமுத்திரக் கரையை யடுத்து ஐரோப்பியர்கள் வசிக்கும் பகுதி, இரண்டாவது இந்தியர்கள் வசிக்கும் பகுதி, ஐரோப்பியர்கள் வசிக்கும் பகுதி மிகச் சுத்தமாக இருக்கும். இப்பகுதியில் இப்பொழுது பல இந்தியர்கள் வசிக்கிறார்கள். இந்தியர்களே வசிக்கும்மற்ற பகுதி சிறிது சுகாதாரக் குறைவாக இருக்கும்.

புதுச்சேரியிலுள்ள புதுமைகளில் ஒன்று வீதிகள் கோணலே இல்லாமல் நேராக இருக்கும். வீதிகளின் இருமருங்கிலும் திறந்த சாக்கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வீதிக்கும் வீட்டுக்கும் நடுவே இருக்கிறது இந்தச் சாக்கடை; வீதியிலிருந்து வீட்டுக்குச் செல்வதென்றால், இந்தச் சாக்கடையைத் தாண்டித்தான் செல்லவேண்டும்.

புதுச்சேரியின் மற்றொரு புதுமை கண்ணாடி பங்களா. கட்டடம் சிறிது. எங்கும் கண்ணாடி, சுவர்களெல்லாம் கண்ணாடி, மேலே பார்த்தால் கண்ணாடி, பார்க்குமிடங்களிலெல்லாம் உங்களுடைய திருவுருவம்தான் உங்களுக்குக் காட்சியளிக்கும். சில கண்ணாடிகளில் பார்த்தால் உங்கள் உருவம் பலமடங்கு பெரிதாகத்தோன்றும். சில கண்ணாடிகளில் உங்கள் உருவம் மிக நீளமாகத் தோன்றும். இந்தக் கண்ணாடி பங்களா பார்க்க மிக அழகானது, ஆனால் வசிப்பதற்குச் சிறிதும் உபயோக மில்லாதது.

புதுச்சேரி ஒரு துறைமுகம், ஒரு காலத்தில் ஏராளமான கப்பல்கள் இங்கே வந்தன. இத்துறைமுகத்திலிறக்கப்படும் சாமான்களுக்குத் தீர்வை கிடையாது, எனவே பிரான்ஸிலிருந்து வந்த ஸில்க், ஸெண்ட் முதலிய பல பொருள்கள் இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைத்தன. குடிவகைகள் மிக மிக மலிவாகக் கிடைத்தன. ஒரு காலத்தில் புதுச்சேரி, குடியர்களின் சுவர்க்கமாக விளங்கிற்று. புதுச்சேரி துறைமுகமாயிருந்த போதிலும், கப்பல்கள் கரையோரத்தில் வந்து நிற்பதில்லை. கரையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் நங்கூரம் போட்டு நிற்கும். கரையிலிருந்து சுமார் இரண்டு பர்லாங் நீளம் சமுத்திரத்தில் ஒரு பாலம் கட்டியிருக்கிறார்கள். இப்பாலத்தின் கோடியிலிருந்து, படகுகள் மூலமாகக் கப்பலுக்குச் செல்ல வேண்டும். நீளமான இப்பாலத்தின் இரு ஓரங்களிலும் சாய்வு பெஞ்ச்கள் போடப்பட்டிருக்கின்றன. புதுவை வாசிகள் பலர், மாலை நேரங்களில் இங்குவந்து சமுத்திரக்காற்றை ஆனந்தமாக அனுபவிப்பார்கள்.

கடற்கரையிலே அழகான பார்க் ஒன்றிருக்கிறது. இந்துக்களின் விக்ரகங்கள் சில இந்தப் பார்க்கிலே அழகுப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. **டூப்ளே** எனும் பிரெஞ்ச்காரனின் உருவச் சிலையும் இங்கு வைக்கப்பட்டிருக்கிறது.

புதுச்சேரியில் ஐந்து சினிமாக்கள். பெரும்பாலும் தமிழ்ப் படங்கள் தான் காட்டுகிறார்கள். மாதமொன்றுக்கு இந்தச் சினிமாக் கொட்டகைகளில் சுமார் முப்பதாயிரம் ரூபாய் வசூலாகிறது. இதில் சுமார் மூவாயிரம் ரூபாய், நகரசபைக்கு, தமாஷா வரியாகப் போய்விடுகிறது. புதுச்சேரி நகரசபையின் முக்கியமான வருவாய்களில் இதுவும் ஒன்று.

புதுச்சேரியில், வீதிகளின் பெயர் பிரெஞ்ச், தமிழ் ஆகிய இரு பாஷைகளில் எழுதப்பட்டிருக்கும். பிரிட்டிஷ் இந்தியாவில் தமிழும் ஆங்கிலமும் கலந்து பேசுவதுபோல, புதுவையில் தமிழும் பிரெஞ்சும் கலந்து

பேசுகிறார்கள். இவ்வூரில் க்ஷவரக்கடை ஒன்றுக்கு **"நவீன தலையலங்காரம் செய்விடுதி"** என்று பெயர். பிராமணாள் காபிகிளப் ஒன்றிற்கு **"அன்சாரி கபே"** என்று பெயர்.

சம்பா கோவில் எங்கே யிருக்கிறதென்று கேட்டால், ஒரு பெரிய மாதா கோவிலைக் காட்டுவார்கள். ஆதியில் இது சம்பாதீச்வரர் எனும் மூர்த்தியைக் கொண்ட இந்துமதக் கோவிலாம். இப்பொழுதும்கூட, இந்த மாதா கோவிலில், சிலுவைக்குப் பின்னால் லிங்கம் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

புதுச்சேரி அரசாங்கம், தன்னிடத்தில்வந்து தஞ்சமடைந்தவர்களைக் காட்டிக் கொடுப்பதில்லை. கடன்காரர்களின் தொல்லைகளுக்கும் வாரண்டு களுக்கும் பயந்து எத்தனையோ ஆயிரம்பேர் இங்கே சரண்புகுந்தனர். அரசியல் தொந்தரவுகளுக்காக புதுச்சேரியில் வசித்தவர்கள் பலர். இவர் களில் **அரவிந்த கோஷ், வ. வே. சு. ஐயர், சுப்பிரமண்ய பாரதியார்** ஆகியோரைக் குறிப்பிடலாம்.

அரவிந்த ஆச்ரமம் புதுச்சேரியில் மிகக் குறிப்பிடத்தக்க இடம் ஐரோப்பியர்கள் வசிக்கும் பகுதியில், ஆச்ரமத்துக்குச் சொந்தமாக சுமார் இருபது கட்டிடங்கள் இருக்கின்றன. ஆச்ரமத்தில், அந்நிய நாட்டினரும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்தவர்களும், முக்கியமாக வங்காளி களும், ஆண்களும் பெண்களுமாக சுமார் 150 பேர் வசிக்கிறார்கள். பல தமிழ் நூல்களை எழுதும், **ஸ்வாமி சுத்தானந்த பாரதியாரும்**, வருவாய் நிறைந்த வக்கீல் தொழிலை உதறித் தள்ளிய **ஸ்ரீ துரைசாமி ஐயரும்** இங்கே தான் வசிக்கின்றனர். ஆச்ரமத்துக்கு உள்ளே நடக்கும் விஷயங்களை, **அன்னை**யென அழைக்கப்படும் ஒரு பிரெஞ்சு மாது கவனிக்கிறார். ஆச்ர மத்துக்கு வெளியே நடக்கும் விஷயங்களை ரகசியப் போலீசார் கவனிக்கின்றனர்,

---

சித்திர ரகளை

"அடைக் கலம் புகல்"

ஸ்ரீ. எல். நாராயணராவ், காமெடியன்

நடுத் தெருவில்

நான் வெகு அவசரமாக ஸ்டுடியோவிற்குப் போய்க்கொண்டிருந்தேன். வழியில் ஒருவர் "சார்! ராயரவாள், ராயரவாள்!" என்று பலத்த கர்ஜனை செய்தார். இம்மாதிரி என்னை நடுத்தெருவில் வழிமறித்தான்சாமியைப்போல் பிடித்துக்கொண்டு பேசும் நண்பர்கள் பலர் உண்டு. ஆனால் இப்போது கூப்பிட்ட குரல் புதிய மாதிரியாக இருந்தது. உடனே திரும்பிப் பார்த்தேன். எனக்கென்னவோ அவர் முகம் முற்றிலும் புதிதாகத்தான் இருந்தது. இருப்பினும் அவர் என்னை நெடுநாள் பழகிய நண்பரைப்போல். "என்ன சார்! இத்தனை அவசரமாகப் போகிறீர்?...நில்லுமே, நானும் வருகிறேன்." என்று கூறியவாறு அவருடைய பரிபூர்ண அன்பை என் முதுகில் அள்ளிவீசி ஒரு தட்டு தட்டினார்...அது ஆவேசத்துடன் அடித்த அடிபோல் விழுந்து என் முகத்தைச் சுளிக்கச் செய்தது. திரும்பி அந்த ஆசாமியை ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்தேன்.

அவரோ ப்ரமாதமாகப் பல்லிளித்துக்கொண்டு "ஹி...ஹி...ஹி... என்னைத் தெரியவில்லையா...நான் ஒரு பழயகால மனிதன்"...என்று ஆரம்பித்தார். அதற்குள் எனக்குக் கோபம் சிறிது உண்டாகியதால் "ஆமாம்...நீர் முற்றிலும் பழயகால மனிதர் என்பதை உமது கைச் சரக்கிலிருந்தே தெரிந்துகொண்டேன்...நான் வருகிறேன்" என்று பின்னும் இரண்டடி விசையாக நடந்தேன்.

"சார்! சார்! என்ன இப்படி போறேளே...நான் உங்களைப் பார்க்கப் பத்துநாட்களாக அலைந்துஇன்று கண்டுபிடித்துவிட்டேன். ஆதியில் வேல் நாயர் கம்பெனியில் நீர் ஹாஸ்ய நடிகராக நடித்த காலம் முதல் நான் விடாதுபார்த்துக் களித்தவன் சார்!....நீர் நடித்துள்ள படங்களில் ஒன்றுகூட பாக்கியில்லாது பார்த்து வருகிறேன்...அடாடா!...என்ன தத்ரூப நடிப்பு சார்!"...

எனக்கு அவசரம். நான்போய் உடனே மேக்கப்பு போட வேண்டும். அங்கு காத்திருப்பார்கள். ஆகையால் அவசரமாகப் பறந்தவாறு 'உம்...எல்லாம் உங்க அபிமானம்.' என்று கூறியவாறு நடந்தேன்.

அந்த மனிதர் என்னை விடுவதாக இருந்தால்தானே. கையை வேறு பிடித்துக்கொண்டு, "ஏன்சார்....நேற்று இன்று முளைத்த ஹாஸ்ய நடிகர்களெல்லாம்... பத்திரிகைகளில் பேட்டி என்றும் கட்டுரை என்றும் எழுதிவிடுகிறார்களே. ஆதிகாலமுதல் நாடகத்திலும் சினிமாவிலும் இத்தனை அனுபவம் வாய்ந்த நீங்களேன் கட்டுரைகள் எழுதக்கூடாது? நான் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப்

போகிறேன். அதில் உங்கள் அனுபவத்தை எழுதவேண்டும் என்று கேட்பதற்கே உங்களை...

இதற்குமேல் எனக்கு நிற்கவே முடியவில்லை. அவருடைய வார்த்தையில் முற்றுப்புள்ளி எங்கிருக்கிறதோ காணவில்லை... "சார்!...எனக்கு நேரமாகிறது. அனுபவமிருப்பதென்னவோ வாஸ்தவந்தான். ஆனால்...என்மாதிரியே...என் சுபாவமே வேறு சார்!...

அவர்:—சார்! சார்! நில்லுங்கோன்னு...வேராவது வ்ருக்ஷமாவது? நாடகத்தின் நடிப்புக்கும் சினிமா நடிப்புக்கும் உள்ள வித்யாஸத்தை...

நான்:—(இடைமறுத்து,) சார்!...இதெல்லாம் மிகவும் பெரிய விஷயம். இந்த நடுவீதியில் பேசுவதற்கு அவகாசம் போதாது. சாவகாசமாகச் சந்தித்துப் பேசாலாம். நான் வருகிறேன்.

அவரா என்னை விடுகிறவர்? "ஸார்!...பெரிய விஷயமாக இருப்பதால்தான் பெரிய தெருவில் பேசுகிறேன். உங்கள் அபிப்ராயத்தில் நாடகக் கலை உயர்வா...சினிமாக்கலை உயர்வா...சொல்லுங்கள்" என்று ஒரு புதிர்போல் கேட்டார்.

'இதென்னடா கேள்வி?' என்று சற்று திகைத்தேன்...உடனே "சார்...உமக்குப் பிறந்துள்ள குழந்தைகளில் பெண்குழந்தை ஒசத்தியா...ஆண்பிள்ளை ஒசத்தியா...அதைச் சொல்லும். பிறகு நான் சொல்லுகிறேன்" என்றேன். அவரும் இந்த பதிலைஎதிர்பார்க்கவில்லை என்பதை அவர்முகம் எடுத்துக் காட்டியது...'அப்படியானால் இரண்டு கலைகளும் உயர்வுதான் என்றுசொல்லுகிறீரா?'...என்றார்.

நான்:—ஆக்ஷேபனை என்ன. இரண்டு கலைகளும் அததற்குள்ள முறைப்படி ஒழுங்காக நடக்குமானால் இரண்டும் உயர்வுதான். இன்னும்கேட்டால் சினிமாவை பெண்குழந்தை என்றும் நாடகத்தை ஆண்குழந்தை என்றும் நான் கூறுவேன்...

அவர்:—அதென்ன சார்!...

நான்:—பெண்குழந்தைக்கு ஒரு குறிப்பிட்ட வயசு வரையில், வெகு மேன்மையான முறையில் அவளை வளர்த்து கல்வி, சங்கீதம் முதலியன போதித்து ஒருவருக்கு விவாகம் செய்து கொடுக்கும் வரையில், பெரிய பாரமாக இருக்கும். கொடுத்துவிட்டபின் புக்ககத்தில் பெண்ணை நன்றாக வைத்துக்கொள்வதும், கணவன்ப்ரியமாக விருப்பதும் அவளுடைய அதிருஷ்டம். அதுபோல் சினிமாவில் தன் பாகத்தை நடிக்கும் வரையில் வெகு ச்ரமமாயும் பயமாயும் இருக்கும். நடித்து முடிந்தாய்விட்டால் ஒரு பாரம் இறங்கிவிடுகிறது படம் நன்றாக ஓடுவதும் மதிக்கப் படுவதும் அந்தந்த படத்தின் தலைவிதி...நல்ல படமாயின் நல்ல பெண் புக்கத்தில் பேரெடுப்பது போல் எடுத்து, சாகாத வரம் பெறுகிறது. அடாஸ் படமாயின் குணங்கெட்ட பெண்ணைப்போல் ஆகிறது. பிள்ளைக்குழந்தையாயின் அவனுக்கு ஒரு குறிப்பிட்ட காலவரை கிடையாது. உயர்ந்த கல்வி கேள்விகளால் சிறந்தவனாகச் செய்துவிட்டால்கூட தகப்பனார் தன்னுயுள் வரையில் அவனையும் அவன் மக்கள் மனைவியையும்

காத்து கவனிக்கக் கடமை உண்டாகிறதுபோல் நாடகம் ஒரு நாள் நடித்ததோடு நின்றுவிடாது பாரும். எத்தனை நாடகம் போட்டாலும் அத்தனையிலும் தான் நேரில் நடித்துக் காட்ட வேண்டியபொறுப்பு இருப்பதால் ஒவ்வொரு நாடகத்தையும் வெகு ச்ரமப்பட்டு நடிக்கவேண்டும். அப்போதுதான் பெயர் கெடா திருக்கும்...ஐயையோ! மணியாகிவிட்டதே...டைரெக்டர் வந்திருப் பாரே"...என்று கூறிக்கொண்டு நடந்தேன்.

நல்ல வழிமறித்தான் சாமி என்னை மடக்கிக்கொண்டது... எனக்குமேல் வேகமாக என்னெதிரில் வந்து மடக்கி..."சார்... டைரெக்டர்களால் சினிமா ப்ரகாசிக்கிறதா?...நடிகர்களால் ப்ரகாசிக்கிறதா?" என்றார். எனக்கு எரிச்சல் ஒருபுறம் வந்தது... "சார்...ஒரு விளக்கு திரியினால் ப்ரகாசிக்கிறதா, எண்ணெயினால் ப்ரகாசிக்கிறதா? அவ்விரண்டையும் தாங்கும் அகல், அல்லது குத்து விளக்கு இவைகளால் ப்ரகாசிக்கிறதா....சொல்லும். விளக்குதான் மூலப்பொருளாகிய கதை. திரியும்எண்ணெயும்நடிகர்களும் டைரெக் டர்களும் ஆகும்...இம்மூன்றும் நன்றாக, சிறந்ததாக இருந்தால் படமும்சிறப்பாகஇருக்கும். நல்லஉயர்ந்த பஞ்சும்திரியும்புத்தருக்கு நெய்யும்விட்டு ஒரு ஓட்டை அகலில் விளக்கேற்றினால் எப்படியோ அப்படிதான் உயர்ந்த கதையில்லாத படம். உயர்ந்த கதை வெள்ளி அகல்போல் இருந்து கசண்டு எண்ணெயும், நின்று எரியாத பிச பிசவென்ற திரியும் இருந்தாலும் உபயோகமில்லை. மேற்கூறிய மூன்றும் அமைந்தால்தான் மிகவும் உன்னதமான படம் உண்டாகிறது.

அவர்:—சார்! இத்தனை அனுபவத்தையும் அப்படியே எனக்கு எழுதிக் கொடுக்கிறீர்களா!

நான்:—ஆகா! இப்போது என்னை விட்டுவிடும். நான் கட்டாயம் எழுதியனுப்புகிறேன்...என்று கூறிக்கொண்டு அங்கு தற்செயலாக வந்த ஒரு பஸ்ஸில் ஏறி உட்கார்ந்துவிட்டேன். இந்த மனுஷ்யன் இதோடு என்னை விட்டார் என்கிற பெரிய நிம்மதி உண்டாகியது. உடனே பஸ்ஸும் கிளம்பியது.

"கண்டக்டர்!...அதோ அவருக்கும் எனக்கும் சேர்த்து டிக்கட்டுக்குப் பணம்"...என்று அதே ஆசாமி ஓடுகிற பஸ்ஸில் கேட்கும்போது நான் ப்ரமிப்புடன் சிரிக்காமல் என்ன செய்ய முடியும்? அந்த மனிதர் என்னோடு ஸ்டுடியோவுக்குத்தான் வரப் போகிறாப்போலிருக்கிறதே! என்று நடுங்கினேன்.

அப்படியே ஸ்டுடியோவுக்கு என் பின்னாலேயே தொடர்ந்தார். 'இதேதடா தர்மசங்கடமாயிருக்கிறதே!' என்று நான் நினைப்பதற் குள். "சார்! நான் உங்கள் நடிப்பை இன்று நேரில் பார்க்கத்தான் கூடவருகிறேன்:" என்று உள்ளே வந்தார்.

உள்ளே நுழைந்ததும் முதலாளி "என்ன சார் இத்தனை நேரம்?" என்றார்.

கூடவந்தவர் சற்று தூரத்திலிருந்ததால்..."ஏதோ ஒரு அசமஞ்சம் வழியில் மடக்கிவிட்டது சார்!....அதோ பாருங்கள் கூடவும் வந்துவிட்டது"...என்றேன்.

அவரைப் பார்த்த முதலாளி "அடாடா!...வாருங்கள்; வாருங்கள்...இவரைத் தெரியாதா சார்! இவர் ஒருபட முதலாளி; உங்களே அடுத்த படத்திற்குப் புக் செய்யவேண்டுமென்று என்னிடம் கேட்டார். நேரிலேயே பார்த்துவிட்டாரா?" என்றார்.

இதைக்கேட்ட எனது வியப்புகரை புரண்டது. "இம்மாதிரி முதலாளியிடம் வேறு அகப்பட்டுக்கொண்டு விழிக்கவேண்டுமா?" என்ற ஒரு புதிய எண்ணம் என் மனத்தில் புகுந்தது.

அனுபவ ஞானமும், மேன்மையான அபிப்பிராயங்களும் உள்ள ஸ்ரீமான் ராயர் அவர்கள் தெரிவித்த அரிய விஷயங்களே, ரஸமான கற்பனே சேர்த்து ஸ்ரீமான் "அட்வோகேட்" எழுதியுள்ளதை நீங்கள் மிகவும் ரஸிப்பீர்களென்று நம்புகிறேன். ஸ்ரீமான் ராயர் அவர்கள் பேச ஆரம்பித்தாலோ மணி கணக்கில் ரஸிக்கும் வண்ணம் இருக்கும். அவர் சொல்லியதை இங்கு எழுதியுள்ளது எவ்வளவு ருசிகரமாயிருக்கிறது பார்த்தீர்களா?

"ஸ்ரீவத்ஸன்" எடுத்த 5 படங்கள்

ஸ்ரீரங்கம்:—பூலோக வைகுண்டம் என்று கொண்டாடப்படும் ஸ்ரீரங்கத்தில் பிரஹ்மோத்ஸவத்தின்போது கோபுர வாசலில் போட்டுள்ள பந்தலில் செய்துள்ள அரிய வேலையைப் பாருங்கள்.

திருவெள்ளரை:—"வெள்ளரையைக் கண்டாயா?" என்று ஒவ்வொருவரையும் கேட்பானும் சித்திரகுப்தன், "கண்டேன்" என்று பதிலுரைப்பவர்களுக்கு பாபம் குறைந்துவிடுமாம் என்று ஒரு நம்பிக்கை இருந்துவருகிறது. ஸ்ரீரங்கத்திலிருந்து சுமார் 25 மைல் தூரத்திலுள்ள திருவெள்ளரையில் ஸ்ரீ புண்டரீகாக்ஷ ஸ்வாமியை எல்லோரும் அவச்யம் சேவிக்கவேண்டும். ஸ்ரீரங்கத்தின் முன் கோபுரத்தைப்போல் இங்கும் 'மொட்டைகோபுரம்' உளது.

பெங்களூர்—பெங்களூரில் உள்ள குகைக்கோயில் பிரசித்தி பெற்றது. அங்குள்ள லிங்கேச்வரரையும் அம்பிகையையும் எல்லோரும் ஸேவித்து மலைக்குள் குடைந்துள்ள சந்நிதி பிராகாரத்தைப் பிரதக்ஷிணம் செய்வது ஒரு அபூர்வ அனுபவம். அக்கோயிலிலுள்ள உடுக்கை ஒரு விசேஷ அம்சம்.

தஞ்சாவூர்—படத்தில் காணும் கோபுரம் எந்த கோவிலேயும் சேர்ந்ததல்ல. தஞ்சாவூர் அரண்மனையிலுள்ள கண் காணிப்பு கோபுரம் (Watch Tower). இதன் மேலிருந்து பார்த்தால் தஞ்சாவூர் முற்றும் ஒரு தோப்புக்குள் அடங்கியுள்ளதாகத் தோன்றும்.

ஹம்பி—சரித்திரப் பிரசித்திபெற்ற விஜயநகர ராஜ்யத்தில் விசேஷ ஸ்தலங்களுள் படத்தில் காணப்படும் "லோடஸ் மஹால்" மிகவும் முக்கியமானது. இன்றும் அது அழகுடன் விளங்குகிறது.











பண்டிதை ஸ்ரீமதி கிருஷ்ணவேணி அம்மாள்.

பூ மாலையும் பா மாலையும்

இறையன்பில் ஆழ்ந்து நின்ற காரணத்தினால் ஆழ்வார்கள் எனப்பெயர் பெற்ற சீரியர் பன்னிருவர். அவருள் ஒருவர் பெண்மணியாக விளங்கினார். இவர் மற்றய ஆழ்வார்களுக்கு மகளார் எனப் பகரப்படுகிறது. "அஞ்சு குடிக்கொரு சந்ததி" என்பது இதனை வலியுறுத்தும். தந்தையர் செல்வம் யாவும் மகளாரைச் சாருமன்றோ! இம்முறையில் மற்ற ஆழ்வார்களின் பக்தி வைராக்கியங்கள் முற்றும் இவரிடம் மடையெனத் தேங்கின. இதனால் இவர் அவர்களைக் காட்டிலும் பக்தி வைராக்கியங்களில் விஞ்சி நிற்றற்குத் தடையாது? இத்தகையோர் யாவர்? நம்மை ஆளவந்த ஆண்டாளே ஆவார். இது நிற்க.

பூமாலை பாமாலை என்னும் இத்தலைப்பை நோக்கலும் யார்மாட்டு நம் எண்ணம் செல்லும்? சூடியும், பாடியும் கொடுத்த நம் நாச்சியாரிடமே யன்றோ! ஏன்? இத் தொண்டுகளில் மற்றையோரைக் காட்டிலும் முன்னணியில் நின்றவர் இவரே யாவர்.

பெரியாழ்வார் பூமாலைகளைத் தொடுத்துத் திருமாலுக்குச் சூட்டி பக்தி பரவசத்தினால் அவரைத் தொழுதுநின்றார். ஆனால் நம் கோதையாரோ, அத் தொண்டுடன் மட்டும் நிற்கவில்லை. இவர் பக்தி பெரியாழ்வாரைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்து செல்லுகிறது.

முதன்மையில் அன்னையார், தம் தந்தையார் வைத்துச் சென்ற கண்ணிகளை ஒவ்வொன்றாக எடுத்து இறைவன் திருமேனிக்கு மனத்தினால் பொருத்தி மனக் கண்ணால் காணுகின்றார். அதில் ஓர் அழகு தோன்றுகிறது! அந்த அநுபவத்துடன் நிற்க, இவர் மனம் இசையவில்லை. இன்னும் சிறிது ஆழ்ந்து செல்லுகிறார். எம்பெருமானைத் தம்முன், முற்றும் உருவகப் படுத்துகிறார்; அவ்வுருவத்திற்கு எல்லா மாலைகளையும், அந்தந்த இடங்களில் சூட்டியதாகப் பாவிக்கின்றார். அவ்வமயம் மூர்த்தியைக் காட்டிலும் அவன் அழகு பன்மடங்கு ஒளிவிட்டு ஒளிருகிறது. இவர் மனம் அவர் நலங்களில் ஈடுபட்டது. 'என்ன கெம்பீரம்! என்ன முக ஒளி! என்ன புன்முறுவல்! என்ன அழகு!' என நெடுகச் சொல்லிக்கொண்டே போகின்றார். இங்ஙனம் நம் அன்னையார் எம்பெருமானின் உடலழகை (திவ்யமங்கள விக்கிரகத்தின் சீர்மைகளை) வாய்விட்டுக் கூறி இன்பந்துய்த்தார் என்பது அவர் பாசுரங்களால் அறியலாம்.

கெம்பீரம்:—

"குண்டு நீருறை கோளரீ" — நாச்சியார் திருமொழி 2-3
"காய்சின மாகளிறன்னான்" — ,, 6.7
"பட்டி மேய்ந்தோர் காரேறு" — ,, 14-1

முக ஒளி:—

"எங்களை, மையலேற்றி மயக்க உன் முகம்
மாய மந்திரந்தான் கொலோ" — ,, 2-4

புன்முறுவல்:—

"முத்தன்ன வெண் முறுவல் செய்ய" ,, 5-6

"முற்றத்தூடு புகுந்து நின்முகங் காட்டிப்
புன்முறுவல் செய்து" ,, 2-9

அழகு:—

"எம் அழகனார்" ,, 4-10

"சுந்தரத் தோளுடையான்" ,, 9-1

"சுந்தரனைச் சுரும்பார் குழற்கோதை" ,, 9-10

"அழகப்பிரானார்" ,, 10-8

"குழலழகர் வாயழகர் கண்ணழகர்
கொப்பூழில் எழுகமலப் பூவழகர்" ,, 11-2

இங்ஙனம் ஈடுபட்ட இவர் "யான், இத்துணைச் சீரியரை நாயகனாய்ப் பெறக் கருதுகின்றேனே! என்ன அறியாமை! அடியாள் இவருக்கு எவ்வகையில் ஒப்புடையேன்! யாதொரு நலனுமற்ற என்னை இவர் யாங்ஙனம் விரும்புவார்! இவர் நம்மை அங்கீகரிப்பார் என நினைத்த எண்ணம் வீணாயிற்றே! இப்பிறவி பயனற்றதுதானோ! இவ்வுலகில் வாழ்வதில் சுகமென்னே! பிறந்ததற்குப் பெருமை பெருமாளை அடைவதன்றோ! இன்றேல் உலகம் நகையாதோ! பெரியாழ்வார் பெண்ணாகத் தோன்றினேனே! அதற்கேற்ற வீடடைதல் யாங்ஙனம்!" என்னும் எண்ணங்கள் அவருக்கு ஒன்றின்பின்னொன்றாகத் தோன்றலாயின. பின்பு ஆடை அணிகளால் தம்மை ஒப்பனை செய்துகொண்டு அவனோடு தம்மை ஒப்பிட்டு நோக்கக் கருதுகிறார்: அவனுக்கென வைக்கப்பட்ட அம்மாலைகளையும் சூட்டிக்கொள்ளுகிறார்; இதைக் "காறை பூணும் கண்ணாடி காணும்" என்னும் பெரியாழ்வார் வாக்கு வலியுறுத்தும். நிலைக்கண்ணாடியில் தம் ஒவ்வொரு அவயவத்தின் அழகையும் உற்று உற்று நோக்குகின்றார். 'எம்பெருமான் தன்னை ஏற்றுக்கொள்ளுவானா? என்பதுதான் அப்போதிருந்த இவர் ஊன்றிய எண்ணம். இவர் இந்நிலையில் பரவசப்பட்டு மற்றவற்றையும், தம்மையும் மறந்தார். தந்தையார் வரவையும் கண்டிலர். இவர் தூய அன்பினால் அம் மாலைகளில் நறுமணமும், புதிய அழகும் மிளிர்ந்தன. இங்ஙனம் சீரிய பக்தியும், உயர் எண்ணமும் ஊட்டப்பெற்ற இம் மாலைகளை எம்பெருமான் விரும்பி அணிந்தான். என்பதில் என்ன வியப்புளது? இந்நேரிய செயலன்றோ, சூடிக்கொடுத்த நாச்சியார் என்னும் திருநாமத்தை இவருக்குக் கொணர்ந்து கொடுத்தது. இவ்வியல்பு வாய்ந்த இவ்வம்மையாருக்குப் பெரியாழ்வார் தாம் எங்ஙனம் ஒப்பாவார்?

இனி பாமாலையைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்:—மலர்கள் ஒன்றின் பின்னொன்றாகத் தொடுத்ததற்குப் பூமாலை எனப் பெயரமைதல் போன்று பாக்களின் கோவைக்குப் பாமாலை எனப் பெயரமைகிறது.

உலகில் பல துறைகளில் வல்லுனரைக் காண்கின்றோம். ஆயினும் அவர்கள் யாவரிலும் ஓவியக் கலைஞரும், காவியக் கலைஞருமே சிறந்தவராவர். அவருள்ளும், வேறொரு துணையையும் வேண்டாது, தம் புலமையையும், சொற்களையுமே துணையாகக்கொண்டு, பல பொருள்களும் ஓவியமெனக் காட்சியளிக்குமாறும், இன்பத்தேன் சொரியுமாறும் மனப் பண்புகளும், ஆன்ம அழகுகளும் பளிங்கெனத் துலங்குமாறும் கவி யியற்றும் காவியக் கவிஞரே தலை சிறந்தோர் என்பது உலகம் அறியாததன்றே!

இத்துணை கவிஞருள் தலை சிறந்த நம் கோதையார் தம் காவியக் கலையினால் இரு நகரங்களை அமைக்கிறார்; அவற்றுள் ஒன்று பக்தி வைராக்கி

யங்கள் பதிந்துள்ள பண்புடை நகரம்; மற்றொன்று காதலும் வீரமும் கலந்து பாயும் கண்ணிய நகரம். முந்தியது, அவர் எம்பெருமானை அடைய இயற்றும் நோன்பை வரைந்து காட்டுகிறது. பிந்தியது இறைவனை அடைய விரைந்து நிற்கும் அவர் மனப்போக்கை படித்துக் காட்டுகிறது. இவை முறையே, திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் பெயர்களைப் பெற்றுள்ளன.

திருப்பாவைச் செல்வியார் தாம் கண்ணனை யடைதற்கு வழி கோலு கின்றார். கண்ணன் காலத்திருந்த இடைப் பெண்கள் அவனை அடைய நோற்ற நோன்பு ஒன்று அவர் நினைவிற்கு வருகிறது. ஆனால் ஆயர் மங்கையர் உண்மையாகவே நோற்ற நோன்பை இவர் கவிகளின் மூலம் பாவனையால் இயற்றுகின்றார். இவருக்கு இடைப் பேச்சும், இடைநடையும் அமைகின்றன. இஃதொரு வியப்பன்று! இடையர் நாற்றத்தையும் இவர் பெற்றார்! என்னே பாவனையின் ஊன்றுதல்! ஊன்றிய பாவனை உறுதி யளிக்குமன்றோ! இந்நோன்பிற்குத் திருப்பாவை எனப் பெயரிடுகின்றார். இதற்குப் பாவை எனப் பெயரிட்டதன் காரணங்களின் ஆராய்ச்சி இங்கு நமக்கு வேண்டுவதில்லை.

இத் திருப்பாவையாகிய ஓவிய நகரில் நந்தகோபன் வீரமும், தலைமையும், யசோதை அழகும், பெருமையும் விளங்க வீற்றிருக்கின்றன! இயற்கை அன்னை நடனம் புரிகின்றாள்! மக்கள் மனத்துளிர்களில் வைணவ தத்துவங்களாகும் வைரங்கள் ஒளிருகின்றன. விடியற்கால விளைவுகள் சோம்பலுடையாரையும் தட்டி எழுப்பி ஞானத்தை ஊட்டுகின்றன. இயற்கைத் தொழிலும், அவர் தம் செல்வமும் இணைந்து இலங்குகின்றன. மகளிர் மாண்புடன் ஒளிருகின்றனர். நறுமணம் வீசும் கூந்தலையும் பரந்த கண்களையும், நுண்ணிய இடையையும் உடைய நப்பின்னை கண்ணனோடு கலந்து களிக்கின்றாள். கண்ணனின் குண நலங்கள், முதன்மை, வீரம், அருள் அமைந்து ஆட்சிபுரிகின்றாள். பெரியாழ்வாரின் பெருந்தகைமையின் பேரொளி வீசுகின்றது. ஆண்டாளின் சான்றாண்மை, சீர்திருத்தம், மெட்பு, வீரம் முதலியன கலந்து காட்சியளிக்கின்றன. இந்நகரம் அவரவர் கூர்ந்த நோக்கிற்கேற்ப இன்னும் பல அரிய காட்சிகளை அளித்து ஆனந்த மூட்டுகிறது. இத்திருப்பாவை நகரில் தாம் கருதியவாறு கண்ணனை மனக் கண்ணால்கண்டு தமக்கு வேண்டியதைப் பெற்று இன்பத்தைத் துய்க்கின்றார். இவ்வின்பத்திற்கு இடையூறு ஏற்படுகிறது. கண்ணன் சிறிது மறைந்து நிற்கிறான். அன்னையார் மயங்குகிறார். மனத்தைப் பறிகொடுக்கிறார். அவனைப் பெறவேண்டுமென்னும் ஆர்வம் பொங்கி எழுகிறது. அவரது இவ்வேட்கைமிகுதியே இன்னுமொரு நாகரிக நகரத்தை அமைக்கின்றது. இந்நகரில் ஆண்டாள் ஆர்வமாகிற ஓர் அரண்மனையில் தன்னந்தனியராய் நிற்கின்றார்; இறையை அடைதற்கு தன் இச்சையிலும் தலையாய துணை வேறொன்று மிலது என்னும் தீர்மானத்தை அடைகிறார். ஆற்றாமை அணை கடந்து செல்லுகிறது. எம்பெருமானே வந்து தம்மை ஆட்கொள்ளும் வரை பொறுத்திருக்க இவரால் இயலவில்லை. மன்னனைக் காண விரும்புவோர் முதலில் காவற்காரன் உதவியை நாடுதல் போன்று முதலில் மன்மதனைத் தொழுகின்றார்.

"தொழுதுமுப் போதுமுன் னடியிணங்கித் தூமலர்
தூய்த்தொழு தேத்துகின்றேன்"

—நாச்சியார் திருமொழி 1-9

அன்னையாருக்கு எம்பெருமான் தம்மை வந்து கூடுவனோ என்னும் ஐயப்பாடு ஒன்று தோன்றுகிறது! அவ்வய்யத்தைப் போக்கிக்கொள்ள ஒரு குறி பார்க்கிறார்; வட்டமாகக் கோடு கீறி அதனுள் பல சிறு சுழிகளைச் சுழித்து, "ஓ கூடலே! திருமால் என்னைக் கைப்பற்றுவனேல் இரட்டையாகக் கூடுவாயாக!" என்று அச்சுழிகளை எண்ணிக் காணுகின்றார்.

"காட்டில் வேங்கடம் கண்ணபுர நகர்
வாட்டமின்றி மகிழ்ந் துறை வாமனன்
ஓட்ட ராவந்தென் கைப்பற்றித் தன்னொடும்
காட்டு மாகில் நீ கூடிடு கூடலே"

—நாச்சியார் திருமொழி 4.2

சிறிது மன ஆறுதலைக் கருதி மலர்ச்சோலையை நாடி வருகின்றார். அவண் ஒரு குயில் பேடையோடு மகிழ்வுற்றிருத்தல் அவர் கட்புலனுக்குக் காணப்படுகிறது. அதனைப் பார்த்துக் காதலியோடு இன்புற்று வாழ்குயிலே! என் உயிரன்னானை இங்கு வருமாறு கூவுதியேல் என் தலையாலே உன்னை வணங்குவேன் எனக் கெஞ்சுகிறாள்.

என்தத்துவனை வரக்கூகிற்றியாகிற் றலையல்லால் கைம்மாறிலேனே

—நாச்சியார் திருமொழி 5-6

இங்ஙனம் இரவும் பகலும், அவனையே நினைத்தல், பாடுதல் உருவெளிப் பாட்டில் அவனைக் காணுதல் முதலியவற்றில் ஊன்றி நின்ற இவரது துயிலிற் பரமன் கையைப் பற்றிக்கொண்டு தீ வலம் செய்வதாகக் கனவு காண்கின்றார்; களிக்கின்றார். அவர் ஆர்வத்திற்குச் சிறிது போக்கு வீடு எற்படுகின்றது.

"காய்சின மாகளி றன்னானென் கைபற்றித்
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீநான்"

—நாச்சியார் திருமொழி 6.7

துயிலுணர்ந்த கோதையாருக்கு இடக்கரத்தில் பாஞ்சசன்னியத்தைத் தாங்கிய பெருமான் உருவெளிப்பாட்டில் தோன்றுகின்றான். பூரணசந்திரன் போன்ற சங்கத்தை நோக்குகிறார். "சங்கமே, உன் புண்ணியமே புண்ணியம்! வேறொருவருக்கும் கிட்டாத பெறும்பேறன்றோ உனக்குக் கிடைத்துள்ளது! சிவந்த தாமரையில் தேன் உண்ணும் அன்னம் போன்றனன்றோ, சிவந்த கண்களையும் கருத்த திருமேனியையும் உடைய வாசுதேவனின் அழகிய காத்தில் பொருந்தி அவன் அதரத்தேன் உண்டு கண்வளருகின்றாய்! நீ பெற்ற பேறு மிகவும் சிறந்ததாகும்.

செங்கமல நாண்மலர்மேல் தேனுகரும் அன்னம்போல்
செங்கண் கருமேனி வாசுதேவனுடைய
அங்கைத் தலமேறி அன்னவசஞ்செய்யும்
சங்கரையா உன்செல்வம் சால அழகியதே.

—நாச்சியார் திருமொழி 7-7

"கார்காலம் வந்தது. அக் கால் மீண்டுவருவதாகச் சொல்லிச் சென்ற மாதவன் வந்திலன். விளங்கனியின் சத்து முழுவதையும் உண்டுச் செல்லும் கொசுகு போன்று என் பெண்மையையும், நிறையையும் கவர்ந்து சென்ற நாராயணனுக்கு என் துன்பநோயை உணர்த்துவாயா' என்று மேகத்தைத் தூது செல்லவிடுகிறார்:

"உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப் புகுந்து என்னை
நலங்கொண்ட நாராணற்கென் நடலைநோய் செப்புமினே"

—நாச்சியார் திருமொழி 8-6

இவருக்கு எம்பெருமானைச் சேரவேண்டும் என்னும் ஆர்வம் மேன் மேலும் பெருகி, தானே அவனிடம் செல்லத் தீர்மானித்தனர். இதையறிந்த தோழியரும், தாய்மாரும் நீயாகச் செல்லுதல் உனக்கழகன்று உலகம் பழிக்கும் எனக்கூற, இனி நாணிப்பயனில்லை. என்னிலையை யாவரும் அறிந்தனர். என்னைக் காக்கக் கருதுவீரேல் இப்போதே என்னை ஆய்ப் பாடியில் கொண்டுவிடுங்கள் என வற்புறுத்துகிறார்.

"நாணி யினியோர் கருமமில்லை நாலயலாரு மறிந்தொழிந்தார்
பாணியாதென்னை மருந்துசெய்து பண்டுபண்டாக்க வுறுதிராகில்
மாணியுருவாய் உலகளந்த மாயனைக் காணில் தலைமறியும்
ஆணையால் நீரென்னைக் காக்கவேண்டில் ஆய்ப்பாடிக்கே என்னை
உய்த்திடுமின்" —நாய்ச்சியார் திருமொழி 12-2

நம் கோதையார் பாமாலையின் நேர்மை என்னே! எண்ணங்களாகிற மலர்களும், உணர்ச்சியாகிற மணமும்,ஆர்வமாகிற தேனும் கலந்து தொடுக் கப்பட்ட மாலையன்றோ இது! நம் திருப்பாவைச் செல்வியின்பாலாகிய மலர்வனம் உவமையழகும், யாப்பின் மணமும் நிறைந்த மலர்களையும், இனிமையும் பொருட்சுவையும் சேர்ந்த கனிகளையும் தாங்கியுள்ளது. அதில் இறையாகிய தளிர் இலங்குகின்றது; காதல் நீரோடை களங்கமற்று ஓடுகிறது; தன்னலங் கருதா பளிங்குமேடைகள் எங்கும் உள்ளன; பக்தி எனும் தூய நீர் தடாகமும், வைராக்கியமெனும் தாமரைகளும் காணப்படு கின்றன; வீரமும் மென்மையும் கலந்த தென்றற் காற்று வீசுகின்றது. இத் துணை மலர்வனத்திலிருந்து வெளிவந்த பாமாலையின் மெட்பு எம்போன்றார் எடுத்தியம்பும் தன்மையுள்ளதோ! ஆற்றுநீர் ஒழுக்கையும், சான்றோர் உள்ளத்தையும் ஒத்த நடையும், தேனும், பாலும் கன்னலும் அமுதும் கலந்துள்ள ஓசையும் பொருந்தி உள்ளது.

மிக்க கல்வியறிவு நிரம்பாதவரும் மனனஞ்செய்யக்கூடிய எளிய சொற்களும், அவர் அறியக்கூடிய வெளிப்படையான பொருளும் அமைந் திருப்பினும், ஊன்றிச் சென்று ஆராய ஆராய எத்துணைத் தத்துவங்களும், அருமைப் பொருள்களும் கிடைக்கின்றன. ஈதன்றோ சீரிய கவிகளின் இலக்கணம்! உபமான உபமேயங்கள், உருவகங்கள் இயற்கையிலிருந்து கிளம்பிக் கிளம்பி நம் அன்னையார் நாவை அடைக்கலமாக அடைந்து வெளிப்படுகின்றன. மலர்ந்த மரம் காற்றினால் மலர்களைக் கொட்டுவது போன்றன்றோ புலமை நிறைந்த இவர் நா, பொருட்செறிந்த சொற்களைக் கொட்டுகின்றது. சொற்களிலும், ஓசையிலும் சிறு துன்பமேனும் உண்டா? சிறுவரும் எளிதாகப் படித்து இன்புறுவரே! தமிழின் இனிமையை இவர் பாசுரங்களின் வழியாகவன்றோ காணுதல் வேண்டும்! சொற்கள் மட்டுமோ தமிழ்! கருத்துகளும் ஒழுக்கமும் செயலும் யாவுந் தமிழே. இவை ஒவ் வொன்றிற்கும் அகச்சான்றுகள் உள. சமயம் நேர்ந்துழி கூறுவாம்.

இங்ஙனம் பூமாலையையும், பாமாலையையும் முறையே சூடியும், பாடியும் தந்த நம் நாய்ச்சியார் இறுதியில் தண்ணனைக் கண்டு பேரானந்தத்தில் மூழ்கித் திளைக்கிறார்.

"கணங்களோடு மின்மேகம் கலந்தாற்போல் வனமாலை
மினுங்க நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே"
—நாய்ச்சியார் திருமொழி 14-2

21494.

ஸ்ரீமான். ஜி. ரங்கஸ்வாமி அய்யங்கார், எம்., ஏ., எம். எல்.



வைரங்களின் விசித்திரமும் சரித்திரமும்

மாதரின் மனதைக் கவருவதும், ஆசைக்குரியதுமானது வைரமாகும். இப்போதும், எப்போதும் அது கற்களில் முதன்மையான ஸ்தானத்தை உலகத்திலே அடைந்திருக்கிறது. விஷ்ணுவின் கௌஸ்துப மணியும். கிருஷ்ணன் அளித்த சியமந்தகமும் வைரங்களாம். அது மிகவும் கெட்டியானதோடும் கூட, மிகவும் பளபளப்பானது. அதனுடைய கெட்டியை நமது பண்டைய இந்திய நூல்களில் இந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். அதை வஜ்ரத்திற்கு ஒப்பிடுவதோடும்கூட சில புராணங்களில் அது இந்திரன் அரக்கர்களை ஜயிப்பதற்காக ததீசி முனிவரின் எலும்பிலிருந்து வஜ்ராயுதம் செய்யப்பட்ட பிறகு பாக்கி இருந்த எலும்புத் துணுக்குகளிலிருந்து ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. வைரத்தை பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் தொழிலானது இந்தியாவிற்குப் புதிதல்ல, வேறு தேசத்திலிருந்து வந்ததுமல்ல. அது இந்தியாவிற்கு புராதனமான தொழில். இந்தியாவிலிருந்துதான் கிரேக்கர்களும் ரோமர்களும் அதைப்பற்றித் தெரிந்துகொண்டார்கள். இந்தியாவில் அலெக்ஸாண்டர் கால்வைத்த பிற்பாடுதான் கிரேக்கர்கள் இந்திய வைரங்களின் மஹிமையைப்பற்றி ஒருவாறு தெரிந்துகொண்டார்களாம். பிளினி என்னும் பெரியார் வைரம் அரசர்களுக்கு மாத்திரம் தெரிந்த ஒரு விலையுயர்ந்த கல் என்று சொல்லி இருக்கிறார். சில ரோம் ஆசிரியர்கள் பல இந்திய ஆறுகளின் மணலிலிருந்து வைரங்கள் உற்பத்தியாகிறது என்று எழுதியிருக்கிறார்கள். இந்திய வைரங்கள்தான் முதன்முதலாக இந்தியாவிற்கு விஜயம் செய்த பலதேச யாத்திரீகர்களால் புகழப்பட்டிருக்கின்றன. கடப்பை ஜில்லாவிலுள்ள பெண்ணூர் நதியிலும், கர்னூலில் கிருஷ்ணைக்கும், பெண்ணைக்கும் நடுவிலும், பெஜவாடாவில் கிருஷ்ணை நதியிலும், மத்திய மாகாணத்தில் சாம்பல்பூர் மஹா நதியிலும். அலஹபாத்தில் பன்னாவிலும், பண்டல்கண்டிலும் வைரங்கள் எடுக்கப்பட்டனவாம். டேவர்னியர் என்னும் ஓர் பிரன்ச் வைர வியாபாரியும் யாத்ரீகரும், சில இந்திய வைர சுரங்கங்களில் 60,000 ஆட்கள் வேலைசெய்வதாக கி. பி. 1665-ம் வருஷத்தில் எழுதினார்.

வைரம் சுத்தம் செய்யப்படுவதற்கு முன் கோந்து துளிகள்போலத் தோன்றும். வைரங்கள் பல வர்ணங்களாகப் பிரகாசிக்கும். சாம்பல் காக்கி, மஞ்சள், வெள்ளை வர்ணங்களாக பிரகாசிக்கும் வைரங்கள் சாதாரணம்; ஒரு சிலவற்றில் சிகப்பு, பச்சை, நீலம், கருப்பு வர்ணப் பிரகாசமும் உண்டு. மஞ்சள் பிரகாசமுள்ள வைரங்கள் மலிவான விலையுள்ளவை; நீலம், வெள்ளைப் பிரகாசமுள்ளவை விலை உயர்ந்தன. ஸர். வில்லியம் க்ரூக்ஸ் என்னும் பெரியார் வைரத்தில் சூடு ஏற்றுவதனால் கலரை ஒரு சில நேரம் மாற்றிவைக்கலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார். ஆனால் நெருப்பில் போட்டால் அது கரியாகிவிடும்.

வைரங்களில் போலி வைரங்கள் தற்போது மலிந்திருக்கிறதல்லவா? இவைகள் நமது இந்தியாவிற்கு நூதனமல்ல. பண்டை இந்தியாவில் அவைகள் செய்திருக்கிறார்கள். கருட புராணத்தில் நல்ல வைரத்திற்கும், போலி வைரத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கும் வழிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. வராஹ புராணத்தில் நல்ல உயர்ந்த வைரம் ஜலத்தில் போட்டால் மிதக்கும் என்றும், போலி வைரம் மிதக்காமல் அமுங்கிவிடும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

வைரத்தின் பளிச் பளிச் என்னும் பிரகாசம் வைரக்கல்லை வெட்டும் முறையினால் அதிகரிக்கிறது. இந்த முறையை நமது இந்தியாவில் பல காலமாக கையாண்டு வந்தனர். 19-ம் நூற்றாண்டு வரையில் இந்தத் தொழில் செழிப்பாக இருந்ததாகத் தெரிகிறது. 1870-ம் வருஷத்திற்கு பிற்பாடு தென் ஆப்பிரிக்காவில் வைரத் தொழில் விருத்தியடைந்திருக்கிறது. சில பெரிய விலை உயர்ந்த வைரங்களின் சரித்திரம் ஆச்சரியமும், அதிசயமுமாக இருக்கும். அவைகள் இந்திய வைரங்களே.

கோஹினூர் வைரம். இதன் இடை 125 கேரட். இது மால்வா மஹாராஜாவின் வம்சத்தில் பலகாலம் இருந்ததாம். அலாவுதீன் சுல்தான் 1304-ம் வருஷத்தில் மால்வா அரசனை யுத்தத்தில் ஜெயித்து வைரத்தையும் கைப்பற்றிக்கொண்டாராம். 1526-ம் வருஷத்தில் பேபரின் குமாரன் ஹுமாயூன் கைப்பற்றிக்கொண்டார். அவுரங்கசீப் சுல்தான் அதை தனது மயில் வாஹனத்தின் கண்ணில் புதைத்து வைத்திருந்தாராம். 1737-ம் வருஷம் நாதர்ஷா மஹம்மதுஷாவை ஜெயித்தபொழுது மஹம்மதுஷா தனது தலைப்பாகையில் அந்த வைரத்தை மறைத்து வைத்திருந்ததை, இரண்டு பேரும் சமரசமடைந்ததின் அறிகுறியாக தலைப்பாகை மாற்றிக்கொள்ள வேண்டுவது அவசியம் என்று சாதுர்யமாகக் கூறி நாதர்ஷா மாற்றிக் கொண்டாராம். அந்த தலைப்பாகையை மாற்ற மஹம்மதுஷா எடுத்தபோது அந்த வைரத்தின் பிரகாசம் மலைபோலிருந்ததைக் கண்டு "கோஹினூர்!" "மலை வெளிச்சம்" என்று வியந்து சொன்னாராம். அதிலிருந்துதான் இந்த வைரத்திற்கு கோஹினூர் என்ற பெயர் ஏற்பட்டது. பிறகு நாதர்ஷாவின் குமாரன் ஷாரோக்கிடமிருந்து ஆப்கன் சாம்ராஜ்ய சக்ரவர்த்தி ஆஹமதுஷா கைப்பற்றி அவருடைய குமாரன் தைமூர்ஷாவிற்குப் போய் பல வருஷங்களுக்குப் பிறகு சீக்கிய வீரர் ரஞ்சித்சிங்கிடம் வந்து சேர்ந்தது. 1849-ம் வருஷம் பஞ்சாபை பிரிட்டிஷார் கைப்பற்றியபொழுது கோஹினூரை இங்கிலாந்து மஹாராணிக்கு சன்மானமாகக் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி அது 1850-ம் வருஷம் லார்டு டல்ஹவுசியால் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. 1851-ம் வருஷ லண்டன் எக்ஸிபிஷனில் அதைக் கண் காட்சியாக காட்டப்பட்டது. அதை லண்டனில் வெட்டிப் பிரித்து துண்டாக்கிவிட்டார்கள்.

"கிரேட் மோகல்" வைரம்: இதன் இடை 250 கேரட். 1650-ம் வருஷம் இது கிருஷ்ணை நதி தீரத்திலுள்ள கோலார் சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது. 1665-ம் வருஷத்தில் அவுரங்கசீபின் அரண்மனையில் தான் பார்த்ததாக பிரெஞ்சு வியாபாரி டேவர்னியர் எழுதியிருக்கிறார். அது ரோஜாக்கலர் கொடுப்பதாகவும், ஒரு பக்கம் உயர்வாகவும் இருந்ததாம். அது மீர்ஜாம்லாவால் ஷாஜஹானுக்குக் கொடுக்கப்பட்டது. அதனுடைய பின் சரித்திரம் தெரியவில்லை.

"ஆர்லோப்" வைரம்: இதன் இடை 105 கேரட். இது ஓர் இந்திய வைரம். 1776-ம் வருஷத்தில் ஆம்ஸ்டர்டாமில் அரசகுமாரர் ஆர்லாப் பால்

ருஷிய கேதிரைன் II-க்காக 90,000 பவுனுக்கு வாங்கப்பட்டது. அது ஸ்ரீரங்கப்பட்டணம் கோவிலில் விக்ரஹத்தின் கண்ணில் அமைக்கப்பட்டிருந்தது.

"ஹோப்" வைரம் இதன் இடை 112 கேரட். வைரங்களில் சில அதை அணிபவர்கள், வைத்திருப்பவர்கள் இவர்களுக்கு நன்மையையும், கெடுதியையும் கொடுக்கும் ராசி உண்டு என்று இந்தியர்களுக்கு ஓர் நம்பிக்கை உண்டு. இந்த வைரத்தின் சரித்திரம் இதை நிரூபிக்கிறது. டெவர்னியர் என்னும் பிரென்சு வியாபாரி இதை இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்குக் கொண்டுபோனார். அவர் அதிலிருந்து தனது வியாபாரத்தில் நஷ்டமடைந்து மறு பிரயாணத்தில் இறந்தார். 14-ம் லூயி அதை தனது மனைவி மேடேம் டி மான்டிஸ்பேனுக்குக் கொடுத்தார். அதை அடைந்ததிலிருந்து அவள் அவரின் பிரியத்தை இழந்து அவருக்கு மேடேம் டி மெயின்டினன் என்பவள் பிரிய மனைவியானாள். அதை சில காலம் உபயோகிக்க வாங்கிக்கொண்ட நிகோலஸ் போகட் என்பவர் தூக்கிலிடப்பட்டார். அதை அடைந்த 16-ம் லூயியும், மேரி அன்டோனெட்டும் தங்கள் உயிரை தூக்குமேடையில் இழந்தார்கள். பிரென்சு கலகத்திலிருந்து 1830 வரையில் அது மறைந்திருந்தது. அதைத் திருடிய திருடர்கள் தண்டனை அடைந்தார்கள். அதைத் திருடர்களுக்காக துண்டு செய்த தட்டான் ஏழையாகி மாண்டான். அதை வாங்கிய லண்டன் நகை வியாபாரி டேனியல் எலியாசன் பட்டினி கிடந்து இறந்தார். அதை எச். டி. ஹோப் என்பவர் 18,000 பவுனுக்கு வாங்கி 1906ல் விற்றுவிட்டார். அதை வாங்கியதில் ஹோப் கடனாளியாகி எல்லாவற்றையும் இழந்தார். அதை ஓர் நடன மாது லாரேன்ஸ் லேடு என்பவள் வாங்கி தனது மாரில் தரித்திருந்ததில் அவளுக்கு வேண்டிய ஸ்நேகிதனாலேயே கொல்லப்பட்டாள். துருக்கி சுல்தான் அப்துல்ஹமீதுக்கு விற்ற சைமன் என்பவன் ஒரு ஆபத்தில் உயிரிழந்தான். அதை உபயோகித்த சால்மாசுபாயா என்னும் சுல்தானின் மாது சுடப்பட்டாள். அப்துல்ஹமீதும் தனது ராஜியத்தை இழந்தார். இந்த வைரம் கடைசியாக அமெரிக்காவில் ◌0,000 டாலருக்கு வாங்கப்பட்டு அதின் புதிய சொந்தக்காரியான மிஸஸ் எட்வார்டு பீல் மெக்ளீனிட மிருந்தது. அதை வாங்கிய கொஞ்ச நாளைக்கெல்லாம் மெக்ளீனின் ஏககுமாரன்மோட்டார் விபத்திலிறந்தான். அமெரிக்காவிலும் இந்த வைரத்தின் துரதிர்ஷ்ட சாயை குறையவில்லை. இப்படி சில, துரதிர்ஷ்டம் கொண்டுவருவதால்தான் இந்தியர்கள் வைரத்தில் தோஷமில்லாமல், அது இருந்தவர்களின் நிலைமையைப் பார்த்து வாங்குவது வழக்கம். அதை அணிவதால் பைத்தியம் தீருவதாகவும், விஷ பயம் நீங்குகிறது என்றும் நம்புகிறார்கள். ஐரோப்பாவில் தம்பதிகளின் மனஸ்தாபம், அதை அணிவதால் நீங்குகிறது என்று ஓர் நம்பிக்கை உண்டு. இந்தியாவில் இப்போதும் வைரத்தை தேகத்தில் அணிவதால் ஆயுள்விருத்தி, ரோகமின்மை, பலம், சிநேகம் முதலியன ஏற்படுகின்றன என்ற நம்பிக்கை இருக்கிறது. முன்காலத்தில் அரசருக்கும் அரண்மனைக்குமே அணியாக இருந்தனவாம். தற்போது பலரிடத்திலும் சுலபமாக ஜ்வலிக்கிறது. இப்போது வைர உற்பத்தி இந்தியாவில் க்ஷீணித்திருந்தாலும் உயர்ந்த வைரங்களுக்கு ஓர் பொக்கிஷமாக இருந்த நமது இந்தியா மறுபடியும் உன்னதஸ்திதியை அடைய ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமல்லவா? டேவர்னியர் காலத்தில் 60,000 ஏழை ஜனங்கள் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டார்களென்றால் தற்காலத்தில் இந்தியாவில் எவ்வளவு பேருக்கு பிழைப்பு ஏற்படும்; நமது வைரங்களும் அதன் பூர்வீகப் பெருமையை அடையவேண்டுமல்லவா!

வெ. க. சௌரிராஜன். எம். ஏ. எல். டி.



திருமுக்கூடலின் ஸ்தானம்

பாலாறு, தன் இரு உபநதிகளாகிய செய்யாறு, வேகவதி என்பன வற்றோடு சங்கம மாகுமிடத்தில் ஏற்பட்ட கிராமத்திற்கு திருமுக்கூடல் என்று பெயர். பெயர் மாத்திரம் ஏற்பட்டதேயொழிய வேகவதி பாலாற்றுடன் கொஞ்சம் வடக்கிலேயே கலந்துவிடுகிறது. ஆதலால் திருமுக்கூடல் கிராமம் செய்யாறும் பாலாறும் கூடும் இடத்திலேயே உள்ளது. பாலாற்றின் கரையில் இக்கிராமத்துக்கு எதிர்க் கரையில் பழைய சீவரம் என்ற ஊர் உள்ளது. அது செங்கற்பட்டு-அரக்கோணம் ரெயில் பாதையிலுள்ள ஒரு ஸ்டேஷன். பழய சீவரத்துக்கு வடக்கிலுள்ள ஸ்டேஷன் தண்டு சீவரம் எனப்படும் வாலாஜாபாத். ஆங்கிலேயர் இந்தியாவில் சண்டையிட்டு நாட்டை சம்பாதித்த பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், வாலாஜாபாத்தில் படைகள் அதிகமாகத் தங்கியிருந்ததால் தண்டு சீவரம் என்ற பெயர் ஏற்பட்டது. பழய சீவரத்தில் ஆற்றின் கரையில் ஓர் குன்று உள்ளது. பல்லவ சோழ வமிச அரசர்களின் கல் வெட்டுகளில் அக் குன்றுக்கு திருவேங்கடமலை எனக்குறிப்பிடுவதற்குக் காரணம் அங்குள்ள கோவிலில் குடிகொண்ட மூர்த்தி வேங்கடேசப் பெருமாள் என்பதே காரணம் என்று தோன்றுகிறது.

இயற்கை வனப்பு. பழமையான விஷ்ணு ஆலயம்

திருமுக்கூடல் இக்காலத்தில் ஒரு மிகச் சிறிய ஊராகவிருக்கின்றது. ஆயினும் அதன் இயற்கையழகு மாத்திரம் அதிகம் என்றே சொல்ல வேண்டும். அவ்வூரின் இரு புறங்களிலும் ஆறுகள் உள்ளன. ஜீவ நதிகளாக இல்லாவிட்டாலும் 'ஊற்றுப் பெருக்கால் ஊட்டும்' இயல்பினையுடைய இவ்வாறுகளின் படுகைகள் தொன்று தொட்டு அவற்றின் கரைகளிலுள்ள ஊர்களுக்கு குடிநீரும் அவற்றின் கரைகளிலுள்ள நிலங்களுக்கு பாசன வசதியளித்து செழிப்புறச் செய்தும் இருக்கின்றன. ஊணுக்கு வசதியுள்ள உறைவிடத்தில் கிராமங்கள் ஏற்படுத்திக் கொள்வது மானிட இயற்கையாதலால், அஃதுடன் இயற்கை வனப்பும் கூடிய ஒரு ஸ்தானத்தில் திருமுக்கூடல் ஏற்பட்டது அதிசயமல்ல. திருமுக்கூடல் ஒரு விஷ்ணு ஆலயம் உள்ளது. தற்காலத்தில் அதன் சிலபாகங்கள் இடிந்து விழுந்திருக்கின்றன. அதன் தெற்கு கோபுரவாசல் கட்டி முடிக்கப் படவில்லை. ஆயினும் இவ் விஷ்ணு வாலயம் பல மண்டபங்களுடன் அதிக பரப்புள்ளதாகவே விளங்குகிறது. கோயிலின் கிழக்கு மதில் சுவரிலுள்ள வாயிற் படியினின்றும் பாலாற்றின் படித்துறையில் ஏற்படும் காட்சி ஆற்றில் வெள்ளப் பெருக்கு இல்லாத காலத்திலும் ரமணீயமாகவே உள்ளது. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து இவ் விஷ்ணு ஆலயம் இருந்திருக்க வேண்டும்.



திருமுக்கூடல் ஆலயம். இரு தோற்றங்கள்



கோபுரவாசல்.

"ஸ்ரீவத்ஸன்"

மதில்சுவரில் கல்வெட்டு

கோவிலிலிருந்து
ஆற்றின் தோற்றம்.



திருவேங்கடமலையென்னும்
பழைய சிவரம் கோவில்

வைஷ்ணவ ஆழ்வார்களால் பாடப் பெருவிட்டாலும் மிகவும் பழமையான க்ஷேத்திரம் என்பது இக் கோவிலின் சுவர்களிலும் ஸ்தம்பங்களிலும் செதுக்கப் பட்டிருக்கும் பல கல் வெட்டுகளால் தெரிகிறது. அவற்றுள் காலத்தில் மிகவும் முற்பட்டது பல்லவ வமிசத்தைச் சேர்ந்த விஜய நிருபங்க விக்ரம வர்மன் காலத்தியது.

பல கல்வெட்டுகள் பல்லவ சோழ விஜயநகர அரசர் காலத்தவை

அரசாங்க கல்வெட்டு சிலாசாஸன இலாகா அதிகாரிகள் இவ் விஷ்ணுவாலயத்தில் இருபத்திரண்டு கல்வெட்டு சாஸனங்கள் உள்ளதாக வெளியிட்டிருக்கின்றனர். அவற்றுள் காலத்தில் முந்தியது மேலே குறிப்பிட்டபடி பல்லவ வமிசத்தவர் காலத்தைச் சேர்ந்தது. மிகவும் பிற்காலத்தியது என்று சொல்லக்கூடியது விஜய நகரத்தை ஆட்சி செய்த வம்சங்களுள் ஒன்றைச் சேர்ந்த வீர ஸ்ரீ புக்கண்ண உடையார் காலத்தியது. அக் கல்வெட்டில் மேற்கூறிய அதிபதி திருமுக்கூடல் கிராமத்தில் நிலவரி வஜா செய்ததை குறிப்பிட்டிருக்கிறது. இக் கல்வெட்டுகளில் பெரும்பான்மையானவை சோழ வமிச அரசர்கள் காலத்தவை என்பது குறிப்பிடத்தக்கது. மிகவும சாதாரணமான விஷயங்களைப் பற்றியே பல கல்வெட்டுகள் குறிப்பிட்ட போதிலும், வீர ராஜேந்திரன் என்னும் சோழ அரசன் தன் ஆட்சியின் ஐந்தாவது வருஷத்தில் (கி. பி. 1067) செதுக்கிய கல்வெட்டிலிருந்து அவ்வமிசத்தைச் சேர்ந்த அரசர்கள் கல்வியைப் போற்ற அனுஷ்டித்த சில முறைகள் நமக்குத் தெரிகின்றன.

ராஜகேசரி வீர ராஜேந்திரன் 1063-1070

கங்கைகோண்ட சோழ புரத்தை தலை நகராகக் கொண்டு கி. பி. 1063 முதல் 1070வரையில் ஆட்சி செய்த ராஜகேசரி வீர ராஜேந்திரன் 'துந்தளரை கூடல் சங்கமத்துவென்ற கோன், என்றும் ஆஹவமல்ல காலன் என்றும் வல்லப வல்லபன் என்றும் சரித்திரம் கூறும். இவ்விராஜன் தன் ஆட்சியின் ஐந்தாவது ஆண்டில் (துங்கபத்திரையில் ஜயஸ்தம்பம் நட்டுத் திரும்பியபின் இருக்கலாம்.) திருமுக்கூடல் விஷ்ணு ஆலயத்துக்கு சில இனமளித்து திருப்பணிகள் செய்விக்க எற்பாடு செய்ததை இக் கல்வெட்டு விளக்குகிறது.

வீர ராஜேந்திரன் ஆட்சியின் ஐந்தாவது வருஷத்தில் வெளியிட்ட இக் கல்வெட்டைப் பற்றி அரசாங்க இலாகா அதிகாரிகள் பலவிதத்தில் இது தனிப்பட்ட பெருமையை யுள்ளது என்று வெளியிட்டிருக்கின்றனர். இதில் கூறப்பட்ட விஷயத்தினுல் ஏற்பட்ட தனிச் சிறப்புடன் இஃதை அமைத்துள்ள விதத்திலும் சிறப்பு உண்டு. இக் கல்வெட்டு உள்பிராகாரத்திலுள்ள கல் சரங்களில் 11--வது நூற்றுண்டு தமிழ் எழுத்துக்களால் செதுக்கப்பட்டிருக்கிறது. சில வரிகளின் நீளம் 55 அடி என்பது கவனிக்கத்தக்கது.

கோயிலின் வரவு செலவு

வீர ராஜேந்திரன் "வாயலக்காவூர் கிராமவாசிகள் கொடுக்கும் 75 கழஞ்சு பொன்னையும் திருமுக்கூடல் கிராமவாசிகள் செலுத்தும் வரியையும் திருமுக்கூடல் மஹாவிஷ்ணுவின் ஸன்னிதியில் செலவுக்கு உபயோகப்படுத்த வேண்டியது" என்று வெளியிட்டார். அத்திருப்பணிகளில் மூன்றை ஸ்பஷ்டமாக குறிப்பிட்டிருக்கின்றனர். (1) ஆவணி மாதத்தில் ஆயில்ய நக்ஷத்திரத்தில் ஒரு உத்ஸவம் நடத்தவேண்டியது. இதுவே அரசனின் பிறந்தநாளாக இருக்கலாம் (2) தினசரி திருவாய்மொழியைப்

பாடுபவர்களுக்கு இனும் அளிக்கவேண்டியது (5) கார்த்திகை மாதத்தில் பூராட நக்ஷத்திரத்தில் (வைசிய மாதவன்—கோயிலில் தர்மங்களை சரிவர நடக்கும்படி ஏற்பாடு செய்தவர் பிறந்தநாள்) ஒரு உத்ஸவம் நடத்தவேண்டியது. ஆனால் இக்கல்வெட்டின் தனிச்சிறப்பு கல்வியைப் போற்றுவதற்காக செய்திருந்த ஏற்பாடுகளைக் குறிப்பதேயாகும்.

பாடசாலை-போஜன விடுதி-வைத்தியசாலை

இக்கோயிலின் மண்டபத்தில் வேதபாடசாலை யொன்றும் வியாகர்ண பாடசாலையொன்றும் இருந்தது. வித்யார்த்திகள் தங்க வீரசோழன் என்னும்விடுதி(hostel) இருந்தது. தேகஅசௌக்யம் அடைந்த மாணவர்களுக்கு சிகிச்சைசெய்ய ஒரு வைத்தியசாலையும் இவற்றைச் சேர்ந்திருந்தது. இம்மூன்று இடங்களிலும் வேலை செய்வோருக்கு கொடுக்கப் படவேண்டிய சம்பளம், அவர்கள் செய்யவேண்டிய வேலைகள் எல்லாம் மிகவும் விவரமாக குறிக்கப்பட்டுள்ளன. யஜுர்வேதமும் ரிக்வேதமும் முறையே பத்துப்பிள்ளைகளுக்கு போதிக்கப்பட்டன. வியாகர்ணம் படிக்க இருபது பிள்ளைகளுக்கு இடமுண்டு. பிள்ளைகளுக்கு சாப்பாட்டுக்கு விகிதம் (நபர் ஒன்றுக்கு நாளுக்கு $1\frac{1}{2}$ நாழி) நிர்ணயிக்கப்பட்டதோடு உறங்குவதற்கு பாய்கள், வருஷத்தில் 51 சனிக்கிழமைகளில் அப்யங்கன ஸ்நானம் செய்ய எண்ணெய், இராப்பொழுதில் படிக்க விளக்கெண்ணெய் முதலியன கொடுக்க ஏற்பாடு உண்டு. வைத்ய சாலையில் என்னென்ன மருந்துகள் இருக்கவேண்டுமென்பதைக்கூட இக் கல்வெட்டில் குறித்திருக்கின்றனர். அவற்றுள் ஒன்று பிராம்ய கடும்புரி என்பது. இதைத் தயாரிக்கும் முறையும் சொல்லப்பட்டிருக்கிறது. சரக சம்ஹிதையில் சொல்லப்பட்ட பிராம்ய ரசாயனம்என்றேஇதை சொல்லலாம். இம்மருந்தை உட்கொண்டால் உடம்பில் உள்ள சோர்வைப்போக்கி ஞாபக சக்தியை அதிகரிக்கும். இதுமாத்திரமன்றி பலவித தைலங்களும் இருக்கவேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது. வித்யார்த்திகளின் தேக நிலையை கவனிக்க இவ்வித ஏற்பாடுகள் செய்திருந்தனர் போலும். ஓர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருந்த கல்வி வசதிகள்கூட தற்காலத்தில் முழுவதும் இல்லை என்று சொல்லலாம்போல் அவ்வளவு ஒழுங்காக எல்லா விஷயத்தையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

அரசர்கள் தங்களுக்கு ஐயம் ஏற்பட்ட காலத்தில் இவ்வித தர்மங்களை ஸ்தாபித்து ஜனங்களுக்கு அதிக நன்மையை செய்தது சோழர் ஆட்சிமுறையில் குறிப்பிடத்தக்கது. இயற்கை யழகுடையவிடத்தில் கோயில் பணிகளை செய்வதற்கும் கல்வி கற்பதற்கும் வசதிகளைச் சேர்த்து ஏற்படுத்தினர்களென்று தெரிகிறது.

எம்பெருமானின் தரிசனத்தை நேரில் இருந்து அனுபவிக்கும்போது உண்டாகும் ஆனந்தம் ஒருதினுசு. தூரதேசம் சென்றிருக்கும்போது அந்த எம்பெருமானை மானஸீகமாக எண்ணி மனத்திற்குள் அவன் ஸ்வரூபத்தைக் கண்டு இன்புறுவது ஒரு ருசி...இரண்டாவதில்தான் அந்த பகவானைப் பிரிந்திருக்கும் ஏக்கமும், பக்தியும் நன்றாகப் புலப்படுகிறது. 'சற்று தொலைவில் சென்றால்தானே பற்று அதிகம் உண்டாகிறது' என்கிற பழமொழி பொய்க்குமா ?

ஸ்ரீமான். ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

அருளோ! அறமோ!

இரக்கமற்ற அரக்கர்களினால் அடிபட்டு நைந்துபோன தண்டகா வனத்துத் தபோதனர்களின் பிரார்த்தனைக் கிணங்கி இராமன் அவர்களுக்கு அபயம் அளித்துவிடுகிறான். அவன் தெய்வச் சிலையின் நாணொலிக்கு ஆரணியம் எதிரொலி கொடுக்கிறது. "பாதகர்களைக் காய்ந்தெழுகின்ற அறத்தின் குரல்தானே அது?" என்று தோன்றுகிறது.

இப் பயங்கரமான டங்காரத்தைக் கேட்டு சீதைக்கு நடுக்க முண்டாகிறது. 'அறம்,' 'அறம்' என்று சொல்லிக்கொண்டே உலகம் மூன்றையும் அழித்து விடுவானோ தன் நாதன் என்ற அச்சம் அவள் கருணைக் கடலுள்ளத்தில் ஒரு பெரும் குழப்பத்தை உண்டாக்குகிறது.

காட்டிலே ஒரு வனப்பு வாய்ந்த நீண்ட பாதைவழியாய் லக்ஷ்மணன் பின்தொடர இராமனும் சீதையும் போய்கொண்டிருக்கிறார்கள். போகிற வழியில் மெல்லத் தன் மனத்தில் மறுகிக் கிடந்ததை அன்புகலந்த சொற்களால் சீதை வெளியிடுகிறாள்.

"என் உயிர்த்தலைவ, தர்மம் அதிக நுட்பமானது. மாசற்ற காட்சியவர் மட்டுமே அதை உள்ளபடி காணமுடியும். பொய் பேசுதல், பிறர் மனைவியை விரும்புதல், ஹிம்சித்தல்—இம் மூன்றுந்தான் பெரிய தீச்செயல்களென்று நான் கருதுகிறேன். என் முன் ஒரு காவியம்போல விரிந்து கிடக்கிற தங்கள் திவ்ய சரிதத்தை நான் கவனித்து வருகிறேன். பொய் பேசுதல் இது வரையில் ஏற்பட்டதில்லை; இனிமேலும் ஏற்படப் போவதுமில்லை. பிறன் மனை நோக்காத பேராண்மையைத் தங்களிடம் பார்க்கிறேன். நெஞ்சிலும் நினையாத தூய்மை தங்களிடம் வேரூன்றிக் கிடக்கிறது இது எக்காலத்திலும் அழியாதென்பதை நான் நன்குணர்வேன்.

ஆனால் ஒன்று என் மனதைத் திடுக்கிடச் செய்கிறது. இப்பொழுது வில்லைத் தூக்கிவிட்டீர்களே. பொய்பேசுதல், பிறர் மனைவியை விரும்புதல்-இவ்விரு பாதகங்களைக் காட்டிலும் பெரிய பாதகமான காரியத்தில், தபோதனர்களின்மீது வைத்த பக்ஷபாதத்தினால் இறங்கிவிட்டீர்களே! விறகைச் சார்ந்த அக்கினியைப் போல, க்ஷத்திரியர் கையில் பூட்டிய ஆயுதத்தின் உக்கிரகம் அதிகப்படுமே. ஒரு அருள் வடிவான முனியுடைய மனத்தையே, ஆயுதம் புகுந்து சிதைத்துவிட்ட கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

முன்னொரு காலத்தில் ஒரு முனியிருந்தார். அவர் மிகப் பரிசுத்தமானவர். அவருடைய கருணை ததும்பும் விழிகள் எங்கும் அமைதியையும், இன்பத்தையும் பரப்பின. மான் கணங்களும் பக்ஷி ஜாலங்களும் அவர் அன்பொளி தங்கிய ஆச்சிரமத்தில் எல்லாம் ஒரு குடும்பம்போலச் சேர்ந்து வாழ்ந்தன.

அம்முனிவருடைய தவத்தைக் கெடுக்கத் தேவேந்திரன் ஒரு சூழ்ச்சி செய்தான். ஓர் போர்வீரன் வேடம் பூண்டு ஓர் ஆயுதத்தை முனிவனிடம் பாதுகாப்புத் தனமாக வைத்துவிட்டகன்றான்.

அந்த ஆயுதத்தைக் காப்பதிலே அவருக்குப் பொழுது போயிற்று. அதைத் தன்னோடு எங்கும் எடுத்துச்சென்றார். மரத்தின் பட்டை பெயர்ந்தாலும், பரிதபித்து நைந்துபோகிற உள்ளம் மாறுதலை அடைய ஆரம்பித்தது. அன்பூற்றுக்கள் வற்றிப்போயின. அவர் மனமும் ஒரு பாலைவனம்போல வரண்டுபோய், மறத் தொழிலில் ஈடுபட்டது. அருளும், அன்பும், மனச் செம்மையும் எல்லாம் தேய்ந்தன. மீளாத வெந்நரகத்தில் அவர் புலைத்தொழில் அவரை யெறிந்துவிட்டது. ஆயுத நட்பினால் வந்த ஆபத்து இது. என் நாதரே! இது ஒரு பழங்கதை. தீயோடு பழகுவதுபோலாகும் ஆயுதத் தோடு பழகுவது. தங்களுக்குத் தெரியாத விஷயமில்லை இது. ஏதோ அபிமானத்தால் சொல்லவந்தேன்; ஏதோ ஒரு கௌரவத்தை உத்தேசித்து நான் போதிக்க முன்வரவில்லை.

'அவ்வரக்கர்கள் நம்மை என்ன செய்தார்கள்? தவவேடம் பூண்ட தங்களுக்கு இங்கே க்ஷத்திரிய தர்மத்திற்கு இடமேது. தவமெங்கே? ஆயுதமெங்கே? இந்த மன்னர் காரியத்தை அயோத்தியில் போய்ப் பார்த்துக்கொள்ளலாம். தவநிலையில் ஆயுதத்தைக் கையில் எடுப்பது அறமன்று. மேலும் தாங்கள் ஒரு முனியாகிவிட்டால் எம் மாமிமார்கள் மிகக் கொண்டாடுவார்கள். தர்மத்தில் எல்லாம் நிலைபெற்றிருக்கின்றன; அதுதான் நம்மைக் காப்பாற்றும் கவசம்: அது சிதைந்துபோனால், ஆத்மஹத்தி கட்டாயம் வந்தேதீரும். ஏதோ பெண்மனம் கோழைமனம் என்பார்கள்; அதனால் எல்லாம் தெரிந்த தங்களுக்குச் சொல்ல முன்வந்தேன். தர்மம் இன்னதென்று தங்களுக்கு எடுத்துச் சொல்ல ஒருவரும் சக்தனில்லை. தங்களுடைய அறிவைக்கொண்டும் தங்கள் தம்பியின் யோஜனையைக் கொண்டும் நன்கு ஆராயுங்கள். கால தாமதமின்றி எது உசிதமோ அதைச் செய்வீர்களாக" என்று சீதை மொழிந்தாள்.

"ராஜரிஷி ஜனகன் பெற்ற மகளே! உன் குலத்திற்கும், உன் குணத்திற்குமேற்ற மனோபாவத்தை என்னிடம் சொன்னாய். கடும் தவம் புரிகின்ற மகரிஷிகள் என்னிடம் முறையிட்டனர். சரண மடைந்தவர்களை ரக்ஷிக்கவேண்டிய கடமை ஒன்றிருக்கிறதே. "தவ மகிமையால் அரக்கர்களை நாசம் செய்யும் ஆற்றலையுடையவராக இருக்கின்றோம். ஆனால் நாங்கள் சபிப்பதற்கில்லை. சபித்தோமானால் வெகுநாள் சிரமப் பட்டுச் சம்பாதித்த தவம் அழிந்துவிடும்! அதனால் பயப்படுகிறோம்" என்று அவர்கள் கண்ணீர் வடித்தார்கள். அவர்களுக்கு நான் வாக்குத் தந்துவிட்டேன். அதைக் காப்பாற்றுவது தருமமில்லையா ?-யோஜித்துப்பார். சத்தியத்தை நாடுகிற நான் என் பிராணனைக் காட்டிலும் மேன்பட்ட உன்னைத் துறப்பேன். என் பிராணன்தான் வெளியிலே சஞ்சரிக்கிறதோ என்று சொல்லும்படி

யிருக்கிற என் அருமைச் சகோதான் லக்ஷ்மணனையும் துறப்பேன். எனக்குத் தர்மந்தான் பெரிது" என்று பதில் கூறுகிறான் இராமன்.

"தர்மம் உனக்கும் எனக்கும் பொதுத்தான். யார் வழு வினும் லக்ஷியத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளுவது, அறமன்றோ. உன் உதார புத்தியைக் கண்டு வியக்கிறேன். அது உன் குலத் திற்கும் உன் குணத்திற்கும் பொருத்தமே" என்று மீண்டும் மொழி கிறான் இராமன். அறந்தான் அருள் என்ற குறிப்பை வைத்துப் பேசுகிறதுபோல இருக்கிறது அவன் கூறும் பதில்.

இச் சித்திரம் உலக இலக்கியக் காட்சிச் சாலையில் ஓரிடம் பெறும் என்பதில் எள்ளளவு சந்தேகங்கூட இல்லை. இலக்கிய முறையில் ஆராய்ந்து பார்த்தால் இதன் நயம் நன்கு புலனாகும். விபரீத ரஸத்தைப்பற்றி (Dramatic Irony) ஷேக்ஸ்பியர் (Shakespeare) அமைத்த நாடகங்களில் மிகப் பாராட்டுகிறோம். இந்த விபரீத ரசத்தை இங்கே பாருங்கள்.

எந்த அரக்கர்களுக்காக சீதை பரிந்து பேசுகிறாளோ, அதே அரக்கர்கள் இவளைச் சிறையில் வைத்து இவளுக்குச் சகிக்க முடியாத சித்திரவதைகளையும், கணக்கில்லாத கஷ்டங்களையும். தாங்கமுடியாத துன்பங்களையும் கொடுக்கிறார்கள். அரக்கர்களின் நிஜசுபாவம் தெரிந்திருந்தால், வேறுவிதமாகப் பேசியிருப்பாளோ என்று சிலர் வாதிக்கலாம். இவள் வார்த்தைகள் அக்ஞானத்தில் எழுந்தவை அல்ல. கருணைவடிவாகவே இருப்பது இவளுடைய இயற்கை என்று மேலே நடந்த சம்பவங்கள் உலகங் கேட்கச் சாற்றுகின்றன. அரக்கர்களை அழித்துவிடுகிறேன் என்று அனுமான் சீற்றத்தில் சொன்னபொழுது "அப்பா வாயு புத்திர! யார்தான் உலகத்தில் குற்றஞ் செய்யவில்லை? மன்னிக்கவேண்டும்" என்று அப்பொழுதும் பரிந்து பேசுகிறாள். குற்றமெல்லாம் குணமாகக் கொள்ளும் உலகமாதா அரக்கர்களையும் தன் துஷ்டக் குழந்தை களாகக் கருதுகிறாள். அழிந்துபோகிற துஷ்டக் குழந்தைகளிடத்தில் அன்னைக்கு அதிக அனுதாபம் இருக்கிறது இயல்பன்றோ! அவர்களை அருள்மூலமாகத் திருப்பப் பார்க்கிறாள் சீதை.

இப்படிச் சீதைபோல ஒவ்வொரு ஸ்திரீயும் போரில் இறங்குகிற தன் கணவனுக்குத் தர்மத்தை யெடுத்துக் காட்டினால் உலகம் ரணக்களப்படுமோ? நேற்று ரஸ்கின் (Ruskin) கூறின ஸ்த்ரீ தர்மத்தை பல்லாண்டுகளுக்குமுன் வால்மீகி இலக்கியமுறையில் மிக அழகுபெற அமைத்துவைத்திருக்கிறார்.

ஒரு தந்தையைப்போல வுள்ள இராமன் அவர்களைச் சிக்ஷிக்க யோசிக்கிறான். அவர்கள் திருந்தவேண்டுமென்பதே அவனது திரு வுள்ளம். கருணையினால்தான் அவன் அப்படிச் செய்கிறான் என்பதில் ஐயமில்லை. சீதையின் குணமும் இக்காட்சியில் தென்படுகிறது. சீதை யைப்போல பெண்கள் இருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். கணவன் எதுசொன்னாலும் கேட்டுவிடுகிறது கீழ்ப்படிதலன்று. சுக துக்கங்களைச் சமானமாகப் பங்கிட்டுக்கொள்ளுகிறது ஒருபுற

மிருக்கட்டும். வாழ்வுப் பாதையில் அவர்களை அழைத்துச் செல்லு கிறது, தூரத்தில் துருவ நக்ஷத்திரம்போல விளங்குகிற அறந்தான். இவ்வறம் இவ்விருவருக்கும் பொதுவன்றோ? அதைப் பார்த்துக் கொண்டே முள்ளும் கல்லுமாயுள்ள பாதையில் நடக்கிறார்கள். கீழ்ப்படிதலென்பது அந்தஒளிகொண்டு நுட்பமான அறப்பாதையில் சேர்ந்து நடந்து செல்வதுதான். எவர் விலகினாலும் மற்றவர்கள் "அதோ தெரிகிற லக்ஷியத்திலிருந்து ஏன் விலகிவிட்டீர்கள்!" என்று கேட்கிற உரிமையுண்டு, சுவாதீனமுண்டு; அச் சுவாதீனத்தில்தான் அறம் வளரும்; அறத்தை நடத்தமுடியும். பெண்வாழ்வு அடிமை வாழ்வில்லை என்று சீதை பெண்களுக்கு உபதேசம் செய்கிறாள் இல்லை. இது வெறும் உபதேசமில்லை. அவளுடைய மஹத்தான சரிதம் அதற்கு ஒரு பெரிய உதாரமான வியாக்யானமாயிருக்கிறது.

இலக்கிய சுவையைத்தவிர ஒரு பெரிய தத்துவத்தை-ஒரு தர்ம சங்கடத்தை வால்மீகி எழுப்பியிருக்கிறார். அருள் வெல்லுமா?; அறம் வெல்லுமா? அல்லது அருள்தான் அறமா; அறந்தான் அருளா? உயர்ந்த நிலையில் இரண்டும் ஒன்றுதானா?-என்றகேள்விகள் ஒன்றையொன்று மோதிக்கொண்டு வருகின்றன.

அருள் வடிவான சீதை அருள்தான் அறமென்கிறாள். அறத்தின் வடிவான இராமன் பரம தியாகத்தைப் பற்றிக் கூறுகிறான். வதங்கூட அருள் என்கிறான். அறத்தை நோக்கித் தன் மனைவியை யும் தம்பியையும் துறப்பேன் என்கிறான். பவபூதியின் உத்தரராம சரித இராமனும் வால்மீகி சுருதியில் பேசுகிறான்.

ஒரு பெரிய லக்ஷியத்தை நாடி மனைவி மக்கள் செல்வம் எல்லா வற்றையும் துறக்கிற மஹான்களை இரக்கமற்றவர்கள் என்று குறுகிய நோக்கமுள்ள நாம் கூறலாம். ஒரு பெரிய லக்ஷியத்தை அடைந்தபிறகுதான் உண்மையான அன்பு ஏற்படும். இதுவரையில் காண்பித்த அன்பெல்லாம் உண்மையான அன்பல்ல. ஏதோ ஆசா பாசத்தினால் எழுந்த பிரியமே தவிர வேறொன்றில்லை.

அருள்வடிவான அமிருதத்தைக்கொண்டு திருப்பலாம் என் கிறாள் சீதை; வியாதி முற்றிப் போயிற்று. சிக்ஷாரூபமான ஒரு கொடுஞ்சிகிச்சையைச் செய்யக் கருத்தில் கொண்டுவிட்டான் இராமன். இவர்களுடைய நோக்கமொன்றே. உலகம் நல்ல வாழ்வு வாழவேண்டும். நல்வாழ்வு நாம் சிறிய அறிவில் கருதுகிற இன்ப வாழ்க்கையாயிருக்க முடியாது. அறத்தில் தோன்றும் இன்பம் வேறு.

மருத்துவன் கையில் நோயாளிகள் கஷ்டப்படுகிறதை நாம் கஷ்டமென்று கருதுகிறோமா? வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மீளாத காதல் அன்றோ நம் மனத்தகத்தே யெழுகின்றது. அறம் கொடிதோ?-இல்லை. அருளே அறம்; அறமே அருள் என்றதை உள்ளத்தில் கொண்டு காலப்பனிக்கும் இருளுக் கும் அப்பால் விளங்குகின்ற ஆண்டவன் அழிவிலாக் கோவிலுக்கு அறப்பாதை வழியாய் உண்மையை நாடுகிற உத்தம யாத்திரிகர்கள் செல்லுவார்களாக.

வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியார்.

திருக்குறளின் மேன்மை

திருக்குறளின் ஸாரம் திருக்குறள் நமக்குணர்த்தும் அரிய போதனைகளின் கருத்து என்று பொருள்படுவதாம். திருக்குறளின் பெருமையும் ஆசிரியர் திருவள்ளுவரின் பெருமையும் திருக்குறளின் ஸாராம்சத்தை விளக்க ஆதாரமாதல் கூடுமாதலின் முதலில் அவற்றைக் கவனிப்போம்.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பகுதிகளையுடையது. ஒவ்வொரு பகுதியிலும் முறையே 38, 70, 25 அதிகாரங்களாக 133 அதிகாரங்களையுடையது. ஓர் அதிகாரத்துக்குப் பத்துக் குறளாக 1330 குறட்பாக்களையுடையது. இவ்வளவு பெரிய நூல் சங்க காலத்து நூல்களுள் எதுவுமில்லை. இது போன்ற உயர்ந்த நூல் வேறெந்த பாஷையிலுமில்லை. இந்நூல் இங்கிலீஷ், ப்ரான்சு, ஜர்மன், லாடின், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம் முதலிய பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பல தேசங்களிலும் வழங்கி வருகிறது.

இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் மதுரையில் தமிழ்ச் சங்கமொன்றிருந்தது. அச் சங்கத்தில் நாற்பத்தொன்பது புலவரிருந்தனர். அவர்களுள் ஒருவராய்ச் சிவபெருமானும் இறையனுர் என்ற பெயருடன் விளங்கினுர். திருக்குறள் அச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்டது. அப்போது இந்நூலைச் சிவபெருமானும் ஏனைய புலவர்களும் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். அப் பாடல்களெல்லாம் திருவள்ளுவமாலை யென்ற பெயரில் ஒரு புத்தகமாக விளங்குகின்றன. ஒரு நூலைச் சிறப்பித்துப் பாடிய தனி நூலொன்று இந் நூலுக்கன்றி வேறெந் நூலுக்கும் அமைந்திலது.

ஔவையார்—

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்றும்,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்"

என்றும் பாடி வியந்தனர்.

இடைக்காடர் என்பவர்:—

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

எனப் பாடி வியந்தார்.

பாணர் என்ற ஒரு புலவர்—

"பாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலமுழுதும் நயந்தளந்தான்—வாலறிவன்
வள்ளுவருந் தங்குறள் வெண்பாவடியால் வையத்தார்
உள்ளுவ வெல்லா முணர்ந்தா ரோர்ந்து"

என அழகினுமழகெனச் சித்திரித்துப் பாடிப் புகழ்ந்தார் ஆசிரியரை. இது நூலையும் புகழ்ந்ததாம். பல உண்டு இங்ஙனம் எடுத்துக் காட்ட.

திருக்குறளுக்குப் பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்வேதம், தெய்வநூல், திருவள்ளுவர் உத்தரவேதம் (உபநிடதம்) முதலிய பல பெயர்கள், அதன் மகிமையை விளக்கத்தக்க உயர்வில் அமைந்துள்ளன.

திருக்குறளுக்கு-தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பருதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர், பரிமேலழகர்-எனப் பதின்மர் உரைசெய்துள்ளார். இங்ஙனம் பதின்மரின் உரை பெற்ற நூல் இதனையன்றி வேறிலது.

தமிழில் பாவினத்தில் வெண்பா முதற் பா. வெண்பாவில் குறட்பா முதல் வகை. இத்தகைய சிறப்புடைய குறட்பாவில் அமைந்ததாதலின் இந் நூலுக்குக் குறள்-என்று பெயருண்டாயது. உயர்வு, அழகு என்று பொருள்படக்கூடிய திரு என்னும் சொல்லை அடையாகவுடையது இப் பெயர். ஆதலின் அழகிய குறள், உயரிய குறள்-எனச் சிறப்பித்துப் பேசும் பெருமைக்குரியதாய திந்நூல்.

இத்தகைய சிறந்த நூலை இயற்றியவரே திருவள்ளுவர். திருக்குறளுக்கு அமைந்த புகழே இவர்க்கும் அமையும். ஆதலின் மேலே விசாரிப்பது மிகை. இவருடைய பிறப்பு, வளர்ப்பு, ஜாதி, சமயம், ஆச்ரமம், தொழில்-எல்லாம் போதிய ஆதாரமில்லாமல் கர்ண பரம்பரையாகவே பரவியுள்ளன. ஆதலின் அவை பற்றிய விசாரணையும் சிறந்திலது. திருவள்ளுவர் நமக்குத் தமிழில் ஒப்புயர்வற்ற வேதத்தை அளித்தார். ஆதலின் இவரை முனிவர், மகாத்மா என்கிற முறையில் வைத்துப் போற்றி மகிழ்வோமாக.

"திருக்குறளின் ஸாரம்"

என்னும் தலைப்பில் மிகவும் விரிவாகவும் வெகு அருமையாகவும் ஸ்ரீ. பாரதியார் எழுதியனுப்பியதின் முதல் பகுதியாகிய திருக்குறளின் மேன்மை மாத்திரம் மேலே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. முழு கட்டுரையும் ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டிய தவசியமாதலால் "மோகினி"யில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படும். தவறுது படிக்கவும்.

ஏன் இந்தப் பராமுகம்?

தினைப்புனத்தையும், குறப் பெண்ணையும், வேடனையும் ஒருங்கே பார்த்ததும் இது முருகக்கடவுளின் காதல்—நாடகம் தான் என்று தெரிந்துவிடுகிறது.

ஆனால் காதல் நாடகங்களில் காதலர் கண்களால் பேசிக் கொள்வார்களல்லவா? இந்தக் காதலோ காதலருலகின் சம்பிர தாயத்திற்கே மாறுபட்டதாய்க் காண்கிறது.

அவள் தன் பராமுகத்தை இதற்குமேல் எப்படித்தான் காட்ட முடியும்? எனினும் காதலன் நம்பிக்கை இழந்தபாடில்லை. அவன் என்னதான் சொல்லுகிறான் என்பதைக் கொஞ்சம் ஊகித்துப் பார்க்கலாமே.

"ஒரு வார்த்தையாவது சொல்லமாட்டாயா?" என்றுதான் கேட்டான். அதற்கும் பஞ்சம் ஏற்படவே, ஒரு புன்னகையே போதுமென்று யாசித்தான். அதுவும் மறுக்கப்படவே, "கண் குளிர ஒரு பார்வை பார்க்கலாகாதா?" என்றான். அவளுக்கோ உள்ளம் இளகவில்லை. இந்த நிலையில், "நான் பிழைத்துப்போகும் வேறு வழியாவது காட்டவேணும்" என்று வேண்டினானாம், அனை வருக்கும் பிழைக்க வழிகாட்டும் பெருமான். அப்படி அவன் சொன்னதும் பளிச்சென்று அவள் முகத்தை திருப்பிக்கொண் டாள்! "இந்தப் பராமுகம் ஏனோ? இனிமேல் பழி உன்னைத்தான் சாரும்!" என்று பயமுறுத்திப் பார்க்கிறான் காதலன். இது முருகன் திருவிளையாடல்.

ஊகம் சரிதானே? இது நமது சொந்தச் சரக்கல்ல; முருகக் கடவுளின் திருவுள்ளம் அறிந்த கச்சியப்ப சிவாசாரியர் (கந்த புராண ஆசிரியர்) கற்பனை.

காதல்—நாடகம்

ஸ்ரீமதி. கே. சாவித்ரி அம்மாள்.

எங்கள் க்ளப்

"ஜகன்மோகினி" ஆசிரியை "உங்கள் கிளப்பைப்பற்றி எங்கள் ஆண்டு மலருக்கு ஒரு கட்டுரை எழுதுங்கள்" என்று கேட்டபொழுது நான் முன் பின் யோசியாமல் சரி என்று சொல்லிவிட்டேன், பிறகுதான் நான் ஒத்துக்கொண்டதைப் பற்றி எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. 'எங்கள் கிளப்பைப்பற்றி நான் எப்படி எழுதுவது? நான் என்ன எழுதினாலும் அது வெறும் புகழுரையாக ஆய்விட்டால்? நம் கிளப்பைப்பற்றி நாமே பெருமையடித்துக்கொள்வதா?' என்று இவ்வாறெல்லாம் பெரிய கவலைகள் தோன்றின. ஆனால் யோசித்துப் பார்க்கும்பொழுது அவ்வாறு கவலைப்பட வேண்டிய காரணமேயில்லை என்றும் பட்டது. 'எங்கள் கிளப்பு எனக்கு மட்டும் சொந்தமா? அதன் அங்கத்தினர்களாகிய எங்கள் அனைவருக்குமே சொந்தமல்லவா? ஆகவே அதன் பெருமை எங்கள் அனைவரையும்தானே சார்ந்ததாகும்? மேலும் தற்கால ரீதிப்படிப் பார்த்தால் நம்மை நாமே எற்றிக்கொள்ளுவதிலும் பிசகில்லையே?' என்று இவ்வாறு யோசித்துச் சமாதானமடைந்தேன்.

நம்முடையது என்ற அபிமானத்தினால் நமக்கு எல்லாம் உயர்வாகத் தோன்றுவது இயல்பே. எத்தனையோ நாகரீகச் சிறப்பு வாய்ந்த கிளப்புகளைப் பார்த்த பின்பும் "என்ன இருந்தாலும் நம் கிளப்புபோல் இல்லை" என்று தோன்றினால் அதில் என்ன தவறு? "எங்கள் கிளப்பு" அல்லவோ அது? சீரும் சிறப்பும் மேலிட்ட எவ்வளவோ அயல்நாடுகளைக் கண்டு வியந்தபோதிலும் கடைசியில்தான் பிறந்து வளர்ந்த நாட்டை அணுகும் பொழுதுதானே எல்லையற்ற மகிழ்ச்சியும் பெருமையும் தோன்றுகின்றன! அதைப்பற்றி யார் ஆச்சரியப்படுவார்கள்? அது போன்றதுதான் இவ்வுணர்ச்சியும்.

எங்கள் கிளப்பு சற்றேறக்குறைய 10 ஆண்டுகளுக்குமுன் ஸ்ரீஜானம்மாள், ஸ்ரீ அம்புஜம்மாள் போன்ற பொதுக்காரியங்களில் ஆர்வம் மிகுந்த சகோதரிகளின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது. அம்முயற்சி நிறைவேறுவதற்கு உதவியாயிருந்தவர் பாலியத்திலேயே கைம்பெண்ணாகவோ அல்லது கணவனால் கைவிடப்பட்டு நிர்க்கதியாகவோ உள்ள எளிய பெண்களுக்குப் பேராதரவாயிருக்கும் அருந்தொண்டாற்றுவதையே தம் ஜன்ம விருதமாகக் கொண்ட சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள் ஆவர். தாம் மேற்கொண்ட நற்காரியங்களில் விடாது பாடுபடுவோரின் முயற்சி எங்கேனும் பயனில்லாமற் போகுமா?

சிறந்த லக்ஷ்யங்களைக் கைக்கொண்டது எங்கள் கிளப்பு. வீண் ஆடம்பரம் இல்லால் எளிய முறையில் நடக்கவேண்டும் என்பது அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்று. லக்ஷ்யங்களை அப்படியே செய்கையில் கொண்டு

வருவது அரிதல்லவா? ஆரம்பத்தில் வெகுசுலபமாகவே அப்பெருமை எங்களுக்குக் கிட்டிற்று. அங்கத்தினர்கள் கூடுவதற்கு வேண்டிய கட்டடம் முதலிய வசதிகள் இல்லையே என்ற குறை எங்களை அதிகம் பாதிக்கவில்லை. உட்கார்ந்து சம்பாஷிப்பதற்கு ஒரு மரத்தடிதான் கிடைத்தது. பாதகமில்லையென்று நாங்கள் அதையே சந்தோஷத்துடன் உபயோகித்துக் கொண்டோம்.

பத்மா விலாஸ் என்ற பங்களாவின் தோட்டத்தில் ஓர் புளியமரத்தடியில்தான் முதன்முதல் எங்கள் கிளப் நடைபெற்று வந்தது. அப்பொழுதெல்லாம் நம் புளியமரத்துக் கிளப்பு என்றுகூட நாங்கள் வேடிக்கையாகச் சொல்லிக் கொள்வோம். மரத்தடியில் ஓர் ஜமக்காளம் விரிக்கப்பட்டிருக்கும். அதில்தான் வித்தியாசமில்லாமல் எல்லாரும் உட்கார்ந்து பேசிப் பொழுது போக்குவோம். இவ்வளவு ஆடம்பரமில்லாமலிருந்தாலும் வருஷாந்திரக் கொண்டாட்டங்களை மட்டும் நாங்கள் விமரிசையாகக் கொண்டாடத் தவறுவதில்லை. அக்காலங்களில் போட்டோ எடுத்துப் பத்திரிகைகளுக்கு அனுப்புவதற்காகப் போட்டோக்காரர்கள் நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு வந்துவிடுவார்கள். ஆகவே எங்கள் கிளப்பு போட்டோ ஹிந்து முதலிய பிரபல தினசரிகளில் வெளியாவதுண்டு. அதைப் பார்ப்பவர்களுக்குக் கிளப்பைப்பற்றிப் பிரமாதமான மதிப்பு ஏற்பட்டிருந்தால் அதில் ஒன்றும் வியப்பில்லையல்லவா?

வடக்கே வேலையாயிருந்த ஒரு உத்தியோகஸ்தரின் மனைவி அவ்வாறுதான் பிரமித்துப் போயிருக்கவேண்டும். சென்னை வந்தபோது எங்கள் கிளப்பைப் பார்க்கவேண்டுமென்று வந்தாள். இந்த மரத்தடி கிளப்பைப் பார்த்து அந்த அம்மாள் அடைந்த ஏமாற்றத்தை என்னென்று சொல்லுவது? அது அவள் முகத்திலேயே வெளியாய்விட்டது. நவநாகரீக மோகத்திலாழ்ந்தவர்கள் இவ்வளவு எளிய முறையை மனதாலும் ஸ்மரிக்க முடியுமா? தனக்கிருந்த அந்த இகழ்ச்சியில் கிளப்பு அங்கத்தினராகலாம் என்ற எண்ணத்தைக்கூட விட்டுவிட்டாள். உண்மையில் எங்கள் கிளப்பு அந்த அம்மாளைப் போன்றவர்களுக்குச் சற்றும் மதிப்புண்டாக்கும் வகையில்லை என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆயினும், அப்பால் இடவசதிகள் ஏற்பட்ட பின்பும் ஆடம்பரமற்ற எளிய முறையையே கூடிய மட்டும் பின்பற்றுவதில்தான் எங்களுக்கு நிஜமான பெருமை.

செல்வமும் நாகரீகமும் மிகுந்த கிளப்பு என்றால் அது எப்படி இருக்குமென்பதை அனைவரும் அறிவோம். மிருதுவான சோபா நாற்காலிகளுடன் கூடிய பங்களா, விசாலமான தோட்டம் இவைகள் மிகவும் அவசியமல்லவா? அப்படிப்பட்ட இடத்திற்கு வந்து உல்லாசமாய்ப் பொழுது போக்குபவர்களும் எப்படி இருப்பார்கள்? மிக்க சிரத்தையோடு நாசூக்காய் அலங்கரித்துக்கொண்டுதானே வருவார்கள்! அவர்கள் பிறருடன் மிகவும் மரியாதையாயும் இனிமையாயும் உபசார வார்த்தைகளே பேசும் பழக்கமுள்ளவர்களாயுமிருப்பார்கள். மனதில் தோன்றியதையெல்லாம் பிறரிடம் வாய்விட்டுச் சொல்லமாட்டார்கள். எங்கள் கிளப்பிலோ இப்படிப்பட்ட நியமங்கள் ஒன்றுமேயில்லை. காலைமுதல் கட்டி நலுங்கிப்போன புடவையாயிருந்தாலும் பாதகமில்லை என்று கிளப்புக்கு வந்துவிடுவோம். அப்படி வந்தவர்களைப் பார்க்கப் பிடிக்காத நாசூக்கு மேலிட்டவர்கள்தான் எங்களிடையே அரிதாயிற்றே! எல்லோருடனும் மனதோடு சகஜமாய்ப் பழகவேண்டும், ஒருவரையும் அலக்ஷ்யமாகவோ மனதிற்கு வருத்தத்தைத் தாக்கூடிய விதமாகவோ மட்டும் பேசக்கூடாது என்பதுதான் எங்கள் முக்கிய கொள்கை.

நாகரீக முறையில் பழகுவதில் அதிக சிரத்தை இல்லாமலிருந்ததுடன்,
நாங்கள் தோன்றியபடி கத்திப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கப்
புதிதாய் வந்தவர்களுக்குக் கொஞ்சம் திகைப்பாக இருக்கலாம் வெளிப்
படையாகப் பிரியமாயும் மரியாதையாயும் நடந்துகொண்டாலும் உள்ளூர
ஒருவர்மேலொருவர் வெறுப்பும் பகையும் கொண்டு ஒழுகுவதும் உண்
டல்லவா? எங்களிடையே அவ்வாறு நேராததுடன் அதற்குப் பதில் ஒரு
சிறந்த ஒற்றுமையே விளங்குகிறது என்றும் சொல்லவேண்டும்.

அம்மாதிரி ஒற்றுமை இருப்பது எவ்வளவு அரிது என்பதை உணர்ந்து
தான்போலும் கல்வியறிவும் புத்தி நுட்பமும்பெற்ற பெண்மணியொருவர்
ஒரு சமயம் "சண்டை சச்சரவில்லாமல் லேடிஸ் கிளப்பு நடப்பது ரொம்பக்
கஷ்டமாயிற்றே! உங்களுக்குப் பெருமைதான்" என்று பாராட்டி என்
னிடம் சந்தோஷம் விசாரித்தார். கேவலம் மாலை நேரங்களில் ஆட்டங்கள்
விளையாடியும் பேசியும் உல்லாசமாய்ப் பொழுதுபோக்கவேண்டும் என்ற
நோக்கத்துடனேயே எங்கள் கிளப்பு ஏற்பட்டிருந்தால் ஒருக்கால் அம்
மாதிரி சண்டை சச்சரவுகளுக்கு அவகாசம் ஏற்படலாம். ஆனால் நாங்கள்
ஆட்டங்கள் ஆடுவதையும் வேடிக்கையாகப் பேசிப் பொழுது போக்கு
வதையும் இரண்டாம் பக்ஷமாகத்தான் வைத்திருக்கிறோம். வெறும்
பொழுதுபோக்கு கிளப்பாயிருப்பதைக் காட்டிலும் அவ்வப்போது அவசிய
மான பொதுக்காரியங்களில் அங்கத்தினர்கள் ஈடுபடுவதற்கு கிளப்பு ஓர்
நல்ல ஸாதனமாக அமையவேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை
பீஹார் பூகம்ப நிதிக்குப் பொருள் உதவிசெய்வதோ, யுத்த பயத்தின்போது
விமானத் தாக்குதலினின்றும் எப்படித் தம்மை ரக்ஷித்துக்கொள்ளுவது
என்னும் விஷயத்தை அறியாத ஏழை மக்களுக்கு எடுத்துரைப்பதோ
அல்லது ஹிந்தி இயக்கத்திலீடுபட்டு ஹிந்தி வகுப்புக்கள் வைத்து ஹிந்தி
யைப் பலரும் கற்கும்படிச் செய்வதோ இவைபோன்ற பரோபகாரச் செயல்
களை மேற்கொள்வதை நாங்கள் கடமையாகவே பாவிக்கின்றோம்.

தேசியப் போராட்டத்தில் முன்னணியில் நின்று சிறை வ சத்தை
அனுபவித்தவர்கள் கிளப்பின் முக்கிய அங்கத்தினர்களாயிருப்பது வீண்
போகுமா? அவர்களுடைய சகவாசத்தின் பயன் தேசீய உணர்ச்சியே
பெரும்பாலும் எங்களிடையே மேலோங்கி நிற்கும். காந்திஜி, பாரதியார்
பிறந்த தினங்களை விசேஷ ஆர்வத்துடன் கொண்டாட நாங்கள் ஒரு
போதும் தவறுவதில்லை. மற்ற நாட்களில் ஆட்டங்களிலும் வெட்டிப்
பேச்சுக்களிலும் உற்சாகமாய்ப் பொழுது போக்குபவர்களை அந்த விசேஷ
தினங்களில் பார்க்கவேண்டுமே! ஒரு மனதோடு எவ்வளவு ஆர்வத்துடன்
அந்நாட்களைக் கொண்டாடுவோம்! சென்ற வருஷம் தேசிய கவி பாரதி
யாரின் தினத்தன்று ஏற்படுத்திய பாரதிப் பாட்டுப் போட்டி எவ்வளவு
வெற்றிகரமாய் நடந்ததென்று எண்ணி நாங்கள் பெருமை கொண்டால்
அது அணுவளவும் வீண் டம்பமாகாது. இன்னும் சங்கீதம் இலக்கியம்
இத்துறைகளிலும் பயிற்சி ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்
திக்கொள்வதில் எங்களுக்கு மிக்க சிரத்தை உண்டு.

எங்கள் கிளப்பு செல்வம் மிகுந்த நாகரீகச் சிறப்புக்குப் பெயர்
போனது அல்ல, எனினும் பெரிய பெரிய மகாராணிகள் அதற்கு விஜயம்
செய்திருக்கிறார்கள் என்பதை இங்கு குறிப்பிடவேண்டும், அதுமட்டுமல்ல;
புகழ்பெற்ற தேசத் தலைவர்கள் தலைவிகள் சிலரையும் வரவேற்று உபசரிக்
கும் பெருமையும் அடைந்திருக்கிறது. அந்த தினங்களில் அவர்கள் ஆற்றிய
சொற்பொழிவு எங்களுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியை அளித்தது.

ஒரு சமயம் ஸ்ரீமதி சரோஜினிதேவி அவர்கள் கிளப்புக்கு விஜயம் செய்திருந்தபொழுது செய்த பிரசங்கத்தில் "கிளப்பில் பொழுது போக்கும் உற்சாகத்தில் அங்கத்தினர்கள் வீட்டுக்குத் திரும்பிப் போகும் நினைவில்லாமலே இருந்துவிடுவதுண்டு. அவ்வாறு நீங்கள் ஆகக்கூடாது" என்று வேடிக்கையாகச் சொன்னார். அச் சொற்களில் ஆழ்ந்து கிடக்கும் உண்மையை நாங்கள் ஏற்கெனவே அறிந்திருக்கிறோம்.

கிளப்பு நினைவில் வீட்டையே மறந்துவிடக் கூடிய மோசமான நிலைமை யாருக்கேனும் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் எங்களுக்குச் சற்றுமில்லை. எப்படிப்பட்ட மும்முரமான பேச்சு, சீட்டுக் கச்சேரி இவைகள் மத்தியிலும் சலிக்காமல் வீட்டு அலுவல்களை நினைத்துக்கொண்டு எழுந்து செல்லக்கூடிய மனோதிடம் எங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு என்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன்.

"ஏது, ஏதோ கவலைப்படுவதாகச் சொல்லிவிட்டு ஒரே தற்பெருமையாக இருக்கிறதே" என்று யோசிக்கிறீர்களோ? வேண்டுமானால் எங்கள் "மயிலாப்பூர் லேடீஸ் கிளப்"பில் சேர்ந்து பாருங்கள். நான் சொல்லியது தவறா அல்லது உங்களால்தான் வேறுவிதமாய் இருக்க முடிகிறதா என்று தான் பாருங்கள்.

சித்திர ரகளை

"அன்னம் வருகிறது"

பி. ஸ்ரீ

OFFICE OF THE ... 20 FEB 1943 MADRAS

திராவிட சாஸ்திரி

(ஊரார் பசுவை ஊட்டி வளர்த்தால், தன் மாடு தானே வளருமா?)

“ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்” என்பது ஒருபழமொழி. இது ஒரு நல்ல பழமொழி; தமிழர்களின் தியாக புத்தியை வெளியிடுகிறது. தியாக புத்தியைப் பாராட்டாமலிருக்கமுடியுமா?

ஆனால் எந்தத் தமிழனாவது தன் பிள்ளையைப் பட்டினிபோட்டு, கிடைத்த பாலையும் சோற்றையும் அன்னியன் பிள்ளைக்கே ஊட்டிவந்தால், வீட்டுப்பிள்ளை தானே வளரமுடியுமா? அதே **தியாக புத்தி**யுடன் நாம் “கிடைத்த புல்லையும் தவிட்டையும் **அன்னிய மாட்டுக்கே** போட்டுவந்தால், நம்முடைய பசு எவ்வாறு பால் கொடுக்கும்? உண்மையாக அதில் தியாகமுமில்லை; புத்தியுமில்லையே!

கடைசிக் கேள்வி நான்போட்ட கேள்வியல்ல; நமது “ராஜாஜி”யின் கேள்வி. அதில் “அன்னிய மாட்டுக்கே” என்று பொதுவாகப் போட்டிருப்பதுதான் என் சொந்தச் சரக்கு: அவர் “ஆங்கில மாட்டுக்கே” என்று அந்த மாட்டைச் சிறப்பாகவே குறிப்பிடுகிறார். இப்போது படித்துப்பாருங்கள் வாக்கியத்தை:—“கிடைத்த புல்லையும் தவிட்டையும் **ஆங்கில மாட்டுக்கே** போட்டுவந்தால், நம்முடைய பசு எவ்வாறு பால் கொடுக்கும்?” புரிகிறதல்லவா, இது பசுவையும் காளையையும், புல்லையும் தவிட்டையும் பிரஸ்தாபிக்கவில்லையென்று?

ஆம்; ‘ஆங்கிலமாடு’ கனம்மிகுந்த காளையாகிய **ஜான்புல்** என்ற நம்முடைய மாட்சிமை தங்கிய போஷகரின் பாஷைதான். தமிழராகிய நம்முடைய பசு பசியோடிருக்கும் தமிழ்ப் பசு—அதாவது தாய்மொழியாகிய தமிழ்ப் பாஷைதான். எனவே, இது **பாஷையின் போஷணை**யைப் பிரஸ்தாபிக்கும் வாக்கியம். தமிழன் தன் வீட்டிலும் கோர்ட்டிலும், கலாசாலையிலும் ஸர்வ கலாசாலையிலும் முகப்பிலே பொன் எழுத்தில் எழுதிப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய ஒரு மகாவாக்கியம். பார்த்துப் பார்த்துப் படித்துப் படித்து உள்ளத்திலே பதித்துவைத்துக் கொள்ளவேண்டிய மந்திரம்,

ஆசார்யரே இதற்குப் பாஷ்யமும் செய்திருக்கிறார், பழைய உரையாசிரியர்களின் தோரணையிலே. “புல்லையும் தவிட்டையும்” என்றால், “கருத்துகளும் உணர்ச்சிகளுமாகிய புல்லையும் தவிட்டையும்”—என்பது வியாக்கியானம். நம்முடைய “கருத்துகளும் உணர்ச்சிகளுமாகிய புல்லையும் தவிட்டையும்” போட்டு, “அயல்மொழி—மாடுகளையே” ஊட்டிவளர்த்தால், “நமது தமிழ்மொழியாகிய ஆன்மாடு என்ன ஆவது? நமக்கு எப்படி அது பயன்தரும்?” என்று கேட்கிறார்.

நாமும் தலைசாய்ந்து விழிக்கிறோம். **திருதிரு**வென்று எனினும் கொஞ்சமும் கூசாமல், இப்பேர்ப்பட்ட தியாக புத்தியை இன்னும் விட்டுவிடாமல், “எப்படியும் ராஜபாஷை ராஜபாஷைதான் ஸார்!” என்று அந்த

மோகத்தால் ராஜவிழி விழிக்கும் பேர்வழிகளும் நம்மில் இருக்கத்தான் செய்கிறார்கள்; ஆம் இன்றும் இருக்கிறார்கள் !

இந்த இருபதாம் நூற்றாண்டின் மத்தியிலே,—ராஜாஜிபோன்ற நுண்ணறிவாளர்களும் தமிழை அழகுசெய்து மறுமலர்ச்சித் திருநாள் கொண்டாட முன்வந்திருக்கும் இந்நாளிலும்—நமது நிலை இப்படியென்றால், அரை நூற்றாண்டுக்குமுன்—அதாவது, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்—எப்படியிருந்திருக்க வேண்டும் நம்மவரின் அடிமை—மோகம் ! "காராம் பசு எப்படிப்போனால் என்ன ? வெள்ளைக்காளைதான் நமக்குப் பயன்தரும்!" என்று நம்பியிருந்த காலம் அது. "இங்கிலீஷ் தெரிந்த கௌரவம்; தமிழ் தெரியாத கௌரவம்" என்ற இரட்டைக் கௌரவத்துடன் தமிழர்கள், "டமில் நமக்குப் பேசவும் 'வரமாட்டேன்' என்கிறது ஸார்!" என்று தைரியமாய்ப் பேசுவார்கள். ஆங்கிலத்திலோ, அல்லது "ஆங்கிலத் தமிழ்" என்ற ஆபாச மணிப்பிரவாளத்திலோ, "நான் நினைக்கிறதே இங்கிலீஷில்தான்!" என்று மார்தட்டுவார்கள். "உணர்ச்சிகளை இங்கிலீஷில்தானே ஸார்! வெளியிட முடிகிறது?" என்று பூரித்துப் போவார்கள்.

அப்படித் தமிழை மறந்து ராஜபாஷை கற்றவர்களுக்கு ராஜயோகம் அந்தநாளிலே. "மரணயோகம்தான் தாய்மொழிக்கு விதித்திருக்கும் தலைவிதி" என்று ஆங்கிலம் கற்ற தமிழர்கள் திருப்தி அடைந்தகாலம். "நம்முடைய தமிழ் இனி ஏட்டுக்குள்ளே பதுங்கிக்கிடக்கவேண்டியதுதான்!" என்று பண்டிதர்களும் கைவிட்ட பருவம்.

அந்தக் காலத்திலே, ஏ,பி என்று ஆரம்பித்து பி,ஏ என்று பட்டம் பெற்றதோடு, ஆங்கிலத் தத்துவ சாஸ்திரத்திலும் தமிழிலும் சென்னை ராஜதானிக்கே முதன்மையாகத் தேறிய ஒருவர், "ஊரார் பசுவை ஊட்டி வளர்த்தால், தன்பசு தானேவளருமா?" என்ற கேள்வியைத் தமக்குத் தாமே கேட்டுக்கொண்டார். இவர் மற்றவர்களைப்போல் உத்தியோக ஸிம்மாஸனம் ஏறாமல், கலாசாலையில் தத்துவ சாஸ்திரப் பேராசிரியர் பீடத்திற்குக்கூட ஆசைப்படாமல், தமிழ்ப் பண்டிதராக அமர்ந்தாரென்றால், அது எவ்வளவு அதிசயமான நிகழ்ச்சி! நினைத்துப்பாருங்கள், அன்பர்களே! அவருடைய நுண்ணறிவும், செல்வாக்கும், அந்த நெஞ்சுத்துணிவுமே அவரை ஒரு பெரிய வக்கிலாகவும் செல்வராகவும் செய்து ராஜபோகத்திலே வைத்திருக்கமுடியும்; அல்லது ராஜயோகத்திலேயே தூக்கி வைத்து ஓர் அதிகார தேவதையாக மாற்றியிருக்கவும் கூடும்.

எவ்வளவு தைரியத்துடனும், தியாக புத்தியுடனும், தமிழ்க் காதலுடனும் ஸ்ரீ **வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்** பி.ஏ., 1893-ம் வருஷம் "தமிழ் ஐயா"வாகக் கிறிஸ்தவ கலாசாலையில் வேலைக்கு அமர்ந்தாரென்பதை இந்நாளில் உணர்ந்துகொள்வது எளிதன்று. இவருடைய அத்தகைய அருமையான குணாதிசயத்தைக் குறித்து என் தந்தையாரும் பிறரும் கதை கதையாய்ச் சொல்லிக்கொண்டிருந்ததை என் இளமையிலே கேட்டு இன்புற்றிருக்கிறேன்.

"பெருமாள்" என்ற பெயரோடு கூடிய ஒரு புதிய வேலைக்காரனை நோக்கி ஸ்ரீ வைஷ்ணவர் ஒருவர் தமது பக்தியுணர்ச்சி தோன்ற, "நான் இந்தப் பெயரால் உன்னை அழைக்கமாட்டேன்: பெயரை மாற்றிக்கொள்" என்று கட்டளையிட்டாராம். அதற்கு அவன் "அப்படியே செய்கிறேன்"

என்று போய்த் தன் சுயமரியாதை யுணர்ச்சி தோன்றப் பெயரைப் "பெரிய பெருமாள்" என்று மாற்றிக்கொண்டுவந்தானும். இது கதை. ஆனால் ஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரியார், சாஸ்திரியாரான உண்மை வரலாறு இக்கதையைக் காட்டிலும் அதிசயமானது. இவர் கிறிஸ்தவகலாசாலையில் பி.ஏ., வகுப்பில் சேர்ந்தபோது, **டாக்டர் வில்லியம் மில்லர்** என்ற கல்வி நலம் வாய்ந்த பெரியார் அக்கலாசாலையின் தலைமை ஆசிரியராயிருந்தார். மாணவர், "சூரியநாராயணன்" என்றுதான் கலாசாலைக் குமாஸ்தாவிடம் பெயரெழுதிக் கொடுத்திருந்தார். இந்த பெயரே நீளமாகத் தோன்றியதாம் மில்லர் துரைக்கு, மாணுக்கர்களின் பெயர்களை முதல் முதல் வகுப்பிலே வாசித்துவரும்போது.

மில்லர் : உன் பெயரை மாற்றிக்கொள்வாயா ?

சூரிய நாராயணன் : ஐயா, அப்படியே செய்வேன்.

மில்லர் : அதுதான் சரி.

மறுநாள் "அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்த"ரில் இந்த மாணுக்கரின் பெயரைக் கண்டதும், "தூக்கிவாரிப்போட்டது" துரைமகனுருக்கு. அது முன்னிலும் நீண்டுவளர்ந்திருப்பதைக் கண்டார். "சூரிய நாராயணன்" என்ற பெயர் "சூரிய நாராயண சாஸ்திரி"யாகிவிட்டது !

மில்லர் : (ஆச்சரியத்துடன்) இது என்ன ?

சூரிய நாராயணன் : (அமைதியாக) ஐயா ! பெயரை **மாற்றிக்கொள்** என்றீர்கள். அப்படியே செய்தேன்.

அந்த மனோதைரியமும், சுயமரியாதை யுணர்ச்சியும், புத்திக் கூர்மையும் மில்லர் துரையின் மேன்மையான உள்ளத்தை வசீகரித்துவிட்டன. பிறகு **"சூரிய நாராயண சாஸ்திரி"** என்ற பெயரைச் **"சூரிய நாராயண சாஸ்திரியார்"** என்று இன்னும் கொஞ்சம் நீளமாக்கிக்கொள்வதில் கூடத் துரைக்கு ஆட்சேபமில்லை !" என்று கூறிமுடித்தார் என் தந்தையார்.

இதே தைரியத்துடன் தமிழ்ப் பண்டிதரானவர், இரண்டு மூன்று வருஷங்களில் கிறிஸ்தவ கலாசாலையில் தலைமைத் தமிழாசிரியரானார். இவர் தமது வீட்டிலும் சில மாணுக்கர்களை அழைத்துவைத்துக்கொண்டு விசேஷ ஆர்வத்துடன் தமிழ் நூல்களைக் கற்பித்துவந்தார். இந்த மாணுக்கர்களில் பணக்காரராயிருந்த ஒருவர் ஒரு மாதமானதும் சம்பளம் கொடுக்கத் தயாராயிருந்தார். சாஸ்திரியாருக்குப் பணமுடைதான். எனினும் **"யாம் தமிழைக் கற்பிக்கின்றோம்; விற்பனை செய்யமாட்டோம்!"** என்று கம்பீரமாகச் சொல்லிவிட்டாராம்.

அதே மாணவர் பி.ஏ , பரீட்சையில் முதன்மையாகத் தேறக்கூடும் என்று எதிர்பார்த்த சிலர் பொருமையோடு, "அவர்யோகமே யோகம்: அவருடைய சாஸ்திரியார்தானே இந்த வருஷம் பி.ஏ., தமிழ்ப் பரீட்சகர்!" என்று பேசிக்கொண்டார்கள். இதைக் கேள்விப்பட்ட சாஸ்திரியார் "எனக்கு இந்த ஆண்டு இந்தப் பதவி தேவையில்லை" என்று தைரியமாக மறுத்துவிட்டாராம். உண்மையில், பணமுடை தீர்ந்தபாடில்லை; அந்த வருமானம் அந்த வருஷத்திற்குத் தேவையாகவேயிருந்தது !

இந்த வரலாறுகளைக் கேட்டதும், "ஆஹா, என்ன தியாகம்!" என்று அதிசயித்தேன். "ஆனால் அவர், தியாகமாகவே நினைக்கவில்லை!" என்றார்

நேரில் சாஸ்திரியாரை அறிந்திருந்த ஒரு தமிழறிஞர். உண்மைதான்; வாழ்க்கை காதல் மயமாகிவிட்டால், தியாகம் தியாகமாய்த் தோன்றாது: இன்பமயமாகி விடுமல்லவா? தமிழ்க்காதலே சாஸ்திரியாரின் குணாதிசயத்தைப் பெரிதும் உருவாக்கியதென்று சொல்லவேண்டும். மனோதைரியம் இக்காதலுக்கு உரமாயிற்று.

எவ்வளவோ தைரியத்திற்கு அறிகுறியாயிருந்த "சூரிய நாராயண சாஸ்திரி" என்ற பெயரே தமிழ்க்காதலால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுப் "**பரிதி மாற் கலைஞன்**" என்ற புனை பெயராகப் பரிணமித்து விட்டது. (சூரியன்—பரிதி; நாராயணன்—மால்; சாஸ்திரி—கலைஞன்.) "கலை"யைத் தமிழ்ச் சொல்லாக்கிய தமிழ்க்காதலைத்தான் சாமானியமாக மதிக்க முடியுமா? இப்படிப் பெயர்களைத் தமிழாக்கிக்கொள்வது இன்று ஒரு புதுமையல்ல. ஆனால் அந்த நாளில் இப்படியெல்லாம் செய்யத் துணிந்த சாஸ்திரியாருக்குத் "**திராவிட சாஸ்திரி**" என்று பட்டம் சூட்டினார் தமிழன்பரான **திருவாளர் தாமோதரம் பிள்ளை.** இப்பட்டத்தை யூனிவர்ஸிடியின் பட்டங்களுக்கும் சர்க்காரின் பட்டங்களுக்கும் மேலாக மதித்த **பரிதிமாற் கலைஞர்,** "**தாமோதரம்** என்ற பெரியாருக்கு எவர் **தாமோதரம்?**" என்று வியந்து நன்றி தெரிவித்ததாக என் தந்தையார் குதூகலமாய்க் கூறக் கேட்டிருக்கிறேன்.

சாஸ்திரியாரின் தமிழும் தமிழ்க்காதலும் என்னைப்போன்ற சில மாணாக்கர்களின் இளமை புள்ளத்தைப் பகட்டி வசீகரித்தன. சம்பாஷணைகளிலும் "இயம்புதும், கேண்மின், எற்றுக்கு' என்றெல்லாம் பேசத் தொடங்கினோம். "புத்தி"யைப் "புற்றி'யென்றுகூடத் தமிழாக்கிவிடலாமா?—என்று எண்ணினோம். எங்கள் தமிழ்ப் பண்டிதர் கேட்ட ஒரு கேள்விக்கு "அறைவாம்" என்று பதில் சொல்லத் தொடங்கினான் என் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணாக்கன். கிழவரான பண்டிதருக்கு உள்ளுக்குள்ளே கொஞ்சம் பயம்தான், "அறைவாம்" என்று முதல்முதல் பையன் சொன்னதும். **பாலசுந்தரம்** என்ற மாணாக்கன் "**இள அழகு**" என்று தூய தமிழில் தன்பெயரை மொழிபெயர்த்து இலக்கணத்திற்கு இசைய '**இள வழகு**" என்றே தன்னைச் சொல்லிக்கொண்டு இளநகை யரும்புவான். **கலியாணசுந்தரம்** "**மண அழகு**' என்ற பெயரை சூட்டிக்கொண்டு ஒரு மணப் பெண்போல் நாணிக்கோணி நிற்பான். **சோமசுந்தரம்** தவறாக ஏதாவது சொல்லிவிட்டால், "**மதியழகு! நன்று, நன்று**" என்று தமிழ்ப் பண்டிதரே அவன் தலையைத் தடவிவிடுவார். "மதியழகு"ம் "இஃதென்கொலோ!" என்று மயங்குவான். 1903-ம் வருஷம் சென்னையில் 33-ம் வயதிலே அகால மரணம் அடைந்த பரிதிமாற் கலைஞரின் ஆவி, திருநெல்வேலிக் கலாசாலையிலும் புகுந்து அங்கே படித்துக்கொண்டிருந்த எங்களையும் சில வருஷங்கள் அப்படியெல்லாம் ஆட்டிவைத்தது.

வயது ஏற ஏற அந்த ஆவேசம் போய்விட்டது; அந்தத் தமிழ் மறந்துவிட்டது. எனினும் அந்தத் தமிழ்க்காதலை எப்படி மறக்கமுடியும்? அந்த நாளில் நமக்குக் கிடைத்த புல்லையும் தவிட்டையும் அப்படியே வஞ்சகமில்லாமல் தமிழ்ப் பசுவுக்குப் போட்டுவிட்ட பரிதிமாற்கலைஞரை மறப்பது பாவம் என்று என் உள்ளம் சொல்லுகிறது.

ஸ்ரீமான். கே. ஏ. நீலகண்ட. சாஸ்திரியார். எம். ஏ.,

இந்திய விரிவு

சமயக் கொள்கைகள்

(Published by courtesy of All India Radio, Madras.)

இப்போது நடக்கிற யுத்தத்தில் ஜப்பானியர் கைப்பற்றியும், இன்னும் கைப்பற்றுவதற்காகப் போர் புரிந்துவரும் நாடுகளும் தீவுகளும் முன்னாட்களில் இந்தியாவின் பகுதிகளாக இருந்தன. கி. பி. முதல் பத்துப் பதின்மூன்று நூற்றாண்டுகளில் கிரேக்கரும் அராபியரும் தாங்கள் எழுதின பூகோள சாஸ்திர நூல்களில் இந்த உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந் நாளிலும்கூட இந்த நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருந்த பழைய தொடர்பின் அறிகுறிகள் சில இருந்துவருகின்றன. புத்த மதம் நிறைந்த இந்தோ-சீனா நாடுகளில், அதாவது தாய்லாந்து எனப்பட்ட சியாமிலும், கம்போடியாவிலும் பாகூ எனப்பட்ட சில பிராமணர்கள் இந்து மந்திரங்களையும் ஆகமங்களையும் ஓதிக்கொண்டு நடராஜா, கணேசர், சோமஸ்கந்தர் முதலிய விக்ரகங்களைப் பேணிக் கொண்டும், அரசர்களுடைய பட்டாபிஷேக வைபவங்களிலும், சரமக்கிரியைகளிலும் தங்களுக்கேற்பட்ட முக்கியமான கடமைகளைச் செய்துகொண்டும் வருகிறார்கள். மலேயாவிலும் போர்னியோவிலும் இம்மாதிரி இந்திய சமயாசாரங்களும் பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன. ஜாவாவுக்குக் கிழக்கிலுள்ள பாலி என்னும் சிறு தீவில் ஹிந்துக் கோயில்கள் இருக்கின்றன. ஹிந்து ஆசாரங்களும் பழக்கத்திலிருக்கின்றன. இவையெல்லாம் பழையகாலத்து இந்தியாவின் விரிவுக்குரிய சின்னங்களே.

முன்னாட்களில் அக்கரை இந்தியாவிலுள்ள ஜனங்கள் ஜாவாவில் அகஸ்தியரையும், பூ-நன் என்ற புராதன கம்போடியாவில் கௌண்டின்ய மஹரிஷியையும் கம்புஜ தேசத்தில் கம்பு மஹரிஷியையும், சம்பா தேசத்தில் ப்ருகு மஹரிஷியையும் போற்றி வந்தார்கள். ஒவ்வொரு தேசத்திலும் அந்தந்த தேசத்து ரிஷிக்கும் அதன் ராஜவம்சத்துக்கும் ஒரு நெருங்கிய சம்பந்தமுண்டு. சில ஐதீகங்கள், ரிஷி ஓர் அப்ஸரஸ்ஸையோ அல்லது ஓர் உயர்குலப் பெண்ணையோ மணந்தால் பிறந்த பிள்ளையே அந்நாட்டுக்கு முதல் ராஜாவானான் என்று கூறும்; வேறு சில ஐதீகங்கள் மஹரிஷியால் நாட்டு அரசனுக்குத் தெய்வீக பலம் சம்பாதித்துக்கொடுக்கப்பட்டது; அதற்கு அடையாளமாக ஒரு சிவலிங்கம் வானுலகினின்று வரவழைக்கப்பெற்று அரசனுடைய கையில் கொடுக்கப்பட்டது; அந்த லிங்கத்தை அவன் காப்பாற்றும்வரை அது அவனைக் காப்பாற்றும் என்று சொல்லும். இம்மாதிரியான பல கதைகள் வழங்கிவந்தன.

இந்நாடுகளில் இந்தியர்—முக்கியமாய்த் தென்னிந்தியர்—குடியேற ஆரம்பித்த காலம் இன்றைக்குச் சுமார் இரண்டாயிர வருஷங்களுக்கு முந்தினதென்று கூறலாம். அப்போது இந்நாடுகளில் மலைகளையும், மரங்களையும், நாகங்களையும் தெய்வங்களாகக் கொண்டாடுவதும், காலஞ்சென்ற முன்னோர்களை வழிபட்டு அவர்கள் ஆசிகளைப்பெறுவதும், தங்களுடைய சமயக்கொள்கைகளாகக்கொண்டிருந்தார்கள். சில புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செய்வதும், மந்திரவாதச் செயல்களால் நோய்களையும் பேய் பிசாசுகளையும் அடக்குவதும் உண்டு. எழுத்துப் படிப்பு ஒன்றும் கிடையாத பாமர வாழ்க்கையில் மூழ்கியிருந்த இந்நாடுகளுக்கு இந்தியர் வந்து சேர்ந்ததும், இவைகளும் இந்தியாவைப் போலவே நாகரிகம் மலிந்து கைத்தொழில், செல்வம், அரசுமேன்மை முதலிய நன்மைகளே விசேஷமாகப் பெற ஆரம்பித்தன. இதற்கிணங்கவே தெய்வ வழிபாடுகளிலும் சமயக் கொள்கைகளிலும் முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது.

இந்தியாவிலேயே தேசந்தோறும் ஆசாரம் வேறு என்ற உண்மையை நாம் நன்ருக அறிவோம். அதேமாதிரிதான் கீழ்த் திசையிலுள்ள நமது குடியேற்ற நாடுகளிலும் ஏற்பட்டிருந்தது. ஸம்ஸாரம், மோக்ஷம், தர்மம், கர்மம், யோகம், மந்த்ரம், தந்த்ரம் முதலிய அடிப்படையான தத்துவங்களை யாவரும் ஒப்புக் கொண்டார்கள். சில தர்ம சாஸ்திரங்களும், புராணங்களும்கூட நாளடைவில் அங்கங்கே வழங்கிவந்த பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டன. இராமாயணம், பாரதம் முதலிய கதைகள் எங்கும் பரவின. அதேமாதிரிதான் புத்த பகவானுடைய ஜீவிய சரித்திரமும், அவருடைய பூர்வ ஜன்மங்களையொட்டின ஜாதகக் கதைகளும். இக்கதைகளெல்லாம் அநேக இடங்களில் வெகு நேர்த்தியான சிற்பங்களில் கோயிற் சுவர்களிலும் ஜாவா தீவில் பரபூனூர் எனப்படும் பெரிய பௌத்த ஸ்தூபத்திலும் செதுக்கப்பட்டிருக்கின்றன. அச்சிற்பங்களடங்கிய முக்கிய கோயில்கள் ஜாவாவில் பிராம்பணன், பநைரன், என்னுமிடங்களிலும் இந்தோ-சீனுவில் அங்கோர்வாட்டிலும் இருக்கின்றன.

வேதமுறையில் யாகங்கள் செய்யப்பட்டன. போர்னியோ தீவின் கீழ்பாகத்தில் கல்லால் செய்யப்பட்ட நான்கு யூபஸ்தம்பங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளின்மீது வெகுநேர்த்தியாகச் செதுக்கப்பட்ட சில சம்ஸ்கிருத சுலோகங்கள் உண்டு; சுலோகங்களின் கருத்தென்னவென்ருல் அந்நாட்டில் மூலவர்மன் என்ற ஓர் அரசன் பஹுஸுவர்க்கம் என்றயாகத்தைச்செய்து கோஸஹஸ்ரம் கல்ப வ்ருக்ஷதானம், பூமிதானம் முதலிய தானங்கள் அருமறை அந்தணர்க்குக் கொடுத்தான் என்பதுதான். இக்கல்வெட்டுகளின் காலம் சுமார் கி. பி. 400 என்னலாம். இதற்குச் சுமார் நூறு வருஷங்களுக்குப் பிறகு, இந்தோ-சீனுவிலுள்ள சம்பா ராஜ்யத்தில் ஸ்ரீபத்ரவர்மனென்ற அரசன் ஒரு நரமேதம் செய்து பூதேவியின்

பிராசாதத்தால் அக்கினி பகவானின் கடாக்ஷத்தைப் பெற்று மோக்ஷம் சம்பாதித்ததாக மற்றோர் சாஸனம் குறிப்பிடுகிறது.

இந்த சாஸனமானது பத்ரேச்வரஸ்வாமியென்று மற்றொரு கடவுளையும் குறிக்கிறது. இது பத்ரவர்ம ராஜாவினால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட சிவன்கோயிலாக இருந்திருக்கவேண்டும். தஞ்சையில் ராஜராஜேஸ்வரமென்றாற்போல சில காலத்திற்குப் பிறகு இக்கோயில் சேதப்பட்டு சம்புவர்மனென்னும் அரசனால் புதுப்பிக்கப்பட்டது. அதுமுதல் அக்கோயிலுக்குப் பெயர் சம்பு பத்ரேச்வரமென்று ஆயிற்று. அரசர்கள் தங்கள் பெயர்களால் லிங்கங்கள் பிரதிஷ்டை செய்து ஈச்வரன் கோயில்கள் ஏற்படுத்துவது தமிழ் நாட்டுக்கும் அந்த நாடுகளுக்கும் பொதுவான வழக்கம். இவைகளிற் சில கோயில்கள் பள்ளிப்படைக் கோயிலாகவும், அதாவது சமாதிக் கோயில்களாகவும் இருக்கும். ஜாவாதீவில் ஒரு முக்கியமான விஷ்ணு கோயில் இம்மாதிரி ஏற்பட்ட பள்ளிப்படைக் கோயிலென்பது நிச்சயம். அக்கோயிலில் காலஞ்சென்ற ஒரு அரசனுடைய உருவம் விஷ்ணுவாகவும் பட்டமஹிஷியின் உருவம் லக்ஷ்மியாகவும் ஆராதிக்கப்பட்டுவந்தன; இவ்விரண்டும் வெகு நேர்த்தியான சிற்ப வடிவங்கள். ஆகவே நம்நாட்டிற்போலவே, வேத வேள்விகளோடு சைவ மதமும் வைஷ்ணவ மதமும் வழங்கிவந்தன; இவைமட்டுமல்ல. புத்த மதமும் பரவியிருந்தது. இந்நாடுகளில், அதாவது பர்மா, சுமத்ரா, ஸெலிபிஸ், மலேயா, தாய்லாந்து முதலிய இடங்களில் அகப்படுகிற புத்த விக்ரஹங்களும் மிகப் பழமையானவையே. அநேகமாக இவை கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள அமராவதி என்னும் பிரசித்திபெற்ற பௌத்த ஸ்தலத்தில் கி. பி. இரண்டு அல்லது மூன்றாவது நூற்றாண்டில் செய்யப்பட்டுவந்த புத்த விக்ரஹங்களையே பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. பர்மாவில் புத்த நூல்களின் சில பகுதிகளைத் தங்க ஓலைச் சுவடுகளில் எழுதிப் பூஜைசெய்து வந்தார்கள். அந்த ஏடுகளிலுள்ள எழுத்துக்களும் கி. பி. 5 அல்லது 6 நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை ஆகா. 7-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 13 நூற்றாண்டுவரை சைலேந்திர வம்சத்து அரசர்கள் ஒரு பெருங் கடலாதிக்கத்தைப் பெற்ற சாம்ராஜ்யத்தை ஆண்டுவந்தனர். அவர்கள் தலைநகரங்கள் சுமாத்ராவிலுள்ள ஸ்ரீ விஜயமும் மலேயாவின் மேல்கரையில் கேடாவின் அருகாமையில் ஏற்பட்டிருந்த கடாரமுமாம். அவர்கள் பௌத்தர்கள். பிஹாரிலிருந்து நளாந்தா விஹாரத்துடன் அக்காலத்தில் வங்காளத்தில் ஆண்டுவந்த பல அரசர்களோடு நெருங்கிய பழக்கங்கள் கொண்டவர்கள். இந்திய நாகரிகத்திற்குத் திலகம்போல் விளங்கும் பரபூதூர் ஸ்தூபத்தை ஜாவாத் தீவின் மத்தியில் கட்டி முடித்தவர்களும் அவர்களே. அவர்களுக்கும் சோழ அரசர்களுக்கும் பல சம்பந்தங்கள் ஏற்பட்டிருந்தன. அவர்கள் பிரஜைகள் தமிழ்நாட்டுக்கு வந்தால் அவர்களுக்கு நல்ல வசதிகள் இருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இவ்வரசர்கள் நாகப்பட்டணத்தில் ஒரு விஹாரத்தைக் கட்டி

வைத்தார்கள். அதற்குச் சோழ அரசனை ராஜராஜன் இணங்கி அனுமதி கொடுத்ததுமல்லாமல், அந்த விஹாரத்துக்கு ஆனைமங்கலம் என்ற செழிப்பான கிராமமொன்றை தானம் செய்தான்.

இனி இக் குடியேற்ற நாடுகளிலெல்லாம் வெவ்வேறு சமயக் கொள்கைகள் ஒரே காலத்தில் கையாளப்பட்டு வந்தபோதிலும், இவைகளுக்குப் பகையொன்றுமில்லாமல் நேசப் பான்மையே இருந்ததாகச் சொல்லலாம். குடியேற வந்த இந்தியருக்கும் நாட்டு மக்களுக்கும் சச்சரவு உண்டானதாக எண்ண இடமில்லை. புது நாகரிகம் வருமுன் ஜனங்கள் வழிபட்டுவந்த தெய்வங்களை புது ஏற்பாட்டிலும் சிறு தெய்வங்களாகச் சேர்த்துக்கொண்டார்கள். சைவம் வைஷ்ணவம் என்ற பேதம் அதிகரிக்காதபடி ஹரிஹர ரூபமான தெய்வத்தை நம் நாட்டிலேயே ஏற்படுத்தியிருந்தார்கள். இந்த ஹரிஹர வணக்கம் குடியேற்ற நாடுகளில் மிகவும் புராதன மான காலங்களிலேயே எங்கும் பரவிவிட்டது. வெகு அழகாக அமைந்துள்ள ஹரிஹர ரூபமான சிலைகள் பல மியூஸியங்களில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. புத்த மதத்திலும் ஹீன யானம் என்றும் மஹாயானம் என்றும் இரண்டு பெருங்கிளைகள் உண்டு. அவைகளும் சமரசமாகவே இருந்து வந்தன. இதுமட்டு மன்றி, பௌத்தமும் ஹிந்து மதமும்கூடத் தங்களுக்குள்ள சுபாவ விரோதத்தை இந்நாடுகளில் அதிகம் பாராட்டவில்லை என்றே சொல்லலாம். ஏதோ சில இடங்களில் ஹிந்துக்கோயில்கள் பௌத்தப்பள்ளிகளாகவும், பள்ளிகள் கோயில்களாகவும் மாற்றப் பட்டன என்று எண்ணக் காரணம் உண்டு. ஆயினும் பொதுப் படையாக இம்மாறுதல் மிகக்குறைவென்றே சொல்லலாம். இந் நாடுகளில் அரசர்களுடைய மரணத்திற்குப் பிறகு அவர்களுக்கு ஒரு தனிப்பெயர் இடுவது வழக்கம். இது அவர்கள் அடைந் திருக்கும் புண்யலோகத்தைக் குறிப்பதாக இருக்கும். இம்மாதிரிப் பெயர்களில் சிவபுத்தலோகன், புத்த விஷ்ணுலோகன், இவைகள் போன்ற பெயர்களைக் காண்கிறோம். ஆகையால் இம் மதப் பிரிவுகள் எவ்வளவு நெருக்கமான அன்பு பூண்டு வந்தனவென்பது தெளிவு. தந்திர சாஸ்திரம் பிற்காலங்களில் வலுவடைந்தது. அதன் பயனாக வெகு கோரரூபமான மூர்த்திகளை உபாசிப்பதும், கொடூர மான உபாசனைமுறைகளைக் கையாள்வதும் வழக்கில் வந்தன; இம் மாறுதலிலுங்கூட சைவமும், பௌத்தமும், வைஷ்ணவமும் வித்தியாசமின்றி ஈடுபட்டன என்றே கூறலாம்.

இந்தோ-சீனாவில் கீழ்கரையில் இப்போது நா-த்ராங் என்று வழங்கப்படும் ஊர் ஒன்றிருக்கிறது. அதனருகே அக்காலத்தில் போ-நகர், அதாவது நாட்டின் தலைவி என்று பெயர்கொண்ட ஒரு பிரசித்திபெற்ற பகவதிகோயில் இருந்தது; இந்தியாவிலும்மேல் சமுத் திரகரையைச்சார்ந்த மலையாளநாட்டில் பகவதி வணக்கம் அதிகம். இந்து நாகரிகத்தை இரு பேரெல்லைகளிலும் பகவதி கோயில்கள் நின்று நெடுநாளாக நன்றாகப் பாதுகாத்துவந்தனபோலும்.

ஸ்ரீமான் ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் பி.ஏ., பி.எல்.,

எழுதுகோலின் முனை



என்னுடைய சிறு வயதில், அநேக பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்தப்பட்ட சிறுவர்கள் சங்கங்களில், பன்முறை ஆங்கிலத்தில் "எது மிகுந்த பலமுடையது? போர் வீரனுடைய கத்தியோ, அல்லது கவிராயனுடைய பேனாவோ?" என்னும் விஷயம் தர்க்கிக்கப்பட்டது எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. இதை மற்றொருவிதமாக யோசிக்குமிடத்து, "ஒரு தேசத்திற்கு, அதைக் காக்கும் படை வீரர்களா அல்லது அங்கு வாழும் கவிவாணர்களா அதிக நன்மை புரிகின்றனர்?" என்று கூறலாம். மேற்பார்வையாகப் பார்க்குமிடத்து போர் வீரனுடைய வாளின் திறமை எங்கே? பலமற்ற எழுதுகோலின் பலம் எங்கே?" என்று நாம் கூறலாம்; அதுவும் தற்காலம் நடக்கும் யுத்தத்தைக் கருதுமிடத்து, ஒரு தேசத்திற்கு மிகவும் உதவி புரிபவன், அதைக் காப்பவன், அதன் க்ஷேமத்திற்கு இன்றியமையாதவன், போர்வீரனே என்று கூறலாம். ஆயினும் சற்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்போமாயின், இவர்களைவிட ஒரு நாட்டிற்கு நன்மை புரிபவர்கள் எழுதுகோலை உபயோகிக்கும் அங்குள்ள ஆசிரியர்களே என்பது விகிதமாகும். யுத்தங்களையே எடுத்துக்கொள்வோம், யுத்தப் பயிற்சி அத் தேசத்து ஜனங்களுக்குக் கற்பிப்பதற்கும், அவர்களை உற்சாகப்படுத்துவதற்கும், அவர்கள் தங்கள் உயிர்களையும் தங்கள் நாட்டின் பொருட்டு தியாகம் செய்வதற்கும் தூண்டுகோலாயிருப்பது, அங்குள்ள ஆசிரியர்கள் எழுதும் புத்தகங்களன்றோ? ஒரு நூற்றாண்டிற்கு முன், பிரான்சு தேசத்தில்,அக்கிரம துரைத்தனத்தை அடக்கி,ஜனங்கள் சுயராஜ்யம் பெற்றதற்கு முக்கிய காரணம், ரோப்ஸ்பியர் முதலிய சில பிரெஞ்சு நூலாசிரியர்கள் இயற்றிய நூல்களே என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சென்ற 1914–18-ஆம் வருடங்கள் நடந்த யுத்தத்தைக்கருதுவோம். அச் சமயம் யுத்தத்திற்காகப் படை வீரர்களைச் சேர்க்கும் பொருட்டு, ஓர் ஆங்கில நாடகாசிரியர் எழுதிய "இங்கிலீஷ்காரனுடைய வீடு அவனது கோட்டையாகும் (An Englishman's house is his castle) என்னும் பெயர்கொண்ட நாடகமானது மிகவும் உபயோகப்பட்டதாக ஆங்கிலேயர்களே ஒப்புக்கொள்கின்றனர். தற்காலம் நடக்கும் கோரமான யுத்தத்திலும், ஒவ்வொரு நாட்டாரும், தினசரிப் பத்திரிகைகள் முதலியவைகளில் இன்னது எழுதலாம் இன்னது எழுதக்கூடாது என்பதைப்பற்றி, மிகவும் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். ஏன்? அவைகளில் எழுதப்படும் விஷயங்களுக்கு ஜெயத்தையோ, அபஜெயத்தையோ ஒரு

நாட்டிற்குக் கொண்டுவர, சக்தியுண்டென்பதை அவர்கள் அறிந்த படியாலன்றோ! இது ஒன்றினலேயே பத்திராதிபர்களின் எழுது கோலின் திறமையை நாம் கண்டறியலாம். ஐரோப்பா கண்டத்தை ஏறக்குறைய முழுவதும் ஜெயித்த சிறந்த போர்வீரனுகிய நெப்போலியன் (Napoleon) என்பவரும் பத்திரிகைக்காரர்களின் பேனுவிற்கு பயந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்நிய நாட்டிற்குப் போவதைவிட்டு நமது நாட்டிலுள்ள உதாரணங்களையே கருதுவோம். பூர்வீக கவியொருவர், 'வேறி விலக்கு' எனும் துறையில், ஓர் கவியில் 'இரும்பு முனை புண்' என்று கூறியிருக்கிறார். அதாவது, எழுத்தாணியால் உண்டாக்கப்பட்ட புண் அல்லது வடு என்று பொருள்படும்; 'இந்த சிறிய வடுவெங்கே, வாளாயுதத்தால் வீரர்கள் வெட்டும் வடுவெங்கே!' என்று ஒருவன் மயங்கலாம், அதற்கு மற்றொரு கவிராயர், பதில் உரைத்துளார். 'வில்லம்பு சோல்லம்பு' என்று இரண்டு அம்புகள் உண்டு. அவற்றுள் வில்லம்பினுல் உண்டாம் வடு மாறினுலும் மாறும் சொல்லம்பினுல் உண்டாம் வடு மாறவேமாருது என்று கூறியுள்ளார். இச் சந்தர்ப்பத்தில் நமது நாட்டுபூர்வீக அரசர்கள், பகைவர்களது வாளுக் கஞ்சுவதைவிட, தங்கள் தேசத்திலுள்ள கவி வாணர் கவிகளுக்கு மிகவும் அஞ்சினர் என்பது பூர்வீக கிரந்தங்களை ஆராய்பவர்களுக்கு விளங்கும்; கவிஞர் பாடும்பொழுது 'அறம் வைத்துப் பாடினுல் அரசர்களுக்கும் மரணம் உண்டாம்' என்று அக் காலம் எண்ணப் பட்டதாம். இதைத் தற்காலம் நம்பாவிட்டாலும், அக் காலம் கவிகளுடைய சக்திக்கு அரசர்களும் பயந்திருந்தனர் என்பது நிச்சயமாம்.

இன்னும் இவர்களது தாரதம்யத்தை மற்றொரு முறையில் ஆராய்ந்துபார்ப்போம். பூர்வத்தில் நமது நாட்டில் ஆண்ட அரசர்கள் பெயர்களும் பெரும்பாலும் மறைந்துபோயின. வால்மீகி, காளிதாசன், கம்பர், புகழேந்தி முதலியவர்கள் பெயர்கள் இன்னும் மறையவில்லை. அவர்கள் எழுதிய க்ரந்தங்களை வாசிக்கும் மனிதர்கள் இருக்கும்வரையில் அவர்கள் பெயர் இப்புவியில் அழியாதிருக்குமல்லவா?

இங்கிலாண்டு தேசத்தில் பிரசித்திபெற்ற நூலாசிரியராகிய கார்லைல் (Carlyle) என்பவர், "இங்கிலாண்டிற்கு முக்கிய நிதிக்குன்றமாயிருக்கும், இந்தியா தேசம் வேண்டுமா, ஷேக்ஸ்பியர் மகாகவியின் புஸ்தகங்கள் வேண்டுமா என்று என்னைக் கேட்டால், நான் ஷேக்ஸ்பியருடைய நூல்களையே அதிகமாக மதித்து அவற்றையே விரும்புவேன்" என்று கூறியுள்ளார். அங்ஙனமே நமது இந்தியா தேசத்திலும் பாரதத்தையும், வால்மீகி ராமாயணத்தையும், கம்பராமாயணத்தையும் கோராதார் யார் உளர்?

ஒரு தேசம் எல்லாவிதத்திலும் முன்னேற்றமடைவதற்கு கல்வியே மிகவும் அவசியமானது என்று எல்லோராலும் ஒப்புக்

கொள்ளப்படுகிறது. அக் கல்வி அத் தேசத்தில் எப்படி பரவுவது? அத்தேசத்து ஆசிரியர்கள் எழுதும் நூல்களினுலன்றே?

தற்காலம் ஒரு தேசமானது சுகமாய் வாழ்வதற்கு வர்த்தகம் இன்றியமையாதது என்கின்றனர்; அப்படிப் பார்த்தாலும், அவ் வர்த்தகத்தொழிலே, அங்குள்ள சிறுவர்கள் நன்ருய்க் கற்பதற்கு வர்த்தக விஷயமாக வெளிப்படுத்தப்பட்ட தக்க நூல்கள் இல்லாவிட்டால், அவர்கள் வர்த்தகத் துறையில் எப்படி விர்த்தியடையக்கூடும்? இங்ஙனமே எந்தக் கலையை எடுத்துக்கொண்டாலும், எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும், அவைகள் ஒவ்வொன்றிலும், அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்கள்தான் அஸ்திவாரமாயிருக்கின்றன என்பதற்குச் சந்தேகமில்லை.

அறம், பொருள், இன்பம், வீடு என்பவை எல்லா மனிதர்களும் விரும்பும் புருஷார்த்தங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் இவ்வுலகில் பெறுவதற்கு நூல்களும் அவைகளை இயற்றிய ஆசிரியர்களும்தான் முக்கிய காரணமாவார்; அவர்கள் தங்கள் எழுதுகோல்களை உபயோகித்திராவிட்டால், அந்நூல்கள் நமக்குக் கிடைத்திருக்கமாட்டா. ஒருவன் தர்மம் என்பது இன்னதென்று ஐயந்திரிபற அறிவதற்கும், தர்ம வழியில் நிற்பதற்கும் பண்டைத் தமிழ் நூல்களைப்போல் பயனை அளிக்கத்தக்கவை யாவை? சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனுர் தமது எழுதுகோலை உபயோகித்து திருக்குறளை எழுதியிராவிட்டால், அன்றுமுதல் இன்றுவரையிலும், என்? உலகுள்ளளவும் நமக்கு தர்ம நிலையைக் காட்டும் திருக்குறள் எனும் நூல் கிடைத்திராதல்லவா? பொருள் ஈட்டுவதற்கு பண்டைக்காலத்து நூல்களும் தற்காலத்து நூல்களும் அவசியமானவை என்பதைப்பற்றி முன்பே கூறியுள்ளேன். ஒருவன் இன்பத்தை நாடுவதாளுல் பழய காவியங்களாகிய சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் எனும் நூல்களும் நமக்கு இப்பொழுதும் படிப்பதற்கு எவ்வளவு இன்பமளிக்கின்றன!

இசையானது இவ்வுலகில் மனிதனுக்கு அமுதத்திற்குச்சமானமான இன்பமளிப்பதாம். [இவ்வழியில், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் ஆயிரக்கணக்காக பாட்டுகள் எழுதி நமக்குப் பெரும் செல்வமாக, வைத்துவிட்டுப் போகாவிட்டால், அவற்றைக் கேட்கும் இன்பம், மனிதர்களுக்கு எப்படி கிட்டும்? அருணுசலக்கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், சுப்ரமண்ய பாரதியார் முதலியோர் கீர்த்தனங்கள் இயற்றியிராவிட்டால், அவர்கள் மடிந்து பல வருடங்களாகியும் அவர்கள் இயற்றிய கீதங்களின் சுவை, நமக்குத் தெவிட்டாதபடி அனுபவிக்க மார்க்கமுண்டாயிராதன்றே?

கடைசியாக ஒருவன் வீடாகிய மோட்சத்தை நாடுவதாளுல் எழுதாக் கிளவி என்று கூறப்பட்ட வேதமொன்றைத் தவிர்த்து (அதுவும் தற்காலம் அச்சடிக்கப்பட்ட கிளவியாகி

விட்டது), உபனிஷத்துக்கள், இதிஹாசங்கள், புராணங்கள் முதலிய நூல்களின்றி கேவலம் மனிதன் மோட்ச மார்க்கத்தை இன்னதென்று அறிவதே அசாத்தியமான காரியமல்லவா? உதாரணமாக பாரதத்தில் பீஷ்ம பர்வத்திலுள்ள ஸ்ரீகிருஷ்ண பகவான் உபதேசித்த பகவத்கீதையில்லாவிட்டால் ஹிந்துக்களாகிய நமக்கு உய்வு ஏது? அந்நூல் எத்தனையோ வேறு பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அதை அந்தந்த பாஷைகளில் படித்து நற்கதியடைந்த ஜனங்களுக்குக் கணக்கில்லை என்றே சொல்லலாம். அதைப் புகழாதார் அவனியில் ஒருவருமில்லை யென்றே கூறலாம். ஸ்ரீகிருஷ்ணன் போதித்தபடி வியாசர் தமது எழுதுகோலைக் கொண்டோ (அல்லது புராணக்கதைப்படி வினாயகரது கொம்பாகிய எழுதுகோலைக்கொண்டோ) எழுதியிராவிட்டால், கோடானுகோடி ஜனங்களுக்கு கஷ்டகாலங்களில் ஆறுதல் கிடைத்திராதல்லவா? உலக பந்தத்தை விட்டு வீடு எய்துவதற்கு மார்க்கம் புலப்பட்டிராதல்லவா?

நான் மேலே கூறியது பெரும்பாலும் நமது தேசத்து நூல்களைப்பற்றியாயினும் இவ்வுண்மை ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு பாஷையிலுமுள்ள ஆசிரியர்களையும் அவர்கள் இயற்றியுள்ள அரிய பெரிய கிரந்தங்களையும் பற்றிக் கூறியதே ஆகும்.

உலகம் தோன்றிய நாள்முதல் அநேகம் அரசர்கள், தனவந்தர்கள், வீரர்கள் முதலியோர் பிறந்து மடிந்திருக்கின்றனர். அவர்களுடைய பெயர்கள் தற்காலம் அதிகமாகப் பாராட்டப்படுகின்றனவா, அல்லது தொன்று தொட்டு வாழ்ந்துவந்த, கவிஞர்களுடைய பெயர் இம்மாநிலத்தில் இன்றும் பரவியிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தால் எழுதுகோலின் திறம் நன்கு நமக்கு விளங்கும். பண்டைக்காலத்து அரசர்கள், வீரர்கள், கொடையாளிகள் தர்மசீலர்கள் இவர்களுடைய பெயர்களும், செயல்களும் இந்நில உலகத்தில் மறையாதிருப்பதற்குக் காரணம், பழயகாலத்து ஆசிரியர்களுடைய எழுதுகோல்களேயாம்!

தற்காலமும் நமது நாட்டில், அநேகம் பெரிய மனிதர்கள் நியாயாதிபதிகள், தனவந்தர், வியாபாரிகள் முதலியோர் இருக்கின்றனர். "இன்னும் நூறு வருடம் கழித்து அவர்களில் எத்தனை பெயருடைய பெயர்கள் மனிதர்களின் ஞாபகத்தில் நிற்கும்?" என்று கேட்டால் அதற்கு என்னால் விடைகொடுக்கமுடியாது; தன் ஆயுட்காலத்தில் இதுவரையிலுமே அறுபது நூல்களுக்குமேல் இயற்றி நமது தாய் பாஷையாகிய தமிழ் பாஷைக்கு தொண்டு செய்துள்ள ஒரு அம்மையாரின் பெயர் நிற்குமா என்று கேட்டால், 'ஆம்' என்று நான் உறுதியாய் பதில் உரைப்பேன். அதற்குக் காரணம் என்ன? அவர்கள் கைவிரல்கள் ஓச்சும் எழுதுகோலின் திறமேயாம்



சித்திரக் கதை—வை. மு. கோ. ஊகித்துப் பாருங்கள்.

குகப்ரியை

வித்யுல்லதா

“இவள் பெண்ணா? பூங்கொடியா? அழகின் கொழுந்தா?” என்று ஆச்சரியப்படலானார்கள் சித்தூர் வாசிகள். ஆம்; அவள் பெண் அல்ல. அழகுத் தெய்வந்தான். அல்ல. கொடிதான். ஆனால் பூங்கொடியல்ல. மின்னற் கொடி. தாய் தந்தையர் இட்ட பெயர் வித்யுல்லதா. (வித்யுல்லதா என்ற பதத்திற்கு மின்னற்கொடி என்பது பொருள்) அவளது அழகைப் புகழாத மனிதரில்லை. அப்படிப்பட்ட பேரெழில், தெய்வீக செளந்தர்யம் அது.

அப்பொழுது அல்லாவுதீன் கில்ஜியின் அரசாட்சி. இந்த சமயத்தில் தான் வித்யுல்லதை இளமை என்னும் பூஞ்சோலையிலே அடி எடுத்து வைத்திருந்தாள். அவளது பேரெழில் சித்தூர் வாசிகளின் நெஞ்சைக் கவர்ந்தது. ஒவ்வொருவரும் இந்தப் பேதைப் பெண்ணின் ஒரு கடைக் கண் பார்வைக்காக ஏங்கி நின்றனர். ஆனால் அவள் நெஞ்சிலே குடிபுகுந்த வன் ஒரு சாதாரணமான சேனைத்தலைவன் மகன் சமரஸிம்மன்.

வித்யுல்லதையின் தகப்பனார் பகதூர்ஸிம்மன் ஒரு பெரிய தளகர்த்தன். மிகச் சிறந்த வீரன். அறிவிலும் ஆற்றலிலும் ஒழுக்கத்திலும் ரஜபுத்ரர் களுக்கே ஒரு திலகம்போலிருந்தான். அவன் மகள் வீராங்கனையாகவிராமல் வேறு எப்படி இருக்கமுடியும்?

அந்த நாளிலே அழகிய பெண்களைப் பெற்றோர்களைத் தலைசாய்க்க விடமாட்டார்கள் முஸ்லிம் மன்னர்கள். பலர் தங்களது புதல்விகளைப்பற்றி வெளிப்படையாய்ப் பேசவும் அஞ்சுவர். ஆனால் பகதூர்ஸிம்மனே தன் மகளைப்பற்றிப் பெருமையாய்ப் பேசிக்கொள்வான். அவளுக்குக் கல்வி யோடு வீர விளையாட்டுக்களையும் பயிற்றுவித்திருந்தான் அவன். வில்வித்தை யிலும் வாள்வீச்சிலும் அவளை நிகர்த்த ரஜபுத்ரரில்லை என்றும் சித்தூர் வாசிகள் சொல்லுவார்கள். அந்த சமயத்திலே ஒவ்வொரு பெண்ணும் போர் செய்யக் கற்றிருந்தாள். ஏன்? பிறரிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள ஓரளவு பயிற்சி வேணுமல்லவா?

பகதூர்சிம்மனது விசாலமான தோட்டத்தை அடுத்த ஒரு சிறு வீட்டில் சமரசிம்மனது தந்தை வசித்துவந்தான். இளமையிலேயே ஒரு வருக்கொருவர்விளையாட்டுத் தோழராயிருந்தவர்கள்;உரிய பருவம் வந்தது; அது, அந்த மெய்யன்பு காதலாய்க் கனிந்ததில் ஆச்சரியமென்ன?

இருவரது பெற்றோருக்கும் விஷயம் தெரியும். ‘ஏதாவது ஒரு சிறந்த செயலைச் செய்து ‘வாகைசூடி’ வந்தால் என் மின்னற்கொடியின் கைகளைப் பற்றலாம்’ என்றார் பகதூர்ஸிங். சமரசிம்மன் அத்தகைய சந்தர்ப்பத்தை எதிர்நோக்கித் துடிதுடித்துக்கொண்டிருந்தான்.

* * * *

திடீரென்று ஒருநாள் பெரும்புயல் தோன்றிற்று. அல்லாவுத்தீன் கில்ஜி சித்தூரின்மீது படையெடுக்கப் போகிறான் என்றசெய்தி நொடிக்குள் ஊர் முழுவதும் பரவியது. அரசனது ஆணையால் போர்முனைக்குச் செல்லு கின்றான் சமரசிம்மன். அவன் இருதயம் ஆனந்த மிகுதியினால் துடிதுடித் தது. வெற்றி பெற்று இவளை அடைவோம் என்கின்ற எண்ணமே அவன் மனதில் உற்சாகத்தையும் தோள்களில் பலத்தையும் ஊட்டிற்று. “நான்

ஏழை எளியவன் தான். வித்யுல்லதை ஒருத்தியே எனக்கு ஐசுவரியம். உலகம் என்னை ஏழை என்று நினைத்தால் என்ன? அவள் முன்னிலையில் இந்தப் பொருள்கள் பொன்னும் மணியும் என்ன பெறும்? துன்ப நினைவுகளும், சோர்வும், பயமும் எல்லாம் அவள் முன்னே, அவள் கடைக்கண் பார்வையின் முன்னே, அந்த ஒரு முல்லை முறுவலின் முன்னே நிலைநிற்குமா?" என்று எண்ணுவான்.

மறுநாட் காலை மிகப் பெரிய சேனையோடு அவன் சித்தூரைவிட்டு வெளியே செல்லவேண்டும். ஆகவே அவளிடம் விடைபெற்று வர விரும்பியவனாய் மெல்ல மெல்ல நடந்தான் அவன்.

* * * *

அழகிய பூஞ்சோலை, அதன் நடுவேயுள்ள அழகிய மேடை யொன்றின் மீது யாரையோ எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாள் அவள். பல இன்பகரமான நிகழ்ச்சிகளிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தது அவள் மனம். இளமைப்பருவ நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றி அவளை ஆனந்த வாரிதியில் மூழ்கச் செய்தன. மெல்லிய இளமுறுவல் அவள் முகத்திலே தோன்றியும் தோன்றாமலும் விளையாடிக் கொண்டிருந்தது. சுருண்ட குழற்கற்றைகள் காற்றினாலலைக்கப் பெற்று அவள் நெற்றியின்மீது புரண்டன. நேரம் செல்லச்செல்ல, வருவானோ வரமாட்டானோ என்ற ஒரு சந்தேகம் அவள் நெஞ்சிலே எழுந்தது. ஒரு சிறு சருகு விழும் சப்தமும் காதலனது காலடியோ? என்றே நினைத்தது அவள் நெஞ்சம். ஏக்கத்தினால் எழுந்த ஒரு பெருமூச்சு அந்த மந்தமாருதத்துடன் கலந்து நிறைந்தது.

திடீரென்று கண்களை யாரோ பொத்தினார்கள். திடுக்கிட்டாள் அவள். ஒரு வேளை தோழிகள் யாராவது பரிகசிக்கிறார்களோ என்று கைகளைத் தடவிப் பார்த்தாள். "என்ன? என்னைக்கூடவா தெரியவில்லை?" என்று நகைத்தான் வந்தவன். அவள் மலர் முகம் நாணத்தாற் சிவந்தது. "சமர் ஸிங்! நீதானா? நேரில் வருவதற்கென்ன? இந்த சமயத்திலுமா பரிகாசம்?" என்றாள். அவளது பேரெழிலை அப்படியே இருகண்களாலும் பருகிவிடுபவன்போல் அவளையே பார்த்து நின்றான் அவன். நெடுநேரம் இருவரும் பேசவில்லை. ஒரே அமைதி. கடைசியில் அவளே பேசத் தொடங்கினாள். "ஸமர்! உன்னை உன் தகப்பனாரின் பதவிக்கு உயர்த்தி மிகப்பெரிய சேனையோடு அனுப்பப்போகிறார்களாமே?" என்றாள். காதலால் உருகிக் கூவும் மாடப்புறாவின் குரல்போல் ஒலித்தது அவள் சொற்கள்.

"ஆமாம்! வித்யுல்லதே! இப்படி நெடுநாள் ஊரைவிட்டு வீடு வாசல்களைவிட்டுப் போய்வருவதுதான் ரொம்ப சிரமமாயிருக்குமென்று தோன்றுகிறது. இதற்குமுன் மிகவும் சிரமமான சமயங்களிலெல்லாம் உன் முகத்தை நினைத்துக்கொண்டு அந்த அழகாகிய அமுதத்தை நினைத்து நினைத்தேதான் புதிய பலமும் உற்சாகமும் பெறுவேன். முன்பு பீஜப்பூர் சென்றபொழுதும் அப்படியேதான். உனக்கு நினைவில்லையா?" என்றாள்.

நீர்மல்கும் கண்களுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனால் "சமர்! இந்த முறை முன்போல அல்ல. சீக்கிரமே திரும்பிவிட்டால் உரிய பரிசைக் கொடுகக அப்பா...தயங்கமாட்டார்...ஆனால்...ஆனால்...இதற்குமேல் பேச அவளால் முடியவில்லை. அவள் குரல் கம்மிப்போயிற்று. அவன் கண்களிலும் கண்ணீர் துளித்து நின்றது. குரல் தழதழத்தது. தொண்டையைக் கனைத்துக்கொண்டு "லதே! நீ என் உரிமை. உன்னை எனக்கு அளிக்க மாட்டேனென்று மறுக்க யாருக்கு அதிகாரமுண்டு. எப்படியும் சீக்கிரமே திரும்பி வந்துவிடுவேன். யுத்தத்திலே வெற்றியும் தோல்வியும் ஒருவர்

பங்கல்ல. ஒருவேளை...என்னுமுன் வித்யுல்லதையின் மலர்க்கரங்கள் அவன் வாயைப் பொத்தின.

*   *   *   *

நாட்கள் கடந்தன. மாதங்கள் மறைந்தன. போர்க்களத்திலிருந்து உண்மையான செய்திகள் நகரவாசிகளுக்கு எட்டவில்லை. வித்யுல்லதை தினம்தோறும் தன் அன்பனின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருப்பாள். தெய்வங்களையெல்லாம் வேண்டுவாள். இரவுதோறும் அவன் வீட்டிலே எரியும் அந்த தீபத்தின் ஒளியைத் தன் மாடியிலிருந்து பார்த்துப் பார்த்துச் சற்றே ஆறுதலடைவாள். சிற்சிலநாட்களில் யுத்தகளத்திலிருந்து செய்திகள் வரும்; ஆனால் விஷயங்கள் ஒன்றும் திருப்திகரமாயிராது. சத்ருவின் சேனைகளை சளைப்பதாயில்லை. என்ன செய்வதென்று விளங்காதவர்களாய் விழிக்கலானார்கள் ரஜபுத்ரர்கள். ஊர் சோபை யிழந்துகிடந்தது.

அந்தி மயங்கும் நேரம். பக்ஷிகள் கலகல சப்தத்துடன் கூடுகளைத் தேடிப் பறந்துகொண்டிருந்தன. வித்யுல்லதை வழக்கமாய் உட்காரும் பளிங்காசனத்தில் வந்து உட்கார்ந்திருந்தாள். இறந்தகால நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாய் இறகு முளைத்து எதிரே வந்தன. கடைசியாக அன்று அவன் தன்னிடம் விடைபெற்றுப்போன அந்த இன்பமும் துன்பமும் கலந்த காட்சி நினைவுக்கு வர, அவள் கண்களில் கண்ணீர் பெருகி ஓடிற்று. இருள் அப்பொழுதே உலகைக் கவ்வ ஆரம்பித்துக்கொண்டிருந்தது. 'வித்யுல்லதா!' என்ற குரல் கேட்டு திடுக்கிட்டாள் அவள். மறுவிநாடி அவள் எதிரே நின்றான் சமரஸிம்மன்.

ஆச்சர்ய மிகுதியினால் 'நீயா?' என்று கூவிவிட்டாள் அவள். அவள் கண்கள் மலர்ந்தன. "போர் மிகவும் கடுமையாக நடக்கிறதென்று செய்தி வந்ததே. நீ எப்படி வந்தாய் ஸமர்!" அவள் குரலிலே ஆச்சர்யமும் பயமும் ஒருங்கே தொனித்தன. அவன் அவள் தோள்களைப் பற்றி உட்காரவைத்துத் தானும் அந்த ஆசனத்திலே உட்கார்ந்து மிகவும் மெல்லிய குரலில் பேசத் தொடங்கினான்.

"லதே! நான் மிகவும் முக்கியமான ஒரு காரியத்தின் பொருட்டே வந்திருக்கிறேன். அதற்கு உன் ஆலோசனை மிகவும் அவசியம். ஒரு பொருளை யாசிக்கவே உன்னிடம் வந்தேன். உன் காதலின் சோதனை இது" என்றான்.

"என்ன சொல்லுகிறாய் ஸமர்! விளங்கச் சொல்லேன். என்னிடம் ஆலோசனை செய்வதாவது" (அவன் தொண்டையைக் கனைத்துக்கொண்டான்.)

"அல்லாவுத்தீன் மிகப்பெரிய ஸேனா ஸமுத்திரத்தோடு வந்திருக்கிறான். நம்முடைய சேனையோ மிகவும் சொற்பம். அந்தப் படைகளைக் கண்டாலே கதி கலங்கும். இந்த நிலையிலே ரஜபுத்ரர்கள் வெற்றிபெறுவது என்பது மிகவும் கடினந்தான்...என்று சற்றே நிறுத்தினான்.

"ஆனால் நீங்கள் வெகுசீக்கிரமே போய் எதிர்க்க நேரிடலாம்,எதிர்த்து வெற்றி பெற்றால் அந்த வெற்றியை உலகமே போற்றும்" என்றாள் அவள். அவள் கண்களில் வீரக்கனல்கள் ஒளி வீசிற்று. அவன் மிகவும் தாழ்ந்த குரலில் "அது விஷயமாய் உன் அபிப்பியாயத்தைத் தெரிந்துகொள்ளத்தான் நான் வந்திருக்கிறேன். இந்த சமயத்தில் வெற்றி என்றும் வீழ்ச்சி என்றும் பேசிக்கொண்டிருப்பதில் லாபமில்லை. ரஜபுத்ரர்களுக்கு வெற்றி என்பது வீண் கனவுதான். சித்தூர் அல்லாஉத்தீன் வசமாவது நிச்சயம். நானும் போர்க்களத்திலிருந்து மீளமுடியாது. உயிருள்ள வரையில் போர்செய்தே தீரவேண்டும். ஆகவே...இனி...இந்த உலகில் சந்திப்பது என்பது

முடியாத காரியம். ஆனால்...ஒன்றே ஒன்று...நீ மனம் வைத்தால்... வித்யுல்லதே! நீ மனம் வைத்தால் வேற்றூர் சென்று வாழலாம். யுத்தம் முடியும்பொழுது பரிசு அளிப்பவனும் பெற்றுக்கொள்பவனும் இங்கிருக்க மாட்டார்கள், ஆகவே...நீ என்னுடன் புறப்படு. எங்கேயாவது கண் காணாத தேசம் போய்விடுவோம். இந்த மாதிரி சௌகரியமான சந்தர்ப்பம் இனி வாய்க்காது. இந்த அருமையான சந்தர்ப்பத்தை நழுவவிட்டால்... என்பதற்குள்,

"என்ன? ஸமர்? நீ என்ன சொல்லுகிறாய், விளங்கவேயில்லை. உண்மையா? பரிகாசம் செய்கிறாயா?" என்றாள் அவள்.

அவன் மெதுவாய்ச் சிரித்தவண்ணம் "ஆமாம்! உனக்கு விளங்காது நான் ஏதோ விளையாட்டிற்குச் சொல்லுகிறேன் என்று எண்ணாதே. நான் பேசுவது மிகவும் முக்கியமான விஷயம். கேலியல்ல. இந்தப் பயங்கரமான யுத்தத்தில் ரஜபுத்ரர்களுக்கு வெற்றி கிடைக்காது, இது நிச்சயம். நான் கட்டாயம் களத்திலே மடிவேன். நம்முடைய காதல் வெறும் கனவாகவே நின்றுவிடும். நம் மனக்கோட்டைகள் வெறும் நீர்க்குமிழிகள்தான். இந்த இளம்வயதிலேயே காதலைத்துறந்து உயிரை விடுவானேன். இதோ இந்த மூட்டையிலே மாறுவேஷத்துக்கு உரிய துணிமணிகள் கொண்டுவந்திருக்கிறேன். ஆண் வேஷம் தரித்து என்னுடன் புறப்படு.இத்தகைய சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. கிடைத்த சமயத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தெரியாவிட்டால் அதைக் காட்டிலும் மடத்தனம் வேறு உண்டா?" என்றான்.

அவள் தலை சுழன்றது. 'காதலுக்காகக் கடமையைப் புறக்கணிக்க நினைப்பவன் தன் காதலன்தானா?' என்பதை எண்ண அவள் நெஞ்சம் 'பகீர்' என்றது. சற்று நேரம் ஒன்றுமே பேசவில்லை. பிறகு மிகவும் கம்பீரமான குரலில் "என் அன்பே! ஸமர்ஸிங்! இந்த வார்த்தைகள் உன் வாயிலிருந்தா வரவேண்டும்? என் இதயமாகிற கோயிலில் எந்தக் காதல் தெய்வத்தை வழிபடுகிறேனோ அந்தத் தெய்வத்தின் வாயிலிருந்து இத்தகைய சொற்களைக் கேட்பேனென்று வேறு யாராவது சொல்லியிருந்தால் நான் நம்பவேமாட்டேன். காதலா? கடமையா? எது பெரிது? நீ அக்னிகுல வீரன், க்ஷத்ரியன். உன் கடமை எது? தாய்நாட்டைக் காக்க உயிரையே கொடுக்கவேண்டும். போர்க்களத்திலே மலர்ந்த முகத்தோடு உயிரைவிடுவதல்லவா வீர தர்மம்! அடாடா! என்ன விபரீதம். இந்தக் காதல் வலையிற் சிக்கிக் கடமையைக் கைவிடலாமா? கடமையைக் காப்பதன் பொருட்டு உயிரையே துறக்கும்பொழுது, காதலைத் துறப்பது ஒரு கடினமா? என் அன்பே! ஸமர்ஸிம்மா! வெற்றிபெற்றால் வாழ்வோம். நான் என்றென்றும் உனக்கே உரியவள். உன் மாசற்ற காதல் எனக்கே உரியது. நான் ஸமரஸிம்மனது வித்யுல்லதை. இதை நினைவிலிருத்திக்கொள். வெற்றியின் பெருமிதத்தோடு நம் காதற்செடி நூறு மடங்கு ஒளிவிட்டெழும்...இப்பொழுது நாடு சாகக் கிடக்கிறது. இந்த சமயத்தில் கடமையைவிடக் காதல் பெரிதென்றும் இதைவிட அருமையான சந்தர்ப்பம் கிடையாதென்றும் சொல்ல நா எழுந்ததே! என்ன விபரீதம்!...இந்த எண்ணத்தை விட்டுவிட்டு தாய் நாட்டைக் காருங்கள். ஈசுவராக்ஞை இருந்தால் மறுபடி ஒன்றுசேருவோம். வித்யுல்லதையின் மாசற்ற காதல் எத்தகையதென்று அப்பொழுது தெரியும்...என்று சற்றே நிறுத்தினாள்.

உணர்ச்சியின் பெருக்கினால் அவள் உடல் நடுங்கியது. நெஞ்சும் மார்பும் படபடவென்று அடித்துக்கொண்டது.

அவன் முகம் வெளுத்தது. இவள் இப்படிப் பேசக்கூடுமென்று அவன் நினைக்கவேயில்லை. மெதுவாய் சமாளித்துக்கொண்டு, "வித்யுல்லதே! நீ நினைப்பது உண்மைதான். இருந்தாலும் நாம் ஒன்றுசேரவேண்டுமென்பது தெய்வ ஸம்மதமில்லை என்றே தோன்றுகிறது." என்று மிகவும் மெலிந்த குரலில் சொன்னான்.

அவள் முகம் சுடர்விட்டுப் பிரகாசித்தது. "ஸமர்! உன்னைவிட எனக்கு உலகில் எந்தப்பொருளும் உயர்ந்ததல்ல. இது உன் நெஞ்சுக்கே தெரியும். தெய்வ ஸம்மதமில்லை என்ற சொல் எழவே நியாயமில்லை. தெய்வ ஸம்மத மிருந்ததனால்தான் இளமை முதல் ஒன்றாய்ப் பழகி விளையாடி வந்தோம். ஆனால்...இன்று ஒரு பெண்ணுக்காக வீரன் தன் கடமையைத் தவறவிட்டான் என்ற அவச்சொல்லைச் சுமக்க நான் விரும்பவில்லை. ஏன்? எந்த ரஜபுத்ரப் பெண்ணும் விரும்பமாட்டாள். தன் காதலனைப் பிறர் துரோகி என்றும், கோழை என்றும் நிந்திக்கப் பொறுக்கமாட்டாள். ஸமர்! கேவலம் அழிந்து போகக்கூடிய அழகுக்கு அடிமையாகி கடமையை விடுவது கர்மவீரனுடைய லக்ஷணமா? நம் தாய், சித்தூர் என்னும் அரசி, எப்படியாவது தன்னைக் காக்கமாட்டார்களா? என்று ஆசை நிறைந்த கண்களோடு உன்னைப்போன்ற வீரப் பிள்ளைகளின் முகத்தையே பார்த்து நிற்கிறாள். அவளைக் காப்பது யார் பொறுப்பு? நம் காதல் மெய்யானால் என் வார்த்தைகளுக்குச் செவி கொடு. ஸமரஸிம்ம! என் அன்பின் களஞ்சியமே! உடனே போர்க்களம் புகுவதே நல்லது" என்றாள் அவள். கடைசி வாக்கியங்கள் முடியுமுன் அவள் நா தழதழத்தது குரல் கரகரத்தது.

இந்த வார்த்தைகளினால் அவனுக்குப் புதிய உற்சாகமும் ஆவேசமும் தேசபக்தியும் உண்டாகலாம். ஆனால் தன்னலம் மிகுந்த அவன் நெஞ்சிலே கோழைத்தனமே குடிகொண்டது. இனி அங்கே நின்றால் தன் மனம் தளர்ந்துவிடுமோ என்று அஞ்சுபவள்போல் மெல்ல மெல்ல மறைந்து போனாள் அவள். சூனியமான வெறும் வெளியை நோக்கியவனாய் அங்கேயே நின்றிருந்தான் அவன்.

* * * *

எவ்வளவு நேரம் அப்படி நின்றிருந்தானோ தெரியாது. கண்களை விழித்துப் பார்த்தபொழுது சந்திரன் உச்சிவானை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவன் மனம் குழம்பத் தொடங்கிற்று. எப்படியும் அவள் தன்னுடன் வந்துவிடுவாள் என்கிற தைரியத்தினால் சேனைத் தலைவனுக்குத் தெரியாமல் ஓடிவந்துவிட்டான். இனித் திரும்பினால் தண்டனையும் உண்டு, எத்தகைய தண்டனையோ? அதுமட்டுமா? பலர் முன்னிலையில் அவமானம்?...ஏன்? பகைவரோடு சேர்ந்துவிட்டால்?...வித்யுல்லதை புறக்கணித்தால்...உலகத்தில் காதலே பெரிது என்னும் என்னைத் தவிர வேறெவரையும் நினையாதவளென்றும் சொல்லியிருக்கிறாளே? முதலில் மறுத்தாலும் பிறகு நாளடைவில் ஒப்புக்கொள்ளாமற் போகிறாளா?... இப்படி ஒன்றன்பின் ஒன்றாக பற்பல எண்ணங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன. கடைசியில் தன்னலப்பேயும் பேராசைப்பேயும் கடமையைக் காதவழி துரத்தின. மெல்ல மெல்ல எழுந்து நடந்தான் அவன்.

* * * *

போர்க்களத்தை அடுத்த பாசறை. அழகிய கூடாரத்தின் நடுவே உயர்ந்த மகமல் திண்டுகளின்மேல் சாய்ந்தவனாய் உட்கார்ந்திருந்தான் தளபதி மாலிக்காபர். கைகட்டி வணங்கியவனாய் எதிரே நின்றான் சமரஸிம்மன்.

"இப்பொழுது எதற்காக இங்கே வந்திருக்கிறாய்" என்றான் தளபதி.

"தங்களிடம் சேவை செய்ய"

"சேவையா? உன்னைப்பற்றி ஏற்கனவே ஒற்றர்கள் தெரிவித்தார்கள். உன் தாய்நாட்டிற்கே துரோகம் செய்த நீ எங்களிடம் உண்மையாய் நடந்துகொள்வாயென்று எப்படி நம்பமுடியும்?

"ரஜபுத்ரன் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டான்" தலைவன் முகத்திலே ஒரு விஷமச் சிரிப்பு. தலைவன் சற்றுநேரம் யோசித்தான். இருவரும் தணிந்த குரலில் ஏதேதோ பேசினார்கள். இடையில் தன் காதற் கதையையும் சொல்லிக்கொண்டான் ஸமர்ஸிம்மன். மாலிக்காபர் ஒப்புக் கொண்டான்.

இரண்டாவது ஸர்தார் மிகுந்த கோபத்தோடு எழுந்தான். "அடே மூடா! உன் விஷயம் எங்கள் எல்லோருக்கும் தெரியும். கேவலம் ஒரு பெண்ணிற்காகத் தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கத் துணிந்த நீயும் ஒரு மனிதனா? உன்னுடைய இந்த துரோகம் மன்னிக்கத் தகாதது. சூழ்ச்சியினால் வெற்றிகொள்ள நாங்கள் விரும்பவில்லை, இன்னும் போதுமான அவகாசம் கொடுக்கிறோம். யோசித்துப் பதில் சொல்." என்றாள்.

"நான் நன்றாய் ஆற அமர யோசித்தபிறகேதான் இங்கு வந்தேன். இனி யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. உங்களுக்கு எல்லாவிதத்தாலும் உதவி செய்கிறேன். பிரதியாக நான் கேட்பது வித்யுல்லதையும் ஒரு நல்ல பதவியும்தான்" என்றான்.

மாலிக்காபரின் முகம் மலர்ந்தது இவ்வளவு சுலபமாகச் சித்தூர் கைக்கு வந்துவிடும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

* * * *

காலை இளவெயிலின் பொன்னிறமான கிரணங்களினால் சித்தூர் கோட்டையை மெருகிட்டுக் கொண்டிருந்தான் பாலசூரியன். திடீரென்று ஒரே கூக்குரல். "மருந்துக் கிடங்குகள் தீப்பிடித்தன: கோட்டையின்மேல் அல்லாவுத்தீனது கொடி பறக்கிறது" என்ற செய்தி மக்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. இராஜபுத்ரர்கள் தோல்வியுறமாட்டார்களென்றே பலரும் நம்பினார்கள். எதிர்பாராத இந்த சம்பவம் மக்களைத் திடுக்கிடச்செய்தது,

சமரஸிம்மன் வித்யுல்லதையின் மாளிகையை அடைந்தான். அவனை வரவேற்க அவள் சித்தமாயில்லை. எதிர்பாராத அவன் வருகையைக் கண்டு ஆனந்த மிகுதியினால் அவள் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. ஆனால் அவனுடன் வந்த இஸ்லாமிய வீரர்களைக் கண்டவுடன் அவள் நெஞ்சம் "துணுக்"கென்றது. அன்று அவன் பிதற்றிய மொழிகள் நினைவுக்கு வர, அவளுக்குப் பளிச்சென்று விஷயம் விளங்கிவிட்டது. "யாரோ ஒரு துரோகி காட்டிக்கொடுத்துவிட்டான்" என்று ஜனங்கள் குறித்தது தன் காதலன்தான் என்று தெரிந்ததும், அவள் உடல் கட்டுக்கடங்காமல் பதறிற்று. கோபத்தால் அவள் முகம் சிவந்தது. சற்றுமுன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்த அவள் கண்கள் இப்பொழுது நெருப்பைக் கக்கின. மிகவும் ஆத்திரமும் கோபமும் கலந்த குரலில் "ஸமரசிம்ம!" என்றாள்—அதற்குமேல் பேச அவளால் முடியவில்லை. தொண்டை அடைத்துப் போய்விட்டது.

"அன்பே! வித்யுல்லதே!" என்ற குரலில் ஆர்வமும் காதலும் தொனித்தன.

இந்த வார்த்தைகள் அவன் வாயினின்றும் எழுந்ததோ இல்லையோ அவள் கோபம் எல்லையைக் கடந்தது. "அடே துராத்மா! ஜாக்ரதை. இந்த வார்த்தை மீண்டும் உச்சரிக்காதே. ஒரு தேசத்ரோகி, ஒரு குலத்ரோகி தன்னை 'அன்பே!' என்று அழைக்க இந்த வித்யுல்லதை ஒருநாளும் ஒப்ப மாட்டாள். உன்னைப் போன்ற பாதகர்களின் சுகபோகத்துக்காக இந்த உடல் சிருஷ்டிக்கப்படவில்லை. கேவலம் உன் சொந்த இன்பத்திற்காக நாட்டைக் காட்டிக் கொடுத்தாய். உன்னாலேதான் அழகிய சித்தூர் இன்று ஸ்மசானமாகி நிற்கிறது. சீ! சீ!! போ வெளியே!" என்று சீறினாள் அவள்.

அவன் தலைகுனிந்தான். மிகவும் தீனமான குரலில் "வித்யுல்லதே! காதலுக்கு முன் தேசம் என்ன? உலகமே துச்சம்" என்று தோன்றிவிட்டது.

"ஓகோ! அப்படியா? அப்படியானால் என் கட்டளைப்படி அல்லவா நடந்திருப்பாய். துரோகீ! பேராசைப் பேய்பிடித்த குலத்ரோகீ!... என்பதற்குள் இடைமறுத்து "வித்யுல்லதே! இவைகளையெல்லாம் உன்னை அடைவதற்காகவேதான் செய்தேன். செய்தது செய்துவிட்டேன். குற்றம்தான். இனி என்ன பிராயச்சித்தம் விதித்தாலும் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்றான்.

அவள் அவனை ஏறிட்டுப் பார்க்கவுமில்லை, "ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் கண்களில் நீர் மல்க "தாயே! என் இந்த அழகு

பொருட்டு, இத்தகைய விபரீதம் நேர்ந்துவிட்டதே, என்னுடைய இந்தரூப சௌந்தர்யமே உன் அழிவிற்குக் காரணமாகி விட்டதே! என்ன அழகு! அடாடா! இதனால் இவ்வளவுவிபரீதங்களா நேரவேண்டும்!என் தாயே! ஜன்ம பூமீ!பாரதத்தாயே! என்னைமன்னித்துவிடு.சித்தூர் ராஜராஜேச்வரீ!என்னை மன்னித்துவிடு. நானே உன் அழிவுக்கு காரணமாகவேண்டுமா? முதலிலேயே என் சௌந்தர்யமே உனக்கு விஷமாகும் என்று தெரியாமற் போய் விட்டதே. தாயே! உன்னுடைய பவித்ரமான மண்ணிலிருந்தே பிறந்தேன். இப்பொழுது உன்னைத் தவிர யாரிடம் அடைக்கலம் புகுவேன்? உன் மடியைத் தவிர சாந்தியை அளிக்க வல்லது எது?'' என்று தேம்பினாள் அவள்.

ஆச்சர்ய மிகுதியினால் மலர்ந்த கண்களுடன் அவளையே பார்த்து நின்றான் அவன்.

ஒரே ஒரு நொடி. தன் மார்பின் கச்சிலிருந்து எதையோ எடுத்தாள் அவள். ஐயோ! வென்றலறியவனாய் ஸமரஸிம்மன் முன்னே பாய்ந்தான். 'பளிச்'சென்று ஒரு மின்னலின் ஒளி. அவ்வளவுதான். மறுகணம் அவள் மார்பையே உறையாகக் கொண்டதுபோல் பாய்ந்துவிட்டது. அந்தக் கட்டாரி; அவளது அழகிய உடல் ஜன்மபூமியின் சாந்திமயமான மடியில் வீழ்ந்தது.

* * *

இன்று நூற்றுக்கணக்கான ஸமரஸிம்மர்களைப் பார்க்கிறோம். ஆனால் வித்யுல்லதையைப் போன்ற வீரப்பெண் கொடியைப் பார்க்க முடியவில்லை. நூற்றுக்கணக்கான வீரப்பெண்களைப் பெற்ற பாரதத் தாயே! இவளைப் போன்ற வீரப் பெண்ணை மீண்டும் பெறுவையோ?

ஸ்ரீமதி வெங்கடாபுரம், ரங்கநாயகி அம்மாள்.

அன்னையின் அன்பு

மல்லிகாபுரியில் லக்ஷ்மியைத் தெரியாதவர்களே கிடையாது. அது எதனால்? தாயுக்கும் மகனுக்கும் இருக்கும் ஒற்றுமையும் அன்பும்தான் காரணம் எதற்கு பேச்செடுத்தாலும் "அந்த லக்ஷ்மியும் அவள் பிள்ளையும் பார்; அம்மா பிள்ளை என்று இருந்தால் அப்படியல்லவோ இருக்கவேண்டும்" என்பார்கள். லக்ஷ்மியின் பிள்ளை, நாராயணன் மிகவும் நல்ல பையன். ஆனால் ஒவ்வொரு குடும்பத்திலேயும் எல்லாரும் ஒற்றுமையாக இருப்பது என்றால் முடிகிற காரியமா? அது எங்கோ 100க்கு ஒன்று காண்பது அரிது. நாராயணன் மனைவியாகிய நப்பின்னைக்கு, தாயும் பிள்ளையும் பேசுவதைக் கண்டாலே மனதிற்குப் பிடிக்காது. ஆனால் நாராயணனிடத்தில் இவள் ஜம்பம் சாயாது. என்ன செய்வாள்? இந்த காலத்து பிள்ளைகளைப்போல் நாராயணன் இருக்கமாட்டான். அவனுக்கு தாயார்தான் முன்னறிதெய்வம். அம்மா என்று அவன் கூப்பிடுவதே ஓர் தனித்த அழகு. லக்ஷ்மிக்கு, தன் மகனுக்குத்தான் சாப்பாடு போட்டால்தான் திருப்தி. தான் எண்ணெய் தேய்த்து குளித்தவிட்டால் தான், தன் பிள்ளை நன்றாக இருப்பதுபோல் தோன்றும்; பிறர் செய்தால் தனக்கு சம்மதக் குறைவுதான். ஆனால் அதையெல்லாம் நம்பின்னை தன்னாலானவரையிலும் தடுத்துதான் பார்த்தாள்; ஒன்றும் முடியவில்லை. முதல் தேதி சம்பளம் வந்ததும் தன் தாயாரின் திருவடிகளில் வைத்து நமஸ்கரிப்பதே அவனுக்குப் பேரானந்தம்; அவனை வாழ்த்துவதே அவளுக்குப் பரமானந்தம்: இதைக் கண்டு வெறுப்பதே நப்பின்னையின் குணம்.

2

தாயாரை அரை நிமிஷம்கூட பிரியக்கூடாது என்கிற அபாரமான ஆசை எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு வெகுதூர தேசத்திற்கு மாத்திவிட்டதானது நாராயணனுக்கு தாங்கமுடியாத விசனமாகிவிட்டது. ஆபீஸில் இருந்து அரைநாழிகை தாமதமாக வந்தால்கூட ஆவலே வடிவாக வழிபார்க்கும் என் அன்னையிடம் இதை எப்படித் தெரிவிப்பேன். இதைக்கேட்டு அவள் நெஞ்சம் எப்படித் துடிக்கும்? என்கிற கவலையோடு. வந்தான். அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பதுபோல், நாராயணனின் முகவாட்டத்தைக் கண்ட லக்ஷ்மியம்மாள் திடுக்கிட்டவளாய், தள்ளாட்டத் தடுமாட எழுந்துவந்து, 'நாராயணா! ஏண்டாப்பா உன்முகம் ஏதோ மாதிரி இருக்கிறதே, ஏதாவது உடம்பு சரியில்லையா?" என்று பொங்கி வரும் புத்ரவாத்ஸல்யம் ததும்பக் கேட்டாள்.

நாராயணன்:—உடம்பு ஒன்றும் இல்லை அம்மா! நீ கவலைப்படாதே நாம் வேறு ஊருக்குப்போகக்கூடிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

லக்ஷ்மி:—ஊருக்கா! எந்த ஊருக்கு? என்ன ஸமாச்சாரம்?

நாரா:—சண்பகபுரிக்கு என்னை திடீரென்று மாத்திவிட்டார்கள் நாளைக்கே புறப்படவேண்டுமாம்.

லக்ஷ்மி:—என்ன! சண்பகபுரிக்கு மாத்திவிட்டார்களா?...என்று அலறியவாறு கேட்டாள்

நாரா:—ஆமாம் அம்மா! 3 நாள் பிரயாணத்திலிருக்கிறது அந்த ஊரு. என்னுடன் கூட இன்னம் 4 பேர்களை மாத்தியிருக்கிறார்கள் எல்லோரும், நாளைக்கே புறப்படப்போகிறார்கள் நீயும் ஸித்தம் செய்கிறாயா, அம்மா!

லக்ஷ்மி:—(இன்பக் கண்ணீரோ, துன்பக் கண்ணீரோ மடமடவென்று வழிந்தோடியது மிகவும் ஆசார சீலவதியாயிருக்கும் லக்ஷ்மி, ஆபீஸிலிருந்து வந்த மகனை விழுப்பு, தீட்டுக்கூடப் பார்க்காமல் முதுகில் தட்டிக் கொடுத்து அணைத்துக்கொண்டு) நாராயணா! "நினைத்தபடி முடிந்தால் நினைப்பரோ கடவுளை" என்ற பழமொழியை பகவான் என்னிடமே காட்டுகிறான்போலிருக்கிறது எனக்கோ வயதாகிவிட்டது கண் பார்வையோ மங்கிக்கொண்டே வருகிறது. அவ்வளவு தூர தேசத்திற்கு வருவதற்கு என்னால் முடியுமா? உன்னைப் பிரிந்து நான் எப்படி இருப்பேன். வெளியூருக்கு வரமுடியாது என்று சொல்லிவிடக் கூடாதா?

நாரா:—அம்மா! இந்த யுத்தகாலத்தில் ஆபீஸார் இட்டது சட்டம்; மாட்டேனென்றால் உத்யோகம்போய்விடும். இந்த பஞ்சகாலத்தில் எப்படிப் பிழைப்பது? ஏனம்மா மெள்ள அழைத்துக்கொண்டுபோய் விடுகிறேன்.

லக்ஷ்மி:—அப்பா! முன்பின் அறியாத அத்தனை தூர தேசத்தில் இந்த குடுகுடுக் கிழத்தை இழுத்துக்கொண்டுபோய் நீ கஷ்டப்பட என் மனம் பொறுக்குமா? அப்பா, நீ சந்தோஷமாய் உன் மனைவியுடன் போய் வா. நான் உன் சகோதரி கௌரி வீட்டில் இருக்கிறேன். என் தலைவிதியை பகவான் எப்படி வகுத்திருக்கிறானோ? தாயின் உயிர் காசியிலாவது தன் மகனுடைய மடியிலாவது பிரியவேணும் என்பது சாஸ்திரம். நான் உன் மடிக்கே காத்துக்கொண்டிருக்கிறேன்—

என்று லக்ஷ்மி முடிப்பதற்குள் நாராயணன் இடைமறுத்து "ஏனம்மா உனக்கு இந்தபயம்? நீ மகா பரிசுத்தவதி என்பது அந்த பரமாத்மாவுக்கு தெரியாதா? உனக்கு ஒரு குறைவும் வராது. நான் போய் சில மாதங்களுக்குள்ளேயே லீவு வாங்கிக்கொண்டு திரும்பிவந்து விடுகிறேன். பிரயாணத்துக்கு ஸித்தம் செய்யம்மா! என்றான். மகனைப் பிரியவேண்டுமே என்ற துக்கம் லக்ஷ்மியின் நெஞ்சில் பெரும் பாறையைப்போல் அழுத்தியது; ஆனால் இந்த சம்பாஷணையை தூர இருந்து கேட்ட நப்பின்னாவின் முகம், தாமரைக் கமலம்போல் மலர்ந்து சந்தோஷம் தாண்டவமாடியது.

3

நாள்கள் ஒன்று இரண்டு என்று உருண்டு ஓடி ஒரு மாதமாய்விட்டது. நப்பின்னாவுக்கு தன் கணவனை உத்யோகத்தில் மாற்றியதாகவே தோன்றவில்லை. தனக்குக் குடும்பத்தில் சர்வாதிகாரம் வந்துவிட்டதாக எண்ணி வெகு அட்டகாஸத்துடன் குடும்ப அரசுபுரியத் துடங்கினாள். தனக்கு ஸகாயத்துக்கு தன் கணவனிடம் சொல்லாமலே தன் தாயாரை அழைத்து வந்தாள்.

தள்ளாத வயதில் தாயின் அருகிலிருந்து சிசுருஷை செய்து இன்புறும் பாக்யம் இல்லாமல் இங்குவந்துவிட்டாமோ? என்கிற ஏக்கம் நாராயணன் மனதை வாட்டுகின்றது. சம்பளம்வாங்கியவுடனே தன் தாயாரின் போஷணைக்காக 25 ரூபாய் சகோதரிக்கு அனுப்பி, அம்மாவை வெகு ஜாக்கிரதையாகவும் கவலைப்படாமலும் பார்த்துக்கொள்ளும்படி அடிக்கடி கடிதம் எழுதுவான். தாயைப் பிரிந்திருக்கும் துக்கம் சகிக்காமல் 'இந்த பாழாய்ப் போன யுத்தம் ஏன் வந்தது அதனால்லவோ என் தாயாரைப் பிரியும்படியான விதி அமைந்தது' என்று சலித்துக்கொள்வான்.

"அம்மாவுக்கு திடீரென்று இரண்டுநாளாக உடம்பு சரியாக இல்லை 'நாராயணன் வந்தானா? நாராயணன் வந்தானா? என் கண்மணி வந்தானா?' என்று இரவு பகலாக அலற்றுகிறாள். லீவு வாங்கிக்கொண்டு நீ உடனே வரவும்" என்று கௌரி எழுதிய கடிதம் நாராயணன் தலையில் இடி விழுந்தது போன்ற அதிர்ச்சியை உண்டாக்கியது.

"ஐயோ! அம்மாவுக்கா உடம்பு சரியாயில்லை? அடாடா அவள் பயந்தபடி நடந்து விடுமோ? ஐயோ! இப்போது எனக்கு பக்ஷியைப்போல் இறகு இருந்தால் பறந்துபோய் விடுவேனே அம்மா நான் வருமளவும் உன்னை பகவான் நன்றாக வைத்திருப்பாரா?" என்று கண்ணீர்விடும் சமயம் நப்பின்னை அங்குவந்து முகத்தை ஒருமாதிரியாக வைத்துக்கொண்டு 'ஐயோ பாவம்! சின்ன குழந்தை, இப்போதுதான் உங்களுக்கு ஐந்துவயதாகிறது; இத்தனை சிறிய வயதில் உங்களை விட்டுவிட்டு அம்மா இறந்துபோய்விடுகிறார்களே என்று துக்கம் பொங்கிப் பொங்கி வருகிறதோ? என்னமோ வயதாகி விட்டது: எல்லோரும் நன்றாயிருக்கும்போது போகவேண்டியதுதானே! என்று அலக்ஷ்யமாகக் கூறியது நாராயணனை அக்னிகுண்டத்தில் போட்டுப் புரட்டுவதுபோலிருந்தது. எங்குமில்லாத ஆவேசம் பீறிக்கொண்டு வந்த வேகத்தில் நப்பின்னையை பளபளவென்று 4 அறை கன்னத்தில் அறைந்து "சீ அறிவுகெட்டக் கழுதை; உன்னிடம் தத்வோபதேசம் கேட்க வரவில்லை; துலைந்துபோ" என்று அவளைத் தள்ளிவிட்டு நேரே ஆபீஸுக்கு ஓடி அதிகாரியிடம் கடிதத்தைக் காட்டி கெஞ்சிக் கூத்தாடி லீவு கேட்டான். சற்றும் இரக்கமற்ற த்வனியில் "என்ன அய்யா! உடம்பு சரி இல்லை என்று கடிதம் வந்தபோதே ப்ரமாதப்படுத்துகிறீர்? ஏற்கெனவே 4 பேர் லீவிலிருப்பது மறந்துவிட்டதா? மனிதர்களென்றால் உடம்புக்கு வராதா என்ன? லீவு குடுக்கமுடியாது" என்று கண்டிப்பான த்வனியில் கூறினான்.

இதைக்கேட்ட நாராயாணன் இதயம் சுக்கல் நூறாக வெடித்துவிடும் போல் வேதனைசெய்தது. அந்த அதிகாரியின்மேல் ஆத்திரம் மூண்டது. மெல்ல சற்று சமாளித்துக்கொண்டு "ஐயா! என் தாய் மிகவும் வயதானவள் அரை நிமிடம்கூட என்னைப் பிரிந்திருக்க சகியாதவள். அத்யாபத்தான நிலைமையில் இருக்கும் இச்சமயம் என்னைப் பார்க்காவிட்டால் அவள் ஆத்மா எப்படித் துடிக்குமோ? ஐயோ! நினைக்கும்போதே துடிக்கிறதே! ஐயா! எப்படியாவது எனக்கு லீவு குடுத்துதானாகணும்" என்று கெஞ்சினான் கண்ணிலிருந்து பெருகும் நீரை அவனால் தடை செய்யவே முடியவில்லை.

அதிகார தோரணையில் மமதை பிடித்து வீற்றிருக்கும் எஜமானன் நாராயணன் மனத்துடிப்பை எவ்விதம் அறியக்கூடும்? "ஓய்! தொண தொணவென்று வெறுமை பேசவேண்டாம்; சொன்னால் சொன்னதுதான் இன்னொரு கடிதம் வரட்டும் பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டு விருவிரு என்று எழுந்துபோய்விட்டான்.

நாராயணன் மனம் "அலைகடல் துரும்புபோல் தவிக்கின்றது, என் அருமைத் தாயின் தரிசனம் பெரிதா இந்த அடிமைத்தொழில், பெரிதா என்கிற ப்ரச்னைகள் அவன் இதயத்தில் மல்யுத்தம் செய்கின்றன, விலையில்லாத அன்பை மழைபோல் பொழியும் அன்னையின் தரிசனம்தான்ஜெயித்தது.

அடுத்த வினாடியே காட்டு வெள்ளம்போன்ற தைரியம் எங்கிருந்தோ பொங்கியது. "இவ்வேலை எனக்கு வேண்டியதில்லை" என்கிற ராஜினாமாக் கடிதத்தை எழுதி மேஜைமேல் வைத்துவிட்டு, விசையாக வீடுதிரும்பினான்.

"என்ன! இதற்குள் வந்துவிட்டீர்கள்? இன்று ஆபீஸ் இல்லையா என்று கேட்டுக்கொண்டே நப்பின்னா அருகில் வந்தாள். "ஆபீஸ் கட்டடம் எங்கும் போகவில்லை. ஆனால் எனக்கு வேலைதான் கிடையாது. உடனே இப்போது ஊருக்குக் கிளம்பவேண்டும் பிரயாணத்துக்கு சித்தப்படுத்து" என்று கடுமையான த்வனியில் கூறினான்.

இதைக் கேட்டுக்கொண்டேவந்த நப்பின்னாவின் தாயார் "ஐயையோ! இதென்னடி அனியாயம்! லோகத்தில் எல்லோரையும்விட உன் ஆம்படயானுக்குத்தான் அம்மாவின்மேலாசையா? என்ன அதிசயமாயிருக்கே! சாகப் போற கிழத்திற்காக இந்த பஞ்ச காலத்தில்கூட வேலையை விடுவார்களா? அப்படித்தான் செத்துப்போனால் என்ன! இந்த ஊரில்தான் அந்த கர்மத்தை பண்ணக் கூடாதா?" என்று தன்போக்காக ஆவேசத்துடன் தத்திக் குதித்துத் தாண்டவமாடினாள்.

நாராயணனுக்கு மாமியாரையும் பத்து அறை அறைந்துவிடலாமா என்று தோன்றியது. ஆனால் தானும் பொறுமையை இழந்துவிட்டால் ஊர் சிரித்துவிடுமென்று அஞ்சி தன்னை சற்று அடக்கிக்கொண்டு, "இந்த பைசாசு தாண்டவத்திற்கு பதில் சொல்லும் பூசாரி நான் அல்ல. நப்பின்னா! புறப்படுகிறாயா இல்லையா?" என்று அதிகாரத்துடன் கேட்டான்.

அவள் விக்கி விக்கி அழுதவாறு தாயாருடன் பேசிகொண்டிருந்தாளே தவிர, இவன் வார்த்தையை காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. அவளது மனோபாவத்தை அறிந்துகொண்ட நாராயணன் எக்கேடாவது கெட்டுத் துலையுங்கள்" என்று கூறி விற்றென்று போய்விட்டான்.

4

"நாராயணன்வந்தானா! கௌரி! தந்தி அடித்தாயா? ஐயோ! ப்ராணன் போகும் சமயத்தில்கூட ஸ்ரீமந் நாராயணன் நாமத்தை நினைத்து, நற்கதி அடைய புத்திசொல்லாமல் புத்ரவாத்ஸல்யத்திலேயே மிதக்கின்றதே என்னசெய்வேன்? 'கௌரி என் கண்மணியை பார்ப்பேனா?" என்று அலற்றுகின்றாள்.

கௌரி: — அம்மா! அண்ணா கட்டாயம் வந்துவிடுவான்; நீபயப்படாதே அண்ணாவுக்கு நீ உத்தமமான நாராயணன் பெயரையே வைத்திருப்பதால் நாராயணா ஸ்ரீமந் நாராயணா என்று சொல்லம்மா. ஐயோ, ஐயோவென்று அலத்தாதே—என்று தேறுதல்சொல்லும் சமயம், 'அம்மா! அம்மா!'வென்று நாராயணன் ஓட்டமாகவந்து,'கௌரீ! அம்மாவுக்கு என்னமாயிருக்கின்றது?' என்று கேட்டவாறு தாயின் பக்கத்தில் உட்கார்ந்து அவள் தலையை எடுத்துத் தன் மடியில்வைத்துக்கொண்டு "அம்மா! இதோ நான் வந்து விட்டேனே பார்த்தாயா? உடம்பு எப்படி அம்மா இருக்கிறது?" என்று அலைகடந்த அன்பு வெள்ளம் பொங்கி கண்களால் தாயின் முகத்தில் சொட்ட அம்முகத்தைத் தடவியவாறு கேட்டான்.

இப்போதே சொர்க்கத்தைக் கண்டுவிட்டதுபோன்ற உணர்ச்சியும் ஆனந்தமும் லக்ஷ்மியின் இதயத்திலிருந்து பீறிக்கொண்டுவந்தன. "ஹா! நாராயணா! வந்தாயா!"... அதற்குமேல் பேசமுடியவில்லை. மகனை ஆர்வத்துடன் பார்த்தபடி இருகரங்களாலும் சேர்த்து அணைத்துக்கொண்டாள். அவளுடைய ஆனந்தம் உச்சஸ்தாயியை எட்டியது.

சித்திரக் கதை விளக்கம்

1. நீ ஒரு குட்டி ஆசிரியையாக மாட்டாயா? 2. இந்தா பேனாவும் காகிதமும் 3. பலமான யோசனை. 4. த்ருப்தியில்லாது கிழித்தல் 5. கிழித்த காகிதம் கீழே கிடக்க யோசனையில் பார்வை மேலேறுகிறது. 6. குப்பையை வேலைக்காரி வாருதல். 7. அதே குப்பையில் காப்பி தயாராதல். 8. எழுதி எழுதி சோர்வும், யோசனை தோன்றாத குழப்பமும். 9. ஐயோ! காகிதப் பஞ்சத்தில் இதென்ன பரிபவம்!

'கனவென்ன கனவே!'

பாரதியார் கண்ட இக்கனவு, சாமானியர் தூங்கிவிழுந்து கண்டு மறக்கும் கனவன்று, "உலகம் சுகம்பெறுவ தெந்நாளோ!" என்று தவம் கிடக்கும் உத்தமக்கவிஞர் 'தூங்காமல் தூங்கி'க்காணும் 'கனவு-ஜாதி'யைச் சேர்ந்தது. "பட்டப்பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம் நெட்டைக் கனவு" என்று பாரதியாரே வருணிக்கும் தீர்க்கதிருஷ்டிகளில் ஒன்று.

"என்ன போட்டி; என்ன பூசல்! ஆ என்ன சண்டை; என்ன சச்சரவு!" என்று ஏங்கிப்போயிருந்த கவிஞருக்கு முதல் முதல் **புத்த தரிசனம்** கிடைக்கிறது. "ஆனால் அந்தச் சமாதான யுகம் சமீப எதிர்காலத்தில் இல்லையே!" என்று எண்ணமிட்டதும், புத்தர் இருந்த இடமும் மரமும் தேராகவும் குதிரைகளாகவும் மாறுகின்றன. புத்தபகவான் கிருஷ்ண பகவானாகி, நரனாகிய அர்ச்சுனனுக்கு வாழ்க்கையாகிய குருக்ஷேத்திரத்திலே அச்சமின்றி அதர்மத்தோடு போர்புரிய வேண்டுமென்று வற்புறுத்துகிறார். பேடிகளின் ஞானப் பிதற்றல் ஞானமாகாதென்கிறார்; போலிச் சமாதானம் சமாதானமாகாதென்கிறார்; பலனைக் கருதாது கடமையைக் கைங்கரியமாகவும், கைங்கரியத்தைக் கடமையாகவும் செய்வதே வெற்றியென்கிறார்.

ஓர் கனவு

கனவென்ன கனவே—என்றன்
கண்துயி லாது நனவினிலே யுற்ற (கன)

புத்த தரிசனம்

பொன்மரத் தின்கீழ்—அந்தப்
பொன்மரத் தின்கீழ்—வெறுஞ்
சின்மய மானதோர் தேவ விருந்தனன். (கன)

புத்த பகவன்—எங்கள்
புத்த பகவன்—அவன்
சுந்த மெய்ஞ்ஞானச் சுடர்முகங் கண்டேன். (கன)

ஈதுநல் விந்தை!—என்னே!
ஈதுநல் விந்தை!—புத்தன்
சோதிமறைந்திருள் துன்னிடக் கண்டனன். (கன)

கிருஷ்ணார்ஜுன தரிசனம்

குன்றத்தின் மீதே—அந்தக்
குன்றத்தின் மீதே—தனி
நின்ற பொற்றேரும் பரிகளும் கண்டேன். (கன)

தேரின் முன் பாகன்—மணித்
தேரின் முன் பாகன்—அவன்
சீரினைக் கண்டு திகைத்துநின் றேனிந்தக் (கன)

கண்ணனைக் கண்டேன்—எங்கள்
கண்ணனைக் கண்டேன்—மணி
வண்ணனை ஞான மலையினைக் கண்டேன். (கன)

வில்லினை யெடடா—கையில்
வில்லினை யெடடா—அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா. (வில்லினை)

வாடி நில்லாதே;—மனம்
வாடி நில்லாதே;—வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே. (வில்லினை)

செய்தலுன் கடனே—அறஞ்
செய்தலுன் கடனே—அதில்
எய்துறும் விளைவினி லெண்ணம் வைக்காதே, (வில்லினை)



ஸ்ரீமான் வை. மு. ஸ்ரீநிவாஸன். எம்.ஏ., பி.எல்.,

ப்ரமித்துவிட்டோம்

"ப்ரமித்துவிட்டீர்களா!" என்று கேட்டார் ஸ்ரீ. சிவநேச சிவ சுப்ரமணிய சாஸ்த்ரியார். "ப்ரமிக்கும்படி அப்படி என்ன நேர்ந்தது?" என்றார் ஸ்ரீ. ராஜேந்திரம் ரங்க ராமானுஜ அய்யங்கார். அவ்விருவருக்கும் கூறிய பதிலை நீங்களும்கேளுங்கள். 1930-ம் ஆண்டில்நடந்த அனுபவம்இது.

* * * *

"விடியற்காலை 5 மணிக்கெல்லாம் பஸ் வந்துவிடும். நாம் 8 மணிக்குள்ளாகவே திருநாராயணபுரம் போய் சேர்ந்துவிடலாம்" என்று பிரஞ்சு ராக்ஸ் பஸ் ஸ்டாண்டில் பல யாத்ரிகர்கள் பேசிக்கொண்டிருந்தனர். பஸ்ஸின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தவர்களில் நாங்கள் மூவர் தான் (நானும் என் பெற்றோரும்) திருவல்லிக்கேணியிலிருந்து சென்றிருந்தவர்கள். நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது என்பது பிரத்யக்ஷமான உண்மையல்லவா? அதேபோல் பஸ் நெடுநேரம்வரை வரவேயில்லை. வெய்யில் அதிகரிக்க ஆரம்பித்தது; பசியும் வயிற்றைக் கிளறவாரம்பித்தது. பிறகு தூரத்தில் பஸ் வருவதைக் கண்டதும் ஏதோ புதையல் கிடைத்தமாதிரியான சந்தோஷமும், அப்போதே ஸ்ரீ. செல்வப்பிள்ளை திவ்ய தரிசனமும் கிடைத்ததுபோன்ற த்ருப்தியும் ஏற்பட்டன.

திருநாராயணபுரத்தை நாங்கள் அடையும்போது உச்சிவேளைக்கு மேலாகிவிட்டது. பஸ்ஸிலிருந்து இறங்கியதும் நேரே ஸ்ரீ ராமானுஜஜீயர் மடத்திற்குச் சென்றோம். அங்கேயும், பொதுவாக அன்றைய தினத்திலும் எங்களுக்கேற்பட்ட அனுபவங்கள் எங்களுக்குப் பலவித ஆனந்த உணர்ச்சியையும், பிரமிப்பையும் உண்டாக்கின. மறக்கமுடியாத நாள் அந்நன்னாள்.

* * * *

"ப்ரமிப்பு" பல சந்தர்ப்பங்களிலும், பலவிதங்களிலும் ஏற்படுகிறதல்லவா? "ஆகா! இப்பேர்ப்பட்ட அன்பும், உபசரிப்பும் நமக்கு கிடைத்துள்ளதே!" என்று ஆனந்தப் பூரிப்பால் ஏற்பட்ட ப்ரமிப்பு ஒருவிதம். "இதென்ன விந்தை! இப்படியும் நடந்ததே" என்று ப்ரமித்துப் போவது இன்னொருவிதம். (ஸ்ரீமான் S. S. S. சாஸ்திரிகளின் முகத்திலும், ஸ்ரீ. R.R.R. அய்யங்கார் முகத்திலும் இவ்விருவித பிரமிப்பையும் காணலாம்)

ஸ்ரீ. ஜீயர் மடத்திற்குச் சென்று அங்கு சிஷ்யகோடிகளிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டோம். அதன்பலன் உள்ளிருந்து ஸ்ரீ. ராமானுஜ ஜீயர் ஸ்வாமியே எங்களை அழைத்து, என் தகப்பனாரிடம் பின்வருமாறு பேசலானார். "வைத்தமாநிதி. முடும்பை. ஸ்ரீநிவாஸ அப்பங்கார்ஸ்வாமியின் குமாரரும், குடும்பத்தினருமான உங்களை இப்போது கண்டது சந்தோஷமளிக்கிறது. எனது பூர்வாச்ரமத்தில் ஸ்ரீ. அப்பங்கார் ஸ்வாமியிடம் நான்

காலக்ஷேபம் சேவித்திருக்கிறேன்'' என்று கூறி, எங்களுடைய சௌகரியங்களைக் கவனிப்பதற்கென்றே ஒரு சிஷ்யரை நியமித்து, "இங்கு சில நாட்களாவது தங்கி, இங்குள்ள எல்லா புண்ணிய தீர்த்தங்களிலும் தீர்த்தமாடி, எம்பெருமானை நன்கு சேவித்துச் செல்லலாம்'' என்றார்.

எங்களுக்கேற்பட்ட ப்ரமிப்பிலும் உள்ளப் பூரிப்பிலும் என்ன பதில் சொல்வதென்றுகூட தெரியாமல் வாய் தடைப்பட்டுவிட்டது. ஹிருதயம் நிரம்பியிருக்கையில் வாய்க்குப் பூட்டு தானகவே ஏற்படுவது அனுபவ பூர்வமான உண்மையல்லவா? ததீயாராதனை காலம் கடந்துவிட்டபின்னர்தான் நாங்கள் போய்ச்சேர்ந்ததால், எங்களுக்கென பிரத்யேகமாய் தளிகை செய்யப்பட்டது. "கல்யாணி'' என்ற புஷ்கரணியில் தீர்த்த மாடினேம். அந்த வெய்யிலில்கூட 'ஜில்'லென்றிருந்த குளத்து ஜலம் மேலே பட்டதும் குளிரெடுத்துக்கொண்டது..."கோவில் காலம் ஆகிவிட்டதால் மாலையில்தான் பெருமாளை சேவிக்கமுடியும் சரீர கஷ்டத்தினுல் ரொம்பவும் களைத்துள்ள உங்களுக்கு ஓய்வு எடுத்துக்கொள்ள ஒரு மண்டபத்தைத் திறந்து விடச் சொல்லி சாவி கொடுத்தனுப்பியிருக்கிறேன். அங்கு சென்று சிரம பரிகாரம்செய்துகொண்டு, சுமார் 4 மணிக்கு இங்கு வாருங்கள்'' என்று அன்பொழுக சாதித்தார் ஸ்ரீ. ஜீயர் ஸ்வாமி.

அவ்வாறே நாங்கள் அந்த மண்டபத்தில் இருந்தோம். சுமார் 3 மணி இருக்கும்; மடத்து சிஷ்யர் ஒருவர் அங்குவந்து "ஸ்வாமின்! இன்று ராத்திரி பலகாரத்திற்கு உங்களுக்கு 250 தோசை போதுமா?'' என்றார். எங்களுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "என்ன ஸ்வாமி! 250 தோசையென்று கேட்கிறீரே! எங்களிருவருக்கும் பையனுக்குமாகச் சேர்ந்து 5 தோசையிருந்தால் தலைக்குமேல் வெள்ளமாயிற்றே'' என்று என் தகப்பனர் கூறியதற்கு அவர் கடகடவென்று அந்த மண்டபமே அதிரும்படி சிரித்தார். எங்களுக்கு இது முற்றும் ப்ரமிப்பாக இருந்தது. "நானே குறைவாகச் சொன்னேன்...சரி. மொத்தம் 150 தோசைக்காவது ஏற்பாடுசெய்கிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

அரைமணிநேரம் இதைப்பற்றியே சிரித்துக்கொண்டிருந்தோம். "நம்மை இவர் சாதாரண மனிதசருஷ்டியாக நினைக்கவில்லைபோலும்!'' என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் பிறகு சுமார் 4 மணிக்கு மண்டபத்தைப் பூட்டிக்கொண்டு மடத்திற்குக் கிளம்பினேம்.

ஒரு ராகத்தை நன்றாகப் பாடாவிடினும் அதற்குரிய காலத்தில் பாடினுல் அது காதுக்கு மிக ரம்யமாகவிருக்கின்றதல்லவா? அதேபோல் அன்று நாகஸ்வரத்தில் வெகு சாதாரணமாக வாசிக்கப்பட்ட "நாட்டைக் குறிஞ்சி'' ஆலாபனை அந்த நேரத்திற்கு ஒரு விசேஷ இன்பத்தை அளித்தது. அன்று மைசூரிலிருந்து கோவிலைப் பார்வையிடுவதற்காக அதிகாரியொருவர் வந்திருப்பதால் பெருமாளுக்கு விசேஷமான ஆபரணலங்காரம் செய்யப்பட்டு வீதிவலம் வருகையில் வாசிக்கப்படும் நாகஸ்வர சங்கீதம் அது, என்று தெரிந்ததும் மட்டிலா மகிழ்ச்சியடைந்தோம். நம் அதிர்ஷ்டம் இன்று எம்பெருமானை ஸர்வாபரண பூஷிதராய், உத்ஸவ மூர்த்தியாய் ஸேவிக்கும் பாக்கியம் கிடைத்தது என்று சந்தோஷப்பட்டோம்.

மனங்குளிர, கண்குளிர எம்பெருமானைச் சேவித்தோம். மைசூரில் கல்வித்துறையிலீடுபட்டு போதகராயிருக்கும் ஒருவருக்கு பரம்பரையாக இக்கோவிலில் அர்ச்சகராயிருக்கும் முறை-உரிமை உண்டானதால் அவர்

அந்த கைங்கரியத்திற்கு வந்திருந்தது எங்களுக்கு ப்ரமிப்பை அளித்தது டன்; திருவல்லிக்கேணியிலிருந்து நாங்கள் வந்துள்ளோமென்றதும் அவர் "ஜகன்மோகினி காரியாலயத்தைச் சேர்ந்தவர்களை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். நாங்கள் யாரென்று தெரிந்ததும் விசேஷமாக உபசரித்துத் திரும்பவும் பெரிய சந்நிதிக்கு அழைத்துச்சென்று மூலவர் ஸ்ரீ. திருநாராயணப் பெருமாளை நன்கு சேவிக்கச் செய்து, ஆபரணங்கள், வஸ்திரங்கள், வாகனங்கள் முதலிய சகலத்தையும் காட்டினார்.

இரவு எட்டுமணி இருக்கும், மண்டபத்தில் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தோம். மத்தியானம் வந்த சிஷ்யர் ஒரு கூடையுடன் ப்ரசன்னமானார். அவரைப் பார்த்ததுமே எங்களுக்கு அடக்கமுடியாத சிரிப்பு வந்தது அவர் கூடையைத் திறந்ததும் எங்களுக்கு இதுவரை ஏற்படாத பிரமிப்பு ஏற்பட்டது. கூடையினுள் காணப்பட்டது 150 தோசையாம். அத்தனை தோசையும் சேர்ந்து கூடையில் கால்பாகம்கூட நிரம்பவில்லை. கையில் ஒரு 'தோசை'யை எடுத்துப்பார்த்தால் யாரால்தான் ப்ரமிக்காமலிருக்கமுடியும்? காலணாவைவிடச் சிறிது பெரியதாக இருந்தது. "ஒரு குழந்தைகூட இம்மாதிரி தோசை கணக்கின்றி சாப்பிட்டுவிடும்! ஆளுக்கு 250 தோசைகூட போதாதே. முன்பே தெரிந்தால் ஆயிரம் தோசைக்கு அடிபோட்டிருப்பேன்...அட ராமா!" என்று ஆச்சரியப்பட்டோம்.



எம். ஸி. அப்பாசாமி செட்டி அண்டு கோ.,

14 ஜோன்ஸ் தெரு, மண்ணடி, மதராஸ்.

"ஜகன்மோகினி" ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்

க்ருபாமந்தீர்

வைர விழா நாவல்

60

பொருளடக்கம்

அத்தியாயம்.			பக்கம்.
1.	மங்கள வாழ்த்து—மங்கையின் மகிழ்ச்சி	...	3
2.	அன்பு வெள்ளமும் அரிய நீதியும்	...	6
3.	அடங்கா வியப்பும் அலறும் ஆத்மாக்களும்	...	9
4.	தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கல்	...	11
5.	ஏக்கத்திற்கு முன்பு தூக்கம் ஏது?	...	12
6.	ஜாதகப் பலனோ! பாதக விளைவோ!	...	14
7.	பெற்ற மனத்தின் பவித்ர அன்பு	...	17
8.	அதிர்ஷ்டமில்லா அபாக்யப் பிறவி	...	19
9.	அறைகூவும் மரணமும் அலைமோதும் அன்பும்	...	21
10.	சந்தேக எண்ணமும் சம்சயக் காக்ஷியும்	...	24
11.	பாசப் பிணைப்பும் ஈசன் சோதனையும்	...	27
12.	ஆசையின் வேகம் அவதியாய் முடிந்தது	...	29
13.	தாபம் தணிந்தது தீபம் அணைந்தது	...	30
14.	உத்தம வழியில் உதய சூரியன்	...	35
15.	விதியின் ஆட்சியின் வீரத் தாண்டவம்	....	39
16.	கூட்டு நாடகமும் குடல் நடுக்கமும்	...	42
17.	செத்தபிணச் சவாரியும் சாகும் பிணக் கதறலும்	...	44
18.	அன்பிற்குப் பரிசு அனாதைக் குழந்தை	...	46
19.	விதை ஊன்றியது விருக்ஷம் ஆகுமா?	...	48
20.	சந்தோஷமும் சமாதானமும்	...	50
21.	தருமத்தின் சிறப்பா அனாதைகளின் பூரிப்பா	...	53
22.	சாந்தி ஒருபுறம் சங்கடம் ஒருபுறம்	...	56
23.	கைக்கெட்டியது வாய்க்கு எட்டுமா?	...	59
24.	வேஷம் ஜெயிக்குமா? பாசம் ஜெயிக்குமா?	...	60
25.	இளங்காளையின் இணையிலா மகிழ்ச்சி	...	65
26.	உயரிய நீதியும் ஊசலாடும் பாசமும்	...	66
27.	காட்டிற்குப்போனாலும் போட்டிவிடுமா?	...	72
28.	கடந்தநாள் நினைவும் கல்யாணப்பேச்சும்	...	74

29. ஏமாற்றப் புசலும் இன்பக் காற்றும் ... 76
30. உத்தம சாதுவும் பத்திரகாளியும் ... 78
31. பேதையின் தவிப்பும் பைசாசின் குதிப்பும் ... 79
32. உடைந்த உள்ளமும் உருகிய உள்ளமும் ... 83
33. நிறைந்த இன்பம் நிச்சயதார்த்தம் ... 84
34. எருதின் நோய் காக்கைக்குத் தெரியுமா? ... 86
35. பெத்த மனத்தின் பரிதவிப்பு ... 88
36. அம்ருத கானமா? அபலையின் ஊனமா? ... 90
37. பொறுமைக்கும் உண்டு வரம்பின் எல்லை ... 92
38. ஊன்றிய விதையும் உள்ளக் கிளர்ச்சியும் ... 94
39. உத்ஸாக நிலயமும் உல்லாஸத் தோற்றமும் ... 98
40. தேனும் பாலும் திகட்டா வமுதம் ... 100
41. புனர் ஜென்மமும் புதிய இன்பமும் ... 104
42. அன்புக் கேணியில் ஆனந்தத் தாமரை ... 106
43. ஆண்டவன் செய்யும் அற்புத லீலை ... 109
44. சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது ... 111
45. அதிர்ஷ்டத்தின் சிகரம்—ஆனந்தத் தாண்டவம் ... 114

வை. மு. கோ. எழுதிய 60 நாவல்கள்

ரூ. 2—8

வைதேகி
ராதாமணி
சாருலோசனா
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1—12

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
தயாநிதி
ஞானதீபம்
வாத்ஸல்யம்

ரூ. 1—8

சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

ரூ. 1—4

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச் சுழல்
கஸ்தூரி திலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை
கலாநிலயம்

ரூ. 1

சுகந்த புஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திர மண்டலம்
கருணாலயம்
க்ருபாமந்திர்

அணா 14

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 12

* கதம்பமாலை

அணா 10

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணா 8

நளினசேகரன்.
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
ப்டாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
மாலதி
வத்ஸகுமார்
பட்டகோட்டி

அணா 6

பக்ஷமாலிகா
சுடர் விளக்கு

அணா 4

மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
* ஸரஸராஜன்
உளுத்த இதயம்

க்ருபாமந்திர்

அகில உலகத்தையும் படைத்த அகிலாண்டகோடிப் பிரம்மாண்ட நாயகனை ஸ்ரீமந்நாராயணன் தாங்குகிறானா? உணர்ச்சியற்ற, பசையற்ற, கருணையற்ற கல்லினாலாகியதா அவனுடைய பவித்திரமான இதயம்?......

பாசக் கயிற்றில் ஊசலாடும் அறிவிலி மனிதன் என்ன நினைக்கிறான்? பொம்மைதான் கோபுரத்தைத் தாங்குவதாக நினைக்கிறான். உண்மை எது?......

கடவுளின் உள்ளம் கல்லுமல்ல முள்ளும் அல்ல. அடியவர்க்கடியவனாய் நின்று அன்பர்களுக்கு அருள்மாரியைப் பொழிந்து அனவரதமும் காக்கும் க்ருபாமந்திரமல்லவா அவன் உள்ளம்?

ஜகன்மோகினி

வைர
விழா
பிரசுரம்.

1—1—43

க்ருபாமந்திர்

வை. மு. கோ

வைர விழா

நாவல்

மங்கள வாழ்த்து—மங்கையின் மகிழ்ச்சி

"உலகத்தில் உன்னுடைய தரிசனத்திற்குமுன்பு வேறு இன்பம் உண்டா? ஆனந்தமூர்த்தி! அருள் ஜோதி! என்னுடைய கண்மணிக்கு உன்னருள் பரிபூர்ணமாகவிருந்து அவள் ஒரு குறைவும் இல்லாமல்

சந்தோஷப்பதுமைபோலிருந்தால் அதுவே எனக்குப் போதும். என்னாயுளில் நான் வேண்டுவதற்கு இனி வேறு எதுவுமில்லை. என் செல்வத்தின் க்ஷேமம் ஒன்றையே இந்த பழுத்த இதயம் நாடுகிறது" என்று ஒரு கிழவர் தன்னெதிரில் மாட்டப்பட்டுள்ள ராதாக்ருஷ்ணன் படத்தைப்பார்த்து மனமுருகிப் பிரார்த்தனை செய்யும்போது, சுமார் 10 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமி அழகே உருக்கொண்ட வெள்ளம்போல் கையில் ஒரு தட்டு நிறைய தாம்பூலம், மஞ்சள் குங்குமம் பழங்கள் முதலியவைகளோடு ஆனந்தமாக "தாதா! தாதா! இதோ பாத்தியா! தட்டு நிறைய பழங்கள் எதிர்வீட்டு மாமி கொடுத்தா. இந்தா, இதையும் ஸ்வாமிக்கு நிவேதனம் செய்; தாதா! இதோ பாரு நிறைய புஷ்பம். ஸ்வாமிக்கு சமர்ப்பித்து எனக்குச் சூட்டிவிடு தாதா!" என்று கள்ளங்கபடமற்று, விளையாட்டும் சந்தோஷமும் தேங்கிய குறுகுறுப்பான இயற்கையுடன் கூறியபடி தாதாவின்முன்பு நின்றாள்.

பகவானை வேண்டிப் பிரார்த்தனை செய்யும்போது அவர், "பயப்படாதே! உன் பிரார்த்தனைக்கு நான் மனமிரங்கினேன்" என்று அருள் கூறுவதுபோல், தன்னாருயிர் பேத்தி சுபகரமானதும், பகவானுக்கு அர்ப்பணம் செய்யும் மங்களகரமானதுமான பொருள்களுடன் எதிரில் வந்து நின்றதானது ஒரு புதிய சக்தியையும் ஆனந்தத்தையும் உண்டாக்கி மனத்தில் தெம்பும் தைரியமும் உண்டாயின.

பேத்தியை சேர்த்துக் கட்டி முத்தமிட்டு, "கண்மணீ! தீர்க்க சுமங்கலீபவ... நீ சர்வமங்களத்துடனும் இருக்கவேண்டும். உன் தாயாரின் ஆயுளையும் பகவான் உனக்குச் சேர்த்துக்கொடுக்க வேண்டும்" என்று இதயம் நிறைந்த அன்போடு வாழ்த்தினார்.

அச் சிறுமியும் அளப்பரிய ஆனந்தத்துடன், "தாதா! நீ இப்போது சொன்னதுபோலவே எதிராத்து மாமியும் என்னைக் கட்டி முத்தமிட்டு வாழ்த்தினா...என்மேல் எல்லோருக்கும் நிறைய ஆசையிருக்கு தாதா! அந்த மாமிக்கு என்னை ஒரு க்ஷணம் பார்க்காவிட்டால் மனது அலைகிறதாம். எப்போது நான் வருவேன் என்று காத்திருக்கிறார்களாம். எனக்கு அம்மா இல்லையே என்றதனால் என்மீது அவர்களுக்கு அத்தனை அனுதாபமாம், அதனால்தான் தினம் தலை பின்னுகிறார்களாம். வெள்ளிக்கிழமை எண்ணெய் தேய்க்கிறார்களாம். வீட்டில் எந்த தின்பண்டங்கள் செய்தாலும் எனக்குக் கொடுக்கிறார்களாம். அந்த மாமி எத்தனை நல்லவ தாதா!" என்று தனது தாமரைக் கமலம்போன்ற முகத்தில் சந்தோஷ விகசிதத்துடன் கூறினாள்.

அதிகமான ஆனந்தம் இதயத்தில் பொங்கும்போது வாய் ஊமையாகிவிடுவது சகஜமல்லவா! கிழவரின் கண்களில் மட்டும் துக்கமும் ஆனந்தமும் நிறைந்த கண்ணீர் பெருகியதேயன்றி வாய் திறக்கவில்லை. ஒரு க்ஷணநேரத்தில் அவருடைய உள்ளத்தில் பழய

கால நினைவுகள் முற்றும் சினிமாப் படத்தில் சுற்றுவதுபோல் சுற்றின. அந்த வேகத்தில் அவருடைய இதயத்தைப் பிறிக்கொண்டு ஒரு பெருமூச்சு பலத்த சப்தத்துடன் வெளிப்பட்டதைக் கண்ட சிறுமியின் முகம் அப்படியே சூர்யாஸ்தமனத்தில் குவியும் தாமரை மலரைப்போல் குவிந்துவிசனம்தேங்கியது. பழத்தட்டை சுவாமிக்கு முன்பு வைத்துவிட்டு தாதாவின் இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டு ஏக்கமும், பரிதாபமும் தேங்கிய கண்களால் பார்த்தாள்.

அந்த பார்வையின் வசீகரம் கிழவரின் இதயத்தில் வெகு தூரம்சென்று தளாவியது. குழந்தையின் தலைமயிரைக்கோதியவாறு அவளை உற்றுப்பார்த்தார். சிறுமி தொண்டை அடைத்தபடியே... "தாதா!...எங்கம்மா செத்துப்போனதுபோல் நானும் செத்துப் போய்விடுவேன் என்று பயப்படுகிறாயா!...ஏன் தாதா திடீர் திடீர்னு இப்படி அழுகிறாயே...நான் செத்தே போகமாட்டேன் தாதா! நீ விசனப்படாதே...நான்தான் உனக்கு சகலமும் என்று அடிக்கடி நீயே சொல்கிறாய். நீயே இப்படி விசனப்படுகிறாயே... நீ அழுதால் எனக்கும் அழுகை வருகிறது. அழாதே தாதா!" என்று அன்பு ததும்பக் கூறினாள்.

கிழவர் சட்டென்று கண்ணைத் துடைத்துக்கொண்டு ச்ரமத் துடன் முகத்தில் சிரிப்பை வரவழைத்தவாறு 'கண்ணு! ஓடியா! ஓடியா! ஸ்வாமிக்கு முதலில் பூஜையைச் செய்துவிட்டு பழங்களை நிவேதனம் செய்து நாம் சாப்பிடலாம்" என்று தனது விசனத்தை முழுவதும் மாற்றிக்கொண்டு கூறினார்.

உடனே அச்சிறுமி குத்துவிளக்குகளை ஏற்றி சாம்பிராணி வத்தியைக் கொளுத்திவைத்து மணையைப்போட்டு தாதாவை இழுத்து உட்காரவைத்துத் தானும் உட்கார்ந்தாள். கிழவர் பூஜையை நியம நிஷ்டையுடன் முடித்தார். கிழவரும் சிறுமியும் சேர்ந்து பக்திநிறைந்த பாட்டுக்களைப் பாடினார்கள். நைவேத்தியம் ஆன பிறகு சிறுமி தட்டில் வெத்திலை பாக்கு மஞ்சள், புஷ்பம், பழம் முதலியவைகளை வைத்து எடுத்துக்கொண்டு பக்கத்து வீட்டில் குடியிருக்கும் மகாலக்ஷ்மியைப் போன்றுள்ள ஒரு பெரிய சுமங்கிலிப் பாட்டிக்குக் கொடுப்பதற்காக ஓடினாள். அதைக்கண்ட கிழவரின் உள்ளம் பூரித்தது.

வெத்திலைப்பாக்கு கொடுத்துவிட்டு நமஸ்காரம் செய்த சிறுமியை பாட்டியும் தன் பொக்கைவாயால் சிரித்தபடியே, "கண்ணு! நீ தீர்க்க சுமங்கலியாக இருக்கணும். நல்ல கணவன் வரணும். உங்கம்மாவின் ஆயுளையும் நீ போட்டுக்கொண்டிருக்க வேணும்" என்று வாழ்த்தினாள்.

அந்த வீட்டில் காய்கறிகளும் வாழையிலையும் ஏராளமாக வந்திருந்ததைப் பார்த்த சிறுமி "இதெல்லாம் என்னத்துக்குப் பாட்டி? இங்கு என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

பாட்:—காலைபொறுத்து மறுநாள் நம்ம தாதாவுக்கு சஷ்டியப்த பூர்த்தி கல்யாணம். அதற்காக வாங்கியிருக்கிறது.

சிறு:—தாதாவுக்குக் கல்யாணமா!...அப்படின்னு என்ன பாட்டி! எங்க தாதாவுக்கு ஒரு கல்யாணமும் ஆகல்லேயே...

கிழ:—(சிறுமியைத் தடவிக்கொடுத்தபடியே) உங்க தாதாவுக்கு உங்க பாட்டியில்லேம்மா...அதனால் அவருக்குக் கிடையாது. நம்ம தாதாவுக்கும் எனக்கும் அறுபதாவது கல்யாணம். நீ வேடிக்கை பார்க்கலாம்.

இதைக் கேட்டதும் சிறுமிக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் பொங்கின. வியப்புடன், "என் பாட்டி, நீங்க ரெண்டுபேரும் மணையில் உட்காருவீர்களா! நெஜம் கல்யாணம் போலவே நடக்குமா!....மேளம் அடிப்பார்களா!...ஊரிலிருந்து மனிதர்கள் வருவார்களா!...பாட்டியும் தாதாவும் மணையில் உட்கார வெட்கமாயிருக்காது?"...என்று சிரித்தபடியே கேட்டாள்.

கிழவியும் சிரித்துக்கொண்டே, "கண்ணு! ஒனக்குக்கூட அறுபதாம் கல்யாணம் (சஷ்டியப்த பூர்த்தி) நடக்கும். அப்போது ஒன்னைக்கூட உன்பேரன் பேத்திகள் இப்படித்தான் கேட்பார்கள். அப்போது நீ என்னை நினைத்துக்கொள்ளு தெரியுமா?...வெட்கமாயிருக்குமா சந்தோஷமாயிருக்குமா, நீயே பார்த்துக் கொள்ளவாய்" என்றாள்.

இதற்குள் கிழவர் சிறுமியைக் கூப்பிட்டதால் "பாட்டி! போய்வருகிறேன்" என்று கூறியவாறு ஓட்டமாக ஓடினாள். 'சஷ்டியப்தபூர்த்தி...அறுபதாம் கல்யாணம்' என்று சிறுமியின் வாய் முணுமுணுத்தது.

2

அன்பு வெள்ளமும் அரிய நீதியும்

மேளதாளம் தடபுடலாக முழங்க கிழவரின் சஷ்டியப்தபூர்த்தி நடப்பதை வெகு ஆனந்தத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் சிறுமியின் உள்ளத்தில் வியப்பும் சந்தோஷமும் கூறத்திறமற்று பொங்கின. தன் பாட்டியிருந்தால் தாதாவுக்கு இப்படி நடக்குமே என்ற வக்கமும் ஒரு சிறிது உண்டாகியது.

அன்று பாட்டி வாழ்த்தியதுபோல் தனக்கு இம்மாதிரி கல்யாணம் வருமா! என்ற எண்ணம் சிறுதளிர் போன்ற உள்ளத்தில் உதயமாயது. தனக்குக் கணவன் கிடைத்து, முதலில் கல்யாணமாக வேண்டுமே என்கிற எண்ணம் உதிப்பதற்குள் பல வருஷங்களுக்குப் பின்னுள்ள அவளுடைய வாழ்க்கையை கள்ளமற்ற உள்ளம் விரும்பியதானது குழந்தைகளின் இயற்கையானசுபாவத்தைத்தான் காட்டியது. இந்தசஷ்டிபூர்த்திக் கல்யாணம் அவள் மனத்தில் பசும

ரத்தாணிபோல் பதிந்தது. தம்பதிகளின் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள். அச்சிறுமியின் இதயத்தில் கொந்தளிக்கும் ஆனந்தத்தைக் கூறத் திறமேயன்று. அன்று பூராவும் அவள் வீட்டிற்கே வரவில்லை. ஞாயிற்றுகிழமையாதலால் பள்ளிக்கூடமும் போகவில்லை. 'கிழவர்களுக்குக்கூட கல்யாணமா!' என்கிற ஆச்சரியத்திலேயே மிதந்தாள். அதன்பிறகு எந்த வீட்டில் மேளம் அடித்தாலும் 'இங்கு என்ன கல்யாணம்? சஷ்டிபூர்த்தியா!' என்று உவகைபூத்தவாறு கேட்பாள். தப்பித்தவறி சஷ்டிபூர்த்தியாயிருந்தால் யாராமாகவிருந்தாலும் குழந்தைத்தனமாகபோய்பார்த்துக்கொண்டு நிற்பாள்.

கிழவரின் உயிர்நாடி இந்த சுந்தரபிம்பந்தான். அவருக்கு நாள் ஏற ஏற இக்குழந்தையின் விசாரமே அதிகமாயது. நிமிடத்திற்கு நிமிடம் தனக்கு சாவுநெருங்கிவருகிறதையும், உலகத்தைப்படைத்த உத்தமனையல்லாது வேறு ஒரு மனித சகாயமற்ற இந்தப் பரதேசிக் குழந்தையின் பரிதாபத்தையும் நினைக்கும்போது தேகம் பதறி சங்கடம் செய்கிறது. இந்த கவலையிலேயே அவர் அதிக வயதான கிழவர்போல் தேகம் பொலிவிழந்து, சுருக்கங்கள் கண்டு, கன்னங் குழிந்து தள்ளாமை மிகுந்து காணப்பட்டார்.

இதே வேதனையில் வெட்டவெளியான இடத்தில் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு படுத்திருந்தார். மணி 7 அடித்தும் தன்னருமைப் பேத்தி வராததால் மிக்க கவலையுடன் சற்று நேரத்திற்கொருதரம் அன்பும் ஆவலும் நிறைந்த குரலில் 'மானவதீ! மானவதீ!' என்று கூப்பிட்டார்.

பதிலில்லை. கிழவருக்கு வேதனை பின்னும் அதிகரித்ததால் வாசலில்வந்து இருபுறமும் பார்த்தபடியே நின்றார். மணி எட்டடித்த பிறகு தலையும் வேஷமும், பார்க்க விகாரமாக ஓடிவந்தாள்.

'குழந்தை இன்னும் வரவில்லையே'? என்கிற ஆத்திரமும், அவளைக் கண்டவுடனே உண்டாகும் அளப்பரிய ப்ரேமையும் ஒன்றாக எழுந்ததால் கடுமையாகக் கண்டிக்கவேண்டும் என்கிற எண்ணத்தை மறந்துபோய், மானவதியைச் சேர்த்து கட்டிக்கொண்டு தலையைக் கோதியபடியே "மானவதி! உனக்கு எத்தனை தரம் சொன்னாலும் தெரியவில்லை. நீ இம்மாதிரி இரவு காலங்களில் நேரம் கழித்து வருவதானது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இன்னமும் நீ சிறு குழந்தையென்று நினைக்கிறாய்? இம்மாதிரி சுற்றுகிற பழக்கம் எப்போதும் கெடுதலாகத்தான் முடியும் தெரியுமா? "பெண்பிள்ளைகளின் பாதுகாப்பன்றி ஒரு தடியன் வளர்த்தான்; பெண்தன்மையே இல்லாது வெறும் மோசமாக இருக்கிறது. அடக்கம், ஒடுக்கம், நாணம், பயம், மரியாதை முதலியன ஒன்றுமே இல்லை; ஆண்பிள்ளைகளைப் போலவும், அலகைகள் போலவும் திரியும் இந்தப் பெண்ணை யார் கட்டுவார்கள்? இது எனக்கு வேண்டாம்." என்று உன்னை வெறுத்தால் அப்போது என்ன கதியாவது? உனது பரதேசித்தனத்தை நீ உணரவேண்டாமா! மானவதி! அழாதேம்மா!

இதோடு நான் பலதரம் சொல்லியாயிற்று...இதுதான் கடைசிதரம். இனியும் நீ இம்மாதிரி சிறு குழந்தைகளுடன் விளையாட்டுத்தன மாகவே கண்ட இடத்திலும் சுற்றி அலைந்துவிட்டு, வீட்டிற்கு வந்தால் நான் உன்னோடு பேசாமல் ஓடிவிடுவேன். பெண்களுக்குத் தன்னடக்கமும் பணிவுந்தான் முக்கியம். அதில்லாது உன்னை வளர்த்து நான் என்ன செய்வேன்? ஆதியில் உன் தாயார் எப்படி இருந்தாள் தெரியுமா! 'மானவதி' என்கிற அவளுடைய பெயர் மறையாதிருக் கும்பொருட்டு அதே பெயரை உனக்கு இட்டு என் துக்கந்தீர அழைக்கிறேன். அப்பெயருக்கேற்றவாறு உன் தாயார் ஆச்சரியப் படும்படி இருந்தாள். நீயோ, அந்த பெயரின் மகிமையைக் குலைத்துவிடுவாயோ என்று பயமாகவிருக்கிறது.

கண்மணீ! உன் முகம் கறுத்தால், உன் கண்கள் கலங்கினால், என் வயிற்றில் சுறீலென்கிறது. உன்னை மிரட்டவும் மனது துணிய வில்லை. நீ பள்ளிக்கூடத்துப் பெண்களுடன் சேர்ந்துகொண்டு இம் மாதிரி ஊர் சுற்றாதே. பள்ளிக்கூடம் விட்டானதும் நேரே வீட் டிற்கு வந்து சேரு. என்ன தெரிந்ததா?"

என்று கண்டித்து அழைத்துவந்து உட்காரவைத்துத் தாமே சமாதானமும் செய்தார். மானவதியின் கண்ணீர் பெருகியதைக் காண கிழவரின் கண்களிலும் கண்ணீர் ஊற்றெடுத்தது. அதை மெல்ல துடைத்துக்கொண்டு மானவதியின் கண்ணைத் துடைத்தார்.

"ஐயோ! என் குழந்தையைக் கோபித்துக்கொண்டோம்! கண் கலங்கக் காணச் சகிக்கவில்லையே!" என்று தனக்குள் வருந்தினர். விக்கும் குரலுடன் குழந்தை மிகவும் பரிதாபம் நிறைந்த பார்வை யுடன், தாதாவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, 'தாதா! இனிமேல் நான் பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு வந்துவிடுகிறேன். என்னோடே பேசாமே இருக்காதே தாதா!...என்னெ விட்டுவிட்டுப் போகாதே தாதா!...அம்மா, அப்பா எல்லாருந்தான் என்னெ விட்டுப் போய்விட்டார்கள். நீ கூட என்னெ விட்டுட்டு போகாதே தாதா! இனிமே நான் இப்படி அசட்டுத்தனம் பண்ணவேமாட் டேன். எங்க பள்ளிக்கூடத்து வாத்தியார் வீட்டில் இன்னிக்கு சஷ்டிபூர்த்தி கல்யாணம், அங்கு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன். தாதா!...கோவிச்சுக்காதே"...என்று அழுது கொண்டே கூறினள்.

குழந்தையின் கலங்கல் கிழவரின் இதயத்தைத் துளாவியது. சகிக்கமுடியாத சங்கடம் செய்து வருத்தியதால் மீண்டும் மானவதி யைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு முத்தமிட்டுத் தன் துக்கப்புயலை ஒருவாறு தணித்துக்கொண்டு, வழக்கம்போல் பாட்டுச் சொல்லிக் கொடுத்து அவளுடைய கவனத்தை மாற்றினர். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரையில் சங்கீதாம்ருதத்தைப் பருகி இன்புறு அதன் வயம் கட்டுப்படாதவர்கள் யாரிருக்கிருர்கள்? ஆனந்தமாய் கானடா ராகத்தை ஆரம்பித்து அவருடைய மதுரம் குறைந்த

கண்டத்திலும் மூன்று ஸ்தாயிகளிலும் அபூர்வமாகச் சஞ்சாரம் செய்து பாடுவதைக் கேட்டு மானவதி அப்படியே லயித்துப்போய் கிழவரின் முகத்தைப் பார்த்தபடியே உட்கார்ந்தாள். "எனக்கு இம்மாதிரி அழகாகப் பாட வருமா!" என்ற ஒரு ஏக்கம் அவள் மனத்தில் போராடியது.

3

அடங்கா வியப்பும் அலறும் ஆத்மாக்களும்

"அடேயப்பா! நான் இதுகாறும் இந்தமாதிரியான இடத்தைப் பார்த்ததேயில்லை. அதோடு "இந்த ஆஸ்பத்திரிக்குப் போய் பார்த்தாலே மூளை கலங்கிவிடும்!" என்று விசாலம் ஒரு சமயம் சொல்லியிருக்கிறாள். அதேபயத்திற்காக நான் இதுவரையில் வர மறுத்துவிட்டேன். இப்போது அது உண்மைதான் என்று தோன்றுகிறது. ஒவ்வொரு ஸ்வரூபங்களையும் பார்க்கப்பயமாக இருக்கிறதே. தினம் ஓயாமல் ஒழியாமல் இந்தப்ரகிருதிகளுடன் எப்படிப் பழகுகிறாயோ!" என்று வியப்பே வடிவாய் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி கூறினாள்.

இதைக்கேட்ட முகுந்தன் சிரித்துக்கொண்டே "அம்மா! இதைப் பார்த்தா நீ இத்தனை பயந்துவிட்டாய்? சரிதான்போ! இவர்களெல்லாம் அரைவாசி குணமாகியவர்கள் என்று பெயர். இன்னும் பின்னால்போய்பாரு. முழுத்திறமும் காட்டும் ஆத்மாக்கள் அலறுவதும், பேரிடிமுழக்கம்போல் சிரிப்பதும், ரணவீரபத்திர சண்டியைப்போல் ஆக்ரோஷத்தில் கர்ஜிப்பதும், மகா பண்டிதன்போல் ஆனந்தமாகப்பேசுவதும், அபாரமான வித்வானைப்போல் பல்லவி ஸ்வரம்ஆலாபனையுடன் பாடுவதும், சண்டையிட்டு குஸ்திசெய்வதும், அடடா! சொல்லமுடியாதம்மா! நீ பயப்படாதிருந்தால் உள்ளே வா; இல்லாவிட்டால் அப்பாவுடன் வீட்டிற்குப்போய்விடு" என்றான்.

இதைக்கேட்ட தர்மாம்பாளின் மனத்திற்குள் பார்க்கவும் ஆசை ஊசலாடுகிறது; பார்த்தால் மூளை கலங்கிவிடுமோ என்கிற பயமும் ஒருபுறம் தலைதூக்குகிறது. இந் நிலைமையில் தன் மகனுடைய முகத்தைப் பார்த்தாள். முகுந்தன் கடகடவென்று சிரித்தவாறு, "அம்மா! வீட்டுக்குப்போய்விடு; இன்னொருசமயம் பார்க்கலாம்"

தர்மா:—பார்த்துவிட்டே போகிறேன் ...வா தம்பி!...

முகு:—வேண்டாம்மா! அப்பாவுடன் நீ போ! இன்னொருதரம் பார்க்கலாம்.

தர்மா:—இல்லே; இல்லே... நீ என்கூடவே வா! அப்படி பயமாயிருந்தால் நான் திரும்பிவிடுகிறேன்...என்று தன் மகனுடைய கையைப்பிடித்து இழுத்தாள். பிறகு தாயும் மகனும் உள்ளே போனார்கள்.

சற்றுதூரத்தில் போகும்போதே, ததரின்னு...தோம், தன...ன...சரி...ஸா...மரிஸா...ஸஸஸஸ...பபபபா...பதனிஸா... பர்ர்ர்ரீ...மள்ள்ள்ள...ரங்ங்ங்...கபதே...ஹிஹிஹி...எப்படி...நாலுகளே சவுக்கமுள்ள பல்லவி எப்படி...என்ற குரல் கேட்டது. தர்மாம்பாளுக்குச் சிரிப்பு தாங்கமுடியாது வந்தது. இம்மாதிரி பாடிய ஆத்மாவை உற்றுக் கவனித்தாள். பரிதாபம் நிறைந்த அந்த மனிதன் தன்னெதிரிலுள்ள சுவரோடு பேசியும் பாடியும் ஆடியும் சிரித்தும் ஆத்மார்த்தகமான ஆனந்தத்தை அனுபவிப்பதைப் பார்த்து வியப்புற்றாள்.

அடுத்த பக்கத்திலிருந்து 'அடி அடி அடி அடி...என்னைப் பெத்தத் தாயாரே! ஒன்னெப்பெத்த தந்தையாரே!...அவனெப் பெத்தப் பெத்தப் பாட்டியாரே...அடடடடடடடா!....கரிஸனி...மரிஸனி...பரிஸனி...ஹேஹேஹேஹேய்...மாடசாமி...இது எப்படி ...ஜபாஷு...பலேஜபாஷு'...என்று தானே மாரைத்தட்டிக் கொண்டான்.

இன்னொருத்தரிடமிருந்து..." ஐய்யையோ...அடபாவி...அட சண்டாளா...அடேய்...குத்து...கொலே...நறுக்கு...தலையைச் சீவி தள்ளு பனங்கா சீவராப்பலே. சீவறென் வாடா...டேய்...டேய் என்னடா பாக்கறே"....என்று பெரிதாகக்கத்திக் கொண்டே இவர்கள் பார்க்கும் கம்பிப்பக்கம் கையை ஓங்கிக்கொண்டு ஓடிவந்தான்.

அவன் ஆவேசத்துடன் வருவதைப் பார்த்ததும் தர்மாம்பாளுக்கு உண்மையிலேயே தூக்கிவாரிப்போட்டு 'ஐயோ தம்பி!'...என்று மகனுடைய கையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தடதடவென்று வெளியே வந்துவிட்டாள்.

முகு:—அம்மா! நான் அப்போதே சொல்லவில்லையா?...அவன் கம்பிக்கு உள்ளே இருப்பதை மறந்தாயா...சரி...சரி....இன்னும் மோசமானவைகளை நீ பார்க்கவேண்டாம். போய்விடு என்று பலவந்தமாகவே தன் தாயாரைக்கொண்டு காரில் ஏற்றினன்.

அதற்குமேல் ஒன்றும் சொல்லமுடியாமல் தர்மாம்பாள் வீட்டிற்குவந்தாள். அந்தம்மாளின் கண்முன்பு அந்த பைத்தியங்களின் உருவங்களே காக்ஷி கொடுத்தும் அந்த சப்தமே காதில் ஒலித்துக்கொண்டுமிருந்தன. 'ஐயோ பாவம்! யார் யார் வீட்டு மனிதர்களோ! யாருடைய மனது கலங்குகிறதோ! என்ன கோரமான காக்ஷி! இந்த எழுவெடுத்த ஆஸ்பத்திரி வேலைக்குப் போகவேண்டாமென்று முட்டிக்கொண்டேனே? கேட்டானு! அவனுக்கு தினம் தினம் இவைகளைப் பார்ப்பதால் மூளே குழம்பாதிருக்கவேண்டுமே!' என்கிற கவலேயும் பிடித்துக்கொண்டது.

4

தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கல்

"கஜபதி! கஜபதி!" என்று கூப்பிட்டுக்கொண்டே ஒரு நடுத்தர மனிதன் மானவதியின் வீட்டிற்கு வந்தார். மானவதிக்கு அவளுடைய தாதாவாகிய கஜபதியே தலை பின்னிக்கொண்டிருந்தார். 'இதோ வந்தேன்!' என்று கூறியவாறு வெளியேவந்தார். "ஓ! ஜோஸியரா! வாருங்கள்! வாருங்கள்!" என்று கூறியபடியே மானவதீ! நீ பக்கத்து வீட்டுப் பாட்டியிடம்போய் தலை பின்னிக்கொண்டு அங்கேயே விளையாடிக்கொண்டிரு. நான் பிறகு கூப்பிடுகிறேன்" என்றார்.

மானவதி கையில் சீப்புடன் பக்கத்து வீட்டிற்கு ஓடினாள். கிழவர் வந்தவரை உட்காரவைத்துவிட்டு உள்ளேபோய் ஒரு ஜாதகத்தைக் கொண்டுவந்து அவரிடம் நீட்டி 'என்ன போங்கள் என்னுடைய சிநேகிதனிடம் உங்களைப்பற்றி ஒரு நாள் வார்த்தை பலாக்கில்சொன்னாலும்சொன்னேன்; தினம் என் ப்ராணனைவாங்கி விடுகிறான். அவனுடைய ஜாதகத்தைப் பார்த்து சரியான பலனைக் கூசாமல் எழுதித் தரவேண்டுமாம். அதற்காகத்தான் நான்கு நாள் உங்கள் வீட்டிற்குவந்தேன். இதைச் சற்றுபாருங்கள்' என்றார்.

வந்தவர், ஜாதகத்தை வாங்கி உன்னிப்பாகப் பார்த்தவுடனேயே முகத்தைச் சுளித்துக்கொண்டு உதட்டைக் கடித்தார். இந்த முகபாவத்தைப் பார்த்ததும் கிழவருக்குத் திக்கென்று தூக்கி வாரிப்போட்டது. "என்ன ஜோஸியரே!...முகம் ஏதோமாதிரி ஆகிறதே. என்ன விஷயம்!" என்று வெகு ஆவலுடன் கேட்டார்.

ஜோஸி:—என்ன சார்! நானே இந்தத் தொழிலை விட்டுவிட்டேன்; ஏதோ நிரம்பவேண்டியவர்களுக்கு மட்டும் தாக்ஷிண்யத்தால் சொல்கிறேன். போயும் போயும் இந்த ஓட்டை ஜாதகத்தைக் காட்டிப் பலன் வேறு கேட்கிறீர்களே! ஜாதகனுக்குச் சொல்லக் கூடிய பலன் ஒன்றுமே இல்லை. எல்லாம் நிஷ்பலந்தான். நல்ல விஷயத்தைத்தான் ஜோஸியர்கள் சொல்லலாம். இந்தமாதிரி விஷயங்களைச் சொல்லவே கூடாது. ஆகையால் ஜோஸியர் அகப்படவில்லையென்று சொல்லுங்கள்-என்று கூறிஜாதகத்தைவீசிஎறிந்தார்.

கிழவரின் இதயத்தில் பலவித குழப்பங்கள் போராடி வதைப் பதை யாரறியமுடியும்? மெல்ல சமாளித்துக்கொண்டு..."ஓகோ! உபயோகமற்றஜாதகமா! அப்படியென்றால்? தரித்திரமா! வ்யயமா! நோய் படுத்துமா?...என்ன வரும்? நான் அன்னியன்தானே. என்னிடம்சொன்னால் என்ன! அந்த ஜாதகனும் சின்ன பாபாயில்லையே... சொல்லுங்கள்" என்றார்.

ஜோஸி:—என்னத்தைச் சொல்வது? உபயோகமில்லை, ஜாதகனுக்கு....என்று இழுத்து நிறுத்திவிட்டார்.

கிழ:—கண்டமோ...

ஜோஸி:—சரியான கண்டந்தான். தப்பினால் பிறகு புனர் ஜன்மம் எடுத்ததுபோலத்தான்.

கிழ:—அப்படியானல் ஆள் க்ளோஸ் என்று சொல்லுங்கள்.

ஜோஸி:—ஜோஸியன் வாயால் அம்மாதிரி சொல்லவேகூடாது மகா தோஷம். சரி, இதோடு விட்டுவிடும்...மானவதி சவுக்யம் தானே!...அவளுக்குக் கல்யாணத்தைச் செய்துவிடுவதுதானே, ஆதரவு கட்டாயம் ஏற்படுமே—என்ருர்.

இதற்குள் ஜோஸியரின் வீட்டிலிருந்து ஆள்வந்து 'மல்லிகாபுரி ஜமீந்தார் வீட்டிலிருந்து கார் வந்திருக்கிறது; உங்களைக் கூப்பிடுகிருர்கள்' என்ருன். உடனே ஜோஸியர், "சரி; கஜபதி! நான் வருகிறேன்; ஜோஸியன் அகப்படவில்லை என்று சொல்லிவிடும். இன்னும் சொல்பதினங்களில் மறையப்போகிறவனுக்குப் பலன் எதற்கு?... என்று கூறிச்சென்ருர்.

அவரை வழியனுப்பக்கூட முடியாது, கஜபதிக்கு நிலை கலங்கியது.'சொல்பதினத்தில் மறையப்போகிறவனு!...சொல்பதினத்திலா! ஐயோ! என் கண்மணி...என்னருமைக்கிளி...மானவதிக்கு இந்த திக்கும் போய்விடப்போகிறதா! அவள் அனதையா...பரதேசியா... திக்கற்றவளா...ஐயோ...என் குழந்தைக்காக நான் நூறு வயது இருக்கவேண்டும என்று விரும்புகிறேனே...எனக்கு அதுவுமா நிராசையாகிவிட்டது!'...என்று தனக்குள் மனமுருகித் தவிக்கிருர். கண்ணீர் ஆருய்ப் பெருகுகிறது.

இவருடைய பரிதாபத்தைக்கண்டு ஆற்றுவாரும் தேற்றுவாரும் யாரிருக்கிருர்கள்? 'என் மானவதிக்கு திக்கு யாரு?...திக்குயாரு... என் கண்மணியின் கன்ருவிபறிந்து ஒரு வேளை கஞ்சி கொடுப்பவர் யாரிருக்கிருர்கள்? சண்டாளன்! பெத்தமகளையும் விட்டுப்போக மனம் துணிந்ததே,பதின்மூன்றுவருஷங்களாக அகப்படாதமனிதனை இனி இந்த உலகில் காணமுடியுமா?...என் மானவதிக்காக என்னைக் கடவுள் வைப்பாரா...என் கண்மணிக்காக எனக்கு நேரப்போகும் கண்டம் விலகிப்போகுமா!" என்கிற கூறத்திறமற்ற துக்கத்தில் தன்னை மறந்து அப்படியே இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டார். அவர் நெஞ்சையள்ளும் துக்கத்தில், மானவதி அடுத்த வீட்டிற்குப் போனவள் இன்னும் வரவில்லையே என்றதுகூட மறந்துவிட்டது.

5

ஏக்கத்திற்கு முன்பு தூக்கம் ஏது?

'உலகத்தில் உன்னருளுக்கு இணை வேறு உண்டா! உன்னருளே வேண்டுகின்றேன். உனதடியே தஞ்சமென்றேன். உன் கருணாம்ருதம்போன்ற கீர்த்தனமே இன்பஸாரமென்று அல்லும்பகலும் அனவரதமும் துதித்துவரும் ஏழையைக் காத்து

ரக்ஷிப்பாய் கலைவாணியே! ஸ்ரீ மகாலக்ஷ்மியே! கமலநாதனே!'... என்று ராகம் இழுத்து ஹரிகதை பாகவதர்கள் சொல்வதுபோல் கையை ஆட்டிக்கொண்டே மானவதி சொன்னாள்.

பக்கத்திலிருந்த குழந்தைகள் சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்தார்கள். "மானவதி! இந்தமாதிரி குறும்புத்தனமெல்லாம் செய்ய யார் கற்றுக்கொடுத்தார்கள்? உங்க தாதா சங்கீத வித்வானையன்றி கதை செய்யும் பாகவதரல்லவே? வெகு அழகாக இழுக்கிறாயே!" என்று சிறுமிகள் கேட்டார்கள்.

மான:—எங்க தாதாவும் நானும் ஒரு கல்யாணவீட்டிற்குப் போயிருந்தோம். அங்கு ஒரு பாகவதர் கதை செய்தார். அதைக் கேட்டுக்கொண்டுவந்து அப்படியே என் தாதாவுக்கு வீட்டில்சொல்லிக்காட்டினேன். அவர் கேட்டுச் சந்தோஷப்பட்டார். அதையே உங்களுக்கும் சொல்லிக்காட்டினேன். அடாடா! நம்ம விளையாட்டில் நேரம்போவதே தெரியவில்லையே! நன்றாக இருட்டிவிட்டதே! தாதா திட்டுவாரே—என்று கூறிக்கொண்டே வீட்டிற்கு ஓடி வந்தாள். கிழவர் வழக்கத்திற்கு விரோதமாய் அந்த வேளையில் கயிற்றுக்கட்டிலில் படுத்துப் புலம்பிக்கொண்டிருப்பதைக் கண்டு தூக்கி வாரிப்போட்டது.

"தாதா!....தாதா!...இதென்ன இப்படித் தூங்குகிறீர்களே! விளக்கும் ஏத்தவில்லை; இருள்மயமாயிருக்கிறது. இந்த நேரத்தில் நீங்கள்பாடிக்கொண்டல்லவா இருப்பீர்கள்.என்ன உடம்பு தாதா?" என்று பக்கத்தில் உட்கார்ந்து அவரைத் தடவிக்கொடுத்தாள்.

தன்னினைவே அற்று சோகாக்ராந்தராய் படுத்துப் புலம்பும் கிழவருக்கு மானவதியின் குரலைக் கேட்டபிறகே சுய உணர்வு உண்டாகியது. தூங்கி விழிப்பவர்போல் நடித்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டு, "அடாடா!...தூங்கியே போய்விட்டேனா! சற்று இளைப்பாக இருந்ததால் படுத்துக்கொண்டேன். சனியன் பிடித்த தூக்கம் என்னை இழுத்துவிட்டது. கண்ணு! இப்பதான் வருகிறாயா!" என்று கூறியவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு எழுந்தார்.

மானவதி உண்மையிலேயே தாதா தூங்கிவிட்டதாக நம்பினாள். விளக்கேற்றி, தம்பூராவை எடுத்துவைத்து, தாதாவை கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து உட்காரவைத்தாள்.

கிழவருடைய இதயக் கடலில் கொந்தளிக்கும் பயங்கர அலைகளை இச் சிறுமி எங்ஙனம் அறிவாள் பாவம்! அவளுடைய சந்தோஷத்திற்காக கிழவர் தம்பூராவை மீட்டி ச்ருதி சேர்த்தார். தொண்டையைக் கனைத்துக்கொண்டு மோகனராகத்தை மனமுருகக் கர்ணாமிருதமாய்ப் பாடியபின் தன் மனோபாவத்தை பகவானிடம் முறையிடுவதுபோல் கண்ணில் நீர் தேங்க இதயத்தில் குமுறிவரும் விசனத்துடன், "எவருரா...நினுவினா...கதி மாகு எவருரா"...என்ற கீர்த்தனத்தை ஆவேசத்துடன் பாடினார்.

தெலுங்கு கீர்த்தனத்தின் அர்த்தம் தெரியாத குழந்தை "தாதா! பாட்டு ரொம்ப நன்றாயிருக்கிறது. இதை ஏன் எனக்கு இன்னும் சொல்லித்தரவில்லை!" என்று களங்கமற்ற பார்வையுடன் கேட்டாள்.

கிழவரின் மனத்துடிப்பில் என்ன பதில் சொல்வதென்றுகூட தோன்றவில்லை. பின்னும் சில பாட்டுக்களைப் பாடிப் பின் எழுந்தார். அவருக்கு சாப்பாடே பிடிக்காததால் குழந்தைக்கு சாதத்தைப் போட்டுவிட்டுத் தான் பசிக்கவில்லை யென்று கூறிப் படுத்தார். தூக்கமென்பது எங்கிருக்கிறதோ! அவருடைய இதயத்தைப் பீறிக் கொண்டு வரும் பெருமூச்சு ஒன்றுதான் அந்த நிசப்தத்தையும் குலைத்துக்கொண்டு ஒலித்தது.

குழந்தை விளையாடிய அலுப்பில் உடனே தூங்கிவிட்டாள். இரவு முற்றும் தூக்கம் பிடிக்காது உலாவியபடியே "என் கட்டை மறைந்தபிறகு என் கண்மணியின் கதி என்னவாகும்? இந்த உலகத்தில், அவளை எந்த மனித திக்கில் கடவுள் வளர்க்கப்போகிறானோ தெரியவில்லை. "சர்வதர்மான்பரித்யஜ்ய" என்கிற தத்துவத்தை மனது அறிந்தும் அஞ்ஞானமாகிய சேற்றில் என்னை இழுத்துச்செல்கிறதே! பெண்குழந்தையாயிருப்பதால் என் கவலை அதிகரிக்கின்றதே... பெத்த படுபாவி இவ்வித பரிபவம் செய்துவிட்டுப் போவானா! இது பரியந்தம் தேடித் தேடி புலன் விசாரித்தும் ஒன்றுமே கிடைக்கவில்லை. அந்த பாவி உயிருடன் இருக்கிறானா! இறந்துவிட்டானா! என்றுகூடத் தெரியவில்லையே!" என்று எண்ணமிட்ட வண்ணம் கொடிய இரவைத்தள்ளுகிறார். ஆனால் அது அசையாது நின்றது.

6

ஜாதகப் பலனோ! பாதக விளைவோ!

வழக்கத்திற்கு விரோதமாக மானவதி அதிகாலையிலேயே எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். தன் தாதாவைப் படுக்கையில் காணவில்லை. சந்தடி செய்யாமல் எழுந்துவந்து வெளிப்புறம் எட்டிப் பார்த்தபோது தாதாவும் வேறு ஒரு தலைப்பாகை ஆசாமியும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு ஒருவிதமான அச்சத்துடன் கதவருகிலேயே நின்றாள்.

வந்த மனிதன் கிழவருக்குத் தெரிந்த மற்றொரு ஜோஸியன். அவன் ஜோஸியத்தையே தொழிலாகக் கொண்டு பிழைப்பதால் தடபுடல் பேர்வழியாகவிருந்தான். "உம்...என்ன பைத்தியக்காரத் தனம்! பரிகாரபாவனு, பரிகாஸமாவது! இந்த ஜாதகனுக்கு ஆயுஸே முடிந்துவிடுகிறது. இதை இனி அந்த ஆண்டவனே மாற்றினால் தான் முடியும். எவனோ கொடுத்தானும்; எதையோ வைத்துக்

கொண்டு நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும், நான் இப்போது ஜோஸியம் பார்க்கவா வந்தேன். நான்வந்த விஷயத்திற்குப் பதில் சொல்லுங்கள்'' என்று அலக்ஷியமாகக் கேட்டான்.

கிழவர் முதல்நாள் தன் ஜாதகத்தைப் பார்த்துப் பலனறிந்தது முதல் 'இது சரியா?' என்று அறிவதற்கு மற்றொரு ஜோஸியனிடம் காட்ட வேண்டும் என்று எண்ணியிருந்தார். இந்த ஜோஸியர் கிழவருக்கு அதிகமான பரிச்சயமில்லை யெனினும் தெரிந்தவராக இருந்தார். அவர் ஒரு

ஜமீந்தாரின் ஆஸ்தான ஜோஸியராகவிருக்கிறார். அந்த ஜமீந்தாரின் மகளுக்குச் சங்கீதம் சொல்லிக்கொடுக்க யோக்யமான நல்ல மனிதன், வயதானவனிருந்தால் வேண்டுமென்று அவர்கள் ஜோஸிய

ரிடம் சொல்லியிருந்ததாலும், இந்த கிழவரே அதற்குத் தகுந்தவர் என்று தோன்றியதாலும், இன்று அதிகாலையில் வந்தார். கஜபதியின் மனக்கொதிப்பையும் இதயத் துடிப்பையும் யார் அறியமுடியும்? இவரிடமும் தன் சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொண்டபின்பு கவலையும், மரண தேவதை தன்னைச் சமீபித்துவிட்ட பயங்கர விசனமும் ஆயிரம் மடங்கு அதிகரித்தன.

ஜோஸியருக்குப் பதில் சொல்லவும் முடியாது தத்தளித்தார். உடனே ஜாதகம் பிறருடையது என்று சொல்லியது நினைவிற்கு வந்ததும் சற்று சமாளித்துக்கொண்டு "இவ்வளவுதானு அந்த மனிதனுக்கு ஆயிசு! உம்...உலகவாழ்க்கையின் நிலைமையே நீர்மேல் குமிழிதானே!" என்று ஒருவிதமாக முற்றுப்புள்ளி வைத்தார்.

"எனக்குச் சாவு நெருங்கியிருக்கும் சமயம் பாட்டு கற்றுக் கொடுத்துதான் என்ன லாபம்? சங்கீதக் கலையின் ஸாரத்தைக் கசக்கிப் பிழிந்து ஊட்டுவதற்கு இனி நான் அருகனு!" என்று நினைக்கும் போது சங்கடம் அதிகரித்தது..."சரி...நான் யோசித்து நாளைக்கு வந்து சொல்கிறேன்" என்றூர்.

ஜோ:—யோசனை என்ன சார்! பெரிய மனிதர்கள் வீட்டில் தொழில்கிடைத்தால், எவ்வளவு லாபம் தெரியுமா! பரதேசிக் குழந்தைக்கு ஒரு நல்ல ஆதாரமும் சொத்தும் கிடைக்குமய்யா!... மாதம் சொளை சொளையாக 50 ரூபாய் சம்பளம் வாங்கித்தருகிறேன். இக்காலத்தில் 5 வீட்டில் பாடம் சொன்னுல்கூட தொண்டைகிழியக் கத்துவது மிஞ்சுமேயன்றி 50 ரூபாய் கிடைப்பது குதிரைக்கொம்பாக இருக்கிறது. நல்ல வருமானத்தைக் கைவிடாதேயும். நான் வருகிறேன். நாளைக்கு நல்ல நாளாக இருக்கிறது. சிக்ஷையை ஆரம்பித்துவிடும்" என்று சொல்லிச் சென்றூர்.

கிழவரின் மனக்குழப்பத்திற்குமுன்பு 50 ரூபாயும் ஆதாவும் ஒரு பொருட்டாக நிற்கவில்லை. "இனி என் கண்மணிக்கு என்ன கதி நேருமோ...ஜமீந்தார் வீட்டு சேவை கிடைத்தாலும் என் கண்கள் மூடினபிறகு என்னருமை மானவதியை அவர்கள் காப்பாற்ற வேண்டுமென்று என்னகடமை? பணச்செறுக்குக்கு முன்பு என் குழந்தை எழ்மை நிலையில் பரதேசியாய் நின்று தவிக்குமோ!... அன்றி அடிமையே ஆய்விடுமோ!...அல்லது அக்ரமமாகப் பணத் திமிருடன் என் கண்மணியை இம்சிப்பார்களோ!...என்ன நடக்குமென்று என்ன நினைப்பது? ஒரு அனுதைக் குழந்தையைக் காப்பாற்றிக் கரைசேர்க்கவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு எப்படிவரும். ஏழை என்றல் இளப்பம்தானே உண்டாகும். பணத்தில் நிறைந்து பதவியில் திளைந்து, நாம் என்கிற செறுக்குப்பிடித்த எந்த மனிதர்களுக்கும் உள்ளம் ஊழலாயும் கடினமானதாயும் இருக்குமேயன்றி பரிசுத்தமாயும் தூய க்ருபாமந்திரமாயும் இருக்கவே முடியாது... இதுதான் தினம் தினம் உலகில் காணும் இயற்கையின் காக்ஷியாகி

விட்டது. என் கண்மணியின் வாழ்க்கையை பயங்கரத்தில் விட்டுப் போகாமல் காக்கும் கடமையல்லவா என் தலையை அழுத்துகிறது?...

என்று ப்ரமாதமான யோசனையில் ஆழ்ந்திருக்கையில் மானவதிக்கு விவரம் ஒன்றும் புரியாது ஓடிவந்து தாதாவைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு "தாதா! பல்தேய்க்கவில்லை? முகத்தை அலம்பக்கானுமே!...யாருக்கு தாதா அல்பாயுஸ்!...யார் செத்துப் போய்விடுவாளாம்!....என் நீ இப்படிக் கவலைப்படுகிறாய்?" என்று தன் குழந்தைச் சுபாவத்துடன் கேட்டதும், கிழவரை அப்படியே தூக்கி வாரிப்போட்டது. 'அவள் விழித்துக்கொண்டு இவைகளைக் கேட்டுவிட்டாளே!' என்றதை அறிந்ததும் அவரிருக்கும் இடம் படீரென்று வெடித்துச் சுழலுவதுபோல் தோன்றியது.

7

பெற்ற மனத்தின் பவித்ர அன்பு

முகுந்தன் அன்று வெகு நேரங்கழித்துத்தான் வீட்டிற்கு வந்தான். அவன் தகப்பனர் பத்திரிகை படிக்கும் ஆனந்தத்தில் உலகையே மறந்தார். ஆனால் தாயோ, தன்னருமை மகன் இன்னமும் வரவில்லையே! நேரமாகிவிட்டதே என்கிறபெரிய கவலை தோய்ந்த நெஞ்சத்துடன் உள்ளுக்கும் வாசலுக்கும் உலாவுகிறாள்; இருப்புகொள்ளவில்லை.

பத்திரிகை படித்து நிம்மதியாகவிருக்கும் கணவனிடம் போய் "இதென்ன படிப்போ! மணி 11 அடித்துவிட்டதே, இன்னும் தம்பி வரவில்லையே! டெலிபோனாவது செய்யக்கூடாதா? இதென்ன பைத்தியக்கார ஆஸ்பத்திரியோ! எனக்குப் பிடிக்கவே இல்லை, முதலிலேயே இந்த வேலை வேண்டாமென்று முட்டிக்கொண்டேனே, என் வார்த்தை ஏறிற்று!...பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் போய்பார்த்தால்கூட பயித்தியம் பிடித்துவிடுமாமே!...எங்கே அவனுக்கே...ஏதாவது....

என்று இழுத்ததைக்கண்டு அவருக்குக் கோபமும் வெறுப்பும் உண்டாகி "சரி! சரி!...மறுபடியும் உன்னுடைய பல்லவியை ஆரம்பித்துவிட்டாயா! உன் பிள்ளைதான் அதிசயமான டாக்டராக இருக்கிறானே! அங்குள்ள அத்தனை பேர்களுக்கும் வராத விசித்ரம் உன் மகனுக்குத்தான் வந்துவிடுமாக்கும். வேலையென்றால் அதைச் செய்துவிட்டுத்தானே வரவேண்டும். போய் உன் காரியத்தைக் கவனி; அவன் சின்ன பாபாவா!'...என்று ஒரு போடு போட்டார்.

தா:—ஆமாம்!...என் வாயை அடக்குவதற்குத்தான் தெரியும். அவன் பாப்பாவா என்று சொல்லத்தெரிகிறதே. அவன்தான் பெரிய வனாகிவிட்டானே. அவனுக்கொரு கல்யாணத்தைச்செய்து கண்ணு

றக்கண்டு களிக்கவேண்டுமென்பதுமட்டும்மறந்துவிடுகிறது. கல்யாணத்தை நினைக்கும்போது அவன் பாப்பாவாகத் தோன்றுகிருனே?

கணவர்:—ஏதுடா உபத்திரவம்!...அதோ! கார் ஹாரன் கேட்கிறது. அவன் வருகிருன்போலிருக்கிறது. நீ பேசாமலிரு, எல்லாம் எனக்குத்தெரியும். பிள்ளை ப்ரம்மச்சாரியாயிருக்கும் வரையில் கல்யாணம் செய்யவில்லை என்று தொந்தரவு செய்வாய். கல்யாணமாகிய பிறகோ, "நாட்டுப்பெண் வலையில் மகன் விழுந்துவிட்டான்; என்னை லக்ஷ்யமே செய்வதில்லை. அந்தப்பெண்ணும் வெகு தைரியமாயும், மரியாதைகெட்டத்தனமாயும் நடக்கிருள். அடக்கமில்லை. வேலை செய்வதில்லை." என்றெல்லாம் நீயே பல்லவி ஸ்வரத்தோடு பாட வந்து விடுவாய், போயேன்-லோகமே இப்படித்தான்—என்று ஒரேயடியாக அலக்ஷியமாய் கூறினர்.

இதற்குள் முகுந்தன், 'அப்பாடா!' என்று ஒரு பெருமூச்சுடன் உள்ளே வந்து தன்னறைக்குச் சென்றுன். தன் கையினுலேயே மகனுக்கும் கணவனுக்கும் சாப்பாடு போட்டால்தான் தர்மாம்பாளுக்குத் த்ருப்தியாகும். சில செல்வச் சீமாட்டிகளைப்போல் வீட்டிலுள்ள வேலைகளையெல்லாம் வேலைக்காரர்கள் செய்வதுதான் பெருமை, காலத்தின்நாகரீகம் என்று நினைக்காமல், வேலைக்காரர்கள் பல பேர்கள் இருப்பினும் தன் ஒரே குமாரனுக்கு வேண்டிய சகல வேலைகளையும் தானே கவனித்துச் செய்வதில் மிகவும் மகிழ்ச்சி கொண்டிருந்தாள். அப்படியே கணவனின் பணிகளிலும் பின்னடையமாட்டாள்.

முகுந்தனுக்கு இலைபோட்டுவிட்டு உள்ளேவந்தாள். முகுந்தன் உடைகளை மாற்றிக்கொண்டு சாப்பிட வாராமல் சாய்வான நாற்காலியில் சாய்ந்திருந்தான். தர்மாம்பாள் "ஏண்டாப்பா! இன்னும் அகாலமாகிறதே. வாயேன்" என்றுள்.

முகு:—அம்மா! எனக்கு இனி சாப்பிட்டால் உடம்புக்கு ஆகாது. பால்மட்டும் கொண்டுவா! போதும்—என்றுன்.

பெற்ற பிள்ளையாயினும் எதிர்த்துப்பேசி வற்புறுத்த அவள்மனம் இசையவில்லை. எது சொன்னுல் எப்படி கோபம் வந்துவிடுமோ! என்று பயந்த சுபாவத்தை உடையவளாதலால், மெல்லிய குரலில் "இன்று லேசாக சீரகம் மிளகு வைத்த ரஸமும் துவையலுந்தான் செய்திருக்கிறது, ஒரு வாய் சாப்பிடேன்" என்றுள்.

முகு:—வேண்டாம்மா! பால் கொண்டுவா—என்றுன். தாயார் அதற்குமேல் பதில் சொல்லாமல் பாலைக் கொண்டுவந்து கொடுத்தாள். முகுந்தன் அதைக் குடித்துவிட்டு ஏதோ புத்தகங்களைப் புரட்டவாரம்பித்தான்.

தர்மாம்பாள் படுக்கச்சென்றுள். மகனிடம் கல்யாண விஷயமாகப் பேசவேண்டும் என்று எத்தனையோதரம் ப்ரயத்தனப்பட்டும் தன் சொந்த மகனுக விருப்பினும் அவன் சற்று கோபமும் ஆத்திரமும் உடையவனுகையால் மரியாதைக்குக் கட்டுப்பட்டிருந்

தாள். நாள் ஏறஏற அவளுடைய கவலையும்ஏறிக்கொண்டேயிருந்தது. 'எனது கண்ணால் மருமகளைப் பார்க்காமலேயேதான் இறந்து விடுவேனோ?' என்கிற கவலை அவளை இராப்பகல் வாட்டியதால் தேகமும் மெலிந்துவந்தது. நித்திரை கொள்ளாது புரண்டுபடுத்து எதிர்காலத்தைப்பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்ததில் பொழுது மலையாக வளர்வதுபோல் தோன்றியது.

8

அதிர்ஷ்டமில்லா அபாக்யப் பிறவி

கஜபதி அதிர்ஷ்டமில்லாத ஓர் காயகன். அவன் இதயத்திலிருந்து உருகிப் பெருகி ஓடும் சங்கீதத்தின் ஆனந்த ப்ரவாகத்தின் சிறப்பைப் பிறர் கேட்டுப் பரவசமடையமுடியாது, சாரீரத்தில் மத்தியில் ஏற்பட்ட கோளாறினால் இனிமை குறைந்தது. அதுவே அவனது வாழ்நாளின் இன்பத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்தது போலாயிற்று.

அதற்குமுன்பு சபைகளிலும், கல்யாண வீடுகளிலும் சமஸ்தானங்களிலும் ஏராளமான கச்சேரிகள் செய்து அளவற்ற கீர்த்தியையும், செல்வத்தையும் சம்பாதித்தான். ஆனால் அந்தப் புகழ் நிலைத்து ஓங்குவதற்குள் தன்னுடைய பணத்தின் குவியலையும், புகழின் சிகரத்தையும் எட்டிப் பார்த்துவிட்டதாக எண்ணி அவைகளைக் கரைக்கும் மார்க்கத்தில் அவனுடைய போதாக்காலச் சக்கரம் இழுத்தது.

சங்கீத உலகில் பிரசித்தியடைந்த பெண்கள் அவனை வலுவில் நேசித்து அவனிடமுள்ள சங்கீதத்தை அப்படியே உறியப் பார்த்தார்கள். நெருப்பும் காற்றும் சேர்ந்ததுபோல் அவன் வாழ்க்கையின் சூன்யத்தை மறைத்து மாயை தலைகாட்டி அறிவை அழித்து உடல் வலிமைகுன்றி நோய்வாய்ப்பட்டு வெகு விரைவிலேயே முற்றிலும் வேற்று மனிதனாகமாற்றி, 'இவனா இனிமையான சங்கீதமாரியைப் பொழிந்தவன்' என்று ஐயுறும்படிக்குச் செய்துவிட்டது.

நோய் தீர்ந்து பிழைத்து வருவதற்கும் கைவசமிருந்த செல்வமும் நோய்போல் கரைந்துபோவதற்கும் சரியாகிவிட்டது. சாரீரத்தின் இனிமை மடிந்தபிறகு சரீரத்தின் வளமை அதிகரித்து என்ன உபயோகம்? இதே ஏக்கத்தில் காயகனின் வாழ்வே பாழாகியது. மனைவியும் மடிந்தாள். தனது அருமைப் புதல்வியை ஒருவனுக்குமணம் முடித்துவிட்டுத்தான் பற்றற்ற ஏகாங்கிபோலானான்.

கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல், தன் வாழ்வின் இன்ப நாதம் படுகுழியில் வீழ்ந்து அழிக்கப்பட்டபின் அவனது சாரீரத்தில் எதிர்கால பயங்கரத்தின் விகாரம் குடி

கொண்டு தாண்டவமாடியது. பிறகு பரமசுத்தனைப் வைராக்யமான மனோ நிலையில் வாழ்வு திரும்பி மகளும் மருமகனும் சந்தோஷமாக இருக்கட்டும். நாம் அந்தப் பக்கம்கூட நெருங்கவேண்டாமென்று ஊர் திரிந்து பொழுதைப் போக்க எண்ணினான்.

இவனுடைய சாரீரத்தின் இனிமை மறைந்தபிறகு அதிர்ஷ்ட தேவதையின் கடாக்ஷமும் மதிப்பும் கூடவே மறைந்து சங்கீதக் கச்சேரி செய்யும் மார்க்கத்திலிருந்து தள்ளப்பட்டான். வீடு வீடாக பாட்டுசொல்லிப் பிழைக்க மனது சம்மதிக்காததால் மேற் குறித்த நிலையில் அலையும் சமயம், தன்னுடைய அருமை மகள் பிரஸவித்து ஜன்னியுடன் அவதிப்படுவதாயும் உடனே வரும்படியும் வந்த விஷம்போன்ற கடிதம் அவனை முற்றிலும் கலக்கிவிட்டது.

இவனுக்கே வெகு நாள் கழித்து வெற்றி பிறக்கும் நாளில் பெண் பிறந்தது. "அதுவாவது எங்கேனும் நன்றாக இருக்கட்டு மென்றால் அதுவும் என்னைச்சோதனைக்குள்ளாக்கிவிடுமோ?" என்று அலறிக்கொண்டு ஓடிவந்தான். காலக்கூற்றுவனின் சட்டதிட்டங் களுக்குமுன்பு பெற்ற மனது துடித்துக் கதறும் ஒலி கேட்குமா! பச்சை சிசுவையும், பெற்ற பிதாவையும், கட்டிய கணவனையும் கதறவிட்டு அந்த அபாக்யவதி உலகைவிட்டு மறைந்தாள்.

அந்த தம்பதிகளின் அன்யோன்ய பாவத்தின் அழகை எல்லை யிட்டுக் கூறமுடியாது. பூவும் மணமும் மணியும் ஒலியும் என்றால் மிகையாகாது. அந்தப் புண்ணிவானின் மனத்தில் "இக் குழந்தையே தன் மனைவியை பலி வாங்கவந்த காளியோ! எமனோ! ம்ருத்யுவோ!" என்று பலமாகத் தோன்றியதால் தன் மனைவியின் சவத்தின் கூட கதறிக்கொண்டு சென்றவன் மீண்டும் வீட்டிற்குவரவேயில்லை.

கிழவன் தேடாத இடம் பாக்கியில்லை. பச்சைக்குருத்து போன்ற குழந்தையின் பரிதாபமும் அதன் முகவசீகரத்தின் கவர்ச்சியும் கிழவனை முற்றிலும் அக் குழந்தைக்கு அடிமையாக்கி விட்டன. தன்னுடைய அந்திய காலத்தின் சோதனைக்கே இந்தக் குழந்தையை வைத்துவிட்டுச் சென்றதாக எண்ணினான். தானும் இந்த துர்ப்பாக்யப் பிண்டத்தை உதறிவிட்டு ஓடிவிடலாமா என்றும் அவன் மனது நினைத்தது. ஆனால்... ஆனால்.... அன்றலர்ந்த தாமரை மலரைப் பழிக்கும் தேஜஸுடன் பரப்ரம்ம ஸ்வரூபம்போல் படுத் துள்ள பச்சைக் குழந்தையின் பரிதாபம் இவன் எண்ணத்தைச் சிதறவடித்து தவிடுபொடியாக்கியது.

அக்குழந்தையின்மீது அளப்பரிய பாசம் நிமிடத்திற்கு நிமிடம் மலைபோல் வளர்கின்றதேயன்றி அணுவளவும் குறையவில்லை. அந்த குழந்தையின்பாதுகாப்பு அவனுக்குப் பெரிய கால்கட்டாக முடிந்த தால் அதை வளர்க்கும் பொறுப்பு பூராவும் அவன் தலையில் விழுந்தது. சன்யாசி பூனைக்குட்டி வளர்த்த கதையைப்போல் குழந் தையின் போஷணைக்காகத் தன் விலைமதிப்பற்ற சங்கீதத்தை-ஒரு காலத்தில் இவனுடைய உயிர் நாடியாயிருந்த சங்கீதத்தை-இன்று

விடுவிடாகவினியோகம்செய்துஅதில் கிடைக்கும் சிறியஊதியத்தை மகிழ்வுடன் பெற்று குழந்தையை வளர்த்துவரும் முறையில் ஒரே ஊரிலில்லாது பல ஊர்களையும் சுற்றினான்.

மானவதியை வளர்க்க அவன் பட்டபாடு பகவானுக்கே வெளிச்சம். பிணத்தோடு பிணமாகச் சென்ற மனிதன் என்ன வானானே இறைவனுக்குத்தான்தெரியும். தினம் பத்து வீட்டில் பாட்டுச் சொல்லிக்கொடுத்தும் மாதம் 35 ரூபாய்தான் கிடைத்தது. சில சமயம் அதுவும் இல்லாது திண்டாடியதுமுண்டு.

எந்த தொழிலில் காலை வைத்தாலும் போட்டியும் பகையும் தொடர்ந்து வருவது சர்வ சகஜமல்லவா! அதேபோல் கஜபதிக்கும் உண்டாகி பிழைப்பில் மண்ணைப்போட பலர் முன்வந்தார்கள். அம்மாதிரி பகை முற்றும்சமயம் கஜபதி தன் கர்ம வினையை எண்ணி பேசாது வேறு ஊருக்குப்போய் பிழைக்க வழி தேடுவான்.

இவ்விதமாகக் காலம் கடத்திவரும்போதும் மானவதியின் தகப்பனைத் தேடியலைவதை விடவில்லை. அதோடு, தனது மரணம் கிட்டிவிட்டதை யறிந்ததும் "என் உயிர் இதே ஏக்கத்தினால் இன்னும் சீக்கிரம் போய்விடுமோ! என் கண்மணிக்கு ஆதரவே இல்லாது நடுவீதில் நிற்கும் பயங்கர கதி வந்துவிடுமோ!" என்ற கவலை அவன் இதயத்தைப் பிளந்து வதைக்கிறது. இந்த வேதனையில் பல் தேய்க்கவும் மறந்து கட்டைபோல் உறைந்த தேகத்துடன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு உயிர் இருக்கிறதா இல்லையா! என்கிற சந்தேகமே உதித்தது.

9

அறைகூவும் மரணமும் அலைமோதும் அன்பும்

அந்த ஆழ்ந்த சமாதி நிலைமையின் மர்மத்தை உலக மறியாத இளஞ் சிறுமி எங்ஙன மறியக்கூடும்? தன்னைப் பார்த்ததும் அவருடைய துக்கம் அதிகரித்து ஏன் இப்படித் துவண்டு போகிறார் என்கிறதையும் பேதைச் சிறுமி உணரும் சக்தி உண்டா! தானாகவே தாதாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு சில நிமிஷங்கள் முதுகின்மீதே சாய்ந்து படுத்திருந்தாள்.

தாதா ஒன்றும் பதில் சொல்லாததால், "ஏன் தாதா ஏதோ மாதிரி இருக்கே? ஜமீந்தார்களெல்லாம் நல்ல பணக்காரர்கள் என்று நீ எத்தனையோதரம் சொல்லியிருக்கிறயே தாதா! ஜமீந்தார் வீட்டிலிருந்து உனக்கு நல்ல சமயம் கிடைக்கச்சே ஏன் பேசாமே அனுப்பிவிட்டாய்!...யாருக்கு தாதா! அல்பாயுஸ் என்று அவர் சொன்னார். தாதா!...ஜமீந்தார் வீட்டிற்கு நீ பாட்டுச் சொல்லித் தர ஒப்புக்கொண்டால் நிறைய பணம் கிடைக்கும். பொங்கல் பண்டிகைக்குள் எனக்கு நல்ல பாவாடை சொக்காய், நகைகள்

எல்லாம் பண்ணலாமே தாதா !...என் அழறே !...நீ அழுதா எனக்கும் அழுகை வறது !...பல்லுகூட தேக்காமே என்ன தாதா பண்றே !"...என்றாள்.

அதுவரையில் இந்த உலகத்திலேயே இல்லாதவர்போல் தன்னிலை யழிந்து உட்கார்ந்திருந்த கிழவருக்குக் குழந்தையின் வார்த்தை ஒரு புத்துணர்ச்சியைக் கொடுத்தது. அத்தனை விசனத்திலும் அவளிடம் உள்ள அளவிலாத ப்ரேமையின் ஜ்வாலை அவரைத் தட்டி எழுப்பியதுபோல் இருந்தது....

சடக்கென்று விழித்துக் கொண்டவர்போல் "ஹா !....என் கண்மணி மானவதியா !...அட திருட்டு நாயே !...நீ இதுக்குள் எழுந்துவந்தாயா !" என்று கூறியபடியே சிறுமியை மடியில் இழுத்துப் போட்டுக்கொண்டு பல முத்தங்களிட்டு அப்படியே மீண்டும் நெஞ்சை அடைக்கும் சோகத்தில் மௌனமானார்.

மான:—என் தாதா !...திடீர் திடீர் என்று கண்ணை மூடிக் கொண்டு யோசனை பண்ணுகிறயே !...என்னயோசனை தாதா !... ஏதாவது புதிய பாட்டுபற்றி நினைக்கிறயா !...

கிழ:—ஆம் !...ஆம் !....கண்ணூ !...கண்ணை மூடிக்கொண்டு பகவானை ப்ரார்த்தனை செய்தால்தான் அந்த ப்ரார்த்தனையின் கீதம் அப்படியே உருவாகி ஒரு அழகிய மெட்டில் அமைந்து இதயத் தகட்டில் பதிந்து அபூர்வமாக ஒலியை அள்ளி வீசும். அதைத்தான் இப்போதும் யோசிக்கின்றேன்....இதோபாரு !....ஜகன்மோகினி ராகத்தில் ஒரு பாட்டு வேண்டுமென்று அந்த ஜகன்மோகன கோபாலனை வேண்டினேன். அவர் இப்போதுதான் அருள்செய்ய ஆரம்பித்தார். (அதற்குள் நீ சமாதி நிலையைக் கலைத்துவிட்டாய் !.... இதோ பாடுகிறேன் கேளேன்...)

ஜகன்மோகினி ராகம்: ஆதி தாளம்.

ஜகன்மோகன் சுகுமாரா க்ருஷ்ணு
ஜகதீசனே கண்பாராய் பரிவுடன் விரைவினில் ஜெய—ஜ

மான:—தாதா!...தாதா! இந்த பாட்டை இப்போதே எனக்குச் சொல்லிக்கொடுத்துவிடு...நான் என் சினேகிதைகளுக் கெல்லாம் சொல்லிக் கொடுத்துவிடுகிறேன்...மேலேசொல்லு தாதா !...என்று தன் முழு ஆவலையும் காட்டிக் கேட்டாள்.

கிழவர் குழந்தையைச் சில சமயம் சமாதானம் செய்யும் வழி இதுவாகவே கைக்கொண்ட புதியமுறையில் பலதரம்வெற்றி பெற்றிருப்பதால் இப்போதும் அம்முறை பரிபூர்ண வெற்றியை அளித்ததுபற்றி சந்தோஷத்துடன், "கண்ணூ ! முதல் முதல் என் ராஜாத்தி உனக்கு சொல்லித்தாமலா பிறருக்குச் சொல்லுவேன், அந்த ஜகன்மோகன க்ருஷ்ணன் முதலில் பல்லவியைத்தான் கொடுத்திருக்கிறார். இன்னும் அனுபல்லவி, சரணம் ஒன்றும் கொடுக்க வில்லை. அதற்குள்தான் மனது கலைந்துவிட்டதே. இன்னொருசமயம்

கட்டாயம் அந்தகீர்த்தனையைப் பூர்த்திசெய்துத் தருவார். இப்போது நேரமாகிவிட்டது. பல் தேய்க்கலாம் வா!"...

என்று அவள் கவனத்தை மாற்றி அவளை அழைத்துச் சென்றார். இருவரும் பல்தேய்த்துப் பின் பாலேக்காய்ச்சி பகவானுக்கு அர்ப்பணம் செய்தபிறகு குழந்தைக்குக் கொடுத்து, தானும் பருகிப் பின் பெண்களைப்போல் மானவதிக்குத்தானே தலை பின்னிவிட்டார். தலைவாரிப் பின்னும்போதெல்லாம் அவர் கண்கள் மழையைப் பொழிந்துகொண்டே இருந்தன. சடக்கென்று திரும்பிப்பார்த்த மானவதி "ஏன் தாதா அழுறே!"...என்று வெகு பரிதாபத்துடன் கேட்டாள்.

கிழ:—ஒன்றுமில்லையம்மா! இன்னும் அந்த கடவுள் பாட்டை முடித்துத் தரவில்லையே என்று நினைத்தேன்; அழுகைவருகிறது... நான் வயதாகிய கிழவன் எதுவும் மனதுதாங்க சக்தியில்லை. சரி!... நீ தம்பூராச்ருதி சேரு; அதற்குள் நான் சமையலுக்கு ஏற்பாடு கிறேன்—என்று கூறிச்சென்றார்; ஆனால் சமையல் செய்ய முடியவில்லை.

மானவதி தம்பூராவை ஜம்மென்று மீட்டி ச்ருதி சேர்த்ததும், "தாதா! இப்போது தன்யாசி ராகமா...பிலகரியா...கேதாரமா... தோடியா...சாவேரியா...எந்த ராகத்தில் பாடினல் நன்றாக இருக்கும் தாதா!"...என்று கால நிர்ணயத்தையும் ராக சாஸ்திரத்தையும் ஒட்டிக் கேட்டாள்.

கிழவரின் உள்ளம் பூரித்தது. 'ஒருதரம் சொல்வதற்குள் பிடித்துக்கொள்ளும் சக்தியும், அதை மறக்காது வைத்துக்கொள்ளும் ஞாபக பலமும் எத்தனை உறுதியாயிருக்கிறது!' என்று வியந்தவாறு "கண்ணு!...இப்போது கேதாரம்...பிலகரி எதுவேண்டுமாயினும் பாடலாம். எங்கே பாடு" என்றார்.

குழந்தையின் கவனத்தைச் சங்கீதத்தில் திருப்பிவிட்ட கிழவர் மனத்தில் புகுந்துகொண்டு குடையும் புதிய பயங்கரம் மீண்டும் தலைதூக்கியாடத்தொடங்கியது. "எப்போது மரண தேவதை என்னை ஸ்வீகரித்து விடுவாளோ!...இந்தப் பரதேசிக் குழந்தைக்கு அதற்குள் ஒரு மனுஷ்ய ஆதரவு கிடைக்குமா!...ஏ...க்ருபாகரா!... உன்னுடைய பவித்திரமான இதயம் இவ்வேழைக் குழந்தையைக் கைவிடாது காப்பாற்றும் க்ருபாமந்திரமல்லவா! உன் உள்ளம் தயாவாரிதியல்லவா! உன்னருள் பெருக்கால் ஓர் ஆதரவைக் காட்டும்வரைக்கும் இந்த மகாபாவியின் உயிரை வைத்திருப்பாயா!"...என்று ப்ரார்த்தனை செய்கிறார். குழந்தையின் இன்பகானத்தைக் கேட்டுப் பரவசமாகியவாறு சமையலைச் செய்யவும் மறந்து தேகம் தள்ளாடுகிறது.

இன்னிலைமையில் அவருக்குத் தனிமையில் வாசலில் செல்லக்கூட ஒரு பயமும் நடுக்கமும் உண்டாகிவிட்டது. எந்த மோட்டார் தன்மீது ஏறிவிடுமோ! எப்படி எமன் தன்னைப் பிடித்துவிடுவானோ!

என்கிற பயம் பூராகப் பிடித்துக் கொண்டதால் சற்று யோசனை செய்தார். "மானவதி!...கண்ணு!...இங்கே வாம்மா!" என்றார்.

"மானவதி ஓடிவந்தாள். அவரை யறியாது பொங்கிவரும் அன்பும் துக்கமும் உச்சத்தை எட்டியது. மானவதியை இறுகத் தழுவி பல முத்தங்களையிட்டு உச்சிமோந்து அவள் தலையைத் தன் கண்ணீரால் நீராட்டினார். விம்மிவிம்மி எழும் சோகத்தை வெகு கஷ்டத்துடன் அடக்கி நெஞ்சத்தில் அழுத்திக்கொண்டு...... "திக்கற்ற உனக்கு தெய்வமே துணை...உன்னைப் படைத்த அந்த க்ருபாஸாகரன் உனக்கு எந்த நரனைப் பாதுகாப்பாளியாகக் காட்டி ரக்ஷிக்கப் போகிறானோ!" என்று எண்ணி உள்ளுக்குள் துடித்த வாறு சில நிமிடம் அவளை ஆலிங்கனத்திலிருந்துவிடாது அப்படியே ஐக்யமாகி நின்றார்.

பிறகு "நான் கொஞ்சம் வெளியில் போய்வருகிறேன். நீ பக்கத்துவீட்டில் இரும்மா; நான்வந்து சமையல் செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு மனத்தை தைரியம் செய்துகொண்டு வெகு வேகமாக நடந்தார். மனத்தில் தோன்றியுள்ள பீதியினால் எதிரில் மோட்டார் மோத வருவதுபோலும் பின்னால் வண்டி வருவது போலும் ஒருபயம் உள்ளுக்குள் வதைத்துக்கொண்டே இருந்தது.

10

சந்தேக எண்ணமும் சம்சயக் காக்ஷியும்

நல்ல நடுநிசி. எங்கும் நிசப்தம் குடிகொண்டு உலகையே விழுங்கியது போன்று காணப்பட்டது. எப்போதோ ஒரு சமயம் ஒரு நாய் குரைப்பதும், சிறு குழந்தையின் அழுகுரலும் தூரத்தில் கேட்டன. கடிகாரம்மட்டும் தனது கடமையில் கண்ணுங் கருத்துமாயிருந்தது.

தர்மாம்பாள் மனது கலக்கத்தில் தூக்கம் பிடிக்காது படுத்துக் கொண்டிருக்கையில் தன் வீட்டிற்குள்ளேயே ஏதோ ஓசை கேட்பதை அறிந்து நடுநடுங்கினாள். மனத்தைச் சிறிது நிதானம்செய்துகொண்டு உற்றுக் கவனித்தாள். தங்களுடைய கஜானா அறையில் தான் சிறுகச் சிறுக சப்தம் வருவதை யறிந்து தேகமே கிடுகிடென்று நடுங்கியது. தன்னிருப்பிடத்தைவிட்டு அசைய பயமும் திகிலும் வாட்டுகின்றன.

"இங்கிருந்து கூச்சலிட்டால், கள்ளனயிருந்தால் ஓடிவிடுவான். எலி பெருச்சாளி முதலியனவாயிருந்தால் பிறர்கண்டு பரிகஸிப்பார்கள். என்னசெய்வது? எழுந்துபோய் சந்தடி செய்யாமல் பார்க்கலாமென்றால் தேகமே நடுங்குகிறதே!"...என்று குழம்பிப்போய்

கண்ணைத் திறப்பதும் பயத்தினால் மூடுவதும் தேகம் பூராவும் வெயர்வை குபீரென்று பொங்கி வழிய, படுத்திருக்கமாட்டாது படுத்திருந்தாள். பின்பு மனத்தைப் பலமாகத் தேற்றிக்கொண்டு மெல்ல எழுந்தாள். அவள் பின்னாலேயே யாரோ நிற்பதுபோலும் பயங்காட்டுவதுபோலும் ஒரு ப்ரமை தோன்றியதால் தன்னை மறந்து க்ரீச்சென்று கத்தியபடியே கண்ணைக் கெட்டியாக மூடிக்கொண்டு குப்புறப்படுத்தாள்.

அங்கிருக்கவும் பயந்து நடுங்கியவாறு மீண்டும் குலைப்புடன் எழுந்தாள். கண்களைச் சரியாகக் கசக்கிக்கொண்டு முன்னும் பின்னும் திரும்பிப் பார்த்தபடியே மெல்ல அந்த அறைக் கதவுவரையில் வந்தாள். கதவைத்திறக்க கைகள் நடுங்கின. சற்றுநின்று யோசித்தாள். மீண்டும் கதவைத்திறந்து வெளிப்புறம் பார்த்தாள்.

எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருந்ததாலும் கொடியவர்களின் இதயம்போல் இருள் கவ்விக்கொண்டிருந்ததாலும் தர்மாம்பாளின் மனத்தில் பின்னும் அச்சமும் திகிலும் உண்டாயின. விளக்கை ஏற்ற நினைத்தாள். இந்த வெளிச்சத்தைப் பார்த்து திருடன் ஓடிவிடப் போகிறானே என்று தோன்றியதால் அடிமேலடிவைத்தபடியே இப்படியும் அப்படியும் திரும்பிப்பார்த்து நடுங்கியவாறு கஜானா அறைப்பக்கம் போனாள்.

அவ்வறையில் சிறிய டார்ச்சுலைட்டின் வெளிச்சம் மினுக்கென்று தெரிந்தது கண்டு பின்னும் நடுங்கியவாறு கால்கள் உதற ஜன்னல் பக்கம் எட்டிப்பார்த்தாள். உள்ளுக்குள் ஆள் நிற்பது போன்ற நிழலைக்கண்டு அதற்குமேல் அவளால் தாங்கமுடியாது நாக்குழறப் பெருத்த கூச்சலிட்டாள்.

அடுத்த க்ஷணமே கஜானா அறையில் இருள் சூழ்ந்தது. கதவு படாரென்ற சப்தத்துடன் திறக்கப்பட்டு உள்ளிருந்து ஒரு உருவம் கம்பீரமாக வெளியேவந்து தர்மாம்பாளின் வாயை தைரியமாக இறுகப்பொத்தி "ச்சு...கத்தாதே"...என்று கூறியவாறு அவளை கஜானாரூமுக்குத் தள்ளிக்கொண்டு வந்துநிறுத்தி, விளக்கைப் பளிச்சென்று ஏற்றி கடகடவென்று சிரித்துக்கொண்டே, "அம்மா! திருடனைப் பிடித்துவிட்டாயே! சரியான பரிசு கிடைக்குமல்லவா?"....என்றது.

தர்மாம்பாளின் நிலை தடுமாறித் தலைசுற்றுகிறது. கண்களை நம்ப முடியாதுபார்த்தபடியே...'தம்பியா!..முகுந்தராஜனா..நிஜமாகவா!'... என்று குளறினாள். நல்லவேளையாக எல்லோரும் அயர்ந்து தூங்குவதால் இந்தம்மாளின் கூரல்கேட்டு யாரும் எழுந்துவரவில்லை.

"எம்மா...என்னைப் பார்த்தாலே சந்தேகமாயிருக்கிறதா! உன் சந்தேகம் தெளியப்பாரு...நன்றாகப்பாரு. பத்துமாதம் உன்னருமை வயிற்றில் வாஸம்செய்த பக்கா த்திருடன்தான் என்பதைத் தெரிந்துகொண்டாயா? இப்படி வா"...என்று சிரித்தபடியே எதிரில் நின்றான்.

தர்மாம்மாளின் வியப்பு எல்லை கடந்தது. "தம்பீ...நீயா..முகுந்த ராஜனு...என் இந்த!...என்று ஆரம்பித்ததும் முகுந்தன் "இனியும் பயப்படாதேம்மா...ஏன் இந்தராத்ரியில் இந்த அறைக்குவந்தாய்?... ஏன் இன்னும் தூங்கவில்லை...என்றுதானே கேட்கவாரம்பித்தாய்?" தூக்கம் வரவில்லை...வெகுநாட்களாக மனத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த ஆவலைப் பூர்த்திசெய்ய சமயம் பார்த்திருந்தேன். அது இப்போதுதான் கிடைத்தது. இதோபாரு...இந்த இரும்பு பெட்டிக்குள் ஒரு சிறிய பெட்டியிருக்கிறதே, அதைச் சற்று திற பார்க்கலாம்" என்றான்.

தன் கண்ணெதிரில் நிற்பது தன்னுருயிர் மகன் என்பதை யறிந்தும் முதலில் உண்டாகிய நடுக்கம் தீருவதற்குச் சில நிமிஷங் களாயின. பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு "தம்பீ! இந்த நடுநிசியில் எதற்காக இதை திறக்கும்படி கேட்கிறாய்? திடீரென்று உனக்கு இந்த யோசனை எதற்கு உண்டாகியது? வெளியே வா!... பொழுதுவிடிந்து பேசலாம்" என்று கையைப் பிடித்து இழுத்தாள்.

முகுந்தன் அதற்கு இணங்கவில்லை. "அம்மா!....காற்றுள்ள போதே தூற்றிக்கோள் என்கிற பழமொழியை மறக்கச் சொல்கிறாயா! தனந்தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம் என்பதை மறந்து விட்டாயா? இங்கு வாம்மா; இப்படி வாயேன்; இதைத்திறவேன்" என்று பச்சைக் குழந்தைபோல் கையைப் பிடித்திழுத்தான்.

திடீரென்று பாதிராத்திரி வேளையில் தன் மகன் ஒரு நாளும் இல்லாத திருநாளைப்போல் இவ்வாறு பெட்டியைத் திறப்பதும் ஏதோமாதிரி பேசுவதும் தர்மாம்பாளுக்கு சடக்கென்று விபரீத மான சந்தேகமும் கலவரமும் உண்டாக்கின. பைத்தியக்கார ஆஸ் பத்திரியில் இருப்பதால் மகனுக்கு ஒருவிதமான கோளாறும் இல்லா திருக்கவேண்டுமே என்று அவள் பயந்ததற்குத் தகுந்தாற்போல் இம்மாதிரிச் செய்வதால் அவளுக்கு உள்ளூற பயமே பிடித்துக் கொண்டது. மகனுக்கு ஏதோ மூளைக் கோளாறுதான் வந்து விட்டதோ,என்று நினைக்கும்போது அவள் தேகமே குபீரென்றுபற்றி எரிவதுபோல் வேதனை உண்டாகி உடம்பு கிடுகிடென்று நடுக்கம் எடுத்தது. மகனுடைய பிடியிலிருந்த தன் கைகளை மெல்ல விடுவித்துக் கொண்டு குழப்பமும் சந்தேகமும் தேங்கிய கண்களால் அவனை ஏற இறங்கப்பார்த்தாள். வினாடிக்கு வினாடி அவளுடைய சந்தேகம் அதிகரித்து முகத்தில் விபரீதமான களை பொங்குகிறது.

முகுந்தனுக்கு இதைப்பார்த்ததும் அவனையறியாது சிரிப்பு வந்ததால் கடகடவென்று சிரித்தவாறு தாயாரின் கைகளைப் பற்றிக் கொண்டு குழந்தையைப்போல் குதித்தான். இதைவிட வேறு இன்னும் என்ன வேண்டும்? "ஐயையோ! தம்பீ! இதென்னடா அநியாயம்!"...என்று பெரிதாகக் கத்திவிட்டாள். அவள் மனத்தில் செய்யும் சங்கடத்தைக் கூறவேமுடியாது பொங்கியது.

11

பாசப் பிணைப்பும் ஈசன் சோதனையும்

எங்கேயோ எழுந்து விசையாகச்சென்ற கஜபதி சில தெருக்களைத் தாண்டி ஒரு வீட்டின் வாசலில் போய்நின்று "சஞ்சீவி! சஞ்சீவி!"...என்று கூப்பிட்டான். உள்ளிருந்த ஒரு பெண்மணி "வாருங்கள்; அவர் இதோ வந்துவிடுவார்" என்று கூறி உட்காரச்செய்தாள்.

கலவரமும் குழப்பமும் நெஞ்சில் சல்லடைபோட்டுச் சலிக்கின்றது. வாட்டமே உருவாய் உட்கார்ந்திருக்கையில் சஞ்சீவி உள்ளிருந்து வந்ததும் கஜபதியின் சேவையைப் பார்த்துத் திடுக்கிட்டான். "ஓகோ! சொல்லியதுபோல் ஏதாவது செய்துவிட்டாயா என்ன!...உன் முகத்தைப்பார்த்தால் பைத்தியக்காரக்களை சொட்டுகிறதே. என்ன சமாச்சாரம்? எந்த கற்றுக்குட்டி ஜோஸியன் என்ன சொல்லிவிட்டான் சொல்லு" என்றான்.

கஜபதியினால் பதில் பேசமுடியாது தொண்டையை அடைத்துக்கொண்டு வரும் துக்கத்தில் பெருமூச்சும் சிறுமூச்சுமாகத் திணறியது. இந்த பரிதாபத்தைக் கண்ட சஞ்சீவி மனத்துடிப்புடன் "போடா போ!...இம்மாதிரி செய்யாதே. வீண் விசாரத்தை விலைகொடுத்து வாங்கவேண்டாம். வருவது வழிதங்காது. வரும்போது அனுபவித்துக் கொள்வதைவிட்டு முன் கூட்டியே தெரிந்துகொண்டு துன்பப்படுவார்களா! நீ இதே ஏக்கத்தில் குமுறிவிட்டால் அந்தப் பச்சைக் குழந்தையின் கதி என்னவாவது? நேற்று உன் வீட்டிலிருந்துதான் வருவதாக ஜோஸியன் சொல்லியபோதே உன் சமாச்சாரம் விளங்கிவிட்டது. உன்னுடைய அசட்டுத்தனந்தான் எனக்குப் பிடிக்கவேயில்லை" என்று வெறுப்புடன் கூறினான்.

கிழ:—சஞ்சீவி! நீ ஏதேதோ பேசுவதெல்லாம் என் காதில் விழவேயில்லை. முன்னதாகவே விபத்தை அறிந்து வேதனைப்படுவது மிகவும் அசட்டுத்தனமென்று நீ சொல்வதுபோல் நானும் பிறருக்கானால், கூடச் சேர்ந்து சொல்வேன். பகவான் என்காலில் கட்டியிருக்கும் அந்த நிர்பாக்யக் குழந்தையை அனாதரவாய்விட்டுவிட்டு நான் வாயைப் பிளந்து விடுவேனேயாயின் அப்போது அதன் கதி என்னவாகும்! வருவதை அறிந்து அந்தப் பரதேசிக்கு ஒரு ஏற்பாடு செய்துவிட்டால் என் நெஞ்சு வேகும். அதற்காகவே நான் நெடு நாட்களாய் எதிர்பார்த்திருந்தவாறு செய்தேன். அதை உன்னிடம் சொல்லவும், நீ முன்பு ஒருசமயம் எனக்குக் கொடுத்தவாக்கை நினைப்பூட்டவுமே நான் இப்போதுவந்தேன். அந்த விஷயம் என்னவாயிற்று? அதைப்பற்றி விவரம் ஏதாவது தெரிந்ததா!" என்றார்.

சஞ்:—விவரம் அறிவதற்கு நானும் படாதபாடுபடுகிறேன். ஒரு பொருளைக் கண்டுபிடிப்பது என்றாலே மகத்தான கஷ்டமாயிற்றே.

ஒரு மனிதனைக் கண்டு பிடிப்பது என்றால் சாமானியமாக ஆகக் கூடியதா! எங்கேயோ ஒரு ஊரில் யாரோ ஒரு ஜமீந்தார் இருக்கிறாராம். அவரிடம் அனேகம் வித்வான்கள் பண்டிதர்கள் காலக்ஷேபகர்கள் முதலியவர்கள் வந்து தமது திறமையைக் காட்டி சன்மானம் வாங்குகிறார்களாம். அங்கு இந்த மகாபாவியும் ஒரு அசல் சாமியார் உருவத்தில் வந்து கதை செய்ததாகக் கேள்விப்பட்டேன். இன்று இரவுதான் அங்குபோய் பார்த்துவரலாம் என்றிருக்கிறேன். நீயும் கூட வருகிறாயா!...

கிழ:—நானும் கட்டாயம் வரத்தான் வேண்டும். எத்தனை விரைவில் அந்த அயோக்யனைக் கண்டுபிடிக்க முடியுமோ, அத்தனை விரைவில் கண்டுபிடித்தாக வேண்டும். எனது மரணதேவதை என்னை நிமிடத்திற்கு நிமிடம் நெருங்கிவருவதுபோல் தோன்றுகிறது. எந்த திக்கை நோக்கினும் கூற்றுவன் என்னை அழைப்பதாகவே ஒரு பீதியுண்டாகிறது. சஞ்சீவி!... அப்படி நான் எனது செல்வத்தைவிட்டு திடீரென்று மறைந்துவிட்டால் என் கண்மணியை நீதான் காப்பாற்றவேண்டும். நீதான் அவளுக்கு கதி. உன் குழந்தை அவள் என்று எண்ணி அந்தப் பரதேசியைக் காப்பாற்றி நாம் ஏற்கெனவே பேசிக் கொண்டதுபோல் உன்குமாரன் விஜயரங்கனுக்கே விவாகத்தையும் செய்து காப்பாற்று. இதுதான் எனது கடைசி வேண்டுகோள். அந்தப் பரதேசிக் குழந்தையின் தகப்பனார் கிடைத்துவிட்டால் அவனிடம் சொத்தை ஒப்படைத்துவிடு. அப்போதும் நீயே அவளிடம் பெரிய மனதுசெய்து உன் மகனுக்கு விவாகத்தைச் செய்துகொள்ளு...செய்கிறாயா....சஞ்சீவி!...என் மரணப்பிணிக்கு நீயே சஞ்சீவி....என் கண்மணியின் நிராதரவான நிலைமைக்கு நீயே சஞ்சீவி...எனக்கு அப்படியே செய்வதாக வாக்குக்கொடு...கொடுக்கிறாயா?"...என்று கேட்கும் போது துக்கம் உச்சத்தை எட்டி விம்மிவிட்டான்.

சஞ்சீவி அவனைத் தேற்றிச் சமாதானம் செய்து, "கஜபதி! கலங்காதே. நம்மை எல்லாம் படைத்த ஆண்டவன் உறங்கவில்லை. அவன் பக்தபராதீனன்; ஏழைப் பங்காளன் அவனுடைய இதயம் சூனியமான—வரண்ட—பொருளல்ல...உத்க்ருஷ்டமான க்ருபா மந்திரம் என்பதை மறக்காதே! அவன் சர்வலோகத்திற்கும் ரக்ஷகன்; எல்லோரையும் காப்பாற்ற அவன் காத்திருக்கிறான். அவனை நம்பி அவன்மீது பாரத்தைப்போட்டு உன் கவலையை ஒழித்துவிடு. நடக்கிறபடியே நடக்கட்டும். வீணாகக் கவலைப்பட்டே சீக்கிரம் மறைந்துவிடாதே. நீ வீட்டிற்குப்போய் இரவு சரியாக 8 மணிக்கு ரயில்வே ஸ்டேஷனுக்கு வா! அதற்குள் என் வேலைகளை முடித்துக் கொண்டு கிளம்புகிறேன்" என்றான்.

கிழவனும் அதற்குச் சம்மதித்து எழுந்துபோகக் கிளம்பும் போது அவசரமாக ஒருவன் ஓடிவந்து "தாதா! ஐயையோ! மானவதி தானே சமையல் செய்யவேண்டுமென்று அடுப்பினருகில் சென்று

ளாம். பாவாடையில் தீப்பிடித்துக்கொண்டதாம். குழந்தை வீறிட்டதைக் கேட்டு எல்லோரும் ஓடிவந்து தீயை யொருவாறு அணைத்து அவளை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். தாதா! தாதா! என்றுதான் குழந்தை கதறுகிருள்" என்று சொல்வதை முற்றிலும் கேட்பதற்குள் கிழவருக்கு ப்ரக்ஞையே அற்றுவிட்டது. "ஹா!...என்ன! தீப்பிடித்துக்கொண்டதா! என் கண்மணிக்கா!....என் மானவதிக்கா!"...என்று ஒரே அலறல் அலறினர். அதற்குமேல் சரீரம், தடாரென்று வெட்டிச்சாய்த்த மரம்போல் பூமியில் விழுந்தது. இதைக்கண்ட சஞ்சீவியின் உள்ளம் பதினயிரம் சுக்கல்களாக உடைந்தது. "கஜபதி! கஜபதி!".... என்று அலறியவாறு தலையைத் தாங்கிக்கொண்டு உட்கார்ந்தான். அருகிலிருந்தவர்கள் கூடிவிட்டார்கள். கஜபதியின் கண்களில் நீர் ஆறுகப் பெருகி ஓடுகிறது. இக் கண்ருவிக் காக்ஷியைக்கண்டு சகிக்க யாருக்குத்தான் சக்தி யிருக்கிறது?

12

ஆசையின் வேகம் அவதியாய் முடிந்தது

தாதா வெளியே சென்றதும் மானவதி பின்னும் சிறிது நேரம் பாடியும் விளையாடியும் மகிழ்ந்தாள். தன் தாதா வருவதற்குள் எப்படியாவது,தான் சமையலைச் செய்துவிடவேண்டும் என்கிற ஒரு புதிய ஆசை திடீரென்று அச்சிறுமியின் உள்ளத்தில் உதித்த உடனே வெகு கெட்டிக்காரியைப்போல் ஒருகுடம் தண்ணீரைத் தூக்கமட்டாது தூக்கிக்கொண்டு உள்ளே போகும்போதே அவளால் முடியாது குடத்துடன் கீழேவிழுந்தாள்.

விழுந்த வேகத்தால் அடிபட்ட அவமானத்தையும் மீறிக்கொண்டு, தாதா வருவதற்குள் இந்த ஈரத்தைத் துடைத்துவிட்டு சமையலைச் செய்துவிடவேண்டும் என்கிற தடுக்கமுடியாத வேட்கையால் தன் நனைந்த பாவாடையைக் களைந்து வேறு உடுத்திக்கொண்டு, ஈரத்தைத் துடைத்துப்பின் ஏற்கெனவே அடுப்பில் தாதா வைத்திருக்கும் உலைநீரில் அரிசியைப் போட்டுத் தீயைக் கிளறி எரியவிட்டாள். அடுப்பில் கொதிக்கும் சாதத்தைப் பார்த்து மானவதியின் சந்தோஷமும் பொங்கிக் குதிக்கின்றது. தன் தாதா வந்ததும் தன்னை ப்ரமாதமாகக் கொண்டாடப்போகிருர் என்கிற பெருமையினுல் சாதம் அரிசியா, பதமாயிற்ரு? என்பதைக்கூடப் பார்க்கவேண்டுமென்று தெரியாத நிலையில் கொதித்தது. எடுத்துவிடவேண்டும் என்று மட்டும் அறிந்தாள். உடனே பிடிதுணியைப் பிடித்துக்கொண்டு தவலையை எடுக்கப் போகிருள். கொதிக்கும் கஞ்சி கையில் சுரீரென்று தெறித்ததால் "அப்பாடா!" என்று கூவி விலகுகிருள். இதே நிலைமையில் எப்படியும் சாதத்தை வடித்துக்

குழம்புக்கும் வைத்துவிடவேண்டும், தாதா தள்ளாதவராகிவிட்டதால் தானே அவருக்குப் பணிவிடை செய்யவேண்டும் என்ற ஒரு புதிய எழுச்சி அவள் மனத்தில் புகுந்ததின் வேகம் முறட்டு தைரியத்தைக் கொடுத்தது.

பிடிதுணியைப் பிடித்துக்கொண்டே சாதத்துத் தவலையைத் தூக்க முயன்றாள். அடுப்பு எரியும் வேகத்தில் பிடிதுணியில் தீப் பிடித்துக்கொண்டது. அது தாறுமாறாகத் தொங்குவதில் மானவதியின் பாவாடையில் அந்தத் தீ பரவியதைச் சிறுமி அறியாது சாதத்தவலையைத் தூக்க முயல்கையில் பயமும் சூடும் ஒன்று சேர்ந்ததால் தவலை தடாரென்று வழுக்கி விழுந்து சிதறிப்போய் விட்டது கண்டு, 'ஓ!' வென்று பெரிதாக அலறிப்போய்க் கதறினாள்.

இக் கூக்குரலைக் கேட்டு பக்கத்திலிருப்பவர்கள் ஓடி வந்து பார்த்து அவர்களும் இந்த விபத்தைக் கண்டு கூச்சலிட்டவாறு குழந்தையின் தீயைத் தண்ணீர்விட்டும் மண்ணைப்போட்டும் கசக்கியும் அணைத்தார்கள்.

இதற்குள் கிழவரைத் தேடிக்கொண்டு சிலர் ஓடினார்கள். டாக்டரைத் தேடிக்கொண்டு சிலர் ஓடினார்கள். "உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனால்தான் நல்லது; இல்லாவிட்டால் ஜன்னி கண்டுவிடும்" என்றார்கள் சிலர்.

"ஐயோ! பரதேசிக் குழந்தைக்கு இத்தகைய விபத்தும் வர வேண்டுமா! கிழவர் பார்த்தால் துள்ளித் துடித்து இதே தாக்குதலால் உயிரையே விட்டாலும் விட்டுவிடுவாரே...இதென்ன பரிதாபம்!" என்று சிலர் அங்கலாய்த்தார்கள். குழந்தைக்கு முகத்தில் ஜலத்தைத் தெளித்து உடம்பில் தேங்காயெண்ணையை வாரி வழிய விட்டார்கள். இதற்குள் டாக்டர் வந்து உடனே ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றுவிட்டார்..."என்ன அநியாயம்! மனித எண்ணத்தில் நினைக்காதவைகள் எல்லாம் ஒரு நிமிடத்தில் நடந்து பூகம்பத்தின் பயங்கரத் தாண்டவத்தைப்போல் கோரமாக்கிவிடுகின்றனவே!" என்று எல்லோரும் விசனித்தார்கள். மானவதிக்கோ ப்ரக்ஞையற்றது.

13

தாபம் தணிந்தது தீபம் அணைந்தது

"இத்தகைய விபத்தான செய்தியைக் கிழவரிடம் எப்படித் தெரிவிப்பது? இதைக்கேட்டுக் கிழப்ராணன் எப்படித் துடிக்குமோ! கிழவருக்கு ப்ரபஞ்சமே இந்த குழந்தைதானே. இதனிடம் அளப்பரிய வாஞ்சையை வைத்து இவளுக்காகவே உயிர் வாழ்பவராயிற்றே! எப்படிச் சொல்வது?" என்று தயங்கியும்,

மயங்கியும் பயந்தவனுய்ச் சென்ற மனிதன் வெகுநேரம் தத்தளித்த பிறகு முன்பு கூறியவாறு பதைபதைக்க நாக்குழறக் கூறினுன்.

பேரிடி முழக்கம்போன்ற இவ்வார்த்தையைக் கேட்ட கிழவர் அடியற்ற மரம்போல் சாய்ந்தவர், சில நிமிஷங்கள் வரையில் ப்ரக்ஞையே வராது கிடந்ததைக் கண்ட மற்றவர்களுக்கு குலை நடுக்கமுண்டாகியது. முக்யமாக சஞ்சீவிக்கு நிலைதடுமாறியது. 'மூச்சு வருகிறதா !' என்று மூக்கில் கையை வைத்துப்பார்க்கிறுன்; மார்பில் கையைவைத்துப் பார்க்கிறுன்.

கிழவரின் நிலைமை இவனுக்கு ரத்த ஓட்டத்தையே நிறுத்தி விட்டது. "உயிர் இருக்கிறதா! இல்லையா?" என்கிற சந்தேகம் தோன்றி வதைக்கின்றது. "என்னிடம் காரியமாகவந்த மனிதன் தன்னுயிரை இங்கேயே விட்டுவிடுவது என்றுல் என்ன கண்ராவி! எத்தனை பயங்கரம்! ஐயோ! என்னசெய்வேன்! என் பங்கில் பகவான் இருந்து இச்சமயம் இவருக்கு உயிர்ப்பிச்சையை அளித்துக் காப்பாற்றவேண்டும்! கடவுளே!...இந்த கண்டத்தில் மான வதியையும் இக் கிழப்ராணனையும் காப்பாற்றி எனக்கு மனச்சாந்தியைக் கொடுத்துவிடு. பிறகு உன் ஆட்சியைச் செலுத்து. ஜோஸியம் பார்த்த பரிபவம் இன்றே பலித்துவிடும்படிச் செய்யாதே" என்று மனமுருகி வேண்டுகிறுன்.

இதற்குள் டாக்டரை அழைத்துவந்தார்கள். டாக்டர் நன்கு பரிசோதித்துப் பார்த்துவிட்டு உதட்டைக் கடித்து 'ச்சூ' கொட்டியதைக் கண்ட சஞ்சீவியின் இதயத்தில் ஆயிரம் தேள்கொட்டியது போன்ற வேதனை உண்டாயது. "டாக்டர்! உபயோகமில்லையா?... சொல்லுங்கள்! சொல்லுங்கள்" என்று பரிதாபம் தேங்கிய பார்வையுடன் கேட்டான்.

டாக்:—உம்...கிழப்ராணன், ஏதோ திடீரென்று உண்டாகிய அதிர்ச்சியினுல் ரத்தக்குழாய் உடைந்துவிட்டது. தேறுவது ச்ரமந்தான். எதற்கும் ஒரு ஊசி குத்திப்பார்க்கிறேன். இவரை அவருடைய வீட்டில் கொண்டு விட்டுவிடுங்கள்—என்று கூறி ஊசி "குத்திப் பின் மருந்தைக் கொடுத்துவிட்டு, இரவு தாண்டிய பிறகு என்னிடம்வந்து சொல்லுங்கள்" என்று கூறிச் சென்றுர்.

சஞ்சீவியின் இடுப்பு உடைந்தது போலாயிற்று. "ஐயோ! மகத்தான காரியத்தைச் சாதிக்கவேண்டுமென்று வந்தாயே! கஜபதி! இப்படியா உன் முடிவு இருந்தது? என் வீட்டிற்கு வந்தா உனக்கு இத்தகைய விபத்து வரவேண்டும். அப்பனே! நண்பா! உனக்கு ஒரு நல்ல உபகாரத்தைச் செய்து உன்னைக் களிப்பிக்க நான் எதிர்பார்த்தது பலனளிக்காமலேயே போய்விடுமோ?" என்று மனங் குழைந்துக் கதறினுன்.

ஆருய்ப் பெருகும் கண்ணீருடன் கஜபதியை வீட்டிற்குக் கொண்டுவிட்டான். இதுவரையில் தெரியாத பரிதாப நிலைமை இப்போதுதான் பகீரென்று தெரிந்தது. சஞ்சீவியைத் தவிர கஜபதிக்கு

ஆப்தமான நண்பர்கள் எவருமே கிடையாது எனலாம். கஜபதி மகாமானி, ரோஷக்காரன். தனது சாரீரத்திலிருந்து பொழியும் அமிருதமான சங்கீதத்தையே அவன் தனது ஆப்தமித்ரனுக எண்ணி வந்ததால் எந்த நேரமும் ஆத்மார்த்தகமாகவும், பகவானுக்கு அர்ப் பணமாகவும் பாடித் தன் மனத்தைத் தேற்றிக்கொள்வான். தனக்கு ஆறுதலளிப்பதற்கு இன்றியமையாத சங்கீதமும், சஞ்சீவியுமே கஜபதி ஆதாரமாகக் கொண்டிருந்த ரகஸியம் சஞ்சீவிக்குத்தான் தெரியும். அந்த உண்மை யறிந்ததனுல் இன்னும் சஞ்சீவியின் துக்கம் கரைகடந்தது. கிழப்ராணன். அதோடு அவனுக சனியனை விலை கொடுத்து வாங்கியதுபோல் தன் மரணத்தைத்தானே தெரிந்து கொண்டு அதே வேதனையில், தானே மரணத்தைச் சீக்கிரமும் அறை கூவியழைத்ததுபோல் அழைத்துக்கொண்டான் என்றே சஞ்சீ விக்குத் தோன்றியது. அதோடு ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு. என்பதுபோல் கஜபதியின் வாழ்க்கையில் அந்தகாரம் போல் துக்கம் குடிகொண்டிருப்பினும் அவனது அரிய பொக்கிஷம் போன்ற மானவதி ஒருத்தியினிடம் அன்பு, பாசம், கரைகடந்த ப்ரேமை ; புத்திரவாத்ஸல்யம்...முதலியன ஒன்றுகூடிய ப்ரகாசத் தையே தனது ஜீவாதாரமாகக்கொண்டு பயங்கர இருளை நீந்தித் தள்ளிவந்தான்.

அத்தகைய வெளிச்சத்தையும் இருள் கவ்விக்கொண்டு போய் விடுமோ என்கிற அதிபயங்கரமான செய்தி கேட்டதும் அந்த ஆத்மா எப்படித்தான் தரிக்கமுடியும்? மூர்ச்சை போட்டது போட்டதுதான்...வெகுநேரங் கழித்து, கண்ணைத் திறக்காது... "மானவதீ!...கண்ணு! மானவதீ...எங்கே...நேற்று புதிதாக ஜகன்மோகினி ராகத்தில் ஒருபாட்டு சொல்லிக் கொடுத்தேனே... அதைப்பாடு கேட்கலாம்....கண்மணி! அதற்கு அனுபல்லவி, சரணம் கூட கடவுள் அழகானமெட்டுடன் அமைத்துக்கொடுத்து விட்டார்...தெரியுமா!....மானவதீ! பேசமாட்டாயா?"...என்று பிதற்றியவாறு கைகளை நீட்டினுன்...

என்னே பரிதாபம்!...சஞ்சீவி அவன் கைகளைப் பிடித்துத் தன் மடியில் சேர்த்து அணைத்தவாறு, "கஜபதி!...கஜபதி!...தெளிந்து விட்டதா...என்னைப் பாரு....தீர்த்தம் வேணுமா?"...என்று அன்பு ஒழுகக் கேட்டான்.

மீண்டும் வெகு அதிர்ச்சியுடன் கஜபதி "ஐயையோ!...என் மானவதிக்குத்தான் எமன் வந்துவிட்டானே....தீப்பிடித்து எரிந்து விட்டாளே...ஹா!...மானவதீ....மானவதி....சஞ்சீவி!...பொய் சொல்லாது சொல்லு...என் கண்மணி மானவதி எங்கே...எங்கே... என் இன்பக்கிளி எங்கே சொல்லு"...என்று கண்ணைத் திறக்காமல் ஆனை வீறிடுவதுபோல் வீறிட்டுக் கதறுவதைக் கேட்ட சஞ்சீவியின் இதயம் துடிதுடிக்கின்றது.

என்ன பதில் சொல்லுவது? எப்படி கிழ ஆத்மாவைச் சமாதானம் செய்வது...குழந்தை ஆஸ்பத்திரியில் ப்ரக்ஞையற்றுக் கிடக்கும் கண்ராவியைச் சகிக்கமுடியுமா? என்றொருகணம் தத்தளித்தான் அதே சமயம் சஞ்சீவியின் பெண் ஒரு பச்சிலை மருந்தை எடுத்துக் கொண்டு ஓடி வருவதைப் பார்த்தான். திடீரென்று ஒரு யோசனை தோன்றியது...தன் பெண்ணுக்குக் கண்ணால் சமிக்ஞை காட்டியவாறு, "மானவதி! மானவதி!...இங்கு வா...கண்ணா....உங்க தாதா கூப்பிடுகிறார் பாரு"...என்று கிழவர் காது கேட்க உரக்கக் கூறியவாறு தன் பெண்ணை அருகிலழைத்து, "கஜபதி!...இதோ பாரு மானவதி...தாதா...என்று புலம்புகிறாள்"...என்று கஜபதியின் ஸ்பரிசத்திற்குத் தன் குழந்தையை விட்டார்.

பாலைவனத்தில் பால்மாரி சொரிந்ததுபோலும், பட்டுப்போன மரம் திடீரென்று துளிர்த்துப் பூவும், காயும், கனியும் குலுங்குவது போலும் கிழவனுடைய வரண்டு உலர்ந்து நிராசைக் களஞ்சியமாயிருந்த இதயத்தில் எங்கிருந்தோ ஒரு பெரும் புசல்காற்றுபோல் ஆசை பீறிக்கொண்டு வந்தது...

கண்ணைத் திறக்க பிரயாசைப்பட்டதெல்லாம் வீணாயிற்று; எனினும்..."மானவதீ!...மானவதீ!...என் செல்லமே!...என் இன் பக்கனியே...ஹா...ஹா...என்...ஜீவா...தாரமே...உனக்கு ஆபத் தொன்றுமில்லையே...கண்ணா!"...என்று வாத்ஸல்யப் பெருக்கால் குழந்தையை மார்புறத் தழுவிக்கொண்டு பல முத்தங்களிட்டுச் சிறிது நேரம் அந்த அன்பின் அதிர்ச்சியால் அப்படியே மௌனமாக அயர்ந்து கிடந்தான்.

சஞ்சீவிக்கு இந்த காட்சியின் உணர்ச்சி இதயத்தைக் கிளறியது...அவன் மகளோ, "நோயாளியின் செய்கையைக் கண்டு பயத்தினால் முகத்தைச் சுளித்துக்கொண்டு தேகம் நடுங்கத் தன் தகப்பனாரைப் பார்க்கிறாள். எழுந்து ஓடவே மனம் தவிக்கிறது.

சஞ்சீவி ஜாடையினாலேயே அவளைப் போகவிடாது தடுத்து உட்காரச்செய்து, "கஜபதி!...மானவதி உனக்குத் தன் கையால் பால் கொடுக்கிறாள். எங்கே வாயைத் திற...கஜபதி!...வாயைத் திறப்பா!" என்று வெகு கனிந்த அன்போடு கூறியவாறு பெண்ணை நோக்கி, "தாதா! வாயைத் திற" என்று சொல்லும்படி ஜாடை காட்டினார். மகா பயந்தாங்கொள்ளியாகிய அந்த பெண், பாலை கையில் வாங்கவே நடுங்கி பேந்தப் பேந்த விழித்தவாறு தன்னை விடுதலைசெய்துவிடும்படித் தகப்பனாரை பரிதாபமாக நோக்கினாள். அவர் அவளை அனுப்ப சம்மதிக்காமல் அவள் கையைத்தான் பிடித்துக்கொண்டு கிழவரின் வாயில் பாலை வார்க்கச் செய்தார்...

தகப்பனாரிடம் பயந்த பெண்ணானகையால், மெல்ல தனது திகிலை அடக்கிக்கொண்டு, "தாதா!...இன்னும் பால் வேணுமா?...உடம்பு தேவலையா?" என்று இரண்டு வார்த்தைகளை வெகு பிரயாசையுடன் சொன்னதுமே அவளுடைய நடுக்கல் அதிகரித்துவிட்டது.

சாதாரணமாக நோயாளிகளைப் பார்ப்பதற்கும், அவர்களுக்கு தைரியமாக சிச்ருஷை செய்வதற்கும் பெரியவர்களில்கூட சிலர் பயந்து நடுங்குவார்கள். தம் சொந்த மனிதர்களானாலும் தூரவிருந்து விசாரித்துவிட்டு வந்துவிடுவதை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம்.

அங்ஙனமிருக்க கேவலம் சிறுமி நோயாளிகளைக் காணவும் பயந்து நடுங்கக்கூடியவள், மரணத்தறுவாயிலிருக்கும் கிழவனிடம் எப்படித்தான் பொறுமையாக உட்கார்ந்திருக்கமுடியும்? கிழவரின் மூச்சுத் திணறலையும், அவருடைய பயங்கரமான நிலைமையையும் கண்டு நடுங்கிய சிறுமி தன் பிதாவின் உத்திரவைக்கூட கவனியாது ஒரே ஓட்டமாக ஓடிவிட்டாள். இதுகண்ட சஞ்சீவிக்குத் தூக்கி வாறிப் போட்டது.

அதே சமயம் கிழவர் சற்று நினைவு வரப்பெற்றவராய்..."மானவதீ! மானவதி!" என்று கூவியவாறு கையைத் துளாவினர்...அவ் வீட்டிலேயே குடியிருக்கும் மற்றொரு பெண் மானவதியின் ஆப்த சினேகிதை வெளியே போயிருந்தவள் தற்செயலாக வீட்டிற்கு வந்து இந்த அமர்க்களத்தைக் கண்டு நடுங்கியும், விசனித்தும் கிழவரிடம் ஓடிவந்து "தாதா!...தாதா! என்ன உடம்பு?"... என்று அலறியவாறு கேட்டாள்.

கடவுள் ஒருவன் சமய சஞ்சீவியாய்க் காத்திருந்து ரக்ஷிக்கும் அபூர்வ ரக்ஷகத்தன்மையின் ப்ரகாசம் திரை விலக்கப்பட்டுத் தெரிவதுபோல் சஞ்சீவிக்குத் தோனறியது. அச்சிறுமியை இழுத்துக் காதோடு "குழந்தாய்! நீ மானவதியாகவே இப்போது நடிக்க வேண்டும். பிறகு விஷயத்தைக் கூறுகிறேன். பயப்படாதே... கஜபதி!...இதோ பார் உன் மானவதீ"...என்று அச்சிறுமியின் கையைப் பிடித்துக் கிழவரின் கைகளில் சேர்த்தார்.

கிழவர் பழயமாதிரியே, "கண்ணு!...மானவதீ!...எங்கே... அந்த ஜகன்மோகினி ராகத்துப் பாட்டைப்பாடு அதன் அனுபல்லவி சரணத்தை எழுதி என் தம்பூராவின் பக்கத்தில் வைத்திருக்கிறேன். அதைக் கொண்டுவா...பாடு...பாடு"ஜகன்மோகன ஸுகுமாரா..." என்று திக்கித் திக்கி கிழவரே முதலடியைப் பாடும் பரிதாபத்தைக் கண்ட சஞ்சீவியின் இதயம் குழைந்து கண்ணீர் உதிர்ந்தது.

மானவதியும் இச்சிறுமியும் எந்த பாட்டையும் சேர்ந்துப் பாடுகிறவர்களாதலால் இதே பாட்டை அச்சிறுமியைப் பாடும்படி சஞ்சீவி ஜாடைசெய்ததும், அவள் வெகு இனிமையாகப் பாடுவதைக் கேட்டுக் கிழவரின் உள்ளம் பூரித்துப் புலகிதமடைந்தது. சிறுமியை வாரியணைத்துப் பல முத்தகங்களிட்டுப் பரவசமானர். "மானவதீ!...இதயம் நிறைந்தது...மனது பொங்கிப் பூரித்தது... கண்ணா....என்னை அணைத்துக்கொள்ளு...என்னைப் பிடித்துக் கொள்ளு"...என்று ஆவல் மிக்க வேகத்தில் கூறினர்.

அச்சிறுமிக்குக் கண்ணீர் பொங்கிவிட்டது. மானவதிக்கு நேர்ந்துள்ள விபத்து ஒன்றும் இவளுக்குத் தெரியாதாகையால்

மானவதி எங்கே? என்கிற சந்தேகம் உண்டாகி சஞ்சீவியின் முகத்தைப் பார்த்தாள்.

அதே சமயம் கிழவருக்குக் கூறத் திறமற்ற சங்கடமும் வேதனையும் உண்டாகியதால் "சஞ்சீவி!...உன் கை எங்கே... எங்கே...கொடு...இப்படிக் கொடு...எனக்குத் தெரிந்துபோயிற்று என்னுடைய காலம் முடியும் சமயம் நெருங்கிவிட்டது. அதோ! மரணதேவதை என்னை அறைகூவி அழைக்கிறாள்...வா வா வெனக் கூவியழைக்கிறாள். ஜோஸியம் பலித்துவிட்டது.

சஞ்சீவி!...சஞ்சீவி!...இதோ என் மானவதீ...என் செல்வக் கிளி...இவளைக் கைவிடாதே....இவள் தகப்பனாரைக் கண்டுபிடித்து அவனிடம் ஒப்படைத்துவிடு...பரதேசி....அனாதை....அவளுக்கு அந்தக் குருநாதன்தான் துணைபுரிந்து புருஷாகாரியாக உன்னைக்காட்டியிருக்கிறான்; நான் சொல்லியது நினைவிருக்கட்டும்" என்று இழுத்து இழுத்துக்கூறி முடிக்குமுன்பே திடீரென்று கிழவனின் தேகமே ஒரு குலுங்கு குலுங்கியது...

இதுகாறும் மூடியிருந்த கண்கள் வெகு ப்ரகாசமாயும் விசாலமாயும் தானாகவே திறந்துகொண்டன...ஒருமுறை அவ்விடத்தை உன்னிப் பார்த்து கதிகலங்கியவன்போல்..."இவளா!...இவளா என் மானவதி! இல்லை...இல்லை...ஹா...ஐயையோ...மானவதிதான் தீக்கிரையாகிவிட்டாளே...அக்கினி பகவான் அவளை விழுங்கி விட்டாரே. ஆம்...ஆம்...மகா பாவியாகிய என்னிடமிருந்துபிரித்துக் கொண்டு போய்விட்டான்...என் கிளி கூட்டைவிட்டுப் பறந்து போய்விட்டது...மானவதீ...நானும் இதோ வருகிறேன்...கண்ணுமா...ன...வ...தீ...மான...வ...தீ"...என்று ஒரே ஆவேசத்துடன் கூறி முடிப்பதற்குமுன்பே சடக்கென்று உடல் ஒய்ந்துவிட்டது.

மீண்டும் கண்கள் மூடின...ஆனால் ஊமை பிராணன் பின்னும் சில மணிநேரம் ஊசலாடியது...மறு பேச்சுப் பேசாமல் கிழவனின் ஆவியும் கிளம்பிச்சென்றது. அந்தோ! பரிதாபம்....சஞ்சீவியின் மனத் துடிப்புக்கு ஓர் எல்லை வகுத்துக் கூறமுடியுமா! அதைத் தாமாக உணர்ந்துகொள்வதே நல்லது....

14

உத்தம வழியில் உதய சூரியன்

பிரமையும், திகிலும் கொண்டு பெரிதாகக் கூச்சலிட்ட தர்மாம்பாளைக் கண்ட முகுந்தன் தன் தாயின் சந்தேகத்தை நன்கறிந்து பின்னும் சிரித்தபடியே, "அம்மா! எனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது என்றுதானே நீ எண்ணுகிறாய். ஆமாம்....ஒரு வகையில் அது நன்றாகப் பொருந்தும். அது வெறும் சாமானியப் பயித்தியமில்லை. உனக்கும் அப்பாவுக்கும் அபாரமான கீர்த்தியைச்

சம்பாதித்துக் கொடுக்கும்பொருட்டுக் கடுமையான பயித்தியம் பிடித்திருக்கிறது. அந்த பயித்தியத்திற்காக நீ ஏதும் வருந்தவோ, கவலைப்படவோ வேண்டாம். இதோ பாரு...அம்மா! உன் மகன் பயித்தியமில்லை. வெகு தெளிந்த சுயபுத்தியுடன்தான் இருக்கிறான். அனாவசியமாகச் சந்தேகப்படாதே. இங்கே வா....சொல்லுகிறேன் கேளேன்'' என்று வற்புறுத்தி வெகு பிரயாசைப்பட்டு அவளைச் சமாதானப்படுத்திப் பெட்டியருகில் அழைத்துச் சென்று, "அம்மா! இந்த பெட்டியைப் பார்....இதோ, இந்த பணம் யாருடையது?''



தா:—இதென்னடா! அசடுபோல் கேட்கிறாய்! யாருடைய பணம் நம்ம இரும்புப் பெட்டியிலிருக்கும்? எனக்கு எங்கம்மாள் கொடுத்த ஸ்த்ரீதனச் சொத்துக்களை விற்றுப் பணமாக்கி வைத் திருக்கிறேன். ஒரு சமயம் பெரிய பங்களா வாங்கவேண்டும் என்று நான் சொன்னேனே! இந்த பணத்தைக்கொண்டு வாங்க எண்ணிதான் சொன்னேன். என் தாயாரின் அடையாளமாக என்றும் சாச்வதமாக இருக்கும்.

முகு:—(அளப்பரிய ஆனந்தத்துடன்) பேஷ்! வெகு நல்ல யோசனையம்மா! இதைக் கேட்கத்தான் நான் பலநாட்களாகக் காத்திருந்தேன். பெரியவர்களின் சொத்தில் அவர்களுடைய ஞாப கார்த்தகமாகச் செய்வதுதான் அவர்களுக்கு நாம் ப்ரதியுபகாரம் செய்தவர்களாவோம். சரி... இதோ இதெல்லாம் என்னது?...

தா:—என்னடா நீ கேட்பதெல்லாம் விநோதமாயிருக்கிறதே. இதெல்லாம் நகைகள் என்று தெரியவில்லையா! நான் சொல்ல வேண்டுமா! இந்த பெட்டியிலிருப்பது அப்படியே என் தாயாருடை யது. இதோ இது எனது சிறியவயதில் என் தாயார் போட்டது. இதோ இவைகள் உனக்குக் கல்யாணமாகும்போது உன் மனைவிக் குப் போடுவதற்காக நான் செய்து வைத்திருக்கிறேன். இந்த நகைகள் அடகுவைத்தவர்கள் திருப்பி மூட்காதிருந்து முழுகிப் போனவை....இந்த வெள்ளிப் பாத்திரங்களும் மூழ்கிப்போன வைகள்தான்...தம்பி! ஏதேது...நீ மேஜராகிவிட்டதால் உள் உளவு களை யெல்லாம் அறிய ஆரம்பித்துவிட்டாயா? நீ உளவறிந்தாலும் அறியாவிட்டாலும் இந்த சொத்துக்கள் பூராவும் உன்னுடையதே யன்றி போட்டிக்கு யாராவது உண்டா! ஒரு தம்பி, தங்கை அல்லது சித்தம்மா, பெரியம்மா பெத்த யாராவது இருந்தால் கொஞ் சமாவது குறைந்துவிடுமோ! என்று பயப்படலாம். அந்த சச்சரவுகள் தான் ஒன்றுமே இல்லையே! உனக்கென்ன பயம்? அல்லது தான தருமம் செய்துவிடுவேனோ! என்று பயமா?

முகுந்தன் வெகு உத்ஸாகத்துடன் சிரித்தவாறு தாயாரின் கையைப் பற்றிக்கொண்டு "அம்மா!...உன்வயிற்றில் பிறந்த என்னை நீயே முட்டாளாக நினைத்துவிடலாமா! இத்தனை சொத்துக்களையும் வைத்துக்கொண்டு "தனந்தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம்... தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம். அறஞ்செய விரும்பு. தருமம் தலைகாக்கும்" என்கிற உயர்ந்த முதுமொழிகளையெல்லாம் மறந்து விட்டாயே...இந்த ஜன்மாவில் நாம் முடிந்தவரையில் ஒரு தரும மாவது செய்தால்தானே நாளை பரத்தில் ஒரு கடுகளவாவது நமக்கு இடம் உண்டு என்பதை அடியோடு மறந்துபோய் என்மீதே பாசத்தை வைத்து சதா இதற்கே உழைத்துப் பாடுபட்டுக்கொண் டிருந்தால் எப்படி கடைத்தேறுவது? இதை நீ அறியவில்லையே, காலம்முற்றும் வீணாகிவிடுகிறதே! என்றுதான் நான் விசனிக் கிறேன்...

என்று கூறி முடிப்பதற்குள் தர்மாம்பாள் சற்று அதிர்ச்சி யுடன்..."அட அப்பாவி மகனே! இதற்காகவாடா நீ பாதிராத் திரியில் என்னைக் கலக்கி திருடன்போல் வந்து இவைகளைக் கிளறு கிறாய்...பையன் நல்ல சமத்துதான். உனக்காக நான் எத்தனையோ அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்துள்ள இத்தனை புதையலையும் தருமம் செய்யவில்லையே என்று கவலைப்படுகிறாய்?...போதும் போதும்...வெகு கெட்டிக்காரன்தான். சத்திரமும் சாவடியும் கட்டிவிடலாமா? அதானே சொல்லப் போகிறாய்" என்று அலக்ஷிய மாயும் கோபம் த்வனிக்கவும் கூறினாள்.

முகுந்தன் இதோடு விடக்கூடியவனா! தாயாரின் முகவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு "அம்மா! கோபித்துக் கொள் ளாதே! நான் பேசுவதை நீ வெறுப்பாயும் அலக்ஷியமாயும் நினைக் கலாம். ஆனால் அதுதான் உனக்கு அழியாத கீர்த்தியையும் புகழையும் இந்த ஜன்மத்தில் கொடுப்பதோடு அடுத்த ஜன்மத்திற்கு எல்லையற்ற பேரின்பத்தையும் கொடுத்துக் காக்கும்.

அம்மா! எந்த ஒருமனிதனுக்கும் தான் வரும்போதும் போகும் போது கூடக் கொண்டுவருவதும், கொண்டுபோவதும் ஏதாவது கண்ணுக்குத் தெரிந்த ஒரு பொருள் உண்டாம்மா! நாம் செய்த பாவமோ, புண்ணியமோ இவ்விரண்டுந்தானே நம்மோடு வருகிறது. இந்த தத்துவத்தை பட்டினத்தடிகள் எத்தனை அழகாகக் கூறியிருக்கிறார். இத்தகைய மகான்கள் செய்துள்ள உபதேசங்கள் முற்றும் நம்போன்ற சாதாரண மனிதர்களுக்காகச் செய்ததே யன்றி அவர்களுக்காகவாம்மா செய்தார்கள்?

தர்மாம்பாள் இடைமறுத்து சற்று ஆத்திரமும் வெறுப்பும் தொனிக்கும் குரலில், "ஏண்டாப்பா! பட்டினத்தடிகளைப் போல் நீயும் காலத்தைத் தள்ளவேண்டுமென்றுதான் இப்படி ப்ரம்மச் சாரிக் கட்டையாக இருக்கிறாயோ! பெரியவர்கள் காலமுதல் அரும் பாடுபட்டுத் தேடிவைத்துள்ள சொத்தை சோம்பேறிகள் கூடிக் கூடி பேசவும், சூதாடவும் கள்ளத்தனமான ஈனத்தொழில்களைப் புரிய அனுகூலமாகவுமான சத்திரத்தைக் கட்டிவைத்துவிடு என்று நீ உபதேசத்தைச் செய்கிறாயா!....போதும்...போதும்...அப்பா!... நன்றாகத்தான் உன் புத்தி பரிணமித்திருக்கிறது. யாராவது கேட்டால் சிரிக்கப்போகிறார்கள். யாராவது என்று சொல்வா னேன்...உங்கப்பா கேட்டால் பரிகாஸம் செய்வதுமட்டுமின்றி பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் வேலையாயிருப்பதன் கோளாறோ! என்று பயந்துகூடப் போய்விடுவார்.

என்று சொல்லி முடிப்பதற்குள் முகுந்தன் அபாரமான சந் தோஷத்துடன், "ஆமம்மா! அப்பாவை நீ அத்தனை மோசமாகவா எண்ணிவிட்டாய். அவருடைய தாராள இதயமும் தருமசிந்தையும் இத்தனை வருஷங்கள் பழகியும் உனக்குத் தெரியவில்லையா? இத்தனை செல்வத்தையும் பெட்டியில் வைத்துப் பூட்டியிருப்பதில் யாருக்கு

என்ன லாபம்? என்று அப்பா அனேகந் தரம் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார். அவருடைய சம்மதத்தை நான் பரிபூரண மாகப் பெற்றுவிட்டேன். உன்னுடைய சம்மதந்தான் இனி தேவை யம்மா. அப்பா பென்ஷன் வாங்கினால் அவருக்கு கம்யுடேஷன் பணம்வரும். அவருடைய இன்ஷியூரன்ஸ் பணமும்வரும். ஆகமொத் தம் அவருக்கு வரப்போவதுமட்டும் 25000 ரூபாய் ரொக்கம் இருக்கிறது. இங்கு நீ ஒருவருக்கும் உபயோகமில்லாது குவித்து வைத்துள்ள சொத்தோ கணக்கின்றி இருக்கிறது. கடவுள் கிருபை யில் நானும் சம்பாதிக்கிறேன். அப்பாவுக்கும் பென்ஷன் வரும். நமக்கு எந்தவிதமான குறைவும் வராது; ஆகையால் உனக்கு மகத் தான கீர்த்தியும், புண்யமும் பகவான் வலுவில் கொடுக்கத் தயா ராக இருப்பதை நீ தடுத்துக்கொள்ளாதேம்மா!...

நீ நினைப்பதுபோல் நான் சோம்பேறிகளுக்கு இருப்பிட மாவதற்கும் தின்னவனே தின்று கொழுப்பதற்கும், சத்திரத்து அதி காரிகளும் அதற்குச் சம்மந்தபட்டவர்களுமே பெருச்சாளியைப் போல் தின்பதற்குமான தர்மம் நான் உன்னைச் செய்யச்சொல்ல வில்லை. நான் சொல்லப்போவது உனக்கு தர்மத்திற்கும் தருமம், லாபத்திற்கும் லாபம். தெரிந்ததா! அது என்னவென்பதை நானே உனக்கு விளக்கிக் காட்டுகிறேன். இன்று பகல் என்னுடன் நீ வா; என்னம்மா யோசனை செய்கிறாய்? பதில் சொல்லு" என்றான்.

தர்மாம்பாளுக்குப் பதில் சொல்வதற்கு ஒன்றுமே தோன்றாத தால் சிறிதுநேரம் மௌனத்திலிருந்தாள். பிறகு, "தம்பீ! எனக்குத் தூக்கம் வருகிறது. நான் போய் படுத்துக்கொள்கிறேன்" என்று கூறியவாறு தடதடவென்று போய்விட்டாள். எத்தனை சமாதானங் களுடன் நிதானமாகச் சொல்லியும் பிடிகொடுக்காமல் தன் தாயார் போனது முகுந்தனுக்குச் சப்பென்று போயிற்று. தாயாரின்மீது சிறிது கோபங்கூட மனத்தில் எழுந்தது.

15

விதியின் ஆட்சியின் வீரத் தாண்டவம்

ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்ற மானவதிக்கு நினைவுதப்பி இருக்கும்போதுகூட, "ஐயோ! என்னிடம் உயிரையே வைத்துள்ள என் தாதாவுக்கு இதைச் சொல்லாதங்கோ! தாதா வுக்கு மிகவும் விசனமாகிவிடும். அவர் தாளவே மாட்டார்...சொல் லாதங்கோ...ஐயோ! தாதா!...ஒனக்கு யார் சொல்லிவிட்டா? ஏன் தாதா இப்படி அழறே...அடாடா! நான் செத்துப்போக மாட்டேன் தாதா!...நெருப்பு ரொம்ப பத்திக்கல்லே தாதா...

மாமா!...எங்க தாதாவிடம் சொல்லாதங்கோ......இப்பதான் பாவாடைதெச்சார்; அதுதான் எரிஞ்சுப்போச்சு...ஐயோ பாவம்!

தாதா ஆசைப்பட்டு தெச்சுகொடுத்தா...தாதா அடிப்பாளா... பயமாயிருக்கே...என்று ஒன்னுக்கொன்று சம்மந்தமில்லாது வாய்ப் பிதற்றுகிருள். மீண்டும் அயர்ந்து மௌனமாகிருள்.

இப்படியே அன்று வெகு நேரமிருந்தது. மாலை நாலு மணிக்கு மேல் நல்ல தெளிவு உண்டாகி நன்ருகக் கண்ணை விழித்துச் சுற்று முற்றும் பார்த்தாள். "மாமா!....மாமீ!...எங்க தாதாவுக்குத் தெரிந்து விட்டதா! திட்டிரா...கோவிச்சக்கல்லையே மாமா!"....என்று மிரண்டு அழுதபடியே கேட்டாள்.

தீப்பட்டு ரணமாகக் கிடக்குமிடங்களுக்கெல்லாம் மருந்துகள் போட்டுப் பெரிதாகக் கட்டியிருந்ததால் வலி தாங்காது இடை யிடையே, "ஐயோ! அம்மா!...வலிக்கிறதே....எரியறதே...தாதா!... தாதா!"...என்று கண்ணீர்விட்டாள்.

என்னே பரிதாபம்! கிழவருக்கு நேர்ந்துள்ள கோரமான கதியை இச் சின்னஞ்சிறுமி எங்ஙனமறிவாள் பாவம்! அந்த வீட்டில் குடியிருக்கும் தம்பதிகள்தான் மானவதியின் பக்கத்தில் கண்ணீர்வழிய உட்கார்ந்திருக்கிருர்கள். மானவதியின் விபத்தைக் கேட்டதுமே துடித்து உயிருக்கே பேராபத்தாகமுடிந்துள்ள பரிபவம், இந்த தம்பதிகள் அறிந்து படும் வேதனை சொல்லமுடி யாது. மரத்தைக் கொடி தழுவி நிற்பதுபோல் மானவதி கிழவராகிய மரத்தைக் கொடிபோல் தழுவிக்கொண்டிருந்த ஆதரவுக்குப் பங்கம் வந்துவிட்டதே, "ஐயோ! கிழவரின் நிலைமை மோசமாகிக்கொண்டு வருகிறது என்கிற செய்தியே காதில் படுகிறதே! அவர் இச் சமயம், இந்த அனதைப் பரதேசிக்காகப் பிழைக்கவேண்டுமே" என்று எண்ணி கடவுளை பிரார்த்திப்பதும் கண்ணீர் உதிர்ப்பதுமாக இருக்கையிலேயே கிழவரின் காலம் முடிந்துவிட்டது என்கிற செய்தியை அறிந்து நெருப்பின்மீது புழுவெனத் துடித்தார்கள்.

தாங்கமாட்டாத துக்கம் பொங்கிவருகிறது. மானவதியின் நிஷ்களங்கமான முகத்தைப் பார்க்கப் பார்க்க அவர்களுடைய இதயத்தில் பதினயிரம் தேள் கொட்டியதுபோன்ற வேதனை உண் டாகி சித்திரவதை செய்கிறது. அவளது வாய்ப் பிதற்றலின் பரி தாபம் கேட்கமுடியவில்லை. அவள் நன்ருகத் தெளிவு கண்டு கேட்ட கேள்விக்கு என்னதான் பதில் சொல்வது என்று தெரி யாது சில வினடிகள் தத்தளித்தபின், "மானவதீ கண்ணு! நீ இப் போது உடம்பை அலட்டிக்கொள்ளக்கூடாது. உங்க தாதா உன்னைத் திட்டவேமாட்டார். அவர் மிக்க நல்லவராயிற்றே. நீ கவலைப்படாது தூங்கம்மா...கண்மணீ!" என்று சமாதானம் கூறினர்கள்.

கிழவரின் சவச்சடங்குகளை எப்படித்தான் நடத்துவது, அவருடைய உயிருக்கு உயிரான குழந்தைக்கு உயிரைக் கொடுப்ப தற்காகவேதான் உயிரைவிட்டார்போலிருக்கிறதே! அடாடா! இப்படியும் ஒரு அதிசய சம்பவத்தை இக் கலிகாலத்தில் காண

முடியுமா?...அன்பென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்? தன்னுயிரினும் இனிய பொருள் போய்விட்டதென்பதைக் கேட்டவுடனே ஆவி நீங்குவது வியப்பிலும் வியப்பல்லவா...என்று அந்த ஊர்வாசிகள் கிழவரின் பெருமையைப் புகழ்ந்து பேசினார்கள்.

நன்றாகத் தெளிவு வந்தபிறகு, "எங்க தாதா எங்கே?...எங்க தாதாவுக்கு என்மேல் கோவமா?...அதனால்தான் என்கிட்டே இல்லாமெபோய்விட்டாரா?....மாமா! தாதாவுக்குக் கோவமில்லையே! அவரை இங்குக் கூட்டிக்கொண்டு வாருங்கள். நான் அதிகப் பிரஸங்கிதனமாகச் செய்துவிட்டதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்...தாதா!...தாதா!...என் கிட்ட வா தாதா!"...என்று கேட்கவும் பிதற்றவும் ஆரம்பித்துவிட்டாள்.

"இந்த பச்சைக்குழந்தைக்கு என்னதான் பதில் சொல்வது? எப்படி சமாதானம் செய்வது? கிழவருக்காவது வேறு பெண்ணைப் பாடச்செய்து ஒரு அணுவளவு ஆப்யாயம் உண்டாக்கினார்கள். அம்மாதிரி மானவதிக்கு என்ன சொல்லமுடியும்? தர்ம சங்கடமான நிலைமையில் தத்தளித்தவாறு விழித்தார்கள்.

ஏதேதோ நொண்டிச் சாக்குகள் சொல்லி சமாதானம் செய்வதெல்லாம் சிறிது நேரம் வேண்டுமாயின் பலிக்கும். அதுவும் இரண்டாங்கெட்டான் குழந்தைகளிடம் சிறிது நேரம் பலிப்பதும் சாத்யமில்லையல்லவா! தாம் பிடித்த பிடிவாதத்திலேயே அழுது புரண்டு மொண்டித்தனம் செய்யும் சுபாவமுடைய குழந்தைகளை எப்படித் தான் சமாதானம் செய்யமுடியும்?

நடுத்தர வயதுச் சிறுவர்களின் பிடிவாதம் ஒரு தினுசு. தொணதொணவென்று கேட்டதையே கேட்பதில் அவர்களுக்கொரு தனி ருசியுண்டு. அந்த ரகத்தில் சேர்ந்த மானவதி, திடும் திடும் என்று அலறியவாறு, "எங்க தாதா எங்கே மாமா?...அவரைக் கூப்பிடுங்கள். அவர் இத்தனை நேரம் வராதிருக்கமாட்டாரே...என்மீது கோவந்தான் அவருக்கு, அதனால்தான் வரவில்லை. அவரைக் கூப்பிடுங்கள்" என்று பிடிவாதம் செய்து அழவும் ஆரம்பித்துவிட்டாள்.

அவளிடம் விஷயத்தைச் சொல்லவும் முடியவில்லை. 'ஊருக்குப் போயிருக்கிறார். இதோ வந்துவிடுவார்' என்று சொல்லிப் பார்த்தார்கள். அதற்கெல்லாம் அவள் மனது சமாதானமடையுமா! இந்த உலகத்தில் அவளுக்கு அவள் தாதாதான் உயிர். தாதாவுக்கு அவள்தான் உயிர். அத்தகைய பிம்பத்தைத் தூக்கத்தில்கூட விடாமல் கட்டிக்கொண்டு படுத்திருக்கும் ஸ்வபாவமுடைய சிறுமி ஒருநாள் பூராவும் பார்க்காதிருப்பதென்றால் மனது பொறுப்பாளா!

"தாதா! தாதா!" என்கிற நாமஸ்மரணத்தைத் தவிர வேறு ஒன்றுமே பேசவில்லை. இந்த பரிதாபத்தைக் கண்டு மனந்தவித்தவாறு சமாதானம் செய்துவந்தார்கள். அழுது அழுது மானவதியின் முகமும் கண்களும் வீங்கின ஜ்வரமும் அதிகரித்து "தாதா!...என் மேலே கோபந்தானே நீ என்னை எட்டிப்பார்க்காமே இருக்கே....

நான் பாவாடையே கொளுத்தினது தப்புதான்...இனிமே எனக்கு பட்டு பாவாடையே வாண்டாந் தாதா!....சீட்டியே போதுந்தாதா... என்னெ மன்னிச்சுடு தாதா!...தாதா...தாதா!"...என்று பெரிதாகவே அழவாரம்பித்துவிட்டாள். பக்கத்திலிருப்பவர்களின் மனது தவிக்கிறது. இந்த பரிதாபத்தை எத்தனை நாழிதான் சகிப்பது?...

16

கூட்டு நாடகமும் குடல் நடுக்கமும்

வெகு முடுக்காகச் சென்ற தர்மாம்பாள் ஒன்றுமே தோன்ருது படுத்துக்கொண்டாள். தன் மகனுடைய புத்திதான் கலங்கிவிட்டதோ! ஞானப் பயித்தியம் பிடித்திருக்குமோ? என்கிற பெருத்த குழப்பமும் சந்தேகமும் உண்டாகி வயிற்றில் பகீர்! பகீர்...என்று சங்கடம் செய்கிறது. சிறிதுநேரம் புரண்டு புரண்டு படுத்துப்பார்த்தாள்.

அதிலும் இருக்கைகொள்ளாது நேரே எழுந்து தன் கணவன் படுத்திருக்கும் அறைக்குச் சென்ருள். அவனை எழுப்பவும் சற்று முதலில் பயந்தாள். பிறகு தைரியம் செய்துகொண்டு..."சற்று எழுந்திருங்கள்"...என்று எழுப்பினுள்.

முத்துஸ்வாமி உண்மையில் அசந்து தூங்கினுல் அலறியவாறு எழுந்திருப்பார். வேண்டுமென்று படுத்திருந்ததால் போர்வையைத் திறந்து தர்மாம்பாளைப் பார்த்தவாறு கடகடவென்று அடக்க முடியாது சிரித்தார். மகனுடைய சிரிப்பையும் செயலையும் கண்டு பயமும் சந்தேகமும்கொண்டு இங்குவந்தால் இவர் அடக்க மாட்டாது சிரிக்கும் பீரங்கிச் சிரிப்பைக்கண்டு விபரீதமாக பயந்து போய், "ஐயையோ! இதென்ன சிரிப்பு!" என்று திகைத்துநின்ருள்.

அதேசமயம் கலவரமும் யோசனையும் சூழ உட்கார்ந்திருந்த முகுந்தன் தன் தகப்பனுரின் பீரங்கி சிரிப்பின் ஒலியைக் கேட்டு யூகத்தால் விஷயத்தை யறிந்து ஓட்டமாக இங்குவந்து தானும் தகப்பனுருடன் சேர்ந்துகொண்டு கடகடென்று விழுந்து விழுந்து சிரித்தவாறு..."அம்மா!...ஹ்ஹ்ஹ்ஹ்ஹ்ஹ்...என்று கையை ஆட்டினுன். தகப்பனும் மகனும் சேர்ந்து சிரிக்கச் சிரிக்க தர்மாம்பாளுக்கே மூளை கலங்கிவிடுமோ...என்று சந்தேகம் உண்டாகியது. இருவரையும் மாறி மாறிப்பார்த்து க்ரீச் சென்று கத்தி, தன் கண்களைப் பொத்திக்கொண்டாள். பின்னும் அவர்களுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு "ஐயோ! இதென்ன சோதனை!...என்ன விளையாட்டு! என்னைக் கலக்கிவருத்தி வேடிக்கை பார்ப்பதா உங்களுக்குச் சந்தோஷம்? போதும்! போதும்! உங்கள் சூழ்ச்சி... நிறுத்துங்கள்" என்று கோபமும் வருத்தமும் த்வனிக்கக்கூறினுள்.

முத்துஸ்வாமி சுவார் 5 நிமிஷநேரம் சிரித்துவிட்டுப் பிறகு சற்று நிறுத்தியவராய், "ஊம்...தர்மூ!...தகப்பனுக்கும் மகனுக்கும் சேர்ந்தாப்போல் பயித்தியம் பிடித்துவிட்டதென்றுதானே நினைத்தாய். தாய்,மகனுடைய பயித்தியத்தைச்சொல்லவந்த இடத்தில் கணவனுக்கும் ஏதோ வந்துவிட்டதே என்று நடுங்கும் வேகத்தில் வேயர்வையாகக் கொட்டுகிறது பாவம்!...முகுந்தா! பங்காவைத் திருப்படா! நல்ல காற்றுவரட்டும். இப்படி சோபாவில் உட்கார்ந்து சற்று விச்ராந்தியடைந்த பிறகு உன்னுடைய குற்றச்சாட்டுப் பத்திரத்தைப் படிக்க ஆரம்பிக்கலாம்" என்று கூறியபடியே தானே தர்முவை இழுத்து சோபாவில் உட்காரவைத்தார்.

முகுந்தன் டேபில் விசிறியைத் தாயாரின் முகத்திற்கு நேராக வைத்து விசையாக முடுக்கிவிட்டு, "அம்மா! காற்றுவருகிறதா! போதுமா?"...என்றான். தகப்பனும், மகனும் சேர்ந்துசெய்யும் உபசாரம் முற்றும் தர்முவுக்குத் தன்னைக் கேலிசெய்வதாயும் முள்ளில் போட்டுப் புரட்டுவது போன்றும் வெறுப்பும் கோபமும் உண்டாகி சடக்கென்று எழுந்து விசிறியைத்தானே நிறுத்திவிட்டு "இதென்னக்கூத்து? என்னை ஒரு அறிவுள்ள மனுஷி என்று நினைத்தீர்களா! பயித்தியம் என்று நினைத்தீர்களா?" என்று கோபத்துடன் கூறி முறைத்துப்பார்த்தாள்.

முத்:—அடாடா...இது தெரியவில்லையா! நீ எங்களுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதோ என்று அபாரமான சந்தேகத்துடன் மிரள்வதுபோல் நாங்கள் நினைக்கவே இல்லை. நீ வெகு தெளிந்த அறிவுடன் இருப்பதாகவே எண்ணிதான் பேசுகிறேன். தர்மூ! நான் தூங்குவதாக நீ எண்ணியிருக்கிறாய். நான் சகலமும் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். நீ இப்போது என்னிடம் என்ன கேட்க வந்தாய்? அதைச்சொல்லு.

தர்:—(முகத்தை சுளித்தவாறு) ஆமாம்! கேட்பதற்கு வேறு வைத்திருக்கிறதாக்கும். என்னைத்தான் பயித்தியமாக அடித்துவிடுகிறீர்கள். தகப்பனும் மகனும் சேர்ந்து முன்கூட்டி தீர்மானித்துக்கொண்டுதான் இத்தகைய நாடகத்தை நடித்தீர்கள்போலிருக்கிறது. இது என்ன சமாச்சாரம்? என்னை எதற்காக இம்மாதிரி ஆழம் பார்க்கிறீர்கள்? உங்களுடைய உத்தேசந்தான் என்ன? அதைத்தான் சொல்லுங்களேன்.

முத்து:—இதோபாரு தர்மூ! கோவித்துக்கொள்ளாதே! உனக்குப் பகவான் சரியான தருணத்தைக் கொடுத்திருக்கிறார். நீ நன்றாக யோசனை செய்துபாரு. இன்று முகுந்தன் உன்னை அழைத்துச் செல்லும் இடத்திற்குப் போய்ப்பார்த்தால் உன்மனமே கரைந்துருகிவிடும். மணி மூணடிக்கப்போகிறது. போய் படுத்துக்கொள்ளு, உதயமாகட்டும்; பேசலாம்..என்றுசமாதானம்செய்து அமர்த்தினார்.

தர்மு ஏதேதோ நினைத்துக்கொண்டு வெகு ஆவலுடன் வந்ததற்கு நேர்மாறாக ஆய்விட்டதால் மனக்குறையுடன் சென்று

படுத்துக்கொண்டாள். தனக்குள்ள கெட்டியான ஐச்வர்யத்தைக் கரைத்து புகழும் கீர்த்தியும் சம்பாதிப்பதா? சொத்தை வைத்துக் கொண்டு ஆனந்தமாக அனுபவிப்பதா? இவ்விரண்டில் எதைச் செய்வது? எது நல்லது?...என்ற விஷயத்தையே எண்ணியெண்ணி குழம்பிக்கொண்டிருந்தாள். ஒரு முடிவுக்கும்வராது அலைபாயும் நிலைமையில் அயர்வு உண்டாகி தன்னை யறியாமலேயே தூங்கிவிட்டாள்.

முகுந்தன், தாயார் என்ன செய்கிருள் என்பதைப் பார்க்க வந்தான். அயர்ந்து தூங்குவதைக் கண்டு சந்தோஷத்துடன் போய் விட்டான். "பகவானே! என் தாயாரின் மனத்தைத் திருப்ப வேண்டுமே என்று ப்ரார்த்தனை செய்தான். எதிர்காலத்தில், தான் நினைத்தபடி நடக்கப்போவதையே அகக்கண்ணால் கண்டு இன்புற்றான். "அது நிறைவேறுமா!" என்கிற ஓர் தீராத வேட்கையும் கூடவே ஊடாடியது.

17

செத்தபிணச் சவாரியும் சாகும் பிணக் கதறலும்

கண்ணைத் திறப்பதும், "தாதா! தாதா!" என்று பிதற்றுவதும், மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு அழுவதுமாகவிருக்கும் மானவதி ஆவேசத்துடன் படுக்கையிலேயே எழுந்து உட்கார்ந்து தன் பக்கத்தில் முகத்தை தொங்கப்போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கும் நர்ஸைப்பார்த்து, "நர்ஸ்!....எங்க தாதாவிடம் நான் போக வேண்டும். எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. ஆஸ்பத்திரியும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். எங்க தாதா இல்லாது நான் இருக்க மாட்டேன். என்னை எங்க வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள். எத்தனை கெஞ்சினாலும் மாமாவும் மாமியும் என்னை ஏமாத்தா...எங்க தாதாவுக்கு என்னைத்தவிர வேறு மனுஷ்யரே கிடையாது. எனக்கும் அப்படித்தான். எங்க தாதாவைவிட ஒசத்தி யாருமே இல்லே. நர்ஸ்!...என்ன ஊமைபோல் உட்கார்ந்திருக்கிறயே! என்னை நீயும் அனுப்பமாட்டாயா!" என்று சற்று அதட்டலாகக் கேட்டாள். நர்ஸுக்கும் கிழவரின் விஷயம் தெரியுமாதலால் சிறுமியின் வார்த்தையைக் கேட்டதும் கண்ணில் ஜலம் முட்டியது. அதை மெல்ல சமாளித்துக்கொண்டு, "பாப்பா!....நீ பேசாமே படுத்துக்கோ...தாதாவை நான் போய் கூட்டிண்டுவரேன். சமத்தா யிரும்மா!...அப்பறம் உடம்பு அதிகமாகிவிடும்...படுத்துக்கொள்ளு" என்று கூறிப் படுக்கவைத்தாள்.

மானவதி மறுபடியும் எழுந்து ஜன்னலருகிலேயே சென்று கம்பியின் பக்கமாகப் பார்த்தபடியே..."தாதா!...தாதா!...என்று கதறிக்கொண்டிருந்த சமயம் இரண்டு மண்டை விளக்குகள்

போகும் வெளிச்சம் தெரிந்ததுகண்டு அதையே உற்றுக் கவனித்தாள். விளக்கின் பக்கத்திலேயே கிழவரின் சவத்தைத் தூக்கிக் கொண்டு போவதைப் பார்த்ததும் சற்று பயந்தவளாய்... “ஐயையோ! யாரோ செத்துப்போயிட்டா...தூக்கிண்டுபோருளே. அதோ சஞ்சீவி மாமா, எங்க வீட்டுப் பின்கட்டு மாமா எதிர்வீட்டு மாமா, எல்லாரும் தூக்கிண்டுபோருளே, யார் செத்துட்டா... மாமீ!...இவாள்ளாம் எந்த பிணத்தைத் தூக்கிண்டுபோரு?” என்று பயத்துடனும் ஆச்சரியத்துடனும் கேட்டவாறு பார்த்தாள்.

பிணம் இந்த வழியாகத்தான் போகவேண்டும். பிணத்தைப் பார்த்தவுடனே கூடவிருந்த தம்பதிகளுக்கு அடக்கமுடியாத துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. நர்ஸுக்கும் தாங்கவே முடியவில்லை. “ஐயோ! ஆத்மா முன்னும் அதைத் தாங்கிய சரீரம் பின்னுமாகக் கிளம்பிவிட்டதே...தாதா!...எமனிடம் வாதாடி உமது உயிரை பதிலுக்குக் கொடுத்து உமது கண்மணியின் உயிரைக் காப்பாற்றினீரா!...ஐயோ! சிறுமிக்குத் தெரிந்தால் சகிப்பாளா...உம்முடைய ரத்தினத்தைவிட்டு உமது உயிர் எப்படித்தான் பிரிந்தது தாதா! ..நீர் எங்காவது தெய்வம்போலவிருந்து உமது ஜீவாதாரத்தைக் காப்பாற்றும்” என்று தம் தம் உள்ளுக்குள் எண்ணிக் கதறினார்கள்.

பிணத்தைத் தூக்கிச் செல்லும் சஞ்சீவியின் அழுகையும் கதறலும் சொல்லிமுடியாது. மானவதிக்கு சில குழந்தைகளைப்போல் பிணத்தைப் பார்ப்பதென்றால் அதிக பயம் கிடையாது. எனினும் சற்று அச்சம்மட்டும் உண்டாகும். தான் கேட்டதற்கு இவர்கள் பதில் சொல்லாது கண்ணீர்விட்டுக் கலங்குவதைக்கண்டு ஒவ்வொருடைய முகத்தையும் பார்த்து பேந்தப் பேந்த விழிக்கிருள். விஷயம் இன்னதென்று தெரியாததால் மிரண்டுபோய், “ஏன் இப்படி எல்லோரும் அழுகிறீர்கள்? செத்துப்போனவா ஒனக்குத் தெரிந்தவாளா?” என்று கேட்டாள்.

பதில் சொல்லமுடியாது தத்தளித்தார்கள். இதற்குள் பிணம் சென்று மறைந்துவிட்டது. அவர்களின் விம்மல் குறையவில்லை. மானவதியும் கேட்பதை விடவில்லை. மூவரும் சற்று சமாதானமடைந்தவர்களாய் கண்களைத் துடைத்துக்கொண்டு, ஒரு நெடுமூச்செறிந்தார்கள். மானவதி கூடவிருந்த, மாமாவைக் கட்டிக்கொண்டு “மாமா ஏன் நீங்கள் அழுகிறீர்கள்? சொன்னால்தான் ஆயிற்று. எங்க தாதாவிடம் என்னைக்கொண்டு விட்டால்தான். இல்லாவிட்டால்நான் செத்துப்போயிடுவேன். என்னையும் இப்படித்தான் தூக்கிண்டு போவார்கள்”...என்று அதீதமான வழியில் பேசவாரம்பித்தாள்.

அவள் வாயைப் பொத்திக் கட்டிக்கொண்டு...“கண்ணு! அசடுபோல் பேசாதேம்மா...தாதா ஒரு அவசரகாரியமாக சங்கீத விஷயமாய் ஊருக்குப் போயிருக்கிருராம். உனக்கு நிறைய நகைகள் செய்வதற்கும் புடவைகள் வாங்குவதற்கும் நிறைய பணம் சம்பாதித்துக்கொண்டு வந்துவிடுவார் அழாதேம்மா” என்ருர்.

இதைக்கேட்ட மானவதிக்கு நம்பிக்கையே உண்டாகவில்லை. "என்னிடம் சொல்லாமல் என்னை இப்படி விட்டுவிட்டு எங்க தாதா போகவேமாட்டாரே. நீங்க எல்லாரும் சேர்ந்துகொண்டு வேணும்னு தாதா ஊருக்குப்போயிருப்பதாகச் சொல்கிறீர்கள்... நான் இனிமே இங்கே இருக்கவேமாட்டேன். தாதாவிடம் போய்த்தான் தீருவேன்...எனக்கு உடம்பு ஒன்றுமில்லை' என்று மூர்க்கத்தனமாகக் கூறிக்கொண்டே இறங்கி ஓட யத்தனிக்கையில் காலில் கட்டியுள்ள ரணத்தில் நோவு நடக்கமுடியாது தபாரென்று கீழேவிழப்போனாள்.

அதற்குள் நர்ஸ் இவளைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு... "பார்த்தியா!...மறுபடியும் இப்படி அலண்டால் உனக்கு ரணமும் ஆறாது. ஜுரமும் குறையாது. உன் தாதா நிஜமாகவே ஊருக்குப் போயிருக்கிறார். நாளைக்கே அவரிடமிருந்து உனக்கு கடிதம் வரும் பாரு உனக்காகவே அவர் போயிருக்கிறார். கண்ணு! அழாதேம்மா!" என்று சமாதானம் செய்து பார்த்தாள். ஒன்றும் உபயோகமில்லாது ஜுரம் அதிகரித்துவிட்டதால் பெரிய டாக்டர் வந்து பார்த்து, இந்த அக்கரமான செய்தியைக் கேட்டு அவரும் வருந்தினார்.

குழந்தை நன்றாகத்தூங்குவதற்கு ஒரு நல்ல மருந்தை ஊசி குத்தினார். அதன்பிறகு அதிகம் தொந்தரவு கொடுக்காமல் சற்று மயக்கத்தினால் ஆழ்ந்திருந்தாள்; எனினும் "தாதா! இன்னும் இங்கு வரமாட்டியா...ஏன் நீ ஊருக்குப்போனே?...என்று பிதற்றிக்கொண்டே இருந்தாள். அந்த பயங்கரமான கொடிய இரவும் கழியப்போகிறதா!" என்றாய்விட்டது.

18

அன்பிற்குப் பரிசு அறுதைக் குழந்தை

சஞ்சீவியினுடைய மூளையே குழம்பிவிடும்போலாகிவிட்டது. சஞ்சீவியும் கஜபதியும் அன்யோன்ய சினேகமாயிருந்ததன் பலன் சினேகிதனின் உயிர் தன் மடிமீதே பிரியவும், தன் தோள் மீதே பிணத்தைத் தூக்கிச்செல்லவும், தன் கையினாலேயே கொள்ளியைப் போட்டு எரிக்கவும் தன் காலிலேயே பரதேசிக் குழந்தையைக் கட்டிவிட்டதுவும் நினைக்க நினைக்க மூளை கலங்காமல் என்னசெய்யும்?

தன் சொந்தத்தகப்பனார் இறந்ததும், உடன்பிறந்த சகோதரன் இறந்ததும்கூட அவனுக்கு இத்தகைய துக்கமோ, இதயத்தில் பாறையைப்போல் அழுத்தும் சங்கடமோ உண்டாக்கவில்லை. கஜபதியின் முடிவுதான் அவனைச்சித்ரவதை வதைக்கின்றது. 'ஒருவிஷயமும் அறியாத சிறுமி தாதாவே உலகத்தில் சகலமுமென்று எண்ணியிருக்கும்

சிறுமி, அவளும் ப்ராணபத்தில்படுத்துள்ள நிலைமையில்நான் எப்படித் தான் அவளுக்கு இந்த பேரிடிபோன்ற விஷயத்தைச் சொல்வது? இதைக்கேட்ட உடனே அவள் உயிரும் போய்விடுமே! அதுவும் ஒரு கொலைபாதகமாக என்னையே யல்லவா சுற்றிநிற்கும்? இந்த ப்ராரப்த கர்மாவுக்கு நான் என்னவிதமான பரிகாரம் தேடுவேன்' என்று இரவுபூராவும் சஞ்சீவி துடிதுடிக்கிறான்.

ஏற்கெனவே அவன் பெரிய சம்சாரி, அவனுக்கே மூத்த மனைவி 4 குழந்தைகளைவிட்டுப் பரலோகம் போய்விட்டாள். முட்டாள் தனமாக இளைய மனைவியை மணந்து வீட்டில் படாத இம்சை களும் படுவதும் மூத்தமனைவியின் குழந்தைகளின் பரிபவமுமே தன் வாழ்க்கையில் வேறு நரகம்வேண்டாம், இதுவே போதும் என்று அத்தனை மனது வெறுத்துப்போய் சீக்கிரம் தன்காலம் முடியாதா!" என்கிற நிலைமைக்கு வந்துவிட்டது.

"இத்தனை உபத்திரவற்கு மத்தியில் இந்த அனாதைக் குழந் தையை நான் எப்படிவளர்ப்பேன்? மரணத்தருவாயில் என்னிடம் ஒப்படைத்துவிட்டுப் போனதை நான் எப்படி பரிபாலிப்பேன்? என் மகனுடைய துர்க்குணங்களையும் தீய ஒழுக்கங்களையும் கஜபதி அறியாததால் அந்த அயோக்யனுக்கு மகா புத்திசாலியான மான வதியை மணம் செய்விக்கும்படிக் கூறிவிட்டான். பெத்தமகனானல் என்ன! அவனுடைய குணத்தழகை அறிந்து நானே இந்தப் பரதேசி குழந்தையை எமனிடம் ஒப்புவிப்பதற்குச் சமானமாகக் கட்டி வைப்பது தருமமா! மகத்தான பாதகமல்லவா இது...ஈச்வரா! இந்தவிதமான சோதனையில் என்னைவாட்ட எத்தனைநாள் காம்வைத் திருந்தாய். நாளை பொழுதுவிடிந்ததும் அக்குழந்தைக்கு நான் என்னபதில் சொல்வது? என்னிதயங்கூட வெடித்து கஜபதியின் பின்னேடு போய்விடக்கூடாதா?" என்று எண்ணி புலம்பிப் புலம்பி சோகமிகுதியால் களைவந்துவிடுமோ என்ருகிவிட்டது.

விடியற்காலை பொழுது நன்ருகப் புலருவதற்குமுன்பு மான வதியிடமே உட்கார்ந்திருந்த ஸீதாபதி சஞ்சீவி வீட்டிற்குவந்து கத விடித்தார். சஞ்சீவிக்குத் தூக்கிவாரிப்போட்டது. "மானவதியும் இறந்துவிட்டாள் என்று சொல்லவந்துவிட்டானே!" என்ற கலக் கத்தில் சில வினாடிகள் உடம்பு நடுங்கியது. "என்ன!...என்ன சமாச்சாரம்!...குழந்தை எப்படியிருக்கிருள்?"...என்று நாக்குழறக் கேட்டவாறு வாசலுக்குவந்தான்.

ஸீதாபதி:—(இரவு நடந்தவைகளைச் சொல்லிப் பின்) இனிமேல் என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. நேற்று இரவு பெரிய டாக்டரிடம் இதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தேன். அவர் சொன்னதாவது; கிழவரின் மரணத்தை இப்போதெல்லாம் சொல் லவே கூடாதாம். கிழவர் மானவதிக்குக் கடிதம் எழுதியதுபோல் ஒரு கடிதமெழுதி ஆஸ்பத்திரி விலாஸத்திற்குத் தபாலில்போட்டு அதைத் தபால்காரன் நேராக மானவதியிடமே சேர்க்கும்படிக்குச்

செய்து அதன்மூலம் அவளுக்குச் சமாதானம் சொல்லிவரவேண்டுமாம். அவள் உடம்புமுற்றும் குணமாகிய பிறகு, கிழவர் போயிருக்கும் இடத்திலேயே இறந்துவிட்டதாகத் தெரிவித்துவிடவேண்டும். அப்போதுதான் அவள் உயிருக்கு ஆபத்து ஒன்றும் இல்லாதிருக்கும் என்று சொன்னார். இதை உம்மிடம் சொல்லி இப்போதே கடிதம் எழுதுவதற்குத்தான் நான் இத்தனை காலையில் வந்தேன்.

மானவதி மகா புத்திசாலியும் கிழவரிடத்தில் உயிரையே வைத்திருப்பவளுமாதலால் அவளைச் சமாதானம் செய்வது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. அவள் சமாதானமாகும்படி எழுதுங்கள். டாக்டர் கூட அவளிடத்தில் பச்சாத்தாபம் கொண்டு வெகு அன்புடன் சிகிச்சை செய்கிறார். நான் பல் தேய்த்துவிட்டு வருவதாகச்சொல்லி வந்தேன். நான் போகிறேன். கடிதத்தை நேரிலேயே தபால்காரனிடம் கொடுத்து மானவதி கையிலேயே கொடுக்கும்படி ஏற்பாடு செய்யுங்கள்" என்று கூறிச்சென்றார்.

சஞ்சீவிக்கு இதுவும் ஒரு நல்ல யுக்தியாகத் தோன்றியதால், எப்படி கடிதமெழுதலாம் என்று யோசிக்கத் தொடங்கினான். இந்த தீவிரத்தில் பல் தேய்ப்பதையும், கிழவரின் மறுநாளைய க்ரியைகளைச் செய்வதையுங்கூட அவன் உள்ளம் மறந்தது.

19

விதை ஊன்றியது விருக்ஷம் ஆகுமா ?

தாயும் மகனும் ஜம்மென்று காரில் கிளம்பிச்சென்றார்கள். தர்முவின் முகத்தில் நல்ல தெளிந்த களையேயில்லை. ஏதோ கட்டிப்போட்ட பறவையைப்போலச் சென்றாள். குறித்த இடத்திற்குத் தாயாரை அழைத்துச் சென்று ஒரு தனியறையில் நாற்காலியில் உட்காரச் செய்துவிட்டு, "அம்மா! இதோ வருகிறேன். தைரியமாக இரு" என்று கூறிச்சென்றான்.

உள்ளுக்குள் பயந்தவாறே தர்மாம்பாள் உட்கார்ந்திருந்தாள். உள்ளே பயித்தியங்கள் கர்ஜிக்கும் கர்ஜனை தர்முவின் காதில் கேட்காமலில்லை. "என்னம்மாடீ!...என் செல்லமடீ!...ஐயையோ!....நீ போகலாமோடீ ?"...என்ற ஒரு பெருங்குரல் கேட்டு அலறினாள்.

அதற்குள் முகுந்தன் அங்கு வந்து, "அம்மா! அதோ அங்குள்ள ஒரு கூட்டத்தைப் பார்த்தாயா ? அவர்களுக்கெல்லாம் வெகு நன்றாக குணமாகிவிட்டது. பாவம் ஜெயிலிலிருந்து கைதிகள் விடுதலையானால் எப்படிச் சேர்த்துக்கொள்ளமாட்டேன் என்று தள்ளிவிட்டால் மறுபடியும் திருட்டுத் தொழிலுக்கே போய் வாழ்நாள் முழுதும் கெட்டுவிடுகிறார்களோ அதுபோல் இங்கு குணமாகிய

வர்களில் சிலருக்குப் போக்கிடமேயில்லை. சிலரைச் சேர்த்துக் கொள்ளமாட்டேனென்று தள்ளிவிடுகிறார்கள்.

பெண்களாயிருந்தால், ஆண்கள் மறு கல்யாணம் செய்து கொண்டு இவர்களை அடியோடு வெறுத்துத் தள்ளிவிடுவதால் அதே ஷாக்கினால் மறுபடியும் பயித்தியம் பிடித்துவிடுகிறது. சிலருக்கு அந்த நிலைமையில் மனத்துணிவு உண்டாகி தற்கொலை புரிந்துகொள் கிறார்கள். சிலர் துன்மார்க்கத்தில் பிரவேசித்துப் பாழாகிறார்கள். எங்கோ சிலர் ஒழுங்காக ஏதாவதொரு வேலை சம்பாதித்துக் கொண்டு மானமாய்ப் பிழைக்கிறார்கள். கல்யாணமாகாத பெண் களையோ, கேட்கவேவேண்டாம். பைத்தியக்கார ஆஸ்பத்திரியி லிருந்தவளை யார் கட்டிக்கொள்வார்கள்? வயதானவர்களுக்கும் திண்டாட்டம். இந்த உளவுகளை நான் அறிந்தபிறகு என் மனது தவிக்கின்றதைச் சொல்லமுடியாது.

அம்மா!...அதோ நிற்கும் இரண்டு பெண்களைப் பார்த்தாயா! கிளிபோலிருக்கிறார்கள். அவர்களுக்குத் தாய் தந்தைகள் இல்லை. ஒருத்தியை மாமனும், ஒருத்தியை அண்ணனும் கொண்டுவிட் டார்கள். இப்போது தெளிந்தபிறகு யாருமே வந்து அழைத்துப் போகவேயில்லை. கடிதங்கூட அவர்களே எழுதினார்கள். தகவலே இல்லையாம். "எங்களுக்கேன் குணமாயிற்று...அல்லது நாங்களேன் சாகாமல் இருக்கிறோம்!" என்று சதா கண்ணீர்விட்டுக் கலங்கு கிறார்கள். என்னெதிரிலேயே மென்னியைப் பிடித்துக்கொண்டு சாகவும் துணிந்தார்கள். பிறகு எல்லோரும் சேர்ந்து தடுத்தோம்.

தர்:—(இடைமறுத்து) ஆமாம்பா! இந்த கதையெல்லாம் எதற்கு என்னிடம் சொல்கிறாய்? இதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?

முகு:—சம்பந்தமிருப்பதால்தான் இத்தனை பாடுபடுகிறேன். இந்த ஊருக்கு 4 மைல் சமீபத்தில் ஒரு பெரிய கட்டிடம் விலைக்கு வந்திருக் கிறது. அதை வாங்கி இன்னும் சிறிது சீர்படுத்திக் கட்டிவிட்டால் ஜம்மென்று ஆகிவிடும். அதில் நீ வெறும் சோம்பேறிகளை வளர்க் காமல் ஒரு முக்யமான தொழிலை ஆரம்பித்து இந்தமாதிரி பரிதாப கரமான ஆத்மாக்களுக்கு வேலை கொடுத்து ஆதரித்தால் வியாபார முறையில் உனக்கும் நிறைய லாபம் வரும். அவர்களுக்கு பிழைப் பும் உண்டாகும். உனக்கு நல்ல புண்யமும் ஜீவகாருண்யம் காட்டுவதால் கீர்த்தியும் கைம்மேல் பலனாகக் கிடைக்கும். இரும்புப் பெட்டியில் ஆழ்ந்த நித்திரையிலுள்ள நகைகளையும் பணத்தையும் இந்த புனிதமான கைங்கர்யத்தில் செலவு செய்தால் இகபரஸார்த்த கம் உண்டாகுமேயன்றி வீண் போகாதம்மா!...என்னுடைய மனோதர்மத்தில், கற்பனை உலகில் சஞ்சரிப்பதில் எந்த வழியில் எந்த தொழிலை நடத்தி எப்படி இவர்களுக்கு ஆதரவு காட்டலாம் என் பதை ஒரு பெரிய நிர்மாண திட்டம் வகுத்துவிட்டேன்.

நாம் வாங்கிக் கட்டப்போகும் கட்டிடத்திற்கு "க்ருபாமந்திர்" என்கிற வெகு அழகான பெயரை வைத்து இந்த நிர்ப்பாக்ய மனி

தர்களுக்கு ஆதரவைக் கொடுக்கும் முறையில் நாம் செய்ய வேண்டிய திட்டங்களைக் கேளு; சொல்கிறேன்.

இவர்களில் படிக்கத் தெரியாதவர்களுக்குப் படிக்கத் தெரிந்தவர்களைக்கொண்டு கல்வி பயில்விப்பது. தொழிலில் வேலைகொடுத்து இங்கேயே அவர்களுக்கு இடவசதி, சாப்பாட்டு வசதி செய்து கொடுப்பது, இவர்களுக்குள்ளேயே தேர்ந்தெடுத்து விவாகத்தைச் செய்துவைப்பது. இதையோர் சிறிய ஊராயும், ஒரு தனி சமூகமாயும் வளர்த்துவிடலாம்மா...இவர்களிடம் நீ தயவுசெய்து முதலில் உன்னருமையான இதயத்தில் க்ருபையைக் காட்டி அதையே க்ருபாமந்திரமாகத் திறந்துவிடு. பிறகு காரியம் தானுக ஆகிவிடும் பாரு....அப்பாவிடம் இந்த விஷயம் பூராவும் சொன்னேன். அவர் அளப்பரிய ஆனந்தமடைந்து இத் தீர்மானங்களுக்கு உடனே தமது ஆதரவைக் கொடுத்துவிட்டார்...அம்மா!...நீ அவர்களருகில் வந்து அந்த பரிதாபக்காக்ஷியைப் பாரேன். உன் மனமே இளகிவிடும்" என்று மூச்சுகூட விடாமல் மெஷின்போல் கூறினுன்.

தர்மாம்பாளின் மனத்திற்கு எதுவும் முடிவாகத் தோன்றவே இல்லை. என்னபதில் சொல்வதென்றும் தெரியாதுவிழித்தாள். நன்றாகத் தெளிந்துள்ள சிலரிடம் நேரில் பேசி அவர்களுடைய மனத்துயரத்தையும் அறியச்செய்ய வேண்டுமென்று முகுந்தனுக்கு தீவிரமாகத் தோன்றியது. தன்னுடைய முயற்சி பலித்துவிடும் என்கிற நம்பிக்கையும் வெகு அழுத்தமாக உதித்தது. அந்நம்பிக்கையை நினைக்கும்போதே அவன் மனத்தில் ஆனந்தம் சுறந்தது.

20

சந்தோஷமும் சமாதானமும்

காலை சுமார் 10-மணியிருக்கும். "தபால்...குமாரி மானவதி தேவிக்கு தபால் வந்திருக்கிறது" என்று தபால்காரன் கடிதத்தை மானவதி படுத்திருந்த இடத்திற்கே கொண்டுவந்து கூவினுன். இந்த குரலைக்கேட்ட மானவதி "எனக்கா கடிதம்!... எனக்குத்தாளு மாமி!" என்று வியப்புடன் கேட்டாள். "ஆமாம் கண்ணு! உனக்குத்தான் கடிதம். நான் நேற்றைக்கே சொல்லவில்லையா! உன் தாதாவிடமிருந்து உனக்குக் கடிதம்வரும்; கவலைப்படாதே என்று சொன்னது பலித்துவிட்டது...இந்தா கடிதம் நீயே மெல்ல படித்துக்கொள்ளு...இல்லாவிட்டால் நான் படிக்கட்டுமா" என்றுள் ஜானகி.

வயிற்றிலிருந்து கொந்தளித்துக்கொண்டு வரும் பேரன்பும் ஆத்திரமும் ஜ்வலிக்க கடிதத்தை வாங்கித் தானே உடைத்தாள். அதில் 100 ரூபாய் நோட்டு ஒன்று இருக்கக்கண்டு அளப்பரிய ஆனந்தத்

டன் நோட்டை எடுத்துப்பார்த்து, "மாமா!...மாமீ! தாதா 100 ரூபாய் பணமனுப்பியிருக்கிறார்...என்மேலே எவ்வளவு ஆசை பாத்தங்களா?"...என்று கூறியபடியே கடிதத்தைப் படித்தாள்.

'என் கண்மணி மானவதிக்கு சர்வமங்களமும் உண்டாவதாக.

அன்று நீ என்னைத் தூண்டியபடியே நான் ஜமீந்தார் வீட்டில் பாட்டு கற்றுக்கொடுக்கத் திடீரென்று ஒப்புக் கொண்டேன். அவர்கள் வெளியூரிலிருப்பதால் காரில் என்னை அழைத்துப்போனார்கள். எனக்கு அட்வான்ஸாக 100 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதை உனக்கு அனுப்பியிருக்கிறேன். நீ உன்னிஷ்டம்போல் அதைச் செலவுசெய்து கொள்ளு. உனக்கு உடம்பு நன்றாகக் குணமாகிய பிறகு வந்து உன்னை அழைத்துப்போகிறேன். நீ சமத்தாக இரு. கவலைப்படாதே. சஞ்சீவி மாமா, ஜானகி, ஸீதாபதி இவர்கள் உன்னைக் கவனித்துக் கொள்வார்கள். சஞ்சீவி மாமியே உன்னை ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போவார். சமத்தாக அவருடன் போயிரு. நான் சீக்கிரமே வந்து விடுவேன். மாதாமாதம் 100 ரூபாய் அனுப்புகிறேன். உன்னோடு சொல்லாது போனதற்காக கோபிக்காதே கண்ணு!...

உன் ப்ரியமுள்ள,

தாதா"

இதைப் படித்ததும் ஆனந்தத்தினால் அழுகைதான் வந்தது... கூடவே சந்தோஷமும் பொங்கியது. "தாதா ஊருக்குப்போயிட்டாரா...இப்ப நிஜந்தான் மாமா...இந்த ரூபாயிக்கு என்ன பண்ணலாம் மாமா...அதிருக்கட்டும். தாதாவுக்கு உடனே பதில் எழுதணும் கடிதம் கொண்டுவாருங்கள்" என்றாள்.

எப்படியாவது இவள் சந்தோஷப்பட்டால் போதும் என்று எண்ணிய ஸீதாபதி ஒரு காகிதமும் பேனாவும்கொடுத்தார். உடனே மானவதியே எழுத எண்ணினாள். கையில் கட்டுகட்டியிருப்பதால் "மாமா!...நான் சொல்றபடி நீங்களே எழுதிவிடுங்கள்" என்று உத்திரவு போடுவதுபோல் கூறினாள்.

"தாதாவுக்கு நமஸ்காரம்...உங்க கடிதமும் பணமும் சேர்ந்தது...எங்கிட்டெ சொல்லாமே போனது கோவந்தான்... பணத்தை நான் பத்ரமா வைக்கிறேன். சமத்தாயிருக்கிறேன் மாமாவாத்துக்குப் போறேன்....நீங்க கடிதாசிபோடுங்கோ... ஸீதாபதி மாமா ரொம்ப நல்லவர்...எனக்கு உடம்பு ஒன்றுமில்லை.. நீங்க சீக்கிரமா அழைச்சிண்டுபோயிடணும்,நமஸ்காரம்.

இப்படிக்கு,

மானவதி"

என்றதை எழுதி உடனே கவரில்போட்டு எடுத்துக்கொண்டு ஸீதாபதி வெளியே சென்றார். முன்னேற்பாட்டின்படி சஞ்சீவி வந்தான். எத்தனை அடக்கினாலும் மனத்தைக் கட்டுப்படுத்தினாலும்

சஞ்சீவிக்கு மானவதியைப் பார்க்கும்போது துக்கம் பீறிக்கொண்டு வந்தது. அழுதுகொண்டே உள்ளேபோவது அசம்பாவிதமென்றெண்ணி வெளியிலேயே சிறிது சமாளித்துக்கொண்டு உள்ளே சென்றான். இவரைப் பார்த்தவுடனே கபடமற்ற பரிசுத்த இதயத்துடன் மானவதி, "மாமா!...வாருங்கோ! வாருங்கோ! இப்பதான் தாதா கடிதம் எழுதினர். என்னெ ஒங்காத்துலேயே இருக்கச் சொல்லி எழுதியிருக்கார். இதோபார்த்தீர்களா! 100ரூபாய் நோட்டு அனுப்பியிருக்கிறர். இதுக்கு சவான் வாங்கி ஒங்காத்துலே மாமி போட்டிண்டிருக்கிறமாதிரி சங்கிலி பண்ணிக்கப்போறேன். பொங்கலுக்கு பட்டு சித்தாடை வாங்கணும். எல்லாம் இதுலே வருமோல்லியோ மாமா...ஐயையோ!...ஏன் இப்படி அழுகிறீர்கள்? நான் செத்துப்போயிடுவேன்னு அழறங்கோ...நான் செத்துப் போகவேமாட்டேன்...அதிருக்கட்டும் மாமா!...நேத்து ராத்திரி நீங்க பொணந்தூக்கிண்டு அழுதபடியே போனீர்களே...அது யாருடைய பொணம்...யார் செத்துப்போயிட்டா?...என்று கேட்டவுடனே சஞ்சீவியைத் தூக்கிவாரிப்போட்டது. உடனே ஸீதாபதி கண் ஜாடை செய்ததும், சற்று சமாளித்துக்கொண்டு.... "உம்...அது யாரோ ஒரு கிழவன். எங்க உறவு...அதனால் தூக்கினேன்...அதிருக்கட்டும். உனக்கு உடம்பு தேவலையா? வலி குறைந்திருக்கிறதா? நன்ருகத் தூங்கினயா? தாதா எழுதியிருப்பதுபோல் நீ எங்காத்துக்கு வருகிருயா? என்று வார்த்தையை மாற்றினர்.

மான:—உங்காத்துக்கு வருவேன் மாமா! ஆனு...உங்காத்துமாமி சதா சிடுசிடுன்னு மூஞ்சியாலே அடிப்பாளே...ஒங்க பெண் லலிதா பாவம் தினம் அவளிடம் அடிகூட வாங்கரா...என்னேயும் தானே அடிப்பா...

சஞ்:—சீச்சீ...அசடே...லலிதா ஏதாவது விஷமம் செய்ததால் அடி வாங்கியிருப்பாள். ஒன்னெ அடிக்கவேமாட்டா...ரொம்ப நன்னு பாத்துக்குவா...நீ பயப்படாதேம்மா...என் வீட்டிலேயே இருக்கிறேன். கவலைப்படாதே தாதாஎன்று கடிதம் எழுதுகிருயா?..

மான:—ஓ...அப்பவே எழுதிவிட்டேனே...மாமா! சங்கிலி இப்பவே பண்ணி தருகிறீர்களா!

நர்ஸ்:—பாப்பா!...நீ நல்ல சமத்தோன்னே! லொடாலொடவென்று பேசினல் ஜுரம் அதிகமாகிவிடும். பேசாதிரும்மா....சீக்கிரம் இந்த மாமா வீட்டிற்குப்போய் விளையாடலாம். இல்லாவிட்டால் ஆஸ்பத்திரியிலேயே வெகு நாளாகிவிடும். தெரியுமா! தூங்கும்மா!" என்று சமாதானம் செய்தாள்.

மனத்திற்கு ஓர் ஆறுதல் உண்டாகியதால் மானவதி ரூபாயை சஞ்சீவி கையில்கொடுத்து "மாமா!...இதுக்கு சவான் வாங்கி சங்கிலி பண்ணிவிடுங்கள். நான் உடனே போட்டுக்கொள்கிறேன்...நீங்க போங்கோ...நான் தூங்கணும்" என்று தானே அனுப்பினள். இதைப்பார்த்த எல்லோருக்கும் ஆச்சரியமாயிருந்தது.

21

தருமத்தின் சிறப்பா அனாதைகளின் பூரிப்பா

நக்ஷத்திரங்களை எப்படி எண்ண முடியாதோ, கடலில் கொந்தளிக்கும் அலைகளை எப்படி எண்ண முடியாதோ, அதேபோல் உலக விசித்திரங்களையும் மக்களின் மனோபாவ மாறுதல்களையும், காலச் சக்கரத்தின் வேகத்தையும் எண்ணவும் வரையறுத்துக் கூறவும் முடியாதல்லவா!

கர்மியில் முதல் நம்பராகவும் அராமிக்கட்டையாகவும் ஒரு காலத்தில் இருந்த மனிதன் தர்ம தாதாவாக மாறிவிடலாம். தர்மத்தைச் செய்வதற்கே பிறந்ததாக ப்ரமிக்கும் வண்ணமிருந்த தர்ம பூபதியே மகாமோசமாயும் அக்ரமக்காரனாயும் ஆய்விடலாம், மக்களின் வாழ்க்கைச் சக்கரம் சுற்றும் மாதிரியும் பூகம்பத்தில் உண்டாகும் மாறுதல்களும் ஒன்றல்லவா?...பகவானுடைய க்ருபை பரிபூர்ணமாக இருக்கும் ரகஸியத்தைத் தெரிவிப்பதுதான் சுப சகுனம் என்று பெரியார்கள் கூறுகிறார்கள். அதேபோல் முகுந்தன் இக்காரியத்தை ஆரம்பித்ததுமுதல் மனத்தில் பொங்கும் ஆனந்தமும் சுப சகுனங்களும் ஒன்றன்பின் ஒன்றாக அவனைப் பின்னும் இன்பத்தில் ஆழ்த்தின.

ப்ரம்மாண்டமான கட்டிடம் பார்ப்பவர்களின் கருத்தைக் கவரும் வனப்புடன் கம்பீரமாக நிற்கும் காக்ஷியைக் காணக்காண முகுந்தனின் இதயம் ஆனந்தமயமாகப் பூரித்தது. கட்டிடத்தையும் தன் தாய்தந்தையரின் முகத்தையும் மாறி மாறிப் பார்க்கிறான். "அம்மா! கட்டிடத்தின் அமைப்பைப் பார்த்தாயா! எப்படித்தான் இளிக் கொஞ்சுகிறது! தோரண விளக்குகளும், கொத்து விளக்குகளும், வாழைமரமும் மாவிலைத்தோரணமும். அடாடா...தேவேந்திரன் கொலுபோலல்லவா இருக்கிறது. இத்தகைய பேரானந்தம் பல ஜன்மங்கள் தபம்செய்து விரும்பினாலும் வருமாம்மா...நாளை அப்பாவும் நீயும் க்ரகப்ரவேசம் வரும்போது த்ருஷ்டிதான் உண்டாகும்." என்று முகுந்தன் சந்தோஷ மிகுதியால் குதித்தான்.

மறுநாள் காலையில் மேளமும் பாண்டும் ஜம் ஜம்மென்று ஒலிக்க தர்மாம்பாளும் முத்துஸ்வாமியும் முகுந்தனும் கையில் விளக்கும், கும்பதீர்த்தமும் ஸ்வாமிபடமும் எடுத்துக்கொண்டு வேதகோஷமும் மங்களவாத்ய நாதமும் அண்டத்தை அளாவி முழங்க வெகு ஆனந்தமாய் "க்ருபாமந்திர"த்திற்குக் கிளம்பினார்கள். மேளக்காரனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அசாவேரி ராகத்தில் "ராரா மாயிண்டிதாக" என்கிற அருமையான கீர்த்தனையை வாசித்தான். பேண்டுக்காரன்மட்டும் குறைந்தவனா சகுனமும் சமயமும் அறியாதவனா? பிலகரி ராகத்தில் "இந்த கன்னானந்தமேமி" என்கிற கீர்த்தனத்தை வாசித்தான்.

பூஷணிக்காய் தேங்காய் முதலியன சுற்றி உடைத்து கற்பூரம்த்ருஷ்டி கழித்து தம்பதிகளுக்கு மங்கள ஆரத்தி எடுத்து குடும்ப சகிதம் சுபவேளையில் சுபலக்னத்தில் வெகு மகிழ்ச்சியுடன் ஆனந்தமாக லக்ஷ்மீ கல்யாணம் வைபோகங்கள் மங்களகீதம் இசைக்க, கணகணவென்று கெட்டி மேளம் கொட்ட க்ரகப்ரவேசம் செய்தார்கள்.

இக்காட்சியைக் கண்ட ஜனங்களின் கண்களிலும் ஆனந்த பாஷ்பம் பொங்கியது என்றால் க்ரகப்ரவேசம் செய்யும் உத்தம குடும்பத்தினருக்கு உண்டாகிய சந்தோஷத்தைக் கூறவேண்டுமா! வாய் பேசமாட்டாது மகிழ்ச்சியின் வேகம் பொங்குகிறது. கண்ணில் நீர் பெருகுகிறது. க்ரகப்ரவேசம் செய்த அன்றே தாம் தீர்மானம் செய்துள்ள தொழிலையும் அதே சுபமுகூர்த்தத்தில் ஓர் முக்கியமான பெரியவரின் ஆசீர்வாதத்தால் ஆரம்பித்துவைத்தார்கள்.

ஏதோ ஒருஅபரிமிதமான வெற்றியை அடைந்துவிட்ட ஓர் தனித்த உணர்ச்சியும் ஆனந்தப் பூரிப்பும் இதயத்தில் பொங்கி முகுந்தனை ஒரு சுற்று உப்ப வைத்துவிட்டது.

க்ரகப்ரவேச மகோத்ஸவத்திற்கு வந்திருந்த ஒவ்வொருவரும் "த்ருபாமந்திர"த்தின் அழகையும் அதை ஆரம்பித்துள்ள உயரிய நோக்கத்தையும் உத்தம லக்ஷியத்தையும் புகழ்ந்து பாராட்டிப் பேசுவதைக் கேட்கக் கேட்க தர்முவின் உள்ளமும் அபாரமாகப் பூரித்தது. அந்த மகத்தான காரியத்தின் சிறப்பும் கீர்த்தியும் இப்போதுதான் அவளுக்கு ஆயிரம் மடங்கு அதிகமாகத்தெரிந்தது.

முத்துஸ்வாமியின் உள்ளத்தில் அளப்பரிய ஆனந்தம் பொங்கிய போதிலும் ஒருபக்கம் ஒரு குறையும் கூடவே இருந்தது. பழயகால நினைவுகளைக் கிளப்பியதால் விசனக் கண்ணீரும் உதிர்ந்தது.

இதைக்கண்ட முகுந்தன் "ஏனப்பா உங்கள் முகத்தில் ஏதோ விசனம் தேங்கியிருப்பதுபோல் தெரிகிறதே. அது என்னப்பா?" என்று வியனமாகக்கேட்டான்.

முத்து:—உம்...பெத்த பாசமும் உடன்பிறந்த பாசமும் சாமான்யமானதல்ல. ஒவ்வொரு சமயம் அந்த பாசம்...அந்தப்பிரிவின் சோகம் வந்து பாசிபோல் படிந்துவிடுகிறது. உன் தாயாரைச் சேர்ந்த சகலரும் வந்திருப்பது வெகு ஆனந்தமாகவே இருக்கிறது. எனக்குக் கடவுள் கொடுத்ததே ஒரே ஒரு சகோதரன். அவனைப் போன்ற புத்திசாலியே இல்லை என்பது நீ கூட அறிந்ததுதான். அத்தகைய மனிதன் எப்படித்தான் மாயமாய் மறைந்துவிட்டானே! தெரியவில்லை. அவனுடைய மறைவு என்றும் ஆறாத துயரமாகவே இருக்கிறது. அந்த காலத்தில் நீ ஹாஸ்டலில் படித்துக்கொண்டு வேற்று மனிதன்போலவே தனிவாஸம் செய்துவந்தாய். நானும்

உத்யோகநிமித்தம் இமாசலம் முதல் கன்னியாக்குமரிவரையில் ஊர் சுற்றிக் காலந்தள்ளினேன். நான் அவனை எப்படி நேசித்த ஆதியில் இருந்தேனே, அதை பகவான்தான் அறிவார். அவன் சற்று முன் கோபி. செலவாளி. கல்யாணமாகி ஒரு பெண்குழந்தைகூடப் பிறந்ததாம். எனக்கு அதிகசம்பளம்வருவதில் நான் அவனுக்கு அப்படியே பாதியை அனுப்பிவிடவில்லை என்கிற கோபத்தில் கடிதங்கூடப் போடாது விட்டுவிட்டான். எப்படியோ சவுக்யமாயிருந்தால் போதும் என்று நினைத்திருந்தேன். பிறகு அவனைப்பற்றி விசாரித்ததில் தகவலே தெரியவில்லை. சன்யாசியாகிவிட்டான், ரங்கூன் பினங்கு முதலிய இடங்களுக்குக் கப்பலேறிவிட்டான்...இறந்துவிட்டான் என்றெல்லாம் தோன்றியவாறு செய்திகள் கிடைத்தன. நானும் எவ்வளவோ ப்ரயாஸை எடுத்துக்கொண்டு விசாரித்தேன். பலனே இல்லை. மக்கள் மனைவி என்னவானார்களோ ஒன்றுமே தெரியவில்லை. இந்த வைபவத்தில் அவனும் குடும்பத்துடன் இருந்தால் எத்தனை ஆனந்தமாகவிருக்கும். உடன் பிறப்பில்லா உடம்பு பாழ் என்கிற வாக்கியத்தின் உணர்ச்சி என் மனத்தை அறுக்கிறது. அதை நினைத்தேன்; அதான் கண்ணீர் வந்தது....

முகு:—எனக்குக்கூடத்தான் அப்பா இந்த விஷயத்தை அம்மா சொல்லியிருக்கிருள். நானும் நினைத்துக்கொண்டுதானிருக்கிறேன். அந்த மனிதன் செய்தது முட்டாள்தனம் என்றுதான் நான் சொல்லுவேன். மனைவிமக்கள் கதிகூடத் தெரியவில்லையே. நாம் இத்தகைய உயர்ந்த நிலையில் இருப்பதற்கு எத்தனை உபகாரம் செய்யலாம்?...உம்....கடந்ததை எண்ணி விசனிப்பதில் பலனில்லை. விருந்தாளிகள் ஏராளமாக வந்திருக்கிருர்கள். வாருங்கள்—என்று தகப்பனுரைச் சமாதானம் செய்தான்.

ஆஸ்பத்திரியில் நன்ருகக் குணமாகிய அனேகர் அந்த வைபவத்தில் கலந்துகொண்டார்கள். தம்மைக்காப்பதற்காகவே பகவான் இந்த டாக்டரை நியமித்ததாக அந்த பரிதாபகரமான ஆத்மாக்கள் நினைத்து இன்புற்ருர்கள். சர்வம் ஆனந்தமயமாகவே காணபட்டது.

22

சாந்தி ஒருபுறம் சங்கடம் ஒருபுறம்

மாளவதி நன்ருகக் குணமடைவதற்கு ஒருமாத காலமாகி விட்டது. அவளுக்குத் தாதாவின் கடிதங்கள் தவருது வந்துகொண்டிருந்தன. அவளும்வெகு அக்கரையுடன் பதில்போட்டு வந்தாள். கிழவர் பெட்டியில் தன்னுடைய சம்பாத்யத்தில் மிச்சங் கண்டு சேர்த்துவைத்திருந்த ரூபாய் 500 தானிருந்தது; அதையும் அவர் சஞ்சீவியின் கையிலேயே கொடுத்துவைத்திருந்தார்.

அந்த பணத்தில்தான் சஞ்சீவி 100ம், 50-மாகப் பணத்தை மானவதிக்குக் கொடுத்து அவளை உத்ஸாகப்படுத்திவந்தார். இந்த நூதன கற்பனைமுறையில் மானவதிக்குண்டான நம்பிக்கை எல்லை கடந்தது. உடம்பு முற்றும் குணமாகியதும் சஞ்சீவி தன் வீட்டிற்கே அழைத்தார். அதற்கு முன்பே தன் மனைவியிடம் கெஞ்சிக் கூத்தாடி அந்தப் பரதேசிக் குழந்தையை அன்போடு ஆதரிக்கும் படிக்கும், தாதா இறந்துவிட்டதைச் சொல்லக் கூடாதென்றும், சீக்கிரத்திலேயே அவளை ஒரு ஹாஸ்டலுக்கோ அல்லது நல்ல பையனாகப்பார்த்து விவாகம் செய்தோ அனுப்பவிடுவதாயும் மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.

அந்த பரதேவதையை த்ருப்தி செய்வதற்காக கிழவரின் பணத்தில் 100 ரூபாய் சொளை சொளையாக அர்ப்பணம் செய்தார். காலில்விழுந்து கும்பிடாத குற்றந்தான். வீட்டிலுள்ள மற்றவர் களிடமும் அக்கம்பக்கம் உள்ளவர்களிடமும் கிழவரின் மரணத் தைப்பற்றி இக்குழந்தையிடம் தெரிவிக்காமலிருக்கும்படி வேண்டிக் கொண்டபிறகு அவளை அழைத்துவந்தார். மானவதியின் ஆசைப் படியே சங்கிலி செய்து போட்டார். முன்பிருந்த வீட்டைக் காலி செய்துவிட்டார். குழந்தையின் மனங் கோணுதவாறு இருந்து அவளை ஒரு காப்பாளியிடம் சேர்ப்பிப்பதற்காக ஆபீஸில் லீவு எடுத்துக் கொண்டு கூடவே இருந்து வெகு அன்புடன் நடத்த வாரம்பித்தார்.

சஞ்சீவியின் மனைவி சற்று பத்திரகாளி சொரூபத்தைச் சேர்ந் தவள் என்பது மானவதிக்கு முன்பே தெரியுமாதலால் அவள் சஞ்சீவியினிடம் அதிக சலுகை காட்டிவந்தாள். அவளுடைய நல்ல காலத்தின் பலன்தானோ என்னவோ அந்த மகாதேவிகூட மான வதிக்குத் தனியின்றி எண்ணெய்தேய்த்து வேளா வேளைக்குச் சாதம்போட்டு முகத்தைக் காட்டாது இருப்பதைக் கண்ட சஞ்சீ விக்கே வியப்பாகவிருந்தது.

மானவதிக்கு, இன்னும் தன் தாதாவந்து அழைத்துக்கொண்டு போகவில்லையே என்கிற ஏக்கமும் குறையும் உண்டாகியது. கோபங்கூட வந்தது. உடனே தன்னைவந்து அழைத்துப் போகும் படியாக கோவித்துக்கொண்டு கடிதங்களை பாணம்போல் தொடுத் தாள். அதற்கு இரண்டொரு கடிதங்கள் தனக்கு ஒழியவில்லை என்றும், ஜமீந்தார்விடமாட்டேனென்கிறாரென்றும், சஞ்சீவியிடமே சமத்தாயிருந்தால் சீக்கிரம் தான் வருவதாயும் பதில் வந்தது.

கட்டிக்கொடுத்தசாதமும் சொல்லிக்கொடுத்த வார்த்தையும் எத்தனை நாளைக்கு நிற்கும். 100 ரூபாயின் மோகம் தணிகிறவரையில் அன்பும் அமைதியும் சிறிது நிலவியிருந்தது. அந்த மோகம் தணிந்து, சுயரூபத் தின் ப்ரவாகம் தலை தூக்கியதால் மானவதியை சிறிய சிறிய காரியங் களைச் செய்யும்படி கடிந்துகூறத் தலைப்பட்டாள். அதற்குப் பிறகே மானவதிக்கு தாதாவின் மீது அதிக கோபம்வந்ததால் தன்னைக்

கொண்டு விட்டுவிடும்படி சஞ்சீவியிடம் வற்புறுத்தவும் அதையே நினைத்து இரவு பகல் வேதனையுடன் அழவும் ஆரம்பித்துவிட்டாள்.

சஞ்சீவிக்கு தர்மசங்கடமாகிவிட்டது. என்ன விதமாகத்தான் சமாதானம் செய்ய முடியும்? ஸீதாபதியுடனும் பெரிய டாக்டருடனும் கலந்து யோசித்து ஒரு முடிவுக்குவந்தான். அதாவது: கிழவர், திடீரென்று வந்த நதியின் ப்ரவாகத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டதாயும், தேடித் தேடிப்பார்த்தும் அகப்படவில்லையென்றும், அவருடைய துணிமணி பணம் முதலியவைகளை அவளுடைய பேத்திக்கு ஜமீந்தாரே அனுப்பியதுபோலும் ஒரு யுக்தி செய்து கடிதமெழுதி முன்பின்னறியாத ஒரு ஆளிடம் கொடுத்தனுப்பினார்கள்.

தாதா வந்தழைத்துப் போகவில்லையே என்கிற கோபத்தில் இருக்கும் மானவதிக்கு இந்த கடிதமும் சாமானும் வந்ததைக் கண்டு அப்படியே அலறிப்போய், "ஐயையோ!...தாதா செத்துப் போய்விட்டாராமே...நான் என்ன செய்வேன்!" என்று.பெரிதாக அலறிக் கதறுகிறாள்; முட்டிக்கொள்கிறாள்...அவளைப் பிடிக்கவே முடியாது அன்று பூராவும் துடித்தாள். தாதாவின் பிரிவால் அலறினாள். இது எல்லோரும் எதிர்பார்த்த விஷயமாகையால் மனது சற்று உறைந்துபோயிற்று. எல்லோரும் சேர்ந்து அவளுக்குத் தேறுதல் கூறினார்கள். பெத்த தகப்பனே தன் மகனாகிய த்ருவனை வீட்டை விட்டுக் காட்டுக்குத் துரத்திவிட்ட பிறகு அந்த சின்ன குழந்தை பகவானே கதி என்று தவம்செய்தானே, அவனைப் பகவான் வந்து காப்பாற்றி அக் குழந்தைக்காக ஒரு தனி உலகமே, "த்ருவ மண்டலம்" என்று ச்ருஷ்டித்தார் பாரு. அப்படியே உன்னையும் பகவான் காப்பாற்றுவார்; நீ எப்போதும் இனி 'நாராயணா! நாராயணா!' என்று பகவன் நாமத்தையே சொல்லி தேறுதலடைந்தால் உனக்கு நல்ல கணவனைக் கடவுள் உடனே கொடுப்பார். இருந்தவர்களை எண்ணி சதா அழக்கூடாது" என்றெல்லாம் தேறுதல்கள் கூறினார்கள். மற்ற ஆறுதல் மொழிகளைவிட த்ருவனின் சரித்திரமும் ப்ரக்லாதனின் சரித்திரமுமே அவள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. அதையே சதா எண்ணி "நாராயணா!...நாராயணா!" என்று கூறிவந்தாள். அதோடு தன் தாதாவின் தம்பூராவை தெய்வமாக எண்ணி அதற்கும் மஞ்சள் குங்குமமிட்டு கற்பூராரத்தி செய்வதும், அதை மீட்டிக்கொண்டு தாதா சொல்லிக்கொடுத்த பாட்டுகளைப் பாடுவதுமாக ஓர் நல்ல பழக்கத்தை சஞ்சீவி உண்டாக்கி அவள் கவனத்தை மெல்லத் திருப்பி ஒரு மாதிரியாக்கியதால் சஞ்சீவியின் மனம் சிறிது சாந்தியடைந்தது.

23

கைக்கெட்டியது வாய்க்கு எட்டுமா?

நாட்கள் எப்படித்தான் ஓடிமறைந்தனவோ, கிழவரின் ஆப்திகம் முடிந்துவிட்டது. எத்தனை ப்ரயாஸைப்பட்டும் சஞ்சீவிக்கு இப் பெண்ணை ஒரு பாதுகாப்பில் சேர்க்கமுடியாது போயிற்று. அவள் சிறுமியாயினும் தனக்கு இனி நாதியில்லை, அனாதை, அபலை, திக்கற்றவள்...நிர்க்கதியான பரதேசி; பிறருடைய தயவில் காலத்தைத்தள்ளும் தலைவிதிக்குட்பட்டுத்தான் வாழ வேண்டும்: அடிமையைப்போலத் தானிருக்கவேண்டும் என்றெல்லாம் எண்ணங்கள் உண்டாகி வதைக்கவாரம்பித்தன.

மானவதிக்குப் போஷாப்பும் சுகமும் கிழவருடன் கூடவே மறைந்தனவெனினும் இயற்கையன்னையின் பாதுகாப்பிலேயே நன்றாகசெழுசெழுவென்று வளர்ந்துவருவதைப்பார்த்து சஞ்சீவிக்கு உள்ளூறப் பயம் உண்டாகியது. முரட்டுத்தனமும், அக்ரம புத்தியும் உடைய தன்மகன் கண்பார்வையில் இவளை வைக்கக்கூடாது என்கிற தீவிரமான எண்ணம் உதித்ததால் இவளை எங்கேனும் ஒரு ஹாஸ்டலில் சேர்க்கவே எண்ணி அதற்கான ப்ரயத்தனம் செய்து கொண்டிருக்கையில் ஒரு கடிதம் வந்தது. அதில் "முன்பு குறிப்பிட்டிருந்த ஆசாமி தற்போது வல்லிபுரத்தில் ஒரு ஆச்ரமம் அமைத்துக்கொண்டு அதிலிருக்கிறான். நெருங்கி விசாரித்ததில் அதே மனிதன்தான் இவன்; சந்தேகமில்லை என்று உணர்ந்தேன். அதனால் உங்களுக்கு எழுதுகிறேன். நீங்கள் குழந்தை சகிதம் இங்குவந்தால் நேரில் பார்க்கலாம்." என்று எழுதியிருந்ததுகண்டு சஞ்சீவியின் உள்ளம் மகிழ்ந்தது.

சஞ்:–மானவதீ! இங்குவாம்மா! என்னசெய்துகொண்டிருந்தாய்?

மான.—மாமிக்குக் கால் பிடித்துக்கொண்டிருந்தேன் மாமா!...

சஞ்:—என்ன!...கால்பிடித்துக் கொண்டிருக்கிறாயா!...உன்னையா கால்பிடிக்கச்சொல்கிறாள்?...என்று கோபத்துடன்கேட்டார்.

மான:—ஏன் மாமா! பெரியவர்களுக்குப் பணி செய்தால் தப்பா என்ன...நல்லதுதானே...அதிருக்கட்டும். நீங்கள் எதற்குக் கூப்பிட்டீர்கள்?....

சஞ்.—உங்க தாதா உன் தகப்பனாரைப்பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறாரா?—என்றார். தாதாவின் வார்த்தையை எடுத்ததுமே அச் சின்னஞ் சிறுமியின் முகத்தில் சடக்கென்று மாறுதல் உண்டாகி முகம் சுருங்கியது..."சொல்லியிருக்கிறார். எங்கம்மா செத்துப் போனதும் அவரும் கூடவே ஓடிவிட்டாராம். தாதாகூட எங்கப்பாவைத் தேடியதாகவும், கிடைக்கவில்லையென்றும் சொன்னார்.

சஞ்:—கண்ணூ! உன் தகப்பனார் அகப்பட்டுவிட்டால் நீ அவரிடம் சந்தோஷமாகப் போய்விடுவாயல்லவா...

இதற்குப் பதில் சொல்லத் தெரியாது விழித்தாள். பிறகு சற்று தேறியவளாய்...."என் தகப்பனா!...எங்கிருக்கிறார்?... அவர் என்னை அன்போடு ஏற்றுக்கொள்வதாயின் நானும் சந்தோஷமாகப் போவேன். அவருக்கு வேறு மனைவிமக்கள் இருந்தால் என்னை...என்று கூறும்போது அவளை யறியாது துக்கம் தொண்டையை அடைத்துக் கம்மியது.

சஞ்சீவி அவளை இழுத்துத் தன் மடியில் உட்காரவைத்துக் கொண்டு "கண்ணா! அழாதேம்மா! உன் தகப்பனாரை இத்தனை நாள் தேடித் தேடி அலைந்ததில் இப்போதுதான் அகப்பட்டிருக்கிறார். என் மனைவியிடம் நீ படும் சிறுமையை என் உள்ளம் அறிந்துக் கலங்குவது கொஞ்ச நஞ்சமல்ல. எப்போது உன் கஷ்டம் தீரும் என்றுதான் நான் பார்த்துக்கொண்டிருந்தேன். கண்மணீ! உன்னுடைய தாதாவின் ப்ரதி பிம்பமாகிய தம்பூராவையும் இன்னும் மற்ற சாமான்களையும் எடுத்துக் கட்டிக்கொள்ளு. சாயங்கால வண்டிக்கே புறப்படவேண்டும். கண்ணா! அழாதேம்மா!" என்று சமாதானம் செய்தார்.

மானவதியின் மனத்தில் புதிய புதிய எண்ணங்கள் தோன்றி வேதனையைக் கொடுத்தன. முன்பின்னறியாத தகப்பனாரிடம் எப்படியிருப்பது, தன்னை அனுப்பிவிட்ட பிறகு இவர் மறுபடியும் வருவாரோ மாட்டாரோ...என்கிற பலவிதமான குழப்பத்தில் தத்தளித்தவாறு "மாமா!...என்னை அனுப்பிவிட்டால் அப்புறம் வரவேமாட்டீர்களா?"...என்று புலம்பியபடியே கேட்டாள்.

சஞ்:—அப்படியெல்லாம் கவலைப்படாதேம்மா! அடிக்கடி வந்து பார்ப்பேன். உங்கப்பா உன்னைத் தங்கம்போலப் பார்த்துக் கொள்வார்—என்று தேற்றினார்.

பிறகு மானவதி தன் சாமான்களை எடுத்து மூட்டைகள் கட்டினாள். இவளுடைய சினேகிதையான லலிதா மானவதியின் பிரிவுக்காக மிகவும் வருந்தினாள். மானவதிக்குக் கூறத்திறமற்ற துக்கம் எப்படியோ இதயத்தைப் பிறிக்கொண்டுவந்தது. அந்த விம்மலுடனேயேஎல்லோருடனும் சொல்லிக்கொண்டு ப்ரயாணமானாள்.

சஞ்சீவி கிழவருடைய சொத்து ஒன்றையும் விடாது எடுத்துக் கொண்டு மானவதியுடன் கிளம்பி ரயிலேறினார். மானவதியின் முகத்தில் சோகமும் கவலையுமே தாண்டவமாடி அவளால் தடுக்க முடியாது கண்ணீர் ஓடிக்கொண்டேயிருக்கிறது.

24

வேஷம் ஜெயிக்குமா? பாசம் ஜெயிக்குமா?

காலை நேரம் சூரியன் நன்றாக ப்ரகாசித்து ஆட்சிபுரிய வாரம்பித்துவிட்டான். தொழிலாளர்கள் தம்தம் தொழிலுக்கான கருவிகளைத் தாங்கி வெகு உத்ஸாகமாகச் செல்கிறார்கள். அச்

சமயம் ஒரு சாதாரண சிறிய தெருவு, அதிக வீடுகளே இல்லை; ஜன நடமாட்டமும் இல்லை. அதில் ஒரு ஓலைக்குடிசையின் திண்ணை யொன்றில் 'சைவப்பழமோ! முற்றுந் துறந்த முனிபுங்கவரோ!' என்று அதிசயிக்கத் தக்க ஒருவர் கண்களை மூடி ப்ரணவ மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் ஜ்வலிக்கும் வைராக்யக்களையின் சோபை அக்கினிபோல் ப்ரகாசித்தது.

அனித்யமான இன்பத்தை அறவே ஒழித்து நித்யமான பேரின்ப நிலையில் மனத்தை லயிக்கச்செய்து பகவன் நாம மந்திரம் ஜபிக்கும் துறவியைக் கண்டவுடனே சஞ்சீவின் உள்ளம் திக்கென்றது.

மானவதி புழுகென நடுங்கியவாறு சஞ்சீவியின் பின்னுலேயே வந்தவள், இந்த பிம்பத்தைக் கண்டதும் அதிர்ச்சியினால் மெய் சிலிர்த்தாள். ஒன்றுமே தோன்றாத நிலையில் சஞ்சீவியின் முகத்தைப் பார்க்கிறாள்; சன்யாசியின் முகத்தைப் பார்க்கிறாள்.

சஞ்சீவி அவளை அணைத்தபடியே, "குழந்தாய்! சந்தேகப்படாதேம்மா! இவர்தான் உன் பிதா...உன்னைப் பெற்ற பிதா...இவர் காலக்கொடுமையின் கயிற்றில் கட்டுப்பட்டு இக்கதி அடைந்து விட்டாரேயன்றி இவர் வேறு மனிதரில்லை" என்று கூறிப் பின்... 'சுப்ரமணியா!...சுப்ரமண்ய ஸ்வாமிகளே!...இதென்ன தபோதனம்! இதோ உன் செல்வத்தைக் கொண்டுவந்திருக்கிறேன்"...என்று குரல் கொடுத்தார்.

மானவதியின் இதயம் அலைகாற்றிலகப்பட்ட மரக்கலம்போல் கொந்தளிக்கின்றது. "இவரா என்பிதா!...இவரா! மாமா!...யாரோ சாமியாரல்லவா உட்கார்ந்திருக்கிறார்!...உண்மையில் இவரா!"... என்று நடுங்கியவாறு கேட்டாள்.

"ஆமாம் கண்மணீ! என் வார்த்தையில் நம்பிக்கை இல்லையா... இவர்தான் உன் தகப்பனார்...அதோ உன்னையே பார்க்கிறார் பார்... மணி! இந்தமாதிரி துறவுகோலம் என் வயிற்றை அள்ளித்தின்கின்றது...உன் கண்மணியைப் பாரு...மானவதீ!...உன் பிதாவை நமஸ்காரம் பண்ணம்மா!" என்றார்.

கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்த சாமியார் இக்குரலைக்கேட்டுக் கண்ணைத்திறந்து பார்த்ததும் உலகமே தலைகீழாகச் சுற்றுவதுபோன்ற அதிர்ச்சியும் ப்ரமிப்பும்தோன்றிகலக்கிவிட்டன. அவனுடைய இன்பத்திற்கெல்லாம் ஆதிதேவதை என்று எண்ணியிருந்த அவன் மனைவி, சிறிய பிராயத்தில் இப்போது மானவதியிருக்கும் இதே சாயல், இதே இளமை, இதே கம்பீரம், இதே ஸௌந்தர்ய சோபை...இதே முகஜாடை... இதே சகலமும் இப்படியே இருந்தாள். அந்த புனிதவதிதான் தன்னுடைய வைராக்யத்தைக் கலைக்க உயிர்பெற்று வந்துவிட்டாளோ! என்ற பெரும் உவகை உண்டாகியது.

அவனால் அந்த புதிய உணர்ச்சியை, காந்த சக்தியை அடக்க முடியாது...."ஹா!...மானவதியா! என் மானவதியா....உருவெளித்

தோற்றமா..உம்; எல்லாம் மாயை...மானவதி என்னைத் தவிக்கவிட்டு மண்ணோடு மண்ணாகக் கலந்து எத்தனையுகங்களாகிவிட்டன...சே... மாயையே...அஞ்ஞான இருளே!"...என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு இந்த மோகனவடிவை இமைகொட்டாது பார்த்தான். கண்ணை மூடுகிறான்; மீண்டும் பார்க்கிறான்.

சன்யாசியின் வாயிலிருந்து "மானவதீ" என்று கூறிய சப்தத்தைக் கேட்டதும் சஞ்சீவியும் மானவதியும் வியப்புற்றார்கள். சஞ்சீவி மானவதியை அருகிலழைத்துச்சென்று நமஸ்காரம் செய்வித்துப்பின், "மணீ!...ஆம். இவள் பெயரும் மானவதிதான். இவளுடைய பாட்டனார் தன் மகளுடைய பெயரையே இவளுக்கும் வைத்துத் தம் அன்பு ததும்ப அழைத்து ஆவலைத் தணித்துக்கொண்டார். உன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டமானவதியின் பிரதி பிம்பமே இந்த மானவதி...இவள் வேறு யாருமில்லை. உன் வயிற்றில் பிறந்த கண்மணி. இவள் பச்சை பாலகியாக இருக்கையில் நிராகரித்துவிட்டு நீ உன் மனைவியின் சவத்துடன் ஓடிவிட்டாயே....அதே சிறு தளிர்தான் இப்போது அழகுக் கொடியாகப் பரிணமித்து செழு செழுவென்று வளர்ந்திருக்கிறது. இக்கொடியைத் தழுவியிருந்த கிழ மரம் பட்டுப் போய்விட்டதால் கொடிக்கு ஆதரவளிக்கும் மரமாகிய உன்னைத் தழுவிப் படரும்பொருட்டு பகவான் நியமனம்செய்திருக்கிறார். இந்தா இந்த பகவத் பிரஸாதத்தை அங்கீகரித்துக் கொள்ளு" என்றார்.

யோகீச்வருக்கு ஒன்றுமே தோன்றாத அயோமயமான நிலைமை

யில் இதயம் போராடுகிறது. தான் எத்தனையோ பிரயாசைப் பட்டுவிட்டு விலக்கிய மாயை மீண்டும் தன் காலைச் சுற்ற வருவதானது மிகுந்த சங்கடமாயும் பெருத்த பாரமாயும் தோன்றியது.

இக் குழந்தை மகா துரதிருஷ்டசாலி, இந்த பீடை பிறந்துதான் அதன் தாயைக் கொன்றுவிட்டது, என்று இவன் ஆதியில் கூறிய வார்த்தைகளை சஞ்சீவி கிழவன் மூலம் அறிந்திருக்கிறானாதலால், "மணீ!...எண்ணி எண்ணிப் பார்த்தாலும் முப்பத்தைந்துகூட நிரம்பப்பெறாதவன். உன்னுடைய மனக்கொதிப்பின் வேகம், கடுந் தபத்தின் ஜ்வாலை, வைராக்யத்தின் சக்தி உன்னைக் கிழவன் போலாக்கிவிட்டன. நீ ஆதியில் பரிபக்குவ நிலையின் தத்துவத்தை யறியாது 'இக் குழந்தையின் துரதிருஷ்டந்தான் அதன் தாய் இறந்து விட்டாள்; இப் பீடையை நான் கண்ணாலும் பார்க்கமாட்டேன்' என்று கூறினாய். ஆனால் இன்று நீ அன்றிருந்த வெறும் சுப்ரமண்யனல்ல. மனைவியின் பிரேமை ஜ்வாலையில் சிக்கி உழன்றவனல்ல. தாம்பத்ய மோகமே சிறந்தது என்று நினைத்து மனைவியின் வியோகத்துடன் உலகமே முழுகிவிட்டதாக எண்ணிய சிறிய, அறியாமை நிறைந்த உள்ளத்துடன் கூடியவனல்ல. இன்று நீ ஒரு தபஸ்வி...மகா பரிசுத்தாத்மாவாகவும் பக்தியே நிறைந்து பரிபக்குவமடைந்த வேதாந்தப்பழமாகவுமிருக்கிறாய். இன்று உன் தருமமும், உன் மனோபாவமும் உனது கடமையை



நீ நினைத்து வழிபடக் கடமைப்பட்டிருக்கும் நினைவும் ஸ்பஷ்டமாக உணர்ந்திருக்கிருய்.

மணீ! நான் சம்சாரி. சம்சார சாகரத்தில் உழன்று உதரபோஷ ணத்திற்காகவே பாடுபடும் சாதாரண மனிதன், அசேதனன், உன்னைப்போல் படித்து விஷயமறிந்தவனல்ல; இருப்பினும், மனித தர்மம்...மனிதனின் கடமை, அவன் நீதி நெறியுடன் வாழ வேண்டிய அவச்யம். இவைகளை ஒரு சிறிது உணர்ந்திருக்கிறேன். நீ ஆதியில் குழந்தைத்தனமாக நினைத்ததுபோல் இன்று நினைக்க மாட்டாய்; நினைக்க தர்மம் இடந்தராது. உன் கண்மணியை நீ கை விட்டால் அந்த மகத்தான பாதகம் உன்னை ஏழேழு தலைமுறையிலும் தாக்குமல்லவா! யாரால் யார் சாகமுடியும், யார் பிழைக்கமுடியும்? எவரெவர் எந்தெந்தவரைக்கும் வரன் பெற்றுவந்திருக்கிறுர்களோ அந்தவரையில்தானே அனுபவிக்கமுடியும்.

இந்த சிசுவின்மீது நீ வெறுப்பும் க்ரோதமும் கொண்டு ஓடிய தன் பலன் உன் இன்ப வாழ்வுகுன்றி சன்யாசி நிலையை அடைந்து, உன் கடமையை இழந்த பாவத்தையும் பெற்ருய். இந்த குழந்தையின் மீது வீண் வர்மம் இனியுங் கொள்ளாதே...இந்தா...உன் சொத்து... உம்....கையைப் பிடித்து ஆசீர்வாதம் செய்" என்று பெரிய பிரஸங் கம்போல் சொல்லிக்கொண்டேபோனுர்.

யோகியின் இதயம் கலங்கிக் குழம்பித் தத்தளிக்கின்றது. நான் துறவி...உலகில் எதையும் விரும்பாது வெறுத்தவன், இனி பெண்ணு வது, பிள்ளையாவது?...என்று ஒருபுறம் தோன்றுகிறது மறுபுறம்... "சீ...நீ பெற்ற குழந்தை உன்னிடம் சரணுகதி என்று வந்தடைந் திருக்கையில் கைவிடுகிருயா! மகாபாவி! சண்டாளா! பெத்த சிசுவை வஞ்சிக்காதே. அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்பதை மறந்தாயா...நீ அந்தச் சிறுமியின் முன்னறி தெய்வ மல்லவா...கண்வர் மகரிஷி மகா தபஸ்வி, பரமயோகி, அவர் சகுந் தலாவை வளர்த்து ஆதரவளிக்கவில்லையா?...நீ என்ன அத்தகைய ரிஷியா! சீச்சீ! பெண் பாவம் போதும். பின்னடையாதே" என்று செம்மட்டியால் அடிப்பதுபோல் அடித்து வதைக்கிறது.

மானவதியின் பிம்பத்தைப் பார்க்கப் பார்க்க அவளுடைய பரிதாபமும் பரதேசித்தனமும் நிறைந்து தேங்கிக் கிடக்கும் கண் களின் சோபை அவர் உள்ளத்தை உருக்கி எங்கிருந்தோ ஒரு பாசத்தை வலுவில் கொண்டு அள்ளி வீசுகிறது.

மின்னல்கொடியோ! மோகினி தேவதையோ! என்று நிற்கும் அச்சிறுமியின் வசீகரம் இவரை யறியாது இவருடைய உள்ளத்தில் புகுந்து சொல்லவறியாத புத்துணர்ச்சிகளையும் புத்திர வாத்ஸல்யத்தையும் காட்டாற்று வெள்ளம்போல் பொங்கிவரச் செய்கிறது. அதைத் தடுக்கவும் முடியவில்லை. அதை அங்கீகரிக்

கவும் தன்னுடைய வேஷமும் மனே வெறுப்பும் குறுக்கிடுகிறது. எண்ணெயில் விழுந்த ஈயைப்போல் குழம்பித் தத்தளித்தவாறு துடிக்கிறார். என்ன சொல்வது, செய்வது என்று தெரியாது தர்ம சங்கடமாகிவிட்டது.

25

இளங்காளையின் இணையிலா மகிழ்ச்சி

தான் எதிர்பார்த்த லக்ஷியம் ஈடேறிவிட்ட பெருமையில் முகுந்தனின் இதயம் அளவளாவிப் பொங்கியது. அவனுடைய சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்யும்வகையில் கிருபாமந்திரத்தின் பெருமையைப் பற்றியும் ஏராளமான பணச்செலவில் வெகு மேன்மையான முறையில் தொழில் ஆரம்பித்திருப்பதையும் பாராட்டிப் பல பத்திரிகைகளில் விமர்சனங்கள் எழுதியும், க்ருபாமந்திரத்தின் ப்ரம்மாண்டமான கட்டிடத்தைப் புகைப்படம் பிடித்து ப்ரசுரித்தும் வெளிவந்ததைக் காண அக்குடும்பத்தினரை அப்படியே ஆனந்தமயமாகச் செய்துவிட்டது.

மனத்தில் தெம்பும் பூரிப்பும் உண்டாகிய எவருக்கும் முகத்தில் ஓர் தனித்த சோபையும், தேகத்தின் வளமையும் நன்கு ப்ரகாசிக்கக் காணலாம். முகுந்தன் இப்போது முன்னிலும் அதிக ஸௌந்தர்யத்துடன் ப்ரகாசிப்பதைக் காண, பெற்றோர்களின் மனத்தில் அவனுக்கு விவாகத்தைச் செய்து இன்புறும் ஆசை தலைதூக்கித் தாண்டவமாடியது.

சாதாரணமாக ஏழைவீட்டுப் பிள்ளைகள் சற்று அழகாகவும் படிப்பாளியாகவும் இருந்தாலே நான், நீ என்று போட்டியிட்டுக் கொண்டு பெண்ணைக் கொடுக்கவந்து விழுவார்கள். முகுந்தனுக்குப் பெண் கொடுக்கப் போட்டியிடுவதற்குக் கேட்கவேண்டுமா ?

ஜமீந்தார்களின் பெண்கள் ஜாதகம்முதல் வந்து குவியத் தொடங்கியது. தனக்குத் தகுந்த பெண்ணைப் பார்த்து விவாகம் செய்துகொள்ள முகுந்தனும் சம்மதித்தான். ஆனால் க்ரகப்ரவேசத்திற்கே தனது உடன்பிறந்த மனிதன் சகோதரன் இல்லாத குறையால் தன் தகப்பனார் வருந்திக் கண்ணீர்விட்டதை முகுந்தன் மறக்கவே இல்லை. "இப்போது கல்யாணத்திற்கும் அவர் மனது வருந்துமல்லவா ! எப்படியாவது நம்மாலான முயற்சிகளைச் செய்து அந்த மனிதனும் அவனைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்களா ! இறந்துவிட்டார்களா ! என்பதையாவது ஆராய்ந்து பார்த்துவிடுவது. சித்தப்பா ... சித்தி ... முதலியவர்களின் புகைப்படங்களை ஒவ்வொரு ஊரிலுமுள்ள பத்திரிகைகளில் ப்ரசுரித்து எப்படியாவது உளவறிந்து திடும் ப்ரவேசமாக அப்பாவிடம் காண்பித்தால் எத்தனை சந்தோஷப்படுவார் ....?"

என்று நினைக்கும்போதே அவன் உள்ளத்தில் சந்தோஷம் நிரம்பியது. சித்தப்பாவின் குடும்பத்தைக் கண்டுபிடித்துவிட்டால் தான் ஒண்டிக்கட்டையாயிருப்பதற்கு தனக்கோர் சகோதரியோ, சகோதரனோ கிடைக்குமல்லவா! என்று மனத்தில் ஆசை உதயமாகியது. அந்த உணர்ச்சி வேகத்தின் மிகுதியால் உடனே தன் தகப்பனருக்குத் தெரியாமல் அவருடைய பெட்டியைத் திறந்தான்.

அதில் ஏராளமான புகைப்படங்களுள்ள ஆல்பம் இருப்பது அவனுக்கு ஏற்கெனவே தெரியுமாதலால் அப்படங்களை ஒவ்வொன்றாய்ப் பார்த்தான். தன் தகப்பனாரும் சிறிய தகப்பனாரும் ஆதியில் பள்ளிக்கூடம் படிக்கும் காலத்திலிருந்து உத்யோகம் பார்க்கும் வரையிலுள்ள உடைகளில் பல படங்கள் ஜோடியாகவும் தனியாகவும் இருப்பதைக் கண்டு பொறுக்கி சிலவற்றை எடுத்துக்கொண்டு உடனே பல பத்திரிகைகளுக்குக் கடிதங்களெழுதி அத்துடன் புகைப்படமும் வைத்து அன்றைய தபாலிலேயே அனுப்பினான். அவ்வாறு அனுப்பியதானது அவன் மனத்தில் ஒரு பாரம் இறங்கியதாயும், புதிய உத்ஸாகம் உண்டாகியதாயும் தோன்றியது. உடனே க்ருபாமந்திரத்திற்குச் சென்று ஒரு சுற்றுவந்தான். அங்குள்ள ஒவ்வொருவரும் வெகு சுறுசுறுப்பாய் வேலை செய்வதைப் பார்த்து உள்ளம் பூரித்தது. "காமாக்ஷி!...இருளப்பா! இப்போது நீங்கள் மரண தேவதையின் வரவை விரும்புகிறீர்களா!" என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.

"ஆதரவற்ற அனாதைகளைக் காக்கும் கர்த்தனைக் கடவுள் கொடுத்தபிறகு அகாரணமாக மரணத்தை ஏன் விரும்புவோம்? தங்கள் பாதங்களுக்கு என்றென்றும் நமஸ்காரம் செய்துகொண்டு இங்கேயே இருந்து காலத்தைத் தள்ளுவோம்" என்று சொல்வதைக் கேட்ட முகுந்தனின் மனம் பூரித்தது.

26

உயரிய நீதியும் ஊசலாடும் பாசமும்

பிரமிப்பும் திகைப்பும், குழப்பமும் அடைந்து தத்தளிக்கும் சன்யாசியின் மனத்தவிப்பு கட்டுமீறியது. "நான் எத்தனையோ பிரயாசைப்பட்டு சம்சார பாசபந்தத்தையொழித்து மனத்தை ஒரு சிறிது வெண்மையாக்கிப் பரிபக்குவத்திற்கு வருவதற்குள் மீண்டும் புசல் காற்று அலைபோல் மோதுகிறதே....

"என்ன ஆச்சரியம்!...பகவானே...ஆண்டவனே!....என்னை சோதிக்கிறாயா...அசேதனப் பிண்டத்தைப் பரீக்ஷித்து வேடிக்கை பார்க்கிறாயா...இதென்ன கர்மபந்தம்! இந்த சிறுமியா என் மான

வதியின் வாழ்வுக்குக் காலனாய் வந்தவள்!...சீச்சீ!...என்னே மதியீனம்...என் மானவதி அப்படியே எதிரில் நிற்கிறதுபோல் தோன்றுகிறதே...மீண்டும் பாசம் என் மனத்தில் பாசிபோல் படருகிறதே!"...என்று குழம்பினார்.

சஞ்சீவியை நோக்கி, 'ஐயா! என்னுடைய பிறவியே மாறுபட்டுப் புனர்ஜென்மம்போலாகிவிட்டது. ஒரு மகானை குருவாக அடைந்து ஆசாரிய உபதேசம் பெற்று, இப்போதுதான் மனது பக்குவ நிலைக்கு வருமா! என்கிற ஸ்திதியில் இருக்கிறது. அந்த தூய்மையைக் கலைத்துவிடவா நீர் வந்திருக்கிறீர்? ஐயா! மரம் வைத்த ஆண்டவன் தண்ணீர் வார்க்காமல் போகமாட்டான். இத்தனை வருடகாலமாகக் காப்பாற்றிய கடவுள் இனியும் காப்பாற்றுவான். பொம்மை கோபுரத்தைத் தாங்குவதில்லையே, அதேபோல் மனிதனே மனிதனைக் காக்கமுடியுமா? என்னை விட்டு விடுங்கள். நான் பரதேசி...ஆண்டி, துறவி...ஆசையைத் துறந்த சன்யாசி. மீண்டும் சம்சார சாகரத்தில் இறங்குவது சாத்யமில்லை... இச் சிறுமியை அழைத்துக்கொண்டு போங்கள்... அம்மா! குழந்தாய்!...என்றான். மேலே பேசமுடியாது தொண்டை துக்கமும் பாசமும் அடைந்துவிட்டது. ஆவேசம் வந்தவனைப்போல் அவ்விடத்தை விட்டு வெகு விரைவாக ஓடினான்.

இதைக்கண்ட சஞ்சீவியின் உள்ளம் பதறியது. "சுப்ரமணியா...சுப்ரமணியா! ஓடாதே. நில்லு...நில்லு...கடமையைக் கைவிட்டவன் தெய்வத்திற்கும் ஏற்றவனாகமாட்டான். கடவுள் அவனையும் கைவிட்டு வேடிக்கைதான் பார்ப்பான். ஓடாதே... ஓடாதே...உன் செல்வத்தை விட்டு ஓடாதே" என்று கூவியவாறு பின்னாலேயே தொடர்ந்து மானவதியையும் இழுத்துக்கொண்டோடினார்.

மானவதிக்குத் துக்கம் தாங்காது பொங்கிப் பொங்கி வருகிறது. "தாதாவுடன் என்னையும் ஏன் கொண்டுபோயிருக்கக் கூடாது கடவுளே! ...இதுவும் உன் சோதனையா?" என்று கதறியவாறு சஞ்சீவி இழுத்த பக்கமே ஓடுகிறாள். இதே அதிர்ச்சியில் தலை சுற்றுகிறது. அதிக ஜனநடமாட்டமில்லாத தெருவாயினும் கும்பல் கூடிவிட்டது. நாலைந்து தெருக்களைத்தாண்டி ஓடி ஒரு பெரிய மடத்திற்குள் சன்யாசி புகுந்தான். அங்கு ஒரு வேதாந்தப்பழம் போன்ற ஸ்வாமியார் உட்கார்ந்து ஏதோ உயர்ந்த க்ரந்தம் படித்துக் கொண்டிருந்தார்.

சுப்ரமண்யன் அவர் காலில் விழுந்து திருவடிகளைப் பிடித்துக் கொண்டு, "ஸ்வாமி!...குருநாதா!...என்னைத் தாங்கள் உபதேச மார்க்கமாகக் கரைசேர்க்க அனுக்ரகித்தீர்கள். இதோ...இவர் என்னைச் சேற்றில் இழுத்துத்தள்ள வந்திருக்கிறார். அந்தப் பாதாளத்தில் விழாது என்னைக் காப்பாற்றுங்கள்...குருநாதா!...என்னைக் காப்பாற்றுங்கள்"...என்று கதறினான்.

அதற்குள் சஞ்சீவியும் மானவதியும் பதைபதைக்க அங்கு வந்தார்கள். சஞ்சீவி, மானவதியை அந்த மகானுபாவனின் காலில் விழச்செய்து, க்ராமபோன்மெஷின் ஒப்பிப்பதுபோல் சகல விஷயங்களையும் ஒப்பித்து "ஸ்வாமி! இந்தப் பரதேசிக் குழந்தையின் கதி எப்படி முடிவதென்று சகலமும் அறிந்த நீங்களே சொல்லுங்கள்... கடமையைக் கைவிட்டவன் முக்திக்கு யோக்யதையுடையவனு வானு...ஸ்வாமி! நீங்களே விளக்குங்கள்!" என்று கூறினர்.

ஸ்வாமிகள் மானவதியின் பரிதாப பிம்பத்தைப் பார்த்தார்... தம்மிருப்பிடத்திலிருந்து எழுந்து அச்சிறுமியைத் தம்முடைய அருமையான கரத்தினல் தடவிக்கொடுத்துத் தன்வயிற்றில் அவள் தலையைப் பதியவைத்து ஆசீர்வதித்தவாறு "அம்மா! குழந்தாய்! அழாதே... அழாதேம்மா...கருணாமூர்த்தியாகிய ஸ்ரீமந் நாராயணனை நம்பியிரு...அவன் ஒரு மூலபுருஷனைக் காட்டி ஆதரிப்பான்... சிஷ்யா!...விஷயம் எனக்குப் புரிந்துவிட்டது. துறந்த பாசத்தை மறுபடியும் பிடிக்கக்கூடாதென்கிற தத்துவத்தை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்...தாமரையிலையின் பரிசுத்தமான தன்மையைப்போல் மனிதனின் உள்ளம் இருக்கவேண்டும். தாமரையிலையில் நீர்த்துளிகள் ஒட்டுகிறதா...அந்த தாமரையிலை இருக்கும் இடமே தடாகமல்லவா...தடாகத்திலேயே உத்பவித்தும் தடாக நீரே அதன் மேல் ஒட்டாத ஓர் மகத்தான தத்துவத்தை மனிதன் அறிந்து முக்தியடைவதற்காகத்தான் தாமரையை உண்டாக்கிப் பகவான் காட்டியிருக்கிறுர்.

சிஷ்யா! படிப்பதும், எழுதுவதும், வேஷம் போட்டுக் காட்டுவதும் வெகு சுலபந்தான். ஆனல் அதன்படி நடப்பது மகா கஷ்டம். குழந்தையின் பாசத்தைத் துறந்துவிட்டதாக நீ நினைக்கிறுய்....ஆனல் நீ ஒரு அணுவளவும் துறக்கமுடியாது. அப்பேர்ப்பட்ட கண்வ மகரிஷியை விடவா நீ மகத்தான யோகியாகிவிட்டாய்? அந்தக் கண்வர் சகுந்தலாவின்மீது தன்னுயிரையே வைத்து, பெற்ற பெண்ணைவிடப் பதின்மடங்கு ப்ரீதியுடன் காப்பாற்றவில்லையா!

சாக்ஷாத் ஸ்ரீராமசந்திரன் லோகாபவாதத்திற்காக கர்ப்பிணியாகிய ஸ்ரீலோகமாதாவைக் காட்டுக்கனுப்பியபோது ஸ்ரீவால்மீகி முனிவர் அந்த ஸீதையைக் காப்பாற்றி லவகுசர்களையும் சம்ரக்ஷித்து அவர்களால்தானும், தன்னல்அவர்களும் மேன்மையடையவில்லையா! அதனல் அந்த மகரிஷிகளின் தபத்திற்கு ஹானி வந்ததா! அப்பழுக்கற்ற தூய இதயத்துடன் கடமையைச் செய்து காட்டவில்லையா!

ஸ்ரீ மதங்க முனிவரிடம் சிஷ்யையாயிருக்க ஆச்ரயித்து வந்த சபரிக்கு உபதேசம்செய்து காத்து ரக்ஷித்ததோடு அந்த சபரிக்கு ஸ்ரீராமசந்திரனுடைய தரிசனமும் விருந்தும் கிடைக்கும்படியாக அந்த முனிவர் செய்யவில்லையா?...ஸ்திரீ ஜாதியாயிற்றே என்று அவர்கள் விலக்கினுர்களா! அத்தகைய மகாமுனிவர்களின் கால் சுவடியை மிதிக்கக்கூட யோக்யதையும் லக்ஷணமும் இல்லாத நீ...

மனம் வெளுக்காத நீ...உன் வயிற்றில் பிறந்த குழந்தையைக் காப்பாற்றாது கைவிட எந்த தர்மசாஸ்திரம் சொல்லுகிறது... கடன்காரன் கடனைத் திருப்பிக்கொடுக்காது ஏமாற்றிவிட்டு ஓடி விட்டால் எப்படியோ, கடனுக்காக உயிர் துறந்தால் எப்படி த்யாக மாக மாட்டாதோ அப்படித்தான் உன் கதையும். அசட்டுத்தனம் செய்யாதே.

முற்றுந்துறந்து பற்றற்ற பரமயோகீச்வரராகிய ஸ்ரீராமானுஜர் கூட ஒருசமயம் என்ன நினைத்தார் தெரியுமா! அவர் ஆழ்வார் திரு நகரி என்கிற திவ்ய க்ஷேத்திரத்திற்குப் போயிருந்தாராம். அவ்வூரி லிருக்கும் ஒருவண்ணான் பரமபக்தன்; அவன் தனது நான்கு குமாரர்களுக்கும் ஆழ்வாரின் அரிய திருநாமங்களாகிய சடகோபன் குருகூர்நம்பி, பராங்குசன், நம்மாழ்வார் என்கிற பெயர்களை இட்டு வாயார அந்த நாமங்களை அடிக்கடி சொல்லி புத்திரர்களைக் கூப்பிடு வதை ராமானுசர் கேட்கும்போது அவருக்கு ஆச்சரியம் கரை புரண்டதாம். ஆசையும் சிறிது தலைதூக்கி ஒரு சுழட்டு சுழட்டிய தாம். "ஐயோ! நாமும் சம்சாரியாக இருந்திருந்தால், நல்ல சத்புத் திரர்களைப் பெற்று, அவர்களுக்கு பகவானின் நாமங்களையும், ஆழ் வார் ஆச்சாரியரின் திருநாமங்களையும்சூட்டி மனதார அழைத்து இன் புற்றிருக்கலாமே! நாம் இந்த ஆனந்தத்தையடையமுடியாது, சன் யாசம் வாங்கிக்கொண்டோமே!...தினம் பலதரம் இந்த நாமங் களைச் சொல்வதில் அவ்வண்ணான் எத்தனை இன்பத்தையடைகிறான்? அவனுடைய பாபங்களெல்லாம் இந்த நாமமாகிய தீயினால் பொசுங் கிப் போகிறதல்லவா... அவன் ஜாதியில் வண்ணானாக இருந்தும் அறிவில், பக்தியில், தூய இதயத்தில் பாகவதர்களின் அடிபோற்றும் சிறந்த முறையில் எத்தனை உயர்வாக இருக்கிறான்! அவனைப் போன்ற அறிவு மற்றவர்களுக்கும் இருக்குமாயின் உலகம் எத்தனை சிறந்து விளங்கும்!" என்று எண்ணினாராம். அவரைவிடச் சிறந்த யோகியா நீ!

உன்னுடைய மனது சிற்றின்பத்தில் ப்ரவேசிக்கவிடாது முள் வேலிபோட்டுக் காப்பாற்றிவைத்தால் போதுமே யன்றி உன் வயிற்றில் பிறந்த உன் குழந்தையை நீ இப்படி நிராதரவாக விடுவது தருமமல்ல...புத்திரவாத்ஸல்யம் சாமானியமானதன்றப்பா...ஜீவ காருண்யத்திற்குக் கட்டுப்படாதவன் மனிதனேயல்ல....ஜடபா தரின் சரிதையை நீ மறக்கலாமா...ஒரு மானின் பரிதாபத்தைக் கண்டு சகியாது காப்பாற்றிய உயர்வை மறந்தாயா...நீ இவ்வாறு திரஸ்கரிப்பதாகாது" என்று புத்திபுகட்டினார்.

"ஸ்வாமி! என்னை நீங்களுமா சாக்கடையில் இறங்கச் சொல்லு கிறீர்கள்?....என்னைப் பாசி மூடிவிட்டால் கதி ஏது?...என்று கதறினான்.

ஸ்வா:— சிஷ்யா!... அப்படியானால் உனக்கு மனத்தில் பாசம் அறவே ஒழிந்துவிட்டது என்கிறாயா...முற்றிலும் உன் மனம்

வெளுத்துவிட்டதா?...சரி...அப்படியாயின் நீ உன்னிஷ்டம்போல் இரு"...என்று கூறித் தனது இன்னொரு சிஷ்யனுக்கு ஏதோ ஜாடை காட்டினார். அவன் சில நிமிடங்களுக்குள் நன்றாகப் பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோல்கள் இரண்டு கொண்டுவந்தான். அவனை நோக்கி "அடேய்! இந்தப் பெண்ணின் கண்களைக்குத்திப் பாழும் கிணற்றில் போட்டுவிட்டுவா....உம்"....என்று பெரிய அதிகாரத்துடன் கர்ஜனை செய்து உத்தரவிட்டார்.

சிஷ்யனின் கதி கலங்கியது. சஞ்சீவியின் உயிரே துடித்தது. மானவதி "ஹா!"...என்று அலறியவாறு சஞ்சீவியைக் கட்டிக்கொள்ள ஓடினாள்.....சுப்ரமண்யனின் இதயம் துடித்தது....."ஐயையோ...ஸ்வாமி!...ஸ்வாமி!....இதென்ன அக்ரமம்!....தங்கள் திருவாயிலா இப்படிப்பட்ட வார்த்தை வருவது...கொலை...கொலை செய்வதா!"...என்று பதறிப்போய் ஸ்வாமிகளின் திருவடியில் மீண்டும் விழுந்தான். அப்படியே இருக்க மனம் பொறுக்காது ஓடிப்போய் மானவதியைத் தாவிக் கட்டிக்கொண்டு சூட்டுக்கோலை மறைத்தான்.

ஸ்வாமிகள் கடகடவென்று சிரித்துக்கொண்டே, "சிஷ்யா!...நான் செய்யச்சொல்லியது கொலையல்ல...நீசெய்ய நினைத்த காரியமிருக்கிறதே, அது எத்தகைய கொலைக்குச் சமமானது தெரியுமா...அதோடு உனது வெளுத்தமனத்தையும் சோதித்தறிந்துகொண்டேன். ஒவ்வொரு பக்தரும், கடவுளை நோக்கி, "நீ என் பிதாவல்லவா...நீ என்னைக் கைவிடலாமா?" என்று கதறியிருப்பதை நினைத்துப் பாரு. அந்தப் பரதேசிக் குழந்தையை பெற்ற பிதா நீ அவளை நிராகரித்துத் தள்ளுவது கொலைக்கும் மோசமானது. நீ மனைவி இறந்த சோகத்தில் இந்த துறவறக் கோலத்தை அடைந்தாயேயன்றி உன் மனம் இன்னும் பரிபக்குவம் அடையவில்லை. அதே மனைவியை பகவான் பிழைப்பித்துக் கொடுத்தால் நீ உடனே சம்சாரியாகி மயங்கிவிடுவாய். இந்த ரகஸியத்தை

நான் அறிவேன்...உனக்கு இன்னும் பந்தம் தீரவில்லை. பாசம் ஒழியவில்லை. மனைவியை எண்ணிச் சதா புலம்பும் நீ உண்மையில் சம்சாரியே யன்றி சன்யாசியாகமாட்டாய். உன் குழந்தையை ஏற்றுக்கொண்டு அவளைத் தக்கவிடத்தில் விவாகத்தைச் செய்து கொடுத்துவிட்டுப் பிறகு துறவியாகலாம். மனத்தில் சுத்தமின்றி வேஷத்தினால் உபயோகமில்லை...என்று உபதேசித்தார்.

உண்மையில் சுப்ரமண்யனின் மனத்தில் புத்திர வாத்ஸல்யம் தீபோல் பரவி வருவதை அவனால் தடுக்கமுடியவில்லை. அவனை இத்தனை நேரம் மனத்தில் அழுத்திவைத்திருந்த உணர்ச்சி பீறிக்கொண்டுவந்தது. மானவதியைப் பார்க்கப் பார்க்க உறுதி குலைந்தது.



இவனுடைய தத்தளிப்பையறிந்த ஸ்வாமிகள் "சிஷ்யா! இங்கு வா...இந்தா உன் செல்வம்....உம்..." என்று கூறியபடியே மானவதியின் கையைப் பிடித்து சுப்ரமணியன் கையில்கொடுத்து "அப்பா!...உன் பரிசுத்தம் இன்னும் பரிமளிக்குமே யன்றி குறையாது. உன்னுடைய மனம் பரிபக்குவமாகிய பிறகு நீ மீண்டும் சன்யாசியாகலாம். போ! உன் குழந்தையைக் காப்பாற்று நீ 'காஷாயம் கட்டவேண்டும். காஷாயம் கொடு கொடு' என்று என்னை அடிக்கடிக் கேட்டும் நான் ஏன் உனக்குக் கொடுக்கவில்லை தெரியுமா?...உன் மனது காஷாயத்தைத் தாங்கும்படியான பரிபக்கு வத்தை அடையவே இல்லை. அதற்கும் ஓர் காலம் வரும். "நம் குழந்தை என்னவாயிற்றே?" என்று நீ பலதரம் சிந்தித்த ரகஸியம் எனக்குத் தெரியும். கர்மபந்தம் இன்னும் உனக்கு விடவில்லை. சிறுமியை அழைத்துக்கொண்டு போ...எந்த அழகான பெண்களைப் பார்த்தாலும் மானவதியைப் போலிருக்கிறளே என்று நீ நினைக்கும் வரையில் காஷாயத்திற்கு நீ அருகதை இல்லாதவனே யாவாய் ..வீணுய்க் குழம்பாதே!" என்றூர்.

சுப்ரமண்யன் மறுபேச்சு பேசாமல் குருவை நமஸ்காரம் செய்துப் பின், மானவதியைத் தழுவி உச்சி முகந்தான். "ஸ்வாமி! ஆக்ஞைப்படி இப்போது செய்கிறேன். அவளைத் தக்கவிடத்தில் கொடுத்தபின் வந்து உங்கள் திருவடியில் ஆச்ரயிப்பேன்" என்றுன். சஞ்சீவியின் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது. ஸ்வாமி களின் முகம் விகசிதமடைந்தது.

27

காட்டிற்குப்போனுலும் போட்டிவிடுமா?

மானவதியை அணைந்த சுப்ரமணியனின் உள்ளம் புலகித மடைந்தது.

"மக்கெண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு."

என்கிற திருக்குறளின் அற்புதஸாரத்தின் உணர்ச்சியை அப்போது தான் அவன் உள்ளம் அறிந்து ஆனந்த பாஷ்பத்தைச் சொறிந்தது, "மானவதி! என் கண்ணே!"...என்றுன். மேலே பேசக்கூடாது மௌனம் குடிகொண்டது. சஞ்சீவி, மானவதிக்குத் தேறுதல் கூறித் தகப்பனரிடம் ஒப்படைத்து, "சுப்ரமண்யா!...நான் வரு கிறேன். உன் செல்வியைக் கைவிடாதே" என்று கூறிச்சென்றூர்.

குருவின் வாக்கைப் பரிபாலிக்க சுப்ரமணியன் அன்றே மான வதியுடன் வேறு ஊருக்குச் சென்று ஒரு சிறிய வீட்டில் உலகத்து மக்களைப்போல் ஒரு மனப்பட்ட அன்புடன் குடித்தனம் நடத்த வாரம்பித்தான்.

மானவதியின் கையால் சமையல் செய்து பரிமாறுவதைச் சாப்பிடும்போது சுப்ரமணியனின் ஆனந்தம் உச்சத்தை எட்டியது. மானவதி தாதாவின் தம்பூராவை முன்மாதிரியே பூஜித்துவருகிறுள். சுப்ரமணியன் புத்திரவாத்ஸல்யத்தினுல் கட்டுண்டு இருக்கிறுனே யன்றி எப்படியாவது ஒரு வரனைத் தேடி அவளுக்கு விவாகத் தைச் செய்துவிட்டு குருவினிடம் போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்கிற பேராவலே அவன் உள்ளத்தில் போராடிக்கொண்டிருந்தது. அதற்காக அவன் பிரயாசையையும் எடுத்துக்கொண்டான்.

ஜீவனத்திற்காக எந்தவிதமான அடிமைத் தொழிலையும் மேற் கொள்ள அவன் மனது இடந்தராததால் வீதியில் உட்கார்ந்து புராணம் படித்து, அதில் கிடைக்கும் சொல்பவருமானத்தில் தகப் பனும் மகளும் பரமதிருப்தியடைந்துவந்தார்கள்.

ஆனல் சன்யாசி கோலத்தை அவன் விலக்கவே இல்லை. வெகு சௌந்தர்யத்துடன் பிரகாசிக்கும் மானவதியைக்கண்டு பிரமிக் காதவர்களில்லை. "திண்ணையில் உட்கார்ந்து கதை சொல்லிப் பிழைக்கும் சன்யாசிக்கு இத்தனை அழகான மகளா? இவனுடைய மகள் என்றுல் நம்புவார்களா! என்ன அழகு! என்ன அடக்கம்! எத்தனை பணிவு! இது ஏதோ சந்தேகமாகத்தானிருக்கிறது" என்கிற சின்னச்சொல்லும் சிங்காரச்சொல்லும் கூடவே உதயமாகியது.

சுப்ரமண்யன் தன் குருநாதர் சொல்லியதுபோல் தாமரையிலை நீர்த்துளிபோலவே இருந்து கல்யாணத்தை முடித்துவிட்டால் போதும் என்ற நோக்கத்துடன் அதிக ஆசாபாசம் வைக்கா திருக்க பிரயாசைப்பட்டுவந்தான்.

மானவதிக்கு நல்ல விஷயங்களை உபதேசிப்பது, நாராயண மந்திரத்தின் மகிமையையும், நமச்சிவாய மந்திரத்தின் மகிமை யையும் விளக்கிக்கூறி அவளையும் ஒரு பரிசுத்தாத்மாவாக்கிவந்தான். மகா புத்திசாலியான மானவதி தன் தகப்பனுரை குருவாகவும் முன் ன்றிதெய்வமாகவும் எண்ணி பயபக்தியுடன் நடந்துகொண்டாள்.

இவர்கள் வீட்டிற்குப் பக்கத்தில் பெரிய பணக்காரர்களோ, நாகரீகம் நிறைந்தவர்களோ கிடையாது. வம்பு பேசிப் பொழுதைப் போக்கும் சில நாட்டுப்புறத்து காட்டுமிராண்டிகளைப் போன்ற சில பாட்டிமார்களும், திருட்டுப் பார்வை பார்த்து பல்லிளித்துக் கண் ணடித்து விசில் ஊதும் சில சோதாக்களும்தான் இருந்தார்கள்.

புதிதாக வந்துள்ள சுப்ரமண்யத்திற்கு இந்தத் தெருவின் மகிமை தெரியாதாகையால் தனி வீடு, வாடகைக்குறைவாகவிருப்ப தால் ஏழையாயிற்றே, எளிய ஜீவனத்திற்கு ஏற்ற இடம் இது என்ற எண்ணத்தில் குடிவந்துவிட்டார். அதோடு இந்த தெருவி லிருந்து கோயில் வெகு சமீபமாக இருந்ததால் இங்கு வந்தார்.

காலையில் தூங்கி எழுந்தவுடனே நதிக்குச் சென்று அனுஷ் டானங்களை முடித்துக்கொண்டு சன்னிதிக்குப்போய் வீடுவரும் போது, பகல் 1 மணி ஆகிவிடும். அதுவரையில் மானவதி வீட்டுக்

கதவுகளைப் போட்டுக்கொண்டு தனிமையில் இருப்பது முதலில் மிகவும் பயமாயும் துக்கமாகவும் இருந்தது.

தகப்பனாரிடம் தனக்கு ஒண்டியாயிருப்பதற்குப் பயமாயிருக்கிறதென்று கூறினாள். வாஸ்தவத்தில் ஒரு பூதருமில்லாதவீட்டில் சிறுமி மட்டும் இருப்பது பயமாயிருப்பதுடன் ஆபத்தாயும் முடியும் என்று அவருக்கே தோன்றியதால் ஒரு வேலைக்காரியின் துணை அவசியமென்று காவல் வைத்தார். மானவதி வீட்டைவிட்டு வெளியே செல்லும் நாட்டமே அற்றது. சதா வீட்டுக்குள் அடைபட்டுக் கிடப்பதும் தம்பூராவை வைத்துக்கொண்டு பாடுவதும் புத்தகங்கள் படிப்பதும் வீட்டு வேலைகளைச் செய்வதுமாகப் பொழுது போயிற்றெனினும் முன்பு அவளுக்கிருந்த தெப்பும் சந்தோஷமும் எப்படியோ மறைந்தேபோயிற்று. பெற்றதகப்பனாரிடம் இருப்பதில் கூட அவள் இதயம் நிரம்பவில்லை. தன் பாட்டனாரிடம் இருந்த காலத்தின் இன்பமே அவளுக்குப் பெரிதாகத் தோன்றியது.

28

கடந்தநாள் நினைவும் கல்யாணப்பேச்சும்

எப்படியோ, பின்னும் ஒரு வருடகாலம் ஓடி மறைந்தது. இந்த பன்னிரண்டு மாதங்களுக்குள் சுப்ரமணியன் சுமார் ஏழெட்டு ஊர்கள் மாறியாகிவிட்டது. காரணம்? பிழைப்புக்கு ஆதரவு ஏற்படாததேயாகும். கந்தனூரில் வந்து ஒரு மாதமாகிறது. கல்யாணத்திற்காகக் கண்டவர்களிடமெல்லாம் சொல்லி இடம் பார்த்துவந்தான்.

அங்குள்ள தேவாலயத்தில் தினம் இரவு புராணம் படித்து வந்ததில் மாதம் சொல்ப ஆதாயம் கிடைத்தது. அதைக்கொண்டு சுமாராகக் காலக்ஷேபம் செய்துவந்தார்கள். மானவதிக்கு செல்வத்தில் குறைவு இருப்பினும் யௌவனத்திற்குத் தக்க செழுமையில் ஒரு குறைவும் இன்றி வெகு நன்றாக வளர்ந்துவருவதைக் காண வரண்டுபோன சுப்ரமண்யனின் இதயத்தில் பழங்காலத்தில் தன் மனைவியிருந்த களையே நெஞ்சில் உதயமாகியது.

"அம்மணி! குழந்தாய்!...நான் எத்தனைதான் மறக்கவேண்டுமென்று பிரயத்தனப்பட்டாலும் உன்னுடைய வனப்பும், வளமையும், உன் தாயாரின் நினைவை கண்முன்பு தாண்டவமாடச் செய்கின்றன. உன் தாயைப்பற்றி உன் பாட்டனார் ஏதாவது சொல்லியிருக்கிறாரா!" என்று அவனையும் மீறி ஒரு தினம் கேட்டான்.

மான:—அடிக்கடி சொல்லுவார். நீங்களும் அம்மாவும் நகமும் சதையும், தேனும் பாலும் போலிருப்பீர்களாம். அம்மா எத்தனையோ

அழகாயிருப்பார்களாம். நீங்கள் அம்மாவிடம் வைத்திருந்த பிரேமையினால்தான் மனது தாங்காது ஓடிவிட்டதாகக் கூறி அழுவார்.

சுப்:—உம்...நான் கல்நெஞ்சன், கபடன், உண்மையன்பு அற்றவன். அம்மாதிரி இருந்ததினால்தான் இன்னமும் உயிருடன் இருக்கிறேன். என் மானவதியிடம் நான் உண்மையான பிரேமை வைத்திருந்தவனாயின் அவள் எரியும்போது கூடவே என் சரீரமும் எரிந்திருக்காதா?...எல்லாம் சொப்பனம். அந்த ஜுவாலையில் நானும் குதித்துவிட பலதரம் பிரயத்தனம் செய்தேன். ஆசை வேரறுக்கப் படவில்லை. சரீரத்திற்குச் சூடு உரைக்காமல் உரைந்துபோகும் பரிபக்குவம் உண்டாகவில்லை. மானவதியின் சரீரம் கொழுந்துவிட்டு எரிவதைக் காணக்காண உன்மீதுதான் என் ஆத்திரமும் கோபமும் பற்றிஎரிந்தது. கண்மணீ! எனக்கப்போதிருந்த ஆத்திரத்தில் உன்னைத் தூக்கிக்கொண்டு அந்த தீயில் எரித்துவிடலாமா என்றும் தோன்றியது. உன்னை நினைக்கவே மனம் வெறுத்த வேகத்தில் நீ எப்படியாவது துலைந்துபோ என்று வெறுத்துவிட்டு ஓடினேன்.

கண்மணீ! நான்செய்த முட்டாள்தனத்தை அப்போது உணரவில்லை. கன்யாக்குமரி முதல் காசிவரையில், ஏன் இமாசலத்தைக்கூட தரிசித்துவிட்டேன். மனது வெளுக்கவில்லை. மாயை ஒழியவில்லை. உன் தாயை என்னால் மறக்கவே முடியாதுபோயிற்று. என் மானவதியைப் பார்த்தகண்ணால் மற்றொரு மங்கையைப் பார்ப்பதற்கு என் மனது முற்றிலும் வெறுத்து அந்த துறையில் தீராத வைராக்யத்தை அடைந்தது. அதுதான் என்னை இது பரியந்தம் காத்து வருகிறது, எந்த ஆசையை ஜெயித்தாலும் புத்திர வாத்ஸல்யமாகிய உன்மீதுள்ள ஆசையை ஜெயிக்க முடியாது தவிக்கிறேன்.

கண்ணே! உன்னை வெறுத்தவரையில் மனது ஒருமாதிரியாகத்தான் இருந்தது. ஆனால் இப்போதோ கொஞ்சநஞ்சம் வெறுத்திருந்த மனது பாசி படிந்துவருகிறது. உனக்குத்தக்க கணவன்கிடைத்து நீ நன்றாகயிருக்கவேண்டுமே என்கிற அக்ஞானக்கவலை உண்டாகியதால் ஆண்டவனைத் தொழுவதுகூட மறந்துவிடுகிறது.

மானவதீ!....உனக்கு நீயே பெரியவள். இன்று உன்னைப் பார்க்க யாரோ வருகிறார்களாம். உனக்கு நீயே அலங்காரம் செய்துகொண்டு இரு. நல்ல இடம். பையனுக்கு கல்கத்தாவில் வேலையாம். அழகான பெண் வேண்டுமென்று தேடுகிறானும். பணத்தைப்பற்றி அவச்யமில்லையாம். அன்று வந்து பார்த்த பையனின் நண்பனும். அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டதாம். இன்று பையனின் தகப்பனார் வருகிறாராம். நேரமாகிவிட்டது. உன் தாயாரின் சேலை இருப்பதாகச் சொன்னாயே! அதை உடுத்திக் கொள்ளு...என்று கூறித் தானே மானவதிக்குத் தலையைக் கோதிவிட்டு ஒரு பெருமூச்சுடன் எழுந்துசென்றார்.

சரியாக மாலை நாலுமணிக்கு ஒரு கிழவரும் அவருடன் ஒரு சாதாரண மனிதரும் வந்து மானவதியைப் பார்த்தார்கள். சாக்ஷாத்

மகாலக்ஷ்மியைப்போல் அழகே உருவாயிருக்கும் மானவதியை வேண்டாம் என்று சொல்வதற்கு யாருக்கு மனம் வரும்?

தட்டுடன் வெத்திலை பாக்கும் ரவிக்கையும் கொடுத்துவிட்டு, 'ஸ்வாமீ! இதுவே நிச்சயதார்த்தமாக வைத்துக்கொண்டு முகூர்த்தம் வைக்கலாம்' என்றார். கூடவந்த புரோகிதர் வெகு சமீபத்திலேயே முகூர்த்தம் வைத்துவிட்டார். பிள்ளையின் புகைப்படத்தை மானவதிக்குக் காட்டினார்கள்.

கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியுமா? என்பது போல் வெளியுலக விவகாரமே தெரியாத சிறுமி தன் காலமுறைப்படி மவுனம் சாதித்தாள். பையன் வெகு கம்பீரமாயும் நன்றாயுமிருப்பதால் சுப்ரமண்யனுக்குப் பிடித்தது. முகூர்த்தம் நிச்சயமாகியதும் ஒருபாரம் தன் தலையைவிட்டு இறங்கியதுபோல் தோன்றியது.

29

ஏமாற்றப் புசலும் இன்பக் காற்றும்

விதி செய்யும் விளையாட்டின் அற்புதத்தை என்னென்பது? விவாகத்திற்கு நிச்சயம் செய்துவிட்டுச் சென்றவர்களிடமிருந்து மூன்றாம்நாள் தங்களுக்கு இஷ்டமில்லை என்று கடிதம் வந்துவிட்டது.

ஐயோ பாவம்! தனக்கொருபாரம் நீங்கியது என்று சன்யாசி நினைத்து இன்புறுவதற்குள் இடுப்பு உடைந்ததுபோல் இக்கடிதம் வந்து கலக்கிவிட்டது. மானவதிக்கும் தனக்கென்று ஒரு பெண் துணைகூட இல்லாதிருப்பது மிகவும் குறையாகவிருந்தது நிவர்த்தியாகியதாகவே எண்ணினாள்.

இக்கடிதம் வந்ததும் தந்தையும் மகளும் இடிந்துவிட்டார்கள். முதல் முதல் எடுத்த உடனேயே இம்மாதிரியாகிவிட்டதே... அபசகுனமா! சுபசகுனமா! என்று பெரிய கவலை சன்யாசியின் இதயத்தை வாட்டி வதைத்தது.

இதற்குப் பிறகு ஒன்று, இரண்டு, மூன்று, என்று ஏழெட்டு பேர்களுக்குமேல் வந்து பார்ப்பதும் நிச்சயமாகப் பேசுவதும் பிறகு கையை விரிப்பதுமாக விருந்தது மானவதிக்கு மிக்க துக்கத்தையும் அவமானத்தையும் கொடுத்தது. தன்னுடைய ஒண்டிக்கட்டைத் தன்மையின் அவலம் அப்போதுதான் அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அதுவே ஒரு திகிலாக மாறியது. தன் தாதாவின் மரணத்தினால் தன்னுடைய பரதேசித்தன்மையை எண்ணி எண்ணி அழுதவாறு தகப்பனாரிடம் அவளை மீறிய துக்கத்தால் "அப்பா! இதென்ன வெட்கக்கேடு? ஒவ்வொருவரும் இப்படி முகூர்த்தம் வைத்து நிறுத்துவது பெரிய அவமானக் கேடாக இருக்கிறதே.

என்ன காரணத்தினுல் இப்படி ஆகிறது. நீங்கள் எனக்காக தயவு செய்து இந்த சன்யாசி கோலத்தை விலக்கிவிட்டு சாதாரண மனிதர்களைப்போலிருக்கக்கூடாதா! சன்யாசிக்குப் பெண்ணும்... கல்யாணமாம் என்றல்லவா பெயர்வந்துவிட்டது.

அப்பா! அப்பா...இன்னும் நீங்கள் சம்மதிப்பதாயின் சொல்கிறேன். எனது அனுதைத்தனத்தைக் கண்டுதான் என்னை வெறுக்கிருர்கள். எனக்காக, நீங்கள் ஒரு கல்யாணத்தைச் செய்துகொள்ளக்கூடாதா!...எனக்கென ஓர் பெண்ணுதாவும், உங்களுக்கும்...

என்று முடிப்பதற்குள், "கிருஷ்ணு! கிருஷ்ணு!" என்று காதைப் பொத்திக்கொண்டு...."ஆ...மானவதி! என்னை இப்படித்தானு சோதிக்க எண்ணினுய்....ஐயோ! குழந்தாய்...இனி என்னைப் பார்த்துக் கல்யாணமென்கிற பேச்சை எடுத்து கொலைசெய்யாதே. என் காதில் இன்னொருதரம் அந்த வார்த்தை விழுமாயின் நான் உண்மையில் சொல்லாது மீண்டும் ஓடிவிடுவேன். உனக்காக வேண்டுமாயின் நீ முதலில் சொல்லியபடி இந்த வேஷத்தை மாற்றிக் கொள்கிறேன். இதற்குமேல்என்னுல் அணுவளவும் மாறமுடியாது. ஆண்டவன்மீது ஆணையாக என்னை இதற்குமேல் பேசாதே...என்று கண்டிப்பாய் கூறினுர்.

எற்கெனவே வருஷக்கணக்காக ஓடி, மன உறுதியடைந்துள்ள மனிதன் இனியும் போய்விட்டால் தன்கதி அதோகதியாகிவிடுமே என்கிற பெரிய பயத்தால் பேசாதிருந்தாள்.

சன்யாசி கோலம் மாறிசம்சாரிகோலத்தை யடைந்து பஞ்ச கச்சம் வேஷ்டி கட்டிக்கொண்டார். ஆனுல் தற்கால நாகரீகப்படி க்ராப்பு இல்லை; முகக்ஷவரமும் இல்லை. சாதாரண குடுமியும் வெகு நாட்களுக்கொருதரம் க்ஷவரமும் செய்துகொண்டார்.

பின்னும் ஆறுமாதம் ஓடி மறைந்தது. கந்தநூரில் சந்யாசிக்குப் பெண் எப்படிவந்தது என்ற குசமசவுடன் தற்போது சம்சாரியைப் போலாகியது வம்பும் குறும்புபேச்சும் அதிகமாகி, மதிப்பும் ஆதரவும் குறைந்தது. சின்னப் பேச்சுக்களும் ஏச்சுக்களும் இவர் காதிலேயே விழத் தொடங்கியதும் அவ்வூரில் விரோத மிருப்பதை அறிந்து வேறு ஊருக்குச் சென்றுவிட்டார்கள்.

விக்னேச்வர புரத்திற்குக் குடிவந்ததும், நமக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது என்று எண்ணி மகிழ்ந்தார். அதற்குக் காரணம் மானவதிக்கு விவாகம் இவர்கள் எதிர்பாராத விதம் நிச்சயமாயிற்று. கல்யாணத் தேதியும் குறிப்பிட்டதோடு பெண்ணுக்கு நகைக்காக 1000 ரூபாயும் கையில் ரொக்கமாக எண்ணிச் சென்றுர்கள்.

இந்த ரூபாயிக்கு என்ன நகை செய்வதென்று சுப்ரமண்யனுக்கும் தெரியவில்லை; மானவதிக்கும் தெரியவில்லை. ஆனுல் ஆயிரம் ரூபாய் கையில் கொடுத்துவிட்டதால் கட்டாயம் கல்யாணம் நடக்கும் என்கிற நம்பிக்கையும் சந்தோஷமும் உண்டாகியது.

30

உத்தம சாதுவும் பத்திரகாளியும்

"அப்பா! கல்யாணம் நெருங்கிவிட்டதே, நமக்கு யாருமே பந்துக்கள் கிடையாதாப்பா...ஒருவரும் இல்லாமலா கல்யாணம் நடக்கும்?" என்று ஆவலுடன் கேட்டாள்.

சுப்ரமண்யனின் இதயத்தில் எங்குமில்லாத துக்கம் பீறிக் கொண்டுவந்தது..."உம்...மனிதர்கள். உறவினர்கள்...யார் யார் இருக்கின்றார்களோ! யார் யார் இறந்தார்களோ! என் மானவதி யின் மறைவுக்குப் பிறகு நான் என்னையே வெறுத்தேனென்றால் மற்றவர்களை ஏன் நினைக்கப்போகிறேன். ஒரு காலத்தில் வேண்டிய வர்கள்தான் இருந்தார்கள். உடன்பிறந்த அண்ணன்கூட ஒருவன் உண்டு....ஆனால்...அவனும் நானும் ஒரு ரயிலில் செல்லும் ப்ரயாணி கள் தம் தம் ஊரில் இறங்குவதுபோல் ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறந்தோம்; தனித் தனி வாழ்க்கைச் சக்கரம் மாறியது. அவனுக்கு ஒரு மகனும் மகளும் மனைவியும் இருந்தார்கள். அவன் விஷயமே பிறகு எனக்குத் தெரியாது; அதை அறியவும் நான் விரும்பவில்லை. உம்...அதைப்பற்றி இப்போது எதற்கு? சஞ்சீவிக்குப் போட்ட கடிதத்திற்குப் பதில் காணவில்லை. அவர் குடும்பத்துடன் வருவார் என்று நம்புகிறேன். உன்னை உன் கணவன் கையில் ஒப்பித்துவிட் டால் என் கடமை தீர்ந்துவிடும். நான் என் குருநாதரிடம்போய்ச் சேர்ந்துவிடுவேன்" என்றார்.

அதற்குமேல் அவள் எதுவும் பேசவில்லையெனினும் "எப்படி யாவது எனது பெரிய தகப்பனார் விலாசம் தெரியக்கூடாதா! அவர் களுடைய ஆதரவு நமக்குக் கிடைக்காதா!" என்ற ஏக்கம் புதி தாகப் புகுந்துகொண்டது.

நாளை விடிந்தால் கல்யாணம், பிள்ளைவீட்டுக்காரர்கள்கொள்ளை கொள்ளையாக வந்துவிட்டார்கள். காலம் முழுதும் சன்யாசி வாழ்க் கையில் காலத்தைத் தள்ளிய அப்பாவி மனிதனுக்குக் கல்யாணம் செய்யும் விமரிசைதான் என்ன தெரியும்? அதோடு ஒரு பெண் பிள்ளைகூட மருந்துக்கும் இல்லாத வீட்டில் குடித்தனப்பாங்கும் விதரணையும் என்னதெரியும்?

சம்மந்திவீட்டார் இறங்குவதற்குத் தனி வீடு அமர்த்தி கடை யிலிருந்து சாமான்களைப் பொட்டளம் பொட்டளமாக வைத்திருந்த தைப் பார்த்தவுடனே சம்மந்திவீட்டுப் பெண்களுக்கு ஆத்திரம் பொங்கியது. "வெகு அழகான உபசாரந்தான்" என்று முதல் எடுக் கும்போதே முணமுணப்பு உண்டாகியது.

"சமையலா! சாப்பாடா! விசாரணையா! ஒன்றையுங் காண வில்லையே!" என்று புருஷர்களும் வாசலில் திண்ணைப் பேச்சுப்பேசு வதைக் கேட்ட அண்டைவீட்டுக்காரர் சிரித்துக்கொண்டே..."உம்...

நீங்க எப்படித்தான் சம்மந்தம் செய்யவந்தீர்களோ! தெரியவில்லே. இந்த கல்யாணத்துக்கு நாதி யார் இருக்கிறார்கள்? சன்யாசி சம் சாரியான கதை என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இது நேரில் பிரத்யக்ஷமாயிருக்கிறது. அவன் சன்யாசியாகவே திரிந் தவனும்... அவனுக்கு திடீரென்று ஒரு பெண் முளைத்திருக்கிறதாம். ஏதோ ஆபாஸக் குப்பை. அவன் சன்யாசிகோலத்தில் இப் போது இல்லை"...என்று தானே தன்னை யாரோ கேட்டதுபோல வலுவில் கூறினன்.

காரணம் தனக்கு இரண்டாந்தாரமாக மானவதியைக் கேட்டு அது நிறைவேருதுபோனதேயாகும். எரிகிற அடுப்பில் எண்ணெயை ஊற்றியதுபோல் இந்த மகானுபாவனுடைய வார்த்தை அமைந்தது. இதைக் கேட்ட சம்மந்தியம்மாள் அசல் ஸ்ரீமதி காளிகாதேவியின் வீர ஸ்வரூபத்தையே அடைந்தாள்.

"நன்ருக இருக்கிறது. சம்மந்தமாம் சம்மந்தம். பெண் ரதியைப் போலிருக்கிருள், சுண்டைக்காயைப்போலிருக்கிருள் என்று கூறி பல்லேப் பிளந்துவிட்டு, சன்னியாசி பெற்றப் பெண்ணே. அல்லது எந்த தேவடியாள் பெத்தச் சிறுக்கியோ! எந்த குப்பைத்தொட்டிப் பிணமோ....கல்யாணம் நிச்சயித்த அழகைப் பார்த்தாயா... வாருங்கள்; முதலில் அந்த வீட்டுக்குப்போய் உண்மையை அறிய லாம்" என்று பிள்ளையின் தாயார் பெரிதாக வீர கர்ஜனை செய்த படியே தன் பக்கமாகப் பேசும் சில ஆண்பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு மானவதின் வீட்டிற்குக் கிளம் பினுள். இந்த விபரீத மாறுதலைக் கண்ட கல்யாணப் பிள்ளையின் உள்ளம் கலங்குகிறது. அவன் தாயாரின் கைக்குள் அடங்கிய பொம்மை. தாயார் நல்ல தைரியசாலி. அதோடு தன் கையில் சொத்துடையவள். அதனுல் அவளிடம் எல்லோரும் தனி மதிப்பு வேறு வைத்திருக்கிருர்கள்.

கல்யாணப்பிள்ளை முதலில் தடுத்துப் பார்த்தான். தாயார் மகனை அடிக்காத குற்றமாகப் பிடித்துத் தள்ளிவிட்டு ஒட்டமாகச் சென்ருள். மற்றவர்களின் உள்ளம் தவித்தது. 'என்ன கேருமோ! சன்யாசி என்கிருர்களே! என்ன சன்யாசியோ! மாயமந்திர சன் யாசியோ!' என்கிற புதியபுதிய எண்ணங்கள் உண்டாகிவதைத்தன.

31

பேதையின் தவிப்பும் பைசாசின் குதிப்பும்

பிள்ளைவீட்டார்கள் வந்துவிட்டார்கள் என்றதைக் கேட்டதும் மானவதிக்கு இனி கவலையே அற்றுவிட்டது என்கிற அடக்கமுடியாத சந்தோஷம் உண்டாகியது. கல்யாணத்திற்கு அலங்காரம் செய்துவிடுகிறவர்கள் யார் இருக்கிருர்கள்? அலங்காரத் திற்குத்தான் என்ன நகையிருக்கிறது பாவம்.

தானே தலை பின்னிக்கொண்டாள். முன்னதுபின்னதுகூட தெரியாமல் கல்யாணத்திற்கென்று வாங்கியுள்ள புடவைகல்யாணக் கோலமென்றால் இப்போதே மடிசார் கட்டிக்கொள்ளவேண்டுமோ! என்னவோ! என்கிற பலவித கலவரத்துடன் தானே தனக்குத் தெரிந்தவரையில் தன் தாயாரின் முத்து சரத்தைத் தலையில் கட்டிக் கொண்டு தன் தாதாவின் ஜிகிணாமாலையையும், புஷ்பமாலையையும் தானே அணிந்துகொண்டு கண்ணாடியில் தன்னழகைத்தானே பார்த்துப் பிரமித்தாள்.

ஆனந்தப் பூரிப்பின் சோபை அவளுக்கோர் தனித்த தேவ தாம்சம் பொருந்தியது போன்ற சௌந்தர்யத்தைக் கொடுத்தது. சுப்ரமண்யனுக்கு ஒன்றுமே தோன்றாத கவலையும் துக்கமுந்தான் நிமிடத்திற்கு நிமிடம் ஏறிக்கொண்டிருந்தது.

தற்செயலாக உள்ளே வந்து பார்க்கையில் மானவதியின் கல்யாணக் கோலம் அவனை பிரமிக்கச் செய்தது. சில வினாடிகள் தன்னை மறந்து நின்றபின்...'மானவதீ இதென்ன இப்போதே இந்தமாதிரி உடுத்திக் கொண்டாயே! கல்யாணத்தன்றுதான் இப்படி உடுக்கவேண்டும்...உம். ஒருவரும் நாதியற்றத் தன்மையில் வளரும் குழந்தையாகிய உனக்கு எப்படித் தெரியும்? கண்ணா! உடனே இந்தக் கட்டை அவிழ்த்துவிட்டு சாதாரண முன்குசவன் கட்டிக்கொள்ளும்மா'.... என்று சாந்தமாயும் அன்பு ததும்பவும் கூறினார்.

இதைக் கேட்ட பிறகே மானவதிக்கு

வெட்கமும், தான் அறியாது செய்துவிட்ட குற்றமும் சற்று தெரிந்தது. “இதோ மாற்றிவிடுகிறேன் அப்பா! நான் கல்யாணமே பார்த்ததில்லை—என்று குயில்போன்ற குரலில் கொஞ்சலாகக் கூறும்போது ராக்ஷஸத்வனியினும் கொடியகுரலில் ‘எங்கே அந்தப்போலிச் சாமியார்?...எங்கே அந்த அனுமதேயப்பிண்டம்? சன்யாசிக் கட்டைக்குச் சிங்காரக் குழந்தையா?...யாரை ஏமாற்றி ஆயிரம் ரூபாயைக் கொள்ளையடித்தான் பாவி?’ என்று கர்ஜனை செய்துகொண்டு ஆணும் பெண்ணுமான ஒரு கூட்டம் வந்ததைக்கண்டு அப்படியே பதறிப்போய் பெண்ணும் தகப்பனும் நெருப்பை மிதித்தவர்கள் போல் நின்றார்கள்.

ஆகாயமும் பூமியும் ஒன்றாகச் சுற்றுவது போன்ற அதிர்ச்சியால் மானவதி, கூவென ஒரு குரல் வீறிட்டாள். சம்மந்தியம்மாள் ராக்ஷஸிபோல் கையை நீட்டியும் ஆட்டியும் கண்கள் பிதுங்கதொண்டை கிழிய ‘சன்யாசியாம் சன்யாசி...தூத்தூ கள்ளச்சாமியாராயிருந்து இந்த கிள்ளை மொழி குழந்தையை அடைந்தாய்... மானங்கெட்ட பிழைப்பு. இப்படி பிழைப்பதைவிட ஏரி, குளம் ஏதும் அகப்படவில்லையா!...

நமோதில்லாத அனுமதேயப் பிண்டமாகையால் தான் கல்யாணத்திற்கு முதல்நாளே இந்த கோலத்துடனிருக்கிறாள்....தேவடியா சிறுக்கிக்கு தைரியத்திற்குக் குறைவா...டேய் சாமியாரே!...ஒரு ஊரில் சன்யாசி, ஒரு ஊரில் சம்சாரியா...போரும் உன் சம்மந்தம். மரியாதையாக எங்கள் பணத்தைக் கீழே வைக்கிறாயா இல்லையா?’ என்று தான் பெண்பிள்ளை என்பதைக்கூட மறந்து பத்திரகாளியைப்போல் கூச்சலிட்டாள்.

அந்தோ! பரிதாபம்; பரிதாபம்! தனக்கு ஆனந்த சூரியன் உதயமாகிவிட்டான் என்று சற்று முன்னர்தான் எண்ணி அளவளாவிய மானவதியை இந்தக் கூச்சலும் பேச்சும் சேர்ந்து அப்படியே அக்கினிக் கடலில் தூக்கி எறிந்தது போலாக்கிவிட்டது.

க்ரீச் சென்று ஒரு கூச்சலிட்டவாறு

துள்ளினள். பரமசாதுவும் வேதாந்தியுமான சுப்ரமணியனின் கதி கலங்கியது. இந்த பத்திரகாளி கூறிய வார்த்தையின் வேகம் அந்த சாந்த ஸ்வரூபத்தைக்கூட சிதறவடித்து எங்குமில்லாத ஆக்ரோஷம் பீறிக்கொண்டுவந்தது.

தன் குழந்தையை ஒருகையால் அணைத்துக்கொண்டு அங்கு வந்துள்ள பத்திரகாளி அம்மனை நோக்கி "அம்மணீ! என் இதயத்தில் எல்லையைக் கடந்த ஆவேசம் பொங்கி எழுவதையும் அடக்கி நீங்கள் ஸ்த்ரீ ஜாதியாயிற்றே என்ற ஒரு கடுகளவு மரியாதையை வைத்து பேசுகிறேன். நீங்கள் கொடுத்த ஆயிரம் ரூபாயும் சரி, இதோ கீழே இருக்கிற மண்ணும் சரி. உங்கள் பணத்திமிரால் வாய்க்கு வந்தபடி அடாத வார்த்தைகளைப் பேசினல் என் வயிறு எரிவதே போல் நீங்கள் எரிந்துவிடுவீர்கள். ஈச்வரசாக்ஷியாகப் பிறந்துள்ள என் குழந்தையை அக்ரமமாக தாசிப்பெண் என்றும், வேசிப் பெண் என்றும் கூசாமல் பேசி குழந்தையின் குடலை எரியச் செய்யும் உங்கள் நாக்கு அழுகிப்போய்விடும். ஒருவாய் சோறு தின்பதற்கு வாயில்லாது புழுத்துப்போய்விடும். எங்கள் பரிசுத்தத்தை எம்பெருமான் அறிவான். அவன் அறிந்தால்போதும். வீண் பிதற்றலுக்கு இங்கு இடமில்லை. வெளியே போங்கள். என்மகளுக்கு இனி விவாகம் செய்யப்போவதில்லை. அவளை வைராக்யப் பழமாக்கி ஆண்டவனுக்கு அருந் தொண் டாற்றுவதற்கு அர்ப்பணம் செய்து விடுகிறேன். உலகமே கொண்டாடி என்றென்றும் தொழுதுவரும் பக்த சிகாமணியாகிய சபரி என்ன...அவ்வையார் என்ன, மணி மேகலை என்ன இன்னும் இம்மாதிரி உதாரணப் பெண்மணிகள் நம் நாட்டில் எத்தனையோ பேர்கள் சுடர் விளக்குபோல் விளங்கு கிறர்கள்.

அந்த வழியைப் பின்பற்றும்படி என் கண்மணியைச் செய்து விட எனக்குத்தெரியும்....உம்...எல்லோரும் போகிறீர்களா! கழுத்தைப்பிடித்து தள்ளட்டுமா! இதோ உங்கள் சொத்தைக் காசு" என்று கூறி ஆயிரம் ரூபாயை வீசி எறிந்து 'போங்கள்'...என்று கழுத்தில் கைகொடுத்துத் தள்ளாத குற்றமாகக் கூறினர்.

பணப்பேராசைகொண்ட ராக்ஷஸி வாயில் வந்தவாறு திட்டிக் கொண்டே பணத்தைப் பொருக்கும் சமயம்,"கல்யாணப்பிள்ளைக்கு மயக்கம் போட்டுவிட்டது. சீக்கிரம் வாருங்கள்" என்று ஒரு ஆள் கூறியதைக்கேட்ட எல்லோரும் கதிகலங்கிப்போய் ஓடினர்கள். நியாயத்திற்கும் தருமத்திற்கும் கட்டுப்பட்ட இரண்டொருவர்... "ஐயையோ! மகாயோகியும் சுத்தாத்மாவுமாகிய இந்த மனிதனின் வாக்கு பலித்துவிடுமோ!" என்று எண்ணி நடுங்கினர்கள். இதே பேச்சு குசமுசவென்றும் பரவியது.

32

உடைந்த உள்ளமும் உருகிய உள்ளமும்

இளந்தளிராகிய பயிரை அழிக்கவந்த பூச்சியாகவே அந்த பிள்ளைவீட்டுக்காரர்கள் தோன்றினார்களேயன்றி கல்யாணத்திற்காக வந்ததாகவே இல்லை. "அப்பா! அப்பா!... ஐயையோ! நான் தாசிப்பெண்ணு!...வேசிப்பெண்ணு!...நீங்கள் போலிச்சாமியாரா!...என்று தன் நிலைகலங்கி கத்திய மானவதிக்கு அதே அதிர்ச்சியால் மின்சாரம் தாக்கியதுபோல் தாக்கிவிட்டது.

சுமார் அரைமணிநேரம் மூச்சுப் பேச்சில்லை. சன்யாசியின் உள்ளம் கொதித்துத் தத்தளிக்கின்றது. தன் மானவதியுடன் உலகப் பற்றுதலை அறவே துறந்த மனிதனின் நிலை தடுமாறுகின்றது. "கண்மணீ!...மானவதீ!...நீயும் உன் தாயுடன் ப்ரயாணமாகி விட்டாயா! நன்றாக வைராக்யம் வரும இந்தப் பாழும் இதயத்திற்கு பரிபூரண வைராக்யத்தைக் கொடுக்க நீ முன்வந்தாயா....செல்வமே! இந்த மின்னல்ஜோதியைப் போன்ற இன்பத்தை சிறிதுகாலம் ஏன் கொடுத்து என்னைக் கலங்கச்செய்யவேண்டும்? முதலிலேயே நீ மறைந்திருக்கக்கூடாதா!

கண்ணு! என் மானவதீ!...சன்யாசியின் உள்ளத்தில் சேறுபடியச் செய்துவிட்டாயே!....நிலைகொள்ளாது தவிக்கும் உணர்ச்சியை ஏன் கொடுத்து சோதிக்கிறாய்?...ஆம்! ஆம்!...இம்மாதிரி செய்தால்தான் மனது முறியும் என்று நினைத்தாயா!.... மானவதீ!...போ...போ...உன் தாயிடம் போய் சந்தோஷமாயிரு. இந்த பாதக உலகத்தில்...பசையற்றக் கல்நெஞ்சமும், வஞ்சக எண்ணமும்,மோசச்செய்கையும் குடிகொண்டிருக்கின்றன. க்ருபா மந்திரமாகத் துலங்கவேண்டிய உள்ளங்களுக்குப்பதில் காடி புலிகள் கூட வாஸம் செய்யமுடியாத பாழும் முள்ளுப்புதர்போன்ற இதயத்தை உடைய மனிதர்களின்முன்பு அனாதைப் பரதேசியான நீ வாழவேண்டாம்...என் கண்ணே! நீ போய்வா! போய்வா!... என்று வைராக்ய மிகுதியால் மனம் உடைந்துக் கூறும் பரிபவத்தைக்கண்டு யாரால்தான் சகிக்கமுடியும்?

மானவதியின் கல்யாணக் கடிதம் அனுப்பியும் சஞ்சீவி வராதது சுப்ரமண்யத்திற்கு மிகவும் கவலையாகவே இருந்தது. மானவதிக்கு மருந்துகொடுக்கவும் வைத்தியம் செயய்வும்கூட அந்த தத்தளிக்கும் மனிதனுக்குத் தெரியவில்லை.

சிறிது நேரம்கழித்து மானவதி 'ஹோ'...வென்று ஒரு பெருங் கூச்சலிட்டு எழுந்து நின்றாள்...'நான் வேசிமகளா...அப்பா! நீங்கள் போலிச் சாமியாரா...கூ...கூ' என்று மீண்டும் ப்ரம்மாண்டமான கூச்சலிட்டுக் கத்தினாள். ஓடி ஓடிக் குதித்தாள்.

சுப்ரமண்யத்தினுல் அவளைப் பிடிக்கவே முடியவில்லை. எத்தனைச் சமாதானம் செய்தும் மானவதி அந்த மூன்று வார்த்தைகளை விடாது கூறிக் கத்துவதைத் தவிர வேறு ஒருவிதமான உணர்ச்சியுமில்லாது போயிருக்கும் கண்ராவியைக் கண்டு சகிக்கமுடியாது சுப்ரமண்யனின் இதயம் பதினுயிரம் சுக்கலாக வெடித்துவிடும் போலாகியது...

"உம்....க்ருபாநிதி....இதுவும் ஒரு சோதனையா?...முதலில் குழந்தையை வெறுத்த இதயமாகச் செய்தாய்...மீண்டும் பாசத்தை ஊட்டி ஊசலாடச் செய்து புத்திர வாத்ஸல்யத்தைப் புகுத்தினுய்... மணக் கோலத்தில் கண்டுகளிக்கும் பேராவலை அக்கினி ஜ்வாலையைப்போல் எழுப்பினுய்...மறுபடியும் பேரிடி முழக்கத்துடனும் புசல் காற்றையும் பெருமழையையும் உண்டாக்கி வேடிக்கை பார்கிருய்...என்னப்பனே!...நான் செய்துள்ள அண்டறியாத பாபத்தின் பயங்கர ஸ்வரூபத்தின் சாயை இவ்வளவுதானு இன்னமும் இருக்கிறதா!...இருக்கிறதென்ருல் அதையும் சுமக்கத் தயாராக இருக்கிறேன்...உரலில் தலையைக்கொடுத்த பிறகு உலக்கைக்குப் பயந்தால் நிற்குமா!...மானவதியை நீ அவள் தாயாரிடம் சேர்ப்பித்தாலும் நான் சந்தோஷமாகப் பார்த்து பின்னும் மனது தெளிந்திருப்பேன். ஆனுல்...ஆனுல்...அவளுடைய இந்த கோரமான பரிதாப நிலையைக் கண்டு சகிக்கமுடியவில்லையே...என்ன செய்வேன்?...என்று குமுறுகிருர்.

மானவதி!....உன் தாய் என்னை வரவேண்டாம் என்று நிராகரித்துவிட்டதால் பயித்தியம் பிடித்ததா...மானவதி...இங்கு வாம்மா...என்று எத்தனை கட்டிப் பிடித்து என்ன சமாதானம் செய்தாலும் அவைகளால் அந்தச் சிறுமிக்கு என்னலாபம்?

அபரிமிதமான சந்தோஷம் பொங்கும் சமயம், அந்த சந்தோஷத்தைக் கொலைசெய்துவிடும் சம்பவம் நடந்த உடனே, ஏற்கெனவே வரன் தட்டியதால் உண்டாகியிருந்த அதிர்ச்சியும் ஒன்று சேர்ந்து தாக்கிவிட்டது. தன்போக்காகக் கூச்சலிடுவதையும், பிதற்றுவதையும் தவிர வேறு அறியாதப் பதுமைபோலானுள். மானவதியின் கூச்சலையும் பேத்தலையும் கேட்கக் கேட்க சுப்ரமண்யனின் உடம்பே மறத்துப்போய் கல்லுபோலாகியது.

33

நிறைந்த இன்பம் நிச்சயதார்த்தம்

"தம்பீ! பெண் எப்படியிருக்கிருள். உனக்குப் பிடித்திருக்கிறதல்லவா! ரதிதேவி என்ருல் வேறு சொல்லவே வேண்டாம் என்று அப்பா கூறினுர். உனக்கும் அப்படித்தானே தோன்றியது என்று நமட்டுச்சிரிப்பு சிரித்துக்கொண்டே கேட்டாள்.

முகு:—உனக்குள்ள சந்தோஷம் உன் முகத்தையே தூக்கி அடிக்கிறது. அது கிடக்கட்டும். அப்பாவுக்குச் சந்தோஷமாக விருக்கவேண்டுமென்று நான்செய்துள்ள பிரயத்தனங்கள் இன்னும் பலனை அளிக்கவில்லையேம்மா! கல்யாணத்திற்குள் அவருடைய மனது குளிர்ந்தால்போதும் என்று நான் பார்க்கிறேன். நீயோ கல்யாணத்திற்கு அவசரப்படுகிறாய். என்ன செய்வது?

தர்:—தம்பீ! என்றைக்கோ மறைந்துபோன விஷயத்தைப் பற்றி இத்தனை வருஷங்கழித்துக் கிளறினால் என்ன கிடைக்கும். அதற்காகவா ஒரு நல்ல காரியத்தைத் தள்ளிப்போடுவது? உன் சித்தப்பா உயிருடன் இருக்கிறாரோ! இல்லையோ! அப்படியிருந்தாலும் அவர் பேசாமல்கூட இருப்பாரா...எந்த காலம் எப்படி முடிந்ததோ! இந்த பெண்ணை விடுவதற்கு எனக்குச் சம்மதமே இல்லை. சகலவிதத்திலும் நமக்குச் சரிக்குச்சரியான சம்மந்தம். ஆகையால் தடை சொல்லாதே தம்பீ!" என்று கெஞ்சிய தாயின் மனப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டான்.

தர்மாம்பாளின் சந்தோஷம் கரைபுரண்டது. தனது நாட்டுப் பெண்ணுக்கென்று செய்துவைத்திருந்த நகைகளையெல்லாம் எடுத்துப் புதியதாக மெருகு கொடுத்துவைப்பதில் முனைந்தாள். தினுசில் ஒரு சேலையும் அதற்குத் தகுந்த ரவிக்கையும் பொருக்குவதில் தர்மு பெருமிதமான உத்ஸாகத்தையடைந்தாள்.

தன் மகனும் மருமகளும் எப்படி சந்தோஷிப்பார்கள் என்பதை கற்பனையினாலேயே எண்ணி இன்புற்றாள். மகனுடைய முயற்சி எவ்வளவு தூரம் பரவி வெற்றிச் சிகரத்தை எட்டியிருக்கிறது என்பதைக் காண தர்மாம்பாளின் உள்ளம் ஆனந்தமயமாகவே மாறியது.

தினம் ஒரு வேளை க்ருபாமந்திரத்திற்குச் சென்று மேல் பார்வை பார்க்கும் தன் கணவனுடன் சில தினம் தர்மாம்பாளும் செல்லுவாள். அங்கு திக்கற்றுள்ள மனிதர்கள் உத்ஸாக மேலீட்டால் இவர்களைப்பற்றிப் பேசிப் புகழும் புகழ்மாலையைக்கண்டு பின்னும் பூரிப்பாள்.

குறித்த ஒரு சுப தினத்தில் தாம் பார்த்துள்ள பெண்ணை நிச்சயதார்த்தம் செய்ய ஏற்பாடாகியிருந்தது. தன் நாட்டுப் பெண்ணிடம் தனக்குள்ள அளவுகடந்த ஆசையை இப்போதே காட்டும் முறையில் விவாகத்திற்காக வைத்திருந்த உயர்ந்த நகைகளில் சிலவற்றை இன்றே பூட்டிக் கண்ணுறக்கண்டு இன்புறத்தீர்மானித்தாள்.

அதேமாதிரி தனது ஆசையை நிறைவேற்றி வெகு தடபுடலாக நிச்சயதார்த்தம் செய்து முடித்தார்கள். இதுவரையில் காணாத ஒரு தனித்த உத்ஸாகத்தையும் நிறைந்த ஆனந்தத்தையும் தர்மாம்பாள் முகத்தில் கண்டபோது முத்துஸ்வாமியின் உள்ளமும் பூரித்தது.

34

எருதின் நோய் காக்கைக்குத் தெரியுமா?

ப. ஜகன்மோகன சுகுமாரா...க்ருஷ்ணு!
ஜகதீசனே! கண்பாராய்...பரிவுடன் விரைவினில் ஜெய. (ஜ)

அ. அகமலர்த் தூவியுன் னடிதொழு தேத்திடும்
வகையறியேன் முக்தி வழியறியேன் புகலிடமில்லை. (ஜ)

ச. மதலை துயர்கண்டு மருகிடும் தாயைப்போல்
பதியின் துயர்கண்டு பதறிடும் பத்தினிபோல்
கதறு முன்னடியர்க்கு கர்த்தன் நீயல்லவோ!
பதீத பாவனு கோதா ப்ராணபதே அடியவர்க்கருள். (ஜ)

என்கிற பாட்டை கிழவர் பூர்த்தி செய்ததை சஞ்சீவியின் பெண்ணிடம் மானவதி சொல்லிக்கொண்டபிறகு சதா தன் தாதாவின் நினைவு வரும்போதெல்லாம் இதே பாட்டைப் பாடிக் கண்ணீர்விடுவாள்! இந்தப்பாட்டுதான்தன் தாதாவின் கடைசீ பாட்டாகையால் அவருடைய சங்கீதத்தின் ஸாரம் பூராவும் ஜீவகளை ததும்ப தனக்கென்று கொடுத்த அருள் ப்ரசாதமாக எண்ணி அதையே சதா பாடி இன்புறுவாள்.

அன்று அந்த அதிர்ச்சியினுல் சிறிது புத்தி பிசகியிருக்கும் நிலைமையிலும் தனது ஒப்புயர்வற்ற மதுரகண்டத்தினின்றும் அம்ருத மாரி பொழிவதுபோல் இந்தப் பாட்டை வெகு சாதுவாக உட்கார்ந்துப் பாடுவாள். அடுத்த க்ஷணமே பெரிய கூக்குரலு

டன்.. "ஐயோ! நான் வேசிமகளா!...தாசிமகளா!.. நீ போலிச்சாமியாரா...ஐயையோ! எங்க தாதா...எங்கம்மா...எங்கப்பா...எல்லோரும்...நல்லவர்களில்லை?"...என்று கூச்சலிட்டுக் கத்தித் தலையைப் பிச்சிக்கொண்டு துணியைக் கிழித்துக் குதிப்பாள்.

மனதிலுண்டாகிய வெறி சிறிது தணிந்ததும் தானே பெட்டிப் பாம்புபோல் படுத்துவிடுவாள். சுப்ரமண்யனுக்கு ஒன்றுமே தெரியாது அவனுக்கே முழுபயித்தியம் பிடித்துவிட்டதோ! என்று சந்தேகிக்கும்படி ஆய்விட்டது. சாப்பாடு செய்து ஊட்ட வகையுமில்லை. தானுகச் சாப்பிட்டுப் பசியாற மானவதிக்கு சக்தியுமில்லை.



மூளைக் கோளாறும் பலவீனமும் ஒன்றுகூடியதால் அவள் மேனி துரும்புபோலாகிவிட்டது. இன்னிலைமையில் உபகாரம் செய்ய யாரும் முன்வரவில்லையெனினும் உபத்திரவம் செய்யாமலிருக்கக்கூடாதா! மானவதி இரவுபகல் கூச்சலிட்டுக் கதறுவதை, அவள் பிதா சமாதானம் செய்வதை அடுத்தவீட்டு மாடிப்பிலிருப்பவர்கள் எட்டி வேடிக்கைப் பார்த்துச் சிலர் சிரிப்பதும், சிலர் ஐயோ பாவமென்பதும், சிலர் இதென்ன இரவுபகல் தூக்கமில்லாது உபத்திரவம் செய்வது என்று சிள்ளென்று விழுவதுமாக ஆனார்கள்.

நேரிலேயே சுப்ரமண்யனைத் திட்டியும் பார்த்தார்கள். இதன் பலனுக வெகு விரைவிலேயே போலீஸ்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டு சுப்ரமண்யனின் வயிறும் மனமும் கொதிக்க கிங்கரர்களைப் போன்று வந்து மானவதியை ஒரு லாரியில் தூக்கிக்கொண்டு அடுத்த பட்டணத்திலுள்ள பையித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு நிர்தாக்ஷிண்யமாகச் சென்றார்கள்.

அந்தோ!...ஆதியில் தன்னருமை மனைவியை எமனிடம் ஒப்படைத்ததும் தற்போது இந்த எமன்களிடம் தன் மானவதியைக் கொடுத்துவிட்டதும் ஒன்றேபோலவேதோன்றி மனது துடிக்கின்றது. ஐயோ! என் குழந்தைக்குப் பயித்தியமில்லை...அவளுக்கு உடம்பு சரியில்லாததால் இம்மாதிரி இருக்கிறாள். என் கண்மணியை விட்டுவிடுங்கள்...என் செல்வத்தை கொடுத்துவிடுங்கள். நான் எங்கேனும் கண்மறைய என்குருநாதரிடம் கொண்டுபோய்விடுகிறேன். அவர் பாததூளி பட்டால் என் செல்விக்கு ஒன்றுமிருக்காது. ஐயா!...ஐயா!...என் கண்மணியைக் கொடுத்துவிடுங்கள்." என்று ஒவ்வொருவரையும் காலையும் பிடித்துக்கொண்டே கெஞ்சினார்.

கதறினர். கண்ணீர் விட்டார். பெண்ணை கட்டிக்கொண்டு புலம்பினார். நெருப்பில்பட்ட புழுகைப்போல் துள்ளியும், துடித்தும், வருந்துவதை லக்ஷயம் செய்பவர்கள் யாரிருக்கிறார்கள்?

பணக்காரர்களின் செருக்குபிடித்தக் குற்றச்சாட்டை நிறைவேற்றுவதர்க்காக இந்த ப்ரமுகர்கள் வந்திருக்கிறார்களேயன்றி பெற்ற மனத்தின் தவிப்பை...சங்கடத்தை...இவர்கள் அறிய முடியுமா?....போலீஸ்காரர்களிலேயே சிலர் "ஐயோ பாவம்" என்று பச்சாத்தாபத்துடன்..."ஐயா !....உங்கள் நன்மைக்குத்தான் நாங்கள் அழைத்துப்போகிறோம். உங்களுடைய மகளுக்கு சீக்கிரம் குணமாகிவிட்டால் உங்களுக்குச் சந்தோஷந்தானே ! புலம்பாதீர்கள்" என்று தேற்றினார்கள்.

இன்னொரு புண்ணியவான் சிள்ளென்று சீறிவிழுந்து..."தே... ஏன் இப்படி ஊரைக்கூட்டி அமர்க்களம் செய்கிறாய்...உன் மகளை நாங்கள் என்ன கடித்தா தின்றுவிடுவோம்? பேசாமல் கிட சாமி!"... என்று சுறுக்கென்று கூறினான்.

மானவதியோ, தனது மூன்றுவார்த்தைகளையும் ஜகன்மோகினி ராகப் பாட்டையும் விடவில்லை. கட்டித் தூக்கிக் காரில் ஏற்றும் போதுமட்டும், 'அப்பா...அப்பா'...என்று வெகு தெளிவாகக் கூக்குரலிட்டு அழுதாள். விடுகிறவர்கள்யார்? தத்ரூபம் எமன் உயிரைக் கொண்டுபோவதுபோலே போனார்கள். ஆனால் இங்கு சவமில்லை அதுதான்பாக்கி. கார் வெகு வேகமாக மறைந்தது. சுப்ரமண்யனின் உள்ளமும் ஆயிரம் சுக்கல்களாக உடைந்தது.

35

பெத்த மனத்தின் பரிதவிப்பு

ஆதியில் தன் கண்மணியைப் பறிகொடுத்த காலத்திலிருந்த துக்கத்தைவிட இதுவே இப்போது அபாரமாய்த் தாங்க முடியாது பொங்கியது. லாரியின் பின்னாலேயே ஓடினார். அதைப் பிடிக்க மனிதனால் முடியுமா ! எத்தனை வேகமாக ஓடுகிறாரோ அத்தனை களைப்புதானே மேலிடும்.

வீதியில் கும்பல் கூடிவிட்டது. தம் தம் அபிப்ராயப்படி பேசிக் கொண்டு "ஐயோ பாவம் ! கிளிபோல் பெண்ணு"...என்கிற பல்லவியைப் பாடினார்கள்.

மனத்தில் தூய்மையும், சாந்தியும், அஹிம்ஸையின் தத்துவமும் எத்தனை ஊறியிருக்கவேண்டுமென்று சுப்ரமண்யன் பாடுபட்டானோ அத்தனைக்கத்தனை திடீரென்று தன்னுயிரைப் பிரிப்பதுபோல் மானவதியை அக்ரமமாய், அநியாயமாய் பிரித்த ஆத்திரத்தில்மேற் குறித்தவைகள் மறைந்தே போய்விட்டன. அவ்வாறு செய்தவர்களை

நெருப்பு வைத்து வீட்டோடு பொசுக்கிவிடலாமா! என்றுகூட ஒரு க்ஷணநேரத்திற்குள் தோன்றியது...

அடுத்தக்ஷணமே தனது குருநாதரின் வெகு சாந்தமான திருமுகம் இவன் முன்பு தோன்றி..."பதறுதே...சோதனை செய்வதெல்லாம் நித்யமான வேதனையைப் போக்குவதற்கேயன்றி வாதனையை உண்டாக்குவதற்கல்ல....தீய எண்ணத்திற்கு இடங் கொடுத்துவிடாதே...அந்தத் தீயே நீ இதுகாறும் செப்பனிட்டுப் பதமாகச் செய்துள்ள தூய்மை என்கிற கோட்டையை எரித்துவிடும்"... என்று கூறுவதுபோல் தோன்றியது.

வெகு பிரயாசைப்பட்டு மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டான். எனினும், துக்கத்தைப் பொறுப்பது சாதாரணமானதா! சங்கடம் சித்திரவதை செய்வதால் ஸ்வாமிகளிடமாவது போய் சாந்தியடையலாமா என்று எண்ணி அங்கு ஓடினான்.

பாதி தூரம் போவதற்குள்ளே...."உம்...அந்த பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கே நானும் போய்க் கதறிப்பதறி எப்படியாவது என் கண்மணியை அழைத்து வந்துவிடுகிறேன்" என்ற ஒரு எண்ணம் உண்டாகியதால் திரும்பி ஓடிவந்தான். புத்திரவாத்ஸல்யத்தை ஜெயிக்க அவனால் முடியாதுபோயிற்று.

சோறுதண்ணீரில்லாமல் ஓட்டமும் நடையுமாக அலைந்த அலுப்பில் வழி நெடுக 'பயித்தியக்கார ஆஸ்பத்திரி எந்த ஊரிலிருக்கிறது? அதற்கு மார்க்கம் எப்படி?' என்று கேட்டுக்கொண்டே சென்றான்.

நிம்மதியாக வழி தெரியாது என்று கூறிவிட்டால் ஒரு தொந்திரவும் இல்லை. கோணல்வழியைக் கூறி கூடக் கொஞ்சம் ச்ரமத்தைக் கொடுக்கும் புண்ணியாத்துமாக்களின் வார்த்தையால்பின்னும் தள்ளாமையும் கஷ்டமும் அடைந்து வருந்தி பிறகு ஒரு உத்தமரால் வழியை அறிந்து ரயிலேறி ஆஸ்பத்திரியினருகில் வந்து சேர்ந்தான்.

இவருடைய கோலமும் இவருடைய நிலைமையையும் பார்த்தவர் இவரையும் பயித்தியம் என்று நினைப்பார்களேயன்றி சாதாரண மனிதன் என்று யார் சொல்வார்கள். பயித்தியம்போலவே அந்தப் பக்கம் வருகிறவர்கள், போகிறவர்களையெல்லாம் நோக்கி, "ஐயா! என் மானவதி இந்த ஆஸ்பத்திரியின் உள்ளேதானே இருக்கிறாள்? என் கண்மணியை நான் பார்க்கலாமா! சற்று உள்ளே அழைத்துக் கொண்டு போகிறீர்களா! அனியாயமாய் என் இன்பக் கிளி மானவதியை போலீஸ்காரர்கள் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார்கள். என் வயிறு எரிகிறதய்யா...உங்களுக்குப் புண்ணியமுண்டு; நான் ஏழையாயினும்உங்களுக்கு ஏதாவது கொடுத்து விடுகிறேன்...கொஞ்சம் சிபார்சு செய்யுங்களேன்" என்று தலாதலா கெஞ்சுவதைப் பார்த்து சிலர் பரிகஸித்துச் சிரித்தார்கள். சிலர் பயித்தியமென்றே தீர்மானித்து உள்ளே அடைக்கத் தீர்மானித்தார்கள். படாடோபத்திற்கும் பகட்டிற்கும் தற்காலத்தில் மதிப்பேயன்றி உண்மைக்கும் ஏழ்மை நிலைக்கும் மதிப்பு உண்டாகுமா! சுற்றிச் சுற்றி வந்து தவித்

தும் தனக்கொருதகவலும் தெரியாததால் உள்ளம் உருகித்துடித்தது. தன்னையும் பிடித்துக்கொண்டு போய்விடப்போகிறார்களே என்று மிக்க பயமும் கலவரமும் கூடத் தோன்றியதால் என்ன செய்வதென்று தெரியாது துடித்தான். மானவதியின் உருவமே அவன் கண்முன்பு வந்து நின்றது.

36

அம்ருத கானமா? அபலையின் ஊனமா?

தன்னைக் கட்டிப்பிடித்துச் செல்கிறார்கள் என்பதை அறிந்ததுமே மானவதியின் துக்கம் பொங்கியது. எனினும் தடமாட்டம் ஏற்பட்டதுமட்டும் நீங்கவில்லை. "ஜகன்மோகன சுகுமாரா" என்ற பல்லவியின் முதலடியை வைத்துக்கொண்டு ஆலாபனம் செய்து ப்ரம்மானந்தமாகப்பாடுவதும் உடனே கூச்சலிட்டுக் கத்துவதுமாக இருப்பதைக்கண்டு எல்லோரும் பரிதாபப்பட்டார்கள்.

'யார் இத்தனை அழகாகப் பாடுகிறது?' என்று பிரமிப்பார்கள். விகார சப்தமும் பேரிடிமுழக்கம் போன்ற சிரிப்பும், சகிக்கமுடியாத ஒப்பாரியும், தன்போக்கான பேச்சும், இடையே அபஸ்வரம், சுச்வரம் கலந்த சங்கீதமும், மனோகரமான தீங்குரலின் திவ்ய கீதமும், ஒன்று கூடி கேட்டுக் கேட்டு ஆஸ்பத்திரி வார்டன்களுக்கும் டாக்டர்களுக்கும் காது செவிடாகிவிடுமோ!" என்றும் ஆகிவிட்டது.

இன்று முகுந்தனுக்கு இரவு வேலையாகையால் இரவு ஒரு சுற்று சுற்றிக்கொண்டு வார்டனுடன்கூட வந்தான். கொஞ்ச தூரத்தில் வரும்போதே ஜகன்மோகினி ராகத்தின் ஆலாபனமும் இடையிடையே...கதறுமுன்னடியர்க்கு...என்கிற இடத்தில் மனோதர்ம ச்வரங்கள் அடுக்கடுக்காயும் அழகாயும், ராக பாவம் ததும்பும்படியும் பாடுவது கேட்டு தடை கட்டிய நாகம்போல் நின்ற முகுந்தன்... "இதென்னடா! புதிய சரக்கா...சங்கீதம் பிரமாதப்படுகிறதே... என்று முடிப்பதற்குள், ஐயையோ...என்கிற பல்லவி வந்துவிட்டது.

வார்:—ஆமாம் சார்!...இன்றுதான் கொண்டுவந்திருக்கிறார்கள். சிறிய பெண், வெகு அழகாயிருக்கிறாள். மும்முரமான பயித்தியமில்லை. அடிப்பதோ...முறைப்பதோ ஒன்றுமே இல்லை. சதா பாடுவதும், நான் வேசி மகளா....தாசி மகளா!...என்று அலறுவதுந்தான் இருக்கிறது. சங்கீதம் வெகு திறமையாகப் பாடுவதைக்கேட்டுகூடவிருக்கும்ஆத்மாக்கள் ஆடக்கிளம்பிவிடுகின்றன.

முகு:—ஒகோ!...சங்கீத வித்வானின் பெண்ணோ என்னவோ!

வார்:—சங்கீத வித்வானின் பேத்தியாம்...

ஐயோ பாவம்! அந்தப் பெண்ணுடைய சரித்திரமே புதுமையாயிருக்கிறது. (சுருக்கமாக சரித்திரத்தைக் கூறி) அதனால் புத்தி சிறிது பிசகிவிட்டதாம். அந்த வார்த்தையையேபிதற்றுகிறாள் என்று கூறிக்கொண்டே அந்த இடத்திற்குச் சரியாகவந்து விளக்கை அந்த அறைக்கு நேராகத் தூக்கினான்.

ரதி தேவியைப் பழிக்கும் எழிலுடைய மானவதி பாடிக் கொண்டே படுத்திருந்தவள் விளக்கையும் ஆள்களையும் பார்த்ததும் ஓடிவந்து...'ஜகன்மோகன சுகுமாரா'...என்று இழுத்தாள்...அடுத்த வினாடியே...யாரு...நீங்கள் எல்லாம் யாரு...நான் வேசிமகளா... தாசிமகளா! இல்லையே...நான் மானவதியல்லவா...சங்கீத வித்வான் ஸ்ரீ கஜபதியின் பேத்தியல்லவா...எங்கப்பா போலிச் சாமியார் இல்லை...போலிச் சாமியாரா...சொல்லுங்கள்" என்று கேட்டபடியே கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்றாள்...

இந்த ஸௌந்தர்யப் பதுமைபோன்ற பெண்ணின் இந்த வார்த்தையைக் கேட்ட எவருடைய மனதுதான் இளகாது...உம்...ஐயோ பாவம்...உன்பேர் என்னம்மா!...என்றான் வார்டன்.

மான:—என்பேரா....மானவதி....நான் தாசிப்பெண்ணா.... என்று புலம்பியவாறு கேட்டாள்.

வார்:—நீ தாசிப் பெண்ணில்லை...நல்ல குலத்துப் பெண்தான். உனக்குக் கல்யாணமாயிற்றா...என்றான். கல்யாணம் என்று எடுத்த உடனே தீயை மிதித்தவள்போல் துள்ளி 'ஐயையோ...சொல்லாதே...அந்த பிசாசுதான் என்னை தாசி என்று கூறினாள்...நான் தாசியா...தாசியா...சொல்லுங்கள்...நீங்கள் சொல்லுங்கள்' என்று முகுந்தனின் கையைக் கம்பியின் வெளிப்புறம் பிடித்து உலுக்கிக் கேட்டாள்.

முகுந்தனுக்கு மிகவும் இளகிய மனதாகையால் கண்ணீர் முட்டியது...நீ வேசியுமில்லை, தாசியுமில்லை...எங்கே பாட்டுப் பாடுபார்க்கலாம்...என்றான். அவ்வளவுதான்; மளமள வென்று நாலைந்து பாட்டுக்களைப்பாடி மீண்டும் தன் பல்லவியைஆரம்பித்தாள்.

அந்த பல்லவியில் வரும் மூன்று வார்த்தைகளைத் தவிர வேறு வராததால் மன அதிர்ச்சியினால் உண்டாகியிருக்கும் தடுமாற்றமேயன்றி மூளைக் கோளாறோ, கலங்கிவிட்டதென்றோ சொல்வதற்கில்லை என்றுதான் தோன்றுகிறது. பெரிய டாக்டர் என்ன சொன்னார்? என்று வார்டனைக் கேட்டான்.

வார்:—பெரிய டாக்டருடன் நான் வரவில்லை...அப்பாசாமிதான் வந்தான். நான் இன்னொரு டாக்டர் பார்க்கையில் வந்தேன். அவரும் இப்படித்தான் சொல்லியதோடு ஐயோ பாவம்! என்று வருத்தப்பட்டார்.

இந்த வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்த மானவதி முகுந்தனையும் வார்டனையும் மாறி மாறிப் பார்த்தாள். என்ன பேசுகிறீர்கள்...நான் தாசிமகள் என்று நீங்கள் கூடவா சொல்

கிறீர்கள். ஐயோ! நான் தாசி மகளில்லே, எங்கம்மா செத்துப் போய்விட்டாள். எங்கப்பா வீட்டிலிருக்கிறார்...நான் தாசியல்லவே!...எங்கப்பா போலிச்சாமியாரல்லவே!...என்றாள்.

இத்தகைய சொர்ண பிம்பம்போன்ற யுவதியின் பரிதாப நிலைமையைக்காண பச்சாத்தாபமும் கருணையுந்தான் மனத்தில் சுரந்தது. 'உனக்குத் தூக்கம் வருகிறதாம்மா!'..என்றான் முகுந்தன்.

மான:—எனக்கா!..தூக்கமா!...நான் தாசிப்பெண்ணில்லேயே.. எங்க தாதா நல்ல உயர்த்த சங்கீத வித்வான் தெரியுமா...எங்கப்பா ரொம்பவும் யோக்யமான உண்மைச்சாமியார்....சன்யாசி...

முகு:—பெண்ணே...நீ தூங்க ஆசைப்படுகிறாயா...நான் மருந்து கொடுக்கிறேன்...உன் பேரென்ன மறந்துவிட்டதே...

மான:—ஐயயோ!...இதுக்குள்ளாகவா மறந்துவிட்டது...என் பெயரும் மானவதி; எங்கம்மாபெயரும் மானவதி...இப்போ தெரிஞ்சுதா..ஐயோ..நான்வேசிமகளா!..என்று பெரிதாகஅலறினாள்.

மானவதி....என்ன அருமையான பெயர்!...ஐயோபாவம்... குப்புஸாமி...மருந்து பெட்டியைத் திற...என்றான்...உடனே தானும் கூடப்போய் ஊசியில் மருந்தை நிரப்பிக்கொண்டு கையில் அவுன்ஸ்க்ளாஸ் மருந்துடன் வந்தான்..."குப்புஸாமி, கையைப் பிடித்துக்கொள்ளு" என்றான்...

உடனே குப்புஸாமி, மானவதியை நோக்கி..."அம்மா! கையைக்காட்டு...நீ தாசிப்பெண்ணு!...நல்லகுலத்துப்பெண்ணு பார்க்கிறேன்." என்றான். மானவதி...'நான் தாசிப்பெண்ணு!... வேசிப்பெண்ணு!...ஐயோ!'..என்று கத்தினாள். குப்புசாமி கையைப் பிடித்துக்கொண்டான். முகுந்தன் ஊசி மருந்தை ஏற்றித் துடைத்துக் கையை சற்றுநேரம் அமுக்கிப் பிடித்திருந்தான். பிறகு 'மானவதீ... எங்கே...வாயைத்திற...உன் வாயில் நீ தாசிப்பெண் என்று எழுதி யிருக்கிறதா பார்க்கிறேன்' என்றான்.

மானவதி உடனே வாயைத் திறந்தாள். 'சேச்சே...நீ தாசிப் பெண்ணில்லே. நல்ல பெண் என்றுதான் எழுதியிருக்கிறது. இதைக் குடித்துவிடு பார்க்கலாம்'என்று மருந்தைக் குடிக்கச்செய்தபின்னர் சரி...படுத்துத் தூங்கு, கத்தாதே...என்று எச்சரித்துவிட்டுச் சென்றான். 'ஐயோ நான் தாசிமகளா!...வேசிமகளா!'...என்றலறும் குரல் வெளியே கேட்டுவரையில் முகுந்தனின் காதில் கேட்டது.

37

பொறுமைக்கும் உண்டு வரம்பின் எல்லே

ஒருநாள், இரண்டுநாள்...என்று நாலைந்து நாட்களாகிவிட்டன. மானவதியைப் பிரிந்த அன்றுமுதல் இதுவரையில் தண்ணீர்கூட குடிக்காது உயிர்துடிக்கும் சுப்ரமண்யனுக்குத் தகவலா, தாக்கலா ஒன்றுமே கிடைக்காததால் மனது சுக்கல் பதினாயிரமாக உடைந்து

போயிற்று. நடமாடும் சக்தியும் குறைந்தது எனினும் "மானவதீ! மானவதீ!...நீயும் இருக்கிருயா! உன் தாயாரிடம் போய் சேர்ந்து விட்டாயா...கண்மணீ! இந்தப் பாழும் உலகிலுள்ள மனிதர்களின் உள்ளம் வெறும் கருங்கல்லா!...மாயைக்கே அடிமையானதா' பெற்ற வயிறு எரிந்து கதறும் பரிதாபம்கூட கண்ணுக்குத் தெரியாது என்னையும் பயித்தியம் என்று நிரூபிக்கப் பார்க்கும் மனிதர்களா உண்மையானவர்கள்...என்று தீனக்குரலில் கூவிக் கதறிக்கொண்டிருக்கையில் கேட்டு ப்யூன் குடுகுடுசிடுசிடு என்று சீறி விழுந்தவாறு, "ஏ சாமியாரே! ஒனக்குசொன்னுபுத்தியில்லே... நீ மரியாதையா எந்துபோகப்போரியா! ஒண்ணையும் டாக்டரிடம் சொல்லி உள்ளே தள்ளிப்புடுவேன். அசல் பயித்தியம் நீ என்று எல்லோருக்கும் தெரியும்" என்று மிரட்டினுன்.

சாமியார் அலையக்குலைய எழுந்து "அப்பா! நீ யாரோ! எவனே! எப்படியிருந்தாலும் ஒவ்வொருவருடைய இதயத்திலும் அந்த கிருபாநிதி இதயத்தை க்ருபாமந்திரமாக்கிக்கொண்டு சதாவீற்றிருக்கிருர் என்கிற தத்துவத்தை நான் நம்புகிறவன். நீ தயவு செய்து என்னையும் உள்ளே அடைத்துவிடும் பெரிய உபகாரத்தைச் செய்துவிட்டால் உன்னுள்ளிருக்கும் பகவானைக் கைகுவித்து வணங்குகிறேன். என் கண்மணியை நான் சதா பார்த்து இன்பமடையும் வழியைச் செய்துவிடப்பா...நீ நல்லவனுயிற்றே...என்று கல்லும் கரைந்துருகும் வண்ணம் கூறினுன்.

"அட மடசாமியாரே...உள்ளே போனு ஏதோ சொர்க்கம் இருக்குதுண்ணு பாத்தியா...சரிதான்போ...நரகம் வேறேவாணும் சாமிவாணும்...ஓம் பொண்ணுக்கு நன்னு குணமாயிட்டாக்கா நீ வந்து இட்டுகினுபோகலாம். இப்போ மரியாதையா பூடு"... என்று அதட்டினுன்.

அங்கு கூடவிருக்கும் வேலைக்காரர்க சிலரும் வேடிக்கையாகவந்து சூழ்ந்துகொண்டார்கள். கேட்டுக் காவலன் மிகவும் உதாசீனமாகப் பேசப் பேச சாமியாரின் கோவம் அதிகரித்தது. பிடிசாபம் என்று கொடுக்கும் சக்தியிருக்குமாயின் அப்படியே பஸ்மீகரம் செய்திருப்பார். ஆனுல் அத்தகைய தபோபலம் இல்லையெனினும், உத்தம ஞானமும் சத்திய சிந்தையும் இருப்பதை இந்த மூடர்கள் எங்கு அறிய முடியும்?

இந்த அறிவிலிகள் செய்யும் பரிகாஸமும் கலாட்டாவும் சாமியாரால் சகிக்கமுடியாது ஆத்திரம் மூண்டது. "சேச்சே!...அல்பப் பதர்களா! எளியாரை வலியாரடித்தால் அவ்வலியாரை தெய்வ மடிக்கும் என்பதை மறக்கவேண்டாம். என் வயிற்றெரிச்சல் வீண் போகாது. உங்களை எரித்துவிடும்" என்று கூறி வாய்மூடுவதற்கு முன்பு, அந்த போக்கிரிகள் "ஐயையோ! சாமியாரின் சாபம் எங்களை எரித்துவிட்டதே; எரிகிறதே...கொஞ்சம் ஐஸ் கொண்டு வாருங்களேன். கொஞ்சம் ஜலம் கொண்டு வாருங்களேன்...

எங்களை குளத்திலாவது ஊறவையுங்களேன்....என்று பெரிதாகக் கூறிப் பின் கடகடவென்று நகைத்தார்கள்.

பொறுமையைச் சோதிப்பதற்கும் ஒரு எல்லைவேண்டாமா! எத்தனை உபதேசம் பெற்ற சாதுவாயினும் மனவேகத்தின் கொடுமை பொறுமைத்தளையை அறுத்தெறிந்தது. நான்கு நாளாகப் பட்டினி கிடக்கும் ஆத்மாவுக்கு ஒரு ஆனையின் பலம் எப்படியோ உண்டாகியது. அந்த அல்பர்களும் முரடர்களும் சற்றும் எதிர்பாராத வாறு அவர்களை பட்டார் பட்டார் என்று அறைந்துவிட்டு, "அல்ப நாய்களே! பகவான் உங்களுக்குச் சரியானபடி கூலி கொடுப்பான்" என்று கூறியபடியே ஒரே ஓட்டமாக ஓடி மாயமாய் மறைந்தார். புத்திரவாத்ஸல்யமும் வைராக்யமும் கோபமும் ஒன்றுகூடி அந்த மனிதனின் இதயத்தைப் பிளந்தன. "அந்த மானவதியை எமனிடம் பறிகொடுத்தேன். இந்த மானவதியை இந்த எமன்களிடம் பறிகொடுத்தேன். இனி எனக்கு என்ன இருக்கிறது" என்று கண்ணீர்விட்டவாறு கால்கள் சென்றபடி ஓடினார்.

அறைபட்ட ஆத்மாக்கள், ஓட்டம் பிடிப்பவனைப் பிடிக்க எண்ணுவதற்குள் எப்படியோ மாயமாய் மறைந்துவிட்டதால், அளப்பரிய ஆவேசத்துடன் "டேய்...சாமியாரே!...உன் மகளை அழைத்துப்போக இந்தப் பக்கந்தான் வருவாய். உன் மண்டையை உன்னிடமிருந்து உருட்டிவிடுகிறோம் பாரு" என்று ஒரு கத்து கத்தினார்கள். ஆனால் அந்த கர்ஜனை சாமியாரின் காதில் விழுந்ததா இல்லையா என்பதை யார் கண்டது?

38

ஊன்றிய விதையும் உள்ளக் கிளர்ச்சியும்

"ஏனிப்படி ஒரு ப்ரமை?...எதற்காக இந்த எண்ணம்?...ஆயிரக் கணக்கான பயித்தியங்களைப் பார்த்து மனது கசந்துள்ள எனக்கு...அவக்குரலைக் கேட்டு மனது வெறுத்துள்ள எனக்கு... அந்தப் பெண் ஏன் இப்படி நினைவில் வந்து என்னை ஆகர்ஷித்து நிற்கவேண்டும்...கண்ணைத் திறந்தாலும், மூடினாலும்......அந்த ஸௌந்தரிய ஜகன்மோகினியின் உருவமும்...இணையிலாத அமிருத தாரையைப் பொழிவதுபோல் சதா காதில் ஜகன்மோகினி ராகத்தின் ஒப்புயர்வற்ற நாதமும் ஏன் என்னைச் சூழ்ந்து மாறி மாறி ஒளியும் ஒலியுமாகக் காக்ஷி தரவேண்டும்? மூன்று மாதங்களுக்குள்ளாகவா இத்தனை மாறுதல்? இந்த புதிய உத்வேகத்தின் முடிவு நன்மைக்கா? தீமைக்கா? தெரியவில்லையே!...

இதை நினைக்க எனக்கே வெட்கமாயிருக்கிறதே...பயித்தியக் காரி...அனுமதேயம்...என்ன ஆச்சரியம்...உலகமாயை என்பது

இதுதானு...ஆஹா!...என்ன மதுரகானம்...என்ன அபூர்வ ஜீவகளை சொட்டும் இன்ப நாதம்..."ஜகன்மோகன சுகுமாரா! கிருஷ்ணு! ஜகதீசனே கண்பாராய்...பரிவுடன் விரைவினில் ஜெய" என்ற பாட்டை தன்னையறியாது தானே பாடினுன்.

அவ்வாறு பாடினதும் விவரிக்கமுடியாத ஒரு இன்பம் இத யத்தில் சுரந்தது..."நான் தாசிப் பெண்ணல்லவே...வேசிப் பெண் ணல்லவே"...என்ற பரிதாபக்குரல் அவ்வறை முற்றும் ஒருதரம் கேட்டதும் பாடுவதை நிறுத்திவிட்டு மறுபடியும் அறை பூராவும் ப்ரமிப்பால் பார்த்தான்.

தனது நிலையைத்தானே கண்டு ஒருவாறு சிரித்துக்கொண்டு மறுபடியும், "ஜகன்மோகன சுகுமாரா"...என்று இழுத்தான். அதே சமயம் அவன் தாயார் ஒரு அடுக்கு சேலைகளுடன் அவன் முன்பு தோன்றி "பேஷ்! அவள் பாடவேண்டிய பாட்டை நீ பாடுகிருயா! "ஜகன்மோகன சுகுமாரி" என்று பாடு அம்பீ!...என்று கூறியவாறு மூட்டையை டேபில்மேல் வைத்தாள்.

முகுந்தனுக்கு வெட்கம் ஒருபுறம் கோபம் ஒருபுறம் வந்தது. இரண்டையும் சமாளித்துக்கொண்டு, அசட்டுச் சிரிப்பு சிரித்த படியே "அடேயப்பா!....ஜவுளிக்கடையே புரண்டுவந்து விட்டதே. எத்தனை சேலைகள் இருக்கும்? விலை எத்தனை சைபரில் நிற்கும்?" என்று குறும்பாகக் கேட்டான்.

தர்மாம்பாள் கண்கள் பறித்துப் போகும்படியான உயர்ந்த சேலைகளைப் பிரித்து ஒவ்வொன்ருகக் காட்டினுள். "ஏண்டாப்பா! பெண்ணுடைய கலருக்கும் இந்த கலர்களுக்கும் மிகவும் பொருத்த மாக இருக்கும் என்று பொருக்கிக்கொண்டு வந்தேன். உன் னுடைய இன்ப ராணிக்கு உகந்ததுதானு பாரப்பா! வைர நெக்லேஸ் கூட இன்றுதான் கட்டிமுடிந்தது. இதோ பாரு" என்று அதையும் கொடுத்தாள்.

முகுந்தனின் நிலைமை இரண்டாட்டில் ஊட்டிய குட்டிபோல் ஆகியது. சேலைகளின் அழகும் நெக்லேஸின் பளபளப்பும் கண் களைக் கவரக் கவர அவன் கண்முன்பு மானவதியின் உருவமே ப்ரத்யக்ஷ தேவதைபோல் காக்ஷிகொடுத்து திக்குமுக்காடச் செய்த தால் முகத்தில் அசடு தட்டியது...

பதில் பேசாதிருப்பதைக் கண்ட தர்மாம்பாள் "என்ன யோசனைசெய்கிருய்?...இவைகளுக்குப் பணத்தைக் கொடுத்து விட லாமோன்னே!...உனக்குப் பிடித்திருக்கிறதா! சொல்லு" என்ருள்.

இப்புதிய தடுமாற்றத்திற்குக் காரணமறியாது தவிக்கும் அவன் என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல்..."சரிம்மா... உன்னிஷ்டத்திற்கு மீறி என்னைக் கேட்க வந்துவிட்டாய்...நான் தான் இன்று காலையில்கூடச் சொன்னேனே! கல்யாணத்தை சில மாதங்களுக்குத் தள்ளிப் போடலாம் என்று...நீ அதை மறந்தே போய்விட்டாய்...நான் ஒரு முக்யமான மூளை சம்மந்தமான

விஷயத்தைப் படிக்கிறேன். அடுத்த மாதமே பரீக்ஷையிருக்கிறது. இப்போது என்ன அவசரம்மா?''...என்ருன்.

தா:—போடா பித்துக்குள்ளி! நிச்சயதார்த்தம் செய்து முகூர்த்தம் வைத்தபிறகு தள்ளிப்போடுவதாவது? அது அசட்டுத் தனமும் அவமானமும் ஆகும். அதோடு கௌரவமே கெட்டுவிடும். உனக்குக்கூட பரீக்ஷையைப்பற்றி கவலே வேறு வேண்டுமா! பேசாதிரு. அசடு! கடிதங்கள்கூட ப்ரிண்டு செய்ய அப்பா ஏற் பாடு செய்துவிட்டார்—என்று கூறியபடியே கொண்டுவந்த மூட் டையுடன் போய்விட்டாள்.

இரவு வெகு நேரம்வரையில் விழித்துக்கொண்டு படுத்திருந்த முகுந்தனின் மனத்திற்கு தெளிவு என்பதே உண்டாகவில்லை... தினம் காலையில் போய் பயித்தியங்களுடன் மாரடிக்கவேண்டுமே என்று தோன்றிய மனிதனுக்கு ''காலையில் எப்போது போவோம்... எப்போது மானவதியைப் பார்ப்போம்'' என்கிற தடுக்கமுடியாத வேட்கை உண்டாகி வாட்டுவதைக் காண அவனுக்கே வியப்பாக விருந்தது. 'சொல்ப அதிர்ச்சியினுல் உண்டாகிய கோளாருகையால் நன்ருகக் குணமடைந்துவிட்டாள் பாவம்...குணம் ஆகஆக அவள் இதயத்தில் வேதனையும் சகிக்க வொண்ணுத சங்கடமும் கவ்விக் கொண்டிருப்பதும் ஒரு அழகாகத்தானிருக்கிறது....''தினம் எங் கப்பா வரவில்லை?'' என்று பரிதாபம் தேங்கக் குயிலினும் இனிய குரலில் கேட்கும்பொழுது ஏதோ சங்கடமல்லவா செய்கிறது. இது என்ன மாயா விலாசம்...மந்திர சக்தி!...ஒன்றும் புரிய வில்லையே...மனத்தில் ஒரு உருவம்...தேடி வைத்திருக்கும் மனை யாள் ஒரு உருவமா! வேடிக்கையா? விதியா?...சோதனையா?''... என்று பலவாறு எண்ணிப் புரண்டான்.

விடியற்காலையில் வழக்கம்போல் ஆஸ்பத்திரிக்குப்போனுன். ஏகப்பட்ட வேலையிருந்ததால் அவைகளை முடித்துக்கொண்டு 12 மணி சுமாருக்குத்தான் மானவதியிருந்த இடத்திற்கு வரமுடிந்தது.

மானவதிக்கு முற்றிலும் குணமாகிவிட்டதால் அவளுக்கு தான் பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலிருக்கும் அவமானம் தாங்க முடியாது பொங்கிப்பொங்கி கரைகாணுதுக்கம் உண்டாகிப் புலம்பிக் கொண்டிருந்தாள். அவளுடைய பரிதாபத்தைக் கண்டு சகிக்க முடியாது முகுந்தன் சிறிது நேரம் பேசாமல் நின்ருன்.

'மானவதி!'...என்று அவனையும் அறியாமல் கூப்பிட்டான். தன் போக்காக அழுதுகொண்டிருந்த மானவதி திடுக்கிட்டு எழுந்தாள். முகுந்தன் நிற்பதைக்கண்டு....'டாக்டர்!'...என்று ஒரு பெருங்குரல் பாய்ச்சிக் கூவியவாறு ஓடிவந்து, ''எங்கப்பா வந்தாரா...டாக்டர்... இன்னுமா வரவில்லை...ஐயையோ!....நான் என்ன செய்வேன்... பெரிய டாக்டர் இன்று காலையில்கூட 'இன்னும் உனக்கு யாரும் வரவில்லையா...நீ வீட்டிற்குப் போகலாமே....பாவம் இங்கு ஏன் இன்னும் அவஸ்தைப்படவேண்டும்?' என்ருர்...என்னுடைய அவப்

பிழைப்பு யாருக்குத் தெரியும்? டாக்டர்! நான் எங்கே போவேன். என்னை ஏன் என்று கேட்பார் ஏது?"...என்று கதறினள்.

நன்ருகத் தெளிந்துவிட்டவர்களை வைக்கும் இடமே வேறு ஆகையால் மானவதியும் அதே இடத்தில் இருந்தாள். மானவதியின் கண்ணீரும் கதறலும் முகுந்தனுல்சகிக்கமுடியாதுபோயிற்று. 'மானவதி!....அழாதேம்மா...உங்கப்பாவின் விஷயமாக நான் எவ்வளவோ பாடுபட்டுத் தேடியும் ஒரு தகவலும் தெரியவில்லை. நீ சொல்லிய சாமியாரைப்பற்றி கூட விசாரித்தேன். அவர் தேச யாத்திரை கிளம்பி ஒரு வருஷகாலமாகிவிட்டதாம். எந்த ஊரில் இருக்கிருர் என்று தெரியவில்லை. உம். இன்னும் பரிதாபகரமான விஷயம் ஒன்று. உன்னிடம் சொல்வதற்குப் பயந்து இதுகாறும் பேசாதிருந்தேன். உன்னை ஆதரித்துவந்த சஞ்சீவியைப்பற்றி சொன்னுயே! அந்த மனிதரும் அவரது குடும்பமும் சென்ற வருஷம் உண்டாகிய கொடிய காலரா நோயினுல் சிதறிப்போய்விட்டதாம். நான் வேறு என்ன செய்வது....அன்று நான் உன்னிடம் தெரிவித்தபடி எங்களுடைய க்ருபாமந்திரத்திற்கு நீ வந்து சுகமாக இருக்கலாம். கவலைப்படாதே. உங்கப்பாவை எப்படியாவது கண்டுபிடித்துஉன்னை அவரிடம் அனுப்பிவிடுகிறேன்" என்ருன்.

சஞ்சிவியின் மறைவு மானவதியை துக்க சாகரத்திலாழ்த்தியதால் தேம்பித் தேம்பி அழுதாள். "அவருமா போய்விட்டார்?" என்று தவித்தாள்.

மானவதி! ஏனம்மா இப்படிக் கதறுகிருய்...உன்னைப்போலவே குணமாகிய நூற்றுக்கணக்கானதிக்கற்றவர்கள் அந்தஇடத்திலிருக்கிருர்கள். ஒரு அழகிய பெண் சில தினங்களுக்குமுன்பு இப்படித்தான் போக்கிடமில்லாததால் மென்னியை முறித்துக்கொண்டு ப்ராணனைவிட்டுவிடுவதாக என்னெதிரிலேயே கதறினள். அவள் இப்போது சந்தோஷமாக க்ருபாமந்திரத்திலிருக்கிருள். கூடிய சீக்கிரத்தில் அவளுக்கு விவாகமும் ஆகப்போகிறது...இன்றே அங்கு உன்னை அழைத்துப்போகிறேன் வருகிருயா...உனக்கொரு குறையும் இல்லை. பயமும் இல்லை, என்ன சொல்கிருய்...யோசித்து நாளைய தினம் சொல்கிருயா?...என்று கனிந்த அன்புடன் கேட்டான்.

அன்பின் ப்ரகாசம் கருணையின் காந்தி, ப்ரேமையின் ஜ்வாலை... முகுந்தனின் விழிகளில் ஜொலிப்பதைக் கண்ட மானவதி கூர்ந்து ஆழ்ந்து...ஒரு முறை அவனை நோக்கினள்...இமை அசைக்காமல் பார்த்தாள்..."டாக்டர்!"...என்று ஒரே ஒரு வார்த்தை...அடுத்தது ஒரு நீண்ட பெருமூச்சு...அதைத் துடர்ந்து கண்களில் பலபல வென்று கண்ணீர் ஓடியது. அதன்பின் தலை கவிழ்ந்தது. மவுனமும் நிசப்தமும் குடிகொண்டு சமாதி நிலையை அளித்தது...

சில விநாடிகளுக்குப் பிறகு...மறுபடியும் முகுந்தனை நிமிர்ந்து பார்த்தாள்...பேச நா எழவில்லை. பலவிதமான உணர்ச்சிகளின் வேகத்தால் மார்பு படபடத்து மூச்சுத் திணறுகிறது. பரிதாபமும்

தனது நாதியற்ற நிலைமையின் துடிதுடிப்பும் ஒன்றுகூடிய நிலைமையில் 'டாக்டர்!'...என்று தழதழத்துக் கூப்பிட்டாள். மேலே பேசமாட்டாது வாயடைத்தது. மீண்டும் ஊமையானாள். அமைதி குடிகொண்டது.

39

உத்ஸாக நிலயமும் உல்லாஸத் தோற்றமும்

ஒரு பொட்டு நிழல்கூட இல்லாத கொடிய பாலைவனத்தில் இருந்த ஒரு துரதிருஷ்டப் பிண்டத்திற்கு, ஒப்புயர்வற்ற உயரிய நந்தவனமே அகப்பட்டுவிட்டால் எப்படித்தான் மனது கட்டுமீறிக் களிப்படையும்? க்ருபாமந்திரத்தின் வெகு சிறப்பான நிர்மாண திட்டத்தின் அழகும், பருத்தியை மெஷினில்விட்டால் பிறகு அது துணியாக மடித்து வெளியில் தள்ளும்வரையில் மெஷின்வேலை செய்வதும், ஆயிரக்கணக்கான மனிதர்கள் வெகு மும்முரமாயும் ச்ரத்தையுடனும் வேலைசெய்வதும், க்ருபாமந்திரத்தின் இன்னொரு பகுதியில் உயர்ந்தவாஸனை சோப்புக்கள், தைலங்கள், பல்பொடிகள் முதலியன செய்வதும், அங்குள்ள தொழிலாளர்களுக்கு வரிசையாக சிறிய வீடுகள் கட்டிக்கொடுத்து பல சவுகரியங்களும் செய்திருப்பதும், தினம் ஆயிரக்கணக்கான சரக்கு வியாபாரமாவதையும் காணக்காண மானவதியின் உள்ளம் விசனக்கேணியாக இருந்த போதிலும் அக்கேணியில் ஒரு அழகிய தாமரை உத்பவித்ததுபோல் ஒரு சிறிய சந்தோஷம் உண்டாகியது. கூட்டைவிட்டுப் பறந்துவந்த கிளிபோல் அந்த கட்டிடத்தையும் அதைச் சார்ந்த தொழிற்சாலைகளையும் ஆபீஸுகளையும்தொழிலாளர்வசிக்கும் இடங்களையும்பருத்தி பயிராக்கும் ப்ரம்மாண்டமான தோட்டங்களையும், ஒருவார காலம் இரவு பகலாக சலிக்கச் சுற்றினாள்.

இதற்கு முன்பு மனத்திலிருந்த அபாரமான சங்கடத்திற்கும் நெஞ்சை யழுத்தும் துக்கத்திற்கும் இந்த தனியுலாவல் ஒரு பேராறுதலாகவும் நூதன உணர்ச்சியுடன் மனச்சாந்தியாகவும் இருந்தது.

முகுந்தன் மானவதியை அழைத்துவந்து விட்டானே யன்றி அவளிடம் அதிகம் நெருங்கவோ தனித்துப் பேசவோ இல்லை. ஏனெனில் அவளுடைய தவிக்கும் உள்ளம் சற்று நிதானித்து நம்பிக்கையை அடையட்டும். அமைதி நிலவட்டும். ஆறுதலுடன் முகத்தில் தெளிவும் தெம்பும் உண்டாகிறதா பார்க்கலாம்....மனப்புயல் சிறிது தணிந்தால் சந்தோஷக் களையும் உண்டாகுமல்லவா! அதோடு அதற்குள் அவளுடைய பிதாவினுடைய தகவல் ஏதாவது தெரிந்தால் மிகவும் உத்தமமாகிவிடும். அந்த சந்தோஷத்தை அவளுக்குத் தெரிவிக்கலாம்...

என்கிற முன்யோசனையினுல் ஒரு வேலேக்காரியின் துணையில் அவளேத் தனிமையாகவும் தாராளமாகவும் விட்டிருந்தான். முகுந்தன் வரும்போதெல்லாம் தானே ஓட்டமாக ஓடிவந்து, "டாக்டர்! எங்கப்பாவைப்பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா!" என்று ஆவலே வடிவாகக் கேட்டு அழுகுப் பதுமைபோல் நிற்பாள்.

'இன்னும் ஒன்றுமில்லேயே' என்கிற வார்த்தையைக் கேட்டதும் தாமரை மலர்போன்ற முகம் சந்திரனேக் கண்டு குவிவதுபோல் குவிந்துவிடும். நீர்முட்டி விசனத்தின் ஜ்வாலே அவளுடைய எழிலேயே மாற்றிவிடுவதுபோலாகும்.

"மானவதி! உனக்கு இங்கு நன்ருகப் பொழுதுபோகிறதா? கஷ்டம் ஒன்றுமில்லேயே?" என்றுமட்டும் கேட்டுச் சென்றுவிடுவான். ஒருவாரமாயிற்று, விவாக நாள் நெருங்க நெருங்க முகுந்தனின் தவிப்பு அதிகரித்ததே யன்றி சந்தோஷமோ, உத்ஸாகமோ சிறிதுமில்லே. வேதனேயும் சொல்லமுடியாத சங்கடமும் நெஞ்சை யழுத்துகிறது.

"ஆம்...ஏன் நான் வெட்கப்படவேண்டும்?...என் மனத்திற்கு அரசன் நான்தானே! என் விருப்பத்தைக் கூறுவதா முட்டாள்தனமாகும்? ஆகாது...ஒருபோதும் ஆகாது...என்னிதயத்தில் சதா வீற்றிருப்பது மானவதியா! நீலாவதியா!...நீலாவதியை எத்தனே நினேத்தாலும் உருவம் தோன்றுவதில்லே. மானவதியை மறக்க முயன்ருலும் இமைப்பொழுதுகூட அகலமாட்டேனென்கிருளே இதென்ன மாயை!...கடவுளால் கொடுக்கப்பட்ட தெய்விக ப்ரேமை என்பது இதுதான?...

"மனமே...சீ!...இன்னுமா முட்டாளாயிருக்கிருய்...உன்னுடைய பீடத்தில் கொலுவிருக்கும் இன்பராணியை நீ நேசிக்கிருயா! இல்லேயா! என்பதே உன் கேள்வி...பயித்தியமே...பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலுள்ள உனக்குமா இந்த கதி...என்று ஏதேதோ எண்ணி முனகும் சமயம், தர்மாம்பாள் சற்று ஆத்திரத்துடன் இறைந்து பேசும் குரல் காதில் கேட்டு உள்ளே சென்று "என்னம்மா விஷயம்?"...என்ருன்.

தர்:—விஷயமா! மண்ணுங்கட்டியும் தெருப்புழுதியும்...அபசகுனம்போல் எப்போதும் பேசாதே என்று நான் முட்டிக்கொள்வதைக் கேட்டாயா! அந்த பெண்வீட்டில் யாரோ திடீரென்று செத்துவிட்டார்களாம்; முகூர்த்தம் இன்னும் தள்ளிப்போய் விட்டது. என் மனது ஏதோ சங்கடமன்ன செய்கிறது...என்ருள்.

அமிருததாரையை வார்ப்பதுபோல் முகுந்தனின் உள்ளம் பூரித்தது. பதிலே பேசாது குதி குதித்தவாறு துள்ளி ஓடினன். சொக்காயை எடுத்து மாட்டிக்கொண்டு நேரே காரில் சென்ருன். தாயாரின் மனவருத்தமெங்கே! இவனுடைய கரைகடந்த சந்தோஷமெங்கே! எதற்கு எது சம்மந்தம்? ஒவ்வொன்று ஒவ்வொருமாதிரியாகப் பொங்கியது.

40

தேனும் பாலும் திகட்டா வமுதும்

வேலை முடிந்ததை அறிவிக்கும் மணியடித்ததும் தொழிலாளர்கள் தம் தம் தொழிலைவிட்டுச் சென்றார்கள். சோப்புக்களுக்கும் தைலபுட்டிகளுக்கும் சீட்டு ஒட்டிக்கொண்டிருந்த மானவதிக்கு முதல் சில தினங்களிருந்த உத்ஸாகம் வர வரக் குறைந்தது. தன் பிதாவின் நினைவே ஓயாது கண்முன்பு தோன்றி நினைவில் தாண்டவமாடியது.

"ஆதியில் என் தாயின் சவத்துடன் ஓடிய தீர வைராக்யகுணமுடையவராயிற்றே, என்னுடைய இந்த நிலைமையைக்கண்டுத் தாங்காது தற்கொலைபுரிந்துகொண்டிருப்பாரோ!" என்று நினைக்கும்போது விசனமே அதிகரித்தது.

இனி என் கதி என்ன... அன்புடனிருந்த என் தாதாவும் மறைந்தார். பின்னர் ஆதரித்த சஞ்சீவியும் தாதாவைப் பின்துடர்ந்தார். பெற்ற தந்தையைக் காணப்போவதே இல்லை என்று எண்ணியதற்கு அவரைக் கண்டு மகிழச் செய்த கடவுள் அவரையும் நீண்ட பிரிவாகப் பிரித்துவிடுவாரோ...ஐயோ...நினைக்கும் போதே தேகம் நடுங்குகின்றதே.

தௌர்ப்பாக்யமே உருவாய் வந்துள்ள பிண்டத்திற்கு விசனமே கார்மேகம்போல கவ்விக்கொண்டுள்ள உள்ளத்தில்...மின் வெட்டுப்போல் ஒரு...நூதன...சேச்சே...கனவில் காணக்கூடலாயக் கற்ற அபாக்யவதிக்கு...முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதும்...ஊமை ப்ரஸங்கம்செய்ய விரும்புவதும் மலடி மகனுக்குத் தாயாக நினைப்பதும்...விதவை...தர்ம பத்தினியாக... ஆம். இக்காலத்தில் புதிய மாறுதல்களில் அதுவும் நடக்கலாம்... நடக்கின்றது...காகிதத்தினுல் கத்தரித்த புஷ்பத்திற்கு உருவம் வேண்டுமாயின்...வர்ணம் வேண்டுமாயின்...கொடுத்து விடலாம்...

இயற்கையாயுள்ள ம்ருதுத்தன்மையையும்...வசீகரம் பொருந்திய பரிமளத்தையும்...அதற்கு கொடுத்து உயிர்ப்பிக்க முடியுமா... திக்கற்ற அனுதை...பயித்தியம் பிடித்திருந்தவள்...சேச்சே...வெட்கம்...அவர் மிதித்த மண்ணை மிதிக்கவும் யோக்யதை யற்றக் கட்டை; செருப்பாய் பிறந்திருந்திருந்தால் அவருடைய சரணுரவிந்தத்தில் சதா வீற்றிருக்கலாம்...இதென்ன ப்ரமை...ப்ரமையா.... இல்லை...இல்லை...இரண்டுமாத காலமாக இதயத்தில் ஊறித்தெளிந்து தோன்றும் உண்மைத்தோற்றமல்லவா இது!"

என்று ஏதேதோ எண்ணமிட்டவாறு கைமட்டும் வேலை செய்துகொண்டிருந்ததால், மணியடித்ததோ, மற்றவர்கள் எழுந்து சென்றதோ ஒன்றுமே அவளுக்குத் தெரியவில்லை. கூடவிருந்த பெண்கள். "மானவதீ...எழுந்துவா"...என்று வழக்கம்போல் கூறிச்

சென்றதும் காதில் விழவில்லை. மனத்தில் அலைமோதும் எண்ணங்களுக்கிடையே ஆழ்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள்.

வெகு உத்ஸாகமும் மனத்தில் பொங்கும் எழுச்சியின் இன்பமும் தாண்டவமாட முகுந்தன் கிருபாமந்திரத்திற்குள் வந்து பார்வையிடுபவன்போல் ஒவ்வொரு இடமாகப் பார்த்துக்கொண்டு வருகையில், வேலைக்காரர்கள் தம்தம் தொழில் முடிந்துசென்ற அலுப்பால் கைகால்களை சுத்தி செய்துகொண்டு 'அப்பாடா!' என்று உட்காருபவர்களும், களைப்பு தீரக் குளிப்பவர்களும் தம்தம் ஆப்தமானவர்களுடன் பேசி இன்புறுகிறவர்களும், இராச் சாப்பாட்டிற்குத் தயார் செய்பவர்களும், தம்தம் குழந்தைகளுடன் குலாவி மகிழ்கிறவர்களுமாகவிருக்கும் காட்சிகள் முகுந்தன் தினம் கண்டு களிப்பதாயினும் இன்று வெகு அற்புதமாயும் ஆனந்தமாயும் தோன்றின.

தன்னந்தனியாக மானவதி மட்டும் அத்தனை பெரிய இடத்தில் உட்கார்ந்து இன்னமும் வேலை செய்வதைக் கண்டதும், முகுந்தனுக்கு அளவு மீறிய ஆனந்தமும், பூரிப்பும் எங்கிருந்தோ பெரும் புசல் காற்றுபோல் இதயத்திலிருந்து பீறிக்கொண்டுவந்தது. அதே வேகத்தில் மானவதியின் பின்னால் சந்தடிசெய்யாது வந்துநின்றான்.

மானவதியில்லாது இனி தன் வாழ்க்கைச் சக்கரம் ஓடாது என்கிற தீர்மானமான எண்ணம் பசுமரத்தாணிபோல் பதிந்தது. மானவதி உட்கார்ந்திருப்பதும் ஓழுகு, கைகள் பரபரவென்று வேலை செய்வதும் ஓர் தனித்த வசீகரம்...ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு ஸௌந்தர்யத்தை அள்ளி வீசியது. எழிலைப் பருகி தேன் குடித்த நரிபோல் களிவெறிகொண்ட முகுந்தன்..."மானவதி! மானவதி!"...என்று மெல்லிய குரலில் இதயத்தில் ஆழமாகப் பதிந்திருக்கும் உயரிய பிரேமையின் சாயை த்வனிக்கக் கூப்பிட்டான்.

தன்னை மறந்து உட்கார்ந்திருக்கும் மானவதிக்கு இக் குரல் கேட்டதும் பூமியுடன் ஒரு குலுக்குக் குலுக்கியது போன்ற உணர்ச்சி உண்டாகி சடக்கென்று திரும்பிப் பார்த்தவாறு எழுந்தாள். என்னே விநோதம்!...என்னே ஆனந்தம்! ஒன்றையொன்று விழுங்கி ஏப்பமிட்டுவிடும் போன்று நான்கு விழிகளும் ஒரு விநாடிப்பொழுதில் அபாரமான சக்தியுடன் தாக்கிக்கொண்டு அடுத்த விநாடி நான்கும் கீழே பூமாதேவியின் சாக்ஷியை...துணையைக்....கோருவதுபோலும், ஓடியாடி விளையாடிக் களைத்த குழந்தை தாயாரின் மடியில் தொப்பென்று விழுவதுபோலும் பூமி தேவியினிடம் சரண்புகுவதுபோல் சாய்ந்தன.

சில விநாடிகள் நிலை தடுமாறி மவுனம் குடிகொண்டு அமைதியும் சாந்தியும் நிலவியபிறகு மீண்டும் கண்கள் நான்கும் சந்தித்த பொழுது முன்பிருந்த போராட்டமும் உணர்ச்சியின் வேகமும் மானவதியின் விழிகளில் சிறிது மறைந்து அதற்குப் பதிலாக அயோமயமான சோகத்தின் கதறலும்...விம்மலும்...பயங்கரமும்...தடுமாற்றமும்...ஏக்கமும்...ஏக காலத்தில் ஜ்வலித்து...அருவி

போல் நீர் ப்ரவாகம் ஓடியது. அந்தப் பார்வை...ஐயோ! என்கதி என்ன...என்முடிவு எப்படி?...என்று கேட்பதுபோலிருந்தது.

இந்த பரிதாபத்தை முகுந்தனால் சகிக்கக்கூடவில்லை..குமுறி எழும் ஆவேசத்துடன்..."மானவதி!...நான் என்ன செய்வேன்? எத்தனை ப்ரயாசைப்பட்டும் உனக்கு இன்பமளிக்கும் விஷயத்தைக் கொண்டுவராத நிலைமையிலிருக்கிறேனே என்று என் மனது தவிக்கிறது...மானவதி!...என்மேல் வெறுப்பா...கோபமா?...

பதில் பேச நா எழவில்லை...பதுமைபோல் நிற்கும் மானவதியின் சரீரம் கிடுகிடென்று ஆடியது. மார்பு படபடத்து வேகமாக அடிக்கின்றது....அருகிலிருந்த ஜன்னலண்டைபோய் நின்று... "ஐயோ...என் கதி!...அனாதையிலும் அனாதையாகிய நான் என்ன செய்வேன்?...கேவலம் பெண் ஜென்மத்தையுங் கொடுத்து அளவற்ற சோதனையையும் காட்டினால் என் முடிவு என்ன?"...என்று கல்லும் கரைந்துருகும்படி கூறிப்புலம்பினாள்.

முகுந்தனின் இதயம் எல்லையை மீறியது. ப்ரேமையின் வேகம் ப்ரவாகம்போல் பொங்கியது. ஆவேசம் முன்னுக்கிழுத்து எங்குமில்லாத தைரியத்தைக் கொடுத்தது..."மானவதி!...உன் முடிவை பகவான் ஓர் நல்ல...உயர்ந்த விதமாகவே முடித்திருக்கிறார் என்பதை நான் அறிகிறேன்...மானவதி!...மானவதி!...இதோ பார்....ஒரு வினாடி புலம்பாமல் தெளிந்த இதயத்துடன் என்னைப் பாரு. உனக்கு உன் பிதாவைத் தேடித்தரும் வகையில் தற்போது நான் சந்தோஷமளிக்கவில்லையெனினும் உன்னை என் ஆயுள் உள்ளவரையில் கைவிடமாட்டேன்.

ஒலியில்லாத மணியும், ஒளியில்லாத தீபமும், நாதமில்லாத வீணையும், எப்படி பயன்படமாட்டாதோ அதுபோல் மானவதியில்லாது என் வாழ்நாள் உபயோகப்படாது...நீ இன்றி என் ஜீவியச் சக்கரம் ஒரு அடிகூட ஓடமுடியாது. மானவதி!...இது வெறும் மோகவெறியால் பிதற்றும் வரண்ட வார்த்தையல்ல. என்னிதயத்தில் வெகு ஆழமாகப் பதிந்துள்ள உன் ப்ரேமை வெள்ளத்தில் மிதந்துவரும் தூய தோணிகளைப்போன்ற வார்த்தைகளேயாகும்...உனக்கு எனது தூய இதயத்தை அர்ப்பணம் செய்கிறேன். என்னை நம்புகிறாயா மானவதீ!...வித்யாசமாக எண்ணாமல் உன் சம்மதத்தைத் தெரிவிப்பதாயின் இதோ, நான் உனக்குச் சத்தியம் செய்து தருகிறேன். மானவதீ! உன்னை நான் என்னுயிரினும் இனிய...விலைமதிப்பற்ற பொருளாக நேசிக்கின்றேன்... நம்மைப்படைத்த ஆண்டவன்மீது ஆணையாக நான் கூறுகிறேன்... என்னை நம்புகிறாயா...மானவதீ...மானவதி!"...என்று இதயத்தைத் திறந்து காட்டுவதுபோல் கூறினான்.

பிறவிக் குருடனுக்கு பகவத்ஸன்னிதானத்தில் பகவானை வேண்டும்போதே திடீரென்று கண் தெரிந்துவிட்டால் எப்படி அவன் மனமும் இதயமும் கட்டுமீறிப் பொங்கிப் பூரித்து விகசித

மடைந்து கொந்தளிக்குமோ, அதேபோல் மாளவதியின் உள்ளம் ஆச்சரியத்தாலும் சந்தோஷத்தாலும் தாக்குண்டது...“ஹா!... டாக்டர்!...இதென்ன வார்த்தை!...பயித்தியக்காரி...அனாதை... நானா...என்னையா...

“ஆம்...நீதான். உன்னைத்தான் நான் கடவுள் சாக்ஷியாக மணம் செய்துகொள்ளப்போகிறேன். இந்த க்ருபாமந்திரத்திற்கே உன்னை இளைய ராணியாக்கப்போகிறேன்...இது சத்தியம்...முக்காலும்



சத்தியம்...ஆனால்...மானவதி!...ஏனிப்படித் துடிக்கின்றாய்? என்னை நீ நம்பவில்லையா!...என்னை வெறுக்கின்றாயா...என்மீது கோபிக்கின்றாயா...மானவதீ...மானவதீ...நீ என்னை...விரும்பவில்லையா?"... என்று இடிந்த மனத்துடன் கேட்டான்...

மானவதியின் உள்ளம் தடுமாறியது. ஒரு பக்கம் தர்ம நியாயம் தலைதூக்கி ஆடுகிறது. ஒரு பக்கம் உள்ளத்துணர்ச்சி பொங்கி எழுந்து கொந்தளிக்கிறது. முகுந்தனுக்கு சமீபத்தில் விவாகமாகப் போகும் விஷயமும் தொழிலாளர்கள் ஒன்றுகூடி சிறந்த சன்மானம் செய்ய வேண்டுமென்று பேசிக்கொண்டிருப்பதும் இவளுக்குத் தெரியுமாதலால் பின்னும் தவிக்கிறது. தழுதழுத்த குரலில்..."டாக்டர்!...உபகாரம் செய்தவர்களுக்கு அபகாரம் நினைப்பதுதான் தர்மமா! நான் செய்துள்ள மகத்தான பாபம் போதுமே... தங்களுக்குகந்த ராணியைய நீங்கள் விரைவில் மணக்கப்போகும் விஷயம் எனக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்களா! தங்கள் பெற்றோரின் தீர்மானத்திற்கு விரோதமாகத் தாங்கள் இந்த அனாதையை சோதிப்பது தர்மமல்ல...இது நியாயமில்லை. என்பால் தாங்கள் செய்துள்ள இப் பேருதவியை நான் எழேழு ஜென்மம் எடுத்தாலும் மறக்கமுடியாது...அதர்மவழியில் செல்வதற்கு நான்...

முகுந்தன் இடைமறுத்து..."மானவதி!....நீ பேசுகிற தர்ம நியாயம் எனக்கும் தெரியும். பகவான் உண்மையில் என்னைத்தான் சோதனை செய்கிறார் எனலாம். என் பெற்றோர்கள் விவாகத்தை நிச்சயித்திருப்பது என்னவோ உண்மைதான்...ஆனால்...ஆனால்... அது என் மனதிற்கு விவாதமாகவே இருக்கிறது...மானவதி!... உயர்வு தாழ்வு பார்க்க என் மனது இடந்தரவில்லை. என் மனது கோருவது உன்னுடைய உள்ளத்தையேதான்...நீ எதற்கும் பயப்படாதே!... மானவதி!...இனி நீ இன்றி நான் வாழமுடியாது.... இதோ பாரு...என்னை சோதிக்காதே"...என்று மானவதியின் தோள்மீது கையைப்போட்டு மற்றொரு கையில் சத்தியம்செய்தான்.

அதேசமயம், "முகுந்தராஜா!...முகுந்தராஜா!"...என்று தன் தகப்பனர் கூப்பிடும் குரல்கேட்டு இடியோசை கேட்ட நாகம்போல், அவளையொருபுறம் அனுப்பிவிட்டுத் தான் ஒருபுறம் மாயமாய் ஓடி மறைந்தான். நல்ல சமயத்தில் இப்படி வருவாரா என்று மனது பதைத்தது.

41

புனர் ஜென்மமும் புதிய இன்பமும்

முகுந்தனின் தகப்பனர் மகனை அழைத்துக்கொண்டு நீலாவதியின் வீட்டிற்குப் போவதற்காகவே வந்தார். அச்சமயம் தான் மறுத்தால் சந்தேகத்திற்கு இடமுண்டாகும் என்று தோன்றியதால் உள்ளுக்குள் முணமுணத்துக்கொண்டே போனன்.

5 மைல் சமீபத்திலேயே நீலாவதியின் பங்களா இருந்ததால் உடனே போய்ச் சேர்ந்தார்கள். தடபுடல் அலங்காரத்துடன் காட்சிகொடுத்த நீலாவதியைப் பார்த்ததும் முகுந்தனுக்கு ஏதோ ஒருமாதிரி லஜ்ஜை தோன்றியதேயன்றி அன்பு என்பது அரைக் காசுக்கும் உண்டாகவில்லை. ஏதோ ஒருவித ப்ரீதிமட்டும் உள்ளத்தில் உண்டாகியது. முகுந்தனுக்கு உயர்ந்த உடைகள் வாங்கியிருந்ததை இவனுக்கு அளவு பார்ப்பதற்கே இங்கு அழைத்தார்கள். உடைகள் கொடுத்ததும் முகுந்தன் இங்கு பேசுகிறவர்களுடன் கலந்து கொள்ளாமல் ஹாலில் அப்படி உலாவிக்கொண்டிருந்தான்.

ஹாலில் ஒருமூலையில் மாட்டப்பட்டிருந்த ஒரு சிறிய புகைப் படம் இவன் கண்ணைக் கவர்ந்தது. அருகில் சென்று பார்த்ததும் திடுக்கிட்டான். ஆச்சரியமும் பரபரப்பும் கொண்டு அப்படத்தைக் கழட்டிக்கொண்டு வந்து அங்கிருந்த பெரியவரிடம் அதைக் காட்டி 'இது யாருடைய படம்?' என்றான்.

பெரியவர் சற்று விசனம் தேங்கிய குரலுடன்..."உம்... இதுவா...இதுதான் நீலாவதியின் தந்தை, காலஞ்சென்ற மிஸ்டர் A. R. நாத் என்பவர்" என்றதும், முகுந்தனின் ஆச்சரியம் எல்லை கடந்தது..."இவர் நீலாவதியின் தகப்பனரா!...அப்பா...இதோ பார்த்தீர்களா...இதுவா அவர்!"...என்று ஆச்சரியத்தின் வேகத் தினல் வார்த்தை வராது தடமாடியது....

முத்துசாமியும் இதைப்பார்த்து அலறியவராய்...'ஹா! இது என் தம்பி ராமசந்திரனும் நானுமல்லவா...என் தம்பி மகளா நீலாவதி!... என் தம்பி!'...என்று நாக்குழறினர்...முகுந்தன் இரண்டு மூன்று கர்ணங்கூடப்போட்டுக் குதிப்பதற்குத் துணிந்தான்..'அப்பா!..நான் உங்கள் தம்பியை எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்க முயற்சித்து தோல்வியுற்றதாக நீங்கள் சொன்னீர்களே...பகவான் எப்படி முடித்து வைத்தார் பார்த்தீர்களா..."நீலாவதி!...நீலாவதி!...என் சகோதரி...இங்குவா...வா!'என்று ஆவேசத்துடன் கூவினன். முத்து ஸாமிக்கு ஒருபுறம் துக்கம், ஒருபுறம் சந்தோஷம் பொங்குகிறது... "நீலாவதி! என் செல்வி...வாம்மா....எனக்கு நாட்டுப்பெண்ணுக வர ஆசை காட்டி, வீட்டுப் பெண்ணுகவே ஆய்விட்டாய்...வா"... என்று ஆனந்தக் கண்ணீர் பெருகக் கூப்பிட்டார்.

நீலாவதிக்கும் கண்ணீர் பெருகுகிறது..."என் பெரிய தந்தையா?...எனக்கு அப்படி யொருவர் இருப்பதாகவே தெரியாதே...எங்கப்பாவே எனக்குத் தெரியாது. இப்போதுதான் நான் உங்கள் வயிற்றில் பிறந்து புனர்ஜென்மம் எடுத்திருக்கிறேன்!" என்று சந்தோஷ மிகுதியால் குழறினுள்.

முகு:—பெரியவரே!...என்ன ஆச்சரியம்! இந்த மனிதரின் படத்தை நான் பத்திரிகைகளில் ப்ரசுரித்திருந்தேனே...நீங்கள் பார்க்கவில்லையா?...

பேரி:—ஐயா! நான் பார்த்தேன். நீங்கள்தான் ப்ரசுரித்ததென்று தெரியாது. அதோடு அந்த மனிதன் ஒரு கொலைக்கேஸில் சம்மந்தப்பட்டுவிட்டதாகப் பழிவந்த அவமானத்தில் தற்கொலை செய்துகொண்டு வெளிநாட்டிலேயே இறந்துவிட்ட ரகஸியத்தைக் கண்டுபிடிக்க யாராவது விரோதிகள் செய்யும் சூழ்ச்சியோவென்றும் எண்ணினேன். பின்னும் இந்த குழந்தைக்கு அது விவரமே தெரியாது; வீணாக ஏன் தெரிவிக்கவேண்டும் என்று நினைத்தேன். அந்த மனிதனின்பெயர் ராமசந்திரன் என்று எழுதியிருந்தது ஒன்று. அவனுக்கு சகோதரன் இருப்பதே எனக்குத் தெரியாது. பலவித குழப்பத்தால் பேசாதிருந்தேன். இறந்துவிட்டான் என்று சொல்லக்கூட நான் விரும்பவில்லை. விஷயம் இதுதான். அடாடா! எப்படி போய்...எப்படி வந்தது காரியம். நாங்களே வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து நாலைந்து மாதந்தானாகிறது. அருமையான நீலாவதியின் பொருட்டுத்தான் நான் சொல்லாதிருந்தேன்... என்ன ஆச்சர்யமிது...இந்தக் குழந்தையின் தாயார் உண்டான செல்வத்துடன் இக்குழந்தையைத் தன்னந் தனியே வைத்துக்கொண்டு தவித்த சமயம் என் மனைவியின் சினேகம் உண்டாகியது. அந்தம்மாள் அகால மரணமடைந்தபோது தன் கணவனின் விஷயத்தைக் குழந்தைக்கு சொல்லவே கூடாதென்று சத்தியம் செய்து வாங்கிக்கொண்டதால் அது அப்படியே மறைந்தது. அதோடு முக்ய காரணம் கொலைக்குற்றம் ஒன்று, தற்கொலையொன்று. இதனால் அப்படியே அழுந்திவிட்டது. அப்பாடா!.. இனிமேல் என் கவலைவிட்டது. இனியும் அந்த பயங்கரத்தை நீலாவதிக்குச் சொல்லாமல் அவளையும் அவள் சொத்துக்களையும் நீங்கள் ஒப்பித்துக்கொள்ளுங்கள்.'' என்றார். இதைக்கேட்ட முகுந்தனின் சந்தோஷத்தை இதற்கு மேல் விவரிக்கவேண்டுமா! கட்டுமீறியது என்றால் மிகையாகாது.

42

அன்புக் கேணியில் ஆனந்தத் தாமரை

"அம்மா! அம்மா!...இதோபார் உன்மகளை...தாயைப் பெண்டாட நினைத்த கதையொன்று பன்னிரண்டுமந்திரி கதையில் படித்திருக்கிறேன்...இப்போது தங்கையை மணக்கத் தீர்மானித்த கதை நம்முடைய சரிதையில் உண்டாகியது...அம்மா!...இதோ உன் மகள் நீலாவதியைப்பாரு...நீலா! என் முயற்சி பலிதமாகிவிட்டது, பாத்தியா! மாமியார் என்று பயப்படுகிறாயா!... உன் தாயார் இவள்தான்''...என்று தலைகால்தெரியாமல் குதித்தான்.

தர்மாம்பாளுக்கு முதலில் விஷயம் விளங்காமல் இடி இடித்தது போலிருந்தது. பிறகு ஒருவாறு சமாதானமாகி நீலாவைக் கட்டி

யணைத்துக்கொண்டாள். எப்படிபோய் எப்படியாகியது என்கிற வியப்பு அவளுக்கும் எல்லை கடந்தது. நீலாவதியைத் தடவிக் கொடுத்து ஆசீர்வதித்து ஆனந்தக் கண்ணீர்விட்டு முத்துசாமி அக மகிழ்ந்தார். ஒருபக்கம் சந்தோஷம், ஒருபக்கம் கலவரம் இரண்டு உணர்ச்சிகளும் ததும்ப தர்மாம்பாள் புதிய மனுஷிபோல் காணப் பட்டாள். ஆனால் முகுந்தனுக்கு ஆனந்தம் எல்லை கடந்தது. தன் தாயாரிடம் உடனே தன் உள்ளத்தில் கொந்தளிக்கும் ஆவலைக் கூறி சமாதானம் செய்துவிடலாமா என்று தோன்றியது. தூக்கமும் பிடிக்கவில்லை. ஒரே ஓட்டமாக ஓடி மானவதிக்கு இந்த விஷயத்தைக் கூறி சந்தோஷப்படுத்தலாமா என்று எண்ணினான்.

ஆனால் இராக்காலத்தில் அவ்வாறு செல்வது அநாகரீகமாக இருக்கும் என்ற அஞ்சிகையும் கூடவே உண்டாகியதால் வெகு ப்ரயாசையுடன் இரவு கழிந்தது.

அதிகாலையிலேயே எழுந்து வழக்கத்திற்கு விரோதமாக க்ருபா மந்திரத்திற்குச் சென்றான். இருள் பிரிந்ததும் பிரியாததுமா யிருந்தது. அச்சமயம் சகல தொழிலாளர்களும் எழுந்து தம் தம் காலை வேலைகளை சுறுசுறுப்பாகச் செய்துகொண்டிருந்தார்கள். மானவதிமட்டும் க்ருபாமந்திரத்தில் பெரியதாக மாட்டப்பட்டுள்ள முகுந்தன் குடும்பத்தாரின் புகைப்படத்தருகில் நின்று கண்ணீர் வழிய தனக்குள் ஏதோ பேசிக்கொண்டிருப்பதை தூரவிருந்து பார்த்த முகுந்தனின் பரபரப்பு அதிகரித்தது. சந்தடிசெய்யாது வந்து பின்புறமாக நின்றான்.

“ஆம். இரவு முற்றும் இமையோடு இமை இசைக்காமல் யோசனை செய்து செய்து, மீண்டும் மூளை கலங்கிவிடும்போலாகியது தான் நான் கண்டபலன்...பாழாப்போன இந்தப் பிச்சைக்காரிக் காக...பயித்தியக்காரிக்காக....அனாதைக்காக....அவர் பாழாய்ப் போவதற்கு இனி இடம் கிடையாது. என் முடிவு இனி நான் நினைத்தபடியேதான்...அதிகம் தாமதித்தால் விஷயம் மிஞ்சிவிடும்... அன்பரே... தாங்கள் இப்படத்தில் நின்றாலும் என் முன்பு கம்பீர மாக இருப்பதுபோலவே காக்ஷியளிக்கின்றீர்கள். என் வந்தனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். நான் அறிந்தும் அறியாமலும் செய்துள்ள குற்றங்களை மன்னித்து இப் பாவியை மறக்கவேண்டுகிறேன். ஆண்டவனே! அவர் கண்ணில் நான் படாதிருக்கும்படி அருள் புரியவேண்டும்”...என்று பொங்கிவரும் துக்கத்துடன் மெல்லிய குரலில் கூறி, படத்தைத்தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

இந்த அதியற்புதமான காக்ஷியைக் கண்ட முகுந்தனுக்கு ஏற்கெனவே இருந்த மனத்துடிப்பு பதினாயிரம் மடங்கு அதிகரித்து வெறிபிடித்த ஆவேசத்தை உண்டாக்கியதால் ஒரே தாவாகத் தாவி மானவதியே ப்ரமித்துவிடும்படி “பிடித்துவிட்டேன். ப்ரம்மாண்ட மான திருட்டைக் கண்டுபிடித்துவிட்டேன்...மானவதி!...அகப் பட்டுக்கொண்டாய்...என்னை ஏமாற்றிவிட்டுக் கண்ணில் படாது

தப்பியோடவா பார்க்கிருய்?...எங்கே! எங்கே!...என் கண்ணில் படாது தப்பியோடு பார்க்கலாம்....உம்...ஓடிவிடு...மானவதி... மானவதி!...மனிதர்களாகச் சேர்த்துப் பிணைக்கும் பிணைப்பல்ல... கடவுளாக பார்த்துப் பிணைத்துவிட்ட அத்புதமான...அவிழ்க்கமுடியாத...அழிக்கமுடியாத பிணைப்பு...என்பதில் இனியும் சந்தேகமா...

மானவதி!...வீண் கவலைப்பட்டு உருகாதே..இனி அரைக்ஷணம் கூட நீ இல்லாது நான் உயிர் வாழமுடியாது...இதுதான் என் தீர்மானமான முடிவு...அனுவசியமான மனப்ராந்தியடைந்து விதண்டாவாதமான தண்டாகாரியம் செய்துவிடாதே....என்மீது ஆணையாக நீ இம்மாதிரி பயித்தியக்கார காரியம் செய்வதில்லை என்று சத்தியம் செய்துகொடு...அதையும் மீறி நீ ஏதாவது அசட்டுக் காரியம் செய்தால் அதனுடைய முடிவு என்னவாகும் தெரியுமா! 'நான் தான் கொலைசெய்தேன்' என்று நானே ருஜுப்படுத்திக்கொண்டு உன் பின்னுலேயே பகிரங்கமாக தூக்குமரத்தில் தொங்குவேன்...அது உனக்கு சம்மதந்தானு!..அப்படியாயின் உன்னிஷ்டம்போல் செய்..' என்று மூச்சுக்கூடவிடாமல், கொஞ்சல், கெஞ்சல், கடிபுடி...ப்ரமாணம்...பயங்கரம்...சபதம்...முதலிய சகல உணர்ச்சிகளையும்அள்ளி வீசி அவளை நகரவிடாது கெட்டியாக கட்டிப்பிடித்துக்கொண்டான்.

இச் செய்கையால் மானவதிக்குத் தூக்கிவாரிப்போட்டு ஒரு கலக்கு கலக்கியது. சில விநாடிகள் சென்ற பிறகுதான் அவளுடைய நிலைமை சற்று சமாளித்தது; எனினும் தேகம் மட்டும் நடுங்கிக் கொண்டே இருந்தது. முகுந்தனுடைய ப்ரமாணமும், அதிர்ச்சி மிகுந்த வார்த்தைகளும் அவள் இதயத்தில் வாள்கொண்டறுத்தன. நெருப்பை மிதித்தவள்போல் துள்ளியவாறு..."என்ன என்ன!... இதென்ன வார்த்தை...ஐயோ!...இந்த வார்த்தையாகிய பாணத்தினுல் என்னைக் கொல்வதைவிட நேரிலேயே கொன்றுவிட்டால் மிகவும் சந்தோஷமாகவிருக்கும். இதென்ன ஆணை...இதென்ன பேச்சு...கடவுள் நம்மிருவருடைய இதயத்திலும் அன்பை உண்டாக்கி இருக்கலாம்...ஆனுல் அதை வெளியில் சொன்னுல் சிரிப்பார்கள்...உங்கள் பெற்றோர்கள்...

என்று எடுப்பதற்குள்..."மானவதி!....என் கதை வேறுவிதமாக முடிந்துவிட்டது...உங்கள் எங்கள் என்கிற பல்லவி இனிமேல் வேண்டாம். மானவதி! வேடிக்கையைக்கேளு. எனக்கு மணம் செய்வதற்காகப் பார்த்திருந்த பெண்...என்னருமை சகோதரியாக ஆய்விட்டாள் (நடந்ததைக்கூறி) இனிமேல் கவலை ஏது?

"என்ன!....உங்கள் சகோதரியா!...உண்மையாகவா?...ஆ... ஹா...ஹா....என்ன ஆச்சர்யம்"...என்று திகைத்தாள்...

"இனிமேல் சந்தேகமில்லையே?...

"ஏனில்லாமல்...இந்த பயித்தியக்காரியை...

"போதும்...நிறுத்து....பயித்தியக்காரியின் பயித்தியத்தைத் தீர்க்கும் டாக்டர் நான்தானே!...அதற்கு ஏன் விசாரப்படவேண்

டும்....மானவதி!...நான் இன்று அவசரமாக இப்போதே ஆஸ்பத்திருக்குப் போகவேண்டும். நான் திரும்பிவரும்பேரது மறுபடியும் வருகிறேன்...ஏதாவது அசட்டுக்காரியம் செய்தால்...தெரியுமா?'... என்று அவளைத் தட்டிக்கொடுத்துவிட்டு ஓடினான். முகுந்தனுடைய மனத்தில் அபரிமிதமான ஆனந்தம் நிலவியது.

43

ஆண்டவன் செய்யும் அற்புத லீலை

"ஆ...ஆப்பிட்டுகிணையா...ஏ சாமியாரே...அன்னிக்கு ஆளெ கொலெ பண்ராப்பேலே அடிச்சுப்புட்டு ஓடினியே... இன்னிக்கு என் கையில்தானே ஆப்பிட்டுகிணே. வா....வா... சரியான சமாச்சாரந்தான் இருக்குது. ஒம் பொண்ணுக்கு பயித்தியம் அதிகமாயிப்பூட்டுது. அதுக்காவெ அந்த பொண்ணை, இப்பிடி இப்பிடி டப்பு, டிப்புணு, அடிச்சாங்க...அது ஒடனே செத்து போயிட்டுது...போறுமா?"...

என்று கூறி தபால் திபால் என்று சாமியாரை அடித்து நொறுக்கினான்...சாமியாரின் உடலும் துடிக்கின்றது உள்ளமும் துடிக்கின்றது..'ஆ...என் கண்மணி மானவதி இறந்துவிட்டாளா... அப்பா! காவல்காரா! என் ஆவேசத்தில் உன்னை அன்று அடித்து விட்டேன். அதற்காக நான் வருந்துகிறேன். என் இன்பக்கிளி இறந்துவிட்டாளா....உண்மையாகவா...அப்பா...அடேய் உனக்கு கோடி புண்யம் உண்டு...என் செல்வமணி இறந்தது உண்மையாயின் என்னை இப்போதே...நன்றாக...உன் கை சலிக்க அடித்துக் கொன்றுவிடு. பாழும் உயிர் போகட்டும்...போகட்டும்...ராமா... கிருஷ்ணா....இதற்காகவா இன்று வந்தேன்...உம். நன்றாக அடி... அடி....ஆத்திரம் தீர அடித்துப் பழிக்குப் பழிவாங்கு"...என்று சாமியார் கூறிய அதிசயத்தை...பொறுமையைக்...கண்டு காவலாளியின் வியப்பு எல்லைகடந்ததுடன், மனது தானாகவே ஒருவித உணர்ச்சியுடன் இளகியது.

ஆறாத்துயரத்துடன் கண்ணீர் பெருக்கிக் கதறும் சாமியார் "மானவதி...மானவதி!"....என்று ஆனை பெரிதாக வீறிடுவதுபோல் வீறிட்ட சமயம் முகுந்தன் காருடன் ஆஸ்பத்திரிக்கு வந்தான். சற்று தூரத்தில் வரும்போதே வேலைக்காரன் முதலில் அடித்ததையும் சாமியார் கதறியதையும் பார்த்துக்கொண்டு வந்த முகுந்தன், கார் ஓசையைக் கேட்டால் வேலைக்காரன் நிறுத்திவிடுவான், விஷயம் வேறுவிதமாக ஆகிவிடும் என்கிற யோசனையினால் காரை நிறுத்திவிட்டுச் சந்தடி செய்யாதுவந்து காவல்காரனின் கையைக் கெட்டி

யாகப் பிடித்துக்கொண்டு "என்னடா சமாச்சாரம்! உள்ளதை உள்ளபடி சொன்னால் பெரிய எஜமான்வரையில் போகாது பிழைப் பாய்" என்று அதட்டிப் பின் சாமியாரைப் பார்த்தான்.

அவ்வளவுதான், அப்படியே திடுக்கிட்டு 'ஹா!...தாங்களா... தாங்களா காவல்காரனிடம் அடிபடுகிறீர்கள்?...சில வருஷங் களுக்குமுன்பு முல்லையூரில் தாங்கள் எங்கள் வீட்டில் அதிதி யாகத் தங்கியிருந்து என் பிதாவுக்கு உபதேசம் செய்த யோகீச் வரர்களல்லவா...என்ன சமாச்சாரம்...ஐயையோ! ரத்தம் ஒழுகு கிறதே...என்று வெகு அங்கலாய்ப்புடன் அவரைத் தூக்கி முதுகில் ஒழுகும் ரத்தத்தைத் தன் கைகுட்டையால் துடைத்தான்.

சாமியார் ஆதியிலிருந்த அதே கோலத்தில்தான் இப்போதும் இருந்தார். முகுந்தனைப் பார்த்ததும் முதலில் அவருக்குப் புரிய வில்லை....முல்லையூரா!...திவான்பகதூர் முத்துஸாமியின் குமாரன் முகுந்தராஜனா? உண்மையாகவா..அப்பனே, தீர்க்காயுஷ்மான்பவ.. எனக்கு ஒரு உதவி செய்வாயா...இது பயித்தியக்கார ஆஸ்பத் திரியாம். என் கண்மணி....என் ஜீவாதாரம்...என் இன்ப நிலயம்... என்னுருயிர் மானவதி....

'ஹா....யாரு...மானவதியா? ஸ்வாமி...ஸ்வாமி!...விஷயத்தைச் சொல்லுங்கள்...என்ன ஆயிற்று...நான் இந்த ஆஸ்பத்திரியின் டாக்டர்தான்'...என்று முகுந்தன் பதைபதைக்கக்கேட்டான்.

"ஹா...அப்படியா...நீ இந்த ஆஸ்பத்திரியின் டாக்டரா...உண் மையாகவா...ஐயோ! என்னருமைக் கண்மணி, என் புதல்வி... மானவதி இறந்துவிட்டாள் என்று இந்த மகாபாவி சொல்லு கிறானே...அது உண்மையா...மானவதியா இறந்துபோய்விட்டாள்... என் மானவதி என்னை மோசம் செய்துவிட்டாளா...அப்பா... அதைச்சொல்லு"...என்று புத்திரவாஞ்சை பொங்கக் கேட்டார்.

முகுந்தனுக்கு ஆச்சரியமும், வேலைக்காரன்மீது கோபமும் ஸ்வாமிகளிடம் பரிதாபமும் காட்டுத் தீபோல் மூண்டெழுந்தன... வேலைக்காரனின் கன்னத்தில் பளீரென்று ஒரு அறைவிட்டு.'யாரடா இறந்துவிட்டது...வாசலில் காவலிருப்பது உன் வேலையா...கலகம் செய்வது உன் வேலையா?...போ வெளியே, உம்...நட'...என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளினான்.

இதற்குள் சாமியார், "அப்பனே...அவனை ஒன்றும் செய் யாதே...என் பாவம்...என் கர்மம்.(நடந்த சகலத்தையும்கூறி) அன்று நான் அத்துமீறி அடித்ததற்காக இந்தகதி நேர்ந்தது...என் கண் மணியை நீ பார்த்தாயா...இருக்கிறாளா! பயித்தியமே இல்லாதிருக் கையில் விரோதிகள் செய்த சதியில் இக்கதியாயிற்று. என் மான வதி எப்படியிருக்கிறாள்? சொல்லு, சொல்லு...என்று ஆவலே வடி வாகக் கேட்டார்.

'யோகீச்வரரே!...மானவதி உங்கள் குழந்தையா?...தாங்கள்... என்று முடிப்பதற்குள் "அப்பா...தாங்கள் சன்யாசியாயிற்றே,

குழந்தை எது என்கிறாயா...கேட்பதற்கு நியாயம் உண்டு. (சரிதையைக்கூறி) இப்போது புரிந்ததா....என்னுடைய இருண்டுபோன உள்ளத்தில் ஜோதி உதயமானாள் என் கண்மணி. அது அவிந்து விட்டதா இருக்கிறதா?''...என்று ஆவலே வடிவாகக் கேட்டார்.

''யோகீச்வரரே!...உமது மானவதி வெகு சௌக்யமாக இருக்கிறாள். சதா உங்களையே எதிர்பார்த்து ஏங்குகிறாள். உடம்பு முற்றிலும் குணமாகிவிட்டது. கண்ணீர் விடாதீர்கள். இப்போதே நீங்கள் உங்கள் மானவதியைப் பார்க்கலாம்....என்கூட வாருங்கள்'' என்று உபசாரத்துடன் அவரை அழைத்துவந்து காரில் ஏத்தித் தானும் அமர்ந்தான். என்னே ஆனந்தத் தாண்டவம்!...என்னே விசித்திரசம்பவம்!...ஈசனின் லீலாவிநோதத்தின் அத்புதத்தை என்னவென்றுகூறுவது? சாமியாரின் மகிழ்ச்சி கரைபுரண்டது. முகுந்தனை சேர்த்து அணைத்துக்கொண்டு ஆசீர்வதித்தார்...மகளைக் காணப் போகும் ஆவலில் உடல் பூரித்தது.

44

சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது

கிருபாமந்திரத்தில் மானவதி குளித்துவிட்டு ஜகன்மோகன சுகுமாரா என்கிற பாட்டைப்பாடி ஸ்வாமிக்குப் பூஜை செய்து கொண்டிருந்தாள். அச்சமயம் முகுந்தராஜன் சாமியாருடன் அவ்வறையில் சென்று, ''யோகீச்வரரே!''...அதோ...உமது விலையிலா மாணிக்கம். பார்த்தீர்களா!''...என்றான்...

சாமியாரின் புத்திர வாத்ஸல்யம் உச்சஸ்தாயியை எட்டியது... ''கண்மணீ...மானவதீ!...மானவதீ!...என் செல்வீ!....என்று வயிற்றிலிருந்து பீறிக்கொண்டு வரும் உணர்ச்சியுடன் மானவதியைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு கண்மாரியைப் பொழிந்தார்...

பகவானுக்குப் பூஜைசெய்யும்போது அந்த பகவானே கைமேல் பலனைக் கொடுத்ததுபோல், தான் சற்றும் எதிர்பாராத விதம் தனது தகப்பனாரைத் தனக்களித்த ஆனந்தத்தில் ''அப்பா!... அப்பா!....என்று ஒரு குரல் வீறிடுவதுபோல் கத்தினாள். தந்தையின் அணைப்பில் ஐக்யமாகி அப்படியே மெய்மறந்தாள்.

தனக்கு நிகரிலாத இந்த ஆனந்தத்தை அள்ளிக் கொடுத்தது முகுந்தன்தானே என்று நினைக்கும்போது மானவதியின் தேகம் பூராவும் அம்ருதம் பாய்ந்தோடுவதுபோன்ற உணர்ச்சி உண்டாகியது. தன்னுள்ளத்தில் கொந்தளிக்கும் அன்பு பூராவும் கண்களில் ஜ்வலிக்க முகுந்தனை ஒரு பார்வை பார்த்தாள்.

அந்த பார்வை முகுந்தனின் இதயத்தில் பாய்ந்துத் துளாவியது. அந்தக்கண்களில்தான் எத்தனை உணர்ச்சிகள் தாண்டவமாடுகின்றன!

அந்த முகத்தில்தான் என்ன தேவ களை அத்புதமாகச் சொட்டு கிறது. அக் குரலில்தான் எத்தனை மதுரம் தோய்ந்து கிடக்கிறது ." என்று தனக்குள்ளேயே எண்ணி மலர்ந்த முகத்துடன் இவ்வானந்தக் காக்ஷியைப் பார்த்துப் பூரித்தவாறு நின்றான்.

யோகீச்வரரின் இதயத்தில் அன்பு புசல்காற்று சிறிதுஓய்ந்ததும்... "மானவதி!...என் கண்மணி! எனக்கு இத்தகைய பேரானந்தத்தைக் கொடுத்த கடவுளை மனதார வணங்குகிறேன்"...என்று முடிப்பதற் குள், மானவதி தந்தையை நோக்கி, "அப்பா...கடவுள் எதையும் நேராகச் செய்யமாட்டார். ஒரு புருஷகாரியை நியமித்துத்தான் நடத்துவார் என்று நீங்கள்பலதரம் சொல்லியிருக்கிறீர்களல்லவா?... அந்த கடவுள் இதோ, இந்த மகானுபாவனைத்தான் புருஷகாரியாக நியமித்து நமது கவலையைத் தீர்த்திருக்கிறார்...அவருக்கல்லவோ நீங்கள் நிகரிலாத வாழ்த்து மாலையைச் சூட்டவேண்டும்? நாமோ பரம ஏழை.. அவர்களோ இந்த க்ருபாமந்திரத்தின் சொந்தக் காரர்...(க்ருபாமந்திரத்தின் விவரங்களைக்கூறி) ஆகையால்... என்று முடிப்பதற்குள்,

யோகீச்வரர் "அப்படியா..."க்ருபாமந்திர்"...என்ன அருமை யான பெயர்?...அப்பா! முகுந்தா...தரித்திரத்திலும் தரித்திரனை நான் உனக்கு என்னதான் கைம்மாறு செய்யமுடியும்? நீ கட்டி யுள்ள இந்த கட்டிடமும், அதன் திட்டமும் மட்டும் க்ருபாமந்திர மல்ல. உன்னுடைய பவித்திரமான இதயமிருக்கிறதே, அதுதான் க்ருபாமந்திரம்...என்னுடைய ஆசியைத் தவிர...

என்று முடிப்பகற்குள், முகுந்தன் யோகீச்வரரை சாஷ்டாங்க மாகநமஸ்கரித்து, "பெரியவரே!...உலகத்தில் எந்த விதமான பொரு ளுக்கும் ஒரு விலைமதிப்பு உண்டு...ஆனால் பரிசுத்தமான இதயத்தி லிருந்து எழும் ஆசிமொழிக்கு இவ்வுலகமே ஈடாகாது. அதை உங்க ளிடம் பெற்றுள்ளதோடு திருப்தியடையவில்லை. உங்களிடம் இதை விடச் சிறந்த மற்றொரு பொருள் இருக்கிறது. கைம்மாறு கொடுப்ப தற்கு இல்லையே என்று கலங்குவது சரியில்லை. யோகீச்வரரே! விலையிலா மாணிக்கம்போன்ற உமது மானவதியை எனக்கு மனப் பூர்வமாகக் கொடுத்துவிடுங்கள். என்னுயிரினும் இனிய பொருளாக அவளை நான் நேசிக்கின்றேன். அவளின்றி என் வாழ்நாள் இன்ப மடையாது." என்று தன்னுள்ளத்தைத் திறந்து காட்டினான்.

இதைக் கேட்ட யோகீச்வரரின் ஆச்சரியம் எல்லை கடந்தது... "ஆ...ஆ...என் மானவதியையா நீ நேசிக்கிறாய்!..பிச்சாண்டியின் மகள்...அனாதைச் சிறுமி.. நீ லக்ஷாதிபதியின் மகன் செல்வச் சீமான்...இது முறையா...உன் பெற்றோரின் சப்மதம் ஒருபோதும் கிடைக்காதே...இடைமறுத்து..."ச்வாமீ!...என் பெற்றோர்களின் சப்மதத்தையும் தாங்களேதான் வாங்கித் தரவேண்டும். என் பெற்றோர்கள் அத்தனை கொடியவர்களல்ல...க்ருபாமந்திரத்தை நிறுவிய க்ருபை பொருந்தியவர்கள்...என் சந்தோஷத்தில் பேராவல்

கொண்டவர்கள். கைநிரம்ப பணமில்லை என்று நிராகரிக்கலாம்... மனமொத்த அன்புக்குமுன்பு பணத்தை என் பெற்றோர்கள் மதிக்க மாட்டார்கள் என்று முகுந்தன் சொல்லிக்கொண்டே வரும்போது பின்னால் யாரோ மூச்சுவிடும் சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான்.

நீலாவதி க்ருபாமந்திரத்தைப் பார்க்க ஆசைப்பட்டதால் அவளை அழைத்துக்கொண்டு தம்பதிகள் அங்குவந்தார்கள். ரதியையே தோற்கடிக்கும் மானவதியை அப்போதுதான் தர்மாம்பாள பார்த்தாள். யோகீச்வாரின் அணைப்பில் அவள் நிற்பதும் முகுந்தன் பேசுவதும் வியப்பிலும் வியப்பாக விருந்ததால்முத்துசாமி முகுந்தனின் வார்த்தையைக் கேட்பதற்காக பதுமைபோல் நின்றார்.

முகுந்தனின் வார்த்தைகள் தம்பதிகளை ஒரு குலுக்கு குலுக்கியது. முகுந்தன் திரும்பிப் பார்த்தபிறகு முத்துஸாமியின் முகத்தில் ஒரு புதிய ஆனந்த உணர்ச்சி தாண்டவமாடுவதையறிந்துகொண்டான். தகப்பனாரிடம் ஓடிவந்து "அப்பா! அம்மா! நம்ம யோகீச்வரர் வந்திருக்கிறார். அந்த மகானுபாவருடைய பெண்தான் இந்த ஜகன் மோகன சுந்தராங்கி...(ஆதிமுதல் சரிதையைக் கூறி) நம்மை எல்லாம் ஆசீர்வதித்து அவர் அருமைக் குமாரத்தியைக் காணிக்கையாகச் சமர்ப்பிப்பதற்காகவே பகவான் அனுப்பியிருக்கிறார். நானும் உங்களிடம் விஷயத்தைச் சொல்ல சமயம் பார்த்துக் கொண்டே இருந்தேன். பகவான் இன்று அதற்குத் தாமாகவே சந்தர்ப்பத்தை அளித்துவிட்டார்...மானவதி!...இவர்களை நமஸ்காரம் செய்"...என்று தானே சற்றும் வெட்கமோ, தியக்கமோ இல்லாது கூறினான்.

தேவகன்னிகைபோல் நிற்கும் மானவதி ஏழை...ஒரு யோகியின் மகள்...என்பதுமட்டும் தர்மாம்பாளின் மனத்தில் தோன்றியதோ என்னவோ! ஆனால் அவளுடைய அழகை வெறுக்கவோ, பார்க்காது கண்ணை மூடிக்கொள்ளவோ மனது இடந்தரவில்லை: மானவதி மயங்கி தயங்கி பயந்து நடுங்குகிறாள். கண்களில் தானாக ஜலம் நிறைந்து வழிந்தது.

முத்துஸாமி யோகீச்வரரை நமஸ்கரித்து "வெகு நாட்களாகி விட்டன...இன்று இந்த குடிசையில் பொன்னடி சாத்தியது எங்கள் பாக்யம். தாங்கள் முன்பு என் குடிசைக்கு வந்து சென்ற பிறகே எனக்கு வேலை உயர்வும் கௌரவங்களும் ஏராளமாக நிறைந்தன. இப்போது ஸ்ரீ மகாலக்ஷ்மியையே நேரில் அளிப்பதற்காக வந்திருக்கிறீர்கள்...

ஸ்வாமி இவர்களை ஆசீர்வதித்துப்பின்..."முத்துஸாமி!...இது தகுதியுடையது என்று நீங்கள் அனுமதி தந்தால்...

என்று இழுத்தார். அதற்குள் முத்துஸாமி..."ஸ்வாமி!...தகுதியாவது, சம்மதமாவது, தினைப்புனம் காத்த ஒரு குறப்பெண்ணை சாக்ஷாத் சுப்ரமண்யன் மணக்கவில்லையா! கடவுளின் முடிவு இதுவாக இருந்ததால்தான் வைத்த முகூர்த்தம் தட்டவும், மண

மகளே சகோதரியாகவுமான விந்தைகள் நடந்தன...ஏன்...தர்மூ ஒருவேளை ஒப்புக்கொள்ளமாட்டாள் என்கிற சந்தேகமா... சேச்சே!...ஒரே ஒரு மகனின் சந்தோஷத்தைச் சிதைக்க எந்த பெத்த தாயார்தான் விரும்புவாள்? அதோடு க்ருபாமந்திரத்தை நிறுவிய கிருபை நிறைந்தவளல்லவா? தர்மூ...என்ன யோசிக்கிறாய்? தர்மூ...இந்த ரகஸியத்தை நான் சில தினங்களாகவே அறிவேன்... ஏன் க்ருபாமந்திரத்திலுள்ள அனேகர் அறிவார்கள். இது எப்படிப் போய் எப்படி வருகிறதோ பார்க்கலாம் என்று இருந்தேன். தம்பதிகளின் கனிந்த ப்ரேமைக்கு நாம் இடையூறு செய்யக்கூடாதென்றுதான் பகவான் மேற்குறித்த லீலைகளைக்காட்டியிருக்கிறார்... ஸ்வாமீ!...இன்று இந்த ஏழையின் குடிசையில் பிக்ஷைக்கு வரவேண்டும்"...என்றார்.

மானவதி கண்ணீர் பெருக தர்மாம்பாளின் காலில்விழுந்து காலையே பிடித்துக்கொண்டு நமஸ்கரித்தாள்... முதலில் சிறிது யோசனைகளில் ஊசலாடியது எனினும் மிகவும் இளகிய மனமுடைய தர்மாம்பாள் மானவதியின் கண்ணீரைக் கண்டு சகிக்காமல் "எழுந்திரம்மா...மானவதி!...எழுந்திரு"...என்று தூக்கி நிறுத்தினாள்.

இந்த அத்புத செய்கையைக் கண்ட எல்லோருடைய உள்ளமும் ஆனந்தமலராகப் பூத்தது என்றால் மிகையாகாது.

45

அதிர்ஷ்டத்தின் சிகரம்—ஆனந்தத் தாண்டவம்

ப்ரம்மாண்டமான மலைகளும், சில சமயம் உண்டாகும் பூகம்பத்தில் அசைந்தும், அழுந்தியும்கூடப் போய்விடுகின்றனவென்றால் சாதாரண மனிதர்களின் மனது அசைந்து கொடுப்பது ஒரு வியப்பா! கால தேவதையின் நிகரிலாத சக்தியின் விளையாட்டில் எதுதான் மாறாது? எதுதான் அசையாது? தம்மகனின் சந்தோஷம் ஒன்றையே தம் வாழ்க்கையின் சார்த்தமாக எண்ணிய தம்பதிகள் பரிபூர்ண த்ருப்தியுடன் விவாகத்திற்கு முகூர்த்தம் வைத்தார்கள்.

ஆதியில் ஆஸ்பத்திரியில் அன்புடன் கட்டிக்காத்த ஸீதாபதியும் அவர் மனைவியுந்தான் இன்று ப்ரதான பெண்வீட்டுக்காரர்களாக இருந்ததோடு பெண்ணை தாரைவார்த்துக் கொடுக்கும் திருப்பணியே அவர்களைச் சார்ந்தது என்றால், கல்யாணப் பெண்ணின் சந்தோஷம் கூறவேண்டுமா? கிழவரின் தம்பூராவும் அவருடைய

சங்கீத புத்தகங்களும் மணப்பெண்ணுக்கு ஸ்ரீதனமாகக் கொடுக்கப்பட்டன. ஆதியில் யார் யார் சினேதர்களாயும், ஆதரித்தவர்களாயும் இருந்தார்களோ, அத்தனை பெயர்களும் இப்போது பெண்வீட்டுக்காரர்களாக ப்ரஸன்னமானார்கள். நல்ல சுபவேளையில் சுபலக்னத்தில் சுபயோக சுபமுகூர்த்தத்தில் பெண்டுகள் லக்ஷ்மீ கல்யாணம் பாட,பாண்டும் மேளமும் அண்டத்தை அளாவ கெட்டி மேளம் கொட்ட புரோகிதர்கள் ஆசியை மழைபோல் வழங்க ஆனந்த மயமான தம்பதிகளின் உள்ளம் பூரிக்க, மானவதிக்கும் முகுந்தராஜனுக்கும் அதி விமரிசையாக விவாகம் நடந்தேறியது. அந்த இன்ப காக்ஷியைக் கண்ட யோகீச்வரரின் இதயத்தில் ஆனந்த வெள்ளம் ஊற்றெடுத்தது. அந்த வெள்ளம் கண்களாலும் கரைந்தோடியது.

யோகீச்வரரின் வேண்டுகோளின்படியே பெரிய ஸ்வாமியாரும் விஜயம் செய்திருந்தார். அவருடைய அன்பு மயமான உள்ளத்தில் பகவானின் அத்புதலீலையின் மகிமை அப்படியே பரவசமுண்டாக்கியது. "சிஷ்யா! எதை ஜெயித்தாலும் புத்திரவாத்ஸல்யத்தை ஜெயிக்கமுடியாதென்று நான் அடிக்கடி சொல்வேனே, அது உனக்கு இப்போது தெரிகிறதா! என்ன பேரானந்தம் பார்த்தாயா! தம்பதிகள் சர்வ மங்களத்துடனும் தீர்க்காயுஸுடனும் தீர்க்க சுமங்கலியாயும் வாழவேண்டும். இதுதான் எனது வேண்டுகோள்" என்றார். க்ருபாமந்திரத் தொழிலாளர்களின் ஆனந்தம், ஆச்சரியம், அன்பு எல்லாம் கரை புரண்டன.

ஏராளமான தான தருமத்துடனும் அன்னதானத்துடனும் விவாகம் நடந்தேறியது. அதேமுகூர்த்தத்தில் மற்றொரு நல்ல வரனைத் தேடி நீலாவதிக்கும் மணத்தைச் செய்துவைத்தார்கள்.

* * * *

"தர்மூ!...இப்படி வா ஒரு நிமிஷம்"...என்று முத்துஸாமி தர்மாம்பாளின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு மாடிக்கு ஓடினார். "சூ...சத்தம் போடாமல் கேளு...தேவகானமா! கந்தர்வ கானமா...நீயே சொல்லு...

ஜகன்மோகன சுகுமாரா...கேட்டாயா அம்ருத கானத்தை, இதைவிட நமக்கு நித்யகல்யாண வைபவ சுகமும் மங்களகரமும் வேறு வேண்டுமா! அம்பி அடிக்கடி இந்த பாட்டைப் பாடியதன் ரகஸியம் இப்போது வெளியாகிவிட்டது பார்த்தாயா!" என்றார்...

"என்னை பேசாமலிருக்கச் சொல்லிவிட்டு நீங்கள் சலசலவென்று ஏன் பேசுகிறீர்கள்? நாம் இருவருந்தான் ஒரு பத்து பவுண்டுகூட எடை ஏறியிருக்கிறோமே! இது தெரியவில்லையா! பகவான் அடுத்த பத்தாவது மாதமே ஒரு மங்களகரமான குழந்தையைக் கொடுத்து என் ஆவலைப் பூர்த்திசெய்துவைத்து உங்கள் தாயாரின் பெயரோ,... தகப்பனாரின் பெயரோ வைத்து விளங்கினால் போதும். ஆனால் அழகில் என் நாட்டுப் பெண்ணைப்போலவே இருக்கவேண்டும்...

முத்:—பார்த்தாயா...என்னைப் பேசக்கூடாதென்று திட்டம் செய்துவிட்டு நீ பாட்டியாவதை முதலில் பேச ஆரம்பித்து விட்டாயே...இரு...ஏதோ பேச்சு கேட்கிறது...

“ஆம்...என்னிதய பூர்வமாக நாம் இந்த சொர்க்கப் பதவியை அடைவதற்குக் காரணம் உங்கள் பெற்றோர்கள்தான். அவர்களின் உள்ளம்மட்டும் க்ருபாமந்திரமாக இல்லாதிருக்குமாயின்...என் கதி...

“ப்ரியே...என் பெற்றோர்களை நீ சாமானியமென்று நினைத்தாய்...என்னுடைய முன்னறி தெய்வங்கள் அவர்களல்லவா...அவர்களுடைய சந்தோஷத்தை நான் அவர்கள் முகத்திலிருந்தே தெரிந்துகொண்டேன். நம்முடைய பெரியவர்களின் மனங்கோணாது அவர்களுடைய இதயத் தாமரை விகசிதமுறும்படியாக நாம் உதய சூரியனைப்போல் அவர்களை மகிழ்விக்கவேண்டும். இதுதான் நமது கடமை. அவர்களுடைய சந்தோஷமல்லவா நமக்கு நித்யமங்கள கல்யாண வைபவ சுகம். அவர்கள் விருப்பப்படி நடந்துகொள்ளு...

“கேட்டயா தர்மூ!...உபதேசத்தைப் பார்த்தாயா...பெத்தாலும் வைரம்போன்ற இத்தகைய பிள்ளையையல்லவா பெறவேண்டும்” என்று தர்மூவின் முதுகில் தட்டிக்கொடுத்தார்.

* * * *

“‘கொடுக்கும் கடவுள் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்க மாட்டாரா!” என்கிற பழமொழிப்படி இப்போது ஒரு வருஷகாலந் தானாகிறது. தர்மாம்பாளும், முத்துசாமியும், சுப்ரமண்யனும் பேரனைக் கொஞ்சிக்குலாவி முத்தமிடப்போட்டியிடும் வேகத்தில் “குழந்தை எங்கே நசுங்கிவிடுமோ!” என்று ஆகிவிட்டது. இந்த பேரன் போட்டியைக்கண்டு இளந் தம்பதிகள் இன்ப மேலீட்டால் கலீரென்று சிரித்தார்கள். “நாமும் எப்போது இந்த நிலையை அடைவோம்” என்று அவர்கள் மனதுக்குள் ஒரு எண்ணம் அரும்புபோல் முளைத்ததோ, என்னவோ! யார் கண்டது? எங்கும் ஆனந்தமே குடிகொண்டது.

போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.
—திருக்குறள்.

முற்றிற்று.

‘ஜகன்மோகினி’ பிரஸ், வேங்கடாபுரம் சிங்கப்பெருமாள்கோவில். B. O.

ஓர் மாசில்லா மங்கைக்கு நிகழ்ந்த பழியும், அது தீர்ந்த வழியும்—இந்த வேகம் மிகுந்த படத்தில் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.

உயர்தரமான இலைகளைப் பொறுக்கி வெகு ஜாக்கிர
அனுபவ ரீதியாகப் பதம் செய்யப்படுவதால் நரஸூஸ் ம
முள்ளதாக இருக்கிறது. நரஸூஸ் காப்பிக்
கோ சூரிய வெப்பத்தால் நன்றாக பழுத்த
முதல்தரக் கொட்டைகளே பொறுக்கப்படு
கின்றன. பிறகு நன்றாக வறுக்கப்பட்டு
நீங்கள் விரும்பும் நறுமணமுள்ள இனிய
காபிக்கான் தூளாக செய்யப்படுகிறது.

நரஸூஸ்

எந்தத் தரத்திலும் எவ்வளவோ வேண்டுமா
னாலும் இந்தியா எந்த பாகத்திற்கும்
அனுப்பப்படும்.
மற்ற விவரங்களுக்கு கீழ்கண்ட
விலாசத்துக்கு எழுதவும்:

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெ ஆபீஸ்:
சேலம்.

டீ, க

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMAL KOIL, B.